னுராதா ரமணன்

மனசுக்குள் ஆயிரம் முறை ஒத்திகை பார்த்துக் கொண்ட பிறகுதான், கேள்விகளைக் கேட்க ஆரம்பிக்கிறான் பார்த்திபன்.

அவளிடமிருந்து அவன் பெற வேண்டிய விஷயம் சாதாரணமானதில்லை. பட்டென ஒரே கேள்வியில் முடித்துவிட முடியாது. குறிப்பிட்ட ஒரு பதிலுக்காகப் பத்துக் கேள்விகளை அவளிடம் அவன் கேட்க வேண்டியிருக்கிறது.

''உங்க பேரு?''

அவள் மிரள்கிறாள். சுழன்று கொண்டிருந்த டேப் ரெக்கார்டரையும், அவன் தனது வாய்க்கு நேராகப் பிடித்துக் கொண்டிருந்த சின்ன மைக்கையும் மாறி மாறிப் பார்க்கிறாள்.

''பேரெதுக்கு?''

குரல் கொஞ்சம் கிறீச்சிடுகிறது. அது பயத்தினாலோ, அல்லது சுபாவத்திலேயே அது தான் அவளது குரலா என்று கண்டுபிடிக்க முடிய வில்லை அவனால்.

''ஓ.கே. உங்களுக்கு இஷ்டமில்லேன்னா வேண்டாம். ஊரைச் சொல்லலாம் இல்லையா மிஸ்... மிஸ்... எக்ஸ்?''

அவள் தலையைச் சாய்த்து, அவனைக் காக்கா பார்வை பார்த்தபடியே சிரிக்கிறாள்.

பரவாயில்லை. கொஞ்சத்துக்குக் கொஞ்சம் நகைச்சுவை உணர்ச்சி இருக்கிறது.

இதற்கு முன் பார்த்திபன் பேட்டி எடுத்த பெண்களிடமெல்லாம் இந்த உணர்ச்சி லவலேசமும் கிடையாது. இயந்திர கதியில் பதிலளித்தார்கள்.

''ஆமாங்க. குடும்பத்திலே மூத்த பொண்ணு, பெரிய குடும்பம். முப்பது வயது வரைக்கும் நான் கன்னியா வளர்ந்து நிக்கறது தெரிஞ்சும், புரிஞ்சும், எங்க பேரண்ட்ஸாலே ஒண்ணும் ஸ்டெப் எடுக்க முடியல்லே.''

''யூ ஸி, இன்னமும் நம்ம நாட்டு ஆண்கள் பொம்பளைங்களோட உடம்பு நிறத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கறதைக் குறைச்சுக் கல்லே. என்னைப் பார்த்துட்டுப் போனவங்க எல்லோரும் கறுப்பு, கறுப்புன்னு ஒதுங்கினாங்க. இப்ப நான் சம்பாதிச்சு, சின்னதா வீடு வாங்கி யிருக்கேன். இருபத்தஞ்சு பவுன் நகை சேர்த் திருக்கேன். இப்ப, இதுக்கு ஆசைப்பட்டுட்டு, கறுப்பா இருந்தாலும் பரவாயில்லேன்னு சில ஆம்பிளைங்க, பெரிய மனசு பண்ணி என்னைக் கல் யாணம் பண்ணிக்க முன்வந்தாங்க. நான் போங்கடான்னுட்டேன். டெல் மீ இத்[...] வயசுக்கு மேலே எந்தப் பொண்ணுக்[...] யாண ஆசை வரும்?''

''என் விஷயத்துல கல்யாண மாகாததுக்குக் காரணமே இல்லே சார். படிப்பு இருக்கு. பணம் ஓரளவுக்கு இருக்கு. 'பாங்க்'லே ஆபீஸரா இருக் கேன். யோசிச்சுப் பார்த்தால் ஏன் ஆகல்லேன்னு எனக்கே ஆச்சரியமாகக் கூட இருக்கு.''

ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு விதமாய்ச் சொன்னார்கள். ஒரு லேடி புரொபஸர், பாங்க் ஆபீஸர், ஸ்டெனோ, வக்கீல், தெருத் தெருவாய்ச் சோப்புத்தூள் விற்கும் பெண்... இப்படி விதத்துக்கு ஒன்றாய்ப் பேட்டி எடுத்து விட்டான் பார்த்திபன்.

இப்பொழுது இவள்.

இவளைப் பற்றிச் சொன்னதே, பார்த்திபன் வேலை செய்யும் அலுவல கத்தைச் சேர்ந்த அக்கவுண்டென்ட் அனந்தராமன்தான்.

''என்னடாப்பா, பார்த்திபா, நடமாடும் மேட்ரிமோனியல் பீரோ! உங்க சமூக சேவையெல்லாம் எந்த மட்டிலே இருக்கு? ஆபீஸ் வேலையை, அப்பப்போ, டயம் கிடைக்கறப்போ கொஞ்சம் கவனிக்கிறது.''

''அதுக்காகத்தான் சார் வந்தேன்.''

''எதுக்காக? ஆபீஸ் வேலையைக் கவனிக்கறதுக்காகவா? அப்படியொரு நினைப்புக்கூட உண்டோடா கண்ணு? அடேய் ஏகாம்பரம், நம்ம டைப்பிஸ்ட் லலிதாவையும் ஸ்டெனோ சீதாவையும் ஆரத்தி கரைச்சு எடுத்துட்டு வரச் சொல்லுப்பா. ஆபீஸ் வேலையை கவனிக் கறதுக்காக சார் வந்திருக்கார்.''

பார்த்திபன் அவரைப் பார்த்துப் புன்னகைத்தான். அனந்தராமனின் கிண்டல், அவனை இதுவரையில் பாதித் ததே இல்லை. பார்க்கப் போனால், அனந்தராமனின் பெரிய பெண்ணுக்கு வரன் தேடித் தந்ததே அவன்தான். பார்த்திபனின் உதவியில்லாவிட்டால், அவர் பெண்ணுக்கு இப்போதைக்குக் கல்யாணம் நடந்தேயிராது.

ஆபீஸ் மானேஜருக்குக் கூட, இவனிடம் ஒரு மதிப்பு இருக்கிறதென்றால் இவன் செய்யும் இந்தச் சமூக சேவையினால் தான்.

இவனைக் கண்டிக்க வேண்டு மென்று அழைப்பவர், இவனது சட்டைப் பையிலிருந்து எட்டிப் பார்க்கும், மஞ்சள்



தடவிய காகிதத்தைக் கண்டதும் அடங்கிப் போய் விடுவார்.

''என்னப்பா... அது என்ன... பிள்ளை ஜாதகமா இருந்தா எனக்குச் கொடேன். என் பொண்ணுக்குச் சேர்ற தான்னு பார்க்கறேன்.''



ஜாதகப் பரிமாற்றம் மாத்திர
ல்லை. வரதட்சணைக் கொடுமையினால்
பண்கள் படும் பாட்டைக் கட்டுரையாக
ழுதிப் பத்திரிகைக்குக் கொடுத்தல்,
ானொலியில் இளையபாரதத்தில் சின்னச்
ன்னப் பேட்டிகளைத் தயாரித்து, ‘ஆகா,
ங்கே, எமது தங்கப் பெண்கள் தணலில்
தகித்துக் கொண்டிருக்க... வாலிபச்
சிங்கங்கள் வரதட்சணை வலையில் வீழ்ந்து
கிடக்கிறார்களே’ என்று கவிதை
எழுதுவது...

இத்தனையும் இந்த இருபத்தைந்து வயது வாலிபனுக்குள் அடக்கம். அவனது தோள் பையில், அநாதை இல்லங்

தவிக்கத் தெரியாத பிள்ளைகள்

ஊரிலிருந்து வந்திருக்கும் பிள்ளைக்காக முன்கூட்டியே ரெயில் ரிசர்வேஷன் செய்து டிக்கெட்டை அவனிடம் கொடுத்திருந்தேன். அன்று சாயந்தரம் அவன் புறப்பட வேண்டும். காலையில் தற்செயலாக 'இல்லஸ்டிரேடட் வீக்லி'யைப் புரட்டினால் அதற்குள் அந்த டிக்கெட் கிடந்தது!

''என்ன பொறுப்பில்லாத்தனம் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு! எடுத்து ஒளித்து வை. தேடித் தவிக்கட்டும்!'' என்றேன் மனைவியிடம்.

அவள் சிரித்தாள். ''இந்தக் காலத்துப் பிள்ளைகள் டிக்கெட் காணு விட்டால் தேடித் தவிக்க மாட்டார்கள். பேசாமல் வேறு டிக்கெட் வாங்கிக் கொள்வார்கள்!''

—ரங்கன்



கள், அபலை நிலையங்கள் இவைகளின் விலாசங்கள் முதல் பெண்கள் பாதுகாப்புச் சங்கங்களின் அத்தனை விலாசங்களும் அடக்கம்.

ஆள் பார்க்க வாட்ட சாட்டமாய் இருந்தும், இன்னும் கல்யாண பந்தத்தில் சிக்கிக் கொள்ளவில்லை.

அனந்தராமனுக்கோ, இவன் மேல் ஒரு கண் உண்டு—சரிப்பட்டு வந்தால், தனது இரண்டாவது பெண்ணுக்கு வளைத்துப் போடலாமே என்று.

இந்த எண்ணம் வேறு அவரை அவன் மீது புகார் வாசிக்காமல் தடுத்தது.

''ரேடியோ புரோகிராம் சார். நம்ம பெண்கள் கல்யாணமாகாமல் காத்திட்டிருக்கிறதுக்கு யார் காரணம்னு பேட்டி எடுக்கப் போனேன்.''

''முடிஞ்சிடுத்தா?''

''முடிஞ்சாப்பலதான்.''

அவன், தன் கையிலிருந்த கேஸட்டைத் தட்டிக் காட்டினான்.

''யாரெல்லாம் எடுத்தே?''

அவன் சொன்னான். அவர் உதட்டைப் பிதுக்கினார். ''இதெல்லாம் என்னப்பா பேட்டி! நான் ஒரு அட்ரஸ் தர்றேன். அங்கே போ. ஒர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்லே தங்கியிருக்கிற பொண்ணு. நம்ம டேவிட் இல்லே, டேவிட், அவன்தான் இன்டிரட்யூஸ் பண்ணி வச்சான். சேல்ஸ் கேர்ளா இருக்காம். எந்தக் கம்பெனியிலே வேலை இருக்கோ. அங்கே அதைத் தவிர பெரிய மனுஷங்ககிட்டே அப்பப்போ கான்டாக்ட்டும் உண்டாம். எனக்குத் தெரியாதுப்பா, நம்ம டேவிட் தான் சொன்னான். என்னை அப்படிப் பார்க்காதே. அந்தப் பொண்ணுகிட்டே உருக்கமான கதை இருக்கும்னு அவன்தான் சொன்னான்.''

பார்த்திபன் உடனே டேவிட்டைப் பிடித்தான். டேவிட், அவளைத் தன் அறைக்கு அழைத்து வந்தான்.

''இதப்பாரு, உன் குரல் ரேடியோவிலே வரப் போகுது.''

''எதுக்கு?''

''இவர், இன்றைய பெண்களோட நிலைமையைப் பத்தி ஒரு இன்டர்வியூ நடத்திட்டிருக்காரு. இன்டர்வியூன்னு தெரியுமில்லே... இன்டர்வியூ...''

அவள் பரக்கப் பரக்க விழித்தாள்.

''ஒண்ணும் பெரிய விஷயமில்லே. பயப்படாதீங்க. நான் கேட்கிற கேள்விகளுக்கு நீங்க இப்ப பதில் சொல்லப் போறீங்க இல்லே? அதுக்குப் பேர்தான் இன்டர்வியூ.''

பார்த்திபன் சுற்றி வளைத்து விஷயத்துக்கு வருகிறான்.

''நீ பேசிட்டு இருப்பா.

டெலிவரிக்காகப் பிறந்த ஊருக்குப் போயிருக்கிற என் பெண்டாட்டிக்கு ஒரு டிரங்க் கால் போட்டிருக்கேன். பக்கத்து வீட்டிலேதான். கால் என்ன ஆச்சுன்னு கேட்டுட்டு வந்திடறேன்.''

டேவிட், யதார்த்தமாகவோ, வேண்டுமென்றே அந்த இடத்தை விட்டு நகர...

பேட்டி தொடர்கிறது.

''பேர் சொல்ல வேண்டாம். ஊர்?''

''திருச்சூர்.''

''மலேயாளம் தாய்மொழியா?''

''இல்லே. தமிழ்தான். அப்பாவுக்குத் திருநெல்வேலி. அம்மாவுக்குச் சேலம். ஆனா அப்பாவோட வேலே அங்கே தான்.''

''அப்பாவுக்கு என்ன வேலே?''

''............''

அவள் மறுபடியும் பதில் சொல்ல முடியாததற்கு மன்னியுங்கள் என்பது போலப் புன்னகைக்கிறாள்.

''உங்க படிப்பு என்ன?''

''பி.யு.ஸி.''

''இந்த ஊர்லே என்ன உத்தியோகம்?''


''நிரந்தரமா ஒண்ணுமில்லே. சோப்புத் தூள் விற்கிறது. ஃபுட் ப்ராடக்ட்ஸ் விற்கிறது. ஸானிடரி பேட்ஸ் விற்கிறது...''

''இந்த வேலேக்காகவா சொந்த ஊரை விட்டுட்டு வந்தீங்க?''

அவள் தலே குனிகிறாள். அந்தச் சமயத்தில்தான் அவன் அவளேக் கூர்ந்து பார்க்கிறான்.

இருபது வயது இருக்குமா? இருக்கும். புடவை கட்டிக் கொண்டால் ரொம்பவும் சிறு பெண்ணாக இருப்பாள். பாவாடை தாவணியில் சற்று வளர்ந்த பெண்ணாகவே தோன்றுகிறாள். மாநிறம் தான். முகத்தில் மட்டும் குழந்தைத்தனம் இன்னமும் போகவில்லே.


''அப்பாவுக்கு ஏகப்பட்ட கடன். கடனுக்குப் பதிலா என் பொண்ணே வச்சுக்கோன்னு கடன்காரன்கிட்டே எழுதிக் கொடுத்திட்டாரு. விஷயம் தெரிஞ்சு எங்க அம்மா என்னே ராவோட ராவா பட்டணத்துக்கு ரயிலேத்தி விட்டுட்டா, எப்படியாவது மானமா பொழைச்சுக்கோடின்னு. ரயில்வே ஸ்டேஷன்லே வழி தெரியாமல் நின்னுட்டிருந்த என்னேப் போலீஸ்காரங்க அழைச்சிட்டுப் போய்... அதெல்லாம் என்னத்துக்குங்க, வேண்டாம். எனக்கு இந்த வேலேயை வாங்கிக் கொடுத்த அக்கா, எனக்குக் கிடைக்கிற சம்பளத்திலே



அவன்: ''என்னே மெரினு பீச்சுக் கிட்டே விட்டுடுங்களேன்?''

இவன்: ''ஸாரி! ஹெல்மெட் கொண்டு வரலேயே?''

அவன்: ''நானே கையில் வச்சு இருக்கேன்?''



அவன்: ''என்னடா உன் மனேவிக்கு ஸ்டெப் கட்டிங் வெட்டி விட்டு இருக்கே?''

இவன்: ''ஹெல்மெட் போட வசதியாகத்தான்.''

—இராம. மாதவன்.

ஐம்பது பர்ஸெண்ட் கமிஷன் எடுத்துக் கருங்க. அவங்க கிட்டக்க என்னை மாதிரி பத்து, இருபது பேர் வேலை செய்யரும். நாங்கதான் தெருத் தெருவாப் போய் வித்துட்டு வருவோம். அந்த அக்கா ஆர்டர் மட்டும் பிடிச்சுத் தருவாங்க. சம்பளம் போதல்லே. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் என் சம்பளத்திலே மிச்சம் பிடிச்சு நூறு ரூபாயாவது அனுப்பணும்னு ஆசை!''

''அம்மாவுக்குச் சரி. அப்பாவுக்கு எதுக்கு? அவர்தானே கடனுக்குப் பதிலா, உன்னை வித்தாரு?''

அவள், தனது விரல் நகத்தைப் பார்த்துக் கொண்டே சொல்கிருள்.

''என்னை வித்ததிஞலே, எங்க அப்பா கெட்டவர்னு நான் சொல்ல மாட்டேன். அவருக்கு என் மேலே பிரியம் அதிகம். யாரு கண்டாங்க, கடன் தொல்லை தாங்காமல் நாமதான் கஷ்டப் படரும், நம்ம பொண்ணுவது நிம்மதியா சாப்பிட்டுட்டு இருக்கட்டும்னு அவர் நினைச்சிருக்கலாம் இல்லையா? எந்த அப்பாவும் தன் குழந்தையோட நல்லதுக்குத் தான் எதையும் செய்வாருன்னு நான் நினைக்கிறேன்.''

இந்தப் பதில் அவனது நெஞ்சைக் கசிய வைக்க...

''பணம் அனுப்ப முடியறதா?''

''அதுதான் இப்படி... அம்மாவுக்குத் தெரிஞ்சா உயிரை விட்டுடுவா.''

''இப்படின்னு?''

''சில பெரிய மனுஷங்களுக்குக் கம்பெனி கொடுக்கறதுங்க. அஞ்சு, பத்து கிடைக்கிறதைச் சேர்த்து வச்சு அம்மா அப்பாவுக்கு அனுப்பறேன்.''

''கல்யாணம் பண்ணிக்கிற உத்தேசம் இல்லையா?''

''எனக்கு இருந்து என்ன பிரயோசனம்? என்னைக் கல்யாணம் பண்ணிக்க யாருக்கு மனசு வரும். பாருங்க, நல்லா படிச்சு பெரிய வேலையிலே இருக்கிறவங்களை எல்லாம் பேட்டி கண்டீங்களே, அவங்களுக்கெல்லாமே ஒரு மஞ்சள் கயிற்றுக்கு வழியில்லாதப்போ நானெல்லாம் கல்யாணத்தைப் பத்தி நினைச்சுப் பார்க்கக்கூட முடியாதுங்க.''

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்கத் தயார்னு யாராவது முன்வந்தால்?''

இந்தக் கேள்விக்கு, அவன் சற்றும் எதிர்பாராத விதமாய் விசும்பு கிருள்.

அவன் சட்டென டேப் ரெ கார்டரின் பட்டனை அழுத்துகிருன்.

''தெரியாமல் கேட்டுட்டேன் ஸாரி.''

''அதஞலே பரவாயில்லே.''

அவள், கண்களைத் துடைத்துக் கொண்டு, அதே காக்கா பார்வையுடன் சிரிக்கிருள்.

''முடிஞ்சிடுத்து இல்லே? எங்கே உங்க ஃபிரெண்டு?''

அவள் எழுந்திருக்கிருள்.

அன்றிரவு முழுக்கப் பார்த்திப னின் காதில்—அவள் பேசிய பேச்சுக்கள் திரும்பத் திரும்ப...

மறுநாள் அனந்தராமனிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போகிருன்.

''சின்னப் பெண் அவள் சார் இன்னும் விளையாட்டுப் புத்தி போகல்லே டேவிட் ரூம்லே இங்கிலீஷ் மாகஸினை புரட்டிப் பார்த்துட்டிருந்தா. 'இதெல்லாம் படிப்பியா?'ன்னு கேட்டேன். அதுக்கு அவள் என்ன சொன்னு தெரியுமா 'இங்கிலீஷ் மாகஸின்ஸ்லே விதவிதமான சமையல் ரூம், படுக்கை அறை இதெல் லாம் போட்டோ போட்டிருக்குமே இதைப் பார்க்கறதுலே ஒரு திருப்தி சந்தோஷம். ஒரு நிமிஷம், அந்த இடத்திலே நான் இருக்கிற மாதிரி நினைத்துப் பார்த்துப்பேன். அவ்வளவு தான்'னு சொன்னு. இங்கே வலிச்சது சார். இதோ இங்கே.''

அவன், இடது பக்க நெஞ்சைத் தட்டிக் காண்பிக்கிருன்.

அடுத்த ஒரு வாரத்தில்...

அந்தப் பேட்டி ஒலிபரப்பான போது—அவன், டேவிட், அவளுடன் சேர்ந்துதான் கேட்கிருன்.

கிளம்பும்போது மட்டும் கேட கிருன்.

''இப்பவாவது சொல்லுங்க உங்க பேர்?''

''அதான் சொன்னீங்களே, மிஸ் எக்ஸ்னு!''

அவள் வரிசைப் பற்கள் பளீரிட சிரிக்கிருள்.

''என்னைப் பொறுத்த வரைக்கு

இவ பேரு ராஜேஸ்வரி. அப்படித்தான் சொல்லிட்டிருக்கா. நிஜப் பேரு என்னமோ?''

டேவிட், தோள் பட்டையைக் குலுக்குகிறுர்.

இது நடந்து முடிந்த பிறகு ஒரு மாதத்துக்குப் பின்... பார்த்திபன், மண வாழ்வில் திருப்தியில்லாத பெண்களேயும், விவாகரத்துக்கள் ஏன் பெருகுகின்றன என்பது பற்றியும் ஓரிரண்டு கட்டுரை எழுதி முடித்த பின், மானேஜரின் பெண் கல்யாணத்துக்காகக் கோட்டூர்புரத்தி லுள்ள ஒரு வரன் வீட்டிற்குப் பத்துத் தடவைக்கு மேல் போய் வந்த பின்... ஊரி லுள்ள அப்பாவிற்குத் தன் கல்யாணத் துக்கு இப்போதைக்கு அவசரமில்லே என்று எழுதியதற்குப் பின்... பாலசந்தரின் கல்யாண அகதிகளேப் பாராட்டி, ஒரு முழ நீளத்துக்குக் கடிதம் எழுதி அனுப்பிய பின்...

தனது லாட்ஜ் அறையில் ஞாயிற்றுக் கிழமை, பகல் பொழுதில், கிடைத்தற்கரிய ஓய்வு கிடைத்ததால் அதைக் கொண்டாட, தலேயணேயை நெஞ் சோடு அணேத்து, பகல் நேர மின்சாரத் தடையினுல் சுற்ருத மின் விசிறியையும் அன்புடன் மன்னித்து, பலமான குறட்டை யுடன் தூங்கிக் கொண்டிருக்கையில் தான்...

அறை வாசலில் காலிங் பெல் ஒலிக்கிறது.

''யாரது, இஸ்திரியா? அப்புறம் வாடா?''

''......''

''டேய், டேய்... கண்ணு! விடுடா. சமர்த்தில்லே. சாயந்திரம் ஒரு ரூபா தர்றேன். சினிமா பாரு. இப்ப என்னேத் தூங்க விடுடா.''

பார்த்திபனின் கெஞ்சலேயும் மீறி, மணி அலற...

பட்டென எழுந்து கதவைத் திறந்தவன் தடுமாறிப் ரோகிருன்.

''ஹலோ!''

''அது... அது வந்து... ஹலோ... நீங்க யாருன்னு தெரியலே. உள்ளே வாங்க. வெரி ஸாரி. நான், லாண்டரி பையனேன்னு...''

''பரவாயில்லே. தப்பு என் மேல தான். நல்ல தூக்கத்தைக் கெடுத்துட் டேன். வை தி வை... என் பேர் பரமேஸ்வர். ஈஸ்வர்ன்னு கூப்பிடுவாங்க. பம்பாய்லேர்ந்து வர்றேன். போன மாசம் உங்க பேட்டி ஒண்ணு... ரேடியோவிலே ரியலி, ரொம்ப டச்சிங்கா இருந்தது. அழுதுட்டேன் சார்.''

பார்த்திபன் முகம் விகசிக்க அவனேப் பார்க்கிருன்.

நாகரீகமாய் உடை உடுத்து, கிட்டத்தட்டப் பார்த்திபனேயொத்த வயதினனுய் இருந்தாலும் அந்த முகத்தில் அலாதியான சோகம் மிளிர்கிறது.

ஒருகால் அந்தத் தாடி மீசைதான்—சோக பாவத்தை உண்டு பண்ணுகிறதோ...

இல்லேயில்லே... கண்களிலேயே கலக்கம் இருக்கிறதே...

பார்த்திபன், வந்தவனே வாவென்று வரவேற்கக் கூட மறந்து பார்த்துக் கொண்டே நிற்க...

''நான்... உங்க பேட்டியிலே பேசின மிஸ் எக்ஸ் விஷயமாய்ப் பேச வந்திருக்கேன் மிஸ்டர்...''

''பார்த்திபன்...''

''நல்ல பேரு. ஆனுல் சட்டென்று ஞாபகத்துக்கு வரமாட்டேங்குது.''

அவன் பார்த்திபனின் கையைப் பிடித்துக் குலுக்கிய குலுக்கலில் சிநேகிதம் இழைகிறது.

(தொடரும்)

படம்: வி.பி. மணி



அட்டை வண்ணப்படம்:
திலீப் பானர்ஜி

பிரியமுள்ள மனைவிக்கு பாதுகாப்பளிக்க என்றும் பிரெஸ்டீஜை வாங்குவீர்



பிரெஸ்டீஜ்

புதிய பிரெஸ்டீஜ் மட்டுமே 100% பாதுகாப்பான
புதிய பிரெஸ்டீஜில் மட்டுமே ஜி.ஆர்.எஸ். உள்ள



மின்னும் மேனி
மெருகுக்கு ரெக்ஸோனு
Rexona

ஸ்டுடியோவில்

டி.வி.யின் மூலம் பிரபலமான கவிஞர்—பாடகியான கொல்லங்குடி கருப்பாயி சென்னை ஸ்டூடியோக்களை முதன் முறையாகச் சுற்றிப் பார்த்தார்.

சாரதா ஸ்டுடியோவில் ராதா ரவியுடன்—

ராதா ரவி: வணக்கம்மா. என்னை யாருன்னு தெரியுதா?

கொல்லங்குடி கருப்பாயி: தெரியலேங்களே.

ராதா ரவி (கரகரத்த குரலில் பேசி): இந்தக் குரல் எந்த நடிகர் தெரியுதா?

கொ.க: அவுகளா, ராதா அய்யா குரலு மாதிரி தெரியுது.

ராதா ரவி: அவரு மகன்தான் நான்.

கொ.க: அப்படியா! மகராசனு இருங்கப்பா. உங்க அப்பா எம்பூட்டு பேரு வாங்கினுக. அவுக பிள்ளே நீங்க நல்ல பேரு எடுக்கணும். அதுதான் நீங்க அப்பாவுக்கு செய்யற மரியாதை.

ரவி: டி.வி.காரங்க உங்களை எப்படிக் கண்டு பிடிச்சாங்க?

கொ.க: என்னையா, ஊருல்ல இருக்கறப்போ வானொலிகாரங்க வந்தாங்க, கிராமங்களில் பாடல் பதிவு பண்ண. அப்ப அவங்ககிட்ட எங்க ஊர்க்காரங்க இந்த ஊரிலே ஒரு பொண்ணு நல்லா பாடும்னு சொல்லியிருக்காங்க. அவங்க என்னைப் பாடச் சொல்லி கேட்டாங்க. எனக்கு வெட்கமா இருந்தது. மத்தப் பொண்ணுங்களோடு பாடினேன். அப்புறம் திருச்சிக்கு வரச் சொன்னுக. திருச்சிக்குப் போய் வானொலியிலே பாடினேன். அவுக டி.வி.காரங்களுக்குத் தெரிவிச்சாங்க.

ரவி: ஊர் என்கிறீங்களே, எது? உங்க வீட்டுக்காரரு, நீங்களெல்லாம் எந்த ஊர்லே இருக்கீங்க?

கொ.க.: கொல்லங்குடி.

ரவி: அது எங்கே இருக்கு?

கொ.க: காளியாத்தா கோவில் தெரியுமில்லே? சிவகங்கை பக்கத்திலே. அந்த ஊருதான் எங்க ஊரு.

ரவி: இப்ப திடீர்னு உங்களைப் பாடச் சொன்னுப் பாடுவீங்களா? இல்லே ரேடியோ, டி.வி. மேடைகளில்தான் பாடுவீங்களா?

கொ.க: எப்ப வேணுமானாலும் பாடுவேன். இப்ப உங்களை நடிக்கச் சொன்னு நடிக்க மாட்டீங்களா?

ரவி: என்னாலே முடியாது. அதுக்கு மூடு வரணும். சரி, ஒரு பாட்டுப் பாடுங்க. கேட்கிறேன்.

கொல்லங்குடி கருப்பாயி உடனே ஒரு பாட்டுப் பாடினார்.

காலம் கெட்டுப் போச்சு.
கட்டுப்பாடு விட்டுப் போச்சு,
ஏலம் போடும் பொருளா நினைச்சு,
சின்னப் பொண்ணு பெண்களை எல்லாரும் முறைக்கிறாங்க—வள்ளிக் கண்ணு
ஒத்தையிலே போறீங்கண்ணு
உதவி செய்ய வரோமுண்ணு
ஒத்துக்கிற கூடாதடி சின்னப் பொண்ணு
நீ ஒதுங்காட்டா நெருங்குவான்டி வள்ளிக்கண்ணு

(போலீஸ் உடையில் கையில் துப்பாக்கியுடன் எஸ்.வி. சேகர் அங்கு வருகிறார்.)


சேகர்: வணக்கம் அம்மா.

கொ.க: சுடற காட்சி சினிமாவிலே வந்தால் கண்ணை மூடிகிடுவேன். அம்புட்டு பயம். இந்தப் பொண்ணு ரொம்பப் பயந்தாங்குளின்னு சொல்லுவாங்க.

சேகர்: பொண்ணு?

கொ.க: ஆமாம், என்னைத்தான் சொல்றேன்.

சேகர்: பேப்பரிலேகூட, சில



வண்ணப் படம்: ஏ.வி. பாஸ்கர்



செய்திகளில், '60 வயதுப் பெண்' என்று தானே போடறுங்க? சரி, பாட்டு எல்லாம் நீங்களே இட்டுக் கட்டிப் பாடுவீங்களா?

கொ.க: ஆமாங்க, சார்.

சேகர்: அப்படியே தோணுமா? முன்னடியே எழுதி வைப்பீங்களா?

கொ.க: தோணறதுதான். நான் தான் படிக்காத ஆளாச்சே. எப்படி எழுதி வைக்க முடியும்?

சேகர்: யாரையாவது பற்றிப் பாடச் சொன்னல் உடனே பாடிடு வீங்களா?

கொ.க: முடியாது, முடியாது. ஒரு வாரம் ஆகும். நானே என் மனசுல வர்றதை வைச்சுக்குவேன். எல்லாத்தை யும் தரவா கோர்த்துக்கிறது. அதற்கு ட்டுயின் சேர்த்துக்கிடுவேன்.

சேகர்: இதுவரையில் எத்தனை பாடல் பாடியிருக்கீங்க?

கொ.க: ஒரு தொளாயிரம் பாடல் இருக்கும்.

சேகர்: என்னைப் பத்தி ஏதாவது பாடுங்களேன்.

கொ.க: எனக்குத் தம்பியா நினைச்சுப் பாடட்டா?

சேகர்: தம்பியோ, பிள்ளையோ, பேரனே எப்படி வேணுலும் வைத்துக் கொள்ளலாம்.

கொ.க: அக்கா சொல்லைக் கேளு தம்பி!
அழகான செல்லத் தம்பி
செக்கச் சிவந்த தம்பி!
சிங்கராசா—நீ
சீர்திருந்தி வாழ வேணும்
தங்கராசா
படிக்கப் போற பொண் புள்ளைங்க
பாதையிலே நடந்து வந்தா
இடிக்கப் போற [illegible] போகுறுய்—நீ
பெண்கள்—எதிர்த்துக்கிடடா.

ஏன் பயந்து சாகுறுய்?

சேகர்: என்னைப் பற்றி யாரும்

கொல்லங்குடி

உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தாங்களா?

கொ.க: இல்லீங்க சார்.

சேகர்: பின்னே ரொம்பக் கரெக்டா பாடுறீங்களே? ஆனால் நான் பொம்பளைங்க மேலே இடிக்கிறது மட்டும் இல்லை. பாக்கி எல்லாம் சரிதான்.

கொஞ்ச தூரம் சென்றதும், ஓய்வாக உட்கார்ந்திருந்த ஊர்வசியைக் கொல்லங்குடி கண்டார்.

கொ.க: வணக்கம்மா! உங்க புள்ளைங்கெல்லாம் சௌக்கியமா இருக்கா!

(ஊர்வசிக்குப் பெரிய அதிர்ச்சி!)

கொல்லங்குடி: சினிமாவைச் சொன்னேம்மா. அந்தப் புள்ளைங்களை வளர்க்கிறதுக்கு எம்பூட்டு கஷ்டப் பட்டீங்க. மண் சோறு திண்ணு, கஷ்டப் பட்டு வளத்தியேம்மா!

முந்தானை முடிச்சு கேரக்டரைத் தான் கொல்லங்குடி சொல்கிறாரென்று ஊர்வசிக்குப் புரிந்தது. முகம் மலர்ந்தார்.

சேகர்: கொல்லங்குடியம்மா, இந்த அம்மாவைப் பத்தி ஒரு பாட்டுப் பாடுங்க—சேகர் சாருகிட்டே எப்படி நடந்துக்கணும்னு.

கொ.க: இரண்டு பேரும் கலப்படமா வரும். பரவாயில்லையா?

ஊர்வசி: சரி, பாடுங்க.

கொல்லங்குடி பாடினார்:

சீவி சிங்காரிச்சி
சிவகெங்கைக்கு நாங்களெல்லாம்
தேரோட்டம் பார்க்கப் போறோம்.
வாரீயா—மச்சான்
செவலக்காளை வண்டி பூட்டித் தாரீயா
பாக்கு மரத் தோப்புக்குள்ளே
காத்திருக்கச் சொல்லிச் சொல்லி
நேத்துவர ஏச்சவளே
செல்லம்மா—உன்
நெஞ்சுக்குள்ளே இருப்பதைத்தான்—
சொல்லம்மா!
புல்லுவெட்டப் போன என்னை
மண்ணுகட்டி முத்தமிட்ட
போக்கிரிமேல் ஆசை வெச்சேன்,
புரிஞ்சிக்க—நானும்
பொண்டாட்டியா வர வேணும்
தெரிஞ்சுக்க

பேட்டி: திருவேங்கிமலை சரவணன்

2



அந்தக் கருமை படர்ந்த தாடிக்குள் எத்தனை அனுபவங்கள் அடங்கி யிருந்தன!

பார்த்திபன், ஈஸ்வர் என்கிற பரமேஸ்வரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''தயவு செஞ்சு எனக்கு மிஸ் எக்ஸை அறிமுகப்படுத்தறீங்களா?''

''எதுக்கு சார்?''

''நான் பெண்களாலே மோசம் போனவன். அவள் ஆண்களாலே அவமானப்பட்டவள். நான் உலகத்தில உண்மையுள்ள பெண்ணே கிடைக்க மாட்டாளான்னு ஏங்கிக்கிட்டிருக்கேன். அவளோ, நிரந்தரமான புருஷத் துணை



தனக்குக் கிடைக்குமான்னு தவிச்சிட்டிருக்காள். நான் ஏன் சார், அவளைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

அவன் கேட்ட கேள்வி, பார்த்திபனை அதிரச் செய்கிறது.

இது என்ன இப்படிக் கேட்கிறான்!

கதைகளில் வேண்டுமானால் இதெல்லாம் சாத்தியம். நிஜ வாழ்வில் சாத்தியமா?

'நாடறிஞ்சு கெட்டுப் போன பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேங்கறானே!''

பார்த்திபனுக்கு ஏதோ ஓர் ஆங்கில மாத இதழில் வந்த கட்டுரை ஞாபகத்துக்கு வந்தது.

சிவப்பு விளக்குப் பகுதியில் அடைபட்டுக் கிடந்த இரு பெண்களை இரண்டு வாலிபர்கள் மனப்பூர்வமான சந்தோஷத்துடன் கல்யாணம் செய்து கொண்டார்களாம்.

கலர் கலராக அவர்களது புகைப்படங்கள் நிரம்பிய அந்த மாத இதழை டேவிட், அனந்தராமன், இவர்களிடமெல்லாம் கூட அவன் எடுத்துச் சென்று காண்பித்ததாக ஞாபகம். அவன், டேவிட்டிடம் கத்தக் கூடச் செய்தான்: ''நீங்க எல்லோரும் பெண்டாட்டி ஊருக்குப் போனா இந்த மாதிரிப் பெண்ணுங்களை ஸ்டெப்னியா யூஸ் பண்ணிக்கத்தான் செய்வீங்களே தவிர, இவங்களுக்கு நிரந்தரமான விடிவு என்னான்னே யோசிக்க மாட்டேங்கடா — — ப் பசங்களா.''

''டேய் டேய்... அநாவசியமா என் வம்புக்கு வராதே. குறைந்த பட்சம் பெண்டாட்டி ஊருக்குப் போயிருக்கிற சமயத்துலேயாவது இவங்களுக்கு அஞ்சு, பத்து கொடுத்து, என்னாலான உதவியைச் செஞ்சிட்டிருக்கேனேன்னு சந்தோஷப்

அனுராதா ரமணன்

படு.'' டேவிட், நமட்டுச் சிரிப்புடன் சொன்னுன்.

''பார்த்திபா, எங்கேயோ வடக்கே ரெண்டே ரெண்டு ஆம்பிளேங்க, சமூக சிந்தனேயோட சிவப்பு விளக்கைக் குடும்ப விளக்கா மாத்தியிருக்கலாம். அதே மாதிரி எல்லா ஆம்பிளேங்களும் செய்யணும்னு முடியுமோ? வேணுமானு நீ அந்த மாதிரி செய்யலாம். ஊர் கூடித் தேர் இழுத்தாத்தான் தேரை நிலேக்குக் கொண்டு வர முடியும்னு ஊர் கூடறதெப் போ, தேர் நிலேக்கு வர்றதெப்போ? நீ ரெட் லேட்ஸுக்கு விமோசனம் கிடைக்காதான்னு கேட்கறே. நான் வெள்ளிக் குத்துவிளக்கா மூணு பொண்ணே வச்சிருக்கேன். குத்து விளக்கையும் கொடுத்து, அதுக்குச் சீர் செனத்தியும் தரத் தயாராகக் காத்திட்டிருக்கேன். ஒரு பய வரமாட்டேங்கருனே. வெள்ளிக் குத்து விளக்குத்தான்னுலும் உள்ளேயே வச்சு வச்சு, கறுத்துப் போறதுப்பா...''

அன்று அனந்தராமன் சொன்ன வார்த்தை...

இன்று ஈஸ்வரைப் பார்த்ததும் நிமிர்ந்து உட்கார்ந்தான் பார்த்திபன்.

ஈஸ்வர், ஏகப்பட்ட தயக்கத்துடன் தன் கதையை அவனிடம் சொன்னபோதோ, உருகிப் போனுன்.

உலகத்தில் இப்படிப்பட்ட ஏமாந்த சோணகிரிகளும் இருக்கத்தான் இருக்கிருர்கள்!

இருபத்தொன்பது வயதான ஈஸ்வருக்கு இரண்டு முறை திருமணம் நடந்து, இரண்டும் தோல்வியிலேயே முடிந்தது உண்மையிலேயே பரிதாபம் தான்.

முதல் திருமணம் ஈஸ்வர், ஜப்பானுக்கு மேல்படிப்புக்காகப் போன போது அந்த நாட்டுக் கலாசாரப்படி, நடந்தது. பெண்ணின் பெயர் 'யோஷிகா'வோ, 'ஜோஷிமா'வோ என்னவோ சொன்னுன்.

அவளே மணந்துகொண்டு ஜப்பானிலேயே இரண்டு வருடங்களேக் கழித்தவன், தாய் நாட்டுக்கு அவளே அழைத்து வந்ததும், பெற்ருேர் அவனேக் கண்ணுல் பார்ப்பது கூடப் பாவம் என்பது போலக் கண்களே இறுக மூடிக் கொண்டார்கள்.

''சொத்துல ஒரு பைசா கூடக் கிடையாதுடா படவா... உன் சம்பளத்துல குப்பை கொட்டிப் பாரு. அப்பத்தான் எங்க அருமை புரியும்...''

அப்பாவின் சொத்தை நம்பி இருக்கவில்லே அவன். பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு பம்பாயில் போய்க் குடியேறினுன். அவனது படிப்புக்கும் புத்திசாலித்தனத்துக்கும் நல்ல வேலே கிடைத்தது.

ஆனுல் அவனுடைய பெண்டாட்டிக்குத்தான் இந்தியச் சூழ்நிலே பிடிக்கவில்லே. பம்பாய்க்குச் சுற்றுலா வந்த ஜப்பானிய இளேஞனுடன் மறுபடியும் தன் தாய் நாட்டுக்கே போய்விட்டாள்.


அடுத்தாற்போல—பெற்ருேர்களால் பார்த்து நிச்சயிக்கப்பட்ட பெண் பிரபா.

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து மணந்தவள்தான் பிரபா. பரம சாது. அதிகமாய்ப் பேசத் தெரியாதவள். பம்பாய்க்கு இவனுடன் கிளம்பும்போது, ஈஸ்வரின் தாய் ஓர் இந்திப் புத்தகத்தையும் அவளது பையில் செருகி அனுப்பினுள்.

''பம்பாய்லே பொம்பிளேங்க தனியா எங்கேயும் போகக் கூடாதுன்னு என்னுடை மருமான் சொன்னுன். ஜாக்கிரதையடியம்மா. எங்கே போறதானுலும் ஈஸ்வரையும் துணேக்கு அழைச்சிட்டுப் போ.''

பலமாகத் தலேயாட்டினுள் அவள்.

புதுப் பெண்டாட்டியின் அதிருஷ்டம்—அங்கு போன ஒரு வருடத்துக்குள் ஈஸ்வருக்குச் சம்பள



''உன் வீட்டுக்காரர் ரொம்ப மோசம்.''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''என் வீட்டுக்காரர் ஏதோ அவசரத்துக்கு உப்பு, மிளகாய், புளி ஏதாவது கேட்டால் தர்றதேயில்லேயாம்.''

—சி. பாஸ்கர்

சுரதா தலைமை தாங்க வராத போது



'கவிஞன் பைத்தியம்' எழுதிய 'இது சுதந்திர நாடு' என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழாவுக்குக் கவிஞர் சுரதா தலைமை வகித்து உரையாற்றுவார் என்று அழைப்பிதழில் கண்டிருந்தது. சுரதா அன்று வர முடியவில்லை. மேடையில் ஒரு நாற்காலி மீது 'கவிஞர் சுரதா' என்று எழுதிய ஓர் அட்டையை வைத்திருந்தார்கள்.

—மகரம்

உயர்வு. அழகான பெண் குழந்தை. கையிலுள்ள பணத்துடன் கடன் வாங்கி, பம்பாயிலேயே ஒரு பிளாட் வாங்கினுன் அவன்.

இதற்குள் அலுவலகம் அவனை ஜெர்மனிக்கு அனுப்பியது. ஏழாண்டுகள் ஜெர்மனி வாசம்.

அப்பொழுதுதான் அவன் பிரபாவிடம் சொன்னுன்:

''பிரபா, எனக்கு வருஷம் ஒரு தடவை இந்தியாவுக்கு வந்துட்டுப் போகலாம். அதுக்கான தொகையைக் கம்பெனி கொடுக்கும். ஒரு மாச லீவும், போக வரப் பிளேன் டிக்கெட்டுக்கான பணமும். ஆனு, அந்த ஒரு மாச லீவைக் கூட எடுக்காம இருந்தா அந்த மாசத்துக்கு ரெட்டைச் சம்பளம். போதாக் குறைக்கு, பிளேன் டிக்கெட்டுக்கான பணத்தையும் கொடுத்துடுவாங்க. ஏழு வருஷம் பல்லைக் கடிச்சிட்டிருந்தா—நம்ம பிளாட்டுக்கு பக்கத்துப் பிளாட்டையும் வாங்கிப் போட்டுடலாம். என்ன சொல்றே?''

''ஏழு வருஷம் உங்களைப் பார்க்காம இருக்கணுமா?'' அவள் பெருமூச்செறிந்தாள்.

அவன் அவளைச் சமாதானப் படுத்த ஏகமாய்ச் சிரமப்பட்டான். ''பல்லைக் கடிச்சிட்டு இருக்கலாம் பிரபா. இப்ப சம்பாதிக்காம எப்ப சம்பாதிக்கறது? உனக்குத் துணைக்கு வேணுமானு எங்க அம்மாவையோ, உங்க அம்மாவையோ கொண்டு வச்சுக்க.''

அவள் தயங்கினுள். அவன் தொடர்ந்தான்.

''மாசா மாசம் உன் பேருக்கு என் கம்பெனியிலே இருந்து செக் வரும். இந்தா, இது நம்ம பிளாட்டோட டாக்குமெண்ட்ஸ். கார், வீடு, எல்லாமே உன் பேரிலேயும் குழந்தை பேரிலேயுமாத்தான் இருக்கு. பத்திரம். நீ ஒண்டியா எல்லாத்தையும் எப்படித்தான் மானேஜ் பண்ணப் போறியோன்னு நினைச்சாத் தான் கவலையா இருக்கு.''

அவள் மறுபடியும் அழத் தொடங்கினுள்.

ஜெர்மனி போய்ச் சேர்ந்ததும், அவன் அவளுக்குப் போன் செய்து தகவல் தெரிவித்தான்.

இது தவிர—பத்து நாளைக்கொரு கடிதம். மாதமொரு போன். இத்தனையும் ஈஸ்வர் பக்கத்திலிருந்துதான். பிரபா கடிதமே போடமாட்டாள். கேட்டால், 'என் கையெழுத்து அத்தனை நல்லாயிருக்காதுங்க,' என்பாள். 'மனசுல எத்தனையோ இருக்கு. அத்தனையையும் லெட்டர்லே கொட்ட எனக்குத் தெரியாது,' என்பாள். 'உங்களுக்கென்ன, அங்கே இருந்துட்டு, லெட்டர் போடக் கூடாதான்னு சுலபமாக் கேட்டுடுவீங்க. இங்கே நான் ஒண்டியா படற கஷ்டம் யாருக்குத் தெரியும்?' என்பாள்.

மாதா மாதம் அவன் போன் செய்தால் மட்டும் பிரியத்தையெல்லாம் அல்வாவாகக் கிளறி ஒரே வாயில் உருட்டித் திணிப்பது போலப் பேசுவாள்.

ஏழு வருடங்கள் கழித்து, அவன் பம்பாய் வந்திறங்கியபோது, அருமைப் பெண் மூன்றும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள்.

'இதுதான் போன்லே பேசற அப்பாவா?' என்று கேட்டாள்.

வந்திறங்கிய அன்று, மனைவி கையால் மணக்க மணக்க வற்றல் குழம்பும் சுட்ட அப்பளமுமாய், ஈஸ்வர் ஒரு பிடி பிடித்தபடி, மனைவியைக் கரை காணுத காதலுடன் பார்வையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, வாசற் பக்க காலிங் பெல் ஒலித்தது.

''யாருன்னு போய்ப் பாரு பிரபா.''

அவனது கட்டளைக்கு ஏற்ப,

அவள் கதவைத் திறக்க—

கையில் விலங்குடன் போலீஸ் இன்ஸ்பெக்டர். கூடவே நாலைந்து கான்ஸ்டபிள்கள்.

''ஹலோ...'' ஈஸ்வர் அவசரமாய் எழுந்து, கை கழுவிவிட்டு வந்து, இன்ஸ்பெக்டரின் கரத்தைப் பிடித்துக் குலுக்கி வரவேற்க—

''ரெண்டு கையையும் நீட்டுங்க. உங்களை அரெஸ்ட் பண்ண வந்திருக்கோம்.''

இன்ஸ்பெக்டரின் வார்த்தைகளில் அதிர்ந்து போய்விட்டான் ஈஸ்வர். ''சார், என்ன சார் சொல்றீங்க? நான் இன்னிக்குத்தான் வெளிநாட்டிலேயிருந்து...''

''தெரியும். இப்பத்தான் கொஞ்ச முந்தி, பிரபா போன் செஞ்சாங்க. ஏழு வருஷமா நீங்க அவங்களைப் பார்க்காம, ஒரு லெட்டர் கூடப் போடாம இருந்ததாலே, அவங்க வேற ஒருத்தரைப் போன மாசம்தான் ரிஜிஸ்தர் மாரேஜ் பண்ணிட்டாங்க.''

''சார்!''

அவன், அப்பொழுது அதிர்ந்து, பைத்தியம் பிடிக்காத குறையாக நின்றதை, இப்பொழுது பார்த்திபனிடம் சொல்லும்போது கூடக் குமுறி வெடித்தான்.

''உங்க ஒய்ஃப்... பிளான் பண்ணியா இப்படிச் செஞ்சாங்க?''

''பிளான்தான்... அவளுக்குக் கல்யாணத்துக்கு முன்னாலேயே திருநெல்வேலியில் ஒரு காதலன் இருந்திருக்கான். நான் ஏழு வருஷம் வெளிநாட்டில தங்கப் போறேன்னு சொன்னதுமே அழகாய்த் திட்டம் போட்டுட்டாள். ஏழு வருஷம் சார். நம்ம நாட்டு விவாகச் சட்டப்படி—ஏழு வருஷம் புருஷன் கூடப் பேச்சு வார்த்தையோ, கடிதப் போக்குவரத்தோ இல்லைன்னால்...''

''நீங்கதான் லெட்டர் போட்டிருக்கீங்களே?''

''ஷ்யூர் ஷ்யூர்.. ஆனால் நான் லெட்டர் போட்டதுக்கு என்ன சார் ஆதாரம்? இவள் இந்த மாதிரிச் செய்வாள்னு தெரிஞ்சிருந்தால் காப்பி எடுத்து வைச்சிருப்பேன். போன்லே பேசறப்ப கூட டேப் எடுத்து வச்சிருப்பேன். என்னுடை லெட்டர்ஸை கொளுத்திட்டாள். போன் பண்ணினதை மறைக்க முடியாது. காரணம், வெளிநாடுகள்லே வாரா வாரம் டெலிபோன் பில் வரும். ஒவ்வொரு பில்லிலேயும் நாம எந்த நம்பருக்கெல்லாம் போன் பண்ணினோமோ அந்த நம்பரைப் போட்டு, சார்ஜ் பண்ணுவாங்க. நம்பரைக் காண்பிச்சேன். அதுக்கு அவள் சொன்னாள், 'போன் பண்ணி என்னை அடிக்கடி கொலை பண்ணிடறதா மிரட்டிட்டிருந்தாரே தவிர, அன்னியோன்னியமாய் எதுவுமே பேசலை'ன்னு சொல்லிட்டாள். அதைவிடப் பெரிய குழந்தையைக் கூட, 'டாடி போன் பண்ணினா, அம்மா பயந்து போய் அழுவாங்க'ன்னு பொய் சாட்சி சொல்லத் தயார் பண்ணியிருந்தாள் சார்...''

''இப்ப அவ எங்கே இருக்காள்?''

''நான் கஷ்டப்பட்டு வாங்கின அதே பிளாட்லே. நான்தான் மடையனாட்டம் எல்லாத்தையும் அவள் பேர்லே வாங்கி வச்சிட்டேனே. எங்க கம்பெனி மாசா மாசம் அனுப்பின பணத்தைக் கூட, குழந்தையை வளர்க்கறதுக்காக நான் கொடுத்த வாழ்க்கைப் பணம்னு அடிச்சுச் சொல்லிட்டாள். அப்ப என் கையில இருந்ததெல்லாம் இன்னொரு பிளாட் வாங்கறதுக்காக நான் சேமிச்சு வச்ச தொகையும், என்னுடை பாஸ் போர்ட்டும்தான் என்னுடை வாழப் பிடிக்காதவளை நானும் வற்புறுத்தலை. யூ நோ. நான் பெரிய ஃபாமிலியிலே வந்தவன். எங்க அம்மா, சாகற மட்டும் காலையில தூங்கி முழிக்கிறப்ப, எங்க அப்பா காலைத் தொட்டு ஒத்திக்கிறதை பழக்கமாகக் கொண்டிருந்தாள்.''

''இப்ப அம்மா, அப்பா...''

''த்சு... யாருமே இல்லை. எல்லாம் என்னாலதான்... என்னால தான்...'' அவன் தலையில் அடித்துக் கொண்டான்.

''ஆண்களோட சபலம் இருக்கற வரைக்கும் பெண்கள் நேர்மையாய்

ஆறு வித்தியாசங்கள் விடை:

1. புத்தகங்கள்
2. பத்திரிகை
3. கை—
4. டீப்பாய் கால்
5. மூக்கு
6. டம்ளர்

வாழணும்னு ஆசைப்பட்டால் கூட முடியாதுன்னு உங்க... உங்க... மிஸ் எக்ஸ் பேட்டியில சொன்னாங்களே, இப்ப என் கதையைக் கேட்டீங்க இல்லே? பொம்பிளையாலேயே சீரழிஞ்சு போனவன் நான். அவளை மாதிரி நல்ல பொண்ணு கிடைச்சால் அவளோட முன்கதைச் சுருக்கத்தையெல்லாம் நான் புரட்டிப் பார்க்காமல் தாலி கட்டறேன்.''

பார்த்திபன் பிரமை நீங்காமலேயே அவனைப் பார்த்தான்.

''இப்ப அதே பம்பாய்லே மாதுங்காவுலே எனக்கு ஒரு சின்ன ஃப்ளாட், அழகான, கௌரவமான ஃப்ளாட் இருக்கு. மாசம் மூவாயிரம் ரூபா சம்பாதிக்கிறேன். மிஸ் எக்ஸ்...''

''அவ பேரு ராஜேஸ்வரி...''

பார்த்திபன் புன்னகைத்தான். ஈஸ்வரின் முகத்தில் பிரகாசமான சிரிப்பு.

''நிஜமாவா! எங்க அம்மா பேர் கூட ராஜேஸ்வரிதான்.''

அன்று மாலை—டேவிட்டிடம் விஷயத்தைச் சொன்னபோது, அவன் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தான்.

ராஜேஸ்வரியோ வெகு நேரத்துக்குப் பார்த்திபனையே கண்கள் பனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நிஜமாவா?''

''நிஜம். நீ வேணுமானா அவரோட பேசறியா?''

அவளுக்கு எங்கேயிருந்தோ வெட்கம் வந்து, ஆளையே அமுக்கியது.

பேசினான். எங்கே, எந்த வார்த்தை, அவளை நோகடிக்குமோ என்று சர்வ ஜாக்கிரதையாகச் சுற்றிச் சுற்றிப் பேசுகிறான்.

அந்த வெள்ளிக்கிழமை காலையில், ரிஜிஸ்தரார் முன்னிலையில் மாலை மாற்றிக் கொண்டார்கள் ஈஸ்வரும், ராஜேஸ்வரியும்.

அவள் ஈஸ்வர் வாங்கிக் கொடுத்த புடவையில் மிகக் கம்பீரமான அழகுடன் மிளிர—

டேவிட்டும் அனந்தராமனும் சாட்சிக் கையெழுத்துப் போட—

அன்று மாலை அவர்கள் பம்பாய்க்குப் புறப்பட்ட போது, பார்த்திபனுக்குச் சந்தோஷத்தில் மூச்சுத் திணறியது.

''மிஸஸ் ஈஸ்வர்...''

அவள், கண்கள் பளபளக்க அவனைப் பார்த்தாள்.

''உங்க ஆசைப்படி, இங்கிலீஷ் மாகஸின்லே பார்த்து ரசிப்பீங்களே—அந்த மாதிரி ஃபிளாட், அழகான குடும்பம், அன்பான கணவர்... ஜமாய்ங்க.''

அவள் அபரிமிதமான வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

அவர்களை வழியனுப்பிவிட்டு, அறைக்கு வந்து சேர்ந்த பார்த்திபன் வெகு நேரம் வரையில், இந்த ஒரு வார காலத்தில் நடந்த சந்தோஷ சமாசாரங்களையே அசை போட்டபடி படுத்திருந்தான்.

அப்பொழுதுதான் மின்னல் வெட்டுகிற மாதிரி சின்னதாய் ஒரு சந்தேகம் 'ஆமா... இவன் நிஜமாவே நல்லவன் தானா? அவன் பக்கத்து மனுஷங்கன்னு கல்யாணத்துக்கு யாருமே வரல்லையே!'

'பம்பாய்லே இவனுக்கு எந்தக் கம்பெனியிலே வேலைன்னு சொன்னான்? கணேஷ் எக்ஸ்போர்ட்ஸா?'

'போன் பண்ணிக் கேட்டுடலாமா, அப்படி ஒரு ஆள் இருக்கானான்னு?'

தான். குரங்குத்தனமாய் எதையும் நினைத்துக் குழம்பாதே...'


எத்தனைதான் சமாதானப் பண்ணிக்கொண்டாலும் மனசு அடங்காமல் பிடிவாதம் பிடிக்க, அவன் பம்பாய்க்கு டிரங்க் கால் போட, லாட்ஜ் மானேஜரின் காலைப் பிடிக்க ஓடினான்.

(தொடரும்)

''ராமசாமிக்கு நீ சட்டபூர்வமான மனைவியா?''

''ஊஹூம்! செட்டப்பூர்வமான மனைவி!''

—உ. ராஜாஜி



எங்கள் ஊர் தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். என் தகப்பனார் ஓட்டல் ஒன்றை நடத்தி வருகிறார். எனக்கு வயது 23 ஆகிறது. திருப்பூரில் உள்ள ஒரு ஜவுளிக் கடையில் பணியாற்றி வருகிறேன்.

கடந்த இரண்டரை வருட காலமாக என் அம்மா நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருக்கிறார். கை, கால், உடல் முழுவதும் ஒரே எரிச்சல். அந்த எரிச்சலைக் கண்டு சிலர் ஏதாவது விஷக் கடியாக இருக்கலாம் என்றார்கள். எரிச்சல் காரணமாக என் தாய் படும் துன்பம் சொல்லில் அடங்காது. நாட்டு வைத்தியம், ஆங்கில வைத்தியம் செய்தும் பலனின்றி இருக்கிறார். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இஞ்செக்ஷன் போட்டால் தான் அந்த எரிச்சல் அடங்குவது போல் ஓர் உணர்வு. எனக்கு 3 சகோதரிகளும், 5 சகோதரர்களும் உள்ளனர். எங்களுக்குப் பெற்ற தாயின் நலத்தைவிட இவ்வுலகில் முக்கியமானது வேறு ஏதுமில்லை.

இரக்கமுள்ள குமுதம் பிரார்த்தனை கிளப் உறுப்பினர்கள் எல்லாம் வல்ல இறைவனிடம் என் அன்னை உடல் நலம் பெற இறைஞ்சும்படி வேண்டுகிறேன்.


—எஸ். சம்சுதீன், தமிழ்நாடு துணிக்கடை,
7, காமராஜர் ரோடு, திருப்பூர்—638 604.

எனது மகள் தீபாவிற்குத் தற்சமயம் வயது 13. அவள் 3 வயதுக் குழந்தையாக இருந்தபோது திடீரென்று ஒரு நாள் இரு கண்களும் தெரியாமல் தடுமாறினாள். பின் அவளைக் கண் டாக்டரிடம் காண்பித்து மருந்துகள் கொடுத்து வந்தோம். தூரத்துப் பார்வை தெளிந்து படிப்படியாக நன்கு தெரிய ஆரம்பித்தது. ஆனால் இருட்டில் தடுமாற்றமாக உள்ளது. அதாவது இருட்டான இடங்களோ, மேஜை, பெஞ்சு அடியில் உள்ள பொருட்களோ எதுவும் தெரியாது. ட்யூப்லைட் வெளிச்சத்தில் நன்கு பார்க்கிறாள். இப்பொழுது 8'வது படித்து வருகிறாள். மீண்டும் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் பரிசோதனை செய்து, ஆப்ரேஷன் வேண்டாம், கண்ணாடியும் போட வேண்டாம் என்றார்கள். வெறும் வைட்டமின் மருந்து கொடுக்கச் சொல்லி மாதமொரு முறை ஒரு வருடம் வரவேண்டுமென்றும் சொன்னார்கள். விவரத்தைக் கேட்டபோது, கண் விழிப் பார்வை (பெரிபெரி) நோய் கடுமையாகத் தாக்கியுள்ளது, இது பிறவியிலேயே உள்ளது. இதற்கு மருந்தே இல்லை, சிகிச்சையும் இல்லை. வரவரப் பார்வை குறைந்து கொண்டே வரும் எனவும் கூறினார்கள்.

அன்புள்ளம் கொண்ட குமுதம் பிரார்த்தனை கிளப் அங்கத்தினர்கள் என் ஒரே மகள் தீபா பூரண குணம் அடையப் பிரார்த்தனை செய்யுமாறு மிகவும் தாழ்ந்து, பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

—ஸ்வர்ணமுகி, 72, தண்டுமாரியம்மன்
கோவில் தெரு, சேலம்.

திருப்பூர் சம்சுதீனின் அன்னை உடல் எரிச்சல் நீங்கி நலம் பெறவேண்டும் என்றும் சேலம் சிறுமி தீபாவின் பார்வைக் குறை நீங்கிக் குணம் பெற வேண்டும் என்றும் பிரார்த்திக்கும்படி குமுதம் பிரார்த்தனை கிளப் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறோம். பிரார்த்தனை நேரம்: 7.7.85 ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி.



நலம் பெற வேண்டும்

பொறுப்பில்லாமல் நான் நடந்து கொள்கிறேனா?

நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம்போல இருக்கிறது பார்த்திபனுக்கு.

லாட்ஜ் மானேஜர் அவனை ஒரு மாதிரியாகப் பார்க்கிறாரே.

''ஏன் சார், நேற்று காலையில் ரிஜிஸ்தர் மாரேஜுக்குக் கையெழுத்துப் போடணும்னு ஓடினீங்களே... அந்த ஆளுக்கா போன் பண்ணப் போறீங்க?''

''அவங்க வண்டியில போயிட்டிருப்பாங்க. நான் தெரிஞ்சுக்க விரும்பறது அவரோட ஆபீஸைப் பற்றி. அவர் அந்த ஆபீஸ்லேதான் வேலைசெய்யறாராங்கறது பற்றி, சார்.. பம்பாய்லே கணேஷ் எக்ஸ்போர்ட்ஸ்னு ஏதாவது கம்பெனி இருக்கா...அப்படி இருக்குன்னா அவங்க என்னத்தை எக்ஸ்போர்ட் பண்றாங்கன்னு தெரிஞ்சுக்க முடியுமா..''

மானேஜர் தனது தங்கப்பல் தெரியச் சிரிக்கிறார்.

''ஆமா..உங்களுக்கு அக்கா, தங்கச்சிங்க இருக்காங்களா..''

''இருக்காங்க..''

''அவங்களுக்கெல்லாம் கல்யாணமாயிடுச்சா..''

''போன வருஷம்தான் கடைசித் தங்கைக்குக் கல்யாணமாச்சு..''

''சரி. அந்தத் தங்கைக்கு மாப்பிள்ளை பார்த்தப்ப— கல்யாணத்துக்கு அப்புறமாவா, மாப்பிள்ளை எந்த ஆபீஸ்லே



ஈரச் சிறகு

அனுராதா ரமணன்

வேலையில் இருக்காங்கன்னு விசாரிச்சீங்க.''

பார்த்திபனுக்கு ஏற்கனவே நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலத் தோன்றி விட்டதால்—இப்பொழுது தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருக்கிறது.

சார்... பொறுப்பில்லாம நடந்துகிட்டேன்னு சொல்றீங்களா..''

''சேச்சே. அப்படிச் சொல்ல மாட்டேன், கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு... அப்படிச் சொல்றது கூடப் பாவம். வழியோட போற பெருச்சாளிக்கு உடைச்சிருக்கீங்கன்னு சொல்றேன்.''

''ஐயோ! இப்ப என்னங்க செய்யறது?''

பார்த்திபன் கையைப் பிசைகிறான். கண்ணெதிரே தயக்கமும் கூச்சமுமாய், கண்களில் குழந்தைத்தனம் மின்ன ராஜேஸ்வரி.

அவளுக்குத்தான், நாலு பேரைப் போல குடும்பம் நடத்த வேண்டுமென்று எத்தனை ஆசை.

''உனக்கு என்ன பிரஸென்ட் பண்ண...''

இப்படி, டேவிட்டும், அவனும் கேட்டபோது—முகம் சிவக்க, அவள் சொன்ன வார்த்தைகள்.

''அவர்கிட்ட கேளுங்க, வீட்டுல குக்கர், சமையலுக்கான பாத்திரம் பண்டம் இதெல்லாம் இருக்குதான்னு. இல்லையின்னா—உங்க சௌகரியத்துக்கு ஏற்ற மாதிரி—ஏதோ ஒண்ணு வாங்கித் தாங்க.''

ஈஸ்வரிடம் அவர்கள் கேட்டபோது, அவன் அவளை ஓரக் கண்ணால் பார்த்தபடி சொன்னான்:

''என் ஃபிளாட்லே குக்கர்லேயிருந்து ஃபிரிஜ் வரை எல்லாமே இருக்கு. நீங்க வேணுமானா அவளுக்கு 'கிஃப்ட் செக்' காக் கொடுத்துடுங்க.''

பாவி. பாவி. பரிசுத் தொகைக்கான காசோலையைக் கூடத் தன் பெயருக்கு வாங்கிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி விட்டாளே.

பார்த்திபன் பரபரக்கிறான்.

''எப்படியிருந்தாலும் காலையில் பத்து மணிக்குமேல் தான் ஆபீஸ் திறப்பாங்க. பத்து மணிக்கு மேல — என்கொயரியில் விசாரியுங்க. பம்பாய்லே கணேஷ் எக்ஸ்போர்ட்ஸ்னு ஏதாவது இருக்கான்னு.''

அவர் சிடுசிடுக்கிறார்.

''பெரிய கம்பெனியின்னு சொன்னீங்க. இவளை ஜெர்மனிக்கு அனுப்பினது கூட அந்தக் கம்பெனிதான்.''



நடிப்பு: ராஜ்மோகன், ஸ்ரீதுர்க்கா, திடீர் கண்ணையா, ஸ்ரீநாத், செஞ்சி கிருஷ்ணன்.



''அப்ப கேளுங்க. பெரிய கம்பெனியின்னு கேளுங்க.''

அவர் இரு கைகளையும் அவன் முகத்துக்கெதிரில் விரித்துப் பழித்துக் காட்டுகிருர்.

அவன் தனது அறைக்கு ஓடி, கைக்குக் கிடைத்த பேண்ட் சட்டையை உருவி, அதற்குள் உடம்பை நுழைத்துக் கொண்டு—அனந்தராமனின் வீட்டைத் தேடி ஓடுகிருன்.

அவன் வீட்டுக்குள் நுழையும் போதே—அனந்தராமன் பூஜை முடிந்து, கடவுள் படங்களுக்கு மணியடித்துக் கற்பூரம் காட்டிக் கொண்டிருக்கிருர்.

''யாரு, பார்த்திபனு? வாப்பா—வா, வா. வலது காலே உள்ளே எடுத்து

படம்: வி.பி. மணி ஏற்பாடு: செல்லப்பா

வச்சு வா. என்ன பார்க்கிறே? இந்த வீட்டுக்கு எந்தப் பிரம்மச்சாரிப் பையன் வந்தாலும் நான், 'வலது காலே எடுத்து வச்சு வா'ன்னுதான் சொல்லுவேன். யாரு கண்டாங்க, உங்கள்லே யாராவது என் மாப்பிள்ளையா வந்தாலும் வரலாம் இல்லையா?''

அவர், இவனது இக்கட்டு புரியாமல் பேச, அவன் தனது சந்தேகத்தை அவர் முன் கடை பரப்ப...

அவரது சற்றுப் புடைத்த கண்களில் மிரட்சி படருகிறது.

''என்னடாது, பெரிய இடியைத் தூக்கிப் போடறே?''

''இது வெறும் சந்தேகம்தான் சார். அப்படி எதுவும் இருக்கக் கூடாதுன்னு கடவுளை வேண்டிக்கறேன்.''

அவர், அவனை விடவும் பொறி கலங்கிப் போகிறார்.

''அவளோட அம்மா, அப்பாவுக்கு என்னடா பதில் சொல்லுவே. பாவம், கல்யாணம்ங்கற தந்தியைப் பார்த்துட்டு, அந்த அம்மா, கண்ணுலே தண்ணி விட்டுக்கொண்டு, ரிஜிஸ்தர் ஆபீசுக்கே நேரே ஸ்டேஷனிலேயிருந்து ஓடி வந்தாளே.''

ஆம். ராஜேஸ்வரியின் தாய், தந்தி கிடைத்த அன்றிரவே கிளம்பி, சென்னைக்கு ஓடி வந்தவள்தான். அங்கே இங்கே விசாரித்து, அவள் பதிவுத் திருமண அலுவலகத்துக்கு வரும்போது, கல்யாணம் முடிந்து விட்டது.

அவர்கள் கும்பலாக ஸ்வீட்டை மென்றபடி வெளியே வந்தபோது—கையில் ஒரு துணிப் பையுடன் அந்த அம்மாள்.

மகளுக்காக ஒரு [illegible] வெல்லப் பாகில் போட்ட நேந்திரங்காய்.

''அம்மா...''

''உனக்குப் பிடிக்குமேன்னு சக்கப்புரட்டி கொண்டு வந்தேண்டி... கல்யாணத்துக்குள்ளே வரணும்னுதான் பார்த்தேன்... முடியல்லேடி. அந்த என்ஜின் டிரைவருக்கு என்னோட அவசரம் தெரியல்லே. இந்தா, என் சார்பா எல்லாருக்கும் ஸ்வீட் கொடு.''

அவள் கண்ணீர் பெருக, மகளைத் தடவித் தடவிப் பார்த்தபடி நெகிழ்ந்த காட்சி....

''நீ அனுப்பற மணியார்டரிலே விலாசத்தைப் போடாததாலே உங்க அப்பாவுக்கு உன் மேலே கோபம்டி. கல்யாணத் தந்தியிலே விலாசம் இருந்தும், வரமாட்டேனுட்டார். அது போகட்டும். மாப்பிள்ளை ஏற்கனவே நல்லாப் பழக்க மானவர்தானு?''

இல்லேம்மா. இந்தக் கல்யாணம் இவராலே தான் முடிஞ்சிருக்கு.''

ராஜேஸ்வரி, இப்படிச் சொல்லி, பார்த்திபனைத் தன் தாய்க்கு அறிமுகப் படுத்தியபோது, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, தான் நின்றதை நினைத்துப் பார்க்கையில்... அவமானம் சுட்டெரிக்கிறது..


அனந்தராமனும், டேவிட்டும் தான் பம்பாய் தொலைபேசி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, கணேஷ் எக்ஸ்போர்ட்ஸ் தொலைபேசி எண்ணைக் குறித்துக் கொள்கிறார்கள்.

''அப்படி ஒண்ணு இருக்காம்பா.''

அனந்தராமன், பார்த்திபன் பக்கம் திரும்பிப் பார்த்து அவசரமாய்ச் சொல்லிவிட்டு, மறுபடியும் ரிஸீவர் பக்கம் திரும்புகிறார்.

''ஹலோ, ஆமாங்க. நம்பர் கால். அர்ஜென்ட் மேடம். வெரி வெரி அர்ஜென்ட்.''

''ஷ். நாம இங்கே குதிக்கிறதாலே எதுவும் நடந்துடப்



''நாற்றம் புடிச்ச துணியை என் வாயிலே அடைக்காதேப்பா! தயவு செய்து சமையலறைக்குப் போய், தோசை கீசை இருந்தால் எடுத்து வந்து அடை!''

—சுதர்ஸன்

போறதில்லே அனந்து சார். டிரங்கால், அதுவும் பம்பாய்க்கு... ராத்திரி வரைக்கும் வெயிட் பண்ண வேண்டியதுதான்...''

டேவிட், அனந்தராமனைப் பார்த்து அதட்ட—அன்று முழுக்க அந்த அலுவலகத்தில் யாருக்குமே வேலை ஓட வில்லை.

பார்த்திபனுக்கோ—இவர்களின் பார்வையே, தன்னைச் சுட்டெரிப்பது போல...

அந்தக் கணத்தில் ஏதாவது சுலோகம் சொன்னால் மனசுக்கு இதமாய் இருக்கும் போலிருக்கிறது. ஏழு வயசு வரையில் நெட்டுருப் பாடமாகக் கற்று, வீடதிரச் சொன்ன, விஷ்ணு சகஸ்ர நாமமும், கந்த சஷ்டி கவசமும் மறந்தே போய்விட்டது.

'கடவுளே... கடவுளே... எனக்கு உன்னை, என்ன சொல்லி கூப்பிடறதுன்னே தெரியலே... மாதவா, மதுசூதனா, தாமோதரா...'

அன்று மாலை ஐந்து மணி சுமாருக்கு கணேஷ் எக்ஸ்போர்ட்ஸ் நம்பர் கிடைக்க...

அவர்களுடன் பேசிய டேவிட்டின் முகம் இருண்டு போகிறது.

''டேய் பார்த்திபா... இன்னிக்கு 'ஃபிளைட்'டுல கிளம்புடா. நேரே பாம்பே ரயில்வே ஸ்டேஷன்லே போய் உட்காரு. மெட்ராஸ் டிரெயின் வந்து நின்னவுடனே 'கப்'புனு பிடி... என்ன பார்க்கறே. கணேஷ் எக்ஸ்போர்ட்ஸ்லே ஈஸ்வர்—பரமேஸ்வர்ங்கற பேருல ஈ, காக்கா கிடையாது. அவங்க அந்த மாதிரி சம்பளத்தையும் கொடுத்து, ஜெர்மனிக்கு யாரையும் அனுப்பவே இல்லையாம். நாங்க ரொம்பக் கேட்டுக்கிட்டதுக்கு அப்புறம்... பழைய ஃபைலை எல்லாம் புரட்டிப் பார்த்துட்டு, எட்டு வருஷத்துக்கு முன்னாடி, நாம சொன்ன அடையாளத்துல 'சர்வேஸ்வரன்'னு ஒரு பியூன் இருந்ததாகச் சொல்றாங்க. அந்தப் பியூனும் ஏதோ கையாடல் விவகாரமா அரெஸ்ட் ஆகி, ஜெயிலுக்குப் போயிட்டு...''

அதற்கு மேல் கேட்டுக் கொண்டு நிற்கப் பொறுமையே இல்லை பார்த்திபனுக்கு.

அனந்தராமனும், டேவிட்டும் புரட்டிக் கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு, விமான நிலையத்துக்கு ஓடுகிறான்...

'இத்தனை நேரம் அவள் என்ன பண்ணிட்டிருப்பாள். தனக்குன்னு ஒரு நிரந்தரமான துணை கிடைச்ச நிம்மதியில அவன் மடியில தலை வச்சு தூங்கிட்டிருப்பாளா...''

'பாவம் அவள்... ஓர் அழகான குடும்ப வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு கனவுகளோட கிளம்பியிருக்கா.'

'ஆபீஸ் பேருலேயே மோசடி செஞ்சிருப்பவன், இன்னும் என்னென்ன மோசடியெல்லாம் செஞ்சிருக்கானோ. எப்படி நான் விசாரிக்காமப் போனேன்?'

ஓட்டல்மானேஜர் சொன்ன மாதிரி, ஏற்கனவே ஒரு மாதிரி பேரு வாங்கின பொண்ணு தானேங்கற அலட்சியம் என் உள் மனசுல இருந்ததோ. அந்த அலட்சியம்தான், இது எதையும் கேட்க விடாம தடுத்துடுத்தோ...'

'சொந்தத் தங்கையா இருந்தாக் கொடுப்பியா. ஐயோ எப்படிக் கேட்டுட்டார் மானேஜர். நிஜம்தானே.

---

326 அடி உயரத்திலிருந்து



லா வேகாஸ் நகரில் 326 அடி உயரமுள்ள, 25 மாடிக் கட்டிடத் தின் மேலிருந்து டான் கோகோ என்ற ஸ்டண்ட் வீரர் கீழே குதித்தார். எந்த விதக் காயமும் இல்லை. உலகத்திலேயே அதிகமான உயரத்திலிருந்து ஒரு காயம்கூட இல்லாமல் விழுந்தவர் என்ற சாதனையைச் செய்த இவருக்குப் பத்து லட்சம் டாலர் பரிசளிக்கப்பட்டது.

அடுத்து, செயின்ட் லூயிஸ் கேட்வே என்ற இடத்தில் 630 அடி உயரமுள்ள கட்டிடத்திலிருந்து கீழே குதிக்கத் திட்டமிட்டிருக்கிறார் கோகோ.

—'சொசைட்டி'யிலிருந்து: அருண்மூர்த்தி

சொந்த தங்கையா இருந்தா...'

அவனது தங்கைக்கு மாப்பிள்ளை பார்க்கும் பொழுது ஒரு வரனின், கூடப் பிறந்த அண்ணனுக்கு மூளைக் கோளாறு என்பதைக் கேள்விப்பட்டு, அந்த இடமே வேண்டாமென்று அவன் தந்தையிடம் அடித்துப் பேசியது நினைவுக்கு வருகிறது.

''மாப்பிள்ளை நல்ல வேலையிலே இருக்கான். பார்க்க அம்சமா இருக்கான்னு... ஈயின்னு பல்லை காமிச்சிடு வீங்களே. அண்ணங்காரனுக்கு மூளை சரியில்லையாம். அதை மெண்டலி டிஸ்டார்டட் என்று அழகா இங்கிலீஷ்லே சொல்றுரு அவன் அப்பா. அந்த அண்ணன் காரன் கடைசி மட்டும் யார் கூட இருப்பான். என் தங்கை கூடத்தானே. அவனுக்கு சாப்பாடு போட்டு காலம் முழுக்க பராமரிக்கப் போறது யாரு. என் தங்கைதானே? நாளைக்கே, அந்த அண்ணன்காரன் தம்பி பெண்டாட்டி கிட்ட ஏடாகூடமா நடந்துகிட்டா, 'ஓ ராமா'ன்னு அழப் போறது யாரு... நீங்களும், நானும்தானே... சரி.... இத்தனையும் விடுங்க... இதே கோளாறு, தம்பிக்கும் வராதுன்னு என்ன நிச்சயம்?''

எத்தனை கிடுக்கிப் பிடி கேள்விகள்...

அந்த மூளை இப்பொழுது எங்கே போயிற்று....?

பம்பாய் விமான நிலையத்திலிருந்து, நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், விஷயத்தை அரை குறை ஆங்கிலத்திலும், மிச்சத்தை ஜாடையிலும் தெரிவித்து, அங்கிருந்து இன்ஸ்பெக்டர், நாலைந்து கான்ஸ்டபிள் சகிதம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தபோது கூட—

மனசு திக் திக்கென்றது அடித்துக் கொள்கிறது அவனுக்கு.

ஒருவேளை—ஈஸ்வர் நல்லவனுக இருந்து அவன் சொன்ன கம்பெனி பெயரை நாம்தான் மறந்துபோய்க் கூத்தடிக்கிறோமா.

அப்படியிருந்தால் என்னைப் பார்த்ததும் அவன் என்ன சொல்வான்.

நாசூக்காய்ச் சமாளிக்க நான் என்ன சொல்றது?

'சும்மாத்தான். பிளேன் டிக்கெட் ஒண்ணு ஓசியிலே கிடைச்சது. வந்தேன்னு...'

'ச்சீ... அசிங்கம். இதமாதிரி, மனசு கேட்கவில்லே. பிரதர், ராஜேஸ்வரியைக் குடியும் குடித்தனமுமாய்ப் பார்க்கணும் போல இருந்தது; வந்துட்டேன்...'

'அபத்தம்டா பார்த்திபா. ஆபீஸ்லே அர்ஜெண்ட்டான ஒரு விஷயமா அனுப்பினுங்க. வந்தேன். வந்த இடத்துல உங்களை வழியனுப்பின மாதிரியே வரவேற்பும் கொடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்; எப்படி.... பிரயாணம் எல்லாம் வசதியா இருந்ததா... இது போதும். இதுக்கு மேலே ஒரு வார்த்தை கூட அநாவசியமா உளறி வைக்காதே!'

அவன் கைகால் உதறலெடுக்க, உட்கார்ந்திருந்த அதே நேரத்தில்—சென்னை வண்டி வந்து நிற்க—

பார்த்திபன், சாவி கொடுத்த பொம்மை போல எழுந்து நிற்கிறுன்.

''சார்... சார்... அதோ சார்... ஃபர்ஸ்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்ட்... கூலிங்கிளாஸ்... தாடிவாலா...''

''நீங்க இங்கேயே இருங்க...''

இன்ஸ்பெக்டர் விரைகிறுர்.

ஈஸ்வரின் முகத்தில்... அது... அது என்ன... பயமா... கோபமா...

ஒரு கணம்... ஒரேயொரு கணம் தான். சட்டெனப் பாய்ந்து கூட்டத்துக்குள் கலக்க முயன்றவனை, போலீசார் விரட்டிப் பிடிக்க...

பெட்டி, படுக்கைகளுடன் இறங்கிய ராஜேஸ்வரி...

மிரண்டு போனவளாய், இவர்களையே வெறிக்கிறுள்....

இதற்கு மேலும் தாமதித்தால் அழுது விடுவாள் போல...

பார்த்திபன், அவள் அருகில் போய் நின்றவுடன் அந்தக் கண்களில் தீக்குச்சியை உரசினுற் போல ஒரு வெளிச்சம்.

''மிஸ்டர் பார்த்திபன்... இந்த ஆளை ரொம்ப நாளா நாங்க தேடிட்டிருக்கோம். இது வரைக்கும் இவன் அஞ்சு கல்யாணம் பண்ணிட்டிருக்கான். ஒவ்வொரு பெண்ணையும் ஐயாயிரம், பத்தாயிரத்துக்கு வித்திடறதுதான் வேலை. கடைசியா ஒரு பொண்ணை ஷேக் ஒருவருக்கு வித்து...''

பார்த்திபன், ராஜேஸ்வரியையே

பார்க்கிறான்.

''ஸாரி... எக்ஸ்டிரீம்லி ஸாரி ராஜேஸ்வரி. நான் என்னமோ உங்களுக்கு நல்லது செய்யறதா நினைச்சுட்டு...''

அவன் சொல்லி முடிப்பதற்குள், அவள் அப்படியே பெட்டி மீது உட்கார்ந்து தலையில் அடித்துக் கொண்டு அழுகிறாள்.

''என்ன ஆச்சு ராஜேஸ்வரி... நல்ல வேளை, நான் வந்திட்டேன் இல்லே?''

''ஒரு வாரத்துல ஏழு ஜென்மங்களுக்கும் சேர்த்துக் கனவை வளர்த்துட்டேங்க. எத்தனை நல்லாப் பேசிட்டு வந்தாரு. என்னென்ன ஆசை வார்த்தையெல்லாம் சொன்னாரு. நான் ஒண்ணும் பத்தினி இல்லீங்க. இவரைப் பிடிச்சு ஜெயில்லே போடப் போறதுக்காக அழல்லே. என்னோட கனவு கலைஞ்சு போனதுக்காக... திருப்பி எப்படி ஊருக்குப் போய் எல்லார் மூஞ்சியிலேயும் முழிப்பேன். எங்க அம்மா கேட்டா என்ன பதிலைச் சொல்லுவேன்.''

''என் தப்புதான் அத்தனையும் ராஜேஸ்வரி. வெட்ட வெளியிலே பறந்துக்கிட்டிருந்த சிட்டுக்குருவியைக் குளிப்பாட்டி, சுத்தம் பண்றதா நினைச்சுட்டு, திரும்ப அது மேல பறக்கவே முடியாதபடி சிறகுகளை நனைச்சுட்டேன். நான், உன் மனசுல கல்யாண ஆசையை உண்டு பண்ணும இருந்திருந்தா—நீ பாட்டுக்கு. இந்தத் தொழில்தான் நம்ம தலையெழுத்துங்கற மாதிரி இருந்திருப்பே...''

ஈஸ்வரைப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்துவிட்டு, அங்கேயே அமர்ந்து பார்த்திபன் அவளைச் சமாதானம் செய்ய...

''நான் திரும்பி வரல்லீங்க. எல்லாரும், ராஜேஸ்வரி நல்லபடியா குடித்தனம் பண்றதா நினைச்சுக்கட்டும். நான் இங்கேயே—''

அவள் சொல்லி முடிக்கவில்லை. அவன், அவளது கரங்களை அழுத்திப் பிடிக்கிறான்.

''பம்பாய் ஃபிளாட் இல்லையின்னு என்ன... மெட்ராஸ்லே ஒரு போர்ஷன் பார்க்கறேன். கல்யாணம் பண்ணிக்கப் போறதா வீட்டுல தகவல் கொடுக்கறேன்...''

''என்னையா... என்னையா...?''

அவள் விழிகள் விரிய அவனைப் பார்க்கிறாள்.

''ஆமா... சீர்திருத்த சிந்தனை எல்லாருக்கும் வரணும்னு நினைக்கறவன், நான் மாத்திரம் அப்பா, அம்மா பார்த்து வச்ச, பட்டதாரிப் பெண்ணை, சீர் வரதட்சிணையோடு பண்ணிட்டா எப்படி... எத்தனை வருஷமானாலும் உங்கள்லே ஒருத்தியத்தான் கல்யாணம் பண்ணிக்கறதா இருக்கேன்... கிளம்பு.''

அவர்கள் மறுபடியும் சென்னைக்கு திரும்பும்போது, ரயில் பெட்டியின் ஜன்னலோரமாய் அமர்ந்திருந்த அவள்—வெகு நேர யோசனைக்குப் பின் கேட்கிறாள்:

''ஏங்க?''

''என்ன...?''

''ஒரு குக்கர், ஒரு ஸ்டவ், நாலஞ்சு சமையல் பாத்திரம்... உம்... தோசைக் கல்லு... என்ன சிரிக்கிறீங்க? நான் ரொம்ப நல்லா சமைப்பேங்க. என் சமையலை எங்க பாட்டி ஒரு காலத்துல ரசிச்சு சாப்பிட்டுட்டு, 'போறது போ, ஒரு ஆம்பிளை வயிறு பொழச்சது'ம்பாங்க. அது மாதிரி ஒரு ஆம்பிளை வயித்தைப் பார்த்துச் சோறு போடணும்னு ரொம்ப நாளா ஆசை...''

பார்த்திபன், அவளறியாத வண்ணம் கண்களைத் துடைத்துக் கொள்கிறான்.


(முற்றும்)

விடை:




நான்தான்!









ஐயய்ய! ஏன் பயப்படறீங்க!
அகாலி தளம்
அமைத்த போராட்டம் அமைதியாக நடக்கும்! -லோங்கோவால்
அப்பாவி மக்கள்


இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அமைதி நிலைமை
ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனே பேச்சு
இலங்கைத் தமிழர்


என்னாங்க, அந்த மாஞ்செடி....
எல்லாம் முளைக்கும்! அவசரப் படாதே!
என்.டி.ராமராவ்
பாரத தேசம் கட்சி



கங்கை இங்கே வர வேண்டும்

அமெரிக்க ஆர்லண்டோவில் டிஸ்னி அதிசய உலகத்தைப் பார்த்து நான் வியந்து கொண்டிருக்கும் வேளையில், பங்களா தேஷ் நாட்டில் மிகை வெள்ளம் ஏற்பட்டுப் பகை வெள்ளமாகிப் பலரை பலி கொண்டு விட்ட செய்தியைக் கேள்வியுற்றேன். அதிர்ச்சியும் வேதனையும் என்னை ஆட்கொண்டது.

வற்றாத நதிகள் இணைய வேண்டும், வறண்ட பூமி நனைய வேண்டும் என்கிற உன்னதமான கருத்தின் அடிப்படையில்தான், நான் கங்கை இங்கே வரவேண்டும், குமரிக் கடலைத் தொட வேண்டும் என்று மக்களிடத்தில் பேசும்போது ஓயாமல் குறிப்பிட்டு வந்திருக்கிறேன்.

விண்வழி, மண் வழி, அதோடு நீர் வழியும் சேர்ந்தால் பயணம் எளிதாகும். கிடைக்கிற பயனும் பெரிதாகும். கங்கை, காவிரி—இணைப்பில் தடை ஏற்பட வழியில்லை.

இத்தாலி நாட்டிலிருந்து பாரீஸ் செல்லும்போது மலைகளையே மரக் கட்டைகளாகக் குடைந்திருப்பதை நான் கண்டேன். ஹாங்காங்கில் கடலுக்கடியில் ரயிலும் போகிறது, காரும் போகிறது. அப்படியிருக்க, கங்கை மட்டும் ஏன் கன்னியாகுமரிக்குப் போகாது?

தாத்தா நேருவுக்கும், தாயார் இந்திராவுக்கும் கிடைக்காத மிகப் பெரும்பான்மையான பலத்தோடு ஆட்சி அமைந்துள்ள ராஜீவ் காந்தி இளைஞர் என்பது மட்டுமல்ல என் கருத்து.

எந்தச் சூழ்நிலையிலும், தன்னிலை தவறாத நிதானத்துடனும் நுட்பத்துடனும் செயல்படும் விமான ஓட்டியாகப் பயிற்சி பெற்றவரல்லவா அவர் என்று நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. பரந்து வளர்ந்துவரும் விஞ்ஞான நுட்பங்களை.

இந்த வாரம் தலையங்கம்
குமரி அனந்தன் எழுதுகிறார்:

குமரிக் கடலைத் தொட வேண்டும்!

பரம்பரையாய் பாரதத்தில் இருந்து வரும் பண்பாட்டோடும், மனித சக்தியோடும் இணைத்துப் பொருத்தி, புதிய பாரதம் படைக்கத் துடிக்கும் நமது பிரதமரால் இதை நிச்சயம் நிறைவேற்ற முடியும்.

கங்கையைக் குமரியோடு இணைப்பது தேசிய ஒருமைப்பாட்டின் செயல் திட்டமல்லவா?

ஜப்பானில் 'எக்ஸ்போ 85' என்ற பொருட்காட்சியிலும், அமெரிக்காவிலும் கடல் நீர் குடிநீர் ஆவதைக் கண்டேன். ஓர் அங்குலத்தைப் பதினைந்து கோடி துண்டுகளாக்கினால், அதில் ஒரு துணுக்கு எவ்வளவு அளவு இருக்குமோ, அந்த அளவுக்கு, கண்ணுக்குப் புலப்படாத மிக மிக நுண்ணிய துவாரங்கள் கொண்ட ஒரு தாளின் வழியாகக் கடல் தண்ணீர் புகுந்து மறுபுறம் நல்ல தண்ணீராகக் கொட்டுகிறது. *Micro Pores in Reverse Osmosis Membrane* முறை என்று இதைக் குறிப்பிடுகிறார்கள்.

நாமும் செய்யலாம்.

சூரிய ஒளியும், வீரியக் காற்றும் சக்தி தரும் நமது இயற்கைச் செல்வங்கள். நீரும், மின்சாரமுமே ஒரு நாட்டின் மூலாதாரப் பொருள். இவைகளை மக்களுக்காகக் கொடுக்க வேண்டும்.

நல்ல மக்களை உருவாக்க வேண்டும். கல்விக் கூடங்களே அதற்கான நாற்றங்கால். அமெரிக்காவில் ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களின் ஆலோசகர் என்று ஒருவர் பணிபுரிகிறார். நாமும் நம்முடைய கல்வி நிலையங்களில் அம்மாதிரி ஆலோசகரை நியமித்து, திறமை மிகுந்த மனிதர்களை உருவாக்கி விடலாம்.

கல்வி நிலையங்களில் வழிகாட்டும் குழு அமைத்திட வேண்டுவதன் அவசியத்தை நான் நெடு நாட்களாக வலியுறுத்தி வருகிறேன். அமெரிக்காவில்தான் நான் நேரில் பார்க்க முடிந்தது.

வெட்டி முறிப்பவனைப் பற்றி எழுதுவதைவிட நட்டு வளர்ப்பவனைப் பற்றி அதிகம் எழுதி நம் பத்திரிகைகள் நாட்டின் நலத்தைக் கண்காணிக்கும் கண்களாக செயல்படக் கூடாதா?

சான்றாக:

அளவு மீறிய சத்தத்தால் மனிதர்கள் அன்றாடம் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் இப்பொழுதுள்ள ஒலி அலறல் தொடருமானால் இன்னும் 15 ஆண்டுகளில் பிறக்கப் போகும் குழந்தைகளில் பல செவிடாகவே இருக்கும். இதைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சில மாதங்களுக்கு முன் கூறிய போது ஆதரித்த பத்திரிகைகள் எத்தனை?

ஜப்பானில் இரவு பத்து மணிக்கு மேல் விமானம் பறக்கக் கூடாது. விரைந்து செல்லும் கார்களில் எழும் ஓசை காதுகளைப் பாதிக்கும் என்பதால் ஜப்பானில் நெடுஞ்சாலையின் இருபுறமும் ஒலியை ஈர்த்துக் கட்டுப்படுத்தும் பட்டைகளைக் கொண்டு, அடைப்புகளை எழுப்பியிருக்கிறார்கள்.

ஜாதி சமய பேதங்கள் குறுக்கிடாமல் நாடு வாழ்ந்தால் மட்டுமே நாம் வாழ முடியும். ஒவ்வொருவரும் உண்மையுடன் உழைத்தால் அமெரிக்காவையும், ஜப்பானையும் எட்டிப் பிடித்து வெற்றிக் கொடி நாட்டிட இந்தியாவால் முடியும்.

இந்தப் பேருண்மையை மேலும் உணர்ந்தவனாக, புதிய ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் தமிழ் மக்களின் நலனுக்காக உழைக்கும் நெஞ்சுறுதியோடு எனது உலக சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியுள்ளேன்.



காந்தன் மாமாவுக்குக் கல்யாணமாம்.

''நானும் வருவேன்,'' என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு சம்முவம் அடம் பிடித்து அழுது தீர்த்தான்.

''அது ரொம்பத் தூரம் இருக்குடா கண்ணு. சின்னப் பசங்கள்ளாம் அங்கே வரக் கூடாது. ரயில்லே ஏத்திக்க மாட்டான்,'' என்று என்னென்னவோ சொல்லி அவன் அம்மா தனம் அவனை மட்டும் பாட்டியிடம் விட்டு விட்டுக் காந்தன் மாமா கல்யாணத்துக்குப் போய் விட்டாள்.

காந்தன் மாமாவின் பங்களா இப்படி ஒரு தடவை கூடப் பூட்டியிருந்து சம்முவம் பார்த்ததே இல்லை. அந்தப் பங்களாவுக்குப் பின்னால் குடிசை போட்டுக் கொள்ள இடம் கொடுத்திருந்தார் அவர். அதில்தான் சம்முவம், அவனுடைய அம்மா, பாட்டி மூன்று பேரும் இருந்தார்கள்.

அம்மா புறப்பட்டதிலிருந்து அவனுக்கு ரொம்பத்தான் போரடித்தது. பங்களா கார்டனுக்குள் சுற்றிச் சுற்றி வந்து மணத் தக்காளிப் பழம், வெண்டைப் பிஞ்சு இப்படி எத்தனைதான் பொறுக்கித் தின்பது! காந்தன் அவனைப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு ஊட்டி விடுவாரே அந்த நெய் தோசைக்காக அவன் நாக்கு ஏங்கியது.

காந்தனுக்கு அவனிடம் ரொம்பப் பிரியம். கேட்டண்டையே காத்திருப்பான் சம்முவம். அவன்தான் கேட்டைத் திறந்துவிட வேண்டும். வாட்ச்மேன்

தாத்தாவை முந்திக் கொள்வான். அவன் கேட்டைத் திறப்பதற்கும் காந்தன் கார் கதவைத் திறந்து விடுவதற்கும் சரியாய் இருக்கும். மடியில் ஏறி உட்காராத குறையாய் முன் சீட்டில் தாவி ஏறிக் கொள்வான். மகா உரிமையோடு காந்தனின் சட்டைப் பையில் கை விட்டுத் துழாவுவான். குறைந்த பட்சம் ஒரு சாக்லெட்டாவது அவனுக்காக அங்கு காத்திருக்கும்...

கல்யாணத்துக்குப் போனவர்கள் திரும்பி விட்டார்கள். சம்முவத்துக்கு ஓட்டமாய் ஓடிப் போய்க் காந்தன் மாமாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்தது.

''மாமோவ்...'' தன் வீட்டுக்குள்ளிருந்து பாய்ந்தோடிச் சென்ருன்.

அம்மா அவனைத் தடுத்து நிறுத்தி அணைத்துக் கொண்டாள்.

''நான் மாமாவைப் பார்க்கப் போகணும். என்னை விடு,'' என்று திமிறி அவள் பிடியிலிருந்து நழுவப் பார்த்தான்.

''கொஞ்சம் இருடா கண்ணு,'' அவனை வீட்டுக்குள் திருப்பி அழைத்துச் சென்ருள் தனம். ''மாமா தானே? அவர் தான் வந்தாச்சே. இப்ப அவருக்குப் பெரியவங்களோட முக்கியமான வேலை இருக்கும். இதோ பார், உனக்கே உனக்குக் கொடுன்னு சொல்லி என்னென்ன கொடுத்திருக்கிருர் பாரேன். எல்லாம் உனக்குத்தான்.''

கல்யாணப் பையிலிருந்து சிவப்பு, மஞ்சள், பச்சை என்று கலர் கலராய் நிறையப் பலகாரங்களை எடுத்துக் கொடுத்தாள். அவன் வாயில் ஊட்டி விட்டாள். ''நல்லாயிருக்கா? எல்லாம் உனக்குத்தான்,''

''போம்மா, உனக்குச் சரியாவே ஊட்டத் தெரியலே. மாமான்னு இன்னும் ஜோரா ஊட்டி விடுவாரே! நான் அவரண்டை போகணும்...'' மனசாருமல் சிணுங்கினுன் அவன்.

''இத பார்.. இப்போ அந்த வீட்டுக்குப் புதுசா யார் யாரோ வந்திருக்காங்க. அதான். இத பாரு, இனிமே நீ அந்த வீட்டுக்குப் போகக் கூடாதுன்னு போகக்கூடாதுதான்.''

எஸ். சகுந்தலா

அதற்கு மேல் ஏதாவது கேட்டால் அம்மா அழுவாள்; இல்லாவிட்டால் தன்னை அடிப்பாள் என்று அவனுக்குப் பயமாய் இருந்தது. அதனுல் அப்போதைக்குப் பேசாமல் அடங்கி விட்டான். இருந்தாலும் மனசுக்குள் ஒரே தவிப்பு காந்தன் மாமாவைப் பார்க்க வேண்டுமென்று.

அடுத்த நாள் காலே. வீட்டில் சுறுசுறுப்பாய் ஏதோ சமையல் செய்து கொண்டிருந்தாள் தனம். காந்தன் மாமா ஊரில் இருந்தால் தினமும் காலை டிபன் அவருடன்தான். அவரே பின்பக்கமாய் வந்து, ''சம்முவம்...'' என்று குரல் கொடுப்பார். அவர் கையைப் பிடித்துக்கொண்டு துள்ளியபடி அவருடன் செல்வான். சாப்பாட்டு மேசையில் அவருக்குப் பக்கத்தில் அவனை உட்கார வைப்பார். அவனுக்கென்று தனித் தட்டு. ''உன் செல்வத்தைக் கூட்டி வந்தாச்சில்ல?'' என்று சிரித்தபடி காந்தனின் அத்தை அவனுக்கு அந்தத் தட்டை வைத்து, முதலில் அவன் தட்டில் தோசையைப் போட்ட பிறகுதான் காந்தனுக்குத் தோசை வார்ப்பாள். என்ன மணமாய் என்ன ருசியாய்...

ஏன், ஏன் அம்மா, அங்கே போகக் கூடாது என்கிருள்? சம்முவத்துக்கு விளங்கவில்லே. அம்மா மேல் கோபம் கோபமாய் வந்தது.

காந்தனின் பங்களாவுக்கும் தனத்தின் குடும்பத்தாருக்கும் இன்று நேற்றைய சொந்தம் அல்லவாம். பாட்டி கதை கதையாய்ச் சொல்லியிருக்கிருள் சம்முவத்திடம்.

அம்மா சின்னவளாய் இருந்த போது எப்போதும் பெரிய வீட்டிலேயே தான் இருப்பாளாம். காந்தன் மாமா அப்போது எல்லா விளையாட்டுக்கும்—அவரும் சின்னப் பையனுகத்தானே இருந்தார்—அம்மாவைச் சேர்த்துக் கொண்டுதான் விளையாடுவாராம்.

அப்புறம் பாட்டிக்கு இருமல் வந்து உடம்புக்கு முடியாமல் போய் விட்டதாம். பாட்டிக்குப் பதிலாய் அம்மா

மாமா ஏன் மாறினர்?

அங்கு வேலைக்குப் போய்ச் சேர்ந்தாளாம். அப்ப வயசுக்கு வந்த பெரிய பெண்ணாக இருந்தாளாம்.

'அம்மாமட்டும் சின்ன வயதிலிருந்து பெரிய அம்மாவான அப்புறம் கூடப் பெரிய வீட்டிலேயே இருக்கலாம்; நான் மட்டும் போகக் கூடாதோ?' சம்முவம் நினைத்து நினைத்துப் பொருமிக் கொண்டிருந்தான்...

''நேரமாச்சு சாப்பிட்டு ஸ்கூலுக்குப் போ. நான் நல்ல தண்ணி கிணத்துக்குப் போய் வர்றேன். ஆயாவுக்கு உடம்பு சரியில்லை. அவங்களைத் தொந்தரவு பண்ணாதே,'' என்று சொல்லிவிட்டுப் பிளாஸ்டிக் குடத்தைத் தூக்கிக்கொண்டு வெளியேறினாள் தனம்.

ஆயாவுக்கு இழுப்புத் தொந்தரவு. கரு ஊமத்தைச் சருகைத் தையல் இலையொன்றில் சுருட்டியெடுத்துக் கட்டிலில் சாய்ந்தபடி பற்ற வைத்துக் கொண்டு பக் பக்கென்று ஊதியபடி கண்ணைச் செருகிக்கொண்டு சாய்ந்திருந்தாள். அவள் இவனைக் கவனிக்கவில்லை.

சம்முவம் மெள்ள எழுந்தான். பெரிய வீட்டுக்குள் நுழைந்தான்.

படியேறியதும் அவனுக்குத் தன்னால் பழைய உரிமை வந்துவிட்டது. கம்பீரமாய் உள்ளே சென்றவன் சாப்பாட்டு மேசைப் பக்கம் பார்த்தான். காந்தன் மாமா உட்கார்ந்திருந்தார்.

''மாமா, வந்துட்டேன்,'' என்று துள்ளிக் குதித்து அவருக்குப் பக்கத்தில் போய் நாற்காலியில் ஜிங்கென்று ஏறி உட்கார்ந்துகொண்டு, ''என் தட்டு எங்கே?'' என்று அவன் கேட்டபோது—

சமையல்கட்டிலிருந்து நெய் தோசையுடன் அங்கு வந்தாள் ஒரு பெண். ஓகோ, இதுதான் காந்தன் மாமாவோட புதுப் பெண்டாட்டியா? கழுத்திலும் காதிலும் நகைகளாய், பளீரென்ற மாம்பழக் கலர் புடவையில் அசப்பில் சினிமாக்காரி மாதிரி அழகாகவே இருந்தாள். மதிப்போடு அவளை ஏறிட்டுப் பார்த்த சம்முவம், அவள் முகம் போன போக்கைக் கண்டதும் சற்றுத் தடுமாறிப் போய்க் காந்தன் பக்கம் நெருங்கினான்.

விருட்டென்று அந்தப் பெண் நெய் தோசையைக் கணவன் தட்டில் வைத்தாள். அருகில் வந்த சம்முவத்தை முணுக்கென்று இழுத்து அந்தண்டை விட்டாள். ''இவன் உங்க வீட்டு வேலைக்காரி பிள்ளை இல்லை? அதை வைக்கற இடத்திலே வைக்க வேணும்? கிட்ட வா நாயேன்னு மூஞ்சை நக்கும். பாத்திங்களா? சீ, போடா வெளியே.'' அவனை இழுத்துப் போய் வாசலில் தள்ளினாள் அவள்.

அந்த உபாதைகூடச் சம்முவத்துக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. இத்தனையும் பார்த்துக்கொண்டு காந்தன் மாமா—தன்னைச் சரிக்குச் சரியாய் உட்கார வைத்துக்கொண்டு, சமயத்தில் ஊட்டியும் விட்டு அத்தனை ஆசையாய் இருந்த மாமா—ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு எங்கேயோ பார்த்துக்கொண்டு சும்மா இருந்துவிட்டாரே, அதைத்தான் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அம்மா வரும்வரை தன் வீட்டுத் திண்ணையிலேயே குந்தி உட்கார்ந்துகொண்டு முழந்தாளில் புதைத்துக் கேவிக் கேவி அழுது கொண்டிருந்தான் அவன்.

''சம்முவம், ஏண்டா அழறே? யாருடா அடித்தது?'' என்ற அம்மாவின் குரல் கேட்டதும் நிமிர்ந்தவன், அவள் தண்ணீர்க் குடத்தை வைத்துவிட்டுத் திரும்பும்வரை காத்திருந்து, அவள் மடியில் முகம் புதைத்து ஒரு பாட்டம் அழுது ஓய்ந்த பிறகு நடந்ததைச் சொன்னான்.

அம்மாவும் அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு அவனைப் போலவே ஒரு மூச்சு அழுது தீர்த்தாள். ''சம்முவம், இதுக்குத்தாண்டா கண்ணு சொன்னேன். இனிமே அங்க போகாதே ராஜா. நான் தான் வயித்துக் கொடுமைக்கு வேற வழியில்லாம அங்க போய் வேலை செய்யறேன். நீ எதுக்குடா அங்க போகணும்? உனக்கிருந்த சொந்தமெல்லாம் பறிபோயிட்டுதடா கண்ணு,'' என்று மேலும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

இப்போது அவனே அவனுக்கு ஆறுதல் சொல்லும்படியாய் ஆயிற்று. அவள் அழுவதைப் பார்க்க அவனுக்குப் பாவமாய் இருந்தது. ''இல்லேம்மா. நான் இனிமே அங்கே போகமாட்டேன். எனக்குப் பசிக்கலேம்மா. நான் ஸ்கூல்லே சத்துணவு சாப்பிட்டுக்கறேன். வரேம்மா.'' கண்களைத் துடைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாய் ஒரு சிரிப்பை வரவழைத்துக்கொண்டு மொட்டைப் பலகையும் பலப்புக் குச்சியும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

போகிற வழியில்தான்

''சம்பந்தி... என் பெண்ணுக்குக் குழந்தை மனசு... கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கணும்...''

''அதனலென்ன... கள்ளம் கபடு இல்லாம இருப்பா...''

''அதில்லே... ராத்திரி பசிச்சா அழ ஆரம் பிச்சுடுவா...''

—சுதா.



தேர்முட்டி ஆப்பக் கடை. ஆப்பக் கடை ஆயா அவன் வருகையையே எதிர் பார்த்துக் காத்திருப்பவள் போல் அவனை வழி மறித்ததைக் காண அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''சம்முவம், ராஜா, வாடா கண்ணு,'' என்று அவள் கை நீட்டி வாய் நிறைய வரவேற்ருள்.

அவன் காதுகளையே அவனுல் நம்ப முடியவில்லை.

நேற்றுவரை அவன் சும்மா அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தால்கூட, ''சும்மா கண்ணு வைக்காதடா கழிசடை. ஆப்பம் புண்டு புண்டு போகுது பாரு,'' என்று நட்டி முறித்தவள் அவள்.

சம்முவம் சற்றுப் பிரமிப்போடு அந்தக் கடையின் தற்காலிக பெஞ்சில் போய் உட்கார்ந்தான்.

''என்ன சாப்பிடறே? உனக்குன்னு சீராளம் எடுத்து வச்சிருக்க றேன். நெய்யாப்பம் போடட்டா?'' என்று விழுந்து விழுந்து உபசாரம் செய்தாள்.

''பாட்டி, என்கிட்ட காசு இல்லை,'' என்று கையைப் பிசைத்தான் சம்முவம்.

''நான் உன்னண்டை இப்ப காசு கேட்டனு? எப்ப வேணு உனக்கு வேணுங்கறதை கேட்டு வாங்கித் தின்னு. கொடுக்க வேண்டியவங்க காசு கொடுத் துட்டுப் போருங்க. உனக்கென்ன, ராஜா வூட்டுக் கன்னுகுட்டி!'' சிரிக்கச் சிரிக்கப் பேசிப் புரிந்து பரிந்து உபசரித்து சம்மு வத்தைத் திக்குமுக்காட வைத்துவிட்டாள் ஆப்பக்கார ஆயா.

வயிறு புடைக்கத் தின்று முடித்ததும் அதுவரை மனசுக்குள் குறு குறுத்துக்கொண்டிருந்த சந்தேகத்தைக் கேட்டான் அவன். ''ஆயா, நான் ஒருத் தரண்டையும் சொல்லமாட்டேன். இதுக் கெல்லாம் யாரு காசு கொடுப்பாங்க?''


அவள் அவன் கன்னத்தை வழித்து நட்டி முறித்துவிட்டு, ''எல்லாம் புதுசா கல்யாணம் கட்டிக்கிட்டாரே, அந்த மில்லுக்காரர் காந்தன்தான்! உங் கம்மா கிட்ட சொல்லு. சந்தோசப் படுவா,'' என்ருள்.

மாலை பள்ளி விட்டுச் சென்றதும் தாயாரைச் சந்தோஷப் படுத்து வதற்காக, தேர்முட்டி ஆப்பக்கார ஆயா தன்னைக் கூப்பிட்டுப் பலகாரம் பரிமாறிய உபசாரத்தையும் காந்தன் மாமா பணம் கொடுப்பார் என்று அவள் சொன்னதை யும் அப்படியே கூறினன்.

அம்மா ஆத்திரமும் அழுகையு மாய்ச் சொன்னுள். ''ஆமாம்டா! அவர் பெரிய இடத்துப் பிள்ளை. அவரோட அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் உன்னை யும் என்னையும் வச்சுக் குடித்தனம் நடத்த முடியுமா? அப்படியே நடத்தினலும் சொந்தக்காரங்க விட்டிருவாங்களா? அதான்... அதான் அவருக்கு ஏத்த இட மாப் பார்த்துப் பணக்காரியைக் கட்டிக் கிட்டாரு. நான் யாரு? குடிசைக்காரி. வேலைக்காரி. வெளியே சொல்லிக்கிட்டா குச்சுக்காரி. உம்... போருங்க போடா. ஆனு உன் உடம்பிலே ஓடறது அவரோட ரத்தம் இல்லையா? அதான் தானுடாட்டா லும் தன் தசை ஆடுது. அதனலதான் ஆப்பக்கார ஆயாவுக்குப் பணம் கொடுத்து நெய்யப்பம் கொடுக்கச் சொல்ருரு. சம்முவம், அது... அது பெத்த கடன்டா பாவி!''

அவள் குலுங்கிக் குலுங்கி அழு தாள்.

சம்முவம் அவள் சொன்னதும் புரி யாமல், அவள் அழுகையின் காரணமும் தெரியாமல் விழித்துக்கொண்டு நின்ருன்.



கலெக்டரிடமிருந்து வந்த கடிதம்

பி.ஆர். பார்த்தசாரதி

கனகசபை தன் மகனிடமிருந்து வந்திருந்த கடிதத்தை ஆர்வமாகப் பிரித்தார். 'சே! இந்தத் தடவையும் அப்படியேதானு!' என்று கோபம் வந்தது.

அவர்பிள்ளை பிரகாஷ் உ.பி.யில் உள்ள ஒரு மாவட்டத்தில் கலெக்டராக நியமிக்கப்பட்டுப் பதவி ஏற்ற பிறகு பல கடிதங்கள் எழுதிவிட்டான்.

உ.பி. மக்களைப் பற்றியும் இந்தி மொழி பற்றியும், தான் சின்ன வயதிலிருந்து இந்தி படித்து வந்ததால் மொழித் திண்டாட்டம் இல்லாமல் இருப்பது குறித்தும், உ.பி. உணவு வகைகள் குறித்தும்— இன்னும் பல விஷயங்கள் குறித்தும் எழுதியிருந்தான்.

எல்லாம் சரிதான். ஆனுல்—

''என்னங்க, பிள்ளை எழுதியிருக்கிருனு?'' என்றபடி உள்ளேயிருந்து வந்தாள் அவர் மனைவி. 'ஊம், ஊம்' என்றவர் அவளிடம் கடிதத்தைத் தந்தார். அவள் மகிழ்ச்சியுடன் படித்துக் கொண்டே திரும்பிச் சென்ருள்.

'ஹூம்! கலெக்டராம் கலெக்டர்! என்ன பிள்ளை இவன்!' என்று கனகசபை முணுமுணுத்துக் கொண்டார்.

மகனது கடிதம் தமிழில் எழுதியிருந்தது அவருடைய பெரிய மனக் குறை

கனகசபை பெரிய உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றவர். மகன் ஜம்மென்று ஆங்கிலத்தில் எழுத வேண்டுமென்று எதிர்பார்த்தார்.

'இவனை ஐ.ஏ.எஸ். படிக்க வைச்சுக் கலெக்டராக்கினுலும் என்ன; பட்டிக்காட்டான் மாதிரி தமிழ்லே கடுதாசு எழுதருன்!' என்று பிள்ளையை நினைத்துச் சிடுசிடுத்தார்.

மாதம் இரண்டு கடிதங்கள் வீதம் பிரகாஷிடமிருந்து ஏழெட்டுக் கடிதம் வந்துவிட்டன.

எல்லாம் தமிழிலேயே வந்தன.

பிரகாஷ் லீவில் ஊர் திரும்பினுன்.

கனகசபையும் அன்னமும் மகனிடம் ஒரு வருடப் பிரிவிற்குப் பிறகு பசி நேரம் வந்ததுகூடத் தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''வாப்பா பிரகாஷ், சாப்பிடலாம்.'' அன்னம் அன்பொழுகக் கூப்பிட்டாள்.

''அம்மா, உங்களையெல்லாம் பார்த்ததிலே பசியே இல்லை. காப்பி கொஞ்சம் கொண்டாங்க,'' என்று பிரகாஷ் கூறவே, அன்னம் சமையலறைப் பக்கம் போனுள்.

கனகசபை தனது ஒரு வருட ஆதங்கத்தைப் பிரகாஷிடம் விவரித்தார்.

''பிரகாஷ், என்னப்பா நீ! ஐ.ஏ.எஸ். படிச்சு ஜம்முனு பாஸ் பண்ணியிருக்கே. பெரிய கலெக்டர். ஆனு உன் லெட்டர்லே நீ இன்னமும் தமிழிலேயே எழுதறே. இங்கிலீஷ் மறந்து போச்சா? இனிமே உன் கடிதங்களை இங்கிலீஷ்லேயே எழுது...''

''முடியாதுப்பா.'' பிரகாஷ் மறுதலித்தான்.

''ஏன்? ஏன்?'' திகைத்தார் தந்தை.

''நான் கடிதம் எழுதுவது உங்களுக்காக மட்டும் இல்லேப்பா.''

''என்னது?''

''அம்மாவுக்காகத்தான் அப்படி எழுதறேன். அவங்களுக்குத் தமிழ் மட்டும்தான் தெரியும். நான் இங்கிலீஷில் எழுதினுல் என்னதான் நீங்க படிச்சுச் சொன்னுலும் என் எழுத்தைப் படிச்சால்தானே அம்மாவுக்கு என்னை நேரிலே பார்க்கிற மாதிரி இருக்கும்? அப்பத்தானே அவங்களுக்குச் சந்தோஷம்?''

''உண்மைதாண்டா,'' என்று கனகசபை ஒப்புக் கொண்டார்.

''இதைப் போய் ஒரு பிரமாதமாகச் சொல்கிறீர்களே! கேரளாவில் நடக்கிற ஒரு கூத்தைக் கேட்டால் அசந்து போய் விடுவீர்கள்!'' என்றார் லட்சுமி

சிறந்த பாடகிக்கான தேசிய விருதை ன்றாவது தடவையாகப் பெற்றிருக்கிறார் ஸ். ஜானகி. ''இந்தத் தடவைதான் என் ாய் மொழியில் பாடியதற்குக் கிடைத் ிருக்கிறது,'' என்றார். 28 வருடங்களில் ருக்கிறது,'' என்றார்.

8 வருடங்களில் பத்தாயிரத்துக்கு மேல் ாடிவிட்டார் ஜானகி. சமீப காலமாக ந்தியிலும் கொடி பறக்கிறது. ஆந்தி வுர் துஃபானில் ஹேமமாலினிக்காகப் ாடியிருக்கும் ியாபினுவும் ஜானி ஜான் ஜனார்த்தனின் ாலு பாட்டுக்களும் நல்ல ஹிட்டாம்.

எந்த மொழியானாலும் அந்த மொழிக் ாரர் மாதிரியே பாடுகிறேன் என்கிறார் ள். அதைத்தான் பெரிய பாராட்டாகக் ருதுகிறேன்,'' என்றார்.

ருமகள் பி.ஏ. இரண்டாம் ஆண்டு டித்துக் கொண்டிருக்க, மகன் ஸி.ஏ. ிராக்டிஸ் பண்ணுகிறார். 'வயதான ாமனார் மாமியாரைத் தனியே விட முடியாததால் இதுவரை கடல் கடந்து போனதில்லை. இனி மருமகளிடம் வீட்டை ஒப்படைத்துவிட்டுப் புறப்படலாமென்று இருக்கிறேன்,'' என்றார்.

பாலசந்தர் தயாரிக்கும் மூன்று படங்களிலும் வாலிக்கு ஒரு பாட்டுக் கூட இல்லை என்று சொன்னதில் கவிதாலயாக் காரர்களுக்கு ரொம்பக் கோபம். ஸ்ரீ ராகவேந்திரரில் ஏழு பாடல்களும் வாலி தான் எழுதுகிறார் என்றும், லைட்ஸ் ஆன் தகவல்கள் உண்மையற்றவை, மிகைப் படுத்தப்பட்டவை, ஆதாரமற்றவை, சிண்டு முடியும் ரீதியில் எழுதியிருப்பவை என்றும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

வாலியைக் கேட்டேன். ''பாட்டு எழுதச் சில நிபந்தனைகள் போட்டிருந்தேன். அதற்கு ஒப்புக் கொள்ளாமல் இருந்தார்கள். இப்போது ஒப்புக்கொள்வதாகப் போன் செய்தார்கள்,'' என்றார்.

''எப்போது?'' என்றேன்.

''15'ம் தேதி சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு,'' என்றார்.

லைட்ஸ் ஆன் வெளியானது 15'ம் தேதி சனிக்கிழமை காலை ஐந்து மணி.

Sets me thinking...

தவம் படத்தின் செட்டில் லட்சுமியைப் பார்த்தேன். (''இது என் படமென்று சொல்கிறார்கள். தவறு. என் கணவர் மோகனின் படம்.'')

சமீபத்திய கணவன்—மனைவி தகராறு களைப் பற்றிப் பேச்சு வந்தது.

''இதையெல்லாம் பெரிசாய்ச் சொல் கிறீர்களே? கேரளாவுக்கு வந்து பாருங்கள். ஒரு படத் தயாரிப்பாளர், மனைவியை விவாகரத்து செய்துவிட்டதாக அறிவித்து, இன்ஸால்வென்ஸி கொடுத்து விட்டார். ஏகப்பட்ட பேர்களுக்குப் பணம் பாக்கி. அவர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு, விவாகரத்து செய்து விட்டதாகச் சொல்லப்படும் மனைவியுடன் ஜாலியாய்க் காரில் போய்க் கொண்டிருக்கிறார்,'' என்றார்.

லட்சுமி குறிப்பிட்ட



தயாரிப்பாளர் யாரென்று *I know and you know.*

''சடகண்டலு என்ற தெலுங்குப் படத்தின் போதுதான் நானும் சுரேஷும் முதல் தடவையாகச் சந்தித்தோம்,'' என்றார் அனிதா. சந்தித்த தேதி 16.9.83 என்று சொன்னார். அவ்வளவு கரெக்ட்டாய்த் தேதி ஞாபகம் இருக்கிறதென்றால் கொஞ்சம் வலுவான காதல்தான்.

அனிதாவின் கோடம்பாக்கம் வீட்டில்தான் சுரேஷ் இருக்கிறார். (வீட்டோடு மாப்பிள்ளை?) யார் எங்கே இருந்தாலும் தினம் சாப்பாட்டு வேளையின்போது சந்திக்கிறார் களாம்.

கையிலிருக்கும் மூன்று நான்கு படங்கள் முடிந்தபிறகு நடிப்பதை நிறுத்திக் கொள்ளப் போகிறாராம் அனிதா. ஆனால் முன்போலவே பாடிக் கொண்டிருப்பேன் என்றார். (சோழா, அடையாறு கேட் ஓட்டல்களில் பாடகியாக இருந்தவர் அனிதா. படங்களிலும் 30, 40 பாட்டுப் பாடியிருக்கிறார்.)

ஜீன்ஸும் இறுக்கமான பிளவுசும் அணிந்திருந்தார். ஸ்லீவ்லெஸ்ஸாகையால் வலது கையில் இருந்த அந்தச் சிவப்பு நிற மச்சத்தைக் காண முடிந்தது. ரூபாயை விட பெரிய மச்சம்.

''பதினைந்து நாளாச்சு சரியாய்த் தூங்கி,'' என்றபடி சோம்பல் முறித்தவண்ணம் வந்தார் தேங்காய். மனைவி குழந்தைகளுடன் சிங்கப்பூர் போய்விட்டுத் திரும்பியிருந்தார். சிங்கப்பூரில் இருந்தபோது செலவுக்காக டெலிவிஷன் பேட்டிகள் செய்தாராம். உள்ளூர் குழுக்களுடன் சேர்ந்து நாடகங்கள் நடத்தினாராம். 'வளமான நாடு, அழகான ரோடு' என்று மோனையில் வர்ணித்தார்.


அனிதா

தெ.எ.தொடுவில் தேங்காய் *in flying colours.* அது ரிலீசான அன்று இங்கே இருக்காமல் சிங்கப்பூரில் இருந்துவிட்டோமே என்ற வருத்தம் சிறிதும் இல்லை. காரணம்? ''இங்கே ரிலீசான அதே தினம், சிங்கப்பூரில் வீடியோவில் பலர் பார்த்தார்கள். என்னைப் பாராட்டினார்கள்,'' என்றார். (*Video piracey* யை ஒழிக்கப் போவதாக யாரோ என்னமோ சொல்லவில்லை?

இரண்டரை வருஷமாகிறதாம் மதுப் புட்டியைத் தொட்டு. ''சிங்கப்பூரில் நான் குடித்து விழுந்து அசிங்கமாய்த் திரும்பி வருவேன் என்று சில பேர் எதிர்பார்த்தார்கள், அவர்களுக்கு ஏமாற்ற மாயிருக்கும்,'' என்றார்.

தேங்காயிடம் ஒரு சிறப்பு. *sense of humour.* எந்த ஸீரியஸ் விஷயத்தையும் அவரால் வேடிக்கையாக விவரிக்க முடிகிறது.


கார்த்திக்கின்
கடத்தலுக்குக்

காரணம்

புஷ்பா தங்கதுரை

மூன்றாவது கிராஸ் சாலையில் பஸ்ஸிலிருந்து இறங்கியதும் கார்த்திக்குக்கு பாலன்ஸ் பிடிக்கப் பல கணங்கள் செலவாகின. இரு பக்கமும் பார்த்தான். மனசில் உறுத்தியது. இரவு பதினொரு மணிக்கு மேல் இருக்கும். அத்தனை சாலையும் துப்புரவாக வழிந்த நிசப்தம்.

என்றைக்கும் இதே நேரம்தான் வீடு திரும்புவது. எந்த அசம்பாவிதத்தையும் கண்டதில்லை. ஆனால் இன்று சாலையின் தோற்றம் அச்சமாக இருந்தது. நிழல்களில் ஏதோ மர்மம் இருந்தது. போதாக்குறைக்கு எட்டத்தில் நின்ற அந்தக் கறுப்புக் கார் ஓர் அயோக்கியமான சாதுவாகத் தோன்றியது.

ஹூம்! யார் அவனை என்ன செய்யப் போகிறார்கள்? சாதாரணப் பிரஜை! ரிச்சர்ட்ஸன்னில் கணக்குப் பகுதியில் உழல்பவன். கீழ் மத்திய தரம் என்று தன்னைக் குறித்துக் கொள்வான். சம்பளம் 2200 என்று பெயர். உதைத்தால் பதினைந்து காசுகூடத் தேறாது.

சமாதானம் சொல்லி, மனசைத் திடப்படுத்தி முன்னே போக, நிழல்கள் தோன்றிய சலனம் அச்சுறுத்தியது, ஏதாவது நடக்குமோ என்று.

அவனை அடித்தோ, மறித்தோ யார் என்ன லாபம் காணப் போகிறார்கள்?

அப்படிச் சொல்லலாமா என்று யாமினி எத்தனை முறை கேட்டிருக்கிறாள்? யாமினி அவன் மனைவி. நல்ல ஸ்ட்ரீம்லைன் உடம்புக்காரி! மேடை ஏற்றக்கூடிய வனப்பு! நிறைய பேரைப் பெருமூச்சு விடச் செய்பவள். கண்ணும் இடுப்பும் வளைவதை யுகாதிகளாகப் பார்த்திருக்கலாம். வாழ்க்கையில் பெரிய அதிர்ஷ்டம்.

இருந்தும் தினம் பத்து, பத்தரை வரை ஆபீசில் வேலை செய்துவிட்டு, வருகிற வழியில் ஒரு பாட்டில் பீர் சாப்பிட்டு விட்டு...

இரண்டு வருஷமாக அந்தப் பழக்கம். யாரோ அங்குரார்ப்பணம் பண்ணியது. காலம் தவறாமல் தினமும் நடந்து வருகிறது. பரமேஷ் வொய்ன் கடையில் அழுக்குப் படுதா பின்னால் அரை மணி நேரம் பீர் பாட்டில் முன் உட்கார்ந்தால் அன்றைய தினம் முழுமை பெற்றதாகத் தோன்றும்.

இன்றைக்கும் அங்கே அருந்திவிட்டுத்தான் பஸ் ஏறி இங்கே வந்து இறங்கி...

காரை நெருங்கினான். மனம் சரியில்லை. என்ன காரணம் என்று யோசிப்பதற்கு முன் தடதடவென்று சத்தம். அதைத் தொடர்ந்து கனமான சுமை முதுகில் சாடியது.

பால்ய காலத்தில் கறுப்புப் பெல்ட்டுக்குப் பழகிய வாசனை கொஞ்சம் உண்டு.

உடம்பைத் திடும் திருகல் திருகிச் சுமையைத் தள்ளினான். சுமை கீழே காலும் கையோடும் தத்தளித்தது.

அதற்குள் கனத்த சரீரத்துடன் பல ஆட்கள் இரு திசையிலிருந்தும் அவனை நோக்கிக் குவிந்தார்கள். கார்த்திக்கின் முஷ்டி சில விநாடிகளுக்குப் பயன்பட்டது. பிறகு தளர்ந்து விட்டது.

—யோவ்! என்கிட்டே ஒண்ணுமில்லே! ஒண்ணுமில்லே! என்று கதறிக் கொண்டே இருக்க,

அவனைச் செந்தூக்காகத் தூக்கிப் பின் சீட்டு மத்தியில் இறுக்கி, இரண்டு புறமும் இரண்டு கட்டுமஸ்தான தேகங்களை முட்டுக் கொடுத்தார்கள்.

—இதோ பார்! என் மணி பர்ஸைத் தந்துடறேன். எடுத்துக்கங்க! ஆளை விடுங்க! என்றான் அவன்.

—இந்தா வாயை மூடு! என்று முன் சீட் சொல்ல,

பின் சீட்டில் இரு புறங்களிலிருந்து இரண்டு 'கும்'கள் விழுந்தன.

—இந்தாங்கப்பா! என்னை யாரோன்னு தப்பிதமாய்ப் பிடிச்சிட்டீங்க!

"நேத்து ராத்திரி யாரோ சில கள்வர்கள் கஜானா அறைக்குள் புகுந்து சில்லறை நாணயங்களைக் களவாடிப் பதிலுக்குத் தங்கக் கட்டிகளைப் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள் அரசே!"

—சுதர்ஸன்.



நான் அந்த ஆள் இல்லை.

—ஏய் சும்மாக் கிட!

—சும்மா எப்படி ஸார் கிடப்பேன்? நீங்க பிடிக்க வந்த ஆள் நானில்லை.

—அதைப்பற்றி உனக்கு என்ன அக்கறை?

—அக்கறை இல்லாம இருக்க முடியாது ஸார்! என் மனைவி காத்திருப்பாள்!

—இந்தா, கத்தாதே!

ஒரு கும் செவிட்டுப் பக்கம் உதிர்ந்தது. நிறைய ஓசைகள் கேட்டன. தொடர்ந்து ஏதோ அறுந்து போனதுபோல் உணர்ச்சி. காது மடல் சிவ்வ்வென்று நீளமாகச் சுருதி அடித்தது.

கார்த்திக்கிற்கு முதன் முறையாகப் பயம் சற்று உள்ளே இறங்கியது. நிஜமாகவே அவனைக் கடத்துகிறார்கள். எதற்கு? உதைத்தால் கூடக் கால் சல்லி பெயராது! பாங்க்கில் இருப்பும் கிடையாது. அல்லது அவனையே பணயமாக வைத்துக் கொண்டால்கூடப் பெரிய தொகை எதுவும் கிடைக்காது.

யோசித்தான். நிச்சயமாக ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறது.

யாரையோ பிடிக்க வேண்டியவர்கள் அவனைப் பிடித்துச் செல்கிறார்கள்.

இவர்கள் எஜமானனிடம் சென்றால் சாயம் வெளுக்கப் போகிறது.

சினிமா வில்லன், 'அட முட்டாள்களா!' என்று தன் அடியாட்களைச் சொல்வது போல் இவர்களிடம் சொல்லப் போகிறான்.

போகட்டும் வேடிக்கை பார்ப்போம்.

எல்லோரும் நிசப்தமாக இருந்தார்கள். கார் பதினைந்து நிமிடம் நிம்மதியாக ஓடியது. ஊர் விளிம்புகள் வந்த பிரமை. எங்கும் ஆகாயம் இறங்கிவிட்டது போல இருட்டு.

—இந்தா முன்சாமி! என்று முதல் குரல் கேட்டது. முன் ஸீட் திரும்பிப் பேசியது.

—ஸார்! என்றது இடப்புற பின் ஸீட்.

—ஆள் பேரைக் கேட்டியா? அங்கே போய் பேஜாராயிடப் போவுது.

—ஸார்! இன்ன இடத்திலே நில்லு, இன்ன நேரத்திலே வருவான்னு சொல்லி ரெண்டு மூணு அடையாளமும் சொல்லிப் போட்டாச்சு! எல்லாம் கணக்காப் பார்த்தாச்சு.

—இருந்தாலும் கேட்டிரு!

—இந்தாப்பா, ஏய்!

அவனை உசுப்பினான். —உம் பேர் இன்னாய்யா?

—கார்த்திக்!

—ஸார், இவன்தான்.

—ஐயோ! நான் இல்லிங்க. கார்த்திக் என்கிற பெயரிலே ஆயிரம் பேர் இருப்பாங்க! என்னை அனாவசியமாப் பிடிச்சிட்டுப் போகாதீங்க! கால் சல்லி பெயராது. நான் ஒரு அன்னக்காவடி! சம்பளம் வாங்கறேனே தவிர, அத்தனையும் வட்டிக்கும் தவணைக்கும் போயிடும்.

—டேய், சும்மா இருடா!

—ஐயோ! என்னை விடுங்க! நான்

இல்லே, வேறு ஒரு கார்த்திக்! அவன் இனிமேதான் வருவான்.

பிடரியில் ஒரு முஷ்டி உதிர்ந்தது. முதுகுத் தண்டு பூராவும் சிலிர்த்தது. ஓர் ஆள் அவனைக் கீழே அமுக்கிக் குனிய வைத்தான்.

கார்த்திக்குக் கண் கலங்கியது. நாகரிக உலகின் அவலங்களை அவன் நிறையப் பேப்பரில் படித்திருக்கிறான். நிச்சயம் இதுவும் அதில் ஒன்று. யாரையோ பிடிக்க வேண்டியவர்கள் யாரையோ பிடித்து விட்டார்கள்.

இப்படித்தானே பாம்பே பாஷ் ஓட்டலில் அறைக்குள் போய் ஒருவரைக் கொன்றது. செய்தி வந்த பிறகுதான் குற்றவாளிகளுக்குத் தவறான ஆள் என்று தெரிந்தது.

அதைப் போல அவனுக்கும் கடைசி வரை நிஜ அடையாளம் கண்டு பிடிக்க முடியாமல் ஏதாவது நடந்து விடுமோ?

இப்போதுதான் ஓர் உண்மையான பீதி வயிற்றைக் கலக்கியது.

மூச்சு கனமாக வந்தது.

கார் இதற்குள் எங்கேயோ நின்ற உணர்ச்சி. காலடிகள் கேட்டன.

—பிடிச்சாச்சா?

ஓர் அதிகாரக் குரல் தனியாகத் தொனித்தது.

—ஆச்சு! தலைவர் சுரேஷ் பார்க்கணுமா?


—ஒண்ணும் சொல்லலே. நீங்களே தீர்த்துடலாம். பின்னாடி கிணற்றிலே மூடியை எடுத்தாச்சா?

—சாயங்காலமே எடுத்திட்டோமே, ஆள் வருதுன்னு...

—ம்! இழுத்திட்டு வாங்க. சுரேஷ் கிட்டே ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு வரேன்.

—ஆமாம். எஜமான்கிட்டே கேட்டுடுங்க.

அவனை இறக்கினார்கள். உடம்பு ஏகமாக வியர்த்தது. நிச்சயம் ஒரு தவறான அடையாளத்தில் தவறாக ஒரு காரியம் நடக்கப் போகிறது. அவன் மீது யாரும் எதற்கும் பகை கொள்வதற்கு முகாந்தரமே இல்லே! அவனைப் பணய



இரண்டு படங்களுக்கும் குறைந்த பட்சம் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. விடை: 24'ம் பக்கம்


என்றும் அணிந்திட
ஏற்றதான ஸ்டைல்
எடுத்து அடிவைக்க
இலேசானது



பிச்சைக்காரன் 1: ''கையில் சின்னதா என்னவோ பாட்டில் வச்சிருக்கியே... என்ன அது?''

பிச்சைக்காரன் 2: ''கிளிசரின்! அழுதுக்கிட்டே பிச்சை கேட்டால்தான் இரக்கப்பட்டுப் பிச்சை போடறாங்க!''

—உ. ராஜாஜி.

மாகப் பிடிக்கக்கூட அவன் ஒரு பணக் காரனே அல்ல! நிச்சயமாக இப்படி ஒரு அலங்கோல நிலைக்கு அவனை ஆளாக்க ஒரு சின்னக் காரணம்கூடக் கிடையாது.

இழுத்து வராந்தாவில் நிறுத்தி னார்கள்.

மினுக்கென்று ரொம்ப எளிய வெளிச்சம் காட்டும் பல்பு. சொப்பனம் போல் தோற்றம். இருபுறமும் சுவர். சற்றுத் தள்ளி ஒரு திறந்த கதவு.

—ஸார்! என்றான் கார்த்திக், கண்ணைக் கொட்டிக் கொண்டு, அந்தப் புதிய நபரை நோக்கி! —என்னைத் தவறாக அழைச்சிட்டு வந்துட்டாங்க! நான் இல்லை நீங்க தேடற ஆள்! சுரேஷ் கிட்டே சொல்லுங்க! என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க! நான் வேறு கார்த்திக்! ரிச்சர்ட்ஸன் கம்பெனியிலே அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டிலே வேலை பார்க்கிறேன். மதுரம் காலனியிலே வசிக்கிறேன். எந்தத் தப்புத் தண்டா வுக்கும் இதுவரைக்கும் போனதில்லை. நிச்சயமாக இங்கே ஆள் மாறாட்டம் நடந் திருக்கு! கொஞ்சம் சுரேஷை வந்து பார்க்கச் சொல்லுங்க! அவர் தேடற ஆள் நான் இல்லவே இல்லை!

கண்ணில் நீர் தளும்ப, குரல் பலமுறை பிசிறியது.

புது நபர் எந்தவித மாற்றத்தை யும் காண்பிக்கவில்லை. மரப் பொம்மை போல நின்றான். —ம்! பின்னாடி அழைச் சிட்டுப் போங்க! என்றான்.

—ஸார்! ஸார்! என்றான் கார்த்திக்.

முதுகில் ஒரு முஷ்டி வெடித்தது.

தோட்டம் ஒரே இருட்டாக இருந்தது. கட்டிட விளிம்புகள் ஊமை யாகத் தெரிந்தன. காட்டில் நிற்பது போல் ஓர் அமானுஷ்யம் இருந்தது.

கார்த்திக்கின் மனத்தில் ஒரு மூர்க்கம் எழுந்தது.

நிச்சயம் இது அவனது கடைசி முடிவு!

எந்த வேண்டுகோளும் இவர் களை இளக்காது. இனி, தப்ப வேண்டு மானால் ஒரே ஒரு வழி!

பலத்தைக் குவித்து, ஒரு 'டாண்' என்கிற நேரத்தில் ஆகாயத்தில் துள்ளினான்.

அவனைப் பிடித்திருந்த இரு கை களிலிருந்தும் விடுதலை ஆகிவிட்டான்.

கால் இப்போது உல்லாசத்தில் வேலை செய்தது. காம்பஸ் போல இரண்டும் அதி வேகமாகப் பிரிய இரண்டு குண்டர்களின் தவடைகளும் நொறுங்கிப் போய்க் கீழே விழுந்தார்கள்.

அவர்கள் எழுந்து விசில் ஊது முன் அவன் தோட்டத்தில் வெகு தூரம் ஓடிவிட்டான். பசுமையான காற்று! அதன் வியாபகத்தைப் பார்த்தால் ஒரு காம்பவுண்டுச் சுவர் இல்லை என்று தெரிந் தது.

முதல் விசில் கேட்டபோது முள் கம்பியில் மோதிக் கொண்டான்.

பொருட்படுத்தவில்லை. ஒரு விடுதலை வெறி! உடம்பு நோவு எடுக்க வில்லை.

ஏதோ மண் சுவர் போல் ஏறி, உடம்பு, பின்புறம் எல்லாம் இரும்பு முள்ளால் கிழித்துக் கொண்டு, பல அடி

ஆறு வித்தியாசங்கள் விடை:

1. பூந்தொட்டி
2. விளக்கு
3. வாளி
4. விளம்பரப் பெண் கூந்தல்
5. மஸாஜ் செய்துகொள்கிறவர் வயிறு
6. மீசை

உயர வேலியில் ஏறி அப்பால் தொம் மென்று குதித்தான்.

அதன் பிறகும் உபாதையைச் சிறிதும் பொருட்படுத்தாது துள்ளிக் குதித்து ஓட்டமாக ஓடினுன்.

அரை மணி ஓட்டத்திற்குப் பிறகு தான் நாகரிகத்தின் முதல் இழையாக அந்தத் தார் ரோடு தென்பட்டது.

ஒரு லாரியை நிறுத்தி நகருக்கு வழி கேட்டான். எதிர் திசையை அவன் கை காட்டியதும், போக்கு லாரி ஒன்றை நிறுத்தி ஏறி நகர எல்லேக்குள் வந்தான்.

லாரி அவனே இறக்கிவிட்டுச் செல்ல, நகரத்தில் அவன் பழகிய தெருக்களில் முதன் முதலில் ஆசுவாசமாக மூச்சை விட்டான்.

உடம்பு நெடுகச் சிலிர்த்தது.

ஆபத்து நீங்கியது என்று தெரிந்ததுமே அத்தனே உபாதைகளும் வந்து அவனைப் பூட்டிக் கொண்டன.

சோர்வும் தள்ளாட்டமுமாக நடந்தான்.

மணியைப் பார்த்தான். இரண்டு ஆகியிருந்தது. என்ன கசப்பான அனுபவம்! எத்தகைய கண்டத்திலிருந்து அவன் தப்பி விட்டான்!

யாமினி சொன்னது எவ்வளவு உண்மையாகப் போயிற்று!

வீட்டின் காம்பவுண்டை அடைந்த போதுதான் இத்தனேக்கும் காரணம் என்ன என்று மனம் மீண்டும் அலசியது. உண்மையில் அவனேயா அந்தக் குண்டர்கள் தேடியிருந்தார்கள்! அதற்குக் காரணம் எதுவுமில்லே! ஒரு வேளே, யார் மேலேயாவது விழப்போன பழி அவன் மீது விழுந்ததா?

முகப்புக்குச் சென்று மணியை அழுத்தினுன்.

என்றைக்கும் யாமினி புலம்பிக் கொண்டு மெதுவாக வருபவள் அன்று சுறுசுறுப்பாக வருவது தெரிந்தது. கதவைப் படாரென்று திறந்தாள்.

—ஹலோ! சுரேஷ்! ஏன் இவ்வளவு நாழி! நான் ரெடி! என்ருள்.

கையில் ஒரு பெட்டியுடன், அந்த இருட்டிலும் புன்னகை தெரியும்படி மிளிர்ந்து கொண்டு நிழலாக இருந்த அவன் அருகில் வந்தாள்.

—சுரேஷ்! வாங்க, சீக்கிரம் போகலாம்! என்று அவள் அவசரப்படுத்த,

அவன் நிமிர்ந்தான். அவன் முகத்தை அவள் ஏறிட்டாள்! 'கார்த்திக்! என்று முனகினுள். 'ஆ!' என்று அவளே இரைந்து கீழே விழுந்தாள்.

வீட்டை விட்டுப் போகத் தயாராக வந்த அவள் பெட்டி சிதறி, துணிமணிகள் எல்லாம் கீழே உதிர, அவனுக்கு இப்போது காரணம் புரிந்து விட்டது.

நிஜமாகவே அவனேத் தேடித் தான் குண்டர்கள் வந்திருக்கிருர்கள் என்று.



—எம். பி.

தமுதத்துக்கு

கருணாநிதி என்றால் கசக்கிறதா?

27.6.85 தேதியிட்டு வளியான தங்கள் குமுதம் வார இதழில் ழுதப்பெற்ற தலையங்கத்தை நான் படித் தன். அந்தத் தலையங்கத்தில் என் பயரை நீங்கள் குறிப்பிடுவது பாவகர ான காரியம் என்று கருதி ஒதுக்கிவிட்டா லும்கூட, நான் சட்டமன்றத்தில் கிருஷ்ணா தி நீர்த் திட்டம் பற்றிப் பேசிய ஒரு கருத்தைக் குறிப்பிட்டுத் தாங்கள் விமரி னம் செய்திருக்கின்ற காரணத்தால் தங் களுக்கு இந்தக் கடிதம் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

சென்னை நகரின் குடிநீர் பிரசினையைத் தீர்ப்பதற்குக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் பயன்படுமேயானால், நிச்சய மாக தி.மு.க. அதை வரவேற்கிறது. 660 ரூபாய் கோடி செலவில் நடைமுறைப் படுத்த வேண்டிய இந்தத் திட்டம் நடை முறைப் படுத்தப்படுவதில் காலதாமதம் ஆகிறது என்பதல்ல; அடிப்படைத் திட்டத் திற்கு ஆபத்து வந்திருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை. மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. மையநீர் விசைக் கமிஷனும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கவில்லை. ஒப்பந்தப்படி குறிப்பிடப்பட்ட காலத்திற் குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலை யில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ரூ. 30 கோடி ஆந்திர அரசுக்கு வழங்கவேண்டும் என்ற ஒப்பந்தத்தின்படி ஏற்கனவே தமிழக அரசு ரூ. 60 கோடி கொடுத்துவிட்டது. ஆனால் ஆந்திர நீர்ப்பாசன அமைச்சர், மேலும் தமிழக அரசு ஆந்திர அரசுக்குத் தரவேண்டிய பாக்கிப் பணம் ஒப்பந்தப்படி இன்னும் பல கோடி இருக்கிறது என்றும், ஆனால் தமிழக அரசு இன்னும் அதைச் செலுத்தவில்லை என்றும் குறிப்பிட்டுள் ளார். கிருஷ்ணா நதி திட்டத்துக்கு நில ஆர்ஜிதம் செய்வதை மத்திய அரசின் காட்டு இலாகாவும் கடுமையாக எதிர்த்து இருக்கிறது.

கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் வருமா வராதா என்பது சந்தேகத்திற்குரிய தாக இருக்கிறது. இந்த நிலையில் மத்திய அரசின் ஒப்புதல் பெறாத திட்டத்திற்குத் தமிழக அரசு மேலும் தமிழக மக்களின் வரிப் பணத்தை—பல கோடி ரூபாயை— ஆந்திர அரசிடம் கொடுத்து அந்தப் பணத்தை முடக்குவது நியாயமாகாது; முதலில் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியை அரசு பெற்றிட முயற்சிகள் எடுக்க வேண்டும். பிறகுதான் ஒப்பந்தப்படி ஆந்திர அரசுக்குப் பணம் தரவேண்டும் என்பது தான் தி.மு.கழகத்தின் சார்பாக என்னு டைய வாதம். இதைத்தான் சட்டமன்றத் திலும் குறிப்பிட்டேன்.

தி.மு.கழகம் தேசிய ஒருமைப் பாட்டை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் கிறது. பிரிவினை கோரிக்கையைக் கழகம் கைவிட்டுப் பல ஆண்டுகள் ஆகின்றன.

மாநில மத்திய அரசுகளின் உறவு கள் செம்மையாக இருக்கக் கூடாது என்ற கொள்கையுடைய கட்சியல்ல தி.மு.கழகம். மாநிலங்களுக்கும் அதிக அதி காரம் வேண்டும் என்ற மாநில சுய ஆட்சி கேட்பதே மாநில மத்திய அரசுகளின் உறவுகள் செம்மையாக இருக்கத்தான். உண்மை நிலை இப்படி இருக்கக் குமுதம் எங்கள் மீது அவதூறுகளை அள்ளி வீசியிருப் பது உள்நோக்கம் நிறைந்தது.

குமுதத்திற்குக் கருணாநிதி என்றால் கசக்கிறது! எம்.ஜி.ஆர். என்றால் இனிக்கிறது! என்ன காரணமோ?

—இரகுமான்கான், எம்.எல்.ஏ.



நாடகம்



'வனமாலி'

வதனாவின் அழகிய வடிவத்தைப் பார்த்துத் தாய் கண்ணீர் விடுவது வழக்கமாகிவிட்டது. எதுவுமே மிகையாயிருப்பது நல்லதல்ல என்பது வதனாவின் விஷயத்தில் பொருத்தமாயிற்று. அவளுக்கு அவள் அழகே இடைஞ்சலாக நின்றது. அழகிய கொம்புகளினால் புதரில் மாட்டிக் கொண்ட கலைமானின் நிலைதான் அவளுடையது.

இதுவரை அவளைப் பெண் பார்த்துச் சென்றவர்கள் இரண்டு மூன்று பேர் இருக்கும். ஆனால் ஓரிடத்திலிருந்தும் சம்மதம் என்று கடிதம் வரவில்லை. விஷயம் தெரியாத அப்பாவியான கணேசமூர்த்தி—வதனாவின் தந்தை—தபால் இலாகாவை வீணாகச் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார். மகளின் அழகே அவளை அவர்கள் நிராகரிப்பதற்குக் காரணம் என்பதைத் தாய் புரிந்து கொண்ட மாதிரி தகப்பனாரால் புரிந்துகொள்ள இயலவில்லை.

கடைசியாக வதனாவைப் பார்க்க

வந்த ஸ்வரூப் கிருஷ்ணன் மாநிறத்துக்கும் சற்று மட்டு. பெயரில்தான் ஸ்வரூபம் பல மாக ஒட்டிக் கொண்டிருந்தது. சிரிப் பதற்குத் தயாராக அணி வகுத்து நின்ற பெரிய பற்களால் அவன் செய்த புன்னகை யும் கண்களால் கவ்விய முறையும் பாக்கு வெட்டியால் பட்டுத் துணியை வெட்டுவது போல் இருந்தாலும் வதனவை அவனுக் குப் பிடித்து விட்டது என்பதைத் தெரி விக்க அவை போதுமான சான்றாக இருந் தது. ஆனால் ஊருக்குப் போய்க் கடிதம் போடுவதாகக் கும்பல் கூறிவிட்டது.

சத்தியமாக அந்தக் கும்பலில் பையன் ஸ்வரூப் உட்பட ஒருத்தராவது ஒரு நாளாவது ஒரு ரோஜாவையோ மல்லிகையையோ ஒரு கனகாம்பரத் தையோவாவது மனதார ரசித்து விமரிசித் திருப்பார்களா? ஆனால் பெண் பார்க்கும் விஷயம் என்று வரும்போது சர்வமுட்டாள் ஜன்மம்கூடக் கவியாகிவிடுகிறது.

பெண் பார்த்து விட்டுப் போனவர்களின் வீட்டில் கீழ்க்கண்டவாறு பேசிக் கொண்டார்கள்.

''அடே ஸ்வரூப், பெண் அவ்வ ளவு அழகு என்று மயங்கி விட்டாயா? பாம்புகூட அழகு, நெருப்பு அழகு,'' என்றாள் அவன் தாய் ராத்திரிக்கான சமை யலைச் செய்துகொண்டு.

அந்தப் பையனின் கண்ணிலிருந்து வதன இன்னும் துளிகூட அழிய வில்லை. ஆனால் மனத்துக்குள் ஒரு சந்தேகம் மட்டும். 'அவ்வளவு அழகான பெண் ணுக்கு ஏன் இத்தனை வருஷ மாகக் கல்யாணமாகவில்லை?'

அவனுடைய அம்மா கீரையை மசித்துக் கொண்டு விடை சொன்னாள். ''நீ புத்தி சாலி. புரிந்து கொண்டு விட்டாய். பெண்ணுடைய அம்மாவைப் பார்த்தா யில்லையா? அவளைப் பார்த் தால் சினிமாக்காரி மாதிரி இல்லை? வயது நாற்பதுக்கு மேலிருக்கும்னு சொல்ல முடியுமா? உடம்புக்கட்டு என்ன, கன்னமும் சிரிப்பும், இடுப்பும்? உடம்பு கொஞ்ச மாவது கட்டுவிட்டிருக் கிறதா?''

''நீ என்ன சொல்றே?'' ஸ்வரூப கிருஷ்ணன் தலையைச் சொறிந்தான்.

''அவள் அம்மா ஒரு மாதிரியாம். நம்ம குடும்பத்துக்கு இப்படிப்பட்ட அழ கெல்லாம் வேண்டாம்டா சாமி. நான் அப்பவே தீர்மானித்துவிட்டேன்.''

''அதை ஒரு தபாலில் எழுதிப் போட்டு விடேன். வீணாக அவர்கள் எதிர் பார்ப்பார்கள்.''


''பேசாமலிரு. தபால் போடா விட்டாலே அவர்களுக்குப் புரிந்து போய் விடும். ஒரு பெரிய சேற்றில் கால் வைக்கத் தெரிந்தோம்.''

ஸ்வரூபகிருஷ்ணன் தன் கண்ணி லிருந்து வதனவைக் கடைசியாக அழித்துக் கொண்டு ஈனசுரத்தில், ''அம்மா, சுமா ரான பெண்ணாகவே எனக்கு ஒருத்தியைப் பார்த்து விடும்மா,'' என்றான்.

அவன் தாய்க்கு நிம்மதியாயிற்று.

இரண்டு நாள் கழித்து ஸ்வரூப கிருஷ்ணன் ஒரு நல்ல காரியம் செய்தான். பெண் வீட்டில் சாப்பிட்ட பலகாரத் துக்கும் குடித்த பாதம்கீருக்கும் ஈடு செய்த மாதிரி இருக்கட்டும் என்று ஒரு தபால் கார்டை எடுத்து இப்படி எழுதிப் போட்டான்.

''உங்கள் பெண் வதனவை எனக்குப் பிடித்திருந்தாலும் அவளது அபாரமான





அழகுக்கு நான் பொருத்தமில்லை. வேறு பொருத்தமான மாப்பிள்ளை கிடைக்க மனதார ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.''

ஸ்வரூபகிருஷ்ணனின் கடிதத்துக்குப் பிறகு வதனாவின் பெற்றோர் மட்டுமல்ல, வதனாவும் நொந்து போனாள்.

சில நாட்கள் சென்றன.

கணேசமூர்த்தி அப்பாவியானாலும் அவர் மூளையில் சில சமயங்களில் பளிச் சென்ற யோசனை—அவை பைத்தியக்காரத்தனமாக இருந்தாலும்—மின்னுவது உண்டு.

முதல் காரியமாகத் தனது உத்தியோகத்தை மாற்றிக் கொண்டு குடும்பத்துடன் திருச்சியில் குடியேறினார்.

இனிமேல் வதனா கால் ஊனமுள்ளவள் போல் நடிக்க வேண்டியது என்று ஏற்பாடாயிற்று.

''கால் ஊனமானவள் மாதிரி எனக்கு நடிக்கத் தெரியாதே அப்பா,'' என்று சங்கடப்பட்டாள் வதனா.

ஆனால் அழகு முடிக்காத கல்யாணத்தை, அனுதாபம் முடிக்கக்கூடும் என்று அப்பா போடும் கணக்கு அவளுக்குப் புரிந்ததும் அவ்வாறே நடிக்கப் பழகிக் கொண்டாள்.

தாயார்தான் அழுதாள். அழகிய பெண்ணைப் பெற்றதற்குச் சிலர் விஷயத்தில் கடவுள் சவுக்கடி கொடுப்பது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை. அல்லது பூனை தன் குட்டிகளில் அழகிய குட்டியைத் தின்றுவிடுவதுபோல இயற்கைக்கும் தன் அழகைத்தானே துன்புறுத்தும் குரூரம் சில பொழுதுகளில் ஏற்பட்டுவிடும் போலும்.

வதனாவுக்கு வரன் தேடும் விஷயத்தைக் கணேசமூர்த்தி தொடர்ந்தார். இஞ்சினியரிங் படித்த அப்பன்ராஜ் அவளைப் பார்க்க வந்தான். அவனுக்குப் பெற்றோர் கிடையாது. வயோதிகமான சகோதரி மட்டும் உண்டு.

அக்காவும் அவனும் பெண்

சுஹாசினிக்கும் எடை தூக்குவதில் பயிற்சி உண்டு என்று தெரிகிறது—'ஹீரோ' படத்தில் சிரஞ்சீவியுடன்.

பார்க்க வந்திருந்தனர். வதனு காப்பி பல காரத்தை எடுத்துக் கொண்டு சற்றே விந்தியபடி நடந்து வந்ததைக் கண்டதும் அப்பன்ராஜின் கண் ஏறக்குறையக் கலங்கி விட்டது.

அவன் சகோதரிக்குத்தான் திக் கென்றுகிவிட்டது. அங்கேயே தனியாக ஓர் அறைக்குத் தம்பியை அழைத்துச் சென்று பேசினுள். ''என்னடா இது, குடம் பாலில் துளி விஷம் போல... மாசு மறுவில்லாத எவ்வளவு அழகான பெண்! இப்படிக் கால ஊனமாயிருக்கிறதே!''

''அக்கா, எனக்கு இனி வேறு பெண் பார்க்க வேண்டாம். கடவுள் செய்த அநீதி என்று இதைச் சொல்ல மாட் டேன். பந்தயக் குதிரைகளில் எல்லாக் குதிரைகளுக்கும் சம வாய்ப்புக் கொடுக்க என்ன செய்கிறுர்கள் தெரியுமா அக்கா? என் நண்பன் சொல்லக் கேட்டிருக்கி றேன்.''

''எனக்கென்னடா தம்பி தெரியும்?''

''சில நல்ல குதிரைகளுக்கு முதுகில் அதிகப்படியான கனத்தை ஏற்றுவார்களாம்—ஹாண்டிகாப் என்பார் கள். அது மாதிரி இந்த அழகிய பெண் ணுக்குக் கடவுள், ஊனம் என்ற இந்தச் சுமையை ஏற்படுத்தியிருக்கிறுர். ஆனுல் அதை நான் பொருட்படுத்தவில்லை. இதே இடத்தை முடித்துவிடு. அவளிடம் மட்டு மல்ல, இந்தக் குடும்பத்திலே ஒரு தூய்மையை நான் பார்க்கிறேன்.''

வதனுவுக்கும் அப்பன்ராஜுவுக்கும் திருமணம் நடந்து முடிந்தது. முதலிரவின் போது வதனுவின் 'ஊனமான' காலைத் தொட்டு அப்பன்ராஜ் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

வதனு பதறிவிட்டாள். மனைவியை அணைத்துச் சமாதானப்படுத்தி னுன். ''உன் தூய்மை முகத்தில் இல்லை. இதோ, இந்தக் காலில்தான் இருக்கிறது.''

அவளுக்குப் புரியவில்லை. முதலிர வுக்குப் பொருத்தமில்லையாயினும் அவன் பால் டம்ளர் ஏந்திய தத்துவஞானியாகி



''அடியே! என்னுடைய புது மூக்குக் கண்ணுடி நல்லாயிருக்கா? நூறு ரூபாய் ஆச்சு!''

''நல்லாத்தான் இருக்கு...! ஆனு இது உங்க வீடு இல்லே! பக்கத்து வீடு!''

—பி. பா.



''பெண்தான் பார்த்துப் பிடிச்சிடிச்சுன்னு லெட்டர் வந்துடிச்சே. இப்ப எதுக்கு மறுபடியும் 'பெண்பார்க்க' வர்ருங்களாம்?''

''ஐயோ ஐயோ. பெண் பார்க்க இல்லை. பேன் பார்க்க. மாப்பிள்ளை வந்திருந் தப்போ நம்ம பெண் தலையை ஒரேயடியா சொறிஞ்சிண்டு நின்னுள்ளே, அதான். மாப் பிள்ளை பேன் நல்லாப் பார்ப்பானும்!''

—எம்.பி.


வைட்டமின்கள்
தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை

விட்டான்.

"மனிதன் தூய்மையற்றுப் போவதற்குக் காரணம் உண்மையில் என்ன தெரியுமா வதனு? அவன் தன்னை உள்ளது உள்ளபடிக்கு வெளிப்படுத்திக் கொள்வதில்லை. செயற்கை மணம், செற்கை அழகு, செயற்கைப் பேச்சுகளால் உண்மையின் அழகைத் தரிசிக்க முடியாமல் செய்துவிடுகிறுன். அப்படிப் பார்த்தால் ஊனம்தான் அழகு. அதுவும் உனக்கு அமைந்திருப்பதைப் போன்ற மறைக்க முடியாத ஊனங்கள்தான் உண்மையான அழகு. ஏனென்றுல் அவை உண்மை பேசுகின்றன."

ஏதோ ஒரு கவிஞனிடம் வந்து தான் மாட்டிக் கொண்டோம் என்ற பயத்தை விட வதனுவுக்கு வேறு கவலை தான் உலுக்கத் தொடங்கியது. தனக்கு ஊனமில்லை என்று தெரிந்தால்? அனுதாபத்தைப் பெறுவதற்காக நாடகமாடியதைக் கணவன் மன்னிக்கவே மாட்டான் என்ற அச்சம் அவளை இரவு நேரத்தில் தூங்கவிடவில்லை. அதுவுமில்லாமல் ஊனமானவளைப் போல் தினமும் நடப்பது அவளுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

நாளை தாய்மைக் கோலம் பூண வேண்டிய நிலை ஏற்பட்டால், அப்போதும் இவ்வாறே ஊனமுற்றவள் போல் தன்னுல் நடக்க முடியுமா?

ஆயுளுக்கும் ஒருத்தரால் நடிக்க முடியுமா? சில நாட்கள் சென்றன.

பெற்றேரைப் பார்த்துவிட்டு வருவதாகப் பிறந்தகம் சென்றுள் வதனு. மாப்பிள்ளை அப்பன்ராஜின் சத்திய வேட்கை மாமனுரைப் புல்லரிக்க வைத்தாலும் நாடக விஷயம் என்ருவது வெளிப்படும்போது எப்படிப்பட்ட விபரீதம் ஏற்படும் என்பதை நினைத்து அவர்களும் கவலைப்பட்டனர். 'இப்படி ஒரு பொய்யான நாடகம் ஆடின உன் முகத்திலே விழிக்க மாட்டேன்' என்று வதனுவை விரட்டி அடித்தாலும் அடித்து விடுவானே?

கணேசமூர்த்தியின் மூளையில் அப்போதுதான் அந்த இரண்டாவது யோசனை தோன்றிற்று.

"வதனு, எத்தனையோ ஊனங்கள், தற்செயலான விபத்துக்களால் சரியாகிவிடுகின்றன அல்லவா? மூளை பேதலித்தவர்கள், திரும்பவும் மண்டையில் பட்ட அடியினுல் சரியான நினைவு

அடைகின்றனர். அதே போல உனக்கு ஒரு விபத்து ஏற்பட வேண்டும். அந்த விபத்தின் அதிர்ச்சியால் ஊனமான கால் தேவலை யாகிவிட்டது என்று நம்ப வைத்துவிட லாம். நீயும் ஆயுள் முழுக்கவும் நாடகம் ஆட வேண்டிய அவசியமில்லாமல் போய் விடும்.''

வதனு கணவன் வீடு திரும்பி னுள். தனக்குத் தானே விபத்து ஏற் படுத்திக் கொள்ளும் விதத்தை அவள் தீர் மானித்து வைத்திருந்தாள்.

வீட்டிலிருந்த பரணில் ஏணி வைத்து ஏறி ஒரு குறிப்பிட்ட தினம் கீழே விழுந்து விட்டாள்.

''அம்மா!'' என்று அவள் அலறிய அலறலைக் கேட்டு அப்பன்ராஜ் துடிதுடித்த வாறு ஓடிவந்து மனைவியை அள்ளித் தூக்கிக் கொண்டான்.

இனம் புரியாத ஒரு வலி அவள் அடிவயிற்றில் சுரீரென்று குத்தியதால் வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதறினுள்.

மருத்துவமனைக்கு இட்டுச் சென்றனர்.


''கர்ப்பவதியான பெண் அசட்டுத்தனமாக இப்படி ஏணியில் ஏற லாமா?'' என்று டாக்டரம்மாள் கண்டித் தாள். ''நல்ல வேளை. கருச் சிதைவு ஏற்பட வில்லை. ஆனுலும் பிரசவ சமயம் வரும் போது அதிகப்படியான ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பிறக்கப் போகும் குழந்தை ஊனமில்லாததாக இருந்தால் அது உங்கள் அதிருஷ்டம்.''

தலையில் இடி விழுந்தது போலா யிற்று வதனுவுக்கு. கணவனைக் கட்டிக் கொண்டு கதறினுள்.


அவனேடு அவளை அணைத்துச் சமாதானப் படுத்திச் சிரித்தான்.

''வதனு! கடவுளுடைய செயலைப் பார்த்தாயா? ஓர் அதிர்ச்சியை உனக்குத் தந்தாலும் இனிப்பையும் தந்திருக்கிறுர். நீ விழுந்த நேரத்தில் உன் ஊனமான கால் தேவலையாகிவிட்டது. இதோ நீ நன்ருக நடக்கிருய் பார்!''

சில மாதங்களில் வதனுவுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. அதனு டைய அழகு எல்லாரையும் பிரமிக்க வைத்தது. ஆனுல் வலது பாதம் சற்றே வளைந்திருந்தது.


விடக் கூடாது இந்த ஆளை!
விடக் கூடாது இந்த ஆளை!
தமிழக அரசு
செயற்கை மழைக்காரர்கள்


பாட்டிக்குச் சமைக்கத் தெரிகிறதோ இல்லையோ, நல்லா புகைமூட்டத் தெரியுது!
சஞ்சீவ ரெட்டி
பிரதம மந்திரி–ஜனாதிபதி பற்றிய கருத்துக்கள்


அந்தப் பக்கம் பார்க்காதே. இந்தப் பக்கம் பார். படம் நல்லா வரும்!
திம்பா பேச்சு வார்த்தை
இலங்கைத் தமிழர்
அவநம்பிக்கை

மது விலக்கு வர வேண்டும்



செப்டம்பர் மாதம் 15'ம் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அது.

அந்தத் திருநாளில் தமிழ் நாட்டில் பூரண மதுவிலக்கு அமுல் படுத்தப்படும் என்ற உறுதியினை மாண்பு மிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

நினைவுகளைச் சற்றுப் பின்னோக்கிச் சுழற்றுகிறேன்.

டாக்டர் சுசீலா நய்யார் மத்திய சுகாதார அமைச்சராக இருந்த காலம் அது.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அவர்கள் தலைமையில் மதுவிலக்கு மாநாடு ஒன்று நடைபெற்றது.

நம்முடைய பேரறிஞர் அண்ணா அதில் பேசினார்.

''ஒவ்வொரு நாளும் அதிகாரிகள் என்னை வந்து பார்க்கிறார்கள். இத்தனை கோடி வரும், அத்தனை கோடி வரும் என்று கணக்குச் சொல்லுகிறார்கள். பணம் பற்றாக்குறை நிரம்ப உள்ளது என்பதை உணர்கிறேன். ஆனால் ஒரு தலைமுறை, கள்ளுக் கடை என்றால் என்ன என்பதைப் பார்க்காமலேயே தமிழ்நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது.

''தமிழ்நாட்டில் 25 ஆண்டுகளாக வளர்ந்து வரக்கூடிய பண்பாட்டுக்கு மீண்டும் உலை வைக்க நான் ஒருக்காலும் உடன்பட மாட்டேன்.

''எத்தனை கோடி வருமானத்தை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருப்பேனே தவிர அந்தப் பண்பாட்டை பலி கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன்.'' என்று அறிஞர் அண்ணா சொன்னார்.

நாட்டில் நடைபெற்று வரும் தீமைகளுக்கெல்லாம் அடிப்படையான

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தமிழ்நாடு தலைவரும், திருவல்லிக்கேணி தொகுதி எம். எல்.ஏ.வுமான அ.கா. அ. அப்துஸ் ஸமத் இந்த வாரம் தலையங்கம் எழுதுகிறார்.

—காரணம் மது, சாராயம் குடிப்பதுதான். அன்றாடம் நிகழ்ந்து வரும் கொலை, கொள்ளை மற்றும் சாலை விபத்துக்களை ஆராய்ந்தால், அவற்றில் பெரும் பாலானவை மது அருந்துவதனால் ஏற்பட்ட விளைவாக இருக்கும்.

மது, சாராயம், கள் விற்கும் கடைகளில், 'மது தீமை தரக் கூடியது. குடி குடியைக் கெடுக்கும்,' என்று கட்டாயமாக போர்டு எழுதி வைக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியிருக்கி றார்கள்.

ஆனால் மதுவை ஒழிப்பதற்கு இன்னமும் சட்டம் கொண்டு வரவில்லை. மதுவை ஒழிக்க வேண்டும் என்பதில் அரசியல் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடு கிடையாது.

தமிழகத்திலே முற்றிலும் மது விலக்கு அமல்படுத்தப்படுவதற்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்றிருக்கி றார் மாண்புமிகு எம்.ஜி.ஆர்.

அதிகாரம் பெற்றவராக மட்டு மல்லாமல், மதுவை ஒழிக்கக்கூடிய உரிமை, வலிமை பெற்றவராகவும் திகழ் கிறார் முதலமைச்சர்.

தமிழ் மக்களின் நல்வாழ்வில் பொறுப்பும் அக்கறையும் உள்ள ஏழு அறிஞர் பெருமக்கள்— நீதிபதிகள் கிருஷ்ணசாமி ரெட்டி, எம். நடேசன், கே.எஸ். வெங்கட்ராமன், கல்வியாளர் டாக்டர் இந்திரேசன், சமூகத் தொண்டர் ஆர்.ஆர். தளவாய், முன்னாள் சுகாதார டைரக்டர் ஏ.பி. மரைக்காயர் மற்றும் பத்திரிகையாளர் ஆர். பார்த்தசாரதி— யாவரும் சேர்ந்து மதுவை ஒழிக்க வேண்டும் என்று முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆரே அறிவித்துள்ள கொள்கை அடிப்படையில் நிச்சயம் மதுவிலக்கை அமல்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் மிக ஆழ மாக உள்ளது.

மாண்புமிகு எம்.ஜி.ஆரிடமிருந்து வரும் அந்தப் புனித அறிவிப்புக்காக செப்டம்பர் 15'ம் தேதி வரை தவமியற்று வோம்.

பூ வேலி

'பூ வேலி' ஆரம்பித்த முதலில் ஊர்ந்தாலும், உத்யா விபத்தில் படுக்கையில் படுத்த பிறகு, கதை விறு விறுப்பாக நடக்க ஆரம்பித்தது. ஒரு நல்ல கதை படித்த திருப்தி ஏற்பட்டது.

திருச்சி—20 சி. சொக்கலிங்கம்

சமூகக் கதையிலும் சஸ் பென்ஸை வாரா வாரம் வைத்து எழுத முடியும் என்பதைப் பி.வி.ஆர். சாதித்து விட்டார்.

அரக்கோணம் டி.ஆர். சண்முகம்

'பூ.வே' பி.வி.ஆரின் மாஸ்டர் பீஸ் என்று நிச்சயமாகச் சொல்லலாம். உத்யா, அக்னி, அசுவத் பாத்திரங்கள் மனத்தை விட்டு அகலுவது கடினம். கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டின, 'மாருதி'யின் உணர்ச்சி பொங்குகிற ஓவியங்கள்.

லெட்சுமாங்குடி ஏ.கே. நாசர்

அது சரி. இதே அக்னி முன்பு உத்யாவிடம், 'நீயே என்னை விரும்பின லும் நான் உன்னை மணக்க மாட் டேன்,' என்று கூறிவிட்டு, இப்போது உத்யாவைக் கைப் பிடித்து, சொன்ன சொல் தவறி விட்டானே!

விழுப்புரம் எம்.எஸ். அசோக்குமார்

அசுவத்தின் பொய் அழகில் மயங்கிப் போகும் உத்யா போன்ற அறிவிலிகளுக்கு வேலியாக அமையவே இக்கதைக்குப் பி.வி.ஆர். பூவேலி என்னும் பொருத்தமான தலைப்பு தந் துள்ளார் போல் இருக்கிறது.

கடலூர் எஸ். சுந்தரவதனி

கடைசி அத்தியாயத்தில் மட்டும் கதாசிரியர் கொஞ்சம் குழப்பாமல் 'சிக்' கென்று முடித்திருக்கலாம். நாங்கள் எதிர்பார்த்த இந்த முடிவை ஏற்றுக் கொள்ளவா மாட்டோம்?

திருப்பூர்—1 எஸ். ரமேஷ்குமார்

மைதிலி அக்னியை 'லவ்' பண்ணுவதாக எழுதியிருந்தாரே ஆசிரியர், அது என்னவாயிற்று?

லால்குடி என். உலகநாதன்



சுற்றி வளைத்த கதை

என் ஒன்றுவிட்ட அத்தை கடிதம் கொடுத்தனுப்பியிருந்தாள் வீணாவிடம்.

''என் அன்புள்ள அனந்துவுக்கு அனேக ஆசீர்வாதம். இப்பவும் நீ சௌக்கியமாக இருக்கிறாயா? ரஞ்சனி இறந்து போன துக்கம் ஆறி, நீ சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்று தினம் தினம் அம்பாளை வேண்டிக்கொண்டு வருகிறேன்.

நிற்க. வீணாவுக்கு மெட்ராசில் ஒரு கம்பெனியில் வேலை கிடைத்திருக்கிறது. உடனே வந்து வேலையை ஒப்புக் கொள்ளும்படி ஆர்டர் அனுப்பியிருக்கிறார்கள். இந்தச் சமயம் பார்த்து நான் குளியலறையில் விழுந்து, காலை முறித்துக் கொண்டு கிடக்கிறேன். இன்னும் ஒரு மாதமாகும் கால் நன்றாய்க் குணமாக. அதனால் நான் வீணாவுடன் வர முடியவில்லை. ஒரு மாதத்துக்கு உன் வீட்டில் வீணாவை வைத்துக் கொள். நீ தனியாய் இருந்தால் அவளை இங்கே அனுப்புவது நன்றாயிராது. ஆனால் வேலைக்காரக் கிழவியொருத்தி உன் வீட்டோடு இருப்பதால் வீணா இருப்பதில் தப்பில்லை. சிரமம் தருவதற்கு மன்னிக்கவும். ஒரு மாதத்தில் வந்து விடுகிறேன்.

இப்படிக்கு
அத்தை.''

கையில் பெட்டியுடன் வீணா என் உத்தரவுக்காகக் காத்திருந்தாள்.

எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லைதான். போன வருஷம் ரஞ்சனி திடீ

ரென்று இறந்தது முதல் எந்தப் பெண்ணை யும் என்னிடம் நெருங்க விடாமல் இருந்து வருகிறேன். வீணு கீணு என்று ஏன் அனாவசிய வம்பு? எனக்கு எரிச்சலாகத் தான் இருந்தது. இருந்தாலும் வீடு தேடி வந்தவளை எப்படி விரட்டுவது?

''சரி, வீணு. நீ வந்ததில் எனக்குச் சந்தோஷம்தான்,'' என்று சொல்லிவிட்டு, வேலைக்காரக் கிழவியை அழைத்தேன். ''பொன்னம்மா, இது என் அத்தை பொண்ணு. ஒரு மாசத்துக்கு இங்கேதான் இருக்கும். பார்த்துக்க,'' என்றேன்.

ஒரு வாரம் வரையில் வீணு தன் பாட்டுக்கு வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். அவள் வீட்டில் இருப் பதையே கவனிக்காதவனாக நானும் இருந்து வந்தேன்.

அப்படியொரு சம்பவம் நிகழாம லிருந்தால்...

பர்ஸில் ஒரு புத்தம் புது நூறு ரூபாய் போட்டு வைத்திருந்தேன். குளித்து வந்து, பேப்பர் பையனுக்குத் தர வேண்டு மென்று பர்ஸைத் திறக்கிறேன்—

காணோம்.

அங்கே இங்கே என்று எல்லா இடங்களையும் புரட்டி எடுத்தாகி விட்டது.

''என்ன தேடறீங்க அத்தான்?'' என்றாள் வீணு.

''நூறு ரூபாயைக் காணோம்!'' என்று சீறினேன். ''இங்கேதான் வைத் திருந்தேன். எங்கே போச்சு?''

''நான் எடுக்கலியே?'' என்றாள்.

''இரண்டு பேர்தான் இருக்கிறீர் கள் என்னைத் தவிர!'' என்று வெடுக் கெனச் சொன்னேன். ''நீ எடுக்கவில்லை யென்றால் பொன்னம்மா எடுத்தாள் என்கி றாயா?''

''சேச் சே! அப்படிச் சொல் வேனா...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருந்த சமயம், பொன்னம்மாவின் தலை தெரிந்தது.

''பொன்னம்மா, என் பர்ஸில் இருந்த நூறு ரூபாயைக் காணோம். இவளுக்கு உன்மேல் சந்தேகம் வரக் கூடாது இல்லையா? உன் பெட்டியை எடுத்து வா, பார்த்து விடலாம்,'' என்றேன்.

''அத்தான், நான் அப்படியெல் லாம் சொல்லலியே?'' என்று வீணு மறுத்துப் பார்த்தாள்.

அதற்குள் பொன்னம்மா தன் தகரப் பெட்டியைக் கொண்டு வந்து என் முன்னால் வைத்தாள்.

பிரித்தேன்.

இரண்டு மூன்று கிழிசல் துணி களுக்குக் கீழே—

என் நூறு ரூபாய் நோட்டு இருந் தது.

''வந்து... இது தம்பி...'' என்று பொன்னம்மா தடுமாறினாள்.

''சரி, சரி. ஏதோ தவறுதலாய் வந்திருக்கும். உன்னை எனக்குத் தெரி யாதா?'' என்று சொல்லி அவளை அடக்கி விட்டேன்.

அடுத்த வாரமும் அதே போல் இன்னொரு சம்பவம் நடந்தது.

இந்தத் தடவை காணாமல் போனது என் கைக் கடியாரம்!

எல்லா இடத்திலும் தேடிய பின், வேலைக்காரக் கிழவியின் பெட்டிக்குள்தான் அதுவும் இருந்தது!

''வந்து தம்பி... இது... இது...''

''பொன்னம்மா, உன் மீது எனக்குத் துளியும் சந்தேகமில்லை. அனாவசியமாய் மனசை உழப்பிக் கொள் ளாதே,'' என்றேன்.

வேலைக்காரக் கிழவி என்னவோ புலம்பிக் கொண்டேயிருந்து விட்டுப் போய்விட்டாள்.

வீணு என்னையே பார்க்கிற மாதிரி இருந்தது.

''சரி, சரி,'' என்று நான் வெறுப்புடன் கூறியதும் அவள் சமையல றைக்குத் திரும்பி விட்டாள்.

மறுநாள் என் கல்லூரித் தோழன் ராஜதுரை பம்பாயிலிருந்து வந்திருந்தான். ஜூபர் அண்ட் ஜூபர் என்ற மருந்துக் கம்பெனியின் பிரதிநிதி யாக இருக்கிறானாம். இரண்டு மூன்று நாள் என்னுடன் தங்கியிருக்கப் போவதாகச் சொன்னான்.

என் மனைவி இறந்து போனது அவனுக்குத் தெரியுமாகையால் அவன் அனாவசியக் கற்பனைகள் செய்துவிடக்

வசு கிருஷ்ணன்

கூடாதென்று வீணாவை இன்னாளென்று அறிமுகம் செய்து வைத்தேன்.

இப்போதெல்லாம் வீணாதான் சமையல் செய்கிறாள். ''ரசம் பிரமாதம், பிரமாதம்!'' என்று சொல்லிக் கையில் வாங்கி வாங்கிக் குடித்தான்.

அவன் வந்த அடுத்த நாளே மறுபடியும் ஒரு திருட்டு!

என் பொருளல்ல. ராஜதுரையினுடையது!

குளிக்கப் போகுமுன் தன் தங்கச் செயினைக் கழற்றி மேஜைமீது வைத்திருந்தானாம். காணவில்லையாம்.

என்னைத் தனியே அழைத்துச் சென்று, ''இந்த வீட்டில்...'' என்று தாழ்ந்த குரலில் ஆரம்பித்தவன், ''வீணா கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த படித்த பெண். இப்படியெல்லாம் செய்ய மாட்டாள். ஆகவே...'' என்று நிறுத்தினான்.

''வேலைக்காரி மீது உனக்குச் சந்தேகம். அப்படித்தானே?'' என்றேன்.

''எதற்கும் பார்த்து விடலாமே?'' என்ற ராஜதுரை, ''இந்தாம்மா கிழவி, உனக்குன்னு பெட்டி கிட்டி வச்சிருக்கியா?'' என்றான்.

''வந்துங்க... நான்...'' என்று பொன்னம்மா தடுமாறிவிட்டு, தன் தகரப் பெட்டியைக் கொண்டு வந்து வைத்தாள்.

ராஜதுரை சோதனை போட்டான்.

செயினை வெளியே எடுத்தான்!

''என்ன கிழவி? செயினுக்குக் கை கால் முளைத்து உன் பெட்டிக்குள் வந்ததா?'' என்றான்.

பொன்னம்மா தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். எந்த வினாடியும் பெருக்கெடுத்து ஓடுவேன் என்கிற மாதிரி அவள் கண் முனைகளில் நீர் தளும்பிக் கொண்டு நின்றது.

சங்கிலியைக் கை படாமல் கைக்குட்டையால் பொத்தி எடுத்தான் ராஜதுரை. ''ஏய் கிழவி, எத்தனை நாளாய் இந்தத் திருட்டு வேலை நடந்திட்டிருக்குது? இன்னும் எந்தெந்த வீட்டிலே என்னென்ன திருடி எங்கெங்கே ஒளிச்சு வைச்சிருக்கிறே? மரியாதையாய் உண்மையை ஒப்புக்க,'' என்று அதட்டினான். இரண்டு நாளாய் அவன் குரலில் தென்படாத ஓர் அதிகாரத்தை இன்று கவனித்தேன்.


எனக்கு வீணாவின் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. சமையலறை வாசலில் ஒன்றும் அறியாதவளைப் போல் நிற்கிற அவளை அந்த நிமிடமே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும்போல ஆத்திரம் பீரிட்டுக் கொண்டு வந்தது.

''சொல்லு கிழவி,'' என்று கையை ஓங்கின ராஜதுரையைத் தடுத்தேன். ''இதிலே ஒரு பெரிய சதி இருக்கிறது. இப்படி வா சொல்கிறேன்,'' என்று என் அறைக்கு அழைத்துச் சென்றேன்.

உள்ளே போய் உட்கார்ந்து கொண்டதும், ''என்ன?'' என்றான் அவன்.

''பொன்னம்மா கிழவி ஒரு நாளும் இந்தத் திருட்டைச் செய்திருக்க மாட்டாள். என் சின்ன வயசிலிருந்து எங்கள் வீட்டில் இருக்கிறவள் அவள்.

தந்திக்குப் பதில் மணியார்டர்



எனது நண்பர் ஒருவர் தனது தம்பியின் திருமண அழைப்பிதழின் பின்புறம், 'வாழ்த்துத் தந்திகள் அனுப்பிப் பணத்தை வீண் செய்ய வேண்டாம். அந்தப் பணத்தில் செலவாகும் தொகையைத் திருவாரூர் பார்வையிழந்தோர் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களுக்கு மணி ஆர்டர் செய்யவும்' என்று அச்சிடப்பட்டிருந்தது.

பலன்: திருமணத்தன்று, மணமகனுக்கு வாழ்த்துத் தந்தி ஒன்றுகூட வரவில்லை. தலைமை ஆசிரியருக்கு ரூ. 72 மணி ஆர்டர் மூலம் அனுப்பப்பட்டிருந்தது.

—எம். குழந்தைவேல்

அவளுக்குக் குழந்தை குட்டி குடும்பம்னு எதுவும் கிடையாது. இந்த வீட்டே கதின்னு கிடக்கிறவள். திருடி எடுத்துப் போய் யாருக்கும் தர வேண்டிய அவசியம் அவளுக்கு இல்லை...''

ராஜதுரை குறுக்கிட்டு, ''அதெல்லாம் சரி. ஆனால் அவளோட பெட்டியிலே தானே என் சங்கிலி இருந்தது?'' என்றான்.

''இந்தச் சங்கிலி மட்டுமில்லை. பதினைஞ்சு நாள் முந்தி என் பர்ஸிலிருந்து கெட்டுப் போன நூறு ரூபாய் நோட்டு இருந்தது. அதற்குப் பிறகு என் அலமாரியில் கழற்றி வைத்திருந்த கைக்கடியாரம் இருந்தது...'' என்றேன்.

''அப்படியானால் இவளோட திருட்டு ரொம்ப ரொம்ப ஊர்ஜிதமாகிறதே!''

''அதிலேதான் மர்மம் இருக்கிறது,'' என்றேன். ''இந்த வேலைக்காரக் கிழவி மேலே பழி விழணும், அவளை வெளியே துரத்தணும் என்று வேண்டுமென்றே இதைச் செய்கிறார்கள்!''

''யார்?''

நான் பல்லைக் கடித்தேன். ''வேறு யார்? என் அத்தை பெண் என்று சொல்லிக் கொண்டு ஒரு மூதேவி வந்திருக்கிறதே, அதுதான்!''

ராஜதுரை திடுக்கிட்டான். ''யார், வீணாவா? பார்த்தால் ரொம்ப நல்ல பெண் மாதிரி தெரிகிறாளே?''

''அவளா நல்லவள்! காலோடு தலை விஷம்!''


''எதுக்காக அவள் அப்படிச் செய்யணும்?''

''உனக்குப் புரியவில்லை, எனக்குப் புரிகிறது. இந்த வீட்டுக்கு அவள் எஜமானி ஆகவேண்டும்! என் மனைவியோட இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும்! அதற்காகத் திட்டம் போட்டு இங்கே வந்திருக்கிறாள். அவளோட திட்டத்துக்கு இடையூறாக இருக்கிறவள் இந்த வேலைக்காரக் கிழவி. இவள் துணைக்கு இருக்கிறவரை நான் இரண்டாவது கல்யாணத்தைப் பற்றி நினைக்க மாட்டேன். ஆகவே இவளை வீட்டை விட்டுத் துரத்திடணும். அதுக்கு இவள் மேலே திருட்டுப் பழி சுமத்தணும். ஆகவே ஒவ்வொரு பொருளையும் தானே திருடிட்டு வந்து இவளோட பெட்டிக்குள்ளே


இமாசலப்
பிரதேச லாட்டரி
லாட்டரிகளின் முன்னோடி
அளித்திடும்
இருபெரும் அதிர்ஷ்ட இரட்டையர்
இமாலயன் வீக்லி
திங்கள் தோறும்
குலுக்கல்
சீட்டின்
விலை
ரூ. 1/-
கோல்டன் வீக்லி
வெள்ளி தோறும்
குலுக்கல்
மத்திய அரசு வரையறுத்தப்படி பரிசுகள் அளிக்கும்
ஒரே மாநில லாட்டரி
பரிசுத் தொகை
ஏஜெண்டுகள் போனஸ்
விற்பனையாளர் போனஸ்
(ஒவ்வொரு பரிசிற்கும்)
1,00,000 x 1 7,000 3,000
1,000 x 2 70 30
20,000 x 3 1,400 600
500 x 240 50 50
50 x 4800 5 10
20 x 4800 2 10
10 x 24000 2 5
5 x 72000 — —
வெளியிடுவோர் :
இயககுநர்,
இமாசல பிரதேச மாநில லாட்டரிகள்
சிம்லா.
ஆர்கனைசர் :
நிர்மல் ஏஜென்ஸி,
98, அவ்வை சண்முகம் சாலை,
சென்னை-14. தொலைபேசி : 470444

போட்டுக் கொண்டிருக்கி றாள்!''

''ஓ!'' என்றான் ராஜதுரை. சில விநாடிகள் எதுவும் பேசாமல் இருந் தான். பிறகு, ''நீ சொல்வது நம்புகிற மாதிரியும் இருக் கிறது. நம்ப முடியாத மாதிரி யும் இருக்கிறது. ஆராய வேண்டியது தான்,'' என்றான். மீண்டும் மௌன மாக இருந்த பின், என்னை நிமிர்ந்து நோக்கி, ''சரி, என்னைப் பற்றி ஒரு விஷயம் சொல்கிறேன். எனக்கு என்ன உத்தியோகம் என்று நினைக்கிறாய்?'' என்றான்.



நான் திகைப்புடன், ''ஏன்? ஜூபர் அண்ட் ஜூபர் மருந்துக் கம்பெனி யில் ரெப்ரஸெண்டேடிவ் என்று சொன் னாயே?'' என்றேன்.

''இல்லை. நான் ரகசியப் போலீஸ் அதிகாரி. அதை வெளியே சொல்லிக் கொண்டால் ரொம்ப வேண்டியவர்கள் கூட அனாவசியமாக மிரளுகிறார்கள் என்று சொல்வதில்லை. ஒரு கேஸ் விஷயமாக மெட்றாஸ் வந்திருக்கிறேன்.''

''ஓ!'' என்று ஆச்சரியத்துடன் பார்த்தேன் அவனை.

''எதற்கு இப்போது அதைச் சொன்னேன் என்றால் சாதாரண ஜனங் கள் பார்க்கிற கண்ணோட்டத்தில் நாங் களும் பார்க்க மாட்டோம். அத்தோடு ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டவும் மாட்டோம். ஆகவே நான் என்ன சொல் கிறேன் என்றால், வேலைக்காரி, வீணா இரண்டு பேரில் யார் குற்றவாளின்னு ஆதாரபூர்வமாய் முதலில் ஆராய்ச்சி பண்ணலாம்.''

தன் பெட்டியிலிருந்து சில கருவி களை எடுத்தான். கைரேகை பதிவு செய் வதற்கான கருவிகள் அவை. செயினை அவன் கைக்குட்டையால் பொத்தி எடுத்து வைத்துக் கொண்டிருப்பது ஏன் என்று அப்போதுதான் புரிந்தது.

ஒரு போலீஸ் அதிகாரியின் மிரட்டலும் தோரணையும் அவனிடம் குடியேறி விட்டன. ''இந்தாம்மா, இப்படி வா,'' என்று அதட்டலோடு இருவரையும் வரவழைத்து, இருவருடைய கைரேகைகளைக் காகிதத்தில் பதிவு செய்து கொண்டான்.

''சாயந்தரம் தெரிந்துவிடும்,'' என்று சொல்லி, ப்ரீஃப்கேஸில் பத்திரப் படுத்திக் கொண்டான். ''லேபரட்டரியில் டெஸ்ட் பண்ணி, சாயந்தரம் வந்து சொல் கிறேன்,'' என்று புறப்பட்டு விட்டான்.

நானும் சில நிமிடங்களில் கிளம்பினேன். நான் மறந்துவிட்ட பேனாவை வீணா எடுத்துவந்து தந்தாள். வெடுக்கென்று பறிக்கிற மாதிரி அதை வாங்கிக் கொண்டேன். பொன்னம் மாவைக் கனிவோடு நோக்கினேன். ''பொன்னம்மா, நீ மனசு வருத்தப் படாதே. உன் மேலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. யார் இதையெல்லாம் செய் திருப்பாங்க என்று சாயந்தரம் தெரிந்து விடும். கவலைப் படாமல் இரு,'' என்று சொல்லிவிட்டு, வீணாவை ஒரு முறைப்பு முறைத்து விட்டுக் கிளம்பினேன். அவளைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது.

நான் அலுவலகத்திலிருந்து வருமுன்பே ராஜதுரை எனக்காக வீட்டில் காத்துக் கொண்டிருந்தான்.

''என்ன ஆச்சு?'' என்றேன் அறைக் கதவைச் சாத்திவிட்டு.

ராஜதுரை ஒரு புன்னகையுடன், ''ஸாரி, உனக்கு ஒரு ஷாக்,'' என்றான்.

''என்ன சொல்கிறாய்?''

''மோதிரத்தில் இருந்த கைரேகைகளைப் பரிசோதித்தாகிவிட்டது. வேலைக்காரி பொன்னம்மாவின் கைரேகை

...ன் படிந்திருக்கிறது. வீணுவின் ...கை இல்லவே. இல்லே!''

''என்னது! உண்மையாகவா? என்ருல் நம்பவே முடியலேயே!'' அவனேயே பார்த்துக் கொண்டு நின்றேன். ''பொன்னம்மாவா திருடி! இருபது வருஷமாய் என் வீட்டோடு இருக்கிற அவளுக்கா திருட்டுப் புத்தி!''

ராஜதுரை சிரித்துக் கொண்டே, ''எல்லாவற்றிலும் அவசர அவசரமாய் முடிவுக்கு வந்துவிடுகிருய் நீ! கொஞ்சம் லாஜிக்கலாக யோசனே பண்ணு. பொன்னம்மா தங்கமானவள் என்று புலப்படும்!''

''என்ன நீ, திருடின்னும் சொல்கிருய், தங்கமானவள் என்றும் சொல்கிருய்?''

அவன் மறுபடி சிரித்தான். ''கிழவி பொன்னம்மாளுக்கு உன்மேல் ரொம்பப் பிரியம் உண்டா?''

''ஆமாம்.''

''மனேவியை இழந்த பிறகு இப்படி நீ ஒண்டிக்கட்டையாய்த் தவிக்கிருயே என்று புலம்பியது உண்டா?''

''உண்டு!''

''இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ளும்படி உன்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிருளா?''

''சொல்லியிருக்கிருள்.''

''விஷயம் அவ்வளவுதான்,'' என்று என் தோளில் தட்டினன் அவன். ''புரியலே? வீணுமீது அவளுக்குப் பிரியம் ஏறபட்டுவிட்டது. அழகான நல்ல பெண்ணேப் பார்த்தால் எந்தத் தாயும் தன் பிள்ளேக்கு அவளேக் கல்யாணம் செய்து வைக்கணும் என்று நினேப்பதில்லேயா? அதுபோல் பொன்னம்மாவும் வீணுவை உனக்குப் பண்ணி வைக்க ஆசைப் பட்டிருக்கிருள். ஆனல், அவள் இங்கே இருக்கிற வரைக்கும் நீ இரண்டாவது கல்யாணத்தைப் பற்றி நினேக்க மாட்டாய். வீட்டை விட்டுப் போகிறேன் என்று சொன்னலும் நீ விட மாட்டாய். அவள் மீது ஒரு பழி விழுந்து நீ அவளே வீட்டை விட்டு வெளியேற்றி விட்டால், தானகவே உனக்கு வீணுமீது ஒரு கண் விழும்! அதற்காக, தானே ரிஸ்ட் வாட்சையும் பணத்தையும் செயினேயும் திருடி, தானே தன் பெட்டியில் போட்டுக் கொண்டிருக்கிருள்! ஆகவே இது ஒரு நல்ல நோக்கத்துடன் செய்த திருட்டு!''

அப்படியும் இருக்குமா!

எனக்கு ஞானேதயம் ஏற்பட்டது. கதவைத் திறந்து கொண்டு பார்த்தபோது, அறை வாசலிலேயே பொன்னம்மா நின்றிருந்தாள். கலங்கிய கண்களுடன், ''எல்லாம் கேட்டுட்டுதான் இருந்தேன் தம்பி. அந்தப் பிள்ளே சொல்றது நிஜம்...'' என்ருள்.

நான் தயங்கித் தயங்கி வீணுவின் அறைக்குச் சென்றேன். அவள் பெட்டியில் தன் துணிகளே அடைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் முதுகைப் பார்த்த வண்ணம் சில விநாடிகள் நின்றேன். அவளேப் பற்றி எவ்வளவு மோசமாக நினேத்தோம், எத்தனே கடுகடுப்பாக நடந்து கொணடோம் என்பதை நினேக்கையில் வெட்கம் ஏற்பட்டது. அவளுக்கு எப்படிப்பட்ட இளமையான தேகம் என்பதும் முதன் முறையாகப் புலப்பட்டது. இவளே என் மனேவியாக்குவதற்குப் பொன்னம்மா எடுத்துக் கொண்ட முயற்சி தவறல்ல எனறும் தோன்றியது.

அவள் பெட்டியை மூடிக் கொண்டு திரும்பினள். வழி மறிக்கிற மாதிரி நான் நின்றிருந்தேன்.

''நான் புறப்படுகிறேன். என்னல் இந்த வீட்டின் அமைதியே கெடுகிறது,'' என்ருள்.

''இனிமேல் தான் அமைதி ஆரம்பம்,'' என்று கூறி, பெட்டியை மெல்ல வாங்கிக் கட்டில் மீது வைத்துக் கொண்டு, அவள் மோவாயை நிமிர்த்தி, கண்ணீரைத் துடைத்தேன்.



''என்ன சார், மாப்பிள்ளே மணமேடைலே உட்கார்ந்து தூங்கிட்டிருக்கார்?''

''நைட் பூரா கண் முழிக்கப் போருராம். அதுக்காக இப்பவே தாலி கட்டும் போதே தூங்கி விழருர்!''

—எம். பூங்கோதை.



பசியோடு காத்திருந்த டிரைவர்

பசி வயிற்றைக் கிள்ளியது.

டிரைவர் கண்ணன் தன் சகாக்களுடன் கல்யாண மண்டபத்தின் தோட்டத்தில் காத்துக் கொண்டிருந்தான்.

பெரிய இடத்துக் கல்யாணம். வாசல் பக்கம் கார்கள் நெரிசல். உள்ளே பிரமுகர்கள் அமர்க்களமாய் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''ஆச்சரியமாய் இருக்குடா டேவிட். டிரைவர்களும் மனுஷங்கதானே, நமக்கு இருக்கிற வயிறுதானே அவங்களுக்கும்னு இந்தப் பணக்காரங்களுக்குத் தோணவே தோணுதா? விருந்து முடிஞ்சதும் சாப்பிட்டியான்னு ஒரு வார்த்தை கேட்க மாட்டாங்க. எடுடா காரைக் பாங்க பாரேன்.'' கண்ணன் தன் கூட்டாளியிடம் சொல்லிப் பொருமினான்.

சேலத்திலிருந்து விடிகாலை புறப்பட்டவன்.

கல்யாணக்காரர் யாரோ வந்து சும்மாவாவது, 'கல்யாண வீட்டுக்காரம்மா வந்து உங்களுக்குச் சாப்பாடு போடக் கூப்பிடுவாங்க,' என்று தேனொழுகப் பேசிவிட்டுப் போனார்.

கண்ணன் பசியால் தவித்தான்.

வீட்டுக்காரரையும் காணோம், ஆட்டுக்குட்டியையும் காணோம். ''இது தெரிஞ்சுதான் பிச்சைக்காரனாட்டம் காத்திருக்க வேணும்னு என் சம்சாரத்தைச் சோறு கட்டித் தரச் சொல்லி எடுத்து வந்தேன்,' என்று ஒரு டிரைவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

கண்ணனுக்கு வீட்டுச் சாப்பாட்டுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

சேலத்தில் இருந்தபோது அவன் உயிராய்க் காதலித்த கண்ணம்மா மட்டும் அவனை மணந்திருந்தால் இந்நேரம் அவனும் சம்சாரியாகியிருப்பான். திடீரென்று அவள் பாட்டுக்கு யாரையோ கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டாள். அந்த வெறுப்பில் அவன் பிறகு பிரம்மச்சாரியாகவே இருந்து விட்டான்.

''அதோ, அம்மாவே வந்துட்டாங்க.'' உற்சாகக் குரல் கேட்டது.

கண்ணன் திரும்பிப் பார்த்தான். வைரங்கள் டாலடிக்க ஜரிகைப் பட்டில் மின்னிய வீட்டுக்காரம்மாள் புன்னகைத்து, ''எல்லோரும் சாப்பிட வாங்க. கொஞ்சம் தாமசமாயிட்டது. மனசிலே வச்சுக்காதீங்க,'' என்று உபசாரமாய் அழைத்தாள்.

எல்லோரும் புறப்பட்டார்கள். கண்ணன் அப்படியே நின்றான்.

ஒரு தோழன் கேட்டான். ''பசியிலே அப்படித் துடிச்சுயேடா. என்னடா ஆச்சு உனக்கு?''

கண்ணன் பதில் தரவில்லை. அவனை ஏமாற்றிவிட்டுப் போன கண்ணம்மாதான் இந்தக் கல்யாண வீட்டு எஜமானி என்று தெரிந்தபின் அவனுக்கு எப்படிப் பசிக்கும்?

எஸ். சித்ரா



அட்டாலிக்கு

உடைந்த பாழ் மண்டபம். சில செடிகளும் புதர்களும் கொண்ட கவுன்சிலர் வேணுகோபாலின் பங்களாவுக்கு ஒரு ஜீவகளை உண்டென்றால் அது சைக்கிள் ரிக்ஷாக்கார அட்டாலியால்தான். அந்த மண்டபத்தில் அவன் குடித்தனம் செய்து கொண்டிருந்தான். எத்தனை இடிபாட்டுக்கும் மனித நடமாட்டம் ஒரு ஜீவனைத் தந்துவிடுகிறது.

பாழ் மண்டபத்தின் மொத்த சொந்தக்காரனாக அவன் எடுத்துக் கொண்டுவிட்ட உரிமையை, மண்டபத்தில் சிலையாக வீற்றிருந்த கவுன்சிலர் வேணுகோபாலோ மற்ற ரிக்ஷாக்காரர்களோ ஒருபோதும் ஆட்சேபித்ததில்லை. அந்தக் கவுன்சிலர் சிலைதான் அவனுடைய தோழன், குரு, முன்னாள் யஜமானர் எல்லாம்.

அட்டாலி ஒண்டிக்கட்டை. மூன்று செங்கல்லில் அடுப்பு மூட்டிப் பொங்கிக் கொள்வான். மாநிறமான ஒல்லி உடம்பைப் பார்த்தால் பலசாலி என்றும்

சொல்ல முடியாது. பூஞ்சை என்றும் அலட்சியப்படுத்த முடியாது. முகத்தில் எள்ளும் அரிசியும் தெளித்ததுபோல் சொர சொரத்த தாடி மீசை.

மற்ற சைக்கிள் ரிக்ஷாக்காரர் கள் அட்டாலியைத் 'தலைவரு' என்று மரியாதையாகக் கூப்பிடுவார்கள். பேப்பரில் வரும் அரசியல் விவகாரங்கள் அவனுக்கு அத்துப்படி என்பதால்.

அந்தப் பேட்டையின் ஒருகாலத் திய பிரமுகரான கவுன்சிலர் வேணு கோபாலின் பங்களாவில் சுமார் முப்பது வருடத்துக்கு முன்பு அட்டாலி தோட்டக்காரனாக இருந்திருக்கிறான்.

கவுன்சிலர் உயிரோடு இருந்த காலத்திலிருந்ததைவிட அவர் சிலையான பின் அவரிடம் அவனுக்கு மரியாதையும் தோழமையும், அன்பும், பாசமும் உண்டாகிவிட்டன.

ஒன்றரை அடி உயரப் பீடத்தின் மேல் மார்பளவுச் சிலையாகக் கவுன்சிலர் இருந்தார்.

''என்னய்யா, சொல்லேன் வாயைத் திறந்து. நீ சொல்ல மாட்டேய்யா பயந்தாங்கொள்ளி. என்ன கவுன்சிலரு ருய்யா நீ? நான்தான் கேட்கிறேன்...'' திடீரென்று அட்டாலியின் குரல் உச்ச ஸ்தாயியை எட்டிப் பிடித்தது. ''நான் கேட்கிறேன்ய்யா... நான் கேட்கிறேன். நீ சத்துணவு சாப்பிட்டியா? எல்லோருக்கும் சத்துணவு போடறேங்கறாங்களே... நீ சாப்பிட்டியா? நீயும் தமிழ்நாட்டில் பிறந்தவன்தானேய்யா?''

கவுன்சிலர் பதில் சொல்லவில்லை. அட்டாலியின் குரல் தடாலென்று உச்சிக் குரலிலிருந்து எம்.ஆர். ராதாவின் அடிக் கட்டைக் குரலுக்கு இறங்கியது. முணுமுணுப்பதுபோல, ''எங்க பெரியவர் கிட்டே நீ ஒண்ணும் பண்ண முடியாது. ஆமாம்.''

அட்டாலிக்கு அரசியல் கொஞ்ச நேரத்தில் அலுத்துவிட்டது. வேதாந்தத் துக்குப் போய்விட்டான். இறந்துபோன பெண்டாட்டியின் ஞாபகம் வேறு வந்து விட்டது. ''பொம்பிளையாடி நீ? அடிச்

ஒரு தோழன்

அட்டாலி பீடி பற்ற வைத்துக் கொண்டான். அவனுடைய அழுக்கு வேட்டி, பனியன் இவைகளைக் கவுன் சிலரின் தோள் மீது ஸ்டாண்டு மாதிரி போட்டு வைப்பதை அவன் மரியாதைக் குறைவாக நினைப்பதில்லை. அதேபோலக் கவுன்சிலரும் நினைக்கவில்லை என்றே தோன்றியது, அவர் முகத்திலிருந்த புன்ன கையைப் பார்க்கையில்.

''என்னய்யா கவுன்சிலரு, சத்துணவு சாப்பிட்டியாய்யா?'' தண்ணி யில் இருந்த அட்டாலி கவுன்சிலரைக் கேட்டான்.

அட்டாலி, எல்லாக் கட்சிகளையுமே கிண்டலாகப் பேசுவான்.

கவுன்சிலர் பேசாமல் புன்ன கைத்துக் கொண்டிருந்தார்.

அவர் முகத்தையே சற்றுத் தலையைச் சாய்த்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் அட்டாலி, அவர் ஏதாவது பதில் சொல்லக் கூடும் என்பது போல.

சேன்னு செவுளு பிய்ஞ்சி போயிடும்டி... (சில கெட்ட வார்த்தைகள்)''

உடனே நீதி வாக்கியமாகச் சிலது வந்து விழுந்தது. ''ஒரு பொம்ம ளைட்டின்னு... அவள் குடும்ப விளக்காக இருக்கணும். அடியே (கெட்ட வார்த்தை)! நீ கேள்வியாடி கேட்கிறே? யாரைப் பார்த்துக் கேட்கிறே? நான் புருஷண்டி. புருஷன். அடி தூத்தேரி. நான் அப்படித் தான் சாப்பிடுவேன். குடிப்பேன். இது உழைக்கும் கரம்டி. நீ என்னைக் கேள்வி கேட்கிறே? உன் கணவனுக்கு நீ வெந்நீர் வெச்சு ஒரு நாளைக்கு ஊத்தினது உண்டா?''

திடீரென்று கவுன்சிலரைக் கட்டிக் கொண்டான். நியாயத்துக்கு இழுத்தான். ''கவுன்சிலரு, நீ சொல்லுப்பா நியாயம். நீ பெரிய மனுஷன்.''

கவுன்சில்ரைக் கொஞ்சம்

வனமாலி

உலுக்கினான். அவர் லேசாக அசைந்தார். பிறகு அவர் பாதத்தில் தலையைப் புதைத்துக் கொண்டு கொஞ்ச நேரத்துக்குக் குழந்தைபோல் விக்கி விக்கிப் பெரிதாக அழுதான். "நான் ஏழேய்யா... ஏழை. ஏழைக்கு ஏது வாழ்வு? (எல்லா உணர்ச்சியும் விடைபெற்றுப் பாடத் தொடங்கிவிட்டான்.) "ஏழைக்கு ஏது இன்பம்? ஆமாம்... ஏழைக்கு ஏதுப்பா இன்பம்?" தானே விடை கூறிக் கொண்டான்.

அந்த நாளில் கவுன்சிலர் பங்களாத் தோட்டத்தில் வேலை செய்ததெல்லாம் அட்டாலிக்கு குடிபோதையில் போன வாரம்தான் நடந்தது போல தோன்றியது.

"மரம் வளர்த்தேன்யா. செடி வளர்த்தேன்யா? என் கையாலே வளர்த்தேன்யா... என் குழந்தைங்கய்யா அதெல்லாம்... வித்துட்டியேய்யா... அநியாயமாக வித்துப் போட்டியேய்யா... நீயெல்லாம் மனுசனா? சுயநலப் பிண்டம்."

திடீரென்று சிநேகமாகி, "ஏய்யா கவுன்சிலரு! நீயும் அடிச்சிக்கிறியா ஒரு தம்மு," என்று பீடியை அவர் உதட்டில் வைத்தான்.

உடனே மரியாதை ஞாபகம் வந்து, "நீயெல்லாம் பெரிய மனுஷன். பீடி குடிப்பியா? உனக்கு சிகரெட் டின் டின்னா வேணும். நான் ஏழைய்யா... ஏழை."

அமைதியாகப் பகலில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் அட்டாலியா இப்படியெல்லாம் புலம்பிப் பாடுகிறான் என்று எல்லோருக்கும் தோன்றும்.

அட்டாலி இன்னமும் கவுன்சிலரிடம் பேசிக் கொண்டிருந்தான். வண்டிக்குக் குடக்கூலி வசூலிக்கும் ராகவலு வந்தான்.

"என்னபா ராகவலு! நம்ம கவுன்சிலரு பிறந்த நாளை அடுத்த வாரம் அம்சமாகக் கொண்டாடணும். மறந்துட்டியே..."


"செய்யலாம் தலைவரு."

"தபாரு கிர்ராண்டா கூழ் ஊத்தணும்பா. துட்டு வசூல் பண்ணித் தர்ரியா வாத்யாரே."

ராகவலு உட்கார்ந்தான். "இன்னய்யா பிச்சாத் துட்டு. எங்க முதலாளிகிட்டே சொல்றேன். அவரேகூட ஊத்திடுவாரு."

அட்டாலிக்குக் குஷியாகி விட்டது. "யோவ் கவுன்சிலரு! அதிஸ்டக்கார மன்ஸய்யா நீ! ஏய்யா வாத்யாரு, ரோஸ் மாலை ஒண்ணு பத்து ரூபாய் போனாலும் வாங்கிடணும். இன்னண்றே?"

"செய்பா. அது சரி, நான் வந்த



"அந்த டைரக்டர் ரொம்ப குழந்தை மனம் கொண்டவர்."

"எப்படிச் சொல்றே?"

"எல்லாரும் ஸ்டார்ட்னு சொல்வாங்க. இவர் 'ஜூட்'னு சொல்றார் பாரேன்."

—எஸ். குணசேகரன்




கல்யாண வீட்டில்:

"மாப்பிள்ளை பஸ் கண்டக்டரா?"

"ஆமாம். எப்படித் தெரிஞ்சுது?"

"பிரசன்டேஷனை இதுவரைக்கும் 25 விசில் வந்திருக்கு!"



‘பேச்சிலே கொஞ்சம் தழைந்து போகணும்’ என்கிறார்களே, அது இதுதானே?

படம்: திறமை
சத்தியராஜ்—ரேவதி

விசயத்தைக் கேட்கலையே தலைவரே.''

''சொல்லுபா.''

ராகவலு தன் மடியிலிருந்து ஒரு விலையுயர்ந்த மேல்நாட்டுச் சாராயப் புட்டியை வெளியே எடுத்தான்.

அட்டாலிக்கு நாக்கு ஊறிற்று. ''ஹைகிளாஸா வாத்யாரே? கொஞ்சம் தான் ஊத்தேன். பார்ப்போம்.''

''இது உனக்கு இல்லை. வேறு ஒருத்தருக்கு. உன்னாலே ஒரு காரியம் ஆகணும் தலைவரு. செய்து முடிச்சியானால் இதே மாதிரி உனக்கு ஒரு பாட்டிலு தர்றேன்.''

''சொல்லு வாத்யாரே!''

''ஒண்ணுமில்லே. நம்ம கொத்தவால் சாவடியிலே தண்டல் பண்ணுவானே முனிரங்கு.''

''அந்தக் கழுதைக்கு என்ன?''

''நம்ம முதலாளிகிட்டே ரொம்ப ராங்கா நடந்துகிட்டான். மண்டியிலே வந்து தேங்காயை அள்ளியிருக்கான். இவுரு கண்டிச்சிருக்காரு. இப்ப முதலாளி ரொம்ப ஃபீல் பண்றாரு.''

''என்ன ஃபீல் பண்றாரு?''


''முனிரங்கு மறுபடி மறுபடி டிரபிள் கொடுத்துட்டே இருப்பானே, அவனைத் திட்டிட்டோமே, அவன் பகை வேணாமேன்னு நினைக்கிறாரு. இந்தப் பாட்டில் சரக்கு அவனுக்குத்தான். பக்குவமா அவனுக்குக் கொடுத்துப் போட்டுக்கச் சொல்லு. பாட்டில் போட்டானானால் முனிரங்குக்குப் பகையெல்லாம் மறந்துடும்.''


''நீயே கொண்டு போய்க் கொடுத்திடு.''

''அய்யோ! என்னைப் பார்த்தாலே காலிலே இருக்கிறதைக் கழட்டிப்பான். நீதான் அவனுக்கு தோஸ்து. சமாதான வேலைக்கு உனக்கு நூறு இருநூறு வேணும்னாலும் தர்றேங்கறாரு முதலாளி.''

''இருநூறா?'' அட்டாலியின் கண்கள் விரிந்தன.

''இந்தப் பாட்டில் சரக்கை முனிரங்குகிட்டே கொண்டுபோய்க் கொடுத்திடணும். நீ குடிச்சிடக் கூடாது.







தன் வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளேயே மகன் சடைய வேலுக்காக ஒரு மருத்துவ மனை நிறுவியிருக்கிறார் சௌந்தரா கைலாசம். சிற்பக்கலை நிபுணர் கணபதி ஸ்தபதியின் ஆலோசனையின் பேரில் மருத்துவ மனையில் வைக்கத் தகுந்த சில சிற்பங்களை வைத்திருக்கிறார். ஒரு சிற்பம்: தன்வந்திரி.

டைரக்டர் ஸ்ரீதர், வீட்டின் பின்புறத்தில் உள்ள கிணற்றை மூடிவிட்டு, வாசல் புறம் புதிதாகக் குழாய்க் கிணறு தோண்டியிருக்கிறார். மனை சாஸ்திரப்படி கிணறு அமைந்திருந்த இடம் சரியில்லை என்று சிலர் சொன்னதால் இந்த ஏற்பாடு. புதிய குழாய்க் கிணறு தோண்டிய பிறகு பழைய அதிருஷ்டம் திரும்பியுள்ளதாம்.

சீர்காழி கோவிந்தராஜன் மூன்று எவர் சில்வர் டப்பாக்களை எடுத்துச் செல்வார். வீட்டில் தயாரித்த கறிவேப்பிலைப் பொடி, சுண்டைக்காய்ப் பொடி, தேங்காய்ப் பொடி வெளியூரில் சாதம் மட்டுமே கொண்டு வரச் சொல்லி இந்தப் பொடிகளைக் கலந்து சாப்பிடுவார்.

முனிரங்குதான் குடிக்கணும். உனக்கு ரூபாய் இருநூறு.''

ஒப்புக் கொண்டான் அட்டாலி.

இருநூறு ரூபாய் வரப் போகிறது என்ற மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. ராகவலு கொடுத்த பாட்டிலை வாங்கிச் சிலை அருகே வைத்தான். ''காலையில் முதல் காரியமாகக் கொண்டு கொடுத்திடறேன், வாத்யாரே,'' என்று ராகவலுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

கவுன்சிலருடன் அதைப் பற்றித் தான் விடிய விடியப் பேசினான்.

''யோவ் கவுன்சிலரு! நீதான் வெள்ளை வேட்டி கட்டிச் சொக்கா கோட்டு போடுவேன்னு நினைச்சிக் காதேய்யா. நானும் வாங்கிடுவேன்ய்யா. இந்த நாட்டிலே ஏழை ஏழையாவே இருக்க மாட்டான் கவுன்சிலரு. நான் சொல்றேன், கேட்டுக்கோ. நம்ம நாடு இருக்குதே, அதுதான்யா நம்ம தாயகம். தாயகம்னா பாரத மாதா. இருநூறு ரூபா தர்ராங்கய்யா. இருநூறு ரூபாய். அழகாக அன்பாக ஆதரவாக இந்த ஏழைக்கு இருநூறு ரூபாய் தருகிறாங்க கவுன்சிலரே. நீ கொடுத்திருக்கிறாயா? நீ கஞ்சப் புசினாரி. பத்து ரூபா தந்தே மாசம் பூரா நான் உழைச்சதுக்கு? உன் தோட்டத்திலே நான் உழைச்சேன். என் வியர்வையை சிந்தினேன்யா. நீ பத்து ரூபா பிச்சைக் காசு கொடுத்தே. இப்போ நான் சுகமா இருக்க இருநூறு ரூபா தர்ராங்க. சாமான்னியப் பட்ட ஆளு இல்லேய்யா நானு! புரியுதா கவுன்சிலரே. ராத்திரி ஆட்டுக் கறிச் சோறு வைக்கிறேன். நல்லாத் துண்ணு. அய்யே! தே! சிரிப்பைப் பாரேன் கறிச் சோறுண்ணுதும்.''

இரவு திடீரென்று மழை பிடித்தது. பெரிய மழை என்றுகூடச் சொல்ல முடியாது.


கவுன்சிலர் சிலை தடாலென்று பீடத்திலிருந்து கீழே விழுந்து நொறுங்கி விட்டது.

சத்தம் கேட்டு அட்டாலி எழுந்து பார்த்தான். போதை முற்றும் தெளிந்திருக்கவில்லை. ஆனாலும் சிலை உடைந்து போனது தெரிந்து பதறி விட்டான்.

''அய்யா! கவுன்சிலரய்யா! அய்யா! நீ போயிட்டியா அய்யா! ஐயோ இப்படி உடைஞ்சு நொறுங்கிப்



நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் இசை நிகழ்ச்சிக்குக் கிளம்புமுன் வானத்தைப் பார்ப்பார். இடது பக்கமிருந்து வலது பக்கமாக ஒரு காகம் பறந்து போனுல்தான காருக்குள் ஏறிக் கொள்வார்.



சிறிது காலம் உடல் நலம் குன்றியிருந்த அகிலன் இப்போது குணமடைந்து விட்டார். காலே வேளையில் மொட்டை மாடியில் 'வாக்கிங்' செய்கிருர். 'ஓம் நமசிவாய' என்று ஒரு பக்கம் பூராவும் தினசரி எழுதுகிருர்.



சட்டமன்றச் செயலா ராகப் பணியாற்றி ஓய்வுபெறு அழகிரிசாமி என்கிற அ காரிக்குச் சட்டமன்றம் ஓ பாராட்டுத் தீர்மானம் நிை வேற்றியது. சபாநாயக பி.எச். பாண்டியன், எவரு எதிர்பாரா்த விதமாக, அே நாளில் ரிடையராகும் (3 ஆண்டு சர்வீஸ்) கடைநிெ ஊழியர் (துபாஷ்) கன்னிய பணியும் பாராட்டித் தீர்மான தில் சேர்த்தார்.

—என்.பி

போயிட்டியேய்யா!'' என்று பதறின அட்டாலியின் கண்ணில் அடுத்த நிமிஷம் ஒரு காட்சி தென்பட்டது.

சிலேக்குச் சற்றுத் தள்ளி ஓரமாக குட்டிச்சுவர்ப் பக்கம் ராகவலு கொடுத்துச் சென்ற அந்தச் சரக்கு பாட்டில்—முனிரங்குக்குத் தர வேண்டியது—சுக்கு நூருக [illegible]ந்தது. கீழே விழுந்த சிலே அந்தப் புட்டியின் [illegible] நொறுக்கி விட்டது. அட்டாலியின் துக்கம் ஆத்திரமாக மாறிவிட்டது. மரியாதையெல்லாம் பறந்து விட்டது. ''ஐயோ! போச்சே! இருநூறு ரூபாய். அடே பாவி கவுன்சிலரே! நீ நல்லாயிருப்பியாடா! இந்தச் சரக்கைக் கொண்டு போய்க் கொடுத்து அவனேச் சமாதானப் படுத்திஞல் இருநூறு ரூபாய் கிடைக்கும்னு ஆசையா இருந்தேனே. மண்ணே வாரிப் போட்டுட்டியேடா பாவி! நீ நல்லாயிருப்பியா? ஏழையைக் கெடுத்தியே... நீ நல்லாயிருப்பியா! அதான் நீயும் நொறுங்கிப்பூட்டே! உன்னே நான் வுடப் போறதில்லே. கல்லாலே அடிக்கிறேண்டா உன்னே...'' அருகிலிருந்த கல்லே எடுத்து உடைந்த கவுன்சிலர் சிலேயின் முகத்தில் அடித்தான். ''ஏழை என்னிக்கும் ஏழையாகவே இருக்கணும்னு நினேக்கிறியே கவுன்சிலர்! நீ நல்லாயிருப்பியா! நீ அயோக்கியன்! பிறத்தியான் வாழப் பொறுக்காதவண்டா நீ... தூ!''

அட்டாலி கவுன்சிலரின் உடைந்த சிலேயைத் திரும்பிப் பாராமலும், அந்தப் பூங்கா மண்டபத்தில் இருப்பதையே ஒரு பாவமாகவும் நினேத்தவனேப் போல வெறுப்புக்காட்டி மண்டபத்தி[illegible].

உடைந்து நொறுங்கிய கவுன்சிலரின் முகத்தில் அந்தப் புன்னகை மட்டும் இன்னும் ஓடியவில்லே. 'எப்படியோ அட்டாலியைக் கொலேக் குற்றத்திலிருந்து காப்பாற்றி விட்டேன்' என்று கவுன்சிலர் சொல்லிக் கொண்டார். தான் நொறுங்கிஞலும் இந்தச் சிறு உதவியாவது தன் பழைய தோட்டக்காரனுக்குச் செய்ய முடிந்ததே என்று கவுன்சிலர் திருப்திப் பட்டுக் கொண்டார்.

'முனிரங்குக்குக் கொடுக்கச் சொல்லி அட்டாலியிடம் ராகவலு கொடுத்த பாட்டிலில் இருந்தது வெறும் சாராயமல்ல, கடுமையான விஷம் கலந்த சாராயம்,' என்பது அட்டாலிக்குத் தெரியாது.



காலையில் உங்களுக்கு புத்துணர்ச்சி கொடுக்க ஒரு புது முறையின் அறிமுகம்...
ட்ரஸ்ட்
ஒரு புதிய பற்பசை
உங்களுக்கு புத்துணர்ச்சியும், உறுதி கொண்ட புன்சிரிப்பும் கொடுக்க.
காலை கதிரவனின் புத்துணர்ச்சியைப் போன்ற புன்சிரிப்புடன் உங்கள் நன்னாட்களை ஆரம்பியுங்கள். உங்கள் பற்களை ட்ரஸ்ட் (மார்னிங்) பற்பசையினால் துலக்குங்கள். ட்ரஸ்ட் பற்பசையில் அடங்கியுள்ள வீரியமான கலவைப் பொருட்கள் உங்கள் பற்களை முற்றிலும் சுத்தப்படுத்தி, பளிச்சிட்டுப் பிரகாசிக்க செய்கின்றன. ட்ரஸ்ட் பற்பசையில் அடங்கியுள்ள அபூர்வமான இனிய வாசம் வாயில் துர்நாற்றத்தைப் போக்கி, உங்கள் சுவாசத்தை குளிர்ச்சியுடனும், புத்துணர்ச்சியுடனும் மிளிரச் செய்கின்றது. ட்ரஸ்ட்டுடன் பல் துலக்கும் நற்பழக்கத்தை உடன் கொள்ளுங்கள்.
Trust
DENTAL CREAM
MORNING
காலையில் பல் துலக்க சிகப்பு நிறப் பெட்டி!
ட்ரஸ்ட்...ஒரு விசேஷமான பற்பசை.



‘பத்து நாள் சமத்து’


‘சௌந்தர்யன்’

“இதோ பாருங்கள், நான் சொல்வதை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டு விடாதீர்கள். நானும் இதையேதான் இருபது நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நாளை முதல் ஒரு பத்து நாள் நீங்கள் சமத்தாக இருக்க வேண்டும். என்ன?” ராகவனைக் கேட்டாள் வசு.

ராகவன் தலையை ஆட்டினன்.

“இப்போது தலையை ஆட்டி விட்டு அப்புறம் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடப் போகிறது! நாளைக்கு இங்கு

பு(து)த்தகம்



■ நவீன அசைவ உணவு வகைகள் (இரண்டாம் அச்சு —விசாலாட்சி —பக். 102 —ரூ. 21 — திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணு ரோடு, தி.நகர், சென்னை 600 017) அசைவச் சமையல் ரொம்ப விரும்புவோருக்கான விஷயங்களைக் கூறும் கவர்ச்சியான பதிப்பு.

■ தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வையாபுரியாரின் கணிப்பு (அ.கா. பெருமாள் — பக். 64 —ரூ. 6 —சக்ரியா, 268, ராயப்பேட்டை ஹை ரோடு, சென்னை 600 014. பழந்தமிழ் நூல்களின் காலங்கள் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் முடிவுகளைத் தொகுத்துத் தருகிறுர் ஆசிரியர்.

■ அருள் மொழி (ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் —பக். 168 —ரூ. 7.50 —திருமகள் நிலையம், 13, எர்ரபாலு தெரு, சென்னை 600 001 நேரில் கேட்டவையும், பத்திரிகைகளிலிருந்து தொகுத்தவையும்.

■ இது சுதந்திர நாடு! (கவிஞன் பைத்தியம் — பக். 164 —ரூ. 11 —நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை—17) கோபமாக எழுதிய கட்டுரைகள்.

■ உலகநாதன் கவிதைகள் (மு. உலகநாதன் —பக். 272 —ரூ. 40 —முத்துச் சிதம்பரனுர் பதிப்பகம், மனை எண்: 234, அண்ணு நகர், மதுரை 625 020) மரபு வழிப் பாடல்கள். இளமைக்கும் காதலுக்கும் அதிக இடம்.

■ அறைக்கு வெளியே (பாரதி வண்ணன் — பக். 50 —ரூ. 5 —காலம் பதிப்பகம், கே.டி.கே. தங்கமணி வீதி, மோகநாதபுரம், ஈரோடு 638 002)

புதுக் கவிதைகள்.

'எதிலும் இலஞ்சமெனக்
கூப்பாடு போடாதே.
எல்லா நாய்களும்
எலும்புகள் கடிக்கும்.'

■ காக்கை தந்த வைர மாலை (சிற்பி சோமு — பக். 94 —ரூ. 7.50 —சரவணு பிரசுரம், 2497, தெற்கு ராஜவீதி, புதுக்கோட்டை 622 001) குழந்தைகள் படிக்கக் கூடிய கதைகள்.

■ மத்திய—மாநில உறவு: சில குறிப்புகள் (ப. நெடுமாறன் —பக். 180 —ரூ. 20 —தமிழ்ப் புத்தகாலயம்,) தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டுமானல் மாநிலங்களுக்குப் பூரண உரிமைகள் தரப்பட வேண்டும் என்பது நூலாசிரியரின் கருத்து.

■ பாரதி முதல் சுஜாதா வரையில் (இரா. தண்டாயுதம் —பக். 312 —ரூ. 21.50 —இரண்டு புத்தகங்களும்: தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005) பிரபல எழுத்தாளர்களைப் பற்றிய பாராட்டுக் கட்டுரைகள்.

வரப்போகும் என் சித்தப்பாவும் சித்தியும் பத்து நாள்தான் இங்கு இருப்பார்கள். சித்தப்பாவுக்கு லீவு கிடைப்பதே கஷ்டம். அதனுல் பத்தாவது நாள் டில்லியைப் பார்க்க ஓடிவிடுவார். அவர்கள் இருக்கும் போது பாட்டிலும் கையுமாய் வீட்டிற்கு வந்து விடாதீர்கள்.'' கெஞ்சினுள் வசு.

''சரி சரி, நான் கட்டுப்பாட்டோடு இருக்கிறேன். இந்தப் பத்து நாட்களும் ஒரு பெக்கூடப் போட மாட்டேன். போதுமா?'' என்றுன் ராகவன்.

வசுவிற்கு அவன் வாக்குறுதியில் நம்பிக்கை இல்லைதான்; இருந்தாலும் தெய்வம் தன்னைக் கைவிடாமல் கணவர் மனத்தைக் கட்டுப்படுத்தும் என்ற நம்பிக்கையோடு பெருமூச்சு விட்டாள்.

இரண்டு வருடங்களாகத்தான் இந்தக் குடிப் பழக்கம் தொற்றிக் கொண்டு விட்டது ராகவனை. அதற்கு முன்பெல்லாம் எப்போதாவது பார்ட்டி அது இது என்றுல் பீர் மட்டும் சாப்பிடுவான். அதுவும் மனைவிக்குத் தெரிந்துவிடக் கூடாதே என்று வெற்றிலை சீவல், ஏலக்காய் எல்லாம் வாயில் போட்டு அடக்கிக் கொண்டு ஒன்றும் தெரியாதவன் மாதிரி, ''ரொம்ப டயர்டு வசு!'' என்று சொல்லி ஓரமாய்ப் படுத்துக் கொண்டு விடுவான்.

பிறகு பீர், பிராந்தி, விஸ்கி என்று மாறியது. வீட்டிற்கே வாடையோடு தைரியமாக வர ஆரம்பித்தான். வசு மறு நாள் அதுபற்றிக் கேட்கும்போது ஏதேதோ சொல்லிச் சமாளிக்கும் எல்லாக் குடிகாரர்களையும் போல மாறினுன்.

வசுவின் கண்டிப்பு அவனைக் கட்டுப்படுத்தவில்லை. அதிகமாக்கியது.

''நான் சம்பாதிக்கிறேன், குடிக்கிறேன். குடும்பத்துக்கு ஏதாவது குறை வைத்திருக்கிறேனு? இல்லை, குடித்து விட்டு ரோட்டில் விழுந்து புரளுகிறேனு?'' என்றெல்லாம் நியாயம் கேட்டான்.

வசுவுக்கு ஒன்றும் புரியவில்லை. குடிப் பழக்கம் உள்ளவர்கள் அவர்களாகத் திருந்தினுல்தான் உண்டு, யாரும் திருத்த முடியாது என்று வசுவின் சினேகிதி சிவகாமி உறுதியாகச் சொன்னுள். அவள் வீட்டு அனுபவம் அப்படி.

அப்புறம் வசு ராகவனை எதுவும் கேட்பதில்லை. ராகவன் ஓவர் டைம் வேலை பார்த்தான் நிறைய. குடும்பச் செலவுக்கு என்று இல்லை. குடிச் செலவுக்கும்தான்.

சித்தப்பா வரும் தினம்.

''என்ன... நேராக ஸ்டேஷனுக்குப் போய்ச் சித்தப்பாவையும் சித்தியையும் அழைத்துக் கொண்டு வந்து விடுங்கள். இன்று ஞாயிற்றுக் கிழமை என்கிற நினைப்பில் வேறு எங்காவது போய் விடாதீர்கள். என்ன?'' என்றாள் வசு.

''சரி சரி,'' என்று கிளம்பினான் ராகவன்.

மீண்டும் எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டாள் வசு.

அவள் வேண்டுதல் பலித்தது.

அவள் சித்தப்பா ஆராவமுதுவையும், சித்தி மைதிலியையும் அழைத்துக் கொண்டு சமர்த்தாக வந்து சேர்ந்தான் ராகவன்.

''ஏன் சித்தி, கிருஷ்ணன், பிரேமாவெல்லாம் அழைத்து வரவில்லையா?'' என்று விசாரித்தாள் வசு.

''ம்ஹூம்... நாங்கள்தான் ஜாலியாக இருக்க வேண்டும் என்று தனியாக வந்தோம்,'' என்று மைதிலியைப் பார்த்துக் கண் சிமிட்டினார் ஆராவமுது.

''அய்யே... வழிகிறது,'' என்றாள் மைதிலி.

அவர்கள் உள்ளே வந்ததும் வசு ராகவனிடம் கிசுகிசுத்தாள்: ''இந்த வயசிலேயும் எப்படித் தமாஷாக இருக்கிறார்கள் பாருங்கள். நீங்களும் இருக்கிறீர்களே... பாட்டில் இல்லாவிட்டால் முகமே உம்மென்று மாறிவிடுகிறது! ஐய்யய்யோ, நானே உங்களுக்கு நினைவுபடுத்தித் தொலைக்கிறேன். சரி, சரி, ஜாக்கிரதை!''

அன்று பகல் சாப்பாட்டின் போது ஆராவமுது கேட்டான்: ''என்ன வசு, மாப்பிள்ளை இப்படிச் சாப்பாட்டைக் கொறிக்கிறார். உடம்பும் இளைத்திருக்கிறது. நீ சரியாகக் கவனிப்பதில்லையா? நன்றாகச் சாப்பிட வேண்டும் மிஸ்டர் ராகவன்!''

ராகவன் பதில் சொல்லாமல் புன்னகைத்தான். வசுவிற்குக் கொட்ட வேண்டும் போல் இருந்தது மடமடவென்று. 'சாப்பாடெல்லாம் அவருக்குத் தேவை இல்லை. பாட்டில் இருந்தால் போதும். பீப்பாய் பீப்பாயாக ,பேரல் பேரலாக முழுங்குவார்!'

எப்படியோ மூன்று நாட்கள் 'சமத்தாக' இருந்து விட்டான் ராகவன்.

நான்காம் நாள்.

மணி எட்டாகியும் ராகவன் வீடு

■ அறிவியல் பூங்கா (இராம் குமார் —பக். 96 — ரூ. 7 —கழகம்.) குழந்தைகள் புரிந்து கொள்ளக்கூடிய நடையில் பல விஷயங்கள்.

■ கந்தரனுபூதி—உரையுடன் (மூன்றும் அச்சு —பதிப்பாசிரியர்: வ.சு. செங்கல்வராய பிள்ளை —பக். 84 —ரூ. 6 —கழகம்.) 'கெடுவாய் மனனே, கதி கேள்' என்று அருணகிரிநாதர் கூறியவையும் அவற்றின் பொருளும்.

■ கந்தரலங்காரம்—உரையுடன் (இரண்டாம் அச்சு. உரையாசிரியர்: வ.சு. செங்கல்வராய பிள்ளை —பக். 116 —ரூ. 8 —கழகம்) குமரேசரின் இரு தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் இருக்கும் போது நாளென் செய்யும் கோளென் செய்யும் என்று மெய்யுருகப் பாடியவை.

■ 100 ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டம் (ச. சுந்தரராசன் —பக். 354 —ரூ. 25 —நான்கு புத்தகங்களும்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 79, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை 600 108) நெல்லை மாவட்டத்தின் சரித்திரம். மைசூர் ராணுவ வீரர்களைத் தோற்கடித்து, மூக்கை அறுத்து, ஊர்வலமாக மதுரையில் கொண்டு வந்தாராம் திருமலை நாயக்கர்.

ஜூன் 1985

வெற்றியின் ரகசியங்கள்

(மூன்றும் அச்சு —அகிலன் —பக். 224 —ரூ. 13 —பாரி)

தன் வாழ்க்கையை அச்சுறுத்திய பல தொல்லைகளிலிருந்து விடுபட்டது எப்படி என்பதை ஆசிரியர் விவரிக்கிறார்.

தமிழர் சமய வரலாறு


(இரண்டாம் அச்சு —ஆ. வேலுப்பிள்ளை —பக். 240 — ரூ. 15 —இரண்டு புத்தகங்களும்: பாரி புத்தகப் பண்ணை, 58, டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005)

கட்டுரைத் தொகுப்பு. 'அப்பர் சுவாமிகள் சமண சைவப் பாலம்' சுவையானது.

வாழ்க தம்பதிகள்

(மு. முத்துக் காளத்தி — பக். 64 —ரூ. 5 — கண்ணம்மாள் பதிப்பகம், 12—13, ஐயப்பன் நகர், இராஜ கீழ்ப்பாக்கம், சென்னை 600 073)

கணவனுக்கும் மனைவிக்கும் யோசனைகள், சிறிய உதாரணங்களுடன்.



மு. முத்துக்காளத்தி

திரும்பவில்லை.

''என்ன, இன்னும் மாப்பிள்ளையைக் காணோம்?'' சித்தப்பாவும் சித்தியும் கோரஸாகக் கேட்டார்கள்.

''ஓவர் டைம் இருந்திருக்கும். செய்துவிட்டு வந்து விடுவார்!'' உதட்டளவில் வசு சொன்னாளே தவிர, உள்ளுக்குள் படபடப்புத்தான் அவளுக்கு.

வீட்டில்தான் மரியாதையாக இருக்க வேண்டும்; வெளியில் 'போட்டுக்' கொண்டு வந்தால் என்ன தெரியப் போகிறது என்று போட்டுக் கொண்டு ஆடிக் கொண்டே வந்துவிட்டால்?

வாசலில் ஆட்டோ சத்தம். ஓடிப் போய்ப் பார்த்தாள்.

ராகவன் நடக்க முடியாமல் ஆட்டோவில் வருகிறானா! ஐயோ!

பயந்து கொண்டே ஆட்டோ அருகில் சென்றாள். நல்ல காலம்! பயந்த மாதிரி எதுவும் இல்லை. ரிப்பேர் செய்யக் கொடுத்திருந்த டி.வி. செட்டைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான் ராகவன்.

''நீங்கள் வந்திருக்கும் சமயத்தில் டி.வி. ரிப்பேர்; இன்று விடாப்பிடியாகக் கடைக்காரனை விரட்டி, சரி செய்து எடுத்து வந்துவிட்டேன்!'' என்றான்.

''பாவம், எங்களால் உங்களுக்கு வீண் சிரமம்!'' என்றார் ஆராவமுது.

''நோ நோ! அதெல்லாம் ஒன்றும் இல்லை!'' என்றான் ராகவன்.

வசுவின் மனம் பூரித்தது.

எல்லோருமாய்க் கருமாரி அம்மன் கோவில் சென்றுவிட்டு, பாரிஸ் கார்னரில் வந்து இறங்கினர்.

ஆராவமுது ராகவனிடம் கேட்டார்: ''இங்கேயும் நிறையப் பேர் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள் போல இருக்கிறதே!''

வசுவிற்குத் திக்கென்றது. ராகவனுக்கும்தான்.

''ஏன், எதனால் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்றான் ராகவன்.

''பஸ்ஸில் போகும்போதும் வரும்போதும் வேடிக்கை பார்த்தேன். எவ்வளவு பேர் குடித்துவிட்டு ஆடிக் கொண்டே வருகிறார்கள்! எத்தனை ஒயின் ஷாப்! எத்தனை சாராயக் கடைகள்! ஓ!'' என்றார் ஆராவமுது.

''கோவிலுக்குப் போய்விட்டு



இமயமலைக்குத் தூக்கி விட்டு...

நாங்கள் ஏதேனும் தவறுகள் செய்து இருக்கலாம். அப்படிச் செய்து இருந்தால் நேரிலேயே விசாரித்துத் தண்டனை தந்து விடுங்கள் என்று எம்.ஜி.ஆரிடம் வேண்டுகிறோம். ஆனாலும் எம்.ஜி.ஆர். தண்டிக்க மாட்டார். பாதகருக்கும் அருளும் பண்பு கொண்டவர் தான் எம்.ஜி.ஆர். இதனாலேயே பாதகத்தையும் செய்து விடலாம் என்று நம்மில் பலர் எண்ணி விடுகிறார்கள். அண்ணா, சகோதர பாசத்தை வளர்த்தார். எம்.ஜி.ஆரோ தாயின் அன்பைப் பொழிகிறார். தாய்தானே! நம்மை தண்டிக்க மாட்டார்கள் என்று கருதி விடுகிறார்கள்.

நாங்களும் தவறு செய்திருக்கலாம். இப்போதும் செய்து கொண்டிருக்கலாம். ஆனாலும் எம்.ஜி.ஆரின் முன்பு தோற்றுப் போகிறோம்.

எம்.ஜி.ஆரின் ஆற்றலைப் புரிந்து கொள்ளும் சக்தி யாருக்கும் இல்லை எனும் போது எதிரிகளுக்கு எங்கே இருக்கப் போகிறது? எம்.ஜி.ஆர். என்ன நடவடிக்கை எடுக்கிறார், ஏன் எடுக்கிறார் என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியாது. பக்கத்தில் ஒருவரை எம்.ஜி.ஆர். அமர வைத்திருப்பார். அவர் மிக நெருக்கமானவர் என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மை என்ன என்பது மட்டும் தெரியாது.

இமயமலைக்குத் தூக்கிவிட்டு எம்.ஜி.ஆர். நிறுத்துவார். நாம்தான் எல்லாரைவிட மேலே உள்ளோம் என்று கருதிக் கொண்டு இருப்போம். ஆனால் அங்கிருந்து கீழே உருட்டி விடவும் எம்.ஜி.ஆரால் முடியும். ஆனால் எம்.ஜி.ஆர். அப்படிச் செய்யமாட்டார்.

எம்.ஜி.ஆரின் மருத்துவச் செலவுக்காக 97 லட்சம் ரூபாய் அ.தி.மு.க. வழங்கிய போது அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் பேசியது:

வந்து அந்தக் கர்மத்தைப் பற்றி என்ன பேச்சு? வேறு பேச்சுப் பேசுங்கள்!'' கோபமாகச் சொன்னாள் மைதிலி.

பத்தாம் நாள்.

ஆராவமுதும், மைதிலியும் புறப்படும் மும்முரத்தில் இருந்தனர்.

புறப்படும் சமயத்தில் மைதிலி சித்தி வசுவைத் தனியே கூப்பிட்டாள்.

''வசு... ஏழேழு ஜென்மத்திற்கு உன்னை நான் மறக்கவே மாட்டேன்!'' என்றாள் நா தழுதழுக்க.

''சித்தி...'' புரியவில்லை வசுவிற்கு.

''உன்னிடம் சொல்வதற்கு என்ன? சில சிநேகிதர்கள் மூலம் குடிப் பழக்கம் ஏற்பட்டு விட்டது உன் சித்தப்பாவிற்கு. படாத பாடு பட்டுவிட்டேன் மூன்று வருடங்களாக. மனம் மாறட்டும் என்றுதான் இங்கு அழைத்து வந்தேன். பெண் வீட்டில் மரியாதையாக இருக்க வேண்டுமே என்று குடிக்காமல் இருந்தார். கருமாரி அம்மன் கோவிலுக்குப் போகும் போது சொன்னேன். 'அண்ணா மன்னி போயாகிவிட்டது. நாம்தான் வசுவிற்கு அம்மா அப்பா. மாப்பிள்ளை எவ்வளவு தங்கமாய் இருக்கிறார். இவர்களுக்காக நீங்கள் ரொம்ப நாள் வாழ வேண்டும். குடிப் பழக்கத்தை விட வேண்டும்,' என்றேன். இனிமேல் குடிப்பதில்லை என்று கருமாரி அம்மன் கோவிலில் சித்தப்பா சத்தியம் செய்தது உனக்குத் தெரியாது!''

மைதிலி சித்தி சொன்னதும் கீழே விழாமல் சமாளித்து நின்றாள் வசு.

அவர்களை ரயிலேற்றி விட்டு வீட்டிற்கு வந்தான் ராகவன்.

வசு ஏற இறங்கப் பார்த்தாள். வாசனை கீசனை இல்லை!

''என்ன, ஃபுல் பாட்டில் அடிப்பேன் என்று நினைத்திருந்தாயா! மாட்டேன். பத்து நாள் குடிக்காமல் இருந்ததில் எவ்வளவு காசு மிச்சம்! காசை விடு. எவ்வளவு மரியாதை! மாப்பிள்ளை மாப்பிள்ளை என்று உயிரை விட்டார்களே உன் சித்தப்பாவும் சித்தியும். குடித்து விட்டு நான் வந்திருந்தால் இந்த மரியாதை கிடைத்திருக்குமா? அதனால் இனிமேல் சத்தியமாய்க் குடிக்க மாட்டேன்!''

ராகவன் சொன்னதும் வசு பூஜை அறைக்குள் ஓடினாள்.







மலையாளப் படங்களில் பிரபலமாகி வரும் நதியா மொய்து கேரளாவைச் சேர்ந்தவரானாலும் பம்பாயில் படித்து வளர்ந்தவர். அறிமுகமான முதல் மலையாளப் படத்தில் இவருக்குப் பாட்டியாக நடித்தவர்: பத்மினி.

துணிப் பொம்மைகள் செய்வது துளசியின் பொழுதுபோக்கு. படப்பிடிப்புக்காக வெளியூர் சென்றால், திரும்பி வரும் போது குறைந்தது இரண்டு பொம்மைகளையாவது செய்து எடுத்து வருவார்.

'மயூரி' படத்தில் நடிக்கும் சுதா சந்திரனுக்குக் குரல் கொடுத்திருப்பவர் சரிதா. தெலுங்கிலும் அவர்தான்; மலையாளத்திலும் அவர்தான்.

—மீசை

அனல் வீசும் கோடையில் சந்தன மணம் வீசும் கோகுல்!

கோடை வந்துவிட்டது. சுட்டெரிக்கும் வெயிலுடன் அனல் காற்றும் வீசத் தொடங்கிவிட்டது. வியர்வை வழிந்தோடுகிறது. வியர்க்குரு முள்ளாய்க் குத்துகிறது. இந்த நேரத்தில் உங்கள் மேனியழகைப் பாதுகாக்கும் உற்ற துணையாக உதவுவது கோகுல் ஸான்டால் பவுடர் ஒன்றே.

கோகுல் ஸான்டால் பவுடர் 4 சிறந்த வழிகளில் செயல்படுகிறது :

1. கோகுல் ஸான்டால் பவுடரில் உள்ள தூய சந்தனமும் ஸ்டார்ச் கலவையும் உன்னதமாக இணைந்து, உங்கள் மேனியில் ஏற்படும் வியர்க்குருவை அகற்றுகிறது.

2. கோகுல் ஸான்டால் பவுடர் தொடர்ந்து உபயோகிப்பதால் மீண்டும் வியர்க்குரு வராமல் தடுத்து மேனியழகைப் பாதுகாக்கிறது.

3. கோகுல் ஸான்டால் பவுடரில் விசேஷமாகச் கலந்துள்ள பாதுகாப்புப் பொருட்கள் வியர்வையினால் பவுடர் பூச்சு கலைந்திடாதிருக்கச் செய்கிறது.

4. கோகுல் ஸான்டால் பவுடரில் உள்ள நறுமணக் கலவை மிக விலை உயர்ந்த வாசனை திரவியங்கள் அடங்கியது. இந்த நறுமணக் கலவை நாள் முழுதும் உங்களை புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.

—ADVT.



‘இதயக் கோயில்’
படத்தில்
மோகன்—ராதா





உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை
டெட்
det
Unique Rich Formula
உன்னதம்...உன்னதம்...
வெண்மையிலே
அனைத்திலும் உன்னதம்!
உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரியமளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கியுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.
நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.
Shilpi DM 9A/84 Tam.

ஒரு நாள் வட்டிப் பார்த்து விட வேண்டும்

பெள்ளூர் கன்னடம் எனக்கு வித்தியாசமாய்ப் பட்டது. பெங்களூரிலேயே பல வருஷம் இருந்து படித்துப் பழகிய கன்னடத்திற் கும் இதற்கும் பேச்சளவில் நிறையவே வித்தியாசம். ஒருவேளை பக்கத்தில் சில மைல் தொலைவில் வேறு மாநிலம் இருப்பதால் மொழி மாறுபட்டு இருக்கலாம். ஆனல் எனக்கு இந்தப் பெள்ளூர் கிராமம் பிடித்து விட்டது. பச்சைப் பசேலென்று செழிப்பான ஊர்தான். தென்னந் தோப்புக்கு நடுவில்தான் வீடுகள். அத்தனை தென்னைகள். வாரக் கடைசி யில் பாங்க் விடுமுறை வருகிறபோது பெங்களூர் போகும் சமயம் இங் கிருந்து மறக்காமல் கொப்பரைத் தேங்காய் வாங்கிக் கொண்டு போக வேண்டும். அம்மா சந்தோஷப்பட்டுக் கொள்வாள்.

அம்மாவுக்கு உண்மையில் என்னை இந்த ஊருக்கு அனுப்ப மன மில்லை. அப்பாதான் சத்தம் போட்டு அவளைச் சமாதானப்படுத்தினர். ''கவலைப்படாதே. இந்தக் காலத்திலே பாங்கு வேலை கிடைக்கிறதே கஷ்டம். ஏதோ அதிர்ஷ்டவசமாய் முரளிக்குக் கிடைத்திருக்கிறது. முதலில் அவனை சிடியில் போடத்தான் மாட்டார்கள். ரெண்டு வருஷம் பெள்ளூர் போனவன் அப்புறம் இங்கே பெங்களூருக்கு மாற்றலாகி வந்து விடப் போகிறன். ஆம்பிளைப் பையன், சமாளிச்சிப்பான்.''

அது என்னவோ வாஸ்தவம். நிறையவே சமாளிக்க வேண்டி இருந்தது. முதலில் வீட்டுப் பிரசினை. ஆனல் காஷியர் மஞ்சுநாத் தக்க சமயத்தில் கை கொடுத்தான். அவன் தங்கியிருந்த வீட்டில்

ஷைலஜா

தற்காலிகமாய் நான் தங்கிக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை என்றான்.

மஞ்சுநாத் இருந்த வீடு பாங்க் இருந்த பிரதான சாலையிலேயே இருந்தது எனக்கும் வசதியாகிவிட்டது. வீடு ரொம்பப் பெரியதில்லை. நுழைந்ததும் வராந்தா. அதை ஒட்டி ஓர் அறை. பிறகு ஒரு ஹால், சமையலறை. பின்கட்டில் பாத்ரூம் வசதிகள். குழாய் இல்லை. கிணறுதான். வாசல் அறையில் வீட்டுக்கார அம்மாளும் அவள் பெண்ணும் தங்கி இருந்தனர். அவர்கள் ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களாம்.


மஞ்சுநாத் வீட்டுக்கார அம்மாளைப் பற்றிக் கிசுகிசுத்தான். ''முரளி! இந்த அம்மாவும் பெண்ணும் சதா பூஜை, புனஸ்காரம் பண்ணிக்கிட்டு இருப்பாங்க. அதுலே ஸ்பெஷல் பூஜை வியாழக் கிழமை பட்டப் பகலில் நடக்கிற நிர்வாண பூஜை!''

''நிர்வாண பூஜையா!'' நெளிந்தேன் நான். வீட்டுக்கார அம்மாளின் அழகிய பெண் சட்டென்று ஞாபகத்துக்கு வந்தாள். உடம்பில் ஒரு பரவசம் பரவ, ''நிர்வாண பூஜைய்யா?'' என்றேன்.

''ஆமா முரளி! நீயே பாரேன்! மற்ற நாளில் இந்த அம்மாவும் பெண்ணும் காலையில் நாம் பாங்குக்குக் கிளம்பறதுக்கு முன்னடியே அறைக் கதவை திறந்து போட்டபடி பூஜையை முடிப்பார்கள். ஆனல் வியாழக் கிழமை மட்டும் நான், நீ, இங்கே இருக்கிற நம்ம இன்னொரு தோஸ்த் அனில்குமார்—எல்லோரும் பத்து மணிக்குப் பாங்குக்குப் போனபிறகு கதவைச் சாத்திட்டு பன்னிரண்டு மணிக்குத்தான் பூஜை செய்யறாங்க. ஒரு நாள் நான் அந்த அம்மாவிடமே விசாரிச்சேன். அதுக்கு அந்த அம்மா குழைஞ்சு வெட்கப்பட்டு, ''வியாழக் கிழமை மட்டும் நிர்வாண பூஜை!'' அப்படீன்னுங்க. எனக்கு முன்னியிலிருந்து ஒரு வியாழக் கிழமை யாவது பாங்க் விடுமுறையாய் வரா தான்னு பார்க்கிறேன்!''

''சீச்சி! போ, மஞ்சு! இது தப்பான ஆசை. அவர்கள் ஏதாவது வேண்டுதல் காரணமாய் நிர்வாணமாய் பூஜை செய்வாங்களோ என்னவோ. அதை நாம் பார்க்கிறது தப்பு,'' என்றேன்.

''சே சே! பூஜையைத்தானே பார்க்கிறோம். அதுவுமில்லாமல் இப்படிப்பட்ட பூஜையைப் பார்க்கக் கொடுத்து வெச்சிருக்கணும்டா. முரளி, நிஜமாய்ச்



சொல்லு. உனக்கு நிர்வாண பூஜை பார்க்க ஆசை இல்லை? நெஞ்சத்தைத் தொட்டு சொல்லு.''

''இ... இருக்கு... ஆனல்...''

''தயங்காதே, பிரதர்! இதெல்லாம் ஒரு 'த்ரில்'தான். சரி, வருகிற வியாழன் சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு மானேஜர் கிட்டே பர்மிஷன் போட்டுட்டு வீட்டுக்கு வருவோம். நான் ஞாபகமாய்ப் பின்கட்டுக் கதவுச் சாவியை எடுத்துக்கறேன். அதுக்கு 'டோர் லாக்' போட்டு இருக்கிறதே நான்தான். அதனலை சாவியை நுழைச்சு சுலபமாப் பின்கதவைத் திறந்து வீட்டுக்குள்ள வந்துடலாம். கூடத்து வழியாய் வாசல் அறைக்கு ஒரு ஜன்னல் இருக்கு. அது கொஞ்சம் மேல் நோக்கி இருக்கும். ஸ்டூல் போட்டு ஏறி அந்த ஜன்னலைத் திறந்து...''

மஞ்சுநாத் முடிப்பதற்குள் ஜிவ்வென்றது எனக்கு. படபடப்பாக இருந்தாலும் சதியில் பங்கு பெற ஒப்புக் கொண்டு விட்டேன்.



வியாழக் கிழமை.

மஞ்சுநாத் காலை சும்மா இருக்காமல் வேண்டுமென்றே வீட்டுக்கார அம்மாளை வம்புக்கு இழுத்தான்.

''ஆயித்தா, பூஜா?''

''இல்லாப்பா. ஈவத்து குருவாரா. மத்தியான பூஜா!''

நிச்சயப்படுத்திக் கொண்ட திருப்தியில் மஞ்சு என்னைப் பார்த்துக் கண்ணடித்தான்.

பாங்கில் பதினொரு மணியிலிருந்தே இருவருக்கும் இருப்புக் கொள்ளவில்லை. கடமையே கண்ணாய்க் கணக்கில் 'டாலி' பார்த்துக் கொண்டிருந்த அனில் குமார் எங்கள் இருவரையும் குழப்பமாய்ப் பார்த்தான். ''எங்கே போறீங்க?''

''என் பாட்டி பெங்களூரிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வர்றாங்க. அவங்களை சிரவணபெலகோலாவுக்கு பஸ் மாற்றி அனுப்பணும். துணைக்கு முரளியை அழைச்சிட்டுப் போறேன்...'' மஞ்சு லாகவமாய்ப் பொய் சொல்லி என்னை வெளியேற்றினான்.

வெளியே வந்ததும், ''இந்த அனில் ஒரு கழுத்தறுப்பு. அவனாலேயே நானும் ஒன்றரை வருஷமாய் நிர்வாண பூஜை பார்க்க முடியாமல் போய் விட்டது...'' என்று முணுமுணுத்தான்.

இருவரும் திட்டமிட்டபடி வீடு வந்தோம். வெய்யிலுக்கு எல்லோரும் உள்ளே பதுங்கி இருந்தனர். மஞ்சு ஓசைப் படாமல் பின்கட்டுக் கதவைத் திறந்தான். சரியாய்ப் பன்னிரண்டு. கூடத்துக்குப் பூனைகளாய் வந்தோம். இங்கிருந்தே வாசல் அறை உள்புறம் அடைத்திருந்தது தெரிந்தது.

மஞ்சு உயர ஸ்டூலைப் போட்டான். ''பார்த்து ஏறு!''

''ஏறினதும் தானே பார்க்க முடியும்!'' நான் ஜோக் அடித்ததை மஞ்சு கண்டுகொள்ளவில்லை.

இருவரும் ஒரே மாதிரியாய் ஸ்டூலில் நின்று அந்த உயர ஜன்னலில் கை வைத்தோம். புழுதியும் ஒட்டடையும் மூக்கை அடைக்கத் தும்மல் வரும்போல் இருந்தது.

மஞ்சு கவனமாய் ஒரு ஜன்னலைத் திறந்து விட்டான். 'கம்'மென்ற சாம்பிராணி வாசனை மூக்கைத் துளைத்தது.

மஞ்சு அவசர அவசரமாய்த் தலையை எம்பி ஜன்னல் கம்பியில் பதித்து அறையை நோக்கிக் குனிந்தான்.

அடுத்த கணம், ''பாரு நீயும்!'' என்று கூறிச் சட்டென ஸ்டூலை விட்டு இறங்கி விட்டான்.

ஆவலும் பரபரப்புமாய் நான் பார்க்க ஆரம்பித்தேன்.

அந்த சிறு அறை நடுவில் மூன்றடி உயரத்தில் நிர்வாண கோமதீஸ்வரர் சிலை இருந்தது. அதற்கு எதிரே, இழுத்து மூடிய புடவை அணிந்தவளாக வீட்டுக்கார அம்மாளும் அவர் மகளும் பயபக்தியுடன் தியானித்துக் கொண்டிருந்தனர்.

மெல்ல அந்த ஜன்னல் கதவை மூடிவிட்டு நானும் இறங்கினேன். மஞ்சுநாத் இன்னமும் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தான். சே! இதுதானா அந்த பூஜை! எவ்வளவு அசட்டுத்தனமாகக் கற்பனை பண்ணி விட்டோம் என்பதை நினைத்தாலே வெட்கமாயிருந்தது.

லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடருக்கு நன்றி!

சுவையான சாம்பார்
தயாரிக்க அதிக நேரமா ?
தேவையே இல்லை. இதோ...
லாலாவின் புதிய சுலபமுறை
சாம்பார் பவுடரால்
நொடியில் சுவையான
சாம்பார் நம் முன்னால்.

சாம்பாருக்குத் தேவையான
சகல பொருட்களும்
லாலாவுக்கே உரித்தான
முறையில் சரியான விகிதத்
தில் அடங்கியுள்ளன—புளி
உட்பட. ஊறவைத்து,
கரைத்து பிழியும் நேரமும்
மிச்சம்.

வேகவைத்த பருப்புடன்
லாலாவின் சாம்பார் பவுடரை
கலந்துவிட்டு - இரண்டு
கொதிப்பிற்குப் பின் அடுப்பி
லிருந்து இறக்கினால் மீண்டும்
மீண்டும் சாப்பிடத்தூண்டும்
சாம்பார் தயார்.

சமையலறையில் முடங்கிக்
கிடக்கவேண்டிய வேதனை
இல்லை. சந்தோஷமான
நேரத்திற்கும் குறைவு இல்லை.

மேலும் லாலாவின்
மசாலா பவுடர், ரசம் பவுடர்
மற்றும் மிளகாய்ப் பொடி
இவைகளும் கிடைக்கிறது.

லாலாவின் புதிய சுலபமுறை சாம்பார் பவுடர் நாவில் தங்கிடும் ருசி.

பாரம்பரிய சுவைக்கு —

ASP/LM/1334



இன்றைய ஸ்பெஷல் என்னவோ?



குமார் 'கேடரிங் இன்ஸ்டிட்யூட்'டில் படிக்கிறான். சாதாரண உப்புமா, வடை போன்றவைகளைச் சிறுசிறு மாற்றங்களுடன், புதிய பெயர் இட்டு ஐந்து நட்சத்திர ஓட்டலில் பரிமாறும் வேலைக்கு இந்தப் படிப்பு. வெளி நாட்டிலிருந்து சிலர் வந்திருக்கிறார்களாம்; அவர்களுக்கு ஒவ்வொரு மாணவரும் பழைய காலத்துத் தின்பண்டங்கள் செய்து கொண்டு போக வேண்டுமாம். குமாருக்குச் சொன்னது: 'தட்டை, பிட்டு'

''அம்மா! அம்மா! ப்ளீஸ். உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்,'' என்று கெஞ்சினான் குமார்.

''எனக்குப் பழக்கமே இல்லைடா. மறந்து போயிட்டது,'' என்று சொல்லியும் அவன் விடவில்லை.

''நாளைக்குக் காலை ஆறு மணிக்கே ரெடியாயிருக்கணும். மகாபலிபுரம் போகணும்,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

தட்டை செய்வதில் சிரமம் இருக்கவில்லை. புட்டு அரிசி மாவைக் குத்தி, வறுத்து, பிறகு ஆவியில் எடுத்து வெந்த பிறகு திரும்பவும் சலித்து...

அவன் அம்மாவுக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. உள்ளூரப் பெருமையும் ஏற்பட்டது.

விடிகாலையில், தாயார் தயாரித்த ஸ்பெஷல் ஐட்டங்களை எடுத்துக் கொண்டு குமார் புறப்பட்டுப் போனான்.

வீட்டுக்குத் திரும்பிய குமாரின் முகமெல்லாம் பிரகாசம். ''அம்மா, ரொம்பப் பாராட்டுக் கிடைச்சது. அது மட்டுமல்ல. பிரைஸ் கூடக் கொடுத்தாங்க.''

வேலைப்பாடு மிகுந்த அந்தக் கைப்பையை வாங்கிப் பார்த்த பாகீரதி மகிழ்ச்சியுடன் சிரித்தாள். ''தேவலை. அப்பா போட்ட வீட்டுக் கணக்கைக் காண்பித்துப் பையன் நிறைய மார்க் வாங்கின மாதிரி இருக்கிறது!''

குமார், ''ரொம்ப நன்றாயிருந்ததென்று எல்லோரும் சொன்னார்கள்,'' என்றான். ''மறந்து போகாமல் எப்படித்தான் பண்ணினாயோ!'

பாகீரதி மகனையே கூர்ந்து பார்த்தாள். 'இது மட்டும் இல்லை; ரொம்ப வருஷத்துக்கு முன்பு குடும்பம் சிரம தசையில் இருந்தபோது இதே பண்டங்களைச் செய்து வீடு வீடாக விற்றபோது, நீ கோபித்துக் கொண்டாயே, அதுகூட எனக்கு மறக்கவில்லை,'' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது; அடக்கிக் கொண்டாள்.

'தமயந்தி'

கிள்ள வேண்டுமென்று ஆசை

அந்த விபரீத எண்ணம் எப்படித் தன் மனத்தில் இடம் பிடித்தது என்று சிவதாணுவுக்கு ஆச்சரியமாயிருந்தது. இதை இப்படியே வளர அனுமதித்தால் என்ன ஆகுமோ என்று பயப்பட்டான்.

தெருவில் நடக்கும் போதும் பஸ்ஸில் போகும் போதும் அலுவலகத்தில் வேலை செய்யும்போதும் சினிமா பார்க்கும்போதும் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நிமிர்ந்து பார்க்கக் கூடாதென்று பல்லைக் கடித்துக் கொண்டு மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அப்படியும் கண்கள் அவனை மீறித் திரிந்து கைகள் பரபரத்தன. கவர்ச்சியான பெண் யாரேனும் தென்பட்டு விட்டால் விரல்களில் மசமசவென்று ஒரு நமைச்சல் ஏற்பட்டது.

வேண்டாம், வேண்டாம் இந்த விபரீத எண்ணம் என்று மனசுக்குள் துடித்தான். முதன் முதலாக எப்போது இந்த அக்கிரமமான ஆசை ஏற்பட்டது என்று யோசனை செய்து பார்த்தான்.

ஒரு வருடமாக இருந்து வருகிறது.

ஆமாம். அன்று நாடகம் பார்க்கச் சபாவுக்குப் போயிருந்த போது அது ஏற்பட்டது.

சபாவில் ஏகப்பட்ட கூட்டம். வழக்கமான சீட்டுகள் மொத்தமும் நிரம்பி, 'எக்ஸ்டிரா'வாகச் சில சாதா நாற்காலிகள் கொண்டு வந்து போட்டு, வருகிறவர்களை உட்கார்த்தி வைத்தார்கள்.

சிவதாணுவுக்கு நேர் முன்னால் ஒரு கூடை நாற்காலி போடப்பட்டு, சற்றே கொழுக் மொழுக்கான ஒரு பெண்ணை அங்கே உட்காரச் சொன்னார்கள்.

பழைய நாற்காலி. அவள் முதுகை அதிகம் மறைக்கவில்லை. முதுகு, விலா, பிட்டம் என்று அவளுடைய செழுமையான, சிவப்பான உடலின் ஒரு பகுதி பிதுங்கிக் கொண்டிருந்தது.

சிவதாணு கொஞ்சம் அசைந்தால் போதும்—அவன் கையோ காலோ அவள் உடம்பைத் தொட்டுவிடும்.

டி. டி.

அந்த அண்மை நிலை அவனை நிலைகுலைய வைத்தது. ஆடியன்ஸ் மொத்தமும் நாடகத்தின் ஜோக்குகளைக் கேட்டு ஹாஹ்ஹாவென்று விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்க, அவன் மட்டும் அந்தப் பெண்ணையே—பெண்ணின் உடம்பையே —உடம்பின் பகுதிகளையே—பார்த்த வாறிருந்தான்.

அப்போதுதான் அந்த வக்கிர மான துடிப்பு அவனுள் உதித்தது.

அவளை இடுப்பிலோ முதுகிலோ ஒரு கிள்ளுக் கிள்ளினால் என்ன என்ற ஆசைதான் அது! ஒரு கிள்ளு! ஒரே ஒரு கிள்ளு!

நேரமாக ஆக ஜுரம் மாதிரி அந்தத் தாபம் ஏறிக் கொண்டிருந்தது. விரல்களை மெல்ல நீட்டித் தொடக்கூடப் போய்விட்டான்.

அப்புறம்தான் ஏதோ ஒரு விவேகம் அவனைக் கட்டுப்படுத்தியது. ஏதாவது தப்பாகச் செய்யப் போய் நம் மானம், கௌரவம், குடும்பம், அந்தஸ்து எல்லாம் எப்படிக் குலைந்து போகும் என்ற ஞானோதயம் ஏற்பட்டது. வெகு கஷ்டப்பட்டுக் கண்களைத் திருப்பிக் கொண்டான்.

ஆனால் அந்த விபரீத எண்ணம் பிசாசு மாதிரி அவன் உள்ளத்தைப் பிடித்துக் கொண்டு மைல் கல் போல ஆழமாக உட்கார்ந்து கொண்டது.

இதேபோல், மூன்று மாதத்துக்கு முன்பு ஒரு நாள் பஸ்ஸில் ஒரு பெண் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள். பம்பாய்க்காரி போலிருக்கிறது. ஆண் பெண் பேதம் பார்க்கிற வகையில்லை. அவனுக்குப் பக்கத்து ஸீட் காலியானதும் நின்றிருந்தவள் டக்கென்று உட்கார்ந்து விட்டாள்.

அவன்தான் சிறிது நகர்ந்தானே தவிர, அவன் நகர்கிறானா நகரவில்லையா என்று அவள் பொருட்படுத்தவில்லை.

சிவதாணு வில்லிவாக்கத்திலிருந்து பாரிஸ் கார்னருக்குப் போக வேண்டியவன். நீண்ட தூரம். நீண்ட நேரம். நிமிடங்கள் செல்லச் செல்ல அவனுக்குள் வெறி ஏறலாயிற்று. அவளுடைய செழுமையான தொடை அவனை உராய உராய அவன் ஆவேசம் அதிகரித்தது. தனது தொடை மீது வைத்துக் கொண்டிருந்த கைக்கும் அவளுடைய தொடைக்கும் சில அங்குலங்களே இடைவெளி இருந்தது. சலவைக்கல் மாதிரி



மழமழவென்றிருக்கும் அவள் தொடையைக் கிள்ள வேண்டுமென்ற பரபரப்பு ஜன்னியாக உருவாயிற்று. எந்த நிமிடத்திலும் அந்த விபரீதத்தைச் செய்து விடுவோம் என்று தோன்ற, மார்பு தடதட வென்று அடித்துக் கொள்ள, சட்டைக்குள் வியர்த்துக் கொட்ட, முகத்தின் தசைநார்கள் இறுக—

எதுவும் நேருமுன்பு அவன் சடக்கென்று இறங்கிக் கொண்டு மீதி தூரத்தை நடந்தே சென்று விட்டான். பெரிய ஆபத்திலிருந்து தப்பிய மாதிரி வியர்வை வெள்ளமாய் வழிந்தது.

'இதென்ன பித்துக்குளித்தனமான மாறுதல் என்னிடம்! பைத்தியம் கித்தியம் ஏதாவது பிடிக்கப் போகிறதா எனக்கு?' என்று தன்னைத் தானே அதட்டிக் கொண்டான். ஆனால் நல்ல காலமாய், அலுவலகத்தில் எப்போதும் போல் வேலை பார்த்தான். மேலதிகாரி அவன் சுறுசுறுப்பையும் புத்திசாலித்தனத்தையும் பாராட்டும்போது, நாம் நார்மலாகத்தான் இருக்கிறோம் என்ற உறுதி ஏற்பட்டது.

அப்படியும் திடீர் திடீரென்று— இந்த விபரீத எண்ணம்!



"ஏண்டா சிவா என்னவோ போலிருக்கிறாய்?" என்று அம்மாகூட அடிக்கடி கேட்க ஆரம்பித்திருந்தாள். காலா காலத்தில் பிள்ளைக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட வேண்டும் என்ற தவிப்பு அவளுக்கு.

சிவதாணுவுக்குக்கூட அப்படியோர் எண்ணம் ஏற்பட்டதுண்டு.—மனைவி என்று ஒருத்தி வந்துவிட்டால் இந்த விபரீத எண்ணம் மறைந்து விடுமோ என்று. ஆனால், ஒரு பிரமோஷனுக்காக அவன் காத்திருந்தான். முன்னூறு ரூபாய் சம்பள உயர்வும் ஆபீசர் என்ற அந்தஸ்தும் கிடைத்தபின் கல்யாணம் செய்து கொண்டால் குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் நடத்த முடியும் என்பது அவன் கணக்கு.

ஆனால் திருமணத் திருநாள் வரு முன்பு ஜெயிலில் அடைபட வேண்டிய நாள் வந்துவிடுமோ என்று நடுங்கிக் கொண்டிருந்த சமயம்—

அவன் டெல்லிக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது.

அவனுக்குப் பதவி உயர்வு கொடுத்து, பயிற்சிக்காக ஒரு மாதம் டெல்லியில் இருக்கும்படி அவன் அலுவலகத்தில் அனுப்பி வைத்தார்கள். ஜாகை முதலான வசதிகளையும் ஆபீசிலேயே செய்து தந்தார்கள்.

பத்து நாளாயிற்று அவன் டெல்லிக்கு வந்து. இங்கே வகைவகையான பஞ்சாபிப் பெண்கள் அவன்மேல் இடித்துக் கொண்டு செல்கையில் சிவதாணுவின் பதைப்புப் பன்மடங்காயிற்று.

பதினொன்றாம் தினம், அவன் பயிற்சி பெறும் கட்டிடத்தின் ஏழாவது மாடியிலிருந்து லிஃப்டில் இறங்கிக் கொண்டிருந்த போது, ஐந்தாவது மாடியில் உள்ளே நுழைந்த இளைஞன்—

"அடே! சிவாவா!" என்றான்.

"ஹாய் லக்ஷ்மண்!" என்று அவன் கையைக் குலுக்குக் குலுக்கென்று குலுக்கித் தீர்த்தான் சிவதாணு.

எட்டு வருஷத்துக்கு முன்னால் கல்லூரியில் மகா நெருங்கிய தோழர்களாக விளங்கியவர்கள் அவர்கள். பின்னர் பாதைகள் எப்படியெப்படியோ பிரிந்து விட்டன.

தான் டெல்லி வந்திருக்கும் காரணத்தைச் சொல்லிவிட்டு, "நீ இங்கே என்ன பண்ணுகிறாய்?" என்று கேட்டான் சிவதாணு.

"நான் சைகாலஜியில் மேலும் மேலும் படித்துவிட்டு, இங்கே சைக்கியாட்ரிஸ்ட்டாகப் பிராக்டிஸ் பண்ணுகிறேன். டெல்லியில் பணக்காரப் பைத்தியங்களுக்குப் பஞ்சமே இல்லை," என்றான் லக்ஷ்மண்.

சிவதாணு யோசனையில் ஆழ்ந்தான். தன்னுடைய பிரசினையும் ஒரு சைக்கியாட்ரிஸ்ட் ஆராய வேண்டிய விஷயம்தானே...

"லக்ஷ்மண், உன்னோடு கொஞ்சம் பேச வேண்டுமே..."

"கொஞ்சமென்ன, நிறையவே பேசலாம் வா," என்று கூறிய லக்ஷ்மண் தன் லாட்ஜ் அறைக்கு அவனை அழைத்துச் சென்றான்.

அரை மணி நேரம் தன் மன உளைச்சலைக் கொட்டித் தீர்த்தான் சிவதாணு.

குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டே அறையின் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான் நண்பன். பிறகு சிவதாணு

வின் எதிரே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்தான்.

''லக்ஷ்மண், எனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று பயமாயிருக்கிறது...''

''பிடித்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.''

''லக்ஷ்மண்!''

''அமைதியாய்க் கேள். தீவிரமான எந்த உணர்ச்சியையும் மனசுக்குள் அழுத்தி வைக்கக் கூடாது. ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்தி விடுவது நல்லது. பிறகு அந்த ஆசை ஏற்படாது...''

சிவதாணு திடுக்கிட்டான். ''அதற்காக, எந்தப் பெண்ணையாவது நான் போய்த் தொடையில் கிள்ளவோ, பின்புறத்தில் தட்டவோ முடியுமா?''

லக்ஷ்மண் எழுந்து கொண்டு மறுபடி உலாத்தினான். பின்னர் நின்றான். தன் மேஜையைத் திறந்து பர்ஸை எடுத்தான். அதற்குள்ளிருந்து இரண்டு டிக்கெட்டுகளை வெளியே எடுத்தான்.

''கவனமாய்க் கேள். நாளை மாலை மேத்தா ஆடிடோரியத்தில் பிஸ்மில்லா கானின் ஷெனாய் கச்சேரி இருக்கிறது. அதற்கு நீ போகிறாய்.''

''எனக்குச் சங்கீதமே பிடிக்காது. அதுவும் ஹிந்துஸ்தானி சங்கீதமா!''

''குறுக்கே பேசாமல் கேள். எனக்கும் என் செக்ரட்டரி பிரதிபாவுக்கும் வாங்கிய டிக்கெட் இது. பிரதிபா இருபத்தைந்து வயதான, கவர்ச்சியான பெண். உனக்குப் பக்கத்து ஸீட்டில் அவள் வந்து உட்கார்ந்து கொள்வாள். அவளைப் பார்த்ததுமே உனக்கு வெறி ஏற்படுவது நிச்சயம். நீ அவள் தொடையில் கிள்ளலாம்!''

''லக்ஷ்மண்!'' அதிர்ச்சியுடன் கூவினான் சிவதாணு. ''நான் ஸீரியஸாகச் சொல்லுகிறேன். நீ ஏதோ ஹாஸ்ய நாடகம் மாதிரி பேசுகிறாய்!''

''நானும் சீரியஸாகத்தான் சொல்லுகிறேன்,'' என்று நிதானத்துடன் கூறினான் லக்ஷ்மண். ''நான் அவளிடம் சொல்லி வைக்கிறேன். நீ கிள்ளியதுமே அவள் வீல் என்று ஒரு கூச்சல் போடுவாள்.''

''ஐயையோ!''

''பதறாதே. எல்லாம் செட்டப். அந்த ஒரே கூச்சலில் உன் விபரீத எண்ணம் தெளிந்துவிடும்.''

''அது சரி. உதை? அவள் கூச்சலைக் கேட்டு என்னை மொத்தி விடுவார்களே எல்லோரும்!''

''பைத்தியக்காரனாக இருக்கிறாயே!'' என்று லக்ஷ்மண் சிரித்தான். ''தெருவிலே எவளோ ஒரு பெண்ணைக் கிள்ளு என்றா நான் சொன்னேன்? ஏன் என் செக்ரட்டரியை இந்த வேலைக்கு அமர்த்துகிறேன்? அவள் வீல் என்று கூச்சல் போடுவாளே தவிர, மறு நிமிடமே சிரித்து விடுவாள்—எல்லோரும் பார்க்கிற மாதிரி. ஏதோ பூச்சி பறந்து விழுந்த மாதிரி இருந்தது என்று சொல்லிச் சமாளித்துக் கொள்வாள். அதற்குள் அவள் போட்ட கூச்சலில் உனக்கு ஷாக் ஏற்பட்டு, அந்தப் பைத்தியக்கார எண்ணம், விபரீத ஆசை போய்விடும். இது ஒரு ட்ரீட்மெண்ட்தான், பயப்படாதே.''

சிவதாணு வெகு நேரம் தயங்கினான். ஆனால் இந்தச் சின்னப் பரீட்சைக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால், அசல் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டு அசல் அவமானமே பட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்ததும் ஒப்புக் கொண்டான்.

மேத்தா ஆடிட்டோரியத்தில் மிதந்து மிதந்து வந்தது ஷெனாய் நாதம். ஆனால் சிவதாணுவுக்குக் கொஞ்சமும் அதில் புத்தி செல்லவில்லை.

லக்ஷ்மணின் செக்ரட்டரி காலியாயிருக்கும் பக்கத்து சீட்டில் எப்போது



அட்டை வண்ணப்படம்: திலீப் பானர்ஜி

வந்து உட்காரப் போகிறாள் என்று காத்துக் கொண்டிருந்தான்.

அதோ!

நிஜமாகவே அருமையான அழகி! அவளுடைய கவர்ச்சி! வைத்த கண்ணை எடுக்கத் தோன்றவில்லை.

ஒயிலாக ஒசிந்து ஒசிந்து நடந்து வந்து அடுத்த நாற்காலியில் அவள் உட்கார்ந்து கொண்டாள். பஞ்சாபிக்காரி. கன்னம் மல்கோவா என்றால் தொடைகள் பட்டு மெத்தை. மார்பு அழகுக் குன்றுகள்.

அவனைத் தெரிந்து கொண்ட மாதிரி அவள் காட்டிக் கொள்ளவில்லை. காட்டிக் கொண்டால் ஷாக் இல்லாமல் போய்விடும் என்று லக்ஷ்மண் சொல்லியிருந்தான் போலும்.

வினாடிக்கு வினாடி சிவதாணுவின் ஜுரம் ஏறியது. கைகள் பரபரத்தன. அவள் மார்பைப் பார்த்து இவன் மார்பு அடித்துக் கொண்டது.

பயம் ஏற்பட்டது. ஆனால் லக்ஷ்மண்தான் தைரியம் சொல்லியிருக்கிறானே...

கையை நீட்டினான்.

அவள் பேசாமலிருந்தாள்.

தொடைமீது வைத்தான்.

அப்போதும் பேசாமலிருந்தாள். அல்லது ஷெனாய் இசையில் மெய்மறந்திருக்கிறாளோ?

தொடையை ஓர் அழுத்து அழுத்த எண்ணியபோது—

கதவின் அருகே நின்று லக்ஷ்மண் ஓடி வந்து நிற்பதும் கையை வேகமாய் ஆட்டி ஏதோ அவசரமாய்ச் சொல்ல முயலுவதும் தெரிந்தது. 'வேண்டாம்! வேண்டாம்!' என்று அவன் ஜாடை காட்டுவதைப் புரிந்து கொள்வதற்குள்—சிவதாணுவின் கை அவனையும் அறியாமல் இயங்கிவிட்டது. அந்தப் பெண்ணின் தொடையைப் பலமாய்க் கிள்ளிவிட்டான்.

அவள் வீலென்று கத்தி, குபுக்கென்று எழுந்து, பளீரென்று அவனை அறைந்து—

''அடி! உதை! குத்து!'' என்று பல பேர் சிவதாணுவைச் சூழ்ந்து கொண்டு உலுக்கினார்கள். எங்கிருந்தோ ஒரு போலீஸ்காரர் வந்து அந்தப் பெண்ணை விசாரித்தார்.

லக்ஷ்மண் ஓடிவந்து அவனைத்

தடுத்துக் கொண்டு, ''சிவா, இந்தப் பெண் என் செக்ரட்டரி இல்லை. அவள் வர முடியவில்லை என்று போன் பண்ணினாள். இவள் யாரோ ஓசிப் பாஸ்காரி. சீட் காலியாயிருப்பதால் உட்கார்த்தி வைத்தார்கள் போலிருக்கிறது! நீ ஏதாவது தப்பான பெண்ணிடம் வம்பு பண்ணிவிடப் போகிறாயே என்று ஓடிவந்தேன்...'' என்றான்.

''உதை! ராஸ்கல்! போடு தலையில்!'' என்று கும்பல் முன்னேறியது, இரண்டு பேரையுமே தீர்த்துக் கட்டிவிடும் ஆவேசத்துடன்.

திடீரென, ''இருங்கள்! இருங்கள்!'' என்று கத்தினார் போலீஸ்காரர். ''ஏய்! என்ன இது! வா என் பின்னாடி!'' என்று அந்தப் பஞ்சாபிப் பெண்ணை முரட்டுத்தனமாய் இழுத்துக் கொண்டு வெகு வேகமாய் மறைந்தார்.

மறுநாள் லக்ஷ்மணும் சிவதாணுவும் அந்தச் செய்தியை விழுந்து விழுந்து படித்தார்கள்.

'இசை நிகழ்ச்சியின்போது வெடிகுண்டு வீசப் பயங்கரவாதிகளின் சதி! கவர்ச்சிக் கன்னி கைது!' என்று தலைப்புப் போட்டிருந்தது. அந்தப் பெண் இரண்டு குண்டு எடுத்து வந்திருந்தாளாம். ஒரு 'மதறாஸ்' இளைஞன் அவள் மீது சந்தேகப்பட்டதால் அமளி ஏற்பட்டு அவள் மாட்டிக் கொண்டாளாம். செய்தி போட்டிருந்தார்கள்!

வெடிகுண்டு ஒளித்திருந்த இடம்?

நெஞ்சில்!

போலீஸ்காரர் தற்செயலாக அவள் மீது இடித்தபோது மென்மையாக இராமல் கடினமாக இருக்கவே சந்தேகப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, சோதனை போட்டு...

செய்தியைப் படித்துவிட்டு சிவதாணு சிலையாகி உட்கார்ந்திருந்தான்.

லக்ஷ்மண், ''நான் போலியாய் ஏற்பாடு செய்திருந்ததைக் காட்டிலும் இந்த அசல் அதிர்ச்சி வைத்தியமே மேல். இனிமேல் உனக்கு அந்த விபரீத எண்ணம் வராது,'' என்றான்.

சிவதாணுவுக்கும் அப்படித்தான் தோன்றியது.

ஷியாமா என்ன சொன்னாள்?

எஸ். சகுந்தலா

''சுமதி... ஏய் சுமதி...'' பாஸ்கர் அடித் தொண்டையில் எழுப்பிய கூப்பாடு அடுத்த தெருவுக்கே கேட்டிருக்கும்.

அண்ணனின் டெரீன் சட்டையைச் சோப்பு நுரையில் முக்கியெடுத்துக் கொண்டிருந்த சுமதி அதை அப்படியே விட்டுவிட்டுக் கை மறைத்த நுரையோடு முன் அறைக்கு வந்தாள்.

சலவையிலிருந்து எடுத்த சட்டையை அவள் முகத்துக்கு நேரே உதறி, ''நீ ப்ரெஸ் பண்ணியிருக்கிற லட்சணம் பார்த்தாயா? மடிப்பிலே இரும்புக் கறை. என்ன வேலை பார்க்கிறே?'' என்று அதட்டினான்.

அவள் தலை குனிந்தபடி, ''இது நான் துவைக்கலை. டோபிக்குப் போட்டது,'' என்று சமாதானம் சொன்னாள்.

அவனுக்கு மேலும் பற்றிக் கொண்டு வந்தது. ''அப்போ நீயானால் ரொம்பச் சுத்தமாக்கும்? உன் மூஞ்சியும் முகரக்கட்டையும்! சீ போ!''

கூச்சலைக் கேட்டுச் சமையல் கட்டிலிருந்து எட்டிப் பார்த்த அவன் தாய் முணுமுணுத்துக் கொண்டாள். ''ஏன்தான் தங்கச்சியைப் பார்த்தால் இவனுக்கு இப்படியொரு வெறுப்போ தெரியலை. இவனா இதுக்கு ஒரு கல்யாணம் காட்சி பண்ணி வைக்கப் போறான்? போய்ச் சேர்ந்த மகராசர் இந்தப் பெண்ணுக்கு ஒரு வழி பண்ணிட்டுப் போயிருந்திருக்கக் கூடாதா?'' அவள் தன் பாழ் நெற்றியில் அடித்துக் கொண்டு அடுக்களைக்குள் ஒடுங்கினாள்.

''அம்மா கொடுக்கிற செல்லம் தான் இவளுக்கு துளிர் விட்டுப் போச்சு...

திமிர் பிடிச்ச கழுதை,'' என்றவன், ''சுமதி...'' என்று மீண்டும் அதட்டல் போட்டான்.

சுமதிக்குக் காலையில் 8—9 டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட். அவசரம் அவசர மாய் டிரெஸ் செய்து கொண்டு தாவணி மடிப்பை நீவி விட்டுக் கொண்டே பயந்த வாறு எட்டிப் பார்த்தாள்.

''இங்கே லெண்டிங் லைப்ரரியிலே ருந்து வாங்கிவந்த புத்தகம் ஒன்று வைத்திருந்தேனே, எங்கே தொலைஞ்சது?''

''அது வந்து... நேற்றைக்கு என் இன்ஸ்டிட்யூட் ஃப்ரண்ட் ஒருத்தி வந்தாள்... அவள்தான் படிச்சிட்டுத் தர்றேன்னு எடுத்துப் போனாள். வந்து... ட்யூ டேட் இருக்கேன்னு...''

''அறிவு கெட்ட முண்டம்! யாரைக் கேட்டுக் கொடு...''

அதற்கு மேல் நாக்கே துண்டித்து விழுந்தாற் போல் வார்த்தை அறுந்து போய் விட்டதற்குக் காரணம்—

வீட்டு வாசலண்டை நின்று குறுகுறுவென்று அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாளே அந்தப் பெண்தான்.

சந்தனப் பூச்சிலேயே வடித்தாற் போன்ற கொழுவிய கன்னம், சற்றே சாய்ந்த தலைக் குனிவில் எடுப்பாய்த் தெரிந்த நாசி, தலையிலிருக்கும் ஒற்றை ரோஜாவுடன் போட்டியிடும் சிவந்த உதடுகள்...

பாஸ்கர் அசட்டுப் புன்னகை செய்தான்.

''சுமதி! பரவாயில்லை. அதெல் லாம் அப்புறம் பார்த்துக்கலாம். யாரோ வந்திருக்காங்க பாரு, அவங்களைக் கவனி.''

இப்படி அண்ணன் தொண்டை யில் தேன் தடவிப் பேசிச் சுமதி கேட்ட தில்லை.

''நான் சொன்னேனே, இவள் தான் என் ஃப்ரண்ட் ஷியாமா.''

''ஐ'ம் ஸாரி சார். இதோ உங்க புக். முதல் பக்கத்தைப் படிச்சதுமே நான் எப்பவோ படிச்சதுன்னு தெரிஞ்சது. அப்படியே கொண்டு வந்துவிட்டேன்,'' என்று புத்தகத்தை நீட்டியவள், ''ஸாரிடி சுமதி. என்னாலே உனக்குத் திட்டு, பாவம் என்றாள் ஒரு செயற்கை சோகத்துடன்.

பாஸ்கர் மேலும் அசடு வழிந் தான். ''நாங்க சும்மா விளையாட்டுக்கு அப்படித்தான் பேசிக்குவோம். சீரியஸா எடுத்துக்காதீங்க.''

பாஸ்கர் அப்போதே தீர்மானம் செய்து கொண்டான். இனிமேல் இந்த அழகி ஷியாமா தன்னைப் பாராட்டும்படி நடந்து கொள்ள வேண்டும்.


வர வர இந்த வீட்டில் கூச்சல் குறைந்து போய்விட்டதே! அம்மாவுக்குத் தான் மற்ற எல்லோரையும் காட்டிலும் மகிழ்ச்சி. அவள் தனக்குத் தானே பேசிக் கொள்வதும் இப்போது குறைந்து மறைந்து விட்டது.

ஷியாமா தன் தோழிக்காக மட்டும் வருவதாய் இருந்தால் காலை எட்டு மணிக்குப் பத்து நிமிடம் இருக்கும் போது தானே வரவேண்டும்? அங்கிருந்து டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் ஏழு நிமிடத் தொலைவில் இருந்தது. ஆனால் அவள் சில சமயம் ஏழு மணிக்கே கூட வந்துவிடுவாள்.

சுமதி தன் தாயாருக்குத் துணையாய்ச் சமையல் கட்டில் காய்கறி நறுக்கித் தரும் நேரம் அது. முன் ஹாலில் ஷியாமாவை வரவேற்க பாஸ்கர் காத்திருப்பான்.

உற்சாக உரையாடல்கள். சிரிப்புக்கள். பரஸ்பர நேசப் பார்வை மரிமாறல்கள்.

அன்றைக்கு ஒரு சாதாரண விஷயம் போல ஷியாமா சொன்னாள்:



கண்டக்டர்: ''சார்! உங்களுக்குத் தர வேண்டிய பாக்கி சில்லறை இல்லாததால் நீங்க இறங்க வேண்டிய ஸ்டாப்புக்கு இரண்டு ஸ்டாப் தாண்டி இறங்கிக்குங்க.''

—ஈ.கே. சுப்பிரமணியம்

''என் அண்ணன் எம்.எஸ்ஸியும் சி.ஏ.வும் ஒரே சமயத்திலே பாஸ் பண்ணிட்டான், தெரியுமில்லையா? கல்யாண மார்க்கெட்டிலே சும்மா கும்மென்று அவன் ரேட் ஓசந்து போச்சு. ஆனால் அவன், 'முதலில் ஷியாமாவுக்குக் கல்யாணம், பிறகுதான் எனக்கு'ன்னு சொல்லிட்டிருக்கிறான்....

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

ஷியாமாவை—எத்தனையோ இரவுகளில் அவளுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாய்க் கல்யாணக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறானே அந்த ஷியாமாவை—கைப்பிடிக்க வேண்டுமானால் அதற்கு முன்னால் சுமதிக்கு நல்லபடியாய் ஒரு கல்யாணம் செய்து வைத்தாக வேண்டும்....

அதன் பிறகு—

ஷியாமாவின் தலை தெரிந்தால் போதும், அவளுக்கு எதிரில் தங்கையிடம் அன்பும் அக்கறையும் பீறிட்டுக் கொண்டு வர ஆரம்பித்தன.

தங்கை சுமதியிடம் அப்படியொரு வெறுப்பைக் கொட்டிய அதே பாஸ்கர்தானா இவன்! உண்மையில் சுமதியிடம் அவனுக்கு ஒரு நன்றிப்பெருக்கு. அவளால்தான் ஷியாமாவின் நட்பே கிடைத்தது! அவளுக்காகத் தங்கையிடம் கரிசனம் காட்டியதுதானே அவர்களுடைய காதலையே வளர்த்தது? எத்தனை சீக்கிரம் ஷியாமாவைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள முடியுமோ அத்தனை சீக்கிரம் ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்குக் குறுக்கே நிற்கும் சுமதிக்கு முதலில் ஒரு வழி பண்ணியாக வேண்டும்.

மணமகன் தேவை விளம்பரப் பத்திகளை ஆராய ஆரம்பித்தான். தரகர்களைத் தேடி ஓடினான். தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லி வைத்தான்.

''ஹூம்... என் தங்கை பிறந்தப்பவே நான் ஒரு மாப்பிள்ளையைக் குறி வைத்திருக்கணும். இப்போ பாரு அவஸ்தை,'' என்று ஷியாமாவிடம் புலம்பினான்.

ஷியாமா தைரியம் சொன்னாள்: ''எங்க சுமதிக்கு என்ன குறைச்சலாம். டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் ஹையர். எக்ஸாம் ரிஸல்ட் இதோ வரப் போகுது. எனக்குத் தெரியும், நிச்சயம். ஃபஸ்ட் ராங்க்லே பாஸ் பண்ணப் போறாள். உத்தியோகம் கியாரண்டி. உலகம் தெரியாதவரா இருக்கீங்க. உத்தியோகம் பார்க்கிற பெண் வேணும்னு அவனவன் பேயா அலையறான், தெரியுமோ?''

''மைண்ட் யுவர் டங் ஷியாமா!'' போலியாகக் கோபித்துக் கொண்டான். பாஸ்கர். ''நான் அந்த மாதிரி பேய் இல்லை.''

''ஓ, ஸாரி! நான் உங்களைச் சொல்லலை.'' அவள் புன்சிரிப்பாய்ப் பூவாய்த் தலை குனிந்தாள்.

'பக்கத்து இலைக்குப் பாயசம்' என்கிற மாதிரி இந்த ஷியாமாவுக்குத்தான் சுமதியின் கல்யாணத்தில் எத்தனை அக்கறை! சுமதிக்கு ஒரு வேலை தேடிக் கொடுக்க எவ்வளவு ஆர்வம்!

என்னவோ தனக்கும் சேர்த்து உத்தியோகம் தேடுகிற மாதிரி அன்றாடம் பத்திரிகையில் 'வாண்டட்' காலத்தை அவளுடன் சேர்ந்து கொண்டு அலசுவாள். இரண்டு பேருமாய்ச் சேர்ந்து எங்கெங்கு விண்ணப்பங்கள் போடுவார்களோ, பாஸ்கரிடம் சொன்னதில்லை.

ஒரு நாள் அவன் ஆபீசிலிருந்து



சற்று முன்னதாகவே வீடு வந்து சேர்ந்த நேரத்தில்—இப்போதெல்லாம் முடிந்த வரை சீக்கிரமாய் வீடுவந்து சேரப் பார்க்கிறுன் ஸ்வீட் ஷியாமாவைச் சந்திப்பதற்காக—உற்சாகம் கொப்புளிக்க, "பாஸ்கர், முதல்லே உங்க சிஸ்டருக்குக் கன்கிராட்ஸ் சொல்லுங்க," என்ருள் ஷியாமா.

"என்ன விஷயம்?"

"டூ இன் ஒன்." கண் சிமிட்டிஞள் ஷியாமா. "போன ஸண்டே பேப்பரைப் பார்த்து இரண்டு இடத்துக்கு அப்ளிகேஷன் போடச் சொன்னேன் சுமதியை. ஒண்ணுதான் அவள் போட்டாள். இன்னொன்று அவளுக்காக நான் போட்டேன்."

அவள் நீட்டிய முதல் கவரைப் பிரித்துப் படித்துப் பார்த்ததும், "ஓ. நைஸ்! நிஜமாவே கன்கிராட்ஸ் சொல்ல வேண்டியதுதான். இது நல்ல கம்பெனிதான். இன்டர்வியூவுக்குக் கூப்பிட்டிருக்கான். வேலை கிடைக்கணும்," என்ருன்.

"அதைப் பற்றி நீங்க கவலையே படாதீங்க. எங்கண்ணுவோட கிளாஸ் மேட்தான் இந்தக் கம்பனியோட எம்.டி. அவரிடம் சொல்லியாச்சு. அடுத்த வாரம் இவள் கம்பெனி ஸ்டேனேவாகப் போருள். பை த வே, உங்கள் தங்கைக்காக நான் போட்ட அப்ளிகேஷனைப் பற்றிக் கேட்கலேயே? இதப் பாருங்க, பதில் வந்திருக்கு." அடுத்த கவரை நீட்டிஞள்.

அதைப் படித்ததும் முகமெல்லாம் பிரகாசமாஞன் பாஸ்கர். "இது அம்மாவுக்குத் தெரியுமா? ரொம்ப சந்தோஷப் படுவாங்களே? அம்மா... அம்மா!" என்று உற்சாகமாய்க் குரல் கொடுத்தான்.

"நான் இங்கதாம்மா இருக்கேன். அதென்னப்பா நான் சந்தோஷப் படக்கூடிய விஷயம்? என் மகளைப் பெண் பார்க்க யாரும் வரப் போருங்களா?" என்று ஒரு சோக இழைவுடன் கேட்டவள், "அதேதாம்மா," என்று பாஸ்கர் சொன்னதும் உடம்பெல்லாம் நிஜ சந்தோஷம் பரவ, "ஷியாமா, நிஜம் தானு?" என்று கேட்டாள்.

"ஆமாம் ஆன்ட்டி. அடுத்த புதன் கிழமை பெண் பார்க்க வரலாமான்னு கேட்டு எழுதியிருக்காங்க. பாவம், உங்க பிள்ளைக்கு ஆபீஸ் வேலை சரியா இருக்கு. அதான் அவருக்குப் பதிலா நானே உங்க பெண்ணுக்கு வரன் பார்த்தேன். எழுதிப் போட்டேன்." அந்த அம்மாவுக்குத் தெரியாமல் பாஸ்கரைப் பார்த்து குறும்பாய்ச் சிரித்தாள் ஷியாமா.

தொடர்ந்து காரியங்கள் மளமளவென்று நடந்தேறின.


பெண் பார்க்க வந்த மாப்பிள்ளைக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் சுமதியை வெகுவாகப் பிடித்துப் போய்விட்டது. "எல்லாம் சரிதான். நாங்கள் சீர்வரிசை, வரதட்சிணை எல்லாம்கூட அதிகம் எதிர்பார்க்கவில்லை. இந்தக் காலத்தில் ஒருத்தர் சம்பாத்தியத்தில் எப்படியம்மா குடும்பம் நடத்த முடிகிறது வசதியாக. என்னுடைய மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் உத்தியோகத்திலிருக்கிற பெண்ணைப் பார்த்துத்தான் செய்து வைத்தேன். சந்தோஷமாய் இருக்கிருர்கள். அப்படியே இவனுக்கு வருகிற பெண்ணும் சம்பாதிக்கிறவளாய் இருந்தால்..." என்று அவர் நீட்டிய போதே வாசலில் தபால்காரர் குரல் கேட்டது.

ஷியாமாதான் ஓடிப்போய் வாங்கிவந்து அந்தக் கவரைப் பிள்ளையைப் பெற்றவரிடம் கொடுத்தாள். சற்றுத் திகைப்புடன் கவரைப் பிரித்துப் பார்த்தவரின் முகம் மலர்ந்தது. "தேவலேயே. பெண்ணுக்கு அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர். நல்ல கம்பெனிதான். நல்ல போனஸ்கூடக் கொடுக்கிருர்கள். எப்படி? நாங்கள் அடியெடுத்து வைத்த நேரம் உங்கள் பெண்ணுக்கு வேலை கிடைத்திருக்கிறது!"

"ஏன், உங்கள் மருமகளுக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று சொல்லக் கூடாதா? உங்கப்பாவைச் சொல்லச் சொல்லுங்க சார்," என்று மாப்பிள்ளைப் பையனைச் சீண்டிஞள் ஷியாம.

மணப்பெண் போல் தலை குனிந்தான் அவன்.

பெற்ற தாயின் மனம் குளிரத்



தங்கைக்கு நல்லபடியாகத் திருமணம் முடித்து, புகுந்த வீட்டிலும் கொண்டு விட்டுவிட்டு பாஸ்கர் மன நிறைவுடன் திரும்பி வந்தான்.

வீட்டுக்குள் நுழைந்தவனுக்குப் பெருத்த ஏமாற்றம். சுமதி வீட்டில் இல்லாதது அல்ல; சுமதியைப் பார்க்க வரும் சாக்கில் அவனைப் புன்னகையால் வருடி, கண்ணால் கதை பேசுவாளே அந்த ஷியாமா இல்லாததுதான்.

ஒரு நாள், இரண்டு நாள், ஒரு வாரமும் ஆகிவிட்டது.

ஷியாமா வரவேயில்லை!

அன்றைக்குப் பொறுக்க மாட்டாமல், ''ஏம்மா, இப்பவெல்லாம் ஷியாமா நம்ம வீட்டுக்கு வர்றதே இல்லையா?'' என்று கேட்டான்.

''ஏன், இன்னிக்குக் கூட வந்தாளே! 'ஷியாமா, நீ செஞ்ச உபகாரத்தை என் ஜென்மத்துக்கும் மறக்கமாட்டேன்'னு சொன்னேன்.''

''அதுக்கு அவ என்ன சொன்னாள்?''

''நான் என்னம்மா பெரிசா செய்துட்டேன். என் சினேகிதிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன். அண்ணன் இப்போ தங்கையண்டை அன்பா ஆசையா இருக்கார் இல்லையா? அவளுக்குக் கல்யாணமும் முடிஞ்சாச்சு. உங்களுக்கு நிம்மதி தானே?'ன்னு கேட்டாள்.''

''அப்புறம் வேறே ஒண்ணும் சொல்லலியா?''

''நீ வந்தா இதைக் கொடுக்கச் சொன்னாள்.''

தாயார் நீட்டியது ஒரு கல்யாணப் பத்திரிகை.

பரபரப்புடன் பிரித்துப் பார்த்தான்.

ஷியாமா அவள் மாமா பையனுக்கு மனைவியாகப் போகிறாளாம்!

பாஸ்கருக்கு ஒரே கணத்தில் எல்லாம் புரிந்தது.

சுமதியை அவன் கரித்துக் கொட்டாமல் நல்ல வாழ்க்கை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றுதான் நாடகம் ஆடியிருக்கிறாள்!

குமுதம்
மதி:38 மலர்:41
18-7-85

ஒளி தெரிகிறது

அகாலி தளத்தினருக்காக அரசு சலுகை காட்டியது சிலருக்குப் பிடிக்கவில்லை. அந்தக் கட்சியின் முக்கியத் தலைவர்களை விடுதலை செய்தது தவறு என்றார்கள். சீக்கிய மாணவர் சம்மேளனத்தின் மீதிருந்த தடையை நீக்கியபோது குறை கூறினார்கள்.

கொலை, கொள்ளை, தீவைப்புப் போன்ற பயங்கரக் குற்றம் இழைத்தவர்களைத் தவிர மற்றச் சிறிய குற்றவாளிகளை மன்னித்து விடுவித்த போது முணுமுணுத்தார்கள்.

தவறிழைக்கும் சீக்கியர் மீது மேலும் மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர இரக்கம் காட்டக் கூடாது என்பது அவர்கள் கட்சி.

ஆனால், ஒருபுறம் எச்சரிக்கையாக இருந்தபடியே இன்னொருபுறம் மனிதாபிமானத்துடனும் இருப்பது என்ற அரசின் கொள்கைக்குப் பலன் கிடைத்திருப்பது கண்கூடு.

சான்று?

அகாலி தளத்தின் தலைமையில் நிதானப் போக்கு மலர ஆரம்பித்திருக்கிறது.

பயங்கரவாதிகளின் வன்முறைகளைத் தாங்கள் ஆதரிக்கவில்லை என்று லோங்கவாலும் அவர் நண்பர்களும் கூறியிருக்கிறார்கள்.

ஏர் இந்தியா விமானம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டதையும், டெல்லியில் வெடிகுண்டுகள் மூலம் ஒரு பாவமுமறியாத மக்கள் கொல்லப்பட்டதையும் அவர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

லோங்கவால் இந்து—சீக்கிய ஒற்றுமைக்கு ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார் என்று பிரதம மந்திரியே பாராட்டும் அளவுக்கு அவர்களிடம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

பஞ்சாபில் சகஜ நிலைமை ஏற்படுவதற்கான நிலைமை பிரகாசமாக இருக்கிறது என்று ராஜீவ் காந்தி சொல்லியிருக்கிறார்.

இந்தச் சூழ்நிலை நீடிக்குமானால், பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சி நீங்கி, தேர்தல்கள் நடைபெறுவதற்குத் தடையென்ன இருக்க முடியும்?

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் அச்சிட்டவர்: ஏ. பி. ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி. வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ். ஏ. பி. அண்ணாமலை. இணை ஆசிரியர்: ரா. கி. ரங்கராஜன். துணை ஆசிரியர்கள்: புனிதன்; ஜ. ரா. சுந்தரேசன்.

முகவரி: 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 600 010.


ஹெல்மெட் டிங்சார்! பகமறதியாக ஹெல்மெட் ாட்டுக்காம ாணுக் கூடத் பிச்சுக்க லாம்.
கையிலே கப்பரையா? ஹெல்மட்டா?
பூர்வாசிரமத்தில் இந்தப் பாண்டத் துக்குப் பெயர் ஹெல்மெட் தாயே.
என்னடா ஹெல்மெட் தலையிலே?
நீங்கதான் தினமும் நறுக் நறுக் குனு குட்டறீங் களே!

என்னவோ தனியாய்ப் பேசணும் என்று சொன்னாரே? ஆறு மணிக்குப் பாரதியார் சிலையாண்டை வரச் சொன்னாரே? இன்னும் காணோமே?

''ஹாய் வனிதா!''

''சீ போங்க ரமேஷ்! இப்படித் தான் காதண்டை வந்து கத்தறதா? பயந்தே போயிட்டேன்.''

''ஐயே, பயந்த மூஞ்சியைப் பாருங்கடா. ஆமா, அந்தச் செடிக்குள்ளே என்ன தேடிட்டிருந்தே?''

''இல்லே; என்னவோ தனியாய்ப் பேசணும்னு கூப்பிட்டாரே, ஆறு மணிக்குப் பாரதியார் சிலையண்டை வரச் சொன்னாரே, இன்னும் காணோமே, இங்கே ஏதும் பதுங்கியிருப்பாரோன்னு பார்த்தேன்.''

''ஐ'ம் ஸாரி. ஆறாயிட்டதா என்ன?''

''என்னமோ என் கடியாரத் திலே ஆறைத் தாண்டி...''

''கடலுக்குப் போயிட்டதா?''

''அறுவை ஜோக்கா? இத பாருங்க, நானும் பதிலுக்கு அறுத்தேன்னா தாங்க மாட்டீங்க.''

''ஐயையோ, வேண்டாமே. காலேஜிலே இந்தப் பூனையும் பால்

'தணிகை'

குடிக்குமான்னு இருந்தே. பீச்சாங் கரை யிலே சக்கைப் போடு போடறே?''

''நானென்றும் உங்களுக்காக ஏங்கிட்டிருக்கலே, ஒவ்வொருத்தி மாதிரி.''

''ஒவ்வொருத்தி மாதிரின்னா உதாரணமா ஒருத்தியைச் சொன்னா நல்லா ருக்கும்.''

''ஓகோ, லிஸ்ட் தயாராகிறதா? பரவாயில்லே. நீங்க என்னண்டை தனியாய் பேசினதை அந்தச் சீஃப் இஞ்சினி யர் பெண் பாவனா இல்லே, அவ பார்த்துட்டா. அவ என்னண்டை வந்து என்ன சொன்னாள் தெரியுமா?''

''ஏண்டி, அந்தக் குரங்கு வந்து உன்னண்டை எதுக்கு அப்படி இளிச்ச துன்னு கேட்டிருப்பா?''

''ஆனாலும் உங்களை நீங்க ரொம்ப உயர்வா மதிக்கிறீங்க.''

''ஏய்... ஏய், பார்த்தியா, வார்றியே?''

''நிஜத்தைச் சொல்லட்டுமா? 'வனிதா, நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரிடி. நாங்களா வலியப் போய்ப் பேசினாலும் முகத்தைத் திருப்பிக்கும். உன்னண்டை அவரா வந்து என்ன பேசினார்னு கேட்டாள்.''

''நீ என்ன சொன்னே?''

''என்னண்டை தனியா என்னமோ பேசணும்னு சொன்னார்ங்கற

நிஜத்தைச் சொல்லியிருந்தால், அங்கேயே பொறுமையிலே வெந்து சாம்பலாயிடுவாள் போலிருந்தது. பாடனி கிளாஸ் படு போர் இல்லேன்னு கேட்டார்னு சும்மா அளந்தேன்.''

''கரெக்டாத்தான் சொன்னே. நிஜமாகவே பாடனி படு போர் இல்லே?''

''ஓ.கே. அப்படிக் கடலோரமா உட்கார்ந்துக்கிட்டு அதைப் பற்றிப் பேசலாமா?''

''கிண்டலா? அதைப் பற்றிப் பேசத்தான் உன்னைத் தனியா வரச் சொன்னேனு?''

''வேற எதுக்கு வரச் சொன்னீங்களாம்?''

''ஹூம்...''

''ஐயையோ, என்ன இது பெருமூச்செல்லாம் விட ஆரம்பிச்சிட்டீங்க. முன்னுடியே தெரிஞ்சிருந்தா...''

''எனக்கு உன்னைப் பற்றின விவரமெல்லாம் சமீபத்திலேதான் தெரிஞ்சது. முன்னுடியே தெரிஞ்சிருந்தா...''

''முன்னுடியே தனியாப் பேசணும்னு சொல்லியிருப்பீங்களாக்கும்?''

''அதே. அதே. கரெக்டாய்ச் சொன்னே.''

''என்னைப் பற்றி என்னங்க? நான் என்ன பெரிய மில் முதலாளி மகளா? இல்லே, கோடிசுவர இண்டஸ்ட்ரியலிஸ்ட் வாரிசா? ஆஃப்டரால் ஒரு கணக்கப் பிள்ளைக்குச் சுமையாப் பிறந்தவள். தெரியுமில்லே?''

''அது மாத்திரமில்லே. உனக்கு மூணு சிஸ்டர்ஸ், ஒரு தம்பி. சிந்தாதிரிப் பேட்டை ஓட்டுக் குடித்தன வீட்டிலே ஜாகை. உங்க கம்யூனிட்டி ட்ரஸ்ட் உனக்குக் காலேஜ் பீஸ் கட்டுது.''

''ரொம்ப மெனக்கெட்டிருக்கீங்க. ஆமா, இதெல்லாம் தெரிஞ்சிட்டு என்ன பண்ணப் போறீங்க?''

''உங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கினவங்களைப் பழிவாங்கப் போறேன்.''

''என்ன ரமேஷ், திடீர்னு ட்ராக் மாறுது? எனக்கே தெரியாத புது நியூசெல்லாம் சொல்றீங்க?''

''உங்க அப்பா இன்னிக்குக் கணக்கப்பிள்ளை. அன்னிக்குத் தனராஜ் ஏஜென்ஸீஸ்னு கொட்டி முழக்கலே? பெரம்பூர்லே வீடு வாசலோட இருந்தவர்



தானே அவர்?''

''ரொம்ப டீப்பாய் போயிருக்கீங்க. ஏதோ அந்தக் காலத்திலே வசதியா இருந்ததாய் அம்மாகூடச் சொல்லுவாங்க. எனக்கு அதெல்லாம் நினைவில்லை.''

''நான் நினைவு படுத்தறேன், கேள். உங்கப்பா தனசேகர் கிராமத்திலே இருந்து சொத்து பத்தோடு மெட்ராஸ் வந்தார். இங்கே ராஜகோபால்னு ஒருத்தர். வெத்து ஆள். ஆனு பிஸினஸ் தெரிஞ்சவர். அவர் உங்கப்பாவை சிநேகம் பண்ணிக் கொண்டார். ரெண்டு பெரும் சேர்ந்துதான் ராஜகோபால்—தனராஜ் ஏஜென்ஸீஸ் ஆரம்பிச்சாங்க.''

''தெரியும். வியாபாரம் நொடிச்சுப் போச்சு. அப்பா தன் பங்கைப் பிரிச்சுக் கொடுக்கச் சொல்லி வாங்கிட்டுப் போயிட்டார். அப்பா சுழி, ஏதோ கணக்கப்பிள்ளையானுர்.''

''அட, அப்பாவி வனிதா, நீயுமா அதை நம்பறே? உங்க அப்பாவை வியாபாரம் நொடிச்சுப் போயிட்டதா நம்ப வச்சுத் தன் வாயாலே விலகிப் போறதாச் சொல்ல வச்சிருக்கார் அந்த எம்டன்.''

''ஏதோ பழைய கதை. அதெல்லாம் இப்ப எதுக்கு ரமேஷ்?''

''அதெப்படி விட்டுட முடியும்? நஷ்டப்பட்டதாய்க் கூட்டாளி சொன்னுரே, அந்த வியாபாரம் உங்கப்பா விலகிக் கொண்டதும் எப்படி ஓகோவென்று வந்தது? எப்படிப் புதுப் புது ஏஜென்ஸியெல்லாம் வந்து சேர்ந்தது? எப்படி என்.எஸ்.ஸி. போஸ் ரோடில் மவுண்ட் டிரேடர்ஸ் என்று மூன்று மாடிக்கட்டிடமாய் மலையாய் வளர்ந்தது? எப்படி அடையாறில் தனி பங்களா, குடும்பத்தில் தலைக்கு ஒரு கார் என்று பெருகியது?''

''அடேயப்பா, என்ன பேச்சுப் பேசிவிட்டீர்கள். இதே தொழிலாளர் கூட்டமாய் இருந்திருந்தால் சும்மா கைதட்டல் பொறிந்து தள்ளியிருக்கும். ரமேஷ், ஏதோ அந்த அங்கிளுக்குப் பணக்காரர் ஆகும் வித்தை தெரிந்திருக்கிறது. பணக்காரர் ஆகியிருக்கிறுர். என் அப்பாவுக்கு வித்தை தெரியவில்லை. கொத்தவால் சாவடியில் நாலு கடைக்குக் கணக்கு எழுதுகிறுர்.''

''இருக்கலாம் வனிதா. ஆனுல் அவர் கோடீசுவரர் ஆனதுக்குக் கை கொடுத்தவர் யார்? அவர் இந்த அளவுக்கு வளர மூலகாரணமாய் இருந்தவர் யார்? அந்த நன்றி விசுவாசம் கொஞ்சமாவது அவருக்கு இருக்க வேண்டாமா?''

''அதைப் பற்றி நீங்களும் நானும் எதற்காகக் கவலைப்படணும். நாம் கவலைப் பட வேண்டிய விஷயங்கள் வேறு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.''

''உங்களை மோசம் செய்த துரோகி வேறு யாரும் இல்லை. என் அப்பாதான்.''

''உங்கள் அப்பாவா!''

''ஆமாம். அவரைப் பழிவாங்கவே ஒரு திட்டம்.''

''ஓ.''

''ஐ'ம் ஸாரி. நடுவிலே கொஞ்சம் ட்ராக் மாறித்தான் போய் விட்டது. இல்லை? நீ சொன்ன மாதிரி மேடைப் பேச்சுப் பேசினதிலே தொண்டை வரண்டு போச்சு. அதோ அந்தக் காண்டீன் பக்கம் போய்க் கொஞ்சம் தொண்டையை நனைச்சுக்கலாம்னு பார்க்கறேன்.''


''நீங்க மட்டுமா?''

''யூ நாட்டி. அங்கே போறதே உனக்காகத்தான்.''

''உம்... கூச்சமாய் இருக்கு. கையை விடுங்க.''

''ஓ... ஸாரி. உட்கார். பேரர், இரண்டு பாஸந்தி, கட்லெட், பீச்மெல்பா... ஓ.கே. ரொம்ப ஸிம்பிள்.''

''ஓகோ, பார்ட்டி வைத்துத்தான் சொல்லணுமா?''



''யெஸ்! ஆரம்பத்திலே நீ என்னை ஒரு கேள்வி கேட்டியே, அதை இப்ப கேளேன்.''

''என்ன கேட்டேன்? ஞாபக மில்லே.''

''என்னை நீ கேட்டதே ஒரு கேள்விதான். அது எப்படி ஞாபகமில் லாமப் போகும்?''

''என்னை எதுக்குத் தனியா வரச் சொன்னீங்க?''

''வனிதா, அதோ பார், அந்த மூலையிலே ஒரு மூஞ்சுறு நம்மையே குறுகுறுன்னு பார்த்திட்டிருக்கே, அது நம்ம காலெஜ்தான், இல்லே?''

''ஐயையோ, சரியான வத்தி. நாளைக்கு அத்தனை பேரண்டையும் ஓதிடப் போகுது. அப்புறம் ஒளியும் ஒலியும்தான். வாரப் போறாளுங்க.''

''வனிதா, நீ மற்றவங்களுக் காகக் கவலைப் படறே. நான் உன்னை ஓபனாவே லவ் பண்ணப் போறேன்.''

''ஓபனான்னா?''

''எல்லோருக்கும் தெரியும்படி தான். நாம ரெண்டு பேரும் சினிமாவுக்குப் போகப் போறோம். இந்தப் பீச்சிலே சுத்தப் போறோம். ஓட்டல்லே உட்கார்ந்து சாப்பிடப் போறோம்.''

''வேண்டாங்க. எனக்குப் பயமா இருக்கு.''

''எதுக்குப் பயம்? இது முக்கியமா எங்கப்பா காதிலே விழணும்.''

''எனக்கு உங்க அப்பாவைப் பத்தித் தெரியாது. ஆனா நீங்க காரிலே வர்ற பெரிய இடம்னு தெரியும்.''

''அது மட்டுமில்லே. எங்கப்ப வுக்கு நான் ஒரே வாரிசு.''

''ஐயோ, உங்களை எப்படிப்பட்ட உயர்ந்த இடத்திலே கல்யாணம் பண்ணி



அட்டையில்:
சித்ரா, அவர் தம்பி ராஜு
நாய் பப்பி.
வண்ணப்படம்: உத்ரா

வைக்கணும்னு அவர் கனவு கண்டு கொண்டிருக்கிறாரோ?''

''கெட்டிக்காரிதான். ஜாடை யாய்க் கல்யாணத்தைப்பற்றிப் பேச் செடுக்கிறியே? யூ ஸீ. நாம ரெண்டு பெரும் சேர்ந்து சுத்தறது அப்பா காதிலே விழணும்.''

''எப்படி விழும் தெரியுமா? ஸ்காலர்ஷிப்பிலே படிக்கிற ஒட்டுக் குடித்தனத்திலே வாழற ஒரு தரித்திரத் தோடு உங்க பையன் ஊர் சுத்தறான்னு சொல்லுவாங்க.''

''ஏண்டா அப்படியா சங்க தின்னு எங்கப்பா என்னைக் கேட்பாரு. நானும் அதுக்காகத்தானே காத்திட்டிருக் கேன்.''

''காத்திட்டிருக்கீங்களா?''

''பின்னே? நான் என்ன சொல் வேன் தெரியுமா? 'இதோ பாருங்க டாட்' எனக்குக் கல்யாணம்னா அது வனிதாவோடுதான். இஷ்டமிருந்தா அவளைப் பண்ணி வையுங்க. இல்லே...''

''என் சொத்திலே சல்லிக் காசு உனக்குக் கிடையாது, நீ மாத்திரம் உன் முடிவை மாற்றிக்கலேன்னா.''

''என்னது இது, நீ வா போன்னு



''எங்க பாங்க்லே லாக்கர் வசதியோட பாத்ரூம் வசதியும் உண்டு!''

''எதுக்கு?''

''எண்ணெய் தேய்ச்சுக் குளிக்கிற வங்க பாங்குக்கு வந்து வைரத் தோடு மூக்குத்தியை பாங்க் லாக்கரிலே வச் சிட்டு குளிச்சப்புறம் திரும்ப எடுத்து போட்டுட்டு போயிடலாமே!''

—எம். பூங்கோதை.

மரியாதை இல்லாம?''

''இல்லேங்க. உங்க அப்பா அப்படி மிரட்டுவார்னு சொல்ல வந்தா...''

''அப்படிச் சொல்லவர்றியா? வாவா! இத பாரப்பா. உங்க சொத்துக்கு ஒரே வாரிசு நான். உங்களுக்குக் கொள்ளி போடப் பிறந்த பிள்ளை. இப்ப சொல்லுங்க. எனக்கு வனிதாவைக் கட்டி வைக்கப் போறீங்களா, இல்லே, நான் வீட்டை விட்டே வெளியே போய் விடட்டுமா?''

''என்னத்துக்கங்க, உங்களுக்குள்ளே அனாவசிய குடும்பத் தகராறு? வேண்டாங்க.''

''பூ... அதுக்குள்ளே காதல் தியாகியாகிடலாம்னு பார்க்கறியா? வனிதா, எனக்கு ஒரு லட்சியம் இருக்கு. அது நிறைவேறணும். இப்போதைக்கு உன் சொந்த டயலாக்கைக் கொஞ்சம் தள்ளிப் போடு. நான் வீட்டை விட்டு வெளியேறப் போறதாச் சொன்னதும் எங்கப்பா என்ன சொல்வார்? அதைச் சொல்லு.''

''எனக்குத் தெரியலே.''

''அட, சினிமாவிலே பார்த்ததில்லே? இறங்கி வருவார். கெஞ்சுவார். 'வேண்டாம் ரமேஷ். அந்தப் பெண்ணை மறந்துடு. அதுக்காக நான் எது வேணு செய்ய தயார். எவ்வளவு வேணுமானாலும் கொடுக்கத் தயார்'னு சொல்ல மாட்டாரா?''

''சொல்றதாகவே வச்சுக்குவோம். நீங்க என்ன சொல்லுவீங்க?''

''வனிதா, நான் அந்தப் பேரத்தைத்தான் எதிர்பார்க்கிறேன். அத்தனை சுலபமா பதில் சொல்ல மாட்டேன். யோசிக்கறதுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கன்னு கேட்பேன்.''

''அவகாசமா? எதுக்கு?''

''அவர் மனசிலே ஒரு பயத்தை உண்டாக்கணும். எவ்வளவு வேணுமானாலும் கொடுக்கத் தயார்னு சொன்னார் இல்லையா? அதுக்கு அவரைத் தயார் படுத்தணும்.''

''எதுக்கு? பணத்தைக் கொடுக்கிறதுக்கா?''

''பின்னே? அதுதானே என்

லட்சியமே.''

''எது? பணம் வாங்கறதா?''

''ஆமாம். ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால் சரிப்படுத்தலாம்னு சொல்வேன்.''

''எதுக்குங்க? இருக்கிற சொத்தெல்லாம் உங்களது. எதுக்காக ஒரு லட்ச ரூபாயை இப்போது பிரித்து வாங்கணும்?''

''வனிதா, எல்லாம் உனக்காகத் தான். உன் குடும்பத்துக்காகத்தான்.''

''ரமேஷ், நீங்க சொல்றது புரியலே.''

''வனிதா, மனிதத் தன்மையில்லாமல் என் அப்பா செய்த துரோகத்துக்கு அவர் அபராதம் செலுத்தியாகணும். அவரண்டையிருந்து அதை வசூல் பண்ணி உங்களண்டை ஒப்படைக்கறதுக்கு இது தான் வழி.''

''ஓ.கே. நீங்க எப்படியோ அந்த ஒரு லட்ச ரூபாயை அபராதமாக வசூல் பண்ணி என்னண்டை ஒப்படைச்சாச்சு. அப்புறம்?''

''நீயும் உன் குடும்பத்தாரும் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு எவ்வளவோ சந்தோஷமாய் வாழலாமே? உங்களுக்கு வசதி வந்துவிட்டால் நல்ல இடத்திலே உனக்குக் கல்யாணம் கூடுமே?''

''நீங்களும் உங்களுக்குப் பிடித்த இடத்திலே பெரிய இடத்திலே பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோஷமாய் இருக்கலாம்.''

''என் சந்தோஷத்தை விடு. இப்போதைக்கு உன் சந்தோஷம்தான் எல் லட்சியம்.''

''லட்சியமா? இதுக்குப் பேர் லட்சியமா?''

''வனிதா என்ன எழுந்து போறே.''

''எனக்குக் காதல் தான் வேண்டும். காதலர்போல் நடித்து உங்களிடம் லட்சங்களை சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படிப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்றால் அதற்கு நீங்கள் தேவையில்லை. உங்களை விடவும் வசதியானவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நான் அந்த ஜாதி இல்லை. வருகிறேன். குட்பை.''

பு(து)த்தகம்

■ அறவிளக்கு அரசர் முத்தையா (டாக்டர் ஆறு. அழகப்பன் —பக். 168 —ரூ. 8 —வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை 600 017)

வாழ்க்கை வரலாறும், கருத்துக்களும்.

■ ஸ்ரீ ரமண வழி —முதல், இரண்டாம் பாகங்கள் (மூன்றும் பதிப்பு —ஸ்ரீ சாது ஓம் —பக். 468 —ரூ. 36 —ஸ்ரீ அருணசலரமண நிலையம், 11B, மணக்குள விநாயகர் தெரு, ஸ்ரீ ரமண நகர், திருவண்ணுமலை 606 603)

ரமணரின் உபதேசங்களை அவர் வாக்காகப் படிப்பது ஓர் ஆனந்தம். ரமண போதனைகளில் திளைத்த ஒருவர் விளக்கம் சொல்லி, ஒப்பிட்டு, ஆராய்வதைப் படிப்பது இன்னொரு வகை ஆனந்தம்.

■ உங்களுக்கென ஒரு வேலையைப் பெறுவது எப்படி (பிரம்மானந்தம் —பக். 96 —ரூ. 6.50 —அநுராகம்)

வேலை சம்பாதித்துக் கொள்வது, தொழில் நடத்துவது இவற்றுக்கு உதவக் கூடிய யோசனைகள்.

■ துன்பம் நீக்குவோம் துணிந்து முன்னேறுவோம் (பிரம்மானந்தம் —பக். 84 —ரூ. 6 —அநுராகம்)

மனத்தைச் செம்மைப் படுத்திக் கொள்ள வழி சொல்லித் தரப்படுகிறது.

■ குடும்ப நலம் (பிரம்மானந்தம் —பக். 120 —ரூ. 8 —அநுராகம்)

குடும்பப் பிரசினைகளைச் சமாளிப்பது எப்படி?

■ நினைவாற்றல் தரும் வெற்றிகள் (பிரம்மானந்தம் —பக். 104 —ரூ. 7 —நான்கு புத்தகங்களும்: அநுராகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி.நகர், சென்னை 600 017)

ஞாபகசக்தியை வளர்த்துக் கொள்ள உதவும்.

1985 ஜூன்

முதலில்லாமல் பணம் சம்பாதிப்பது எப்படி?

(கந்தகிரிதாசன் —பக். 112 —ரூ. 7.50 —ஸ்ரீ இந்து)

சைக்கிள் பாதுகாப்பு; குப்பைப் பேப்பர் வியாபாரம், டியூஷன்—இப்படிப் பல யோசனைகள்.

சகுனங்களும் பலன்களும்

(இரண்டாம் அச்சு —கந்தகிரிதாசன் —பக். 64 —ரூ. 4 —ஸ்ரீ இந்து)

சகுன விளக்கம்.

ஆஞ்சநேய புராணம்

(இரண்டாம் அச்சு —எம். நாராயண வேலுப் பிள்ளை —பக். 152 —ரூ. 8 —மூன்று புத்தகங்களும்: ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், 2, முத்துக்கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை 600 017)

அனுமன் வரலாறு. துதிப் பாடல்களுடன்.



நேரு இந்திரா ராஜீவ்

(பி.சி. கணேசன் —பக். 344 —ரூ. 24 —வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை 600 017)

ஒரு குடும்பத்தோடு சேர்ந்து வளர்ந்த தேசத்தின் கதை.

தொன் போஸ்கோ

(கே.ஆர். வாசுதேவன் —பக். 80 —ரூ. 6 —பூரம் பப்ளிகேஷன்ஸ், 6, ஜம்புலிங்க நாயக்கர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034)

அனாதைச் சிறுவர்களுக்கு அடைக்கலம் அளித்துப் பேணி வளர்த்த துறவியின் கதை.

இளைஞர்களுக்கான பாலியல் விளக்கங்கள்

(ஷீபா ஸாலமன் —பக். 118 —ரூ. 8 —நர்மதா)

செக்ஸ் சம்பந்தப்பட்ட சில கேள்விகளுக்கான பதில்கள்.

இந்து சமய பண்டிகைகள்: வழிபாட்டு முறைகள்

(இரண்டாம் அச்சு —சியாமளா ராகவன் —பக். 96 —ரூ. 7 —இரண்டு புத்தகங்களும்: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை 600 017)

நைவேத்ய பிரசாதங்களின் தயாரிப்பு முறைகளும் தரப்பட்டுள்ளன.

திருக்குறளாரின் சிந்தனைகள்

(வீ. முனிசாமி —பக். 136 —ரூ. 9.50 —திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணு ரோடு, தி.நகர், சென்னை 600 017)

மேடைப் பேச்சுக்களிலிருந்து சுவையான பகுதிகள்.

குமருகளின் குரல்வளையை நெரிக்கும் வரதட்சணைப் பேய்

(பி.ஏ.ஏ. —பக். 60 —ரூ. 5 —குட்வில் பப்ளிஷர்ஸ், 5, அப்பாவு கிராமணி சந்து, ஏல்லிஸ் சாலை, சென்னை 600 002)

வரதட்சணை வழக்கத்தைச் சாடுகிறது.



அண்ணி



அண்ணன் இறந்துவிட்டார்—முதலாளி—தொழிலாளி மோதலில், அண்ணனின் உடன்பிறப்புக்களே—எவ்வளவு பெரிய உடன்பிறப்புக்கள்!—தன் மகன்களாகப் பராமரிக்கிருள் அண்ணி. அவளுடைய அன்புக் கோட்டையைத் தம்பிக்கு வாய்க்கும் பணக்கார மனைவி உடைத்துத் தள்ளுகிருள். சதிமேல் சதி. பழைய அவல். ஆனல் மெல்லுவதற்குச் சம்பவங்கள் இரண்டொன்று தட்டுப்படுகின்றன.

இரண்டு குழந்தைகளையும் மூன்று சகோதரர்களையும் உட்கார வைத்து மெயில் வேகத்தில் இட்டிலி படைக்கும் சுறுசுறுப்பு; ஜெய்சங்கர் இறந்த பிறகு அதே மாதிரி டிபன் பரிமாறும்போது நால்வருக்கும் பரிமாறிய பிறகு ஐந்தாவதாக ஜெய் உட்காரும் இடத்தில் இட்டிலி வைக்கப் போய்க் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளும் சோகம்; வீட்டு நிர்வாகத்தைத் தீபா தந்திரமாய்க் கைப்பற்றிக் கொண்டு, 'குழந்தைகள் செலவுக்கு வேணுமானல் பத்து ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்,' என்று நீட்டும்போது, 'வேண்டாம்மா என் குழந்தை அப்படி எனக்கு ஏதும் செலவு வைக்காது. அதையும் நீயே வைத்துக் கொள்,' என்று திருப்பித் தரும் விரக்தி—சின்னச் சின்ன உணர்ச்சிகளில் சரிதா மின்னுகிருர்.

குதூகலக் குடும்பமாக இருந்தபோது தெரியும் செயற்கையான உற்சாகம், ஜெய்சங்கரின் மறைவுக்குப் பிறகு சிறிது யதார்த்தத்துக்கு வருகிறது. குறிப்பாக, தீபாவின் திருமணத்திற்குப் பிறகு தான்.

கதாநாயகி போலிருந்த தீபாவை, கபாலென்று பிளேட்டைத் திருப்பிப் போட்டு வில்லியாக்கிவிடுவது அநியாயம்.

அவர் சவால் விடுவதும், அதைத் தொடர்ந்து அவர் மேற்கொள்ளும் தரக் குறைவான நடவடிக்கைகளும் படத்தின் மதிப்பை ரொம்பத்தான் இறக்கிவிட்டன.

உடன் பிறவாத தம்பியான டில்லி கணேஷ், அபவாதம் வரும்போது அண்ணியிடம் சமாதானம் சொல்லுவதும் துடிப்பதும் தேவலாம்.

வினு சக்கரவர்த்தி வில்லன்; அவருக்குக் காரியதரிசி ஜனகராஜ். வினு சக்கரவர்த்தி ஓரொரு தரமும் முக்கிய வார்த்தை வராமல் 'இது' போடுவதும் காரியதரிசி ஜனகராஜ் அந்த 'இது'வுக்குப் பொருத்தமான விளக்கம் எடுத்துத் தருவதும் நல்ல இது.

ரோகிணிக்கு முகவெட்டுடன் உணர்ச்சிவசப்படவும் தெரிந்திருக்கிறது.

ஆயிரம் தான் இருந்தாலும் மோகன் அண்ணியைத் தொட்டுத் தடவி—அந்த அன்னியோன்னியம் கொஞ்சம் ஓவர் தான்.

ரொம்ப காலத்துக்கு முன்னல் வந்த படத்தை இப்போது போய்ப் பார்க்கிற மாதிரி இருக்கிறது.

அவள் வெள்ளைச் சிரிப்பும், மதர்த்த கறுப்பு உடம்பும், கொஞ்சலும் கோபமும் ஆசையும் அக்கறையும் க்ஷண நேரத்துக்கு...

''என் ஞாபகமா ஊருக்கு என்ன எடுத்திட்டுப் போறீங்க?'' என் மனைவி சாந்தா கேட்டாள். என் எல்லா வெளியூர்ப் பிரயாணங்களின்போதும் இந்தக் கேள்வி கேட்பது அவள் வழக்கம். மனைவியை நினைத்துக் கொள்ளப் பொருட்கள் ஏதும் எனக்கு அவசியமில்லை: இனிமையான, ரகசியமான நினைவுகள் ஏகமாய் உண்டு மனசில். எனினும் இந்தக் கேள்வியை, மனைவியின் எதிர்பார்ப்பை, நான் அலட்சியப் படுத்துவதில்லை. வெளியூரில் வேலைகளுக்கு நடுவே நிஜமாகவே அவளுடைய பொருட்கள் எனக்குக் கிறக்கமான இதமான நினைவுகளைத் தருவதுண்டு.

''சொல்லுங்க, என்ன எடுத்திட்டுப் போறீங்க என் ஞாபகமா? இந்தச் சீப்பு எடுத்துக்கிட்டுப் போறீங்களா?'' கொஞ்சினாள்.

''லேடீஸ் சீப்பு வேணும்டா. படியத் தலைவார முடியாது''

''என் தலைகாணி கொண்டு போறீங்களா?''

''ஏற்கனவே பெட்டி பிதுங்குது. போஃம் தலைகாணி எதுக்கு? சின்னப் பொருளா கொடு.''

''என் பவுடர்?''

''எனக்கு ஒத்துக்கலை. பொரி பொரியா வருது.''

''என்னோட உயர டம்ளர்? தினம் நடுராத்திரி தண்ணி குடிப்பீங்க இல்லை? தேவைப்படுமே?''

''ஓட்டல்லே டம்ளர் இருக்குமே, சாந்தா?''

''எச்சில் டம்ளர் எதுக்கு? என்னுது எடுத்திட்டுப் போங்க. டிபன் சாப்பிடறபோது கூட இதையே உபயோகப்படுத்துங்க.''

உயரமாய் விளிம்பில்லாமல் உறுதியான பளபளக்கிற எவர்சில்வர் டம்ளரை எடுத்து வந்தாள். இது சாந்தா ஆசையாய் வாங்கிய டம்ளர்.

''வைக்க முடியுமா பெட்டியிலே?''

''நான் வெச்சுத் தரேன்.''

பிதுங்கின பெட்டியை மறுபடி அமுக்கி, சட்டை பேண்ட்டுகளுக்கு நடுவே பளபளக்கிற டம்ளர் அமைதியாய்ப் படுத்துக் கிடந்தது.

ரயிலேறிப் பதினைந்து நாள் வெளிப்புறப் படப்பிடிப்புக்காக விசாகப்பட்டினம் வந்து பெட்டியைத் திறந்து லுங்கி உடுத்த எடுத்தபோது முதலில் டம்ளர்தான் கண்ணில் பட்டது. எடுத்து தலைமாட்டில் வைத்துக் கொண்டேன்.

கூடவே வந்து, என் அறையில் தங்கிய, என் மாதிரியான இன்னொரு அஸிஸ்டெண்ட் டைரக்டர், ''என்ன பாலு, டம்ளர் எல்லாம் எடுத்தாந்திருக்கே?'' என்று கேட்கையில், இது என் இனிய மனைவியின் நினைவாக என்று பதில்

பாலகுமாரன்



சொல்ல முடியவில்லை.

''ஓட்டல்லே கண்ட டம்ளர் தருவான். எதுக்கு அதெல்லாம்? என் உபயோகத்துக்குன்னு வச்சிருக்கேன். நீங்க ஏதாவது ஊத்தி இதுல குடிச்சிடாதீங்க, ப்ளீஸ்!''

''அப்போ தட்டும் எடுத்தாந் திருப்பீங்களா? சாப்பாடு, டிபன் சாப்பிட எல்லா இடத்துக்கும் தட்டு டம்ளரைத் தூக்கிட்டுப் போவீங்களா?''

நான் தட்டு எடுத்து வரவில்லை. கேள்விக்கு மௌனமாய் இருந்தேன்.

யூனிட் மொத்தத்துக்கும் ஆள் வைத்துத் தனிச் சமையல். சைவம் அசைவம் என்று தனித்தனிப் பந்தி. யூனிட்காரர்கள் மட்டும் சாப்பிட ஓட்டல் பின்புறம் ஷாமியானா எழுப்பித் தனி இடம். எனக்கு என்கூடவே தனி டம்ளர். உயரமாய், பளபளப்பாய், விளிம்பு இல்லாத கல்கத்தா டம்ளர். என் மனைவி

யின் நினைவாக எவர்சில்வர் டம்ளர்.

''ஓட்டல் டம்ளர் எச்சிலாம். தட்டு எச்சில் இல்லையாம்.'' சாப்பிட உட்காருகிறபோதெல்லாம் யூனிட்டில் கேலி செய்தார்கள்.

''ஸ்பூன் எச்சில் இல்லையா?'' என்று விவாதித்தார்கள்.

''வீட்டிலேர்ந்து வாஷ் பேஸின் கம்மோடு எல்லாம் கொண்டாந்துடறது தானே உனக்குன்னு? ஓட்டல் கம்மோடு உட்காரலாமா நீ?'' வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் வாரிக் கொண்டார்கள். வெடிச் சிரிப்பு சிரித்தார்கள்.

'அதெல்லாம் இல்லை. இந்த டம்ளர் என் மனைவியின் நினைவாக,' என்று சொன்னால் போதும், யூனிட் முழுக்க எழுந்து நின்று வழித்துக் கொண்டு சிரிக்கும்.

''அவங்க புடவையை எடுத்தாந்திருக்கணும் பாலு நீ. சுகமா போத்திக்கிட்டுத் தூங்கலாம் ராத்திரி.''

''புடவை போத்திக்கிட்டு என் பக்கத்திலே தூங்கின ராத்திரி என்ன ஆகும் ஏது ஆகும்னு நான் காரண்டி தர முடியாது. ஒரு வெறியிலே ஏதாச்சும் நடந்துடலாம்.''

சிரிப்பார்கள்.

''அப்போ வீட்டு அம்மாவோட ப்ரேஸியர் எடுத்தாந்துரு. கைக்கு அடக்கமா!''

மறுபடி சிரிப்பார்கள்.

நான் இந்தக் கேலிச் சிரிப்புக்களை வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

அவரவர்க்கு அவரவர் மனைவியைப் பிடிக்குமெனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளுதல் அசிங்கம். மனைவி நினைவாக வெளியூருக்கு டம்ளர் எடுத்துவருவது பெரிய நகைச்சுவை விஷயம்.

ஆனால் டம்ளரைப் பார்க்கிற போதெல்லாம் சாந்தா நினைவு வரத்தான் செய்தது. சாப்பிடும்போது புரைக் கேறிற்று. அவள் வெள்ளைச் சிரிப்பும், மதர்த்த கறுப்பு உடம்பும், கொஞ்சலும் கோபமும், ஆசையும் அக்கறையும் க்ஷண நேரம் மின்னலிட்டுத்தான் மறையும். வீடு பிரிந்து வெகு தொலைவில் உழைக்க வருகிற போது என் வீடு, என் மனைவி, என் குழந்தைகள் அவர்களுக்கு உண்டே இந்த உழைப்பு என்கிற எண்ணம் பரம சுகம். பெரிய உற்சாகம்.

நான் அந்த எவர்சில்வர் டம்ளரை சுண்டிச் சப்தம் ரசித்தேன். யாரும் பார்க்காத போது சில்லென்று கன்னத்தில் அழுத்திக் கொண்டேன். 'மனைவி அமைவதெல்லாம்' என்று விசிலில் பாடினேன். கூட இரண்டு பிடி சாப்பிட்டேன். கூட இரண்டு முறை தண்ணீர் குடித்தேன்.

வேலைகள் உசிரமாயின. அலையல் அதிகம் இருந்தது. ஒவ்வோர் அங்குல பிரேமையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. கன்டின்யூடி, வசன உச்சரிப்பு, காட்சி துவக்கம், முடிவு, தொடர்பு என்று நிறைய மனசில் வைத்துக் கொள்ள விஷயங்கள் சேர்ந்தன. விவாதங்கள் நடந்தன. லட்ச லட்சமாய்க் காசு போட்டு எடுக்கிற படத்துக்கு யூனிட்டில் அத்தனை பேரும் பேயாய் உழைக்க வேண்டியிருந்தது. சினிமா ஒரு டைம் ஓர்க். காசு நேரம் மாதிரி செலவழிந்தது. நேரம் காசாய் இருந்தது.

மூன்றாம் நாள் என் டம்ளர் காணாமல் போயிற்று.

எங்கே வைத்தேன் என்பது மறந்து போயிற்று. சுற்றிச் சுற்றி ஓட்டல் முழுவதும் தேடியும் கிடைக்காமல் போயிற்று. யாரையும் நிறுத்தி விசாரிக்க முடியவில்லை. எல்லோருக்கும் வேலைகள் இருந்தன. கவலைகள் இருந்தன. என் டம்ளரைவிட அதிமுக்கியமான ஆயிரம் விஷயங்கள் இருந்தன. எனக்கும் என் வேலைகள் இருந்தது. அப்புறம் தேடிக் கொள்ளலாம் என்று கவலைப்பட்டே நாலு நாட்கள் ஓடிவிட்டன.

நாலு நாள் கழித்து, தூறல் ஆரம்பித்து ஓட்டலிலிருந்து லொகேஷன் கிளம்பச் சுணக்கம் ஏற்பட்ட ஒரு சூழ்நிலையில் என் டம்ளரைப் பற்றி விசாரித்தேன்.

''டம்ளர் காணோமா? பீடையே போச்சு விடு!'' மேக்கப்மேன் பதில் சொன்னான்.

என் மனைவியைப் பீடையென்று சொல்ல இவன் யார்? என்னுள் கோபம் எழுந்தது. ஆனால் அந்த டம்ளருக்கும் என் மனைவிக்கும் உள்ள சம்பந்தம் அவனுக்குத் தெரிய நியாயமில்லை.

''ஏமி டம்ளரு? இதா, இதா...'' நான் தயங்கித் தயங்கிக் கேட்டதும் ஓட்டலைக் கூட்டிப் பெருக்குகிற பெண் என் டம்ளர் தவிர விதம் விதமாய் வெவ்வேறு டம்ளர்கள் காட்டினாள்.

அக்கறையோடு ஓட்டல் முழுவதும் என்னை அழைத்துக் கொண்டு தேடினாள். ஓட்டல் புத்தகங்களைப் புரட்டி எடுத்தாள். உயரக் கை தூக்கித் தேடுகையில் அழகாக இருந்தாள். 'வேற வாங்கிடேன்' என்றாள். 'டம்ளர் கடை எங்கே இருக்கு?' என்று தெலுங்கில் தடுமாறிக் கேட்டபோது யாரிடமோ போய்க் கடை விலாசம் ஆங்கிலத்தில் எழுதி வாங்கி வந்தாள். 'ஒரு டம்ளருக்கு உயிரை விடறியேடா பாவி!' என்பதுபோல் பார்த்தாள்.

நான் எங்கள் யூனிட் சமையல் ஐயரிடம் விசாரித்தேன்.

''டம்ளர் மட்டுமா காணோம்? ஒரு ஆளை அடிச்சா வேக வைக்கலாம், அவ்வளவு பெரிய பாண்டிலி, காணோம். நானும் இரண்டு நாளா தேடறேன். எட்டு ஸ்பூன், இரண்டு தட்டு, ஒரு அலுமினிய கெட்டில் காணோம். யாரைக் கேட்கிறது, தெரியலை. நானும் இவளைத்தான் கேட்டேன். பாண்டிலி பாத்தியான்னு. இடுப்பிலிருந்து புகையிலையை எடுத்து நீட்டினாள். தெலுங்கிலே பாண்டலின புகையிலையா?'' அபிநயங்களோடு பேசினார் அவர்.


நான் திரும்பி அவளைப் பார்த்தேன். சிரித்தாள். வெளேரென்ற இடுப்பிலிருந்து புகையிலையை எடுத்து நீட்டினாள். நான் அவசரமாய்ப் பின்வாங்கினேன்.

இருக்கிற மண்டைக் குடைச்சலில் இப்போது புகையிலைக்குத் தெலுங்கில் என்ன என்பதும் சேர்ந்து கொண்டது.

அண்ணா நகர் திருமங்கலம் அருகே உள்ள அந்த வீட்டைத் தேடி வந்தார் ஒரு வெளியூர்க்காரர்.

தோட்டத்தில் ஒருவர் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தலையில் முண்டாசுடன் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார். வெளியூர்க்காரர் - அவர் முதுகில் தட்டி, ''ஐயா இருக்கிறாரா?'' என்று கேட்டார்.

முண்டாசு கட்டியவர் திரும்பிப் பார்த்து, ''நான்தான் ஐயா. என்ன வேணும்?'' என்றதும் வந்தவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.



வீட்டின் சொந்தக்காரரே அவர்தான். அந்த மனிதர்: முன்னாள் தமிழக அமைச்சர், இன்றைய எம்.பி. குழந்தைவேலு.

—ராமகிருஷ்ணன்

ஐயா இருக்கிறாரா?


வைட்டமின்கள்
தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை

கிளம்புகிற முதல் நாள் வரை டம்ளர் கிடைக்காமல் போயிற்று.

கடைசி நாள். நிறையப் பேர் ஷாப்பிங் போனார்கள். விசாகப்பட்டினத்தில் என்னென்ன விசேஷம் என்று கேட்டுக் கொண்டார்கள். எது வாங்கலாம், எங்கே என்று விசாரித்தார்கள். 'ஏதாவது, நினைவா வாங்கி வரச் சொல்லிச்சு என் வொய்ஃப்!' என்று பேசிக் கொண்டார்கள். கிளம்புகிற நேரத்தில் தான் மனைவியைப் பற்றி யோசித்தார்கள்.

எல்லோருக்கும் அவரவர் மனைவி முக்கியம். ஆனால் என்னைப் போல் யாரும் மனைவி நினைவாக டம்ளர் கொண்டு வர மாட்டார்கள். கொண்டு வந்துவிட்டுத் தொலைக்க மாட்டார்கள். தொலைத்துவிட்டுத் தேட மாட்டார்கள்.

நானும் ஷாப்பிங் போனேன். கூட்டுகிற பெண்மணி கொடுத்த விலாசம் தேடினேன். கண்டு பிடித்தேன். பளபளப்பாய் விளிம்பு இல்லாத உறுதியான உயரமான டம்ளர் வாங்கினேன். லேபிளைச் சுத்தமாய்க் கிழித்தேன். இனிப்பு மாங்காய் ஜெல்லி பட்டைகளும் மரப்பொம்மைகளும் வாங்கினேன். கடற்கரையில் டைரக்டர் சாரோடு போட்டோ எடுத்துக் கொண்டேன்.

வீடு இறங்கியதும் குழந்தைகள் ஓடிவந்து கட்டிக் கொண்டன. பதினைந்து நாட்கள் பிரிவை முத்தமிட்டுத் தீர்த்துக் கொண்டேன். தோளில் ஒன்றும் மடியில் ஒன்றுமாய் ஒட்டிக் கொண்டன. ஷூட்டிங் விவரங்கள் கேட்டன. பெட்டியைத் திறந்து இனிப்பு எடுத்துக் கொண்டன. பொம்மைகளைப் பங்கு போட்டுக் கொண்டன.

துணிகளை வெளியே எடுக்க, நான் வாங்கிய டம்ளர் வந்தது.

''என் நினைவு நடுவிலே வந்ததா உங்களுக்கு?'' மனைவி கண் சிமிட்டிக் கேட்க, சந்தோஷமாய் இருந்தது.

மீதித் துணிகளை எடுத்து வைக்க இன்னொரு டம்ளர் வந்தது.

''எப்படி இரண்டு கல்கத்தா டம்ளர்? நான் ஒன்று தானே கொடுத்தேன்?''

எனக்குப் புரியவில்லை. நானே அதிஜாக்கிரதையாய் உள்ளே வைத்துவிட்டேனா அல்லது யூனிட் ஆட்கள் யாரும் விளையாட்டுக்கு எடுத்து உள்ளே ஒளித்து

ஆறு வித்தியாசங்கள் விடை:

1. வால்
2. விளக்கு
3. முதல் பால்காரர் வேட்டி
4. இரண்டாவது பால்காரர் கால் இடைவெளி
5. பனை மரம்
6. இரும்புக் குவளை

வைத்துவிட்டார்களா? எனக்குத் தெரியவில்லை.

நான் முழிப்பதைப் பார்த்துவிட்டு சாந்தா சந்தேகப்பட்டாள்.

''உண்மையைச் சொல்லிவிடட்டுமா? வேண்டாம். எடுத்துப் போன காரணமே கெட்டுப் போயிற்று என்றால் சாந்தா வருத்தப்படுவாள். அடுத்த முறை ஊருக்குப் போகும்போது, 'என் ஞாபகமாக ஒரு பொருளும் வேண்டாம்!' என்று சீறினாலும் சீறுவாள்.

''அதில்லேம்மா...'' நான் சுதாரித்தேன். ''ரூம்ல கூட இருந்தவன் நீ கொடுத்த டம்ளரை உபயோகப்படுத்த ஆரம்பிச்சான். 'இதைத் தொடவே தொடாதே! உனக்கு வேணு இதே மாதிரி வாங்கித் தர்றேன்'னு இதை வாங்கினேன். பேசாமல் எடுத்துக்கொண்டு போகக் கூடாதோ? உபயோகப்படுத்திட்டு என் பெட்டியிலேயே வச்சிட்டான் போல இருக்கு!''

சாந்தா பெருமையுடன் சிரித்தாள். மாங்காய் விள்ளலை வாயில் போட்டுக் கொண்டாள்.

இப்போது வீட்டில் ஒரே அச்சாய் இரண்டு டம்ளர்கள் இருந்தன. எது தொலைத்த டம்ளர், எது வாங்கின டம்ளர் என்ற அடையாளமில்லாமல் போயின.

ஆனால் எந்த டம்ளரைப் பார்த்தாலும் எனக்கு அந்தக் கூட்டுகிற பெண்தான் நினைவுக்கு வந்தாள்.

''ஏமி டம்ளரு? இதா, இதா, இதா...'' என் கண்முன்னே ஆயிரம் டம்ளர் பரப்பினாள். உயரே நின்று கை தூக்கி அழகாய்ச் சிரித்தாள். பத்து நிமிடம் என்மீது அக்கறையாய் என் டம்ளர் தொலைந்து போன கவலையோடு ஓட்டல் முழுக்கத் தேடின அந்த ஜீவனை என்னால் வெகு நாட்களுக்கு மறக்க முடியாது. உயரமான, உறுதியான, விளிம்பில்லாத, பளபளப்பான கல்கத்தா டம்ளரைப் பார்க்கிற போதெல்லாம்—

''ஏமி டம்ளரு? இதா, இதா, இதா...'' குரல் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. மனிதனுக்கு நினைவுகள் சுகம் தரும் விஷயம். சில சமயம் அவை வதமும் செய்யும்.

எனக்கு இரண்டுமே ஏற்பட்டன.



'நீதியின் மறுபக்கம்' படத்தில் விஜய்காந்த், ராதிகா

வேண்டாம், வேண்டாம் என்றேன். அதெல்லாம் முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

''இன்றைக்குப் பார்த்து இப்படி ஆயிற்றே! சே!'' என்று நெற்றியில் அடித்துக்கொண்டான் சேது. அவன் எதிரில் கணக்கு நோட்டும் ரூபாய் நோட்டுக்களும் பரந்து கிடந்தன.

''என்ன விஷயம்?'' என்றாள் மகாலட்சுமி.

''நேற்று ராத்திரி சொன்னேனே, மறந்துவிட்டாயா?'' என்றான் அவன். ''இன்றைக்குப் பாங்கில் கேஷில் உட்கார வேண்டும், கேஷியர் லீவு என்றெல்லாம் உன்னிடம் சொல்லவில்லை? நான் மாட்டேன், அந்தப் பொறுப்பெல்லாம் எனக்கு வேண்டாம், என்று எவ்வளவோ சொன்னேன். மானேஜர் கேட்கவில்லை. என்னைப் பற்றி அக்கறை இருந்தால் தானே உனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்கும்.''

''சரி, என்ன அதனாலே? இன்றைக்கு ஒரு நாள் தானே? கவனமாக இருந்தால் போச்சு. ஆபீசுக்குப் புறப்படுங்கள்,'' என்றாள் மகாலக்ஷ்மி.

வேண்டா வெறுப்பாகக் கணக்கு நோட்டையும் பணத்தையும் எடுத்து வைத்தான் சேது. தினம் காலையில் காப்பி குடிக்கும்போது முந்தின தினத்து வரவு செலவுகளை எழுதி வைத்துக்கொள்வது அவன் வழக்கம். இன்று எழுதிய போது—

பதினைந்து ரூபாய் குறைந்தது. அதுதான் அவனுடைய எரிச்சலுக்குக் காரணம். என்ன செலவு பண்ணினோம், எங்கே கோட்டை விட்டோமென்று தெரியவில்லை.

சாயந்தரம் வீடு திரும்புகையில் சேது உற்சாகமாக இருந்தான்.

''ஒரு பைசாகூடத் தவறவில்லை. இவ்வளவுக்கும், இன்று ஒரே நாளில் நாலு லட்சம் ரூபாய் ரொக்கமாக ட்ரான்சாக்ஷன் பண்ணியிருக்கிறேன். எவ்வளவு சமர்த்து நான்! எனக்குப் பரிசு எதுவும் கிடையாதா?''

''பரிசுதானே? இதோ தருகிறேன்,'' என்று ஜாக்கெட்டுக்குள்ளிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டும் ஓர் ஐந்து ரூபாய் நோட்டும் எடுத்து அவனிடம் தந்தாள்.

''என்ன இது?''

''காலையில் உங்கள் கணக்கில் குறைந்ததே, அந்தப் பதினைந்து ரூபாய்!''

''உங்கள் வீட்டுக் கணக்கில் குறைந்ததே, அந்தப் பதினைந்து ரூபாய்!''

''என்னது! இது உன்னிடம்...''

''நேற்று ராத்திரி நீங்கள் கேஷியர் வேலை பார்க்கப் போகிறேனென்று கவலையோடு சொன்னவுடனேயே, இந்தப் பதினைந்து ரூபாயை எடுத்து ஒளித்து வைத்துவிட்டேன்.''


''அடிப்பாவி? எதற்காக?''

''இன்றைக்குப் பூரா உங்களுக்கு ஜாக்கிரதை உணர்வு இருக்க வேண்டும் என்றுதான்! விபத்தைப் பார்க்கிறவன் அன்று பூரா ஜாக்கிரதையாய் வண்டி ஓட்டுவானே! அது போல் வீட்டில் பதினைந்து ரூபாயைக் கோட்டை விட்டோமே என்ற உதைப்பால் இன்று பாங்க் வேலையின்போது இரட்டிப்பு விழிப்பாக இருப்பீர்கள் என்றுதான். இருந்தீர்களா இல்லை!''

''மகாலக்ஷ்மி! நீ மகா மகா மகாலக்ஷ்மி!'' என்று அவளை அணைத்துக்கொண்டான் அவன்.

பாப்பா
ரகு





இரண்டு பெண்டாட்டிக்காரர்கள்

●● எம். கார்த்திக், நங்கநல்லூர்.

இந்த அணுயுகத்தில், எதற்கும் பயன் படாத மகாபாரத இராமாயணக் கதைகளைப் பற்றி மணிக்கணக்காக, நாட் கணக்காக மிகைச் சொற்பொழிவு நடத்துகின்றனரே, வேறு ஏதாவது உருப்படியாகச் செய்யக் கூடாதா?

ஓகோண்ணேன். கேள்வியில் ஒரு மாதிரியான அ.பேட்டை நெடி அடிக்கு தோண்ணு சந்தேகப்படறேண்ணேன். என்னை உசுப்பிவிட்டு, 'அப்படியா சொல்லப் போச்சு?' ன்னு வரிந்து கட்டிக் கொண்டு இதிகாச பெருமைகளை அரை மணி சாவகாசம் அறுக்கச் செய்ய வேண்டும் என்பது திட்டமோண்ணேன். அந்தத் தூண்டி லில் சிக்க வேறு மீன் பார்க்கிறது நல்லதுண்ணேன்.

●● என். உலகநாதன், லால்குடி.

18'ம் வாய்பாட்டைப் பார்க்காமல் சொல்லத் தெரியுமா?

சொல்ல மாட்டேன். காரணம் இரண்டு.

1. வாய்பாடு என்பதே (கூட்டல்

இன்னும் பதினைந்து நிமிட அவகாசம் தருகிறேன். அதற்குள் நீ கடிதம் எழுதாவிட்டால்...

சந்திரிகா எல்லைப்புறக் காவல் பிரிவில் ஒற்றர் பிரிவின் ஒரு முக்கியப் புள்ளி என்பது பலருக்குத் தெரியாது. கல்லூரியில் ஒரு விரிவுரையாளர் என்று தான் தெரியும்.

எதிரிகளின் எல்லைக்குள் பலதரம் துணிந்து சென்று தகவல் திரட்டியவள் கடைசியாகச் சிக்கிக் கொண்டு விட்டாள்.

எதிரிகள் அவளைச் சிறையில் வைத்திருந்தனர்—ஒரு முக்கிய நோக்கத்துக் காக.

அவள் கைப்பட ஒரு கடிதம் எழுதச் செய்து முக்கிய உளவாளிகளை ஓரிடத்தில் கூடச் செய்து, அத்தனை பேரை யும் ஒரே சமயத்தில் ஒழித்துக் கட்ட அவர் கள் திட்டமிட்டனர்.

சந்திரிகா அந்தக் கடிதத்தை எழுதுவதைவிடத் தற்கொலை செய்து கொள்ளவே விரும்பினாள்.

ஆனால் எதிரிகள் முகாமின் தலைவன் மிகுந்த கெட்டிக்காரன். அவளை அடைத்து வைக்குமுன் அறையில் தற் கொலை செய்து கொள்ள எந்த வசதியும் இல்லாதபடி செய்திருந்தான். அவளிட மிருந்த உடைமைகள் அனைத்தையும் பறி முதல் செய்துவிட்டிருந்தான்.

முரட்டு மேஜர் அவள் அறைக் குள் நுழைந்தான். ''சந்திரிகா, உன்னைக் கௌரவமா இதுவரை விட்டு வைத்திருந் தோம். இன்னும் பதினைந்து நிமிட அவகாசம் உனக்குத் தருகிறேன். அதற்குள் நீ கடிதம் எழுதாவிட்டால் உன் கற்பு எங்கள் பொதுச் சொத்தாகிவிடும். பிறகு உன் இஷ்டம்.''

சந்திரிகா இளக்காரமாகச் சிரித் தாள். ''அதற்கு அவசியமில்லாதபடி நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்.''

''எந்த விதத்தில் சொல்?''

''அப்படியா? அதை நான் வாயால் விவரிப்பதைவிட, ஒரு காகிதமும் பேனாவும் கொடுத்தால் என் திட்டத்தை வரைந்து காட்டுகிறேன்.''

அவன் ஒரு காகிதமும் பேனாவும் கொண்டு வரச் செய்தான்.

பேனாவை இரண்டு மூன்று தரம் உதறினாள். சரியாக எழுதவில்லை போலும்!

''என் பேனாதான் எனக்கு எழுதும். அதைக் கொண்டு வரச் சொல்.''


அவளைச் சிறையில் அடைக்கு முன் பறித்த பேனாவைக் கொண்டு வரச் செய்தான்.

அவள் காகிதத்தில் இரண் டொரு கோடுகள் போட்டாள். ''இந்தப் பேனாவும் என்னவோ அடைக்கிறதே.'' சிரித்தவாறே பேனாவின் கழுத்தைத் திருகி னாள். கண்ணிமைக்கும் நேரத்தில் அதி லிருந்த இங்க்கை வாயில் ஊற்றிக் கொண்டாள். எதிரிலிருந்த மேஜர் தடுப்ப தற்குள் எல்லாம் நிறைவேறிவிட்டது.

அவள் உடல் நீலம் பாய்ந்து விட்டது. தன் பேனாவுக்குள் அவள் ஊற்றி வைத்திருந்தது வெறும் மசி இல்லை. கொடிய விஷம் கலந்த மசி.

அவள் எழுதிய காகிதத்திலிருந்த ஒற்றை வார்த்தை எதிரியைக் கேலி செய்தது.

முட்டாளே!



'எஸ். வி.'

குமுதம்
தொகுதி:38 மலர்:42
25·7·85

ஊர்வலம் சொல்லும் உண்மை

இவ்வளவு பிரம்மாண்டமான ஓர் ஊர்வலத்தைச் சென்னையில் பார்த்து எவ்வளவு காலமாயிற்று! திங்கட்கிழமை ஒரு மறக்க முடியாத நாள்.

கலைக் கல்லூரியருகே இரண்டு மணி நேரம் நின்று ஊர்வலத்தைப் பார்வையிட்ட ராஜீவ் காந்தி மேடையினின்று இறங்கியபோது, ஊர்வலத்தின் இறுதிப் பகுதி இன்னும் துறைமுகத்தின் தலைவாயிலை விட்டுப் புறப்படவில்லை என்பது இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபரின் பிரமிப்பு.

ஆளும் கட்சி விஷயத்தில் உற்சாகம் காட்டிப் பழக்கமில்லாத தினமணிகூட, 'இப் பேரணி மிகப் பெரிய அளவில் இருந்தது,' என்று ஒரு வார்த்தை எழுத நேர்ந்தது என்றால், ஊர்வலத்தின் தன்மைபற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

அதில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியினரா என்ற கேள்விக்கு, 'சந்தேகம்தான்,' என்று பதில் சொல்லக் கூடியவர்களும் ஒரு விஷயத்தில் உறுதியாக இருப்பார்கள்.

அத்தனை பேரும் ராஜீவ் காந்தியின் ஆதரவாளர்கள்தான்.

வீரத்துக்கு என்றுமே தனி மதிப்பு உண்டு. 'இதோ ஓர் இளைஞர், உயிருக்குத் துணிந்து கடமை ஆற்றிக் கொண்டிருக்கிறார்!' என்ற உணர்வு ஒவ்வொரு இந்தியன் மனத்திலும் நன்றாக உறைத்திருக்கிறது.

உயிரைத் துரும்பாக மதிக்கும் அரசியல்வாதிகள் உணர்ச்சி வசப்பட்டவர்களாக இருப்பார்கள், உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவார்கள்.

இவர், பதட்டப்படுவது இல்லை. பரபரப்பு உண்டாகும் வகையில் பேசுவது இல்லை.

'மிஸ்டர் கூல்,' என்று இவரை வர்ணிக்கிறார்கள் மேல்நாட்டினர். 'திருவாளர் அமைதி.' எவ்வளவு பொருத்தமான பெயர்!

போலித்தனம் இல்லாமல், பேச்சிலோ செயலிலோ நடிப்பு இன்றி, நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரசினைகளுக்குத் தீர்வு காண அமைதியுடன் முயன்று வரும் இந்த அபூர்வமான அரசியல்வாதியிடம் தங்களுக்குள்ள நம்பிக்கையைக் காட்டவே அத்தனை பெரிய ஊர்வலம் திரண்டது என்று சொல்லலாம்.

புதுமையான தலைவர் ராஜீவ் காந்தி. பழைமையான இந்தியாவைப் புது யுகத்துக்கு ஆயத்தமாக்கப் பொருத்தமான தலைவர்.


அவர் தலைமையில் நாடு பன்மடங்கு வளமும் லாபமும் பெற்றிடும் என்று நம்ப இடம் உண்டு.

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் அச்சிட்டவர்: ஏ. பி. ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி. வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ். ஏ. பி. அண்ணாமலை. இணை ஆசிரியர்: ரா. கி. ரங்கராஜன். துணை ஆசிரியர்கள்: புனிதன்; ஜ. ரா. சுந்தரேசன்.

முகவரி: 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை600 010.

சேஸ்

ஒன்றில் மட்டுமே



1. அழுக்கை அறவே விரட்டும் தனித்திறன்
2. கரங்களுக்கு மென்மை
3. இனிய நறுமணம்
4. பொங்கும் நுரைவளம்

குறைந்த விலையில்
இத்தனையும் அளிக்கிறது—

சேஸ்

வாஷிங் பவர்




தயாரிப்பு: TAC

தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் & ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட்.
553, அண்ணா சாலை, சென்னை 600 018.

ADWAVE TAC 2862





இரட்டைக் கதைகள் -1

வானம் பூமியைச் சேருக்கலாமா என யோசித்துக் கொ டிருந்தது.

அந்தக் கல்லூரி ஆண்டு விழா முடிந்து மாணவ, மாணவிகள் கூட்ட கூட்டமாக முகமெல்லாம் சோகப் பூச்சுகளோடு கல்லூரி வளாகத் விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

ஒலிபெருக்கி, 'பசுமை நிறைந்த நினைவுகளே...' என முகாரித் கொண்டிருந்தது.

மாதவன் கனத்த இதயத்தோடு தனித்துச் சென்று கொண்டிருந்தா

''மாதவன்...!'' — தன்னை யாரோ அழைப்பதைக் கேட் திரும்பிப் பார்த்தான்.

அம்பிகா கொஞ்சம் மூச்சிரைக்க வேகமாக வந்து கொ டிருந்தாள்.

''வாங்க, போகலாம்...'' — அவனை நெருங்கி சோகமா சொன்னாள்.

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

''இன்று நீங்கள் மேடையிலே பாடின கவிதை என் நெஞ் ரணமாக்கிடுச்சி... பட்டதாரிகளை, 'வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவ காலைச் சுற்றும் கனவுப் பூக்கள்'-னு நீங்க சொன்னப்ப, கைதட் களாலே மேடையே அசைஞ்சு போச்சு...''—அவள் சொன்னாள்.

அவன் மெல்ல சிரித்தபடியே தலையாட்டிக் கொண்டான்.

''என்ன, பேசவேமாட்டேங்கறீங்க?''—மறுபடியும் அம்பிகா.

''இந்த நேரத்திலே யாராலும் பேசமுடியாது...'' — அவ குரல் கம்மிப் போயிருந்தது.

''என்கிட்டே சொல்லாமலேயே கிளம்பிட்டீங்களே...!'' — அவ கோபித்துக் கொண்டாள்.

''மீண்டும் அடுத்த மாசம் ஒன்பதாம் தேதி பரீட்சை சமயத்தி தான் மறுபடியும் சந்திச்சுக்கப் போறேமே...''— அவன் சொன்னான்.

''அதுக்கு இன்னும் ஒரு மாசம் இருக்கே..!''

அவன் பதில் பேசவில்லை. அங்கே சிறிது நேரம் மௌனம் பே கொண்டிருந்தது.

மௌனத்தை அம்பிகா கலைத்தாள்:

''உண்மையைச் சொல்லுங்க... இந்த மூன்று வருஷங்களில் நா உங்களைக் கொஞ்சங்கூட பாதிக்கலையா...?''

''நிறைய... கவிதை என்றாலே ஒதுங்கிச் செல்லக்கூடிய பலருக் மத்தியிலே, என் கவிதையை நீ மட்டும்தானே ரசிச்சே... நா கொட்டாவி விடுவதைக்கூட அற்புதமான கவிதைன்னு சொன்னே.. ரசிகை என்ற முறையிலே நீ என்னை நிறைய பாதிச்சிருக்கே....''

''வேறே வகையிலே நான் உங்களைக் கொஞ்சங்கூடப் பாதிக்கலையா —அவள் எதிர்பார்ப்புடன் கேட்டாள்.

''வேறே வகையிலேன்னா...?'' — அவன் அவளைக் குழப்பமா கேட்டான்.

''காதல்...''

மின்னல்வளவ

''காதலா?'' — அவன் மெல்ல கத்தான்.

''நான் ரணமாகிப் போய்க் கேட்கி ன்... நீங்க சிரிக்கிறீங்க... வகுப்பறை ல பேராசிரியர் அம்சா, களவியற் ணர்ச்சியைப் பற்றிச் சொல்லும் ாது, என் உடல் வகுப்பறையில் ந்தாலும் மனம் உங்களோடு கற்பனை கில் ஒதுங்கி விடும்... நான் ந்த அளவுக்கு ஆழமா காதலிக் றன்...''

''என் அனுமதி இல்லாமலேயே நீ னக்குள்ளே நிறைய கனவுகளை ார்த்துக்கிட்டே...''

''அப்படீன்னு...?''

''நீ சொன்னயே களவியற் புணர்ச்சி.. ந்தலைக் காதலும் அதில் ஒருவகை ன்...''

''இருதலைக் காதலின் அடித்தளமே ந்தலைக் காதல்தான்... மறந்துட்டீங் ா...?''

''அக இலக்கியங்களைத் தலைகீழா று வச்சிருக்கே...ஆனு, நீ சொன்னது ந்த இடத்திலே பொருந்தாது...''

''அப்படீன்னு நீங்க என்னைக் காத க்கலையா?''

''சத்தியமா இல்லே...''

''என்னேட பழகியதெல்லாம்...?''

''ரசிகை— படைப்பாளனது நாகரிக ன நட்பு...!''

''என்னல் அப்படி எடுத்துக்க முடிய யே...!''

''அது உன் பலவீனத்தைக் காட்டுது.. உன் மனத்தில் கனவுகளைச் சுமந்தால் தற்கு நானு பொறுப்பேற்க டியும்...?''

''மூன்று வருஷமா பழகியும்கூட ஒரு ண்ணின் மனசை உங்களாலே புரிஞ் க முடியலேயா...?''

''வெரி ஸாரி...நான் கவிஞன்... னுதத்துவ நிபுணன் கிடையாது...''

''இப்பகூட ஒன்றும் குறைஞ்சு ாயிடலே...நீங்க சம்மதம் தந்தீங் னு, பரீட்சை முடிஞ்சு நாம ரெண்டு ரும் ரெஜிஸ்தர் மாரேஜ் பண்ணிக்க ம்...''

''காதல், உண்டாகக்கூடியது... உண்டாக்கக் கூடியதல்ல... ப்ளீஸ்...! டோண்ட் பிரஸ் மீ...!''

''சே...! நீங்களும் ஒரு சராசரி ஆண் தான் என்பதைக் கடைசியிலே நிரூபிச் சுட்டீங்களே...''

''வாட் டூ யூ மீன்...?''

''நான் அழகா இல்லே...நீங்க என்னை விட அழகா இருக்கிற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட றீங்க... அதனுலேதான் என்னைப் புறக்கணிக்கிறீங்க...''

''தயவுசெய்து என் நெஞ்சைக் காயப்படுத்தாதே...''

''உண்மைகள் வலிக்கத்தான் செய் யும்...''

''அபாண்டமான பொய்க் குற்றச் சாட்டுகளும் அப்படித்தான்...''

''நான் சொல்வது பொய்யின்னு சொல்றீங்களா...?''

''நிச்சயமா...! நீ அழகாத்தான் இருக்கே...இன்னும் சொல்லப்போனு, நீ இந்தக் கல்லூரியிலே தனி ரோஜா...''

''உண்மையாகவா?''—அவளது விழி களில் மகிழ்ச்சி அலைகள் தவழ்ந்தன.

''பின் ஏன் என் காதலை நீங்க புறக் கணிக்கிறீங்க...?''

''நான் சுமந்து கொண்டிருக்கும் லட்சியங்கள்...''

''லட்சியங்கள்னு...?''

''என் லட்சியம் எம்.ஏ.எம்.ஃபில். முடிச்சுட்டு ஏதாவது ஒரு கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராப் போயிடணும் என்பதுதான்...''

''உங்கள் லட்சியத்தை, நீங்கள் என்னைத் திருமணம் செய்துகொண்ட பிறகுகூட அடையலாமே...?''

''அது முடியாது...''—அவன் அவசர மாக மறுத்தான்.

''ஏன் முடியாது?''

''காதல் என்பது கதைகளிலும் திரைப்படங்களிலும்தான் தேவ பாஷை யாகக் காட்டப்பட்டுள்ளது... ஆனு, யதார்த்த வாழ்க்கையிலோ அது பெரும் பாலும் கல்லறைக்கு அமைக்கப்படும் பாதையாகத்தான் இருக்கு.. காரணம்..



''பெண் போலீஸா இருந்தாலும் எப்படித் திருடனைத் துரத்திக்கிட்டு ஓடறாங்க பாரு...!''

''ஏன் ஓடமாட்டாங்க...? திருடன், இவரோட செயினை இல்லே அறுத்துக்கிட்டு ஓடறான்!''

—ஆர். புவனேஸ்வரி

நாம் இந்தியாவுக்குத்தான் சுதந்திரம் வாங்கியிருக்கோம்... இன்னும் சாதி, மதப் பிரிவினைகளிடமிருந்து இந்தச் சமுதாயம் சுதந்திரம் வாங்கலே...''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''நான் இப்பொழுது என் வீட்டுப் பராமரிப்பில் வளர்ந்து வர்றேன்... நிர்வாணமா சொன்னால், நானும் ஒரு வகை தண்டச்சோறுதான்...

''உன்னைத் திருமணம் செய்துக்க நான் சம்மதம் தந்தாலும், என் வீட்டில் இதற்கு நிச்சயம் அனுமதி தரமாட்டாங்க... சாதியைக் காட்டித் தடை போடுவாங்க...

''உன் தந்தை இந்த மாவட்ட உங்க சாதிச் செயலர்...வேறு சாதிக்காரனை என்னை நீ திருமணம் செய்துக்க உங்க வீட்டிலும் அனுமதி தரமாட்டாங்க...

''இதற்கிடையில் நம்ம பெற்றோரின் எதிர்ப்பை மீறி, நீயும் நானும் திருமணம் செய்துக்கலாம்...ஆனா...நீ உன் வீட்டிலிருந்து வெளியேற்றப்படுவே...நான் என் வீட்டிலிருந்து வெளியேற்றப் படுவேன்... இடையில் வாழ்க்கை என்பது நமக்குப் பெரிய போராட்டம் ஆகிவிடும்...''

''போராட்டங்கள், எதிர்த்துப் போராடத்தானே...?''

''போராட்டங்களை நிராயுதபாணியா நின்று எதிர்த்தால், அது நமக்குத்தான் ஆபத்தைத் தரும்...

''வாழ்க்கையில் அடித்தளத்தை ஒழுங்கா அமைச்சுக்காமல் இந்த சமுதா
யத்தை எதிர்த்து வாழ்ந்திட முடியும்
நினைக்கிறியா?''

''நீங்க தன்னம்பிக்கை இழ
பேசறீங்க...''

''நோ... என்னுடைய நியாயமா
வாதங்களுக்கு நீ தன்னம்பிக்
யின்மைன்னு முத்திரை குத்தறே...''

''நீங்க முதுகெலும்பு இல்லாதவ
போல் வாதாடறீங்க...''

''நானே நான் முதுகெலும்பு பெற
தற்காக வாதாடறேன்...''

''உங்களுக்கு முதுகெலும்பா நா
இருக்கேன்... பி.ஏ., கிராஜுவேட் ஆ
எனக்கு ஒரு அரசாங்க வேலை கிடைக்
மலா போயிடும். என் சம்பளத்தி
உங்களைப் படிக்க வச்சு, உ
லட்சியத்தை நிறைவேற்றுகிறேன்...''

''குதிரைக்குக் கொம்பு முளைக்கு
போது உன் கூற்று விசாரணை செய்ய
படும்...''—அவன் சிரித்துக்கொண்
சொன்னான்.

''கவர்ன்மெண்ட் வேலை கிடைக்
விட்டாலும் ஏதாவது...''—அவ
முடிப்பதற்குமுன் அவன் இடைமற
தான்:

''வீட்டு வேலை செய்தாவது என்னை
படிக்க வைப்பே...அப்படித்தானே?''

அம்பிகா தலையாட்டி ஆமோதித்தா

''நீ ஏன் நடைமுறை வாழ்க்கையை
பற்றிச் சிந்திக்கவே மாட்டேங்கறே?

''ஒரு வெறியிலே நீ இப்படிச் சொ
லீடலாம்... நானே அப்படிப்பட்

நிலே வரும்போது இருவருக்கும் டயில் மனக் கசப்புதான் டாகும்...''

'அப்படின்னு உங்க இதயத்திலே க்குக் கொஞ்சமும் இடம் கிடை தா?''—அவள் ஏக்கத்தோடு ட்டாள்.

'நிச்சயமா இருக்கு... ஒரு ரசிகை ற முறையில்...''

'நீங்க உங்க படிப்பை முடிச்சுட்டு க லட்சியத்தை அடையும்வரை நான் களுக்காகக் காத்துக் கொண்டிருந் ல்...?''

'ஒருவேளை நீ உன்னைக் கட்டுப் த்திக் கொண்டால்கூட, உன் மணத்தை உன் குடும்பத்தினர் ணயித்து விடுவார்கள்...''

'நிச்சயமா அது என் மரண ளாகத்தான் இருக்கும்...''

'நீ சபலத்தின் உச்சத்திலே நின்று சறே...''

'என் காதல் சபலம் சம்பந்தப்பட்ட ல... உயிர் சம்பந்தப்பட்டது...''

'என்னை நீ காதலிக்கிறதா சொல் ய... அப்படி என்கிட்டே என்ன ரிச் சிறப்பு இருக்கு...? நான் உன்னை த வகையிலே கவர்ந்தேன்...?''

''உங்கள் கவிதை...அதுதான் உங்க து தனிச் சிறப்பு...உங்களது கவிதை ா மேல் நான் கொண்டிருக்கும் தீராத கம், வெறி காரணமாகத்தான் களைக் காதலிக்கிறேன்...''

''இதே கவிதையை ஐம்பது வயதுக் வர் ஒருவர் எழுதியிருந்தால் அவரை காதலிச்சிருப்பியா?''

அம்பிகா மௌனமானுள். அவன் தொடர்ந்தான்:

''மனித முன்னேற்றம் தடைப்படு து இப்படிப்பட்ட சின்ன சபலங் ாால்தான் அம்பிகா...சபலங்களுக்கு ட்பட்டவன் சமுதாயத்தில் எதையும் திக்க முடியாது...''

''அப்படின்னு நீங்க யாருமே காத க்கக்கூடாதுன்னு சொல்றீங்களா..?''

''நிச்சயமா மனிதன் காதலிக்கணும். துக்கு முன்னுடி அவன் இந்த சமுதாயத் லே கால் ஊன்றி தன் அடித்தளத் தப் பலமா அமைச்சுக்கணும்...''

''என் மனசை ரொம்பவும் ரணமாக் கிட்டீங்க...''

''ரணமாக்குவதன் நோக்கம் குண மாக்குவதுதான்...

''நீ என்னைக் காதலிப்பதாகச் சொன்னது ஒருவகை சபலம்தான். நான் கொஞ்சம் அழகா இருக்கேன்... அதனுலே நீ என்னைக் காதலிப்பதா நினைச்சுக்கிட்டு உன்னை நீயே ஏமாற்றிக் கிட்டிருக்கே. ஒருவேளை நான் அழகில் லாமல், கவிதை எழுதக்கூடிய திறமை யுடன் பிறந்திருந்தால் நிச்சயமா நீ என்னைக் காதலிச்சிருக்கமாட்டே...''

''நீங்க என்னைப் புரிஞ்சுக்காம பேச றீங்க...''

''நீதான் உன்னைப் புரிஞ்சுக்காம உன் சபலத்துக்குக் காதல் முத்திரை குத்தறே. இனி உன் வாழ்வில் சபலங் களுக்கு இடம் தராதே.. அது ஒருவகை அருவக் கல்லறை... அடிமையாயிட்டா கண்ணீர்தான் மிஞ்சும்.

''இதோ பார் அம்பிகா... என்னைப் பற்றிய நினைவுகளை நிரந்தரமா ஒதுக்கு.. படிச்சு, தேர்விலே ஃபர்ஸ்ட் கிளாஸ்லே பாஸ் பண்ண முயற்சி செய்...விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்...''

பேருந்து நிறுத்தம் வந்தது.

''சரி அம்பிகா...நான் போக வேண் டிய பஸ் அதோ நிற்குது...போயிட்டு வர்றேன்.''—அவன் விடைபெற்றுச் செல்ல எத்தனித்தபோது...

''மாதவன்...கொஞ்சம் நில்லுங்க.'' —அம்பிகா தடுத்தாள்.

அவன் நின்று திரும்பிப் பார்த்தான்.

''என் இதயத்திலேதான் கையெழுத் துப் போட மறுத்திட்டீங்க...ஆட்டோ கிராபிலேயாவது கையெழுத்துப் போட் டுட்டுப் போங்க...''

—அவள் அவனிடம் ஆட்டோகிராபை நீட்டினுள். அவன் அதை வாங்கினுன்.

'நடந்ததை எண்ணுதே, நடப்பதை எண்ணு....'— அடியில் கையெழுத் துப் போட்டு அவளிடம் கொடுத்துவிட்டு பேருந்தை நோக்கி நடக்கத் தொடங் கினுன்.

அம்பிகா விழிகளில் நீர் பொங்க அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வானம் லேசாகத் தூறத் தொடங் கியது.

மாறுபட்ட கோணங்கள்



இரட்டைக் கதைகள்-2

நடந்து கொண்டிருந்தார்கள். நடந்து கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் நடந்து கொண்டிருந்தார்கள். நடப்பதற்கும் நிற்பதற்கும் அதிக வித்தியாசமில்லாமல் நடந்து கொண்டிருந்தார்கள். எங்கு, எதற்கு என்ற கேள்விகளுக்கெல்லாம் இடமில்லாத அனிச்சை நடை!

ரொம்ப நேரமாகவே இருவரும் பேசிக் கொள்ளவில்லை. பேசிக் கொள்ளும்படியான சுவாரசியத்தைச் சற்றுமுன் உடைத்தெறிந்தவன் அவன்.

இத்தனை நாட்களாய் அவளுடன் பழகும்போதெல்லாம் தோன்றாத அந்த எண்ணம், போதிமரத்தடியில் புத்தருக்கு ஞானம் வந்தது போல், திடீரென அவனுக்குத் தோன்றியதும், அதன் காரணமாய் அப்படியொரு அழுத்தமான முடிவினை அவன் அவளிடம் வெளியிட்டதும் அவளுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

அந்த ஒரு கணத்தில் அவளிடம் கலகலப்புக் குறைந்தது; பேச்சு நின்றது; மௌனமே இருவரிடமும் பரிவர்த்தனை பாஷையாக நிலவியது.

அவனால் அந்த மௌனத்தின் கனத்தைத் தாங்க இயலவில்லை. அவளாலும்தான்! ஆனால், அந்த மௌனத்தைக் கலைப்பதன் மூலம் அதிகரிக்கும் வருத்தங்களின் கனத்தைவிட, வேதனைகளின் சுமையைவிட, இந்த மௌனத்தின் கனம் அவளுக்கு அப்படியொன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால், அவன் பொறுமையிழந்தான்:

''லதா! ஏதாவது பேசு லதா! என் பேர்ல உனக்குக் கோபமா?''

''....................''

''லதா, ப்ளீஸ் பீ ஃப்ராங்க்! உன் மனசில இருக்கிற ஆத்திரம், கோபம், துக்கம் எல்லாத்தையும் வெளியில கொட்டிடு! அப்பத்தான் அமைதியான முறையில சிந்திக்க முடியும். நான் சொல்றதிலுள்ள நியாயங்களைப் புரிஞ்சுக்க முடியும்.''

அவள் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் பல கேள்விகள் பளிச்சிட்டன. குற்றச்சாட்டுகள் மின்னின. அவன் கண்கள் அவளின் கண்களை நேருக்கு நேர் பார்ப்பதற்குச் சக்தியற்று, எங்கோ பார்த்தபடி பேசினான் அவன்:

''லதா... நீ என்னைத் தப்பாப் புரிஞ்சிக்கிறேன்னு நினைக்கிறேன். இதுநாள் வரையில் நான் உன்மீது வைத்திருந்த பரிசுத்தமான அன்பு இந்தக் கடல் சாட்சியா, அந்தக் கடவுள் சாட்சியா உண்மை! சத்தியம்! என்னை நம்பு. ஆனா, இன்னைக்கு நானே உங்கிட்ட 'என்னை மறந்துடு'ன்னு சொல்றேன்னா, அதுக்கு என்னோட குடும்பச் சூழ்நிலைகள்தான் காரணம்...''

அவள் முதன்முறையாக வாயைத் திறந்தாள்:

''அப்படியானால்.. இத்தனை நாட்கள் நாம பழகியது, பேசியது எல்லாமே பொய்தானா மிஸ்டர் அருண்...?''

அவனைத் தாக்க அவளின் அந்த 'மிஸ்டர்' அடைமொழியே போதுமானதாக இருந்தது.

துடித்துப் போனான் அவன்: ''ப்ளீஸ்...! என்னைப் புரிஞ்சுக்கோ லதா... நீ நினைக்கிற மாதிரி ஒரு கேவலமான எண்ணத்திலே உன்கிட்ட நான் பழகலே! ஆனால், என் குடும்பச் சூழ்நிலைகள் எனக்கிடப்பட்ட தளைகள் லதா! எங்கப்பாவின் கோபத்தை எதிர்கொள்கிற சக்தி

இரவிப்பிரகாஷ்

எனக்கில்லே! எங்கம்மாவின் ஆசையை முறிக்கிற துணிச்சலும் எனக்கில்லே! எல்லாவற்றையும்விட என்னேயே நம்பியிருக்கிற என் குடும்பம், என்னுடைய தங்கை, அவளின் எதிர்காலம், தம்பியின் படிப்பு இதெல்லாத்தையும் பாழடிக்கிற மனோபாவம் எனக்கில்லே!''

—அவன் முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் அவள்: ''ஆனல், எவளோ ஒருத்திதானே... எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்கிற மனோபாவம் மட்டும் உண்டாக்கும், அப்படித்தானே?''

''லதா... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்; நடந்து போனதை ஒரு கெட்ட கனவா நெனைச்சு மறந்துடு!''

''என்னோட பழகினது உங்களுக்கு வேணும்னு ஒரு கெட்ட கனவா தோணலாம்; ஆனு... ஆனு... எனக்கு...''

அவள் கண்கள் கலங்கி, எதிரே சாலை மறைந்தது.

'கெட்ட கனவு! சுலபமாகச் சொல்லி விட்டான் அவன்! ஆனல், சுலபத்தில் மறக்க முடிகிற பழக்கமா அது?

அண்ணலும் நோக்கினன்; அவளும் நோக்கினள் என்கிற மாதிரியான புராணக் காதலில்லை அது. கண்டோம், காதலித்தோம் என்கிற சினிமாத்தனமும் அவர்களிடம் இல்லை.

சாதாரணமான பழக்கமாய் ஆரம்பித்து, சிறு சிறு உதவிகளைப் பரிமாறிக் கொள்வதில் நட்பாய் வளர்ந்து, பரஸ்பரம் ஒருவரின் குணத்தை மற்றொருவர் புரிந்துகொள்வதில் அன்பாக மலர்ந்து, உள்ளமும் உள்ளமும் உறவாடியதில் காதலாகப் பரிணமித்தது அல்லவா அது!

இவன் — இந்த அருண் — அவளிடம் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறான்?

அன்று அவளுக்காக உயிரையே கொடுப்பதாகச் சொன்னனே! இன்று, அவள் உயிரையே பறிப்பது போலல்லவா பேசுகிறான்?

அவளைத் தன்னிடமிருந்து ஏழேழு ஜென்மத்துக்கும் எவராலுமே பிரிக்க முடியாதென்று சொன்னனே! இன்று அவனே அவளைத் தன்னிடமிருந்து பிரிந்து போகச் சொல்லுகிறானே?

ஹூம்... ஆண்கள்... அல்ல.. அலிகள்!

ஆண்களை வண்டுக்கும், பெண்களை மலருக்கும் உவமானப்படுத்திய தீர்க்கதரிசி யாரவன்? அவன் வாழ்க!

மலரோடு வண்டு உறவாடுதல் சுய நலத்துக்காக! மலர் வாடும்! வண்டு மறு மலர் தாவும் என்றுரைத்த மேதை யல்லவா அவன்!

பெண்களைப் பேதைகள் என்று அழைத்தவனும் அறிஞன்தான்!

அவள் பேதைதான்! அருண் மற்ற ஆண்களைப் போல் அல்லன் என்று நம்பிய பேதை!'

யார் மீதோ மோதிக் கொள்ளப் போன தன்னை அருண் தொட்டு இழுத்ததும்தான் அவள் தன் சுய நினைவுக்கு வந்தாள்.

''லதா... வீணு மனசைப் போட்டுக் குழப்பிக்காதே! நாம நல்ல நண்பர்களாக இருந்தோம் என்று மட்டும் நினைத்துக் கொள்!''

''நண்பர்களாகவா! வெறும் வாய் வார்த்தையாய் ஹலோ சொல்லிக் கொள்ளும் நண்பர்களாகவா? எப்படி அருண்? எப்படி இது சாத்தியம்?!''

அவள் குரல் தழுதழுத்தது.

''சாத்தியமாகித்தான் ஆகவேண்டும் லதா!''—கண்டிப்பு மிகுந்த குரலில் சொன்னான் அவன்.

''அருண்! உங்களை என்னல புரிஞ்சிக்க முடியலே! இவ்வளவு சீக்கிரத்திலே நீங்க மாறுவீங்கன்னு நான் கனவுலகூட நெனைச்சுப் பார்த்ததில்லே அருண் உண்மையைச் சொல்லுங்க...கல்யாண சந்தையிலே உங்களுக்கு ஏதேனும் 'ரேட்' ஃபிக்ஸ் ஆகியிருக்கா?''

சாட்டையால் விறினற் போன்று பத்றிப்போனன் அருண்.

''லதா.... என்ன வார்த்தை சொல்லிட்டே நீ? உன்னை மறந்து வேறொரு பெண்ணை நான் மணப்பேன்னு நினைக்கிறே? மாட்டேன் லதா... சத்தியமா மாட்டேன்.''

''அப்புறம் ஏன் தயங்கறீங்க அருண்?''

''நான் தயங்கலே லதா! எங்கப்பா தயங்கறாரு; எங்கம்மா தயங்கறாங்க.



''உங்க நாய் டைகரை எங்கே காணோம்...?''

''இன்ட்டர் வியூக்குப் போயிருக்கு...''

''அதுக்குப் போய் என்ன இன்ட்டர்வியூ...?''

''போலீஸ் நாய் வேலைக்கு!''

நான் வேற ஜாதியிலே கல்யாணம் பண்ணிக்கிட்டா என் தங்கையோட எதிர்கால வாழ்க்கை பாழாகிடுமேன்னு பயப்படறாங்க. எனக்கு எங்க அப்பா முக்கியம்; அம்மா, அண்ணன், தம்பி, தங்கை அனைவருடைய அன்பும் ஆதரவும் முக்கியம். இத்தனை பேரையும் பகைச்சுக்கிட்டு வாழற வாழ்க்கையிலே என்ன சுகம் இருக்கப்போறது? யோசிச்சுப்பார் லதா.''

அவனுக்கு, நெருங்கிய உறவினர்கள் அனைவருடைய அன்பையும் ஆதரவையும் இழந்து வாழ்வதென்பது சாத்தியமான தாகவே தோன்றவில்லை. குறிப்பாக, அப்பா அம்மாவோடும், அண்ணன் தங்கைகளோடும் பேசாமல், பழகாமல், அவர்களின் இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளாமல், ஒரு சூன்ய வாழ்க்கையை மேற்கொள்வதில் அவனுக்கு விருப்பமே இல்லை. அப்புறம் எந்த உத்தேசத்தில் தான் அவளைக் காதலித்தான் என்று கடுகடுத்தாள் அவள். உண்மைதான். தவறுதான். ஏதோ ஒரு நப்பாசையில் எல்லாம் நல்லபடியாகவே முடிந்துவிடும் என்கிற ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில் காதலித்தது அவன் தவறு தான். ஆனால், அந்தத் தவறை மீண்டும் தொடர அவன் விரும்பவில்லை.

''எனக்கும் தங்கை, தம்பிகள் உண்டு... நான் எங்கப்பா, அம்மாவை விட்டு உங்களோட வரத் தயாரா இருக்கேனே அருண்!''

அருண் விரக்தியாகப் பார்த்தான்:

''பெத்தவங்களைப் பகைச்சுக்கிட்டு நீ வர்றதுக்கும் நான் வர்றதுக்கும் வித்தியாசம் இருக்கு லதா...''

''என்ன பெரிய வித்தியாசம்? நீங்க ஆண்ங்கறதுதானே? சே...! இது வரைக்கும் நான் பார்த்த அத்தனை காதல்லயும் பெண்கள்தான் வீட்டை விட்டு ஓடிப் போயிருக்காங்க...ஆண்கள் மட்டும் பெத்தவங்களை உதறிட்டு வராம,வீட்டுக்கு உழைக்கிற நல்ல பிள்ளை யாவே இருக்காங்க... இப்ப நீங்களும் இதே ஆண் வர்க்கத்துத் திமிர்லதான் பேசறீங்க...''

அருண் அவசரமாகக் குறுக்கிட்டான்:


''நீ நினைக்கறது தப்பு லதா... நான் சொன்ன வித்தியாசம், நீ பெண்ங்கறதும் நான் ஆண்ங்கறதும்தான்... ஆனா, இதுல திமிர் எங்க வந்தது? பெத்தவங்களைப் பகைச்சுக்கிட்டாலோ, இல்லே அவங்க சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்கிட்டாலோ, எப்படியிருந்தாலும் ஒரு பெண் தன் பிறந்த வீட்டை விட்டு வெளியேறிக் கணவன் வீட்டுக்குத் தான் போறா ... கணவன் தனக்கு அடைக்கலம் தருவான்ங்கற நம்பிக்கைல தான் அப்படிப் போறா. ஆனா, ஒரு ஆணுடைய நிலைமை அப்படி இல்லே... பெரியவங்க சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்கிட்டு அவங்க ஆதரவுல வாழறதுதான் அவனுக்குப் பாதுகாப்பா இருக்கு. இத விட்டு, அவங்களை உதறிட்டுப் போயிட்டா, அவனுக்கு ஆதரவாகவும் பாதுகாப்பாகவும் இருக்கறது யாரு? அவனை நம்பி வர்ற பெண், அவனுக்கே பாதுகாப்பா எப்படி இருக்க முடியும்? நல்லா யோசிச்சுப் பார்த்தா நான் சொல்றது சரின்னு நீயே ஒப்புத்துக்குவே...''

அழுத்தமாக அவன் பேசிய பேச்சு, கடற்கரைச் சிலைகளோடு லதாவையும் சேர்த்தது.

ECE LIGHTING

இஸிஇ விளக்குகள்

வளர்ச்சி மற்றும் நம்பிக்கையின் கண்கொள்ளாக் காட்சி



மின்ஒளித் துறையில் இஸிஇ பெயர் அதிவேகமாகப் பரவி வருகிறது. அதன் தொழில்நுட்பமும், தரமும் கண்கூடான சாதனைகளுமே இதற்குக் காரணம்.

இஸிஇ இந்தியாவில் உயர்தரமுடைய விளக்குகளுக்கும் ஒளிசாதனத்திற்கும் பெயர் பெற்றது.

ஒளிசாதனத் துறையில் நுட்ப அறிவிற்கும், தயாரிப்பு வசதிகளுக்கும் தர உறுதிப்பாட்டுக்கும் மிகச் சிறப்பான வசதிபடைத்தவர்கள் சிலரின் ஆதரவு பெற்ற ஒரு கம்பெனியான இஸிஇ, பல்வகை உபயோகங்களுக்கு விரிவான ரகங்களில் ஒளிசாதனங்களை வழங்குகிறது.

ஒளிசாதனத் தயாரிப்பில் உலகின் தலையாய நிறுவனங்களின் ஒன்றான ஹங்கேரியின் டங்ஸ்ராம் நுட்ப ஒத்துழைப்புத் தருகிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு இஸிஇ பலவகை ஜிஎல்எஸ் லாம்புகள், ஃப்ளுஒரெஸென்ட் டியூப் லைட்டுகள், மெர்குரி வேப்பர் லாம்புகள், மற்றும் வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் உபயோகத்திற்கான ஒளிவிளக்கு ரகங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்கிறது.

ECE

எலக்ட்ரிக் கன்ஸ்ட்ரக்ஷன் & எக்விப்மென்ட் லிட்.
இஸிஇ ஹவுஸ்
28A கஸ்தூர்பா காந்தி மார்க்
புதுதில்லி-110001

பிரகாசமான வெளிச்சம்
இஸிஇ வெளிச்சம்

Corcom ECE 184 Tam

மன்னிப்பு

மாலை நேரத்தில் பஸ் ஸ்டாண்ட் பக்கமாக வந்து நின்று கொண்டிருந்தேன்

அலுவலக நேரம் போக மற்ற நேரங்களில் பொழுது போக வேண்டுமே எவ்வளவு நேரம்தான் அறைக்குள்ளே அடைந்து கிடப்பது!

ஏஜெண்டுகள் தங்கள் பஸ் போகும் ஊரை ஓலமிட்டுக் கொண்டிருந்தனர் அங்கங்கே திட்டுத் திட்டாகச் சில மனிதத் தீவுகள். ஒரு பிச்சைக்காரன்... எதுவும் ரம்யமாகத் தெரியவில்லை.

அப்பொழுதுதான் என் கவனத்தை அந்தச் சிறுவன் கவர்ந்தான்.

அவனுக்குச் சுமார் பத்து வயது இருக்கலாம். ஸ்கூல் யூனிஃபார்ம் அணி திருந்தான். காலில் கேன்வாஸ் ஷூ. பார்ப்பதற்கு லட்சணமாக இருந்தான்.

பஸ்ஸுக்காகக் காத்திருப்பவர்களிடம் ஏதோ ஒரு அட்டையைக் காட்டி கொண்டிருந்தான். அவன் கண்களில் கெஞ்சல் தெரிந்தது. சிலர் அவனை அலட்சியம் செய்தனர்; சிலர் அந்த அட்டையை வாங்கிப் படித்துப் பார்த்து விட்டு 'போ, போ' என்று கையால் சைகை செய்தனர். ஒன்றிரண்டு பே அந்த அட்டையில் எதையோ எழுதிவிட்டு பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்துத் தந்தனர்.

அந்தச் சிறுவனைப் பார்த்தால் பிச்சைக்காரன் மாதிரி தெரியவில்லையே எனக்கு அந்த அட்டையைப் பார்க்க ஆவலாக இருந்தது.

எனக்கு அருகில் நின்றிருந்த சிலரிடம் காட்டிவிட்டு, அவன் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''உங்களால் எனக்கு உதவ முடியுமா?'' என்று ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு அந்த அட்டையை என்னிடம் நீட்டினான்.

நான் அந்த அட்டையை வாங்கிப் பார்ப்பதற்குள்—

ஒரு பிச்சைக்காரன் வேகமாக அந்தச் சிறுவனை நெருங்கி, சட்டை காலரைப் பிடித்துக் கொண்டு, இரண்டு கன்னத்திலும் 'பளார், பளா'ரென்று அறைந்தான்.

''பிச்சையாடா எடுக்கறே படுவா'' என்று அவன் மறுபடியும் அந்த சிறுவன் தலைமுடியைப் பிடித்து உலுக்குவதற்குள், நான் அவன் கையைத் தட்டி விட்டேன்.

''அவனை அடிக்கிறதுக்கு உனக்கு என்னப்பா யோக்கியதை இருக்கு? இந் பஸ் ஸ்டாண்டில நீ மட்டும்தான் பிச்சை எடுக்கணுமா? சின்னப் பையன்னு கூடப் பாக்காம இந்த அடி அடிச்சிட்டியே?''

''இவனுக்கு என்னங்க குறைச்சல் பிச்சை எடுக்கறதுக்கு?'' — அந்த பிச்சைக்காரன் ஆத்திரத்துடன் கேட்டான்.

''ஓஹோ! உன்னை மாதிரி கால், கை ஊனமா இருந்தாத்தான் பிச்சை எடுக்கணும்கிறியா?''

அதற்குள் அந்தச் சிறுவன், ''நான் பிச்சை எடுக்கலீங்க. தயவுசெஞ்சு அந் அட்டையைப் படிச்சுப் பாருங்க'' என்று அழுதவாறு என் காலருகே ஒட்டி கொண்டான். மறுபடியும் அந்தப் பிச்சைக்காரன் அடித்து விடுவானோ என்ற பய போலும். பாவமாக இருந்தது எனக்கு.

இளஞ்செழியன்

சிறுவன் கையில் வைத்திருந்த அட்டையைப் பார்த்தேன். அது ஒரு பள்ளிக்கூடத்தின் கட்டட நிதிக்கான டொனேஷன் கார்டு!

பள்ளியின் மேம்பாடுகளைப் பற்றி விலாவரியாக ஆங்கிலத்தில் விளக்கி விட்டு, வரிசையாக ஐம்பது கோடுகள் தரப்பட்டிருந்தன. ஒரு வரிசைக்கு ஒரு ரூபாய். தருபவரின் பெயர் எழுதுவதற்காக அந்தக் கோடுகள். அதில் ஏழெட்டுக் கோடுகள் நிரப்பப்பட்டிருந்தன.

அடப்பாவி! ஸ்கூல் டொனேஷனுக்காக இங்கே வந்திருக்கிறுன். அது தெரியாமல், பிச்சை எடுப்பதாக நினைத்து அந்தப் பிச்சைக்காரன் அடித்து விட்டானே!

''ஏம்பா... இந்தப் பையன் பிச்சை எடுக்கறதுக்கா வந்திருக்கான்...? ஸ்கூல் டொனேஷனுக்காக வந்த பையனைக் கை தொட்டு அடிச்சிட்டியே!''—எனக்கு வந்த ஆத்திரத்தில் அந்தப் பிச்சைக்காரன் கன்னத்தில் ஓங்கி அறைந்தேன்.

அவன் பொறுத்துக் கொண்டு, ''அப்ப பிச்சை எடுக்க வரலியா இவன்?'' என்று அமைதியாகக் கேட்டான். அந்தக் குரலின் ஓரத்தில் சந்தோஷத்தின் சாயை தெரிந்தது.

''ஏதோ தெரியாத்தனமா அடிச்சுட்டேன், மன்னிச்சுக்கங்க சாமி! இன்னும் ரெண்டு அடி அடிக்கணும்னுலும் அடிங்க. அவன் பிச்சை எடுக்க வரலேன்னு சொன்னீங்க பாருங்க, அது ஒண்ணு போதும் எனக்கு.''

''திமிரைப் பார்... நீ இனி இங்கே இருக்கக்கூடாது. கிளம்பு! நாளைக்கு உன்னை இங்கே பார்த்தேன்னு குடலை உருவிப்புடுவேன், ஓடுடா?'' — ஒரு பஸ் ஏஜெண்ட் அடிக்கப் போனுர்.

''சாமி, போயிடறேன் சாமி. போறதுக்கு முன்னுடி அந்தப் பையனைத் தயவு செஞ்சு என் முன்னுல கொஞ்சம் வரச் சொல்லுங்க.''

''எதுக்குடா... மறுபடியும் அடிக்கிறதுக்கா?''

''இல்லே சாமி. ஏதோ புத்தி கெட்டுப் போய் அடிச்சுப்புட்டேன். ராசா... என் கண்ணுல்ல! வாம்மா! ஏதோ தெரியாம அடிச்சிட்டேன். கன்னம் வலிக்குதா?''— அவன் கண்களில் நீர் வழிய சிறுவனைத் தன்னருகே கூப்பிட்டான்.

அந்தச் சிறுவன் பயத்தில் என் கால்களைக் கட்டிக் கொண்டான்.

''வரமாட்டியா ராசா? பரவாயில்லே, நல்லா இரு. தெரியாம அடிச்சதுக்கு என்னை மன்னிச்சுக்க தங்கம்!'' என்று ஆசீர்வாதம் செய்வது போல் கையை உயர்த்திவிட்டுக் கண்ணீருடன் நகர்ந்தான்.

நான் அந்தச் சிறுவனை அழைத்துக் கொண்டு பஸ் ஸ்டாண்டைவிட்டு வெளியே வந்தேன்.

''ஆனந்த்... அதுதானே தம்பி உன் பேரு? கார்டிலே பார்த்தேன். ஆமா, டொனேஷனுக்காக எதுக்காக பஸ் ஸ்டாண்ட் வந்தே? உங்க பக்கத்து வீடுகளிலோ, இல்லே தெரிஞ்சவங்ககிட்டேயோ வாங்கக்கூடாது?''

''எங்க ஸ்கூல் பசங்களே பத்துப் பேர் இருக்கோம். மற்ற ஸ்கூல் பசங்களும் நிறைய இருக்காங்க. அவங்களுக்கும் இதே மாதிரி கார்டு கொடுத்திருக்காங்க. அவ்வளவு பேரும் ஒரே இடத்துலே கேட்டா எத்தனை பேருக்குத் தான் தருவாங்க? அதுதான் பழக்கமில்லாத ஆட்களிடம் கேட்கலாம்னு பஸ் ஸ்டாண்டுக்கு வந்தேன்...'' —தேம்பினுன்.

''அழாதே தம்பி! வா. உன்னை உங்க வீட்டில விட்டுட்டுப் போறேன். வீட்டில அப்பா, அம்மா இருப்பாங்களா?''

''அப்பா ஆபீஸ் முடிஞ்சு இப்பத்தான் வந்திருப்பார். எங்க அம்மா சின்ன வயசிலே செத்துப் போயிட்டாங்களாம்.''

இதைக் கேட்டவுடன் அவன் மேல் இரக்கம் அதிகமாகியது. எனக்கு அவன் அப்பாவைப் பார்த்துப் பேச வேண்டும் போலிருந்தது.

அவன் வீடு ஒரு காம்பவுண்டுக்குள் இருந்தது. பையனைப் பார்த்தவுடன் அவன் அப்பா வேகமாக, ''என்னடா ஆனந்த், சாயந்திரம் பால் சாப்பிடலையா? டம்ளர்லே அப்படியே இருக்கு. வீட்டுக்கு வராமலே வெளியே விளையாடப் போயிட்டியா?'' என்றவர், கண்களில் தயக்கம் தெரிய என்னைப் பார்த்தார்.

நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் உள்ளே அழைத்து உட்காரச் சொன்னுர்.

பஸ் ஸ்டாண்டில் நடந்தவற்றை நான் மெதுவாக விவரித்தேன். அவர் அமைதி

யாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பிச்சைக்காரன் அடித்து விட்டான் என்றவுடன் அவருக்குக் கோபம் எழுந்தது.

''எந்தப் பிச்சைக்காரன்? வலது கால் ஊனத்துடன் கட்டையை வைத்துக் கொண்டு நடப்பானே, அவனா? முகத்தில் கூட ஒரு பெரிய வடு இருக்குமே, அவன் தானே?'' என்று கோபத்துடன் கேட்டார்.

நான் 'ஆமாம்' என்று சொன்னவுடன் அவரிடம் ஒரு கோப வெறி!

தன் மகனை இழுத்து மாறி மாறி அடித்தார்.

''பிச்சைக்காரப் பய மாதிரி பஸ் ஸ்டாண்டில் போய் ஒவ்வொரு ஆளா பார்த்துக் காசு கேட்டு என் மானத்தை வாங்கிட்டியேடா!'' என்று கத்தினார்.



''அதுக்கு அவன் என்னங்க பண்ணுவான்? அந்த ஸ்கூல் நிர்வாகிகளைச் சொல்லணும். இவ்வளவு சின்னப் பையங்ககிட்டே டொனேஷன் கார்டைக் கொடுத்தா அவங்க எங்கேதான் போவாங்க...'' என்றேன் நான்.

''அதுக்காக பஸ் ஸ்டாண்டில போய் பிச்சை எடுக்கறதா?''

''அதுக்குக் காரணம் நீங்கதான்... நீங்க ஏன் அந்த மாதிரிப் பள்ளிகளில் உங்க பையனைச் சேர்க்கறீங்க?''

''என்ன செய்யறது? எங்க பசங்களும் படிக்கணுமே!''

''அதற்கு வேற ஸ்கூலே இல்லையா? உங்க பையன் இங்கிலீஷ்ல பேசணும்கிற ஆசை உங்களுக்கு. உங்களை 'டாடி'ன்னு கூப்பிடணும். நாலு பேருக்கு மத்தியில இங்கிலீஷ் மீடியம்னு பெருமையா சொல்லணும். இதுதானே உங்க ஆசை?''

''அப்படி இல்லீங்க! அந்த எண்ணத்தோடு அவனை நான் அந்தப் பள்ளியில் சேர்க்கலே...'' என்றவர், ஆனந்தை அணைத்துக் கொண்டு கன்னத்தைத் தடவிக் கொடுத்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன.

''இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரிடமும் கையேந்தக் கூடாது, என்ன?'' என்றார்.

ஆனந்த் தலையாட்டினான்.

நாங்கள் இருவரும் வெளியே வந்தோம்.

''அந்தப் பிச்சைக்காரன் இன்னும் பஸ் ஸ்டாண்டிலதான் இருப்பானா?'' என்று கேட்டார்.

''எதுக்குக் கேட்கறீங்க...? உங்க பையனை அடிச்சதுக்காக அவனை நீங்க அடிக்கப் போறீங்களா?''

''அதுக்கு இல்லீங்க. அவன்கிட்டே நான் மன்னிப்பு கேட்கணும்.''

''எதுக்கு மன்னிப்பு?''

''என் பையன் பஸ் ஸ்டாண்டில போய் ஸ்கூல் டொனேஷனுக்காக ஒவ்வொருத்தர்கிட்டேயும் பிச்சை எடுத்திருக்கானே, அதுக்காக.''

''அதுக்கு அவன்கிட்டே எதுக்கு நீங்க மன்னிப்பு கேட்கணும்? உங்க பையனை அடிச்சதுக்கு அவன்தானே தண்டிக்கப் படணும். உங்க பையனை அடிக்கிறதுக்கு அவனுக்கு என்ன உரிமை இருக்கு?''

''அவனுக்குத்தாங்க உரிமை இருக்கு. ஏன்னா, ஆனந்தோட உண்மையான அப்பாவே அந்த பிச்சைக்காரன்தான்.''

நான் அதிர்ந்து போனேன்.

''என்ன! ஆனந்த் உங்க பையன் இல்லையா..?''

''இல்லீங்க. எனக்குத் திருமணமாகி ரொம்ப வருடங்களாகியும் குழந்தை இல்லே. என் மனைவியும் இறந்து விட்டாள். ரெண்டாவது கல்யாணம் செய்துக்கறத்துக்கும் மனசில்லே. வடக்கே எங்கெங்கேயோ இருந்துவிட்டு ஏழு வருஷத்துக்கு முன்னடி இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தேன். அப்போ, நீங்க சொன்னீங்களே, அந்தப் பிச்சைக்காரன்கிட்டே கைக் குழந்தையா இருந்த ஆனந்தின் அழகில் கவரப்பட்டு அவனைத் தத்து எடுத்துக் கொண்டேன். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது.''

எனக்குப் பேச்சு எழவில்லை.

''நீங்க நினைக்கிற மாதிரி, பிச்சை எடுக்கறதிலே தனக்குப் போட்டியா வந்துட்டானேங்கிற நினைப்பிலே அவன் ஆனந்தை அடிக்கவில்லை. தன் பையனாவது நல்லபடியா வளரட்டுமேங்கிற நினைப்பிலதான் ஆனந்தை எனக்குத் தத்து கொடுத்தான். ஆனந்த் ஒவ்வொருத்தரிடம் கெஞ்சிக் கொண்டு நிற்பதைப் பார்த்தவுடன் அவனுக்கு ஆத்திரம் வந்திருக்கும், அடித்து விட்டான்.''

''புரியுதுங்க.''

''நான் அவனைப் பார்த்து 'இனி எந்தக் காலத்திலும் ஆனந்தை அப்படி ஒரு நிலைமைக்குக் கொண்டுவரமாட்டேன்'னு உறுதியளிக்கிறதோட மட்டுமல்ல, நடந்த அசம்பாவிதத்துக்காக நான் அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். உங்க இரக்க குணத்துக்கும் என்னுடைய நன்றி. நீங்க ரூமுக்குப் போறதானா போயிட்டு வாங்க'' என்று எனக்கு விடைகொடுத்தார்.

''இல்லீங்க. நானும் அவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்'' என்றேன் தழுதழுத்த குரலில்.

விசேஷ நிருபரின் டூப் ரிப்போர்ட்!

பிரசாத் ஸ்டூடியோ ரிக்கார்டிங் தியேட்டர் பக்கம் அதன் உரிமையாளரான திரு. எல்.வி. பிரசாத் 'ரவுண்ட்ஸ்' வருகிறார்.

இளையராஜாவுக்காக, வைரமுத்துவும் மு. மேத்தாவும் அங்கு காத்திருக்கிறார்கள்.

பிரசாத்: யாருப்பா அது...? இங்கே வா... மரத்துலே ஒரே காக்காயா இருக்குது பார்... விரட்டு... உள்ளே ரிக்கார்டிங் டிஸ்டர்ப் ஆயிடும்... (உத்தரவிட்டு விட்டு நகர்கிறார்)

வைரமுத்து: பார்த்தீங்களா மேத்தா.. பெரியவர் காக்காய்களை விரட்டுவதில் மும்முரமாக இருக்கிறார். தியேட்டர் பக்கம் போகாதீங்க...

மேத்தா: யாரைக் காக்காய் என்கிறீர்கள்.. நா காக்க... இல்லையேல் சோகாப்பாய்...

வைரமுத்து: பலே! பலே! மேத்தா 'மேதா விலாசம்' காட்டுகிறார்!

மேத்தா: உங்கள் விலாசம் என்னவோ...?!

வைரமுத்து: சர்க்குலர் ரோடு, யுனைடெட் இந்தியா காலனி, சென்னை-24

மேத்தா: சிரிக்க வைத்தால் போதாது... சிந்திக்கவும் வைக்க வேண்டும்...!

வைரமுத்து: கற்பனை சிறகடிக்கும்போது நான் சிந்திப்பேன்...

மேத்தா: எப்ப பார்த்தாலும் 'நான்...' இல்லாட்டி 'என்...' இப்படி உங்களைப் பத்தியே சொல்லிக்குங்க... கண்ணதாசன் கூட வனவாசத்திலே மட்டும்தான் தன்னைப் பத்திச் சொல்லியிருக்கார். மத்த சமயம் எல்லாம் பொதுவாத்தான் பேசுவார்..

வைரமுத்து: என் அந்தராத்மா சொல்லச் சொல்கிறதே... நான் நானாக இருக்கும் போது என் வார்த்தைகளில் வழிவது அத்தனையும் சத்தியமே...

மேத்தா: இதான் வாணும்... மனசுக் குள்ளே 'அ' சொல்லிட்டு சத்தியம் பண்ணக்கூடாது..

திடீரென்று 'அடாடா...! இரட்டை இலை போலச் சேர்ந்து நிற்கும் தங்கக் கவிஞர்களை நேரில் பார்க்கும்போது உள்ளம் உவகை பூக்கிறது...!' என்று குரல் கேட்க, இருவரும் திரும்பிப் பார்க்கிறார்கள். கவிஞர் நா. காமராசன் வந்து கொண்டிருக்கிறார்.


வைரமுத்து-மேத்தா: (கலவரத்துடன்) வாங்க காமராசன்... எங்கே இந்தப் பக்கம்...?

காமராசன்: சும்மாதான்... ராஜாவோட உதவியாளர் கல்யாணம் கூப்பிட்டு அனுப்பினார்... (இருவரும் மேலும் கலவரமடைகிறார்கள்.)

கல்யாணம்:(எட்டிப் பார்த்து) அடடே! வாங்க வாங்க... இன்னிக்குக் கோவைத் தம்பி சாரோட படத்துக்கு அண்ணன் ட்யூன் போட்டுக்கிட்டிருக்கார். ஏற்கெனவே போட்ட நாலு ட்யூனையும் வாலி சார், புலமைப்பித்தன், முத்துலிங்கம், கங்கை அமரன் நாலு பேருக்கும் அண்ணனே குடுத்துட்டார். இப்ப மிச்சம் ஒரே ஒரு ட்யூன்தான். யாருக்குக் குடுக்கறதுன்னு ஒரே தலைவலி. அதனால் ஒரு சின்ன போட்டி வைக்கச் சொல்லியிருக்காரு அண்ணன்...

மூவரும்: என்ன போட்டி...? என்ன போட்டி...? கவிதைப் போட்டியா... சொல்லுங்க, பிச்சு உதறிடறோம்...

'வாங்க, வைத்தியரே!'



கல்யாணம்: அதுக்கெல்லாம் ரொம்ப கஷ்டப்பட்டுக்காதிங்க.. கவிதையெல்லாம் இங்கே யார் கேட்டது..? நமக்குத் தெரிஞ்ச விளையாட்டுத்தான். மியூஸிக் சம்பந்தப்பட்டு இருக்கறதால மியூஸிகல் சேர் போட்டிதான்..

வைரமுத்து: ரொம்ப ரொம்ப நல்ல போட்டி. ராஜா அண்ணன் சொல்லிட்டார்னு அதுக்கு அப்பீலே கிடையாதே! அதுவும் ஒரு இசையமைப்பாளரோட ட்யூனை வாங்கறதுக்காக இசை நாற்காலி போட்டி... ஓ...! இந்த எண்ணமே என் காதில் இனிய ராகமாக எதிரொலிக்கிறதே...!

(மூவரும் போட்டிக்குத் தயாராகிறார்கள். கல்யாணம் இளையராஜாவின் லேட்டஸ்ட் ஹிட்டான ஒரு பாடலைப் போட, மூவரும் ஒரு நாற்காலியைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.)

நா.காமராசன்: (சுற்றி ஓடியவாறு திடீரென) அதோ பாருங்க... அண்ணன் வெளியே வர்றார்...

வைரமுத்து-மேத்தா: எங்கே... எங்கே...?!

(வைரமுத்துவும் மேத்தாவும் திரும்பிப் பார்க்கும்போது அரசியலில் இரண்டு கட்சிகளில் அனுபவம் கண்ட நா.காமராசன் ‘டக்’கென்று இசைநாற்காலியைப் பிடித்து விடுகிறார். கல்யாணம் நா.கா-வை உள்ளே அழைத்துச் செல்ல, ஏமாற்றமடைந்த வைரமுத்துவும் மேத்தாவும் லாபியில் சோபாவில் அமர்ந்து கொள்கிறார்கள்.)

வைரமுத்து: நாம் சந்தித்தே அதிக நாட்கள் உதிர்ந்து விட்டனவே!

மேத்தா: எப்படிச் சந்திக்கமுடியும்...? நீங்கதான் ரேஸ்ல முன்னாடியே ஓடிட்டிருந்தீங்களே.. உங்களைப் பிடிச்சிடலாம்னு தான் நானும் நாலு வருஷமா முயற்சி பண்றேன். ஏதோ இப்பவாவது நீங்க ஓய்வா இருக்கறப்போ சந்திக்க வாய்ப்புக் கிடைச்சது பாருங்க. ரொம்ப சந்தோஷமா இருக்குதுங்க...

வைரமுத்து: ஓய்வாக இருக்கிறேனா? யார் சொன்னது? கதிரவனுக்கும் காற்றுக்கும் எப்படி ஓய்வில்லையோ அதே மாதிரி வயதாகிப் போனாலும் வைரமுத்துவுக்கு ஓய்வில்லை பிரதர்! என் பாடல்கள் காற்றில் பறந்து கொண்டேயிருக்கும்... என் பாடல் எப்போதும் தனித்து நிற்கும்.

மேத்தா: ஆமா... ஆமா... சின்னச் குழந்தைங்ககூட நீங்க எழுதற பாட்டை அடையாளம் கண்டுக்கிறாங்க...

வைரமுத்து: அப்படிச் சொல்லுங்க...

மேத்தா: உங்க பாடல்கள் எல்லாத்திலேயும் அணில், ஆடு, இலை, ஈ...ங்கற மாதிரி வசந்தம், மேகம், தாகம், மோகம்னு வார்த்தைகளே வர்றதாலே குழந்தைங்க அடையாளம் கண்டுக்கிறாங்கன்னு சொன்னேன்...

வைரமுத்து: வேண்டாம், விட்டுவிடுங்கள். அவை என் அந்தப்புரச் சொற்கள்..

மேத்தா: அப்ப வெளிய வரவே கூடாதுங்களே..

வைரமுத்து: நீங்களும்தான் ‘சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது’ன்னு கவிதை எழுதினீங்க... ஆனா...!

மேத்தா: ஆனா என்ன...?

வைரமுத்து: சின்ன நூல்கண்டுல சிறைப்படாத நீங்க பாவம்.. சினிமாங்கற பெரிய தாம்புக்கயிற்றிலே இல்லே இப்ப மாட்டிக்கிட்டிங்க...

மேத்தா: நீங்க மட்டும் என்னவாம்! 'மக்களைச் சுருள வைக்கும் திரைப் படச்சுருளையெல்லாம் ஒரு தீக்குச்சிக்குத் தின்னக் கொடுப்போம்'னு எழுதிட்டு இப்ப உங்களையே சினிமா தின்னுக்கிட்டிருக்கே... அதை மறந்துடாதிங்க..

வைரமுத்து: அதெல்லாம் சும்மா 'கிம்மிக்ஸ்' மேத்தா. இப்படியெல்லாம் ஏதாவது எழுதினாத்தானே நம்மைக் கவனிக்கிறாங்க... இந்த சினிமாவுக்காக நான் எத்தனை ஆண்டு காலம் 'ராஜதவம்' இருந்தேன் தெரியுமா?

மேத்தா: அதென்னங்க ராஜதவம்?

வைரமுத்து: ராஜவசந்தம், ராஜவாழ்க்கை மாதிரி... ராஜதவம்!

மேத்தா: இப்படியே போனா ஆபீஸ் பியூனைக்கூட 'ராஜபியூன்' என்று சொல்லிவிடுவீர்கள் போலிருக்கிறதே...!

வைரமுத்து: இதெல்லாம் கவிதா வார்த்தைகள் மேத்தா... இப்ப நீங்க கூட எழுதலியா... கண்ணீர்ப் பூக்கள், கண்ணீர்க் கம்பிகள், ஜன்னல் தேவதைனு.. அது மாதிரிதான் இதுவும்... எனக்குன்னு நான் கண்டுபிடித்த வார்த்தைகள் இவை...!

மேத்தா: சரி, விடுங்க... இப்ப எத்தனை கம்பெனிகள்லே பாட்டெழுதறீங்க...?

வைரமுத்து: தமிழ்நாட்டில உள்ள எல்லா கம்பெனிகள்லேயும் எழுதறேன். மற்றும் 20th Century Fox, Columbia, Metro Goldwyn Mayor, நிகிதாஷா, டோஷிபா போன்ற கம்பெனிகள்லேயும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

மேத்தா: (மலைத்துப் போனவராகத் தனக்குள் 'இந்த கம்பெனிகள் எல்லாம் இங்கதான் இருக்கா...? பாண்டி பஜார் ஏரியால நம்ம கண்லேயே படலியே... எப்படியாவது இதுக்கெல்லாம் அட்ரஸ் விசாரிச்சு வச்சுக்கணும்!') இதெல்லாம் வெறும் அட்ரஸ்கள்... அனுபவம் என்பது வேறு...! வானம்பாடிலேருந்து வளர்ந்து வந்தவன் நான்... நீங்கள் இன்றுதானே எழுதத் தொடங்கியவர்..?!

வைரமுத்து: வானம்பாடியா... அதில கண்ணதாசன்தானே பாட்டெல்லாம் எழுதினாரு... நீங்க எங்கே எழுதினீங்க...?

மேத்தா: ஐயோ! நான் அதைச் சொல்லலிங்க... வானம்பாடி இயக்கம்னு பத்து வருஷத்துக்கு முன்னாடி கவிதை இயக்கம் வந்துதுங்களே... அதைச் சொல்றேங்க...

வைரமுத்து: எனக்கு இயக்கமெல்லாம் தெரியாதுங்க.. இயக்குநர்கள்தான் தெரியும்.

மேத்தா: உங்களைப் பத்தி ஒரு விஷயம். இயக்குநர்கள்கிட்டே நானே கேட்கணும்னு இருக்கேன்.. ரொம்ப நாளா எனக்கு உங்க பாடல்கள் எல்லாம் புரியவே இல்லீங்க.. இந்திரன் தோட்டத்து முந்திரின்னு எழுதறிங்க.... பொதுவுடமைக் கவிஞர்னு சொல்லிக்கிறீங்க... இந்திரனே இல்லைங் கறவங்க கம்யூனிஸ்டுகாரங்க... அவன் தோட்டத்துல முந்திரி முளைச்சது எப்படிங்க..?

வைரமுத்து: ஒரு பொதுவுடமைக் கவிஞன் இதுமாதிரி எல்லாத்தையும் சிந்திக்கக் கடமைப்பட்டவன் ஆகிறான்... நான் பொதுவுடமைக் கவிஞன் என்பதால் தான் என் மகனுக்கு 'கார்க்கி' என்று பெயர் வைத்திருக்கிறேன்.. இது ஒருபுற மிருக்க, உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்லியே தீரவேண்டும். இந்திரன் காதலில் வீரியம் மிக்கவன். வீரியம் மிகுந்த அவனது தோட்டத்திலே முளைத்த வீரியம் மிகுந்த முந்திரி என்று பெண்ணைக் குறிப்பிடுகிறேன்.

மேத்தா: அப்புறம் 'வானம் எனக்கொரு போதிமரம்... நாளும் எனக்கது சேதி தரும்'னு சொல்றீங்க... வானம் தினசரி நியூஸ் தருதா என்ன உங்களுக்கு...? அது என்ன, மாலைமுரசா?

வைரமுத்து: இந்த இடக்கும் எதிர்ப்பும் வேண்டாம் பிரதர். எனது எதிரிகள் என்மீது விடுகிற அம்புகளையெல்லாம் கைப்பற்றி என் பல் குத்திக் கொண்டிருக் கிறேன்!

மேத்தா: அவ்வளவு பெரிய இடை வெளியா...?!

வைரமுத்து: தமாஷ் வேண்டாம்... நான் தற்போது சிந்தித்துக் கொண்டிருப் பதே வேறு... பாரதிராஜா சார்கிட்ட சொல்லி ஒரு நல்ல கிராமீயச் சூழ்நிலை சினிமாஸ்கோப் படம் எடுக்கச்



"சார்... இட்லியைக் கையிலே எடுத்துக்குங்க... சாம்பார் ஊத்தப் போறேன்... அப்புறம் இட்லியைக் காணோம்னு சண்டை போடக்கூடாது!"

— எம். குமரப்பன்

சொல்லணும்... அதுக்குக் கதைகூட நானே வச்சிருக்கேன்..

மேத்தா: ஆமா... உங்க கதையை நம்பி இளையராஜா 'ஆனந்தக்கும்மி' எடுத்துத் தான் அடி கிடைச்சுதே!

வைரமுத்து: 'காதல் ஓவியம்' என்ற மகத்தான காவியத்தையும், 'ஆனந்தக் கும்மி' என்ற அபூர்வமான காவியத்தையும் ரசிக்க மக்களுக்கு ரசனை போதாதுங்க பிரதர்!

மேத்தா: இதுக்குத்தான் தெரியாத ஃபீல்டுல எல்லாம் கை வைக்கக் கூடாதுன்னு பாப்லோ நெரூடா சொல்லியிருக்கான். பேசாம நீங்க கவிதையே எழுதிட்டிருந்திருக்கலாம்... இப்ப என்னை எடுத்துக்குங்க... கண்ணீர்ப் பூக்கள் புஸ்தகத்துல கிடைச்ச பேரை வச்சிக்கிட்டே இன்னிவரைக்கும் கவிதை எழுதிட்டிருக்கேன்... முத்திரைக் கதைகள் எழுதினதாலே ஒரு சிறுகதைத் தொகுப்பும் போட்டுட்டேன்... முதல் முதல்லே 'சோழ நிலா' எழுதினேன். அதுக்கு பிரைஸ்...

வைரமுத்து: ஆனு சினிமாவில மட்டும் ஷைன் பண்ண முடியலையே... ஏன்னு, சினிமாப் பாட்டு எழுதறது கவிதை எழுதற மாதிரி அவ்வளவு ஈஸி இல்லே, தெரியுமா? அதுக்குன்னு பயிற்சி வேணும் பிரதர்!

மேத்தா: ஒப்புக்கறேன்... இருந்தாலும் உங்ககிட்ட இருக்கிற டெக்னிக் எல்லாம் நமக்கு வரமாட்டேங்குதுங்க...

வைரமுத்து: (உணர்ச்சிவசப்பட்டு) அப்படி நான் என்ன டெக்னிக் செய்துவிட்டேன்?

மேத்தா: வாய்ப்புக் கிடைக்கற போதெல்லாம் இளையராஜா, பாரதிராஜா, பாக்யராஜ்—இப்படி ஒரு சினிமாக் காரங்களை விடாம பாராட்டி எழுதிடுறீங் களே... சமீபத்துலே ஏவி.எம்-ல ஒரு லைட் பாயைச் சந்திச்சேன்.. அவனைப் பத்திக்கூட நீங்க 'உன்னதமான ஓர் ஒளிப் பணிப் பையன்'னு சினிமா எக்ஸ்பிரஸ்லே எழுதினிங்களாம்... அவன் அதை ஃப்ரேம் போட்டே வீட்ல மாட்டியிருக்கானும்...

வைரமுத்து: இதையே தானே ஜூனியர்லே நீங்களும் செய்திங்க.. பத்து வாரத்தில நீங்க நிறைய சினிமா புள்ளிகளைத் தானே பாராட்டி எழுதியிருந்தீங்க. கவிதை எங்கே எழுதினீங்க...? அப்புறம் குமுதத்திலேகூட இளையராஜாவை, 'நாளும் இசைபரப்பும் ஞானசம்பந்தன்'னு எழுதினீங்களே... மறந்துட்டீங்களா..?

மேத்தா: நீங்களும்தான் இளையராஜாவை இசைச்சித்தர்னு சொன்னிங்க..

வைரமுத்து: (குரலைத் தாழ்த்தி) இசைச் சித்தர்னு மட்டும்தான் நான் சொன்னேன். வெறும் சித்து வேலை மட்டும்தான் அவர் செய்றார், உண்மையான இசை இல்லைங் கறதை நான் மறைபொருளாகத்தான் குறிப்பிட்டேன்.

மேத்தா: இதை நான் ஒப்புக்கமாட்டேன் வைரமுத்து... போகட்டும்... No two doctors agree-னு ஆங்கிலத்துலே சொல்ற மாதிரி No two poets agree...

வைரமுத்து: பழமொழியைத் தப்பா பயன்படுத்தறீங்களே.. இரண்டு கவிஞர்கள் ஒருமித்த கருத்துக்களை உடையவர்களாக இருக்கமாட்டாங்கதான்... ஆனால், இங்கு உரையாடிக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் தானே கவிஞர்...!

மேத்தா: என்னைக் கவிஞர் என்று ஒப்புக்கொண்ட உங்கள் பெருந்தன்மையை மெச்சுகிறேன்...!

வைரமுத்து: அவசரப்பட்டு மெச்ச வேண்டாம். கவிஞர் என்று நான் குறிப்பிட்டது என்னை மட்டுமே...!

மேத்தா: சரி சரி... என்னை மட்டுமேன்னு ஒப்புக்கறேன்... விடுங்க...

வைரமுத்து: (இரக்கத்தோடு) துவள வேண்டாம் மேத்தா...! உங்கள் வீட்டு வாசற்கதவையும் சினிமா சான்ஸ் நிச்சயம் தட்டும்..

மேத்தா: ஐயோ! இப்ப அது என் வீட்டுக்குப் போய்த் தட்டினு நான் அங்கே இருக்கமாட்டேனே...?!

வைரமுத்து: அப்ப திரும்பிப் போவட்டும்...! என்னங்க பெரிய சினிமா...

இந்த சினிமா மயில்கள்
கலாபம் விரித்து
நிழல் கொடுக்கும்
என்று நினைத்தோம்
ஆனுல் அவையோ
நம் ஓய்வு நேரங்களின் மீது
எச்சமிட்டுவிட்டன..

என்று நான் ஏற்கெனவே புதுக் கவிதை எழுதியிருக்கேனே, படிக்கலேயா நீங்க..

மேத்தா: அப்போ இலக்கிய மயிலின் தோகை...?!

வைரமுத்து: சினிமா பாட்டுல இலக்கியம் பண்ண முடியாதுங்க. நீங்க இலக்கிய கர்த்தா.. நீங்களும் சினிமாக்கு வந்துட்டா புதுக் கவிதை இலக்கியம் இலங்கைத் தமிழன் மாதிரி அநாதையாகிவிடும்.

மேத்தா: என்னுடைய ரசிகர்கள் எல்லாரும் 'நீங்க ஏன் சினிமாவுக்குப் பாட்டு எழுதமாட்டேங்கறீங்க...?'ன்னு ஒருமாதிரி துக்கம் விசாரிக்கிறுங்களே.. அவங்களுக்குப் பயந்துட்டே நான் சினிமா சான்ஸுக்கு அலையறேன்...

வைரமுத்து: இங்க ஃபைனன்ஸ் பண்ற மண்ணின் மைந்தனும் மார்வாடியும் சொல்றபடியெல்லாம் எழுதணுமே... இப்படித்தான் ஒரு படத்துக்கு நம்ம ஊர் ஆளும் ஒரு மார்வாடியும் ஃபைனன்ஸ் பண்ணியிருந்தாங்க.. அந்தப் படத்துக்கு ஒரு பாட்டு... ஓ.. ராஜாவே...ன்னு பல்லவி ஆரம்பிச்சதும் நம்ம ஆள் தமிழர் ஆச்சே... 'ஜா' வடமொழின்னு தடை பண்ணினர்... சரி, ஓ ராசாவேன்னு மாத்தினதும் வடநாட்டு சேட்டு 'ராஜா'னு இருக்கணும், அப்பதான் ஃபைனன்ஸ் பண்ணுவேன்னு சொல்லிட்டார். அப்புறம் ஓ.. ராஜாவே.. என் ராசாவே-ன்னு எழுதி ரெண்டு பேரையும் திருப்தி பண்ணேன். இப்படியெல்லாம் இருக்குங்க பிரச்னை...

மேத்தா: சரியாப் போச்சு. அப்படீன்னு இப்ப நீங்க புதுக் கவிதையே எழுதறது இல்லையா.... புஸ்தகம் ஒண்ணும் வெளி வரலேயே...

வைரமுத்து: யாராவது சிச்சுவேஷன் சொன்னுத்தான் 'இப்பல்லாம் எழுதவே வருது...

மேத்தா: நீங்க இந்திக்கு முயற்சி பண்ணலையா...? இப்போ தமிழ்ல நடிகர் லேர்ந்து லேட்பாய் வரைக்கும் இந்திக்குப் போகணும்னுதானே ஆசைப்படறுங்க..

வைரமுத்து: நடிகை நடிகருக்குன்னு டப்பிங் வாய்ஸ் தருவாங்க.. பாட்டுக்கு எப்படிங்க முடியும்... தவிர, எனக்கு இந்தி தெரியாதே...?!

மேத்தா: கல்யாண்ஜி ஆனந்த்ஜி, லக்ஷ்மிகாந்த் பியாரிலால்... இப்படி யாரையாவது அன்போட இறுக்கி அணைச்சுக்கிட்டா இந்தி ஒரே வாரத்துலே தானு வருது...

வைரமுத்து: கிண்டல் பண்ணுதீங்க.. ஆமா... சமீபத்தில நீங்க படிச்ச புஸ்தகங்களிலே பிடிச்ச புஸ்தகம் எது மேத்தா?

மேத்தா: சமீபத்தில மட்டுமல்ல— எப்போதைக்கும் எனக்குப் பிடிச்ச புஸ்தகம் இளையராஜாவோட சங்கீதக் கனவுகள்தான்... ஆமாம், உங்களுக்கு அது பிடிக்காதா?

வைரமுத்து: சே...! சே...! என்னங்க இப்படிக் கேட்கறீங்க...! சங்கீதக் கனவுகளும் எனக்குப் பிடிக்கும்தான்... இருந்தாலும் எனக்கு ரொம்பப் பிடிச்சது வேறெரு புஸ்தகம்தான்.

மேத்தா: (ஆர்வத்துடன்) என்ன புஸ்தகம், சொல்லுங்க... என்னோட கண்ணீர்ப் பூக்கள்தானே..?

வைரமுத்து: அட...! நீங்க ஒண்ணு. உலகத்திலேயே எனக்கு ரொம்ப ரொம்ப

"நான் எழுதியிருக்கிற இந்தக் கதை ரொம்ப ஆழமான கருத்தைக் கொண்டதுங்க..!"

"எதுவும் சமூகப் பிரச்னையா..?"

"ஊஹும்.. கதை நடக்கிறது பூரா ஒரு சுரங்கத்துக்குள்..!"

— என்.எஸ்.வி. குருமூர்த்தி



பிடிச்ச புஸ்தகம் 'இதுவரை நான்' என்கிற புஸ்தகம்தான்..

மேத்தா: யார் எழுதினது? கங்கை அமரனா?

வைரமுத்து: (அடக்கத்துடன்) நான் எழுதின புஸ்தகம்தான் அது..!

மேத்தா: அட, உங்க புஸ்தகம்தானா? அதானே பார்த்தேன். வைரமுத்து வேறொரு புஸ்தகத்தைப் போய்ச் சொல்லிட்டாரேன்னு தப்பா நினைச்சுட்டேன்.. ஆமா... இவ்வளவு பேசறீங்களே... இதுவரை உங்களுக்கு ஏன் எந்தப் பரிசும் கிடைக்கலே...? எனக்குக்கூடத் தமிழக அரசு 'ஊர்வலம்' புஸ்தகத்துக்கு ரெண்டாயிரம் தந்தது...

வைரமுத்து: அதெல்லாம் எனக்குக் கிடைக்காது மேத்தா.. முதல் காரணம், அப்படிப்பட்ட புஸ்தகங்களா எழுதறதுக்கு எனக்கு நேரமில்லே. ஏதோ வாராவாரம் கல்கி, ஜெமினி சினிமாவிலேர்ந்து ஆர்ட்டிகிள் கேட்கறப்போ எழுதறேன்... அப்புறம் அதையே பிரிச்சுப் பிரிச்சு ரெண்டு மூணு புஸ்தகங்களா போட்டுடறேன்.. தவிர, நான் அ.தி.மு.க. கவிஞன் இல்லே பாருங்க..

மேத்தா: அ.தி.மு.க. கவிஞருங்களா... என்ன சொல்றீங்க...?!

வைரமுத்து: ஆமாம்...! இப்ப தமிழக அரசு பாரதிதாசன் பரிசு குடுத்தாங்களே... யாருக்கெல்லாம் கிடைச்சிருக்குன்னு யோசிச்சுப் பாருங்க... எல்லா அ.தி.மு.க. கவிஞர்களும் பாரதிதாசன் பரிசை வாங்கிட்டாங்க.. மறந்துட்டேனே.. நம்ம அண்ணன் நா. காமராசன்கூட அதை வாங்கிட்டாரே!

மேத்தா: அப்ப பரிசு கிடைக்கணும்னா அ.தி.மு.க.-விலே மெம்பரா ஆயிடணும்னு சொல்றீங்க...

வைரமுத்து: அதுக்காக நான் முயற்சி பண்ணினா கலைஞர் கோவிச்சுக்குவாரோன்னு பயத்துல சும்மா இருந்துட்டேங்க..


மேத்தா: பாருங்க வைரமுத்து... இதோட இருபத்தேழு கவிதைத் தொகுப்பு எழுதிட்டேன்... இந்த வருஷம் ஞானபீடப் பரிசுக்கு என் பெயர்தான் அடிபட்டுக் கிட்டிருக்கு... இதெல்லாம் எனக்குப் பிரமாதமில்லே.. நோபல் பரிசுக்குக்கூட என் பெயர் போயிருக்கு... அது கிடைச்சிடும்னு நெனைக்கிறேன். என்னோட அளவுக்கு யாரும் உயரமுடியாது. என் பின்னாடி பாருங்க... ஆயிரக்கணக்கான இளைஞருங்க அணிவகுத்து நிக்கிறாங்க... இருந்தாலும் மனசு சரியில்லேங்க... சினிமாவில மட்டும் இன்னும் சரியா சான்ஸே கிடைக்கலியே.. ம்ஹூம்... (பெருமூச்சு)

(இந்தச் சமயத்தில் இளையராஜாவின் உதவியாளர் கல்யாணம் வருகிறார்)

கல்யாணம்: மேத்தா சார்.. வைரமுத்து சார்... ஏவி.எம். ஸ்டூடியோ ஆர்.ஆர். ரிக்கார்டிங் தியேட்டர்ல கங்கை அமரன் இருக்கார்... ஒரே ஒரு ட்யூன் பாக்கியிருக்காம். முன்னாடி வர்றவங்களுக்குத் தரப் போறாராம்...!

சொன்னவுடன் வைரமுத்து வலசம்மா மாதிரியும், மேத்தா பி.டி. உஷா மாதிரியும் அதிவேகமாக ஏவி.எம். ரிக்கார்டிங் தியேட்டரை நோக்கி ஒலிம்பிக் வேகத்தில் ஓடத் தொடங்குகிறார்கள்!

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே."



முதல் பக்கம்தான் 'தூள்'னு நினைச்சேன். ஆனால், போன வாரம் விகடன்லே எல்லா பக்கங்களுமே 'படு தூள்!'

சென்னை-39 சுகந்தி நாராயண்

'திகைக்க வைத்த தீ விபத்து' தூங்குகின்ற ஆட்சியாளரைக் கிள்ளி யெழுப்பும் தலையங்கம்!

காங்கயம் வி.ஜி. இராமன்

தினந்தோறும் நாங்கள் கண்ணால் கண்டாலும், எழுத்து வடிவில் படிக்கும் போது, ஜாதவ் அங்கிள் எங்கள் நரம்பை முறுக்கேற்றி விட்டார்.

பங்களூர்-16 டால்ரிக்ஸ்

இதுவரை வந்த 'வாங்க, சௌக்கியமா?' உரையாடலில் 'சகலகலா வில்லவன்'தான் டாப்!

விருதுநகர்-1 சி. சரவணன்

ஏது விகடன் இந்தக் கனம் கனக் கிறதே என்று பார்த்தேன். எல்லாம் கிரேஸி மோகனின் கேசவப் புராண மகிமை எனப் பின்னால்தான் தெரிந்தது!

ராமநாதபுரம்-45 ஜெயலக்ஷ்மி ராகவன்

'சிம்பாலிக்', 'சஜெஸ்டிவ்'போன்ற அறுவை உத்திகளையெல்லாம் சட்டை செய்யாமல் ''அவார்டு' படம் எடுக்கிறேன்' என்று எங்களைப் போட்டு வதைக்காமல் ஜனரஞ்சகமான வெள்ளி விழாப் படங்களைக் கொடுப்பவர் எங்கள் எஸ்பி.எம். என்பதை டூப் ரிப்போர்ட்டில் மனம் திறந்து (தமாஷாகவும்!) ஒப்புக் கொண்டதற்கு நன்றி! கஞ்சத்தனமாக மார்க் கொடுக்கும் உங்கள் விமரிசனக் குழுவையே கிண்டல் செய்துள்ளதும் யதார்த்தமான கற்பனை. சபாஷ்!

காரைக்குடி சங்கரநாராயணன்

'இந்த வீடு-அந்த வீடு!' அருமையான நடையில் ரொம்ப சுலபமாக மனசை அள்ளிக் கொண்டது. 'அந்த ஒரு நாள்'—எதிர்பார்க்காத முடிவு.

பங்களூர்-18 கே. கணேச மூர்த்தி

'சந்தியா காலம்' சிறுகதையும் அதற் கான மாணவர் ஓவியமும் மாறுத லானவை.

அயன்புரம் த. சத்தியநாராயணன்

ஜாதவ் அவர்களின் த்ன்னலமற்ற மாபெரும் சேவைக்காகவாவது, அவரின் படத்தை அட்டையில் வெளியிட்டுக் கௌரவப்படுத்தினால் குறைந்தா போய் விடுவீர்கள்...?!

பங்களூர்-8 என்.எஸ். மணியன்

இரு பக்க அட்டைப் படத்துடன் பெரிய தலைவர்களை மோதவிட்டு அட்டகாசமாக ஆரம்பித்த உமது டூப் ரிப்போர்ட்டின் தற்போதைய நிலைமை யைப் பார்க்கும்போது ஞாபகத்துக்கு வருவது 'வரவர மாமியார்.. போலப் போனாளாம்' என்ற பழமொழிதான்!


பாப்பாக்குடி இரா. செல்வமணி

'இளமை' விமரிசனம் பார்த்தேன். ஏன் சார் இப்படி எல்லாம் வாசகர்களை யும் செலவு செய்ய வைத்து விகடன் பக்கத்தையும் வீணாக்கி... இதைவிட 'வி.வி.அ.' (விகடன் விமரிசனத்துக்கு அப்பாற்பட்டவை) என்ற முத்திரையிட்டு இம்மாதிரியான படங்களை ஒதுக்கி விட்டாலென்ன?

விருத்தாசலம் விஜயாதிருநாயகன்

வாசகர் போட்டிக்கான படத்தைப் பார்த்து அதில் இருப்பதைக் கண்டுபிடிப்ப தற்குள்... எனக்குத் தலைவலியே வந்தாச்சு..!?

கோவை-37 கி.ரங்கநாதன்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.

வாசன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெடுக்காக ஆனந்தவிகடன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர்: எஸ். பாலசுப்ரமணியன். இணை ஆசிரியர்: மதன். 757, அண்ணா சாலை, சென்னை-600002.



ஹேலோ வழங்குது
கூந்தல் எழில்—
கூந்தல் பெற்றிடும்
மென்மை சுகம்.
அதன் மணமோ
அபூர்வப் புதுமையே,
ஹேலோ உணர்வே
உன்னதமே.



வியப்பூட்டும் புதிய ஹேலோ வரிசை

ஹேலோ எக்
ஷாம்ப்பூ—
புரத
ஊட்டத்திற்கானது.

புதிய ஹேலோ
க்ரீன் ஆப்பிள்
ஷாம்ப்பூ—
வியப்பூட்டும்
புத்துணர்வு மணம்
அளிக்கிறது.

புதிய ஹேலோ
ஹெர்பல்
ஷாம்ப்பூ—
மூலிகைகளின்
இயற்கை நலன்கள்
உள்ளது.

ஹேலோ உணர்வே உன்னதமே!

B83.29.TM

'உராங்க, சௌக்கியமா?'

அமெரிக்காவில் கோர்ட் கேஸ் ம்பந்தமாக வாஷிங்டன் செல்கிறுர் மாரார்ஜி தேசாய். அவரை வழியனுப்பக் ழந்தை வருணுடன், மேனகா காந்தி ாலம் ஏர்போர்ட் வந்திருக்கிறுர்.

தொண்ணூற்றெட்டாவது முறையாக லங்கை தமிழர் பிரச்னை பற்றிப் பேச்சு ார்த்தை நடத்த வரும் ஜெயவர்த்தனவை ரவேற்க, ராஜீவ் காந்தியுடன் சோனியா ாந்தி அங்கு வருகிறுர்.

தேசாய் விமானத்தில் வழக்கப்படி வடிகுண்டு புரளி. விமானம் ரெடியாக ில்லே. வி.ஐ.பி. லௌஞ்சில் மேனகா பாய் உட்கார்ந்துவிட்டார்.

சோதனையாக ஜெயவர்த்தன விமான ம் வரவில்லே. சோனியா காந்தி ாஜீவ் காந்தியிடம் "இந்த ஜெயவர்த்தன க்கும் உங்களுக்கும் வேற வேலேயே டையாது. பேச்சு வார்த்தை பேச்சு

சோனியா



வார்த்தைன்னு கார்த்தாலே ஒரு வாட்டி, சாயந்திரம் ஒரு வாட்டின்னு அவர் கொழும்புக்கும் டில்லிக்கும் ஷட்டில் சர்விஸ் அடிப்பார். அவரை வரவேற்க ஒவ்வொரு முறையும் காத்திருக்கணும். சே! சுத்த போர்...!" என்று அலுத்துக் கொள்கிறுர். ராஜீவ் காந்தி சோனியாவை உள்ளே போய் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளச் சொல்கிறுர். சோனியாவும் இதுதான் சாக்கு என்று வி.ஐ.பி. லௌஞ்சுக்குப் போகிறுர்.

மேனகா: அழாதேடா வருண்.. தேசாய் தாத்தாகிட்டே சொல்லியிருக்கேன். நீ கேட்ட பிளேன் வாங்கி வருவார். அந்த தேசாய் தாத்தா நல்லவர். நிச்சயம் வாங்கிண்டு வருவார். நீ அழக்கூடாது...

வருண்: அந்த தாத்தாக்கு ஒண்ணும் தெரியாது.. அவர் வாங்கிண்டு

விசேஷ நிருபரின் டூப் ரிப்போர்ட்!

வரமாட்டார். எனக்கு இப்பவே வேணும்... ம்... ம்... ம்...

மேனகா: சே...! பிளேன்... பிளேன்.. இந்த பாழாய்ப் போன பிளேன்தான் உங்க அப்பா உயிரையே முழுங்கிச்சு. நீயும் அதுக்கே அலேஞ்சிண்டிரு...

(சோனியா உள்ளே வருவதைப் பார்த்து.. வயித்தெரிச்சலுடன் தனக்குள் ளாகவே)

மேனகா: நேத்திக்குக் கல்யாணமானவ ஹனிமூன் போற மாதிரி ரஷ்யா, அமெரிக்கானு ஆத்துக்காரரை இழுத்துண்டு ஊர் சுத்திண்டிருக்கா...

வருண்: மம்மி.. என்ன உனக்குள்ளேயே பேசிக்கிட்டிருக்கீங்க?

மேனகா: ஒண்ணுமில்லே... நீ உன் வேலேயைப் பாரு.. என் தலேயெழுத்து,

நான் புலம்பிண்டிருக்கேன்... (பர்ஸில் இருக்கும் சஞ்சய் காந்தியின் போட்டோ வைப் பார்த்து) இந்தப் பிராமணர் எதுக்காக இப்படி ஊருக்கு முன்னடி போய்த் தொலேஞ்சார்....? இவருக்குப் பதிலா நான் போய்த் தொலேச்சிருக்கலாம்.

(இதற்குள் வருண், சோனியாவைப் பார்த்து விடுகிறான்...)

வருண்: ஹாய் பெரியம்மா! எப்ப ஊர்லேர்ந்து வந்தீங்க? ராகுல், பிரியங்காவையெல்லாம் அழைச்சுக்கிட்டு வரலேயா?

சோனியா: நேத்து கார்த்தாலேதாண்டா கண்ணு வந்தோம்... ரெண்டு நாள் ஏர்லே வந்தது... ஒரே டயர்டா போய் ராகுலும் பிரியங்காவும் தூங்கிக் கிட்டே இருக்கா...

(மரியாதைக்காக மேனகாவும் அருகில் வந்து)

மேனகா: வாங்கோ மன்னி... எப்படி யிருக்கேள்...?

சோனியா: நன்னு இருக்கேம்மா.. நீ எப்படி யிருக்கே...? பார்த்து ரொம்ப நாள் ஆச்சு..

மேனகா: எப்படிப் பார்க்க முடியும்... கோட்டைக்குள்ளேன்னு உட்கார்ந்திருக் கேள்..! ஆமா... ஃபாரின் போயிருந் தீங்க போலிருக்கு...?

சோனியா: ஆமா.. ரஷ்யா, அமெரிக்கா, பாரிஸ் விஸிட்டை டி.வி-யிலே காட்டினுங்களே... பார்த்தீங்களா...?

மேனகா: நான் பார்க்கலே.. என்னுடை டி.வி-யை, பத்து நாளேக்கு முன்னடியே வித்தாச்சு.. சே...! எப்ப டி.வி. போட்டாலும் ஒருத்தரோட மூஞ்சியே திருப்பித் திருப்பி...

சோனியா: அலுத்துக்காதேடியம்மா... சஞ்சய் காந்தி இருக்கும்போது நீயும் என்னேக் கொஞ்சமாவா சித்திரவதை பண்ணே... உனக்குப் பயந்துண்டுதான் மம்மி என் மேலே பிரியமா இல்லேயே தவிர, நீ இல்லாத சமயம் மம்மி என்னே உட்கார வைச்சுத் தலே வாரிப் பேன் பார்ப்பாங்க.. அதெல்லாம் உனக்குத் தெரியாது... (வருணேப் பார்த்து) ஏண்டா வருண்... பெரியம்மாகிட்டே வாடா... உங்க அம்மாக்குத்தான் பெரியம்மா வேணும்... பெரியப்பா ஆகவே ஆகாது.. உனக்கு என்ன ஆச்சு?


மேனகா: ராஜீவ் மச்சினர் நல்லவர். அவரை ஏன் இதுல இழுக்கறே நீ..?

சோனியா: ஆமாண்டியம்மா... அவர் நல்லவர்... நான்தான் கெட்டவள். இருந் துட்டுப் போகட்டும். அப்புறம் எதுக்கு அவரை எதிர்த்து எலெக்ஷன்ல நின்னே?

மேனகா: மறுபடியும் அவரே பிரதம மந்திரியானு இந்த அகாலிகள் அவருக்கு இடைஞ்சல் பண்ணி ஏடாகூடமா நடந் துடக்கூடாதுன்னு ஒரு நல்ல மனசோட போட்டியிட்டேன். இதை அமேதி தொகுதி ஜனங்களும் தெரிஞ்சுக்கலே, நீயும் தெரிஞ்சுக்கலே. எங்க ராஜீவ் மச்சினர் மட்டும்தான் தெரிஞ்சுண்டார்.

சோனியா: ஆஹா... ஆஹா...! என்ன கரிசனம் மச்சினர் மேலே... நான் இத்தாலிக் காரிதான். ஆனு இங்க வந்தப்புறம் மம்மி எனக்குக் காது குத்திட்டாங்க. நீ வேற குத்த வேணும்டியம்மா..

மேனகா: நீ காது குத்திக்கோ... மூக்கு


மேனகா

தொடர்ச்சி 27-ம் பக்கம்...


MAGYAR POSTA 40
12

23-ம் பக்கத் தொடர்ச்சி...

ருத்திக்கோ. மாமியார் வைச்சுட்டுப் போன நகை வெள்ளிப் பாத்திரம் ஒண்ணுகூட எனக்குத் தரலேயே.... அவ்வளவையும் நீதானே அமுக்கிண்டே!

சோனியா: அது சரி, வெள்ளிப் பாத்திரம்னு சொல்றியே.. அதுக்குப் பதில் நம்ப வீட்லே ஆசிவந்த கல்சட்டியை எடுத்துக்கிட்டுப் போனியே... அதைக் காட்டி என்னை எம்.பி-யாக்குங்கன்னு பிரசாரம்கூடப் பண்ணினியே.. கல்சட்டியும் வேணும்... வெள்ளிப் பாத்திரமும் வேணும்னு எப்படி..? நல்லா இருக்குடியம்மா உன் நியாயம்.

மேனகா: அம்மா எனக்குத் தரேன்னு சொன்னதைத்தான் நான் கேட்கறேன்.

சோனியா: ஆமாம்! எல்லாம் உனக்குத் தரேன்னு சொன்னாங்க... ஏன்னு, மம்மிக்கு சஞ்சய் மச்சினர் ஒண்டிதான் பையன், உங்களுக்கு ஒண்ணும் வாணும்... ஏன், பிரதம மந்திரி நாற்காலிகூட உனக்குத் தரேன்னு சொன்னாங்கன்னு சொல்லிட்டன்...

மேனகா: வாய் புளிச்சுதோ, மாங்காய் புளிச்சுதோன்னு சொல்லமாட்டா இந்த மேனகா. உண்மையிலேயே மம்மி சொன்னாங்க 'ஒரு ரெண்டு வருஷம் போறு, பிரைம் மினிஸ்டர் நாற்காலி உனக்குத்தான்னு...' இதை யார் நம்பப் போறாங்க...

சோனியா: அம்மாடி மேனகா... நான் ஒப்பறேன்... நீ அரிச்சந்திரனுக்கு தங்கை. எல்லாம் உனக்கு மம்மி தரேன்னுதான் சொல்லிட்டாங்க.. நாங்க அடாவடி பிச்சு எடுத்துண்டுட்டோம் எல்லாத்தை யும்... போதுமா...?

மேனகா: கிண்டல் பண்ணுதே.. என் வயிறு அப்படியே பத்திண்டு எரியறது... உனக்கு என்ன... நீ ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி!

சோனியா: நீயும் அப்படி இருந்திருக்கலாமே! கயத்தை அறுத்துக்கிட்டு தொழுவத்தை விட்டே ஓடினே...!

மேனகா: என்னடியம்மா பண்றது! அது என் தப்பு (தலையில் அடித்துக்கொண்டு) சேர்வாரோட சேர்ந்து...

சோனியா: கழுதையும் பரதேசம் போச்சாம்!

மேனகா: என்ன, என்னைக் கழுதைங்கறியா?

சோனியா: தப்பா நினைக்காதே...! நான் உங்க பழமொழியை முடிச்சேன்...

வருண்: அமெரிக்காலேருந்து எனக்கு ஒண்ணும் வாங்கிண்டு வரலையா பெரியம்மா...?

சோனியா: உனக்கு அமெரிக்காலேருந்து டாய்ஸ் வாங்கிண்டு வந்திருக்கேன்... வீட்டுக்கு வந்து வாங்கிக்கறியா..?

மேனகா: உனக்கு அதெல்லாம் வேணும்டா வருண்... அதெல்லாம் நெஜமாவே அமெரிக்காவில் வாங்கினதுன்னு நினைக்கிறே...? மண்டு... மண்டு.. எல்லாத்தையும் இங்கே பாலிகா பஜார்லே வாங்கிண்டு அமெரிக்கான்னு பொய் சொல்ரு உன் பெரியம்மா..

சோனியா: என்ன இருந்தாலும் நானும் நீயும் ஓர்ப்படிகள் இல்லியா.... இப்படியா குழந்தைகிட்டே சொல்றது...


மேனகா: என்ன, ஓர்ப்படியா..? அந்த உறவு இன்னும் இருக்கா..? ஆச்சரியமா இருக்கே...! உம்.. அந்த ஓர்ப்படிகள்லே ஒருத்தியைத்தான் உருப்படியில்லாம ஆக்கிட்டேளே..

''எங்க கம்பெனில சரியான நேரத்துக்கு வராம இருந்தவங்கெல்லாம் இப்ப கரெக்டா வந்திடறாங்க!''

''அட...! எப்படி...?''

'''சரியான நேரத்துக்கு வரவங்களுக்கு ரெண்டு இட்லி ஒரு வடை தரப்படும்...'னு மானேஜ்மெண்ட் ஒரு சர்க்குலர் அனுப்பிச்சுது...!''

— பாரிவள்ளல்



சோனியா: பாதி நீயா பண்ணிக்கிட்டது தான்.... மாமியாருக்கேத்த மாட்டுப் பெண்ணு இருந்திருந்தா இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேணுமே...!

மேனகா: ஆமா... ஒன்னை மாதிரி சொக்குப்பொடி போட்டு மாமியாரை மயக்கற வித்தையை நான் கத்துக்கலே... நீ இத்தாலியிலிருந்தே கத்துக்கிட்டு வந்தே.. நான் இந்தியாவிலிருந்தும் கத்துக்கலே..!

சோனியா: எனக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாதும்மா...!

மேனகா: ஒண்ணும் தெரியாதா....? தெரியாமதான் போன வருஷம் வருண் ஸ்கூலுக்குப் போய் அவனைக் கடத்திக் கிட்டுப் போகப் பார்த்தீங்களாக்கும்...

(இதைக் கேட்டு 'ஓ'வென்று அழத் தொடங்கிவிடுகிறார் சோனியா)

மேனகா: இப்போ நான் என்ன சொல்லிட்டேன்கறத்துக்காக இந்த அழுகை! அத்தனையும் நீலிக் கண்ணீர்... யாராவது பார்த்தா என்னைத்தான் தப்பா நினைப்பா...

சோனியா: (கண்களைத் துடைத்துக் கொண்டே) போதும் மேனகா... ரொம்ப அழிச்சாட்டியமா பழி போடறே... மனசுலே எந்தவிதக் கல்மிஷமில்லாம வருணைப் பார்க்கப் போனு, அதுக்கு சூழ்ச்சி, திட்டம்னு கதை கட்டிவிடறே பாரு... இதெல்லாம் உனக்குத்தான் வரும்.. சுட்டுப் போட்டாக்கூட இத்தாலிக்காரங்களுக்கு வரவே வராது...!

மேனகா: (கிண்டலாக) ஆமா, பாவம், வராது! ஆனு, அர்த்தராத்திரிலே அத்தை என்னை வீட்டைவிட்டுத் துரத்தினப்போ, கூட நின்னு வேடிக்கை பார்க்க மட்டும் தெரியுமாக்கும்?

சோனியா: நான் வேடிக்கை பார்த்ததா நீ நினைக்கலாம் மேனகா.. ஆனு, அதே மாதிரி கதி எனக்கும் ஒரு நாள் ஆகலாம்னு நான் பயப்பட்டேன்... அதனுலதான் தப்பித் தவறிக்கூட அரசியல் பக்கமே தலை வைச்சிக்கூடப் படுக்கலே.. நீ அரசியல் பக்கம் போகாம இருந்திருக்கலாம்.

மேனகா: நானு போனேன்.. நீங்கள்லாம் சேர்ந்து பண்ண கொடுமையிலே, மிரட்டல்லே வேற வழியில்லாம அரசியல்லே புகலிடம் தேட வேண்டிய தாப் போச்சு..!

சோனியா: அரசியல்ல தப்பில்லே... ஆனு, முதல் நாள் கட்சியை ஆரம்பிச்சுட்டு, இரண்டாம் நாளே தான் பிரதம மந்திரி ஆசனத்திலே உட்காரணும்னு கனவு கண்டா அவ்வளவு ஈஸியா நடந்துடுமா..? அரசியல்லே ரொம்பப் பொறுமையா இருக்கணும்..

மேனகா: எல்லாம் விதி! ஒரு பைலட்டோட மனைவி என்கிட்டே வந்து பாலிடிக்ஸ் பேசறதைக் கேட்டுக்க வேண்டிய கஷ்ட காலம் எனக்கு!

சோனியா: ஆமாம்! பொறந்த வீட்டுப் பெருமையை ஒடப்பிறந்தான்கிட்டே சொல்ற மாதிரி என்கிட்டேயே உன் பெருமையைச் சொல்லாதே.... ஆமாம்... நீங்க 'சஞ்சய் பிரச்சார் பெஞ்ச்'சுன்னு ஒரு சங்கம் ஆரம்பிச்சீங் களே, நன்னு நடக்கறதா? அது என்ன, மாதர் சங்கமா? எனக்குக்கூட வடாம் கருடாம் புழியறதெல்லாம் கத்துக்கணும்னு ஆசை.

மேனகா: (கோபத்தை அடக்கிக் கொண்டு) அது அரசியல் கட்சிம்மா அதோட பேரு பிரச்சார் பெஞ்ச் இல்ல 'சஞ்சய் விச்சார் மஞ்ச்.' நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... நீ கொஞ்சப் ஜெனரல் நாலட்ஜை இம்ப்ரூவ் பண்ணனும்...

சோனியா: ஆமாம்.... பேப்பர்லே அம்மாவோட உயிலைப் பத்தி நியூஸ் வந்தவுடனே குழாயடிச் சண்டை மாதிரி காச்சுமூச்சுன்னு கத்த ஆரம்பிச்சுட்டே..

மேனகா: என்ன கத்தினேன்?

சோனியா: என்ன கத்தலே? இரான் மன்னர் ஷா கொடுத்த விலையுயர்ந் கார்ப்பெட் எங்கேனு பக்கி மாதி கேட்டிருக்கே.. அம்மா வச்சிருந் ரெண்டாயிரத்துக்கும் மேற்பட் சால்வைகளுக்குக் கணக்கு கேட்டிருக்கே.

மேனகா: நான் அப்படிக் கேக்கலேன் ஓசைப்படாம எல்லாத்தையும் நீ அமுக்கி இடாலிக்கு பார்ச பண்ணிடுவியே...

சோனியா: சே! கார்ப்பெ

ஜமக்காளம், பெட்ஷீட், தலகாணி உறைக்குக்கூட வழியில்லாத குடும்பத்திலேர்ந்து வந்தவ நான்னு நினைச்சுட்டியா? அப்படியே உனக்கு சந்தேகம் இருந்தாலும் அதை நேரடியா என்கிட்டேயோ, அண்ணகிட்டேயோ கேட்டிருக்க வேண்டியதுதானே..! எதுக்கு வக்கத்துப் போய் பப்ளிக்கா பிரஸ்லே சொன்னே...?

மேனகா: ஏன்? அதுல என்ன தப்பு?

சோனியா: என்ன தப்புன்னு கேட்கறே..? நீ பண்ணியிருக்கற வேலே, என்னால வெளிலே தலே காட்ட முடியலே... 'என்ன சோனியா... உன் ஓர்ப்படி இத்தனே மட்டமா இருக்காளே... நீயாவது அவளுக்கு நாலு நல்ல வார்த்தை சொல்லி புத்தி சொல்லக்கூடாதா?'னு நான்ஸி ரீகன் என்னேக் கேட்கறு, தெரியுமா?

மேனகா: இப்போ ஏன் நீ பேச மாட்டே? போன டிசம்பர்லே மாமியார் உயிரோட இருந்து தேர்தல் நடந்திருக்கணும்... அப்போ தெரிஞ்சிருக்கும் உன் பொகுஷு! அவ்வளவு ஏன்? அனுதாப அலே நாடு பூராவும் அடிச்சப்போ கூட அவராலே ஆந்திராவிலே தலேதூக்க முடியலேயே.... சினிமா மோகத்தை நம்பியா ஒருத்தர் இப்படி அரசியலே நடத்துவா... தூ! தாத்தாவும் கொள்ளுத் தாத்தாவும் உயிரோடு இருந்திருந்தா நாக்கைப் பிடிங்கிண்டு செத்திருப்பாங்க..

சோனியா: அப்படியா.. 'வருண் ஒருத்தன் தான் காந்திகளின் உண்மையான வாரிசு... அவன் உடம்பிலேதான் இந்திய ரத்தம் ஓடுது... ஆனு ராகுல், பிரியங்கா உடம்பிலே பாதி இந்திய ரத்தம், பாதி இத்தாலி ரத்தம் ஓடுது'ன்னுல்லாம் அசட்டுப்பிசட்டுனு அதிகப்பிரசங்கித் தனமா அறிக்கையெல்லாம் கொடுத்தியே.. இதுக்கு யார் நாக்கைப் பிடிங்கிப்பா...?

மேனகா: நான் உள்ளதைத்தானே சொன்னேன்.. மன்னி, நீங்க இத்தாலி தானே.. அதனுல பாதி இத்தாலி ரத்தம் ஓடுதுன்னு சொன்னேன்... உண்மையைச் சொன்னு உறுத்தறதா..?


சோனியா: எனக்கொண்ணும் உறுத்தலே... ரொம்ப சீப்பா நீ இறங்கிட்டியேன்னு வருத்தம், அவ்வளவுதான்.

மேனகா: சரி மன்னி, நா கிளம்பணும். குழந்தைங்க எப்புடி இருக்காங்க? நல்லா படிக்க வைம்மா. ரெண்டு பேரும் நல்லா படிச்சு டாக்டர், இன்ஜினீயர்ன்னு வரணும். அதுக்குத்தான் நான் கடவுளே தினமும் வேண்டிக்கிட்டிருக்கேன்.

சோனியா: என்னவோ எங்களாலே முடிஞ்ச சொத்தை சேர்த்து வச்சிருக்கோம். அவங்க பாட்டி வேற ஏகப்பட்ட சொத்தை எழுதி வச்சிருக்காங்க. வருண் கிடுகிடுன்னு வளர்ந்துட்டானே! மேல என்ன செய்யப் போறே?

மேனகா: ஏதோ அவன் தலேயெழுத்து பிரதம மந்திரியா வரணும்னு இருக்கு. நான் குறுக்க நிக்க விரும்பல.

சோனியா: என்ன ஆச்சரியம். ராகுலுக்கும் அதே ஆசைதான். அவன் அப்பாவுக்கும் இவன் மேலே உயிர். தனக்கப்புறம் நாட்டைக் காப்பாற்ற



இவனைத்தான் மலைபோல நம்பியிருக்கார்.

மேனகா: (சற்று எரிச்சலுடன்) அவர் நம்பலாம். ஆனா, மக்கள் நம்பணுமே! மக்களுக்கு ஏற்கெனவே ராஜீவ் மேல நம்பிக்கை குறைஞ்சிகிட்டு வருதே.

சோனியா: சும்மா வேலைவெட்டியில்லாம இருக்கறவங்க பேச்சு அது.

மேனகா: எனக்கா வேலைவெட்டி இல்ல? நான் ஒரு கட்சியின் தலைவி. சும்மா மயக்கி மினுக்கி ஆட்டம்போட எனக்குத் தெரியாது.

சோனியா: நானா மினுக்கி? நீதான் மினுக்கி. உங்க பரம்பரை முழுவதுமே மினுக்கிகள்தான்.

மேனகா: நீ மினுக்கறத்துக்குக்கூட லாயக்கில்லை.

சோனியா: நம்ப ரெண்டு பேருக்குள்ளே எதுக்கு வீண் சண்டை... நீ பேசாம உன் கட்சியைக் கலைச்சிட்டு இ. காங்கிரஸ்லே சேரு.. ஏதாவது நல்ல போஸ்ட்டா தரச் சொல்றேன்.. இன்னா பெரிய பிரதம மந்திரி நாற்காலி. கொஞ்சங்கூட நிம்மதியா இருக்க முடியலை.

மேனகா: அதுக்குத்தான் பேசாம பொறுப்பை என்கிட்டே ஒப்படைக்கச் சொல்றேன். நான் ஒண்டிக்காரி. உங்களை மாதிரி பெரிய குடும்பம் இல்லே. ஒரே ஒரு குழந்தைதான். இந்தியாவுக்குப் பொம்பளை பிரதம மந்திரியா இருந்தாத்தான் அழகா இருக்கு.. ஆமா, வருண் எங்கே..? பேச்சு சுவாரஸ்யத்தில் அவனைக் கவுனிக்கவே இல்லே.. இப்போ அவனைக் காணுமே... இது நிச்சயம் இ. காங்கிரஸ் சதிதான்..

(அதற்குள் வருண், ராஜீவ் காந்தியின் கையைப் பிடித்துக் கொண்டு வருகிறான்.)

ராஜீவ்: என்ன சோனியா... சஞ்சய விச்சார்மஞ்ச் கட்சித் தலைவி என்ன சொல்றாங்க..?

சோனியா: நாற்காலிக்கு ஆசையா இருக்காம்.

ராஜீவ்: நாற்காலிதானே... பஞ்சாப்லே இவங்களை முதல்மந்திரியாக்கிடுவோம்..

மேனகா: கிண்டல் வேணும்..

சோனியா: ராஜீவ்... எங்கே ஜெய வர்த்தனா...?

ராஜீவ்: அவர் எப்போவோ வந்துட்டார்... நீங்க போடற ஓர்ப்படி சண்டையைப் பார்த்ததும் 'மொதல்லே உங்க வீட்டுப் பிரச்னையைத் தீருங்க நான் அப்புறம் ஒரு நாள் வரேன்'னு சொல்லிட்டுப் போயிட்டார்.

(அப்பொழுது அருண்நேரு அங்கே வந்து ராஜீவிடம் ஏதோ காட்ட)

ராஜீவ்: கம்ப்யூட்டர் கணக்கு விவரப்படி கடந்த முறை நீங்கள் இருவரும் சந்தித்து உரையாடியதைவிட இம்முறை ஒண்ணரை நிமிடங்கள் அதிகமா உரையாடியிருக்கிறீர்கள். போன தடவையைக் காட்டிலும் இந்தத் தடவை பேச்சில் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வது 40 சதவிகிதம் அதிகம். நக்கலாகத் திட்டுவதில் சோனியாவைவிட மேனகா 70 சதவிகிதம் அதிக மதிப்பெண் பெறுகிறார்... நல்லாயிருக்கு!

"புது லேடி டைப்பிஸ்ட் உங்க ஜாதகம் இருந்தா கேக்கறாங்க சார்!"

"எதுக்குய்யா?"

"முதன்முதலா டைப் பண்றதுக்கு மங்களகரமா ஏதாவது இருக்கட்டுங் கறாங்க சார்!"

— எம். பூங்கோதை




அன்றிலிருந்தே அழகிய மங்கையர் அனைவருமே சந்தனத்தின்
அந்த இனம்புரியா வசீகர மணத்தில் மயங்கியுள்ளார்கள்.
இன்று உங்களையும் மயக்க இதோ...
POND'S
Sandal Soap
POND'S
புதிய
பாண்ட்ஸ்
சாண்டல் சோப்
தூய சந்தனத்தின் நறுமணத்தைக் கொண்டது.
வானுலக தேவதைகளை வசீகரித்திடும் ஓர் மணம்!

கரகாட்டம்

'சந்தையிலே மீனு வாங்கி மச்சான்
சளசளக்க கொளம்பு வச்சேன்
கொத்தமல்லி பத்தலன்னு மச்சான்
குத்துருனும் கன்னத்துல'


-மங்காவின் சன்னக் குரல் 'கணீர்' என ஒலிபெருக்கியி ருந்து வெளியேறி ஆண்டியின் காதைத் தொட்டது. ட்டைத் தொடர்ந்து மேளத்தின் சப்தமும், கஸ்வரத்தின் நையாண்டிச் சப்தமும், மங்காவின் ற்சலங்கை சப்தமும் ஒன்றன்பின் ஒன்ருக ண்டியை உசுப்பின. சப்தம் வந்த திசையைத் நம்பிப் பார்த்தான் ஆண்டி. மாரியம்மன் கோயில் டல். சுற்றி வர ஆண்களும் பெண்களும் உட்கார்ந்தும் ன்றும் பார்த்துக் கொண்டிருக்க, உள்ளே மங்கா ன்று சுழன்று பாவாடை மேலேறி, பாதித் தொடை தரிய ஆடிக்கொண்டிருப்பாள். சுற்றி நிற்கும் ாவட்டங்களின் கூட்டம் அவளது சுழற்சியில் சிக்கித் ந்தளிக்கும். மங்காவின் அழகு அப்படி. யாரையும் கைக்க வைக்கும் முகவெட்டு. எப்படிப்பட்டவர்களை ் கிறங்கவைக்கும் உடல்வாகு. அதனுல்தான் வளுடைய முறை மாப்பிள்ளையும் அவளுடன் டுபவனுமான ராசு அப்படிக் கிறங்கிப் போயிருக் ரன்.

அந்த ராசுவை நினைத்தாலே ஆண்டிக்குப் பற்றிக் ாண்டு வந்தது. 'ராஸ்கல்! என்னைக்காவது ஒரு ள் சிக்காமலா போயிருவான். அன்னைக்கு மட்டும் கா தடுக்கலேன்னு அவன் எலும்ப எண்ணியிருப் ன், தப்பிச்சுட்டான். கூட்டத்துல ஆடுருள்னு அவ ன்ன தேவதாசியா? கண்ட எடத்துல கையை க்கிறதும் அசிங்க அசிங்கமா வசனம் பேசிக்கிட்டே வளைக் கட்டிப் பிடிக்குறதும்... அவனச் சொல்லியும் ந்தமில்ல. இந்த மங்கா கழுதைக்கும் அறிவு ணும். நான்தான் சொல்றன்ல. இது என்னு ாழப்பு. பாதி ஒடம்பு தெரிய ராத்திரி பத்து னில இருந்து விடியற வரைக்கும் மெஷின் மாதிரி றதும், அதைக் கண்ட பயலுக பார்த்து 'எலக்க ட்டியம்' பேசுறதும்... சே...! காலாகாலத்துல பங்கம்மாகிட்ட சொல்லிக் கல்யாணம் வைக்கச் சொல்லலாம்ல. நான் தான் உழுகப் போறன்ல. இவளுக்கு மட்டும் என்ன தனியாவா செலவாகப் போகுது எங்க வீட்ல. இப்படி ராவுல ஆடி லோல்படற சோலிய விட்டுட்டு என் கூட நிம்மதியா இருக்க லாம்ல... கேக்கமாட் டேங்கருளே. தம்பி படிக் கிறன். அவன் படிப்பு முடியட்டும். அம்மா வுக்கு உதவியா ஏதாச்சும் வேலைக்குப் போக வச்சுட்டு அப்பறமா கல்யாணத்தப் பத்தி யோசிக்கலாம்னு சொல் லிட்டாளே.'

ஆண்டி, அலுப்புடன் எழுந்து மாரியம்மன் கோயிலை நோக்கி நடந் தான். ஆட்டம் இப்போது மும்முரத்தை அடைந்திருந்தது. கூட்டம் மிக உற்சாகத் துடன் கைகளைத் தட்டிக் கொண்டிருந்தது. மங்கா பல ரப்பர் வளையங்களைச் சேர்த்து மயில் தோகை யாக்கி, மயிலைப் போல நின்றிருந்தாள். அவளது சிவந்த மேனியில் ஆட்டத்தின் விளைவாகப் பொடித்திருந்த வியர்வை, இலைமேல் நிற்கும் பனித்துளியாய் அழகூட்டியது. எந்தக் கரக ஆட்டக்காரர்களுக் கும் இல்லாத சிவந்த முகம், சிறிய உதடு.

நதி

இரட்டைக் கதைகள்-1



பொன்வண்டைப் போலத் துள்ளி விளையாடும் கண்கள். அல்லி நகரத்துக்குக் கரக ஆட்டக்காரர்களை அழைக்க வரும் எந்த விழாக் குழுவினராக இருந்தாலும் சரி, முதலில் மங்காவைத் தான் அழைப்பார்கள். அவள் முடியாது என்றால் மட்டுமே வேறு கரக ஆட்டக்காரர்களைப் பார்ப்பார்கள்.

ஆண்டி, கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே சென்றான். மங்கா இவனைப் பார்த்து விட்டாள். மங்காவின் ஆட்டம் எந்த ஊரில் நடந்தாலும் இவன் சென்றுவிடுவான். சமீப காலமாக மங்கா மேல் இவனுக்குக் கோபம், காலாகாலத்தில் திருமணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன் என்கிறாளே என்று. அதனால்தான் உள்ளூரில் நடக்கும் இந்த ஆட்டத்துக்குப் போகக் கூடாதென்று முதலில் எண்ணினான். ஆனால், மனம்... இந்தப் பாழாய்ப் போன மனம் கேட்கமாட்டேன் என்கிறதே... மங்காவைப் பார்க்காமல் இருக்க முடியவில்லையே...!

மங்காவின் ஆட்டத்தில் சூடுபிடித்திருந்தது. கூட்டத்திலிருந்து

ஒருவன் எழுந்து சென்று, ஆட்டத்தையும் மேளத்தையும் நிறுத்தச்சொன்னுன். நிறுத்தினுர்கள். மைக்கைப் பிடித்துக் கொண்டு, ''பம்பரமாகச் சுழன்று ஆடும் மங்காவுக்கு இந்தப் பத்து ரூபாயை அளிக்கிறேன்'' என்று , கூறிவிட்டு, பணத்தைப் பின்-ஊக்கால் ரவிக்கையில் குத்தினுன். மங்கா நெளிந்தாள். கூட்டம் ''ஹோ''வென ஆரவார உற்சாகம் காட்டியது. அவன் அந்த இடத்தில் கதாநாயகனுகிப் போனுன். அடிபட்ட புலியாய் எழுந்தான் ஆண்டி:

''டேய்... கையை எடுரு.''

''நீ யார்ரு அதைக் கேக்க?''

பேச்சு முற்றுவதைக் கண்ட ராசு, ''ஆண்டி, வேணும்... நீ போ. ஆட்டம் கெட்டுரும்'' என்று தடுத்தான். சிறு புழுவைப் பார்ப்பது போல அவனைப் பார்த்த ஆண்டி, இடது கையால் அவனைத் தள்ள, அவன் கூட்டத்தில் சென்று விழுந்தான். கூட்டத்திலிருந்து சிலர் ஆண்டியை நோக்கி வர...

''ஏண்டா... பின்னு குத்தறதுக்கு உங்க அக்கா தங்கச்சிக கிடைக்கலியாடா.. பொம்பள பொறுக்கி'' என்று பின் குத்தியவன் மேல் பாய்ந்தான் ஆண்டி. உழைத்து உரமேறியிருந்த அவன் கைகள் கோபத்தில் வெறியேறியிருந்த மனத்துடன் சேர்ந்து கொள்ள, அன்று அங்கே கூட்டத்தில் ஒரு மத யானை புகுந்துவிட்டது.

ஆண்டியைக் கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டுவர மங்காவுக்குப் பெரும்பாடாகி விட்டது.

''என்ன மனுஷன்யா நீ? கோபம் வந்தா அதுக்காக இப்பிடியா?''

''மங்கா, எதுவும் பேசாத... எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன்னை என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது?''

மங்கா பேசாமல் இருந்தாள்.ஆண்டி தொடர்ந்தான்:

''இதுக்குத்தான் படிச்சுப் படிச்சு சொல்றேன். இது என்ன பொழப்பு? கண்ட பயலுகள்லாம் கையைப் போடற பொழப்பு. பேசாம ஒங்கம்மாகிட்ட நம்ம விஷயத்த சொல்லிடு. அடுத்த வாரம் கல்யாணம் வெச்சுக்குவம். ஒங்க குடும்பத்தையும் சேர்த்து நான் காப்பாத்தறேன்.''

ஆண்டியின் குமுறல் நியாயமானது தானே! மங்கா... மங்கா... அவனது ஒவ்வொரு மூச்சும் மங்காவின் பெயரைச் சொல்லிக் கொண்டேதான் இயங்கும். அந்த அளவுக்கு மங்கா அவனை மயக்கியிருந்தாள்.

அவர்கள் இருவரும் ஊரையடுத்த ஆற்று மேட்டில் நின்றிருந்தனர். கரையிலிருந்த மாமரத்தின் கிளையொன்று நன்ருக வளைந்து ஆற்றைத் தொட்டாற் போல இறங்கியிருந்தது. மாமரத்துப் பூக்களின் நறுமணம் 'கும்'மென்று பரவி எங்கும் வியாபித்தது. இன்னொரு சமயமாய் இருந்தால் மங்கா இதை வெகுவாக நுகர்வாள். அவளுக்கு இந்த மாம்பூவின் வாசனை மிகவும் பிடிக்கும். ஆனுல், இப்போது அவளது மனநிலையே வேறு.

வரவர ராசுவின் தொல்லைகள் தாங்கமுடியவில்லை. அம்மாவிடம் சொன்னுல் 'முறைப் பையன்தானே... உன்னை அவன்தானே கட்டப் போகிருன்' என்கிருள். ஆண்டியைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இவள் நிகழ்ச்சி எங்கு நடந்தாலும் ஓடி வந்துவிடுகிருன். அவன் அப்படி வருவதால் மறுநாளைய வேலை கெட்டு அவன் பட்டினி கிடக்க நேரிடுகிறது. இதை மங்கா கண்டித்தாலும் அவன் கேட்கமாட்டான். இவள் ஆடும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அவன் வரும் ஒவ்வொரு முறையும் இப்படி ஏதேனும் கலாட்டா நடந்து விடுகிறது.

''என்ன மங்கா, நான் சொன்னதக் கேட்டுக்கிட்டு பேசாம நின்னு எப்படி? முடிவ சொல்லு.''

மங்கா ஒருவழியாய்த் தலையாட்டினுள்:

''எங்க அம்மாகிட்ட கேக்கறேன். அதுக்கு அவ சரின்னு சொன்ன நீதான் எனக்குப் புருஷன்.''

ஆண்டிக்குக் கால்கள் தரையில் நிற்கவில்லை. மங்காவின் தாய் மறுக்கவில்லை. திருமண வேலைகள் துரிதமாகின.

கடைசி நிகழ்ச்சியாக ஜம்புலிபுத்தூரில் மங்கா ஆடவேண்டியிருந்தது. இரண்டு நாட்களாக ஒத்திகை என்று ராசு அவள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த ஆண்டிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. மங்காவை எச்சரித்தான். 'கடைசி நிகழ்ச்சிதானே . . ,இனி மேல் கண்டிப்பாக ஆடமாட்டேன்' என்று கூறிச் சம்மதம் வாங்கினுள் மங்கா. ஆட்டத்தைப் பார்க்க ஆண்டியும் வரவேண்டும் என்ருள்.

ஆட்ட நாளன்று ஆண்டி வேலைகளை முடித்துவிட்டு ஐம்புலிபுத்தூர் செல்ல நேரமாகி விட்டது. ஆட்டம் பாதிக்கு மேல் முடிந்து விட்டது. இவன் தூரத்தில் வரும்போதே ராசுவின் குரல் கேட்டது:

'ஒனு ஒய்யன்னு ஒய் கொண்டக்காரி
ஒன்ன பாக்கையில பயமாயிருக்கு
பந்து கொண்டக்காரி'

தொடர்ந்து மேளம். நாகஸ்வரம். சலங்கைகளின் ஜல் ஜல். ஆண்டி எட்டி நடையிட்டுக் கூட்டத்துக்குள் நுழைந்தான். அங்கே ராசு ஆடிக்கொண்டிருக்கும் முறை இவனுக்குக் கோபத்தை வரவழைக்கக்கூடியதாயிருந்தது. இனி அடுத்த நிகழ்ச்சிகளில் மங்கா தன்னுடன் ஆடமாட்டாளே என்று எண்ணியதாலோ என்னவோ, அன்று ராசுவின் சேட்டைகள் அதிகமாக இருந்தன.அவன் கைகளை மங்கா தட்டித் தட்டி விட வேண்டியிருந்தது. சுற்றி நின்றிருந்த கூட்டத்தை ராசுவின் சேட்டைகள் பரவசப்படுத்தியிருக்க வேண்டும். அவர்கள் விசிலடித்தும், குரல் கொடுத்தும் ராசுவை உற்சாகப் படுத்தினர். அவர்களின் உற்சாகக் குரலும் மங்காவின் ஸ்பரிசமும் ராசுவுக்கு அதிகமான வெறியை ஊட்டின. விளைவு... ஒரு நெருக்கமான சந்தர்ப்பத்தில், மங்காவைக் கட்டிப் பிடித்து உதட்டோடு உதடாக இறுக்கி முத்தம் கொடுத்தான். இதை எதிர்பார்க்காத மங்கா அவனைத் தள்ள முயற்சித்தாள். அவன் பிடி மேலும் இறுகியது. கூட்டம் ஸ்தம்பித்து... பின் ஆரவாரித்தது.

ஆண்டியின் நரம்புகள் முறுக்கேற: . ராசுவை நோக்கிப் பாய்ந்தான். கூட்டத்தினர் இருவரையும் விலக்கி, ராசுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போனுர்கள்.

''ஐயோ...! அவசரப்பட்டுட்டியேய்யா... நம்ம வாழ்க்கையையே நாசமாக்கிட்டியே ஐயா...''—மங்கா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள். ஆண்டி இறுகிப்

நோட்டுக் கணக்கு



பள்ளியில் அட்மிஷன்
கிடைத்ததும் டீச்சர்
பட்டியல் போட்ட
நோட்டுக் கணக்கு...

கணக்கு நோட்டு
கட்டுரை நோட்டு
சயின்சு நோட்டு
சரித்திர நோட்டு

ஆங்கில நோட்டு
அருந்தமிழ் நோட்டு
டெஸ்டு நோட்டு
டிராயிங் நோட்டு

நான்டிடைல்டு நோட்டு
ரஃப்பு நோட்டு
காப்பி நோட்டு
டெயிலரிங் நோட்டு

ஃபுல் சைஸ் நோட்டு
ஆஃப் சைஸ் நோட்டு
டபுள் ரூல்டு நோட்டு
சிங்கிள் ரூல்டு நோட்டு

இத்தனை நோட்டும்
புத்தகமும் பெற்றேர்
சம்பள நோட்டுக்குச்
சரியாகப் போனதே...!

—நெல்லை. ஆ. கணபதி



''முதலில் காங்கிரஸ் கட்சியில் இருந்தேன். அப்புறம் தி.மு.க. பின் அ.தி.மு.க. அப்புறம் இ. காங்கிரஸ்... இப்ப எதிலேயும் இல்லே...!''

''ம்... இப்பதான் 'கட்சி'தமா இருக்கு...!''

—கிணத்துக்கடவு ரவி

பாய் நின்றான். தான் என்ன சய்தோம் என்று அவனுக்கே தரியாது போல இருந்தது.

மதுரை மத்திய சிறைச்சாலை.

இப்போது ஆண்டியின் இருப்பிடம் துதான். சாப்பிடும் நேரம், தூங்கும் நரம் தவிர மற்ற நேரம் எல்லாம் வனுக்கு மங்காவின் நினைவுதான். ராசு வைத் தாக்கியதற்காக மூன்று வருடக் டுங்காவல் என்று தீர்ப்பு.

'மங்கா என்ன செய்கிறாளோ... எப்படிக் கஷ்டப்படுகிறாளோ... சே...! தப்பு செய்துவிட்டோம். அவ்வளவு ஆத்திரம் வந்திருக்கக்கூடாது. அவளை மணக்கப் போகும் நேரத்தில் இப்படி பாகி விட்டதே... இப்போது அவளைப் பார்க்கக்கூட முடியவில்லையே...'

மாலை நேரம். கைதிகள் அனைவரும் சிறைக் கோட்டத்துக்குள் இருந்த மேடையின் முன்பு நின்றிருந்தனர். சிறை சூபரிண்டெண்டெண்ட் மேடை மேல் நின்று பேசிக் கொண்டிருந்தார்:

''இந்த முறை சுதந்திர தினவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் அமைதியாக இருந்து விழாவை நடத்தவேண்டும். இதுபோன்ற விழாக்கள்தான் நமக்குள் ஒற்றுமையை வளர்க்கும். விழாவுக்கு சினிமா, நாடகம் நடத்துவோம்...''

இதைக் கேட்ட ஒரு கைதி, ''சினிமா, நாடகம் வழக்கமா நடத்தறதுதானே சார். நல்ல கரக ஆட்டம் வைப்போம் சார்'' என்றான்.

''கரக ஆட்டமா, அதுவும் சரிதான். சிப்பா ஒரு ஆட்டக் குழுவைப் பேசிறலாம்'' என்றார் சூபரிண்டெண்டெண்ட். இப்போது ஆண்டி முன்னே வந்தான்:

''சார், தயவுசெஞ்சு நான் சொல்றதைக் கேளுங்க சார்...''

சூபரிண்டெண்டெண்டுக்கு எப்போதும் அவன் மேல் ஒரு நல்லபிப்ராயம்.

''என்ன ஆண்டி...என்ன விஷயம்?''

''கரக ஆட்டம் பிடிக்கிறதுன்னா... அல்லி நகரத்துல 'மங்கா பார்ட்டி'னு ஒரு ஆட்டக்கார பார்ட்டி இருக்குதுங்க. ரொம்ப நல்லா ஆடுவாங்க...''

''ஓ... நீயும் அல்லி நகரந்தானா... அதான் கரெக்ட்டா சொல்ற. அப்படியே செஞ்சுட்டாப் போச்சு... நாளைக்கே ஆளனுப்பி அட்வான்ஸ் குடுத்துட்டு வரச் சொல்றேன்.''

அன்று இரவு முழுவதும் ஆண்டி தூங்கவில்லை. மங்காவுடன் கனவில் எங்கெங்கோ சஞ்சரித்தான். மங்காவைப் பார்க்கவும் அவள் ஆட்டத்தை ரசிக்கவும் கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தைத் தந்த கடவுளுக்கு நன்றி சொன்னான்.

இரண்டாவது நாள் அந்த சூபரிண்டெண்டெண்டை இவன் ஆவலுடன் நெருங்கினான்.

''ஆண்டி, நீ சொன்ன அந்த மங்காப் பொண்ண போய்ப் பாத்தோம்... ஆறு மாசம் முழுவாம இருக்காம்... அதனால இப்பல்லாம் ஆடறதே இல்லேன்னு அவ புருசன் ராசுதான் சொன்னான். அதான் வேற கரக ஆட்டம் ஏற்பாடு பண்ணிட்டம்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

ஆண்டிக்கு சிறையே, கரகாட்டம் ஆடிக்கொண்டிருந்தது.

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது, இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு. இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது... படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி, நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது. மேலும் கேர்ஃப்ரீ சுகாதாரமானது, பாதுகாப்பானது. அதுதானே முக்கியம்?

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.


ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்

தவிரவும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ 10 உள்ள பேக்கில்.

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்— பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு —மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/5070/TAM

"காத்திருப்பேன்..வா.."

'I is loving you ...' என்ற மூன்றுவது கேள்வியைப் படித்தேன். ''இதுல தப்பு இருக்கா...? எங்கே?''

பதிலில்லே. நிமிர்ந்தேன். உஷாவின் பார்வை நிச்சயமாய் பாங்க் எக்ஸாம் கைடில் இல்லே. என் மேல்தான்.

''ஸ்ஸ்... நாளன்னேக்கு எக்ஸாம்...ம்... தப்பு இருக்கா...?''— வரியைத் திருப்பிப் படித்தேன்.

''இல்லே'' என்ருள் இரட்டைச் சடைகளில் ஒன்றை ஆட்டியவாறு.

''என்னது...?''

''லவ் பண்ணுத் தப்பில்லே'' என்ருள் குறும்புச் சிரிப்புடன்.

புத்தகத்தை மூடினேன்.

''ஒகே. நீ இன்னிக்கி படிக்கிற மூடில் இல்லே... நாளேக்குப் பார்க்கலாம்.''

தடுத்தாள்: ''ப்ளீஸ்...''

''ப்ளே வொய்ல் யூ ப்ளே...'' என்றேன் முகத்தில் தீவிரத்துடன்.

''அப்போ மறுபடி பாடத்தை ஆரம்பிக்கிறதுக்கு முன்னுடி... ஒரு விஷயம்...''

''என்ன...?''

''ஐ... ஐ லவ் யூ...''

சிரிப்பு வந்தது உடனே. சிரமப்பட்டு அடக்கினேன். 'வாண்டட்' காலம் பார்த்துக் கொண்டிருப்பவனிடம் காதலுக்கு ஏது நேரம்?

''பீ ஸீரியஸ். எனக்கு ரெண்டு தங்கை இருக்கா. அப்பா ரிடையர்ட். அம்மா நிரந்தர நோயாளி. குடும்பம் என்னே நம்பி இருக்கு. எப்பவோ மனசு வந்து ஒரு மூன்ரும் வகுப்பு டிக்கெட்ல நான் பார்க்கிற சினிமா ஹீரோ பண்ற லவ்வும் டூயட்டும் எனக்குப் போதும். என் நண்பனேட தங்கை நீ. உனக்கு பாங்க் எக்ஸாம் எழுத ஹெல்ப் செய்ய வந்தேன், அவ்வளவுதான். புரிஞ்சுதா?''

''அவ்வளவுதானே... நான் காத்திருக்கேன்...''

''நிறைய சினிமா பார்ப்பியா...? நோ டயலாக்ஸ், அண்ட் நோ லவ்விங் பிஸினஸ். சம்ம தம்னு பாடம். இல்லே, குட் பை டு யுவர் ஹவுஸ். இந்தப் பக்கமே வரமாட்டேன். பாலுவைப் பார்த்துக்க வேற எடம் இருக்கு...''

நகத்தைக் கடித்தாள். வேண்டா வெறுப்பாய்ச் சம்மணமிட்டு அமர்ந்தாள்.

''தப்பு எங்கே இருக்கு?''

''இங்கே...''— என் பக்கம் விரலேச் சுட்டினுள். குறும்புக்காரிதான்.

மறுநாள் மாலே.

எதிரில் வந்து அமர்ந்தவளின் தோற்றத்தில் பல மாற்றங்கள். 'டிரான்ஸ்பரண்ட்' நைலக்ஸ் தாவணிக்குள் 'சிக்'கென்று வெள்ளே ஜாக்கெட். இரட்டைப் பின்னல்களில் மல்லிகைச் சரம். அதையும் மீறி வேருெரு செண்ட் வாசனே. இடுப்பில் புறநகர்ப் பகுதி பிளாட் போல ஒரு சிவப்புப் பிரதேசம் பளிச்சிட்டது.

மனத்துக்குள் சிரித்துக் கொண்டேன்.

''ஆரம்பிக்கலாமா பாடத்தை...?''

தலேயாட்டினுள். ஓ... காதுகளில் நேற்றைய வளேயங்களுக்குப் பதிலாக இன்று வேருெரு டிசைன் ஆடியது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசன்

இரட்டைக் கதைகள்-2

''நீயே படி...''

விரல்கள் உரசின. மனசு பதியாமல் ஏதோ படித்தாள். திரும்ப வாங்கினேன். மீண்டும் உரசல். வேகமாகப் படித்தவாறு விடைகளைச் சொல்லிக் கொண்டு போனேன்.

''நாளைக்கு மேத்ஸ்... பாலு இன்னும் ஆபீசிலேர்ந்து வரலியா?''

''ஊஹூம்...''

சமையலறைக்குப் போய், ''வரட்டுமா''—அவள் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு. ''புரியுதா அவளுக்கு. ஒன்னைத்தான் நம்பியிருக்கேன். பாஸ் பண்ணிருவாளா?'' தலையாட்டிவிட்டு வெளியே வந்தேன். உஷா வழியை மறித்தாள்:

''இந்தாங்க...''

வலது கை மடங்கியிருந்தது.

''என்ன...?''

''பிரிச்சுப் பாருங்க..''

''நீயே சொல்லு...''

''ஊஹூம்...''

''அப்ப எனக்கு வேண்டாம்.''

அலுப்புடன் கையைப் பிரித்தாள். சாக்லேட்!

''எனக்கு பர்த்டே..!''

''மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ்..''



உறையைப் பிரித்துப் பறக்க விட்டேன். சாக்லேட்டை வாயிலிட்ட போது என்மேல் அவள் தாவணி உரச, உள்ளே போனாள்.

அடுத்த நாள் காலை.

“டவுட் ஒண்ணும் இல்லியே...?”

எதிரில் அம்மா இருந்ததால் பவ்யமாக நின்றாள்.

“இல்லே...”

“அக்யூரசி அண்ட் ஸ்பீட் ரெண்டும் முக்கியம். தெரியாததை விட்டுரு. கரெக்டா ‘டிக்’ பண்ணு” — வழக்கமான உபதேசங்களை விசிறியபோது எல்லாவற்றுக்குமாய் ஒரு தலையசைப்பு.

“அவன் சொல்லிக் கொடுத்ததற்காவது நீ பாஸ் பண்ணணும்...” என்றாள் அவள் அம்மா. விலகி உள்ளே போனாள்.

“விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்...” என்றேன்.

கையை நீட்டினாள். கண்களில் கெஞ்சல்.

மறுக்க இயலாமல் பற்றிக் குலுக்கினேன். ‘மெத்’தென்று இருந்தது. விடாமல் சில விநாடிகள் பற்றியிருந்தாள்.

மாலையில் சந்தித்தபோது உற்சாகத் துள்ளல்.

“என்ன, ஒரே குஷி. எக்ஸாம் எப்படி...?”

“வெல்டன்...!” என்றாள்.

“இன்னிக்கு நைட்ஷோ போறோம்... நீங்களும் வரீங்க...”

“நானு... ஸாரி! நைட்ஷோ எனக்குப் பிடிக்காது...”

“பாலு...” என்று கூவினாள்.

“வாடா. எல்லாம் ஒரு நா நைட்ஷோ பார்த்தா ஒண்ணும் ஆகாது. எனக்கு நாளைக்கு ஆபீஸ். நானே வரேன்...” என்றான்.

“உனக்கென்ன, அன்எம்ப்ளாய்ட்... வரவேண்டியதுதானேங்கறியா...?”

லஞ்சம்

லஞ்சமே வாங்காத லட்சிய புருஷனாக இருந்த அந்த அதிகாரி, இப்போது திடீரென மாறிவிட்டார்.

அந்த அதிகாரி தூய மனிதர். அதிகாரியின் லட்சணங்கள் ஒருங்கே பெற்றவர். பொதுமக்களிடமும் உயர் அதிகாரிகளிடமும் பக்குவமாக நடந்து கொண்டு, நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வந்தார். அந்த அதிகாரிக்கு மாற்றம் தேவையாக இருந்தது. லஞ்சம் கொடுத்துக் காரியத்தை முடித்துக் கொள்ள முயன்றும் அவருக்குத் தோல்வியே கிடைத்தது.


அவருடைய நிர்வாகம் சிறப்பாக இருந்ததால், அவரை அதே இடத்தில் தொடர்ந்து வேலை பார்க்கும்படி கூறிவிட்டது மேலிடம்.

அதன் பிறகுதான் அவர் மாறிப் போய்விட்டார். லஞ்சம் வாங்கத் துணிந்து விட்டார். கருணை, கனிவு எல்லாம் போய்விட்டது. ஊரிலும் அலுவலகத்திலும் முணுமுணுப்பு.

சரியாக ஆறு மாதங்களில் அவர்மேல் வெறுப்புக் கொண்ட மேலிடம், அடுத்த மாவட்டத்துக்கு அவரை மாற்றிவிட்டது.

அதிகாரியும் புதிய இடத்தில் பதவியேற்றார். அங்கே லஞ்சம் வாங்கவில்லை. இது மேலிடத்துக்கு வியப்பாய் இருந்தது.

அவரை நெருங்கிக் கேட்டபோது அவர் சொன்னார்: “லஞ்சம் கொடுத்து மாற்றல் கேட்டேன், பலிக்கவில்லை. லஞ்சம் வாங்கினேன், மாற்றிவிட்டார்கள்...!”



— அம்பை. வீ.லீலீ.

''சே...! அந்த மாதிரி ஃபீல் பண்ணுத...'' என்று பதறிப்போய்த் தோளைத் தட்டினுன்.

சிரித்தான்: ''விளையாட்டுக்குச் சொன்னேன்.''

போனேம். நான், பாலு, உஷா... அடுத்த இரு ஸீட்கள் காலி. மற்றபடி 'ரோ' முழுவதும் பெண்கள். படம் ஆரம்பிக்குமுன் ஒரு ஜோடி வந்தது.

''சார்... கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணுங்க...'' என்முன் கணவன்.

பாலுவும் உஷாவும் இடம் மாறினுர்கள். பாலுவின் கவனம் திரையிலிருக்க, இருட்டில் என் கை விரல்களைப் பற்றினுள். விளையாட்டாய்ச் சொடுக்கினுள்.

உதறினேன். பிடியை அவள் விடவில்லை. போராட்டம் பாலுவின் கவனத்தை ஈர்க்கலாம் என்ற பயத்தில் அமைதியானேன். ஒரு முறை அழுத்தி, பிறகு விட்டுவிட்டாள்.

பங்களூர் மாமா கடிதம் போட்டிருந்தார்— ஹொசூரில் ஒரு கம்பெனியில் வேலை வாங்கித் தருவதாக. சொல்லிக் கொள்ளப் போனேன்.

''வரட்டுமா...''

''ஞாபகம் வச்சுக்குங்க...''

விழிகளில் நீர். முதன் முறையாக மனத்தில் என்னமோ செய்தது. கேட்டு விட்டேன்:

''நிஜம்மாவே என்னை நேசிக்கிருயா?''

''ம்...''

சில விநாடிகள் என்ன சொல்வதென்று புரியவில்லை.

''காத்திருப்பாயா...?'' என்றேன் தவிப்புடன்.

ஆர்வமாய்த் தோளில் சாய்ந்தாள்.

''இரு, இரு. மூணு அல்லது நாலு வருஷம் ஆகலாம்... முடியுமா?''

உடல் முழுவதும் பரவசமாய்ச் சிரித்தாள். அணைத்துக் கொண்டேன். மனக்கதவு திறக்க, அழுத்தமாய் அ[...] உருவம் பதிந்தது. உடனேயே க[...]கள்... கற்பனைகள்.

நான்கு வருடங்கள்.

காலம்தான் எவ்வளவு வேகம[...] ஓடுகிறது. பங்களூர், பம்பாய் எ[...] எங்கெல்லாமோ சுற்றிவிட்டு... [...] நாட்களுக்குப் பின் ஊர் திரும்பினே[...]

தடுத்த மனத்தையும் மீ[...] போனேன்.

''வாடா... லீவுல வந்தியா... [...] லெட்டர்கூடப் போடலை... ம[...] துட்டியா...?''

—பாலு வரவேற்முன். கைகளில் [...] வயசுக் குழந்தை.

''யாரு, தெரியுதா? ஹேய் ஸ்ரீரா[...] மாமாவைப் பாரு... குட்மார்[...] சொல்லு...''

உள்ளிருந்து உஷா வந்தாள். முகத்[...] ஒரு சந்தோஷ அலுப்பு. உடம்பில் [...] அயர்வு. தங்கத் திருமாங்கல்யச் ச[...] சகஜமாய்க் கழுத்திலிருந்தது.

''வா... இப்பதான் வந்திய[...] டேய் ஸ்ரீராம், பங்களூர் மாமாட[...] பெரிய ஆள்... விடாதே[...] புடிச்சுக்கோ...''

இயந்திரமாய் அவளைப் பார்த்தே[...]

''இன்னும் அதே கம்பெனிலதா[...] இருக்கியா... என்ன சம்பளம் தரா[...] இவர் ரெண்டாயிரம் வாங்கருர். அப்[...]யும் பத்தலே. காஸ்... டீவின்னு[...] ஏகப்பட்ட செலவு. இப்பகூட ந[...] தனியா இங்கே வரதுல அவரு[...] இஷ்டமே இல்லே. தெனம் ஒரு லெட்[...] போடுன்னுர். ..பாரேன் ... நாளை[...] வந்து நிற்பார்... நான் இல்லா[...] பொழுதே ஓடாது...''—நிறை[...] சிரித்தாள். அதுவும் பழைய வசீக[...]துடன். சர்வ சுதந்திரமாய் ஈஸிசே[...] சாய்ந்தாள். ''என்ன, பேச[...] மாட்டேங்கிறே...பெரிய மனுஷனு[...]டியா...?''

சிரித்தேன். உயிரற்ற சிரிப்பு. எ[...] பேசுவது... எதைக் கேட்பது?

பேசாமலேயேதான் அன்று வீட்[...]குத் திரும்பினேன். மறு[...] பம்பாய்க்கு.

அத்தானைப் பார்த்தீங்களா?

அழகாபுரி அழகப்பன்



காரைக்குடி மகர்நோன்புப் பொட்டலருகே இருந்தது உளுந்தவடை உண்ணாமலையம்மாள் வீடு. அவள் வடை சுட்டால், அப்படி மெதுவாக இருக்குமாம்; அதனால் அந்தப் பட்டப் பெயர்.

பிரம்மாண்டமான வீடு. வீட்டின் பின்னால் காம்பவுண்டுச் சுவருக்குள் நிறைய இடம் கிடந்தது.

வீட்டையொட்டிக் கட்டுத்தறி. கருங்கல் பாவிய தளமும் சீமை ஓடுகள் போர்த்திய கூரையும் கொண்டது. நாலைந்து லட்சணமான வெள்ளைப் பசுக்கள் அமைதியாக அசைபோட்டன. குன்றுகள்போல் வைக்கோல் போர்கள் குவிந்திருந்தன. ஆங்காங்கே வேப்பமரங்கள் நிழல் தந்தன. தெற்கு மூலையில் சிமெண்ட் மேடை கட்டிய கேணி இருந்தது. அதைச் சுற்றிலும் நிறைய வாழை, தென்னை, கொய்யா, நாரத்தை, வேப்பமரங்கள்,

கறிவேப்பிலைக் கன்றுகள்...

கொல்லை வாசலில் பெரிய தகர கேட் அதன் வழியாகத்தான் வைக்கோல் வண்டிகளும் விறகு வண்டிகளும் வரும். ஆள் போகவர அதிலேயே ஒரு சின்னக் கதவு.

கேட்டை ஒட்டி ஒரு சின்ன வீடு. வாசல்படி காம்பவுண்டுக்குள் வாடகைக்கு விடுவதற்காகவே கட்டப்பட்டது.

வாடகை நாற்பது ரூபாய்.

அந்த வீட்டில் நடேசனும் வறுமையும் குடியிருந்தார்கள். நடேசன் கல்லுக்கட்டி கீழ்கரையிலிருக்கும் ஒரு சில்க் ஸ்டோரில் நீண்டநாள் கணக்குப்பிள்ளை. தற்போதைய சம்பளம் முந்நூறு ரூபாய்.

அவருக்கு இரண்டே குழந்தைகள்தான். ருக்குவும் மாரியப்பனும். ஆனாலும், நான்கு ஜீவன்களுக்கு அந்த வருவாய் போதவில்லை. குழந்தைகளுக்கு நன்றாகச் சாப்பிடுகிற வயது.

அன்று மத்தியானம் ஒன்றரை மணி இருக்கும்.

ருக்கு தையல் பிரிந்துபோன ஜாக்கெட்டைக் கைத்தையல் போட்டு இணைத்துக்கொண்டிருந்தாள்.

தனபாக்கியம் வழக்கம்போல் தூணில் சாய்ந்துகொண்டு, எப்போதடா விடியும் என்று எதிர்பார்ப்பதுபோல், விட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அன்று முத்துப்பட்டணம் முத்துமாரியம்மன் கோயில் பொங்கல். பள்ளிகளுக்கெல்லாம் விடுமுறை.

அவ்வளவு நேரமும் தெருத் தெருவாக அலைந்து, திருவிழாக் கூட்டத்தை வேடிக்கை பார்த்துப் பொழுது போக்கிவிட்டு, பசி வயிற்றைக் கிள்ளியவுடன் வீட்டுக்கு வந்த மாரியப்பன், ''அம்மா, ரொம்பப் பசிக்குது! சோறு போடு,'' என்றபடி வேட்டியை மடித்துக் கைகால்களைக் கழுவிக்கொண்டு உட்கார்ந்தான்.

தனபாக்கியம் எழுந்து வட்டியில் கஞ்சி ஊற்றி, கிண்ணியில் ஊறுகாய் வைத்தாள்.

மாரியப்பன் எரிச்சல் பட்டான். என்னம்மா! இன்னைக்கும் குழம்பு வைக்கலையா? ஒரு வாரமாச்சு நீ குழம்பு வச்சு!''

''காசு இருந்தா வைக்கமாட்டனா? அரிசிக்கே காசில்லை!''

''ஆமா! தினமும் இதையே சொல்லு!''

''என்னை என்னப்பா பண்ணச்சொல்றே? அப்பா வாங்கற சம்பளத்திலே இவ்வளவுதான் செய்யமுடியும். நீ இந்த வருஷம் நிறைய மார்க் வாங்கி, அடுத்த வருஷம் வேலைக்குப் போய், சம்பளம் வாங்கிட்டுவா. அப்புறம் பாரேன், தினம் விதவிதமாகக் குழம்பு வைக்கிறேன்!''

''அப்படின்னா, என்னை அடுத்த வருஷம் ஹையர் செகண்டரியிலே சேர்க்கமாட்டீங்களா? பத்தாவதோட படிப்பை நிறுத்தவேண்டியதுதானா?''

''படிச்சது போதும். வேலைக்குப் போ.''

''போம்மா. குழம்பும் வைக்கமாட்டேங்கிறே; படிக்கவும் விடமாட்டேங்கிறே!'' சலித்துக்கொண்டான் மாரியப்பன்.

''நீதானே குழம்புக்கு ஆசைப்படறே? படிப்பை விட்டுட்டு வேலைக்குப் போனாத்தான் தினமும் குழம்பு கிடைக்கும்!''

மாரியப்பன் மௌனமாகச் சாப்பிடத் தொடங்கினான்.

அப்போதுதான் வீட்டுக்கார உண்ணாமலையம்மாளின் மகள் தெய்வி ஓடிவந்தாள். அவள் முகம் ஒரேயடியாய் மலர்ந்திருந்தது.

''ருக்கு, தாக்கல் தெரியுமா? எனக்குக் கலியாணம் பேசியாச்சே!'' என்று குதூகலித்தாள்.

ருக்கு தையலை நிறுத்தினாள். ''அப்படியா! ரொம்ப சந்தோஷம்!''

''ஆத்தாளும் அப்பச்சியும் இப்பத்தான் ஊர்லேந்து வந்து சொன்னாங்க. வர்ற சித்திரை மாசம் பதினஞ்சாம் தேதியாம்!''

''அப்போ இன்னும் ஒருமாசந்தான் இருக்கு.''

''ஆமா. எல்லோரும் கண்டிப்பா வந்துடுங்க.''

''எப்படியும் இந்த வாரத்துக்குள்ளே கல்யாணம் தகைஞ்சுடும்னு நாலு நாளைக்கு முந்தியே சொன்னியே, எப்படி?''

''போனவருஷம் முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவின்போது கோயிலுக்குப் போய் வேண்டிக்கிட்டேன். முத்துமாரி சக்தியுள்ள தெய்வம்! கேட்டார்க்குக் கேட்ட வரங் கொடுப்பா! போன திருவிழாவுக்கு வேண்டிக் கிட்டேன். இந்தத் திருவிழாவுக்குள்ளே கல்யாணம் தகைஞ்சுடுச்சு! நான் வாறேன். அப்பச்சியும் ஆத்தாளும் என்ன பேசிக்கிறாங்கன்னு கேக்கணும்!'' என்று சொல்லிவிட்டு ஓடினாள் தெய்வி.

தனபாக்கியம் பெருமூச்சு விட்டாள். ''ஹூம்! ஊர்லே உலகத்திலே எல்லாருக்கும் கல்யாணம் நடக்குது. ருக்கு சமஞ்சு மூணு வருஷமாகுது; அவளுக்கு இன்னும் நடக்கமாட்டேங்குது.''

ருக்கு அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டாள். அம்மாவுக்கு எதிலும் அவசரம்தான்.

மாரியப்பன் கேட்டான் ''ஏம்மா அலுத்துக்கிறே? நீ என்ன, மத்தவங்கமாதிரி மாப்பிள்ளை தேடி அலையப்போறியா, நகை நட்டுப் பண்ணப்போறியா? மாப்பிள்ளை நம்ம ருக்குவுக்காகவே காத்துக்கிட்டிருக்கார். நகை நட்டு எதுவும் கேட்கமாட்டார். அத்தைக்கு ஏதோ பயம்! இன்னும் ரெண்டு வருஷந்தான் போகட்டுமே!''

''உனக்கென்னப்பா, சுலபமாச் சொல்லிட்டே! வயசுக்கு வந்த பொண்ணை வீட்டிலே வச்சிருக்கிற கஷ்டம் பெத்தவளுக்கில்ல தெரியும்! கோபால் என்னைக்கு நல்ல சேதியோட

வரப்போருனே!'' என்று மீண்டும் பெருமூச்சுவிட்டாள் தனபாக்கியம்.

கோபாலின் நினைவு வந்ததுமே ருக்குவின் நெஞ்சுக்குள் உற்சாகம் பொங்கு ஊற்ருய்ப் பீறிட்டு அடித்தது.

கோபால் அவள் அப்பாவுடன் பிறந்த நல்லம்மா அத்தையின் ஒரே மகன். அவள் பிறந்ததுமே, அவன்தான் மாப்பிள்ளை என்று இரு தரப்பினரும் முடிவு செய்துவிட்டார்களாம்.

அவளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்தே, 'இதோ உன் புருஷன் வருண்டி!' என்றுதான் கோபாலை அறிமுகப்படுத்தியிருந்தார்கள். புருஷன் என்ருல் அர்த்தம் புரியாத வயதிலேயே அவள் அவனைக் கண்டு வெட்கப்பட்டாள்.

தகப்பனில்லாத பிள்ளை தறுதலை என்பார்கள். ஆனல், கோபால் அதைப் பொய்யாக்கிக் காட்டினுன்; பொறுப்பாக நடந்து கொண்டான். நன்ருகப் படித்தான்.

அப்பாவுக்குத் தங்கையின்மீதும் அவள் மகனின் மீதும் நிறையப் பாசம் இருந்தது. வீட்டில் என்ருவது கறி, மீன் சமைத்தால், ருக்குவை அனுப்பி அவர்களைக் கூட்டிவரச் சொல்லிச் சாப்பிட வைப்பார். அதேபோல், 'வெஞ்சனம்' சரியில்லாத நாள் களில் தங்கையின் வீட்டுக்குக் கிண்ணம் கொடுத்தனுப்பி வாங்கி வரச் சொல்வார்.

கோபால் நல்ல உயரம், நல்ல சிவப்பு. எப்போதும் சிரித்த முகமாகவே இருப்பான். கோபமே வராத குணம். ருக்குவுக்கு அவன் மேல் ரொம்பப் பிரியம்.

கோபால் பத்தாம் வகுப்பில் நல்ல மார்க் வாங்கித்தான் தேர்ச்சி பெற்ருன். ஆனுலும் மேலே படிக்கவைக்க நல்லம்மாளுக்கு வசதியில்லை. ஏதாவது வேலைக்கு அனுப்ப நினைத்தாள்.

அப்பாதான் அவனை செக்காலை ரோடில் ஒரு போட்டோ ஸ்டுடியோவில் சேர்த்துவிட்டார். ஆரம்பத்தில் அறுபது ரூபாய்தான் சம்பளம். வேலை கற்றுக் கொண்டால் உயருமாம்.

கோபாலுக்கு மாமனிடம் அத்தையிடமும் நிறைய மரியாதை இருந்தது; ருக்குவிடமும் மாரியப்பனிடமும் நிறையப் பிரியம் இருந்தது. தினமும் மாமன் வீட்டுக்கு வருவான். எல்லாரிடமும் கலகலப்பாகப் பேசுவான். ருக்குவுக்கும் மாரியப்பனுக்கும் பாடம் சொல்லித்தருவான், தாயம் விளையாடுவான். காசு கிடைத்தால், மாரியப்பனுக்கு மிக்சரும் ருக்குவுக்குப் பூவும் வாங்கிவருவான்.

எல்லாம் அவள் வயதுக்கு வந்த வரைக்கும்தான்.

பதினைந்தாம் வயதில் ருக்குவும் பருவமடைந்தாள்.

எதிர்கால மாமியார் என்ற முறையில் நல்லம்மா நிறையச்

சீர்கொண்டுவந்தாள்.

அத்தோடு ருக்குவின் படிப்பு நின்றுவிட்டது. வயதுக்கு வந்த பெண் தனியாக வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்பதில் தீவிரமாயிருந்த தனபாக்கியமும் நடேசனும் அவளைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டார்கள். அதேபோல், கோபாலையும் வாசலோடு நிறுத்திவிட்டார்கள். என்னதான் அத்தை மகனென்றாலும், நாளைக்குத் தாலி கட்டப்போகிறவனென்றாலும் கல்யாணமாகுமுன் அவளோடு பேசக்கூடாதாம்.

ருக்கு வயதுக்கு வந்ததுமே தனபாக்கியம் கல்யாணப் பேச்சை ஆரம்பித்துவிட்டாள். காலா காலத்தில் பொறுப்பைக் கழற்றிவிட்டுவிட அவள் ஆசைப்பட்டாள்.

நல்லம்மாளுக்கும் மருமகள் சீக்கிரம் வீட்டுக்கு வரவேண்டும் என்று ஆசைதான். கோபாலுக்கு அப்போது இருபத்திரண்டு வயதாகியிருந்தது.

நடேசனும் நல்லம்மாளும் குழந்தைகளின் ஜாதகங்களை எடுத்துக்கொண்டு ஜம்புலிங்க ஜோஸ்யரிடம் போனார்கள்.

ஜம்புலிங்க ஜோஸ்யர் அந்த வட்டாரத்திலேயே பிரபலமானவர். அவர் சொன்னால் சொன்னபடி நடக்கும் என்பார்கள்.

அவர் ஜாதகங்கள் இரண்டையும் வெகு நேரம் ஆராய்ந்துவிட்டு, இரண்டு ஜாதகமும் வெகு பேஷாப் பொருந்தறது. ஆனால், இன்னும் அஞ்சு வருஷம் கழிச்சுத்தான் கல்யாணம் பண்ணணும். அதுவரைக்கும் தோஷம் இருக்கு. மீறிப் பண்ணினா, பையனுக்கு ரெண்டாம் தாரம் பண்ணவேண்டி வரும்!'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

நடேசனுக்கு அதில் நம்பிக்கை வரவில்லை. ''அவர் ஏதோ சொன்னார்னு குழம்பாதே, நல்லம்மா. தோஷமாவது கீஷமாவது! இதான் மாப்பிள்ளை, இதான் பொண்ணுன்னு பதினைந்து வருஷத்துக்கு முன்னாலேயே தீர்மானம் பண்ணிட்டோம். அதை எந்தத் தோஷத்தாலும் மாத்தமுடியாது!''

ஆனால் நல்லம்மா பயந்து நடுங்கினாள் ''அப்படியில்லை, அண்ணே. பின்னாலே அதுகளுக்கு எதுவும் கஷ்டம் வந்துடக்கூடாது! கோபால் இன்னும் அஞ்சு வருஷம் காத்திருக்கட்டும்!'' என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

கோபாலுக்கு ஜாதகத்தில் நம்பிக்கையில்லை என்றாலும் அம்மாவின் கட்டளையை ஏற்றுக்கொண்டான். ஒரு பெண்ணுக்குத் திருமணம்செய்ய இருபது வயதுதான் ஏற்ற பருவம், அப்போதுதான் அவள் உடல் முழு வளர்ச்சி பெற்றிருக்கும் என்று சமாதானம் செய்துகொண்டான்.

ஆனால், ருக்கு அதைக் கேட்டுக் கொஞ்சம் ஏமாற்றம்தான் அடைந்தாள். அவளுக்கும் காலாகாலத்தில் அத்தானுடன் குடும்பம் நடத்த வேண்டுமென்று கொள்ளை ஆசை!

வேலையில் சேர்ந்த சில மாதங்களுக்குள்ளாகவே கோபால் புகைப்படத் துறையின் எல்லா நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டான். அவன் சம்பளம் நூற்றைம்பதாக உயர்ந்தது.

இப்படி ஈராண்டுகள் ஓடின.

கோபாலுக்கு ஒரு நல்ல வாய்ப்பு வந்தது.

ஸ்டுடியோக்காரர் சென்னையில் ஒரு கிளை துவக்கினார். கோபாலை அதன் மேனேஜராக்கி, ஸ்டுடியோவின் முழுப் பொறுப்பையும் கொடுத்து, சம்பளத்தை ஐந்நூறாக்கினார்.

கோபாலும் நல்லம்மாளும் சென்னைக்குப் போனார்கள்.

அவர்கள் போயும் ஓராண்டாகிவிட்டது.

தோஷ காலத்தில் இன்னும் இரண்டு வருஷங்கள்தான் பாக்கி.

நடேசன் மதியச் சாப்பாட்டுக்காகக் கடை சைக்கிளில் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார். மிக மெதுவாக, சாலையோரத்தில் ஜாக்கிரதையாக வந்துகொண்டிருந்தார்.

நடேசனுக்கு அப்படியொன்றும் வயதாகிவிடவில்லை. நாற்பத்தைந்துதான் இருக்கும். ஆனால் தொடர்ந்த வறுமையால் அவர் துவண்டு போயிருந்தார். வாழ்க்கை என்பது எந்த சுவாரஸ்ய முமில்லாத பாலைவனம் என்ற முடிவுக்கு வந்து, இந்தப் பயணம் எப்போது முடியுமோ என்று அலுத்துக்கொண்டிருந்தார்.

சைக்கிளைத் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு கேட்டின் சிறிய கதவுவழியாகக் காம்பவுண்டுக்குள் நுழைந்தவர், சைக்கிளை வீட்டு வாசல்முன் நிறுத்திவிட்டு, வேப்ப மரத்தடி யிலிருந்த தொட்டித் தண்ணீரில் கைகால்களைக் கழுவிக்கொண்டு, துண்டால் துடைத்தபடியே சாப்பிட உட்கார்ந்தார்.

தனபாக்கியம் கஞ்சி ஊற்றிக்கொண்டே, ''சாயங்காலம் நாலு மணியைப்போலக் கொஞ்சம் வீட்டுக்கு வாறீங்களா?''என்றுகேட்டாள்.

''எதுக்கு?'' என்று புரியாமல் கேட்டார் நடேசன்.

''இன்னைக்கு முத்துமாரியம்மன் கோயில் பொங்கலுங்க!''

''ஆமா, அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?''

''நாம்பளும் கோயிலுக்குப் போய்ட்டுவருவமே.''

''ஆ...மா! அம்பாள் நம்மை வச்சிருக்கிற அழகுக்கு நாம்ப நன்றியோட கோயிலுக்குப் போகவேண்டியதுதான்!'' என்று கேலி செய்தார் நடேசன்.

''இல்லீங்க. முத்துமாரி வரப்பிரசாதியான தெய்வமாம்!

கேட்டார்க்குக் கேட்ட வரம் கொடுப்பாளாம்! நம்ப உண்ணுமலையம்மா மக தெவ்வி சொன்னு''

''சரி, நீ என்ன வரம் கேட்கப்போறே?''

''கேட்கிறதுக்கு வரமா இல்லை? நம்ம ருக்குவுக்கு சீக்கிரம் கல்யாணம் நடக்கணும்னு கேட்போம். நம்ம குடும்பம் நல்ல நிலைமைக்கு வரணும்னு கேட்போம். வாங்க.''

பொதுவாக நடேசனுக்குத் தேர் திருவிழாக்களில் ஈடுபாடு கிடையாது. அதற்கெல்லாம் அவருக்கு நேரமும்இல்லை; மனநிலையுமில்லை. எப்போதும் தமது துயரங்களைச் சுமந்துகொண்டு, தாளமாட்டாத காரணத்தால், கொஞ்சம் இறக்கிவைக்க நேரம் கிடைத்தாலும் மாட்டேனென்று வீம்பு பிடித்துக்கொண்டு...

''நான் என்னத்தை வந்தேன்; நீ வேணு புள்ளைகளைக் கூட்டிக்கிட்டுப் போய்ட்டுவா,''என்று சொல்லிட்டுப் போனுர்.

ருக்கு வீட்டைவிட்டு வெளியே போய் வெகு காலமாயிற்று. எனவே, நாலு ஜனங்களைப் பார்க்கலாம் என்று ஆர்வத்துடன் கிளம்பினுள்.

இருந்ததில் நல்ல பாவாடை, தாவணியைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் கிழிசல்களை அவசரம் அவசரமாகத் தைத்தாள்.

கோவிலில் சொல்லமுடியாத கூட்டம்.

தனபாக்கியம் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு முண்டியடித்து அம்பாள் சந்நிதிக்குப் போனுள். மனமுருக வேண்டிக் கொண்டு, பிராகாரம் வந்தாள்.

யாரோ ஒரு பெண் ஆவேசம் வந்து ஆடிக்கொண்டிருந்தாள்.

தனபாக்கியம் அவளை நெருங்கினுள். ''ஆத்தா! என் குறை உனக்குத் தெரியாது?''

அவள் இவளை உற்றுப் பார்த்தாள். ''வருவாண்டி! இன்னும் ஒரு வாரத்திலே தேடி வருவாண்டி! மனம்போல மாலை எடுத்துத் தாறேன்; எனக்கு மாவிளக்கு வைக்கிறியா?''

தனபாக்கியம் மட்டுமல்லாமல் ருக்குவும் மாரியப்பனும் கூடப் புல்லரித்துப்போய் நின்ருர்கள் அம்மா என்ன குறையென்றே சொல்லாதபோது, அந்தப் பெண்ணுல் அப்படிப் பேச எப்படி முடிந்தது?

''வைக்கிறேன், தாயே!'' என்று காலில் விழுந்தாள் தனபாக்கியம்

அவள் கூட்டத்தில் எல்லாருக்கும் திருநீறு பூசிவிட்டாள்.

அவர்களுக்குள் ஒரு நிம்மதி பிறந்தது.

ஏதோ ஒரு நன்மை நெருங்கி வருவது தெரிந்தது.



அவர்களது பிரார்த்தனைக்குப் பலன் கிடைக்கத் தொடங்கி விட்டதுபோல்தான் தோன்றியது.

மறு வாரம் அந்த வீட்டுச் சூழ்நிலையில் வெகுவாக முன்னேற்றம் தெரிந்தது.

சன்னலுக்குமேல் பெரிதாக ஒரு மாரியம்மன் படம் கண்ணாடி சட்டம் போடப்பட்டுத் தொங்கியது.

அறையோரச் சுவரில் புதிதாக ஒரு மர ஸ்டாண்ட் முளைத்திருந்தது. அதன்மேல் ஒரு புதிய அலாரம் கடியாரம் குந்தியிருந்தது. ஆணியில் புதிய பெரிய நிலைக்கண்ணாடி மாட்டப் பட்டிருந்தது. மர ஸ்டாண்டில் முழு உயரப் பவுடர் டின்னும் கலர் கலரான பொட்டு வகைகளும் ஹேர் கிளிப்புகளும் சோப்பு டப்பாவும் பாட்டில் நிறையத் தேங்காயெண்ணெயும் இருந்தன.

அடுக்களையில் நசுங்கிப்போன அலுமினிய டம்ளர்களுக்குப் பதிலாக புதிய எவர்சில்வர் டம்ளர்கள் அணிவகுத்து நின்றன.

மத்தியானம் சமைத்த முருங்கைக்காய் சாம்பாரும் உருளைக்கிழங்கு குருமாவும் தக்காளி சூப்பும் வாழைக்காய்ப் பொரியலும் முளைக்கீரை மசியலும் இன்னும் மீதியிருந்து மணத்தன.

மாலை ஐந்து மணி.

ருக்கு வீட்டு வாசலில் நீர் தெளித்துப் பெருக்கிக் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள்.

தனபாக்கியம் அப்போதுதான் தோட்டத்துக் கேணியில் குளிரக் குளிரக் குளித்துவிட்டு, புது வாயில் சேலையும் டூபை டூ ஜாக்கெட்டும் அணிந்துகொண்டு, காதோரம் சோப்பு நுரையோடு வந்தாள்.

ஐந்து நிமிஷங்களில் லேசாக எண்ணெய் பூசி, சீவிக் கொண்டையாய்ச் சுற்றிக்கொண்டாள். சற்றுமுன் வீதியில் வந்த பூக்காரனிடம் ஒரு ரூபாய்க்கு வாங்கிய மல்லிகைச் சரத்தைப் பிரித்து, பாதியை முத்துமாரியம்மன் படத்துக்குச் சூட்டினாள். மீதியை இரு பாகமாக்கி, ஒரு பாகத்தைத் தன் கொண்டையில் செருகிக்கொண்டு, மறு பாகத்தை ருக்குவுக்காக வைத்தாள்.

ருக்கு காப்பி கொண்டுவந்து கொடுத்தாள்.

காப்பியைக் குடித்துவிட்டு, அறைக்குள் போய், பழைய டிரங்குப் பெட்டி சரியாய்ப் பூட்டியிருக்கிறதா என்று பார்த்துவிட்டு, அர்ச்சனைக் கூடையை எடுத்துக்கொண்டு, கோயிலுக்குக் கிளம்பினுள் தனபாக்கியம்.

ருக்கு கவனித்துக்கொண்டிருந்தாள்.

அம்மா மட்டுமா மாறிப்போனுள்? அப்பாவும்தான் மாறிப்போனுர்!

நாலைந்து நாட்களுக்கு முன்னுல் எல்லாருக்கும் ஜவுளி எடுத்துக் கொண்டு வந்தார். அம்மாவுக்கு இரண்டு வாயில் சேலைகள், ஜாக்கெட் துணிகள், ருக்குவுக்கு இரண்டுசேலை, ஜாக்கெட் துணிகள், மாரியப்பனுக்கு இரண்டு சட்டைகள், தீபாவளிக்கு மட்டும்தான். இப்படி எல்லாருக்கும் ஒரே சமயத்தில் உடைகள் வாங்குவார்கள். கடனுக வாங்கிவந்ததாக அப்பா சொன்னுர்.

அன்றிலிருந்து அப்பாவும் அம்மாவும் அடிக்கடி தோட்டத்திற்குப் போனுர்கள் தென்னை மரங்களின் நிழலில் உட்கார்ந்து நெடுநேரம் பேசினுர்கள்.

ஒருவேளை, அப்பாவுக்கு வயது திரும்பிவிட்டதோ? தலைக்கு உயர்ந்த பிள்ளைகள் இருக்கும்போது அம்மாவை வீட்டில் கொஞ்சக்கூடாதென்று, மறைவாகக் கூட்டிப்போய்விடுகிருரோ?

ருக்கு தன்னையறியாமல் சிரித்துக் கொண்டாள்.

அப்பா பாவம், தினமும் கடை சாத்தி வீட்டுக்கு வர இரவு பத்தரை மணியாகிவிடும். வந்ததும் கஞ்சியைக் குடித்துவிட்டு, வாசலில் கட்டிலைப் போட்டுக்கொண்டு, அப்பாடா என்று சாய்ந்துவிடுவார். அவர் அம்மாவுடன் பேசுவதே அபூர்வம். அப்படிப் பட்டவர் ஒரு வாரமாக அடிக்கடி ரகசியம் பேசுகிருரே; என்னவாயிருக்கும்?

ஏதோ ஒரு சந்தோஷமான சமாசாரத்தை வெளியே சொல்லாமல் மறைத்து வைத்திருக்கும் திருட்டுப் பூரிப்பு அம்மாவின் முகத்தில் தெரிகிறது. அது என்னவாயிருக்கும்? அம்மா டிரங்குப் பெட்டியைத் திறந்து அடிக்கடி பணம் எடுக்கிருளே; அது எப்படி வந்திருக்கும்?

ஒன்றுமட்டும் நிச்சயம். அப்பா திருடியிருக்கமாட்டார். பித்தலாட்டம் செய்திருக்கமாட்டார். அதற்கெல்லாம் அவருக்குச் சாமர்த்தியம் போதாது. ஏதாவது லாட்டரியில் பரிசு விழுந்திருக்கும். பரிசு விழுந்தது வெளியே தெரிந்தால் பொருமைப்

படுவார்களென்று விஷயத்தை ரகசியமாய் வைத்துக்கொண்டு, கொஞ்சங்கொஞ்சமாய்ச் செலவழிக்கிறார்கள் போலிருக்கிறது.

அத்தான் இப்போது கல்யாணத்தை வைத்துக் கொண்டால், அப்பா ஓரிரு நகைகளாவது செய்து போடுவார். அவள் வெறும் அரைப் பவுன் தோடுகளோடு புருஷன் வீட்டுக்குப் போகவேண்டி வராது.

ஆனால், அத்தான் வருவானா?

வரத்தான் வேண்டும். அம்பாள்தான் அருள்வாக்குக் கொடுத்திருக்கிறாளே! அவள் வாக்குப் பொய்க்குமா?

அலையான கூந்தலை அழகாக வாரிப்பின்னி, ரிப்பன் கட்டிக் கொண்டு எழுந்த ருக்கு, முகம் கழுவிக்கொண்டு, பவுடர் போட்டுக் கொண்டாள்.

வாசல் கதவு தட்டப்பட்டது.

மாரியப்பன் வந்துவிட்டான். நாலரை மணிக்கு வரவேண்டிய பயல் ஊர் சுற்றிவிட்டு இப்போதுதான் வருகிறான்!

''வாடா தடியா, வா,'' என்றபடியே கதவைத் திறந்துவிட்ட ருக்கு அப்படியே திகைத்து நின்றுவிட்டாள்.

வாசலில் நின்றவன் கோபால்!



கோபாலைப் பார்த்ததுமே ருக்குவின் உடலில் ஆயிரம் வோல்ட் மின்சாரம் பாய்ந்தது. இன்ப அதிர்ச்சியில் அவள் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து நின்றாள்.

முன்னூறு மைல்களுக்கு அப்பாலிருக்கிறான் என்று அவள் நினைத்துக் கொண்டிருந்த கோபால் திடீரென்று அவளெதிரில் வந்து நிற்கிறானே! ஐயோ, இப்போது பார்த்து அம்மா வீட்டில் இல்லையே! அந்தத் தடியன் மாரியும் இன்னும் வரவில்லையே!

பதற்றத்தில் அவள் உடல் வெடவெடவென்று நடுங்கியது.

அவன் அவளைக் கண் நிறையப் பார்த்தான். அப்போது தான் சீவி முடித்திருந்த ருக்குவை வைத்த கண் வாங்காமல்

பார்த்தான்.

ஓராண்டில் அவளிடம் நிறைய மாறுதல்கள் தெரிந்தன. முன்னைவிட இப்போது ரொம்பவும் அழகாக இருந்தாள். பதினெட்டு வயது இளமை உடலெங்கும் திமிறியது. பழைய ஜாக்கெட்டுக்குப் போதாமல் நிறைய வளர்ந்திருந்தாள். போன வருஷம் தழையத் தழைய இருந்த பாவாடை இப்போது கணுக்காலுக்கு மேல் உயர்ந்திருந்தது. கையிலும் இடுப்பிலும் ஜாக்கெட் இணைப்புக்கள் பிதிர்ந்திருந்தன. முகம் பொம்மென்று பூரித்து, கன்னங்கள் கடிக்கத் தூண்டின.

இதற்குள் ருக்கு நிதானத்துக்கு வந்துவிட்டாள். ''வாங்கத்தான்!''

''அத்தை இல்லையா ருக்கு?''

''மாரியம்மன் கோவிலுக்குப் போயிருக்கு.''

''மாரியும் இல்லையா?''

''ஸ்கூல்லேருந்து இன்னும் வரலை. இப்போ வந்துடுவான். கட்டில்லே உட்காருங்க.''

கோபால் சுவரில் சாத்தியிருந்த கட்டிலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

''எப்போ அத்தான் ஊர்லேருந்து வந்தீங்க?''

''இப்போதான் வந்தேன். ஒரு வேலையா நேத்து திருச்சிக்கு வந்தேன்; அப்படியே உங்களையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''அத்தை நல்லா இருக்காங்களா?''

''நல்லா இருக்கு. மாமா, அத்தையெல்லாம் நல்லா இருக்காங்களா?''

''நல்லாயிருக்காங்க. நானும் மாரியும்கூட நல்லாயிருக்கோம்.''

''இதைக் கொண்டு போய் உள்ளே வை,'' என்று ஒரு துணிப் பையைக் கொடுத்தான் கோபால்.

அது நிறையப் பழங்களும் பூவும் இருந்தன.

வாசலில் நின்றபடியே வாங்கிக் கொண்ட ருக்கு, ''இருங்கத்தான். காப்பிப் போட்டுக் கொண்டு வர்றேன்,'' என்று உள்ளே சென்றாள்.

அப்போதுதான் மாரியப்பன் வந்தான்.

''அடடே! அத்தான்! வாங்க அத்தான், வாங்க,'' என்று பாசத்தோடு கூவிக் கொண்டே வந்து கட்டிக் கொண்டான்.

எப்போதுமே அவனுக்கு அத்தானிடம் ஒட்டுதல் அதிகம்.

''எங்கே அத்தையைக் காணோம்?''

''உங்க வசதிக்காக எங்காவது போயிருக்கும். வசதியைப்

பயன்படுத்திக்கிட்டீங்களா?'' என்று சிரித்தான் மாரியப்பன்.

''எனக்கென்ன வசதி?'' என்று புரியாதவன் போல் கேட்டான் கோபால்.

''ஒரு வருஷம் கழிச்சு உங்க சம்சாரத்தைப் பார்க்க வர்றீங்க. ஆசையா நாலு வார்த்தை பேசுவீங்க. அதுக்கு இடைஞ்சலா இருக்க வேணுமேன்னு அம்மா வெளியே போயிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டீங்களான்னு கேட்டேன்.

''நானும் பெரிய மனுஷனாயிட்டேன், அத்தான். பார்த்தீங்களா, மீசை அரும்பிடுச்சு!'' மாரியப்பன் தடவிக் காட்டினான்.

''நல்லாத்தான் வளர்ந்துட்டே!''

''எப்போ எனக்குப் பொண்ணு பெத்துத் தரப் போறீங்க? எங்க ருக்குவோட பொண்ணைத்தான் கட்டிக்கணும்னு காத்துக்கிட்டிருக்கேன். நீங்க என்னடான்னா, காலா காலத்திலே எங்கக்கா கழுத்திலே தாலியைக் கட்டிக் கூட்டிக்கிட்டுப் போகாமல், தோஷம் கீஷம்னு பயந்துட்டிருக்கீங்களே?''

''நான் பயப்படலை மாரி. நம்ம மனசு நல்லாயிருந்தா எந்தத் தோஷமும் விலகிப் போயிடும். உங்க அத்தேயோட திருப்திக்காகவும் ருக்குவுக்கு இன்னும் கொஞ்சம் வயசாகட்டுமே என்கிறதுக்காகவும்தான் இத்தனை வருஷம் தள்ளிப் போட்டுக்கிட்டு வந்தேன். இனிமே தள்ளிப் போட முடியாத சூழ்நிலை. அம்மாவைச் சமாதானப்படுத்திவிட்டேன். சித்திரை மாதம் கல்யாணத்தை முடிச்சுக்கலாம்னு மாமாகிட்டே சொல்லிட்டுப் போகலாம்னுதான் முக்கியமா இப்போ வந்தேன்!''

காப்பி போட்டுக் கொண்டு வந்த ருக்கு அவன் சொன்னதைக் கேட்டு சந்தோஷம் தாங்காமல் நின்றுவிட்டாள்.

'வருவாண்டி! இன்னும் ஒரு வாரத்திலே வீடு தேடி வருவாண்டி!' என்று அந்தப் பெண் சொன்ன அருள்வாக்கு அவளுக்கு ஞாபகம் வந்தது.

''பார்த்தியா, ருக்கு, மாரியோட மகிமையை!'' என்று வியந்தான் மாரியப்பன்.

இதிலே உன்னோட மகிமை என்ன இருக்கு?'' என்று கேட்டான் கோபால்.

''என்னைச் சொல்லலை, அத்தான். முத்துமாரியம்மனைச் சொன்னேன். ரொம்பச் சக்தியுள்ள தெய்வம்! நம்ம உண்ணாமலையம்மாள் மகள் தெய்வியில்லை, அது தனக்குக் கல்யாணம் முடியணும்னு போன வருஷம் திருவிழாவின் போது வேண்டிக்கிடுச்சாம். இந்த வருஷம் திருவிழாவுக்குள்ளே பேசி முடிச்சாச்சு, அத்தான்! அதைப் பார்த்து, போன வாரம் நாங்களும் கோயிலுக்குப் போனோம். எங்க குடும்பம் நல்லா வரணும், ருக்கு கல்யாணம் சீக்கிரம் முடியணும்னு வேண்டிக்கிட்டோம். ரெண்டு

நாள்லே அப்பாவுக்கு லாட்டரியிலே பிரைஸ் அடிச்சிருக்கு!''

''அப்படியா! எவ்வளவு?''

''யாருக்குத் தெரியும்? அவங்க எங்ககிட்டே சொல்லவேயில்லே. அம்மா ஒரு பூட்டு வாங்கி, பழைய டிரங்குப் பெட்டிக்குள்ளே பணத்தை வச்சுப் பூட்டி, சாவியை இடுப்பிலே சொருகியிருக்கு. எல்லாருக்கும் புது டிரெஸ் வாங்கியிருக்காங்க. அம்மா தினமும் குழம்பு வைக்குது. ராத்திரிக்கு டிபன் பண்ணுது. இன்னிக்கு ராத்திரிகூட இடியாப்பமும் தேங்காய்ப் பாலுமாம். காலேயிலே பேசிக்கிட்டாங்க!'' என்று சிரித்தான் மாரியப்பன். ''அதே சமயம் இன்னும் ரெண்டு வருஷம் போகணும்னு சொல்லிக்கிட்டிருந்த நீங்க அடுத்த மாசமே கல்யாணத்தை முடிக்கணும்னு வந்து நிக்கிறீங்க! இது மாரியின் மகிமையில்லாமல் வேறே என்ன?''

''இருக்கலாம். மனம் உருகின பிரார்த்தனேக்கு எப்போதுமே பலன் உண்டு.''

''மாரி, அத்தானுக்குக் காப்பி கொடு,'' என்று வாசலில் நின்றபடி குரல் கொடுத்தாள் ருக்கு.

''நான் என்ன, உங்கத்தானுக்கு வேலேக்காரனு? தேவைன்னு நீயே கொடு!'' என்று முறுக்கிக் கொண்டான் மாரியப்பன்.

அவன் அப்படிச் சொன்ன காரணம் ருக்குவுக்குப் புரிந்தது. கோபாலுக்குப் புரிந்தது. அதனுலேயே ருக்கு மிகவும் வெட்கப்பட்டாள்.

''கொடுடான்னு...''

''இப்போ நான் வரலேன்னு நீதானே கொடுப்பே?''

''வரலேன்னு சரி. அதான் வந்துட்டியே?''

''வந்து தொலேச்சுட்டேங்கிறே? அதெல்லாம் முடியாது. உன் மக்கு அத்தான் காப்பி சாப்பிடணும்னு எனக்கொண்ணும் அக்கறை கிடையாது. உனக்கு அக்கறை இருந்தால் நீயே கொடு.''

''காப்பி ஆறிப் போறதுக்குள்ளே யாராவது கொடுங்களேன்!'' என்று கோபால் கெஞ்சினுன்.

''சரி, நானே கொடுக்கிறேன்,'' என்று வெளியே வந்து, கோபாலிடம் காப்பியைக் கொடுத்த ருக்கு, ''இருடா, எனக்கும் சமயம் வரும்; கவனிச்சுக்கறேன்!'' என்ருள்.

''உனக்கு இப்படியொரு சான்ஸ் கொடுத்ததுக்காக நீ எனக்குச் சாக்லேட் வாங்கித் தரணும்!'' என்று மாரியப்பன் சிரித்தான்.

சற்றைக்கெல்லாம் தனபாக்கியம் வந்துவிட்டாள்.

அவளேக் கண்டதுமே கோபால், ''அத்தை!'' என்று உற்சாகத்தோடு கூவினுன்.

தனபாக்கியம் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். ''யாரு, கோபாலா? எப்போ வந்தே?''

''நான் வந்து ஒரு மணி நேரம் ஆச்சு.''

''அம்மா நல்லாயிருக்குதா?'' என்று கேட்டுவிட்டு, பதிலை எதிர்பாராமல் உள்ளே சென்று அர்ச்சனைக் கூடையை வைத்தவள் ருக்குவைப் பார்த்தாள்.

அடுப்படியிலிருந்த அவள் முகம் பிரகாசமாயிருந்தது.

தனபாக்கியம் வாசல் படியில் உட்கார்ந்தாள்.

''அம்மா, அத்தான் ஒரு நல்ல சேதியோட வந்திருக்காங்க. அது என்னன்னு சொல்லிடு, பார்ப்போம்!'' என்றான் மாரியப்பன்.

ஒரு நிமிஷம் யோசித்த தனபாக்கியம் கடைசியில், ''தெரியலையே. என்ன அது?'' என்று கேட்டாள்.

''போம்மா, இதுகூடத் தெரியலையாக்கும்! நல்ல சேதி வேறே என்னவாயிருக்கும்? ருக்கு கல்யாணம் அடுத்த மாதம்!''

'அப்படியா! எங்க வயத்திலே பால் வார்த்தேப்பா! முத்து மாரி நாங்க கேட்ட வரத்தைக் கொடுத்துட்டா!' என்று மகிழ்ச்சிப் பெருக்கில் கூவியிருக்க வேண்டிய தனபாக்கியம், ''அதைப்பத்தி உங்க மாமன்கிட்டத்தான் பேசணும்,'' என்றாள்.

கோபாலுக்கு சப்பென்று போய்விட்டது.

ருக்கு புருவங்களை நெறித்தபடி தாயைப் பார்த்தாள்.

மாரியப்பன் வெகுவாக வியப்படைந்தான்.

ஐந்தாண்டுகளுக்கு நடைபெறக் கூடாதென்று தடுக்கப் பட்ட திருமணம். மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருமணம். அதை நடத்த அத்தான் முன்வந்திருக்கிறான். போன வாரம்தான் கோவிலுக்குப் போய், மகள் கழுத்தில் சீக்கிரம் தாலி யேற வேண்டுமென்று வேண்டிக் கொண்ட அம்மா கொஞ்சம்கூட மகிழ்ச்சி காட்டாமல், அப்பாவிடம் பேசச் சொல்கிறாளே! பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் நிச்சயிக்கப்பட்ட கல்யாணத்தைப் பற்றி இப்போது புதிதாகப் பேச என்ன இருக்கிறதாம்?

''என்னம்மா, சந்தோஷமா சரின்னு சொல்லாமல், சாவ காசமா இழுக்கிறே?''

''கல்யாணத்தைப் பற்றிப் பெரியவங்கதான் பேசணும். நானும் நீயும் பேச முடியுமா?''

''நான் சின்னப்பிள்ளை; ஒப்புக்கறேன். நீயுமா சின்னப்பிள்ளை? பொண்ணுக்கு அம்மாவாச்சே! மூணு வருஷத்துக்கு முந்தி, தோஷமாவது ஒண்ணுவது; கல்யாணத்தை முடிச்சுடலாம்னு அபிப்பிராயம் சொன்னியே, அப்போ மட்டும் பெரிய மனுஷியா இருந்தியா? போன வாரம் கோவில்லே போய் அப்படி வேண்டிக் கிட்டியே, அப்போ மட்டும் பெரிய மனுஷியா இருந்தியா?''

''உன்னோடெ யார் பேசுவா? நீ வாயை மூடிக் கிட்டு பேசாமல் இரு!'' என்று அதட்டிய தனபாக்கியம், மாப்பிள்ளையிடம் திரும்பி, ''கோபால், மாமா கடையிலேதான் இருப்பார். பேச வேண்டியதை அவர்கிட்டே போய் பேசி முடிவு பண்ணிக்க. பொம்பிளை நான் என்ன சொல்ல முடியும்?'' என்று பேச்சை முடித்துக் கொண்டு எழுந்தாள்.

நல்ல காரியத்துக்கு உடனே சம்மதம் சொல்லாமல், அம்மா ஏன் அப்பாவைக் கை காட்டிவிட்டு விலகிக் கொள்கிறாள்? ருக்குவுக்குப் புரியவில்லை.

தனபாக்கியத்தின் விட்டேற்றியான பேச்சு கோபாலுக்குப் புரியவில்லை. ''வா, மாரி. கடைத்தெருவுக்குப் போகலாம்,'' என்று எழுந்தான்.

''ஊருக்கா போறே, கோபால்?'' என்று கேட்டாள் தனபாக்கியம்.

''ஊருக்கு நாளை ராத்திரிதான் போறேன். இப்போ பஸ் டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டு, மாமாவையும் பார்க்கணும்.''

''அப்படியே ஓட்டல்லே சாப்பிட்டுடுப்பா. கஞ்சி மிஞ்சிப் போய்க் கிடக்குதுன்னு இன்னைக்கு நான் சமைக்கலே.''

''சரி, அத்தை,'' என்று கோபால் நகர்ந்தான்.

மாரியப்பனும் கூடப் போனான்.

தனபாக்கியம் கூப்பிட்டாள். ''ஏண்டா மாரி, பரீட்சை நேரத்திலே படிக்காமல் எங்கே போறே?''

''அத்தானுக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டு வர்றேன்.''

''கோபால் கேட்டா கொடுக்க மாட்டாங்களா? பெரிய மனுஷன் நீ போய் சிபாரிசு பண்ணுத்தான் கொடுப்பாங்களா? மரியாதையா வந்து படி!''

''நீ படி மாரி. நானே போய்க்கிறேன்,'' என்றான் கோபால்.

''கொஞ்ச தூரம் போயிட்டு இப்போ வந்துடறேம்மா,'' என்று சொல்லிவிட்டுப் போனான் மாரியப்பன்.

இருவரும் தெருவில் இறங்கி நடந்தார்கள்.

கோபால் கேட்டான். ''எத்தனை நாளாய்ப் பொய் பேசற பழக்கம்?''

''எப்போ அத்தான் பொய் சொன்னேன்?''

''ராத்திரிக்கு இடியாப்பம் தேங்காய்ப் பால்னு சொன்னே. நான் நாக்கைத் தீட்டிகிட்டு உட்கார்ந்திருந்தேன். அத்தை வந்து, கஞ்சிதான்னு குட்டை உடைச்சுட்டாங்களே!''

''அதான் அத்தான் எனக்கும் விளங்கல்லே. ஆனா, நான் சொன்னது உண்மை! மத்தியானம் கூடக் கஞ்சியில்லை. முருங்கக்

காய் சாம்பார், உருளைக் கிழங்கு குருமா, தக்காளி சூப், வாழைக் காய்ப் பொரியல், முளைக்கீரை மசியல், தயிர்...''

''அத்தை பெரிய விருந்தே பண்ணியிருக்காங்களே; இன்னிக்கு என்ன விசேஷம்?''

''இன்னிக்கு மட்டுமில்லே. ஒரு வாரமா தினம் விருந்து தான், ராத்திரிக்கு டிபன்தான்!''

''அப்புறம் ஏன் அத்தை என்கிட்டே பொய் சொல்லணும்? நான் இங்கே சாப்பிடறது அத்தைக்குப் பிடிக்கலேயோ?''

''என்ன விஷயம்னு எனக்கும் விளங்கலே. ஆனா, அம்மா உங்ககிட்டே பேசின முறை எனக்குப் பிடிக்கலே. அம்மா ரொம்ப மாறிப் போச்சு!''

''அப்படித்தான் எனக்கும் படுது. நான் என்ன தப்பு பண்ணினேன்?'' என்று வருத்தப்பட்ட கோபால், ''போகட்டும். அடுத்த மாசம் வந்து, ருக்கு கழுத்திலே ஒரு தாலியைக் கட்டிக் கூட்டிக்கிட்டுப் போயிட்டா, அப்புறம் உங்க வீட்டுக்கு நான் ஏன் வரப் போறேன்?'' என்றான் விரக்தியாக.

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க, அத்தான். அம்மா ஒரு அல்பம்! ரெண்டு காசைக் கண்டதும் சொந்தத்தை மறந்துடுச்சு! ஆனா, அப்பா அப்படி இருக்க மாட்டார். சொந்த மாமனாச்சே!'' என்று ஆறுதல் சொன்னான் மாரியப்பன்.

''சரி, நீ வீட்டுக்குப் போ, மாரி. அத்தை திட்டும்!''

மாரியப்பன் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

தெரு கேட்டில் தனபாக்கியம் நின்று கொண்டிருந்தாள்.

''ஏண்டா, பாடம் படிக்கணுமேங்கிற அக்கறையில்லாமல் அவனோட சேர்ந்துகிட்டு ஊர் சுத்தப் போறியா?''

மாரியப்பன் எரிச்சலில் இருந்தான். ''அதான் வந்தாச்சுல்லே? அப்புறம் ஏன் கத்தறே?''

தனபாக்கியம் தணிந்த குரலில் கேட்டாள். ''ஏண்டா, கோபால் எப்போ வந்தான்? நீ ஸ்கூல் விட்டு வர்றதுக்கு முந்தியா, வந்தப்புறமா?''

''ஏன், முந்தியே வந்திருந்தாத்தான் என்ன?''

''என்னவா! வயசுக்கு வந்த பொண்ணு வீட்டிலே இருக்கும் போது அவன் எப்போ வந்தா என்னன்னு கேட்கிறியே; உனக்கு கொஞ்சமாச்சும் அறிவிருக்கா? ஏதாச்சும் தப்புத்தண்டா பண்ணிட்டுப் போயிட்டான்னா?''

''அத்தான் அப்படியெல்லாம் நடந்துக்க மாட்டார். நடந் தாலும் அவர்தானே கட்டிக்கப் போறார்?''

''நல்லாயிருக்கு நீ பேசறது!'' என்று தோளில் இடித்துக்

கொண்டாள் தனபாக்கியம்.

எட்டு மணியானதும், ''ருக்கு, இடியாப்பத்துக்கு நனையப் போட்டிருக்கேன், மாவாட்டு,'' என்ருள் தனபாக்கியம்.

ருக்கு ஏழு மணிக்கெல்லாம் சுருட்டிக் கொண்டு படுத்து விட்டாள். அம்மாவின் கட்டளையை அவள் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

சற்று நேரம் கழித்து தனபாக்கியம் மீண்டும் அதட்டினுள். ''ஏண்டி, அப்பா வர்ற நேரமாச்சு; மாவாட்டுங்கறேன்; வெள்ளிக்கிழமையும் பொழுதுமா விளக்கு வச்ச நேரத்திலே விடியா மூஞ்சித்தனமாப் படுத்துக் கிடக்கிறியே!''

''என்னுலே முடியாது! நீதானே ஆட்டிக்க!''

''ஏன், என்ன கேடு வந்துச்சு உனக்கு?''

''வெள்ளிக்கிழமையும் பொழுதுமா, விளக்கு வச்ச நேரத்திலே நீ ரொம்ப நல்ல பேச்சு பேசறே!''

''எல்லாம் உன்னுலேதான். சொன்னதைக் கேட்டா ஏன் திட்டறேன்? எழுந்து மாவாட்டு.''

''நான் மாட்டேன்.''

''மாவாட்டக் கசக்குது. இடியாப்பம் திங்க இனிக்கும்!''

''உன் இடியாப்பத்தை நீதானே தின்னு! நான் தின்ன, ஏண்டி நாயேன்னு கேளு!'' என்று சூளுரைத்த ருக்கு, ''வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையை வெளியே சாப்பிடச் சொல்லிட்டு, இடியாப்பம் பண்றியே; எவ்வளவு வஞ்சம் உனக்கு! நீதானு நாளைக்கு எங்களுக்கு நல்லது கெட்டது செய்யப் போறே?'' என்று பொலபொலவென்று கண்ணீர் வடித்தாள்.

தனபாக்கியத்துக்கு அப்போதுதான் உறைத்தது. கோபாலுக்கு வேண்டியவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே பொய் சொல்லிவிட்டாளே!

உடனே சமாளித்தாள். ''அதுக்குத்தான் கோபமா? ஒரு காரணமாகத்தான் அப்படிச் சொன்னேன்.''

''என்ன காரணம்? அத்தான் நாலு இடியாப்பம் தின்னுக் குறைஞ்சு போகும்னு நினைச்சிருப்பே!''

''பைத்தியக்காரத்தனமாப் பேசாதே! கோபால் நம்ம பிள்ளையில்லையா? அப்படியெல்லாம் நினைப்பேனு? முன்னே அவனுக்குப் பக்கத்திலே வீடு இருந்தது. இங்கே சாப்பிட்டாலும் படுக்கறதுக்குத் தன் வீட்டுக்குப் போயிடுவான். இப்போ அவனுக்கு வீடு இல்லே. இங்கே சாப்பிட்டு எங்கே படுக்கப் போவான்? என்ன தான் அத்தான்காரன்னுலும் வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டிலே எப்படி தங்கவிடறது? நாலு பேர் என்ன பேசுவாங்க? அதுக்காகத்

தான் சாப்பாட்டுக்கு வரவேண்டாம்னு சொன்னேன். நாளைக்கு மத்தியானம் கோழியடிச்சு விருந்து போடுவோம், கவலைப்படாதே. வந்து மாவாட்டு.''

''மாவு வேணு ஆட்டித் தர்றேன். ஆனு, இடியாப்பம் மட்டும் தின்ன மாட்டேன்!''

அன்று அவள் மட்டுமல்ல; மாரியப்பனும் சாப்பிடவில்லை!

அத்தானுக்கு இல்லாத பலகாரம் அவர்களுக்குத் தேவையில்லை!



முதல் வீட்டுக்குப் போய், பகவதி டிராவல்ஸில் மறுநாள் இரவு வண்டிக்கு ஒரு சென்னை டிக்கெட் ரிசர்வ் செய்துவிட்டு, மாமனைப் பார்க்க ஜவுளிக் கடைக்குப் போனுன் கோபால்.

முதலாளிக்கு அவனை நன்ருகவே தெரியும்.

''மாமாவைப் பார்க்கணும்.''

அலுத்துக்கொண்டார் முதலாளி. ''நானுந்தான் அவரைப் பார்க்கணும்! அவர் எங்கேப்பா கடையிலே இருக்கார்? நினைச்சா வருவார். கொஞ்ச நேரம் இருப்பார். மறுபடி எழுந்துபோவார். பேக்கிரி மெரீனுவிலே போய் உட்கார்ந்துக்கிட்டு, அரை மணிக்கு ஒரு கேக்கும் கூல் டிரிங்கும் சாப்பிடுவார். சுருட்டைப் பத்தவச்சிக்கிட்டு ஏதோ யோசனையா நிப்பார். திடீர்னு சைக்கிளை எடுத்துக்கிட்டு வீட்டுக்கு ஓடுவார். லாட்டரியிலே ஏதோ பணம் கிடைச்சிருக்குன்னு பேசிக்கிறுங்க. வரவர அவர் நடவடிக்கையெல்லாம் வித்தியாசமா இருக்கு. மூனு மாசக் கணக்கு முடிக்காமல் கிடக்கு. வேலையைவிட்டு நிறுத்திடலாமான்னு பார்க்கிறேன்.''

கோபால் வெளியே போய், கொப்புடையம்மன் கோயில் வாசலில் நின்று தேடினுன்.

மேனு மேனு வீதியிலிருந்து நடேசன் வந்தார்.

அவர் தோற்றமே மாறிப்போயிருந்தது. பழுப்பேறிப் போன உடைகளுக்குப் பதிலாகப் பளிச்சென்று உடைகள் அணிந் திருந்தார்.

அவரை நோக்கிப் போய், ''மாமா!'' என்று அழைத்தான்

கோபால்.

சடாரென்று பிரேக் போட்டதுபோல் நின்றார் நடேசன்.

கோபாலைக் கண்டதும் அவர் முகத்தில் ஒரு சில கணங்கள் என்னென்னவோ ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தன. ஒரு கொதிகலம் கொதித்தது. ஒரு போக்குக் குழாய் எதையோ வெளியேற்றியது.

இதற்குள் கோபால் அவர் நிலையைக் கணித்துவிட்டான்.

அவர் கண்களில் ஒரு கிறக்கம் தெரிந்தது. விழிகள் சிவந்திருந்தது. முகம் முழுதும் லேசான வியர்வை பொடித்திருந்தது.

அவர் குடித்திருக்கிறார்!

நடேசன் அவரை அடையாளம் புரிந்துகொண்டார். காதுக்குக் காது சிரித்தார். ''அடடே! நம்ம கோபாலா! எப்போப்பா வந்தே? அம்மா நல்லா இருக்குதா?'' என்று உண்மையான பாசத்தோடு கட்டிப்பிடித்து வரவேற்றார்.

''கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் வந்தேன், மாமா.''

''வீட்டுக்குப் போனியா?''

''போயிட்டுத்தான் வரேன்.''

''சாப்பிட்டியா?''

''வீட்டிலே சமைக்கலையாம். அத்தை என்னை வெளியிலே சாப்பிடச் சொல்லிச்சு.''

''வா, சாப்பிடலாம்.''

அவனை அழைத்துக்கொண்டு நடேசன் ஓர் ஓட்டலுக்குள் நுழைந்தான். உள் அறையில் திரைக்குப் பின்னால் அமர்ந்தார்.

''ரெண்டு கோழி பிரியாணி!'' என்று உத்தரவிட்டார்.

சாயங்கால வேளையில் டீ குடிக்கும்போது ஒரு மசால் வடையும் சேர்த்துச் சாப்பிடக் கணக்குப் பார்த்தவர் இப்போது இரண்டு கோழி பிரியாணி கொண்டு வரும்படி கூசாமல் சொன்னார்!

கோபால் நேரே விஷயத்துக்குப் போனான். ''வர்ற சித்திரையிலே கல்யாணத்தை முடிச்சுடணும்னு அம்மா சொல்லச் சொல்லுச்சு, மாமா.''

இதைக் கேட்டு அவர் ஆச்சரியப்பட்டார். கொஞ்ச நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தார். பிறகு, ''என்ன மாப்பிளே, திடீர்னு! தோஷமெல்லாம் என்னாச்சு?'' என்று கேட்டார்.

''மெட்ராஸ்லே ஒரு பெரிய ஜோஸ்யர்கிட்டே ரெண்டு ஜாதகத்தையும் காட்டிக் கேட்டோம். தோஷம் எதுவும் கிடையாதுன்னு அடிச்சுச் சொல்லிவிட்டார். அம்மாவுக்கு நம்பிக்கை வந்துடுச்சு. சித்திரையிலே முடிச்சடணும்னு சொல்லுச்சு.''

''சரி, முடிச்சுட்டாப் போகுது.''

பிரியாணி வந்தது. கூடவே பெரிய தட்டு நிறைய எக்ஸ்ட்ராக்கள். கோழி, சுக்கா வறுவல், சாப்ஸ், கோலா, மீன், முட்டை...

''ரெண்டு சுக்கா வறுவல் வை. இரண்டு மீன் வை. ரெண்டு ஆம்லேட் போடு.''

சாப்பிட்டுவிட்டு பில்லுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தார் நடேசன்.

''வா, கோபால். கொஞ்ச நேரம் தனியா உட்கார்ந்து பேசலாம்,'' என்று அழைத்துக்கொண்டு நடந்தார்.

மேல ஊரணிக் கரை அமைதியாக, சந்தடியில்லாமல் இருந்தது. கோயில் கட்டுவதற்காகச் செதுக்கிய கல் பலகைகளை ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கி வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். உட்கார்வதற்கு ரொம்ப வசதியாக இருந்தது.

நிலவு பளிச்சென்று காய்ந்தது. குளிர் காற்று மேனியைத் தடவியது. குளம் நிறையத் தாமரைப் பூக்கள் நின்றன.

''மாமா, நான் உங்களைவிட ரொம்பச் சின்னவன். நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. நீங்க பெரியவங்க. எனக்கும் மாரிக்கும் வழிகாட்டியா இருக்கவேண்டியவங்க. இத்தனை காலமும் ஒழுங்கா இருந்துட்டு, இப்போ குடிக்கிறீங்களே, நியாயமா?'' என்று கேட்டான் கோபால்.

''எனக்கு விவரம் தெரிஞ்ச நாள்லேருந்து சில்க் ஸ்டோர்லே கணக்கு எழுதிக்கிட்டிருக்கேன். குனிஞ்சு எழுதி எழுதி என் முதுகே கூனலாப் போச்சு. குறைஞ்ச சம்பளம். வாழ்க்கையிலே எந்த சுகத்தையும் அனுபவிக்க முடியலே. ஏதோ, அந்த முத்துமாரி புண்ணியத்திலே இப்பத்தான் நல்ல காலம் பொறந்திருக்கு. இப்போகூட நான் கொஞ்சம் சந்தோஷமா இருக்கப்படாதா, மாப்பிள்ளை?''

''சந்தோஷப்பட வேண்டியதுதான். ஆனு, அதுக்கு வழி இது இல்லே. நல்ல சட்டை போட்டிருக்கீங்க; அது சந்தோஷம். நல்ல சாப்பாடு சாப்பிட்டீங்க; அது சந்தோஷம். விஷம் குடிக்கிறதிலே என்ன சந்தோஷம்? இந்தப் பழக்கத்தை இன்னையோட விட்டுடுங்க.''

நடேசன் சற்று நேரம் பேசாமலிருந்தார். ''நான் குடியை நிறுத்தறதும் தொடர்ந்து குடிக்கிறதும் உன் கையிலேதான் இருக்கு, மாப்பிள்ளை!''

கோபால் வியப்போடு அவரைப் பார்த்தான்.

''இப்போ நான் மனசுவிட்டுப் பேசப்போறேன், மாப்பிள்ளை. உண்மையிலே நான் சந்தோஷத்துக்காகக் குடிக்கலே; ஒரு பிரசினையைச் சமாளிக்கத் தெரியாமக் குழம்பிப்போய்க் குடிக்கிறேன்! ஒரு இக்கட்டிலே மாட்டிக்கிட்டிருக்கேன். என் மானம், மரியாதை எல்லாமே அதிலேதான் அடங்கியிருக்கு. அதுமட்டுமில்லே; ஒரு பெரிய மனுஷனுடை விரோதம் வந்துடுமோன்னும் பயமாயிருக்கு. நான் தப்பிக்கணும்னு, நீதான் உதவணும்!''

அவர் கையில் புழங்கிய பணத்தையும், சிக்கிக் கொண்டிருப்பதாகச் சொன்ன இக்கட்டையும், பெரிய மனிதரின் விரோதத்தையும் முடிச்சுப் போட்டுப் பார்த்தான் கோபால்.

விடை கிடைத்துவிட்டது.

வாழ்க்கையில் கொஞ்சம் உல்லாசத்தை அனுபவிக்க ஆசைப்பட்ட மாமன் யாரோ ஒரு பெரிய மனிதரிடம் கடன் வாங்கி யிருக்கிறார். அந்தப் பணத்தைத்தான் இப்போது செலவழித்துக் கொண்டிருக்கிறார். திருப்பிக் கொடுக்க முடியாத நிலை. அதனால் தான் மானம் போய்விடுமே, பெரிய மனிதரின் விரோதம் வந்து விடுமே என்று பயப்படுகிறார். அந்தக் கவலையை மறக்கத்தான் குடிக் கிறார்.

''எவ்வளவு கடன் பட்டிருக்கீங்க, மாமா?''

''நிச்சயம் உதவி செய்யறதா நீ வாக்குக் கொடுத்தா, சொல்றேன்.''

கோபால் யோசித்தான். மாமாவின் தகுதிக்கு அதிக பட்சம் ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்பார்கள். ஒரு ஜவுளிக் கடைக் கணக்குப் பிள்ளையை நம்பி அதற்கு மேல் கொடுத்துவிட மாட்டார்கள். எப்படியாவது சமாளித்துவிடலாம். அவரைக் குடிப் பழக்கத்திலிருந்து மீட்டாகவேண்டும்.

''என் உயிரைக் கொடுத்தாவது உதவி செய்யறேன், மாமா!''

''ரொம்ப சந்தோஷம், மாப்பிள்ளே! நீ சொன்ன வாக்கு தவறமாட்டே; எனக்குத் தெரியும். என் மானத்தைக் காப்பாத்த நீ பணம் எதுவும் தரவேணும்!''

''பின்னே?''

''ருக்குவை மறந்துடு!''

சவுக்கடி பட்டவனைத் துள்ளினான் கோபால். ''மாமா!''

''ஆமா, மாப்பிள்ளே. அதைத் தவிர வேறே வழி இல்லே.''

கோபால் சிலையாக உட்கார்ந்திருந்தான்.

அவனால் அந்தப் பேரிடியைத் தாங்க முடியவில்லை!



போன வெள்ளிக்கிழமை. இரவு ஏழு மணியிருக்கும்.

சில்க் ஸ்டோரின் பின்புறம் இருந்த அறையில் உட்கார்ந்து, குனிந்த தலை நிமிராமல் கணக்கெழுதிக்கொண்டிருந்தார் நடேசன்.

கடைச் சிப்பந்தி ஒருவன் வந்து நின்றான். ''கணக்குப் பிள்ளை ஐயா, யாரோ உங்களைப் பார்க்கணுமாம்; வாசல்லே நிக்கிறாங்க.''

யாராயிருக்கும் என்று மோவாயைச் சொறிந்தபடியே எழுந்து போனார் நடேசன்.

யாரோ ஒருவர் கடை வாசலில் நின்றார். ''நீங்கதானே நடேசன்?''

''ஆமா. நீங்க?''

''சுந்தரமூர்த்தி சாரோட கார் டிரைவர்.''

நடேசனுக்கு சுந்தரமூர்த்தியையே தெரியாது; அவரது டிரைவரை எப்படித் தெரியும்?

''நீங்க எதுக்கு என்னைப் பார்க்கணும்?''

''நான் பார்க்க வேண்டியதில்லை. எங்க முதலாளிதான் உங்களைப் பார்க்கணுமாம், கூட்டிட்டு வரச் சொன்னார்.''

''யாரது, சுந்தரமூர்த்தி?''

''என்னங்க, இப்படிக் கேட்கிறீங்க? நம்ம சுந்தரம் தியேட்டர் முதலாளிதான்!''

நடேசனுக்கு சுந்தரமூர்த்தியைத் தெரியாவிட்டாலும் சுந்தரம் தியேட்டரைத் தெரியும். காரைக்குடிக்குடிக்குப் பெருமை தரும் தியேட்டர் அது.

அவ்வளவு பெரிய தியேட்டரின் முதலாளி அவரை எதற்குப் பார்க்க வேண்டுமாம்? அந்த மாரிப்பயல் சினிமாவுக்குப் போனபோது தியேட்டரில் கல் வீசிட்டானா? பிடித்துக் கட்டி வைத்துக் கொண்டு அவருக்கு ஆள் அனுப்பியிருக்கிறாரோ?

''உங்க முதலாளி எதுக்கு என்னைப் பார்க்கணும்?''

''அவர் அதைச் சொல்லலீங்க.''

''சரி, நீங்க போங்க. கடை சாத்தி வீட்டுக்குப் போகும் போது தியேட்டருக்கு வரேன்னு சொல்லுங்க.''

''நீங்க நடந்து வரவேணுங்க. முதலாளி கார் அனுப்பி யிருக்கார். வாங்க,'' என்று வாசலில் நின்ற பெரிய காரைக் காட்டினுர் டிரைவர்.

நடேசன் மலைத்துப் போனுர்.

கார் அனுப்பியிருப்பதால் விவகாரம் ஒன்றுமிருக்காது. வேறென்னவாக இருக்கும்? அவருடைய கணக்கெழுதும் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரை சுந்தரம் தியேட்டரின் கணக்குப்பிள்ளையாக்கப் போகிருரோ?

டிரைவர் பின் கதவைத் திறந்துவிட்டார்.

நடேசன் சீட்டின் விளிம்பில் தொற்றினுற்போல் உட்கார்ந் தார்.

விசுக்கென்று வண்டி புறப்பட்ட வேகத்தில் நடேசன் மல்லாந்து விழுந்தார். சுகமான குஷன் சீட்! அவரை ஆதரவாக அணைத்துக் கொண்டது.

டிரைவர் வெகு மரியாதையாக நடேசனைத் தியேட்டரின் மாடிக்கு அழைத்துப் போனுர்.

தியேட்டரின் முகப்பில், காபினை அடுத்து இருந்தது ஆபீஸ் அறை. முழுவதும் கண்ணுடியாலானது.

டிரைவர் கண்ணுடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்து, நடேசன் வருவதற்காகக் கதவைப் பிடித்துக் கொண்டார்.

நடேசன் உள்ளே காலடி வைத்தார்.

சிலீரென்ற குளிர்காற்று கால்களைத் தழுவியது. தரை முழுவதும் மெத்தென்று சணல் விரிப்பு படிந்திருந்தது.

ஆபீஸ் அறை கலகலப்பாக இருந்தது. மேனேஜர் பந்தா வான மேஜைக்குப் பின்னுலிருந்து போன் பேசிக் கொண்டிருந்தார். ஒரு பக்கம் மாலைக் காட்சியின் வசூலை எண்ணிக் கொண்டிருந்தார் கள். இரண்டு பேர் சுகமான நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு கணக்கு எழுதிக் கொண்டிருந்தார்கள்.

நடேசன்தான் வேலை பார்க்கும் இடத்தின் காற்ருேட்ட மில்லாத பின் அறையையும் கிழிந்த கோரைப் பாயையும் கர்ணம் மேசையையும் எண்ணிப் பெருமூச்சு விட்டார்.

ஒரு மூலையில் மரத் தடுப்பாலான தனி அறை இருந்தது.

டிரைவர் நடேசனை அங்கே அழைத்துப்போய், மரக் கதவின் மேல்புறம் இருந்த கண்ணுடிச் சன்னல் வழியாக உள்ளே பார்த்துவிட்டு, அவரை உள்ளே அழைத்துப் போனுர்.

அறைக்குள் ஒருவர்தான் இருந்தார். பார்த்ததுமே புரிந்தது, அவர்தான் முதலாளியாய் இருக்க முடியும்.

''அழைச்சிட்டு வந்துட்டேன், முதலாளி,'' என்றார் டிரைவர்.

''சரி, நீ போய் ரெண்டு கூல் டிரிங்க் கொண்டு வரச் சொல்லு,'' என்று டிரைவரை அனுப்பிய சுந்தரமூர்த்தி, ''வாங்க, உட்காருங்க,'' என்று நடேசனை வரவேற்று சோபாவைக் காட்டினான்.

நடேசனுக்கு சோபாவில் உட்காரத் தயக்கமாயிருந்தது. ''பரவாயில்லை. நான் நிற்கிறேன்.''

''ஊஹும். பெரியவங்க நிக்கக்கூடாது. உட்காருங்க.''

நடேசன் உட்கார்ந்தார். சோபா பள்ளமாக அழுந்தி அவரது பாதி உடலை கவ்விக் கொண்டது.

போன் மணியொலித்தது.

சுந்தரமூர்த்தி, ''ஒரு நிமிஷம்,'' என்று நடேசனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போனை எடுத்தான். ''ஹலோ, மெட்ராஸ் காலா? கொடுங்க.''

நடேசன் சுற்றிலும் பார்த்தார்.

பிரம்மாண்டமான மேஜையும் நவீன நாற்காலிகளும் சொகுசான சோபாக்களும் ஆளுயர பீரோக்களும் அவரைப் பயப்படுத்தின.

சுந்தரமூர்த்தி பேசிக் கொண்டிருந்தான். ''உம்... உம்... 'அவனும் கில்லாடி'தானே? நான் போன வாரமே பார்த்துட்டேன். அப்படியொன்றும் பிரமாதமாக ஓடிடாது. இரண்டரை லட்சம்னு நமக்கு எம்.ஆருக்கு முடிச்சுக் கொடு... அதுக்கு மேலேன்னு வேண்டாம்! 'நவரச மோகினி' நல்லாப் போகும். லேடீஸ் கலக்ஷன் இருக்கும். அதுக்கு மூணேமுக்கால் லட்சம் வரைக்கும் கொடுக்கலாம்.... சரி, நாளைக்கு நைட் புறப்பட்டு மெட்ராஸ் வறேன்.''

நடேசன் விவரம் புரியாமல் உட்கார்ந்திருந்தார். லட்சங்களில் புரளும் சுந்தரமூர்த்தி அவரை எதற்காக அழைத்துவந்து, சரியாசனம் கொடுத்து உட்கார்த்தி வைத்திருக்கிறான்?

ஒரு பணியாள் முத்துக்களைப் போல் நீர்கோத்து நின்ற குளிர்பானப் புட்டிகளை ஒரு தட்டில் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான்.

இதற்குள் போன் பேச்சை முடித்துக் கொண்டு டெலிபோனை வைத்த சுந்தரமூர்த்தி, ''சாப்பிடுங்க,'' என்று ஒரு புட்டியை எடுத்து நடேசனிடம் கொடுத்தான்.

''நீங்க பெரிய இடம்! நான் சாதாரணக் கணக்குப்பிள்ளை! எதுக்கு என்னைக் கூட்டி வந்திருக்கீங்கன்னு புரியாமக் கிடந்து

தவிக்கிறேன். விஷயத்தைச் சொன்னீங்கன்னு தேவலே,'' என்று நெளிந்தார் நடேசன்.

''சொல்றேன், சொல்றேன். முதல்லே டிரிங்க் சாப்பிடுங்க.''

நடேசன் புட்டியை வாங்கி, குழலை உறிஞ்சினார்.

''என்னைப் பத்தி நீங்க கேள்விப்பட்டிருப்பீங்கன்னு நினைக்கிறேன். இந்தத் தியேட்டருக்கு சொந்தக்காரன் நான். இருபது லட்ச ரூபாய் போட்டுக் கட்டினேன். மதுரையிலே பிலிம் டிஸ்ட்ரிப்யூஷன் பண்றேன். மெட்ராஸ்லேயும் டிஸ்ட்ரிப்யூஷன் நடக்குது. இங்கே சுப்பிரமணியபுரத்திலே ஒரு பங்களா இருக்குது. மெட்ராஸ்லே ஒண்ணு இருக்கு. ரெண்டு கார் இருக்கு. அழகான பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆனாலும் என் வாழ்க்கையிலே சந்தோஷம் இல்லே!'' என்று மேஜையை விரலால் தடவினான் சுந்தரமூர்த்தி.

நடேசன் ஆச்சரியத்திலே அவரைப் பார்த்தார். ''பணத்தாலே நீக்கமுடியாத குறையும் இருக்கா!''

''நிறைய இருக்கு. என் மனைவியை நான் ரொம்ப நேசிச்சேன். அவளை ஒரு தேவதையாக நினைச்சு வழிபட்டேன். ஆனால் அவள் என்னைக் கைவிட்டுட்டா! இறந்து போயிட்டா! அஞ்சு வருஷமாச்சு!''

''அடாடா!''

''அவள் சாகும்போது எனக்கு இருபத்தேழு வயசுதான். இவ்வளவு சின்ன வயசிலே தனியாக இருக்கக் கூடாது, ரெண்டாந் தாரம் பண்ணிக்கணும்னு என் நண்பர்கள் வற்புறுத்தினாங்க. இவ்வளவு சொத்தையும் ஆள ஒரு பிள்ளை இல்லையே; அதுக்காகவானும் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணும்னு என் அம்மா சொன்னாள். ஆனா, என்னாலே இன்னொரு பெண்ணை நினைச்சுப் பார்க்க முடியலே. அஞ்சு வருஷமாய்ப் பிடிவாதமாக இருந்தேன். ஆனா, இன்னிக்கு என் உறுதி தளர்ந்து போச்சு.''

''இவ்வளவு சொத்து இருந்தும் வாழ்க்கையை அனுபவிக்காமத் தனியாக் கிடந்து ஏன் தவிக்கணும்? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறதுதான் நல்லது.''

''இன்னிக்கு ஒரு பெண்ணைப் பார்த்தேன். என் மனைவியின் சாயல் அப்படியே இருந்தது. அவதான் மறுபடி உயிரோடு நடந்து வராளோன்னு சந்தேகப்பட்டேன்!''

''அப்புறம் என்ன, அந்தப் பொண்ணு யாருன்னு விசாரிச்சு, அவங்கப்பாவைச் சந்திச்சு, பொண்ணு தருவாரான்னு கேட்க வேண்டியதுதானே?''

சுந்தரமூர்த்தி லேசாகச் சிரித்தான். ''அதைத்தான் இப்போ செய்துகிட்டிருக்கேன்! நான் பார்த்தது உங்க பெண்

தானும்!''

ஆச்சரியப்பட்டார் நடேசன். ''நீங்க தப்பாச் சொல்றீங் கன்னு நினைக்கிறேன். என் பொண்ணு வீட்டைவிட்டு வெளியே வராது!''

''சாயங்காலம் மாரியம்மன் கோவில் திருவிழாவிலே பார்த்தேன். உங்க சம்சாரம் பையனையும் பெண்ணையும் அழைச் சிட்டு வந்திருந்தாங்க!''

அப்போதுதான், மனைவியையும் குழந்தையையும் கோவி லுக்குப் போகச் சொன்னது நடேசனுக்கு நினைவு வந்தது.

முத்துமாரிக்கு இவ்வளவு சக்தியா! மகள் கழுத்தில் சீக்கிரம் மாலையேற வேண்டுமென்று தனபாக்கியம் வேண்டிக் கொண்டு அரைப் பொழுது ஆகவில்லை. அதற்குள் மாப்பிள்ளை வந்து நிற்கிறானே! மாப்பிள்ளை என்றாலும் எப்படிப்பட்ட மாப்பிள்ளை! கோடீஸ்வரன்! செல்வத்தில் புரள்கிறவன்! பங்களாக்கள், கார்கள்!

இவ்வளவு பெரிய இடத்து மாப்பிள்ளை எந்த ஜென்மத் திலும் அவருக்குக் கிடைக்க மாட்டான்! தாராளமாகப் பெண் கொடுக்கலாம்தான். ஆனால், கோபாலுக்குப் பேசியிருக்கும் பெண்ணை இன்னொருவனுக்கு எப்படிக் கொடுப்பது? கோபால் என்ன நினைப்பான்?

நடேசன் சுந்தரமூர்த்தியை நிமிர்ந்து பார்த்தார்.

சுந்தரமூர்த்தி பெயருக்கேற்ப சுந்தரமாகவே இருந்தான். முப்பத்திரண்டு வயதென்று யாரும் சொல்ல முடியாது. இருபத் தைந்து வயது இளைஞனின் சுறுசுறுப்போடு தோன்றினான். நல்ல சிவப்பு. செழுமையான உடல். உடலின் ஒவ்வோர் அங்குலத்திலும் பணக்காரத்தனம் படர்ந்திருந்தது. மனத்தை மயக்கும் இனிய மணம் அவனிடமிருந்து பரவியது. முகத்திலே அழகுக் கண்ணாடி அணிந்திருந்தான்.

இவ்வளவு அழகான மாப்பிள்ளை ருக்குவுக்குக் கிடைப்பது அதிர்ஷ்டம்தான்! ஆனால், அவளுக்காகவே காத்திருக்கும் கோபால் என்ன நினைப்பான்? கோபால் ஒரு பக்கம் இருக்கட்டும்; உறவில் மாப்பிள்ளை இருக்கையில் அந்நியத்தில் பெண் கொடுக்க தனபாக்கி யம் சம்மதிப்பாளா? அவளே சம்மதித்தாலும் ருக்கு சம்மதிப்பாளா?

''என்ன பேசாம இருக்கீங்க? உங்க அபிப்பிராயத்தைச் சொல்லுங்க,'' என்றான் சுந்தரமூர்த்தி.

'சம்மதம்! சம்மதம்!' என்று அவர் உள்ளம் கூவியது. ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ள அவர் பயப்பட்டார். மனைவியையும் மகளையும் கலந்து கொள்ளாமல் தமது இஷ்டத்துக்கு ஒப்புக்கொண்டுவிட்டு, பிறகு சிரமப்பட அவர் விரும்பவில்லை.

''உங்க சம்பந்தம் கிடைக்கிறதுக்கு நாங்க கொடுத்து வச்சிருக்கணும். ஆனாலும், இது உடனடியா பதில் சொல்ற விஷய

மில்லே. நான் ஒருத்தன் மட்டும் ஒப்புதல் சொல்ற விஷயமில்லே. நிறைய யோசிக்கணும். வீட்டிலே கலந்துக்கணும். நாளைக்குப் பதில் சொல்றேனே?''

''தாராளமா யோசனை பண்ணுங்க; வீட்டிலே கலந்துக் கங்க. ஆனா, எனக்கு சாதகமான பதிலைச் சொல்லுங்க. இந்தக் கல் யாணம் முடிஞ்சா, நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் நல்லது கிடைக்கும். எனக்கு ஒரு வாழ்க்கைத் துணைவி கிடைப்பா. என் மாமனாரான பிறகு நீங்க ஜவுளிக்கடையிலே கணக்கெழுதிட்டிருக் கிறது கௌரவமா இருக்காது. இந்தத் தியேட்டர் பொறுப்பை உங்க கிட்டே விட்டுடறேன். நீங்க மேனேஜ்மெண்ட் பார்த்துக்குங்க. எனக்கு அம்மா மட்டும்தான். அவங்களும் உடம்பு சரியில்லாமல் மெட்ராஸ்லே இருக்காங்க. சுப்பிரமணியபுரம் பங்களா சும்மா தான் கிடக்குது. நீங்க அங்கேயே குடியேறிடலாம். பையனுக்குக் காலேஜ் பக்கத்திலேயே இருக்கு. உங்க போக்குவரத்துக்கு இந்தக் காரைத் தந்துடறேன்.''

சுந்தரம் ஏர்கண்டிஷன்ட் தியேட்டரின் மேனேஜராக நடேசன்! அவருக்காக வாசலில் காத்திருக்க ஒரு கார்! அவர் குடும்பத்துக்காக சுப்பிரமணியபுரத்தில் ஒரு பங்களா! மாரி படிக்க அழகப்பா கல்லூரி!

கேட்கக் கேட்க நடேசனின் மனம் சுழன்றது.

''சரி, எல்லா விவரத்தையும் வீட்டிலே சொல்றேன். நாளைக்கு உங்களைச் சந்திக்கிறேன்.''

''எத்தனை மணிக்கு வர்றீங்க? நாளைக்கு ராத்திரி மெட்ராஸ் போகிறதாக இருக்கேன்.''

''காலையிலே ஒரு பத்து மணிக்கு வர்றேன்.''

''காரை வீட்டுக்கு அனுப்பட்டுமா?''

''வீட்டுக்கெல்லாம் கார் அனுப்ப வேண்டாம். நானே வந்துடறேன்.''

நடேசன் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

அவர் படியேறிப் போனதற்கும் படியிறங்கி வந்ததற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. போனபோது அந்நியப்பட்டிருந்த தியேட்டர் இப்போது அவருக்கு உரிமையுள்ளதுபோல் ஓர் உணர்வு. பால்கனியில் நின்று தியேட்டரை நோட்டமிட்டார்.

எவ்வளவு பெரிய நவீன தியேட்டர்! கடைசி வகுப்பே இரண்டு ரூபாய்! இந்தத் தியேட்டர் ருக்குவுடையதானால் எப்படி இருக்கும்!



அன்று முதல் நடேசன் மனைவியைத் தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போய் ரகசியம் பேசலானார்.

விஷயத்தைக் கேட்டதும் தனபாக்கியம் நம்பவேயில்லை. ''கணக்கெழுதிக்கிட்டிருக்கும் போதே தூங்கிக் கனாக் கண்டீங்களா? சுந்தரம் தியேட்டர் முதலாளியாவது, நம்மகிட்ட பொண்ணு கேட்கிறதாவது! அவருக்கென்ன, ஊரிலே பொண்ணா கிடைக்காது? ஒரு வார்த்தை சொன்னா, பெரிய பெரிய லட்சாதிபதிங்கள்ளாம் கியூவிலே நிற்பாங்களே!''

''நிப்பாங்கதான். ஆனா, அவங்க பொண்ணெல்லாம் அவரோட முதல் தாரம் மாதிரி இல்லையாமே! நம்ம ருக்குதானே அப்படி இருக்குதாம்!''

''அப்போ நிசமாகத்தான் கேட்டாருங்கிறீங்களா? சம்மதம் சொல்லிட்டு வந்துட்டீங்கல்ல?'' என்று ஆர்வமாய்க் கேட்டாள் தனபாக்கியம்.

''அதெப்படி உன்னைக் கேட்காமச் சம்மதம் சொல்ல முடியும்?''

''என்னை என்ன கேட்கிறது? அவ்வளவு பெரிய இடத்து மாப்பிள்ளையை வேணாம்னு சொல்ல எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''சொந்த மாப்பிள்ளை இருக்கும்போது அந்நியத்திலே கொடுக்க உனக்குப் பிரியமில்லாமல் இருக்கலாம்.''

''சொந்தமென்ன பெரிய சொந்தம்? வேறே வழி யில்லைன்னு அவனுக்கு சரி சொன்னோம். நம்மளைப் புடிச்ச நல்ல நேரம்தான் உங்க தங்கச்சி தோஷம்னு பயந்துகிட்டுக் கல்யாணத் தைத் தள்ளிப் போட்டுச்சு! இல்லைன்னா, மூணு வருஷத்துக்கு முந்தியே முடிஞ்சிருக்கும்!''

''சரி, எனக்கும் சம்மதம்; உனக்கும் சம்மதம். ஆனா, ருக்கு வுக்குச் சம்மதமா?''

''சம்மதிக்காம என்ன சொல்லப் போறா? பங்களாவிலே

வாழ்ந்துக்கிட்டு, பட்டு கட்டிக்கிட்டு, வைரம் பூட்டிக்கிட்டு, காரிலே சவாரி போகக் கசக்குமா ஒரு பொண்ணுக்கு?''

மறுநாள் பொழுது விடிந்ததுமே தனபாக்கியம் ருக்குவை ஆழம் பார்க்கத் தொடங்கினாள்.

''ராத்திரி ஒரு நல்ல கனவு கண்டேன், ருக்கு! சந்தோஷம் தாங்கலே!''

''என்ன கனவும்மா?'' என்று உற்சாகமாகக் கேட்டாள் ருக்கு.

''ஒரு பணக்கார வீட்டுக் கல்யாணம்! ஆயிரக் கணக்கிலே செலவு பண்ணி அலங்காரம் பண்ணின காரிலே பொண்ணும் மாப்பிள்ளையும் ஊர்கோலம் வர்றாங்க. மாப்பிள்ளை கோட்டும் சூட்டும் போட்டுக்கிட்டு ஜம்முன்னு இருக்கார். பொண்ணு காஞ்சி புரம் பட்டு கட்டிக்கிட்டு, பளீர்னு வைர நகை போட்டுக்கிட்டு தகதகன்னு ஜொலிக்கிறா. முன்னாலே பாண்டுக் கச்சேரி நடக்குது. ஆயிரக் கணக்கான ஜனங்க வேடிக்கைப் பார்க்கிறாங்க. வாண வேடிக்கை பிரமாதமா நடக்குது. நானும் உங்கப்பாவும் தெருவோரமா நின்னு பார்க்கிறோம். கார் நகர்ந்து வருது. எங்களை நெருங்குது. திடீர்னு நிக்குது. பொண்ணு இறங்கி வந்து எங்க காலிலே விழுந்து நமஸ்காரம் பண்றா. கடைசியிலே பார்க்கப் போனா

அந்தப் பெண்ணு நீதான்!''

''அத்தான் இறங்கிவந்து நமஸ்காரம் பண்ணலேயா?''

''அத்தானு! மாப்பிள்ளை அத்தான் இல்லேடி! அழகான, பணக்கார மாப்பிள்ளை!''

''கர்மம்!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் ருக்கு. ''எவனுேடேயோ சேர்த்து என்னைக் கனவு கண்டதைத்தான் நல்ல கனவுன்னு சொன்னியா! இதைக் கண்டுட்டுத்தான் உனக்குச் சந்தோஷம் தாங்கலேயா! இந்தக் கனவு ஒரு நாளும் பலிக்காது!''

''அதிகாலேக் கனவு பலிக்கும்னு சொல்லுவாங்க!''

''பணக்காரன்னு அந்நியத்திலே மாப்பிள்ளை பார்த்தால் இந்த கதிதான்! கனவிலே கூட மரியாதை கிடைக்காது! அத்தானுக்கு எவ்வளவு பணம் வந்தாலும் உங்களை மதிக்காமப் போகுமா?''

தனபாக்கியத்துக்கு மகளின் நோக்கம் புரிந்துவிட்டது.

படுத்தபடி கேட்டுக் கொண்டிருந்த நடேசனுக்கும் புரிந்தது.

இவ்வளவு நெருங்கிவந்த அதிர்ஷ்டம் இல்லேயென்று போய்விடுமோ?

மகளை எப்படிச் சமாளிப்பது?

சோர்ந்து போய்விட்டார் அவர்.

ஆனல், தனபாக்கியம் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லே. அரை மணி நேரம் கழித்து மறுபடி பேச்சைத் துவக்கினுள்.

''நம்ம கஷ்டம் என்னைக்குத்தான் விலகப் போகுதோ! ரதியாட்டம் பொண்ணைப் பெத்து வச்சிட்டு, இப்படி வருஷக் கணக்காகக் காத்துக் கிடக்க வேண்டியிருக்கு! 'வயசுக்கு வந்து மூணு வருஷம் ஆச்சு; இன்னும் வீட்டுக்குள்ளேயே வச்சிருக்கீங்களே; கல்யாணம் பண்ணிக் கொடுக்கிற நோக்கமேயில்லேயா?'ன்னு அக்கம் பக்கத்திலே கேட்கிறுங்க. நம்ம மானம் போகுது! ஆனு, அத்தைக் காரிக்கு அது தெரியுதா? தோஷமாம், வெங்காயமாம்;'' என்று தனக்குத்தானே புலம்பினுள்.

''ஏம்மா அலுத்துக்கிறே? எனக்கு ஏதும் கெடுதல் வந்துடக் கூடாதுன்னுதானே அத்தை பயப்படுது! என் மேலே அதுக்கு இருக்கிற அக்கறை உனக்கு இல்லேயா?'' என்று கேட்டாள் ருக்கு.

''அதுக்காக எவ்வளவு காலம்தான் காத்துக்கிடக்கிறது? இப்பவே, பொண்ணுக்கு ஏதோ கோளாறு போலிருக்கு; அதான் அத்தை மகனே பண்ணிக்கலேன்னு ரொம்பப் பேர் பேசறுங்க! அப்படி ஒரு பேர் வந்துட்டா, சுலபத்திலே மாத்த முடியாது! இந்தச் சித்திரைக்குள்ளே கோபால் முடிச்சுக்கிட்டான்னு சரி; இல்லேன்னு வேறே மாப்பிள்ளை பார்த்து, வைகாசியிலே முடிச்சுட வேண்டியது



தான்!''

''அசிங்கமாவெல்லாம் பேசாதேம்மா! மூணு வருஷம் போயிடுச்சு. இன்னும் ரெண்டு வருஷம்தானே?''

''நீ சொல்லிட்டே சுலபமா. அப்பா எவ்வளவு கஷ்டப் படறார், தெரியுமா? ஏன், வேறே நல்ல இடமா வந்தா, கட்டிக்க வேண்டியதுதானே? இவனைத்தான் கட்டிக்கணும்னு எழுதியா கொடுத்திருக்கோம்?''

''எழுதிக் கொடுத்தாத்தான் மீறக் கூடாதுன்னு இல்லேம்மா. பேசி முடிச்சாலும்கூட மீறத்தான் கூடாது! எனக்கும் அத்தானுக்கும் கல்யாணம் செய்யணும்னு நீங்கதான் ஆசைப்பட்டீங்க! முடிவு பண்ணினீங்க. இன்னிக்கு நீங்களே அதை மீறலாமா? அத்தை என்ன நினைக்கும்? அத்தான் என்ன நினைப் பார்?''

''அவங்க நினைக்கிறது கிடக்கட்டும். நீ என்ன நினைக்கிறே, அதைச் சொல்லு.''

''நான் என்ன நினைக்கப் போறேன். அன்னிக்கு நினைச்சதைத்தான் இன்னிக்கு நினைக்கிறேன். இன்னிக்கு நினைக்கிறதைத்தான் நாளைக்கு நினைப்பேன். புடவையிலே பண்ண முடிவை மாத்தலாம்; புருஷன்லே பண்ண முடிவை மாத்தக் கூடாதும்மா.''

''அப்போ, இன்னும் இரண்டு வருஷம் காத்திட்டிருக்கப் போறியா?''

''ரெண்டு வருஷமென்ன, இருபது வருஷம்னாலும் காத்திருக்கத்தான் வேணும்!''

''அடுத்த தெரு வள்ளியம்மாளுக்கு உன் வயசுதான். கல்யாணமாகி ஒரு பிள்ளையும் பிறந்தாச்சு!''

''புள்ளை பெறுகிறது முக்கியமில்லேம்மா. அதை யாருக்குப் பெறணும்ங்கறதுதான் முக்கியம்!'' என்று சிரித்தாள் ருக்கு.

அம்மா தன்னை ஆழம் பார்க்கிறாள் என்று அவளுக்குப் புரிய வில்லை. ஆற்றாமையில் புலம்புகிறாள் என்றுதான் நினைத்தாள்.

ஆனால், தனபாக்கியத்துக்கு நிலைமை விளங்கிவிட்டது. கன விலும் காணமுடியாத அதிர்ஷ்டம் அவர்களைத் தேடிவந்தும் அதை அனுபவிக்க முடியாதபடி ருக்கு குறுக்கே நிற்கப் போகிறாள்.

சற்றைக்கெல்லாம் நடேசனும் தனபாக்கியமும் தோட்டத்தில் கேணிக் கரையில் எதேச்சையாகச் சந்தித்துக் கொண்டார்கள்.

''என்னங்க, சண்டாளி தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டாளே!'' என்று புலம்பினாள் தனபாக்கியம்.

''எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். இப்போ என்ன பண்ணப் போறே?'' என்று கவலேயோடு கேட்டார் நடேசன்.

''ஏதாவது பண்ணித்தான் ஆகணும். ஆனு, என்ன பண்றதுன்னுதான் புரியலே!''

''ஒண்ணு மட்டும் கேட்டுக்க, தனம். ராத்திரியெல்லாம் சுந்தரமூர்த்தியோட மாமனுரா, சுந்தரம் தியேட்டரின் மேனேஜரா வாழ்ந்து பார்த்துட்டேன்! இனிமே என்னுலே கணக்கெழுத முடியாது! குருட்டு அதிர்ஷ்டம் அடிச்சிருக்கு; அதை அனுபவிச்சே ஆகணும்! ஏமாற்றத்தை என்னுலே தாங்கிக்க முடியாது. நான் தற்கொலே பண்ணிக்காமலே செத்துப் போயிடுவேன்!'' என்று ஆற்றமாட்டாமல் புலம்பினுர் நடேசன்.

சற்று நேரம் யோசித்தாள் தனபாக்கியம்.

''நீங்க இன்னிக்குப் போய் மாப்பிள்ளேயைப் பாருங்க. எல்லோருக்கும் பூரண சம்மதம்னு சொல்லிடுங்க. ருக்குவுக்கு விஷயத்தையே சொல்ல வேணும். கல்யாணத்துக்கு முதல் நாள் சொன்னுப் போதும்.''

''அப்போ தகராறு பண்ணினு நம்ம மானம் போயிடுமே!''

''தகராறு பண்ணினு, 'நம்ம குடும்பம் மேலுக்கு வரணும்னுதான் இந்தச் சம்பந்தம் பேசினேம். இப்போ நீ முடியாதுன்னு சொன்னு, எங்க மானம் போயிடும்! மானம் போய் நாங்க உயிர் வாழ விரும்பலே. இப்பவே தற்கொலே பண்ணிக்கிறேம்'னு மிரட்டுவோம். அதுக்கு மேலே தகராறு செய்ய மாட்டாள்.''

''அது நல்ல யோசனேதான். மாப்பிள்ளே சம்பிரதாயப்படி பொண்ணு பார்க்க வரணும்னு சொன்னு என்ன பண்றது?''

தனபாக்கியம் அதற்கு ஒரு யோசனே சொல்லிக் கொடுத்தாள்.

''நல்ல மூளேடி உனக்கு!'' என்றபடி சந்தோஷ மிகுதியில் அவள் மேல் கைபோட்டார் நடேசன்.

''பணம் வரப்போகுதுன்னு தெரிஞ்சதும் வாலிபக் குறும்பெல்லாம் வருதோ? எடுங்க கையை!'' என்று சிரித்தாள் தனபாக்கியம்.



அதற்குப் பிறகு மளமளவென்று காரியங்கள் நடைபெற்றன.

காலை பத்து மணிக்கு நடேசன் வெகு உரிமையோடு, மேனேஜரைப் பரிதாபமாகப் பார்த்தபடி சுந்தரம் தியேட்டரின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தார்.

தாம் மேனேஜரான பிறகு பழைய மேனேஜரை என்ன செய்வார்கள் என்று அவர் பரிதாபப்பட்டார்.

சுந்தரமூர்த்தி அவருக்காகக் காத்திருந்தான். ''வாங்க, வாங்க. யோசனை பண்ணினீங்களா? வீட்டிலே என்ன சொன்னுங்க?''

''எல்லோருக்கும் சம்மதம்!''

''ரொம்ப சந்தோஷம்! எப்போ பொண்ணு பார்க்க வரலாம்?''

''பொண்ணை நீங்க பார்த்துட்டதாகச் சொன்னீங்களே!''

''பொண்ணை நான் பார்த்துட்டேன். பொண்ணு என்னைப் பார்க்க வேணுமா?''

''தேவையில்லை. எங்கருக்கு நாங்க சொல்ற மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டும்! நாங்க அப்படி புள்ளையை வளர்த்திருக்கோம்!''

''இருந்தாலும் சம்பிரதாயப்படி...''

''அதிலே ஒரு விஷயம் இருக்குங்க. பொண்ணுக்கு முறை மாப்பிள்ளை ஒருத்தன் இருக்கான். எங்க தங்கச்சி மகன். அவன் ருக்குவுக்காக ரொம்ப நாளாகக் காத்துக்கிட்டிருக்கான்.''

''யார் அவன்? எங்கே இருக்கான்?''

''கோபால்னு பேர். செக்காலை ரோடுலே போட்டோ ஸ்டுடியோவிலே இருந்தான்...''

''ஒல்லியா, உயரமா, சிவப்பா இருப்பானே, அந்தப் பையனு? நம்ம தியேட்டர் ஆண்டு விழாவுக்கெல்லாம் வந்து நிறையப் போட்டோ எடுத்திருக்கான்.''

''அவன்தான் இப்போ மெட்ராஸ்லே இருக்கான். நீங்க பொண்ணு பார்க்க வந்தீங்கன்னு, விஷயம் வெளியாகிப் போகும்.

அவன் சிநேகிதங்க யாராவது எழுதிப் போட்டுடுவாங்க. அவன் உடனே புறப்பட்டுவந்து தகராறு பண்ணுன்னு, கல்யாணம் நின்னு போயிடும். முறைப் பையனை மீறி நாங்க ஒண்ணும் பண்ண முடியாது. அவனுக்குத் தெரியாமல் முடிச்சாத்தான் உண்டு!''

ஒரு நிமிஷம் யோசித்தான் சுந்தரமூர்த்தி. ''சரி, அப்போ பொண்ணு பார்க்க வேணும். முகூர்த்தம் எப்போ வச்சுக்கலாம்?''

''கல்யாணம் நடத்தப் போறவங்க நீங்க. உங்க வசதிப்படி வச்சுக்கங்க.''

''இன்னும் ஒன்பது நாள்லே... அதாவது வர ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறு—ஒரு முகூர்த்தம் இருக்கு. அன்னிக்கு வச்சுக் கலாமா?''

''தாராளமா வச்சுக்கலாம்.''

சுந்தரமூர்த்தி அப்போதே கார் அனுப்பி, ஜம்புலிங்க ஜோஸ்யரை வரவழைத்தான். அவர், அவன் சொன்ன தேதிக்கு முகூர்த்தப் பத்திரிகை எழுதிக் கொடுத்துவிட்டு, நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு போனார்.

பீரோவைத் திறந்த சுந்தரமூர்த்தி இரண்டு நோட்டுக் கற்றைகளை எடுத்து மேஜைமேல் வைத்தான்.

''இதிலே பத்தாயிரம் ரூபாய் இருக்கு, மாமா. எடுத்துக்குங்க.''

''எதுக்கு மாப்பிள்ளே?''

''பொண்ணுக்கு நான் கொடுக்கிற பரிசமா இருக்கட்டும். வீட்டுச் செலவுக்கு வச்சுக்கங்க. பொண்ணுக்கு வேண்டிய எல்லா நகையும் பேங்க் லாக்கர்லே ரெடியா இருக்கு. ஒரு திருகாணிகூடச் செய்ய வேண்டியதில்லே. ஒரு நாளைக்கு அத்தையைக் கூட்டிக்கிட்டு வந்தீங்கன்னு, காரை எடுத்துட்டு மதுரைக்குப் போய், எல்லோருக்கும் வேண்டிய துணிமணிகளை வாங்கிட்டு வந்துட லாம்.''

''ருக்குவைத் தனியா விட்டுட்டு அவள் வர முடியாது, மாப்பிள்ளே. நான் மட்டும்னு வரேன்.''

''வேணும்னு ருக்குவையும் கூட்டிக்கிட்டு வாங்களேன். அதுக்குப் பிடிச்ச துணிகளை அதுவே செலக்ட் பண்ணிக்கட்டும்.''

''சேச்சே! அது தப்பு மாப்பிள்ளே! கல்யாணத்துக்கு முன்னுடி பொண்ணும் மாப்பிள்ளையும் பார்த்துக்கறதே தப்பு! ஒரே காரிலே வெளியூர் போறதாவது! எங்க ருக்கு நாங்க சொல்றதைக் கட்டிக்கும்—புடவையானுலும் சரி, புருஷனுனுலும் சரி!''

''சரி, உங்க இஷ்டம். நான் இன்னிக்கு நைட் மெட்ராஸ் போறேன். ரெண்டு நாள்லே திரும்பி வந்துடுவேன். முகூர்த்தப் புடவையைக் காஞ்சிபுரத்துக்கே போய் வாங்கிடறேன். இன்வி

டேஷனை மெட்ராஸ்லே பிரிண்ட் பண்ணிக்கிறேன். உங்களுக்கு எத்தனை இன்விடேஷன் வேண்டும்?''

''எங்களுக்கு உறவுகாரங்க அதிகமில்லே. இருக்கிற கொஞ்சப் பேரும் ஜவுளிக்கடைக் கணக்குப்பிள்ளைக்கு லட்சாதிபதி மாப்பிள்ளையான்னு பொறுமைப்படுவாங்க. அதனாலே, நான் யாரையும் அழைக்கப் போறதில்லே!''

நடேசன் இரண்டு கட்டு நோட்டுக்களையும் இடுப்பில் செருகிக் கொண்டு வேகவேகமாக வீட்டுக்கு நடந்தார்.



நடேசன் மனம் திறந்து எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு வந்தார்.

''இதான் கோபால் நடந்தது. சுந்தரமூர்த்திக்கு வாக்குக் கொடுத்துட்டேன், கை நீட்டிப் பணம் வாங்கிட்டேன். துணிமணியெல்லாம் எடுத்தாச்சு. பத்திரிகை அடிச்சாச்சு. சுப்பிரமணியபுரம் பங்களாவிலேயே கல்யாணக் கொட்டகை போட்டாச்சு. நாளன்னைக்குக் காலையிலே முகூர்த்தம்.''

''விவரம் தெரிஞ்ச நாள்லேருந்து ருக்கு எனக்குத்தான்னு சொல்லி ஆசை காட்டிட்டு, இப்போ மோசம் பண்ணிட்டீங்களே, மாமா! இது நியாயம்தானா?'' என்று கண்ணீர் மல்கக் கேட்டான் கோபால்.

''நியாயமில்லேதான் கோபால் ஆனா, என் நிலைமையைக் கொஞ்சம் யோசனை பண்ணிப்பார். ஆயுசு பூரா கஷ்டப்பட்டவன். அடிமட்டத்திலே கிடந்து, நல்லது கெட்டதுக்கு ஏங்கினவன். நியாயத்தைக் காப்பாத்தறதுக்காக இன்னமும் நான் ஏங்கத் தயாரா யில்லே. நியாயத்தை நான் இல்லேன்னா, என் குடும்பத்தைக் காப்பாத்த என்னை விட்டால் வேறு ஆள் இல்லே. ருக்குவை உனக்குக் கொடுத்தா எனக்கு என்ன லாபம்? அது திங்கிற சோறுதான் லாபம்! ஆனா, அதே சமயம் சுந்தரமூர்த்திக்குக் கொடுத்தா, நான் சுந்தரம் தியேட்டருக்கு மேனேஜரா இருப்பேன். என் சம்சாரம் சுப்பிரமணிய

புரம் பங்களாவிலே இருப்பாள். மாரி காலேஜிலே படிப்பான். ருக்கு ஆயுசுபூரா ராஜாத்தி மாதிரி இருக்கும்!''

''சுந்தரமூர்த்தியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, ருக்கு செல்வத்தோட இருக்கும்; ஆனு சந்தோஷத்தோட இருக்குமா?''

''இருக்காதுதான். ஆனு, என்ன பண்றது? ஒரு குடும்பத் தோட நன்மைக்காக ஒருத்தர் தன் சந்தோஷங்களை விட்டுக் கொடுத்தா, அதிலே தப்பில்லே. என் குடும்பத்துக்காக நாற்பது வருஷமா நான் என் சொந்த சந்தோஷங்களையெல்லாம் விட்டுட்டு உழைக்கலியா? இப்போ ருக்குவோட முறை! கல்யாணம் எல்லோருக்கும் இஷ்டப்படி வாய்க்கிறதில்லே. விரும்பினது நடக்கலேன்னு, நடக்கிறதை விரும்பக் கத்துக்கணும். ருக்குவுக்கும் உனக்கும் கொஞ்ச நாளைக்கு வருத்தமாயிருக்கும்; அப்புறம் சரியாப் போகும். ஆனு, என் குடும்பம் நிரந்தரமாக உயர்ந்து போகும்! எல்லாத்தையும் யோசனை பண்ணித்தான் இந்த முடிவுக்கு வந்தோம். ருக்கு என் மகள். ஆனுலும் அதுக்கு உண்மை சொல்லா மல் ஏமாத்தறேம். ஏன்னு, அது எங்க நிலேமையைப் புரிஞ்சுக்காது. நீ தங்கச்சி மகன்தான் ஆனுலும் உனக்கு உண்மையை மறைக்காமச் சொல்றேன். ஏன்னு, நீ உலகம் புரிஞ்சவன். என் நிலேமையையும் புரிஞ்சுக்கிட்டு விட்டுக் கொடுப்பேங்கற நம்பிக்கை!''

''இதிலே நான் விட்டுக் கொடுக்கிறதுக்கு என்ன மாமா இருக்கு? உங்க மகளை யாருக்குக் கொடுக்கணும்னு தீர்மானிக்கிற உரிமை உங்களுக்குத்தான் உண்டு. நீங்க எனக்குக் கொடுக்க முடியா துன்னு சொன்னு, நான் வருத்தம்தான் படலாமே தவிர, கோபப்பட முடியுமா?''

''உன் நல்ல குணம் தெரிஞ்சுதாப்பா பேசறேன். நான் உங்கம்மாவுக்கும் மூத்தவன். ஆனுலும் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கறேன். எங்கக் குடும்ப நன்மைக்காக ருக்குவை விட்டுக் கொடு!'' என்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டார் நடேசன்.

கோபால் கண் கலங்கினுன். ''நான் சின்னப் பிள்ளையாக இருந்தப்போ எனக்காக மிட்டாய் வாங்கிட்டு வந்து, என்னைத் தேடிக் கொடுப்பீங்க. நான் ஆசையாத் திங்கறதைப் பார்த்து சந்தோஷப்படுவீங்க. என் சந்தோஷத்திலே அவ்வளவு அக்கறை யுள்ள நீங்களே ருக்கு எனக்குக் கிடையாதுன்னு முடிவு பண்ணினு, அதை நான் ஏத்துக்கத்தான் வேணும். நான் விட்டுக் கொடுத்துட றேன், மாமா. ஆனு, ருக்கு இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்குமா?''

''அதை நாங்க எப்படியாவது சமாளிச்சுக்கறேம். நீ வருத்தப்படாதே, மாப்பிள்ளே. இந்தக் கல்யாணத்தாலே நஷ்டம் உனக்கு மட்டுமில்லே; எங்க மகளுக்கும்தான். ஆனு, இதனுலே மத்த எல்லோருக்கும் நன்மை இருக்கு. நீ சொந்தமா ஒரு ஸ்டுடியோ

ஆரம்பிக்க அடுத்த மாசமே நான் பணம் தர்றேன்.''

''தேவையில்லே மாமா. என் தொழில் திறமையைப் புரிஞ்சுக்கிட்ட ஒருத்தர் என்னேக் கூட்டு சேர்த்துக்கிட்டு ஒரு புது ஸ்டுடியோ ஆரம்பிச்சிட்டார்!''

''ரொம்ப சந்தோஷம்! அப்படியே காலா காலத்திலே ஒரு கல்யாணம் பண்ணிக்க.''


''இனி எனக்குக் கல்யாணமே கிடையாது, மாமா. அடுத்த ஜென்மத்திலே எனக்கு நம்பிக்கையிருக்கு. அப்பா ருக்குவோட வாழ்ந்துக்கறேன். நான் போயிட்டு வர்றேன்,'' என்று எழுந்தான் கோபால்.

''எப்போ ஊருக்குப் போறே?''

''நாளேக்கு ராத்திரி பகவதி டிராவல்ஸ் பஸ்ஸிலே போறேன். வீட்டிலே எல்லார்கிட்டேயும் சொல்லிடுங்க, மாமா.''

ஈயக் குண்டாகக் கனக்கும் இதயத்தோடு கோபால் நடந்தான்.

கலகலவென்று உஷா சிரிப்பதுபோல் அவன் காதுக்குக் கேட்டது.



மறுநாள் மாலே முத்து மாரியம்மன் கோவிலில் விசேஷ பூஜைக்கு ஏற்பாடு செய்திருந்தாள் தனபாக்கியம்.

ஐந்து மணிக்கே குளித்து முழுகிக் கூந்தலே முடித்து, ஏராள மான பூஜை சாமான்களோடு புருஷனுக்காகக் காத்திருந்தாள்.

ருக்கு கொல்லேக் கேணிக்குக் குளிக்கப் போயிருந்தாள்.

மாரியப்பன் பள்ளியிலிருந்து வந்து, காப்பியைக் குடித்து விட்டுப் போனவன்தான். எங்கே போனுனே?

''கோயிலுக்குப் போகணும்னு சொல்லியிருக்கேன். இந்த மனுஷன் காலா காலத்திலே வந்து தொலேக்கிறுரா! கடைத் தெரு விலே நின்னு சவடால் அடிச்சிட்டிருப்பார்!''

தனபாக்கியம் வீட்டு வாசலில் நின்று இட்டிக் கொண்டிருந்தபோது, ருக்கு குளித்து, உடை மாற்றிக் கொண்டு, கேணிக் கயிற்றைச் சுருட்டி வாளியில் வைத்துக்கொண்டு வந்தாள்.

வந்தவள் அம்மாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். ''ஏம்மா, நான் ஒண்ணு கேட்பேன். பதில் சொல்லியா?''

தனபாக்கியம் திரும்பி அவளைப் பார்த்தாள். ''என்ன கேட்கப் போறே?''

''இந்த வீட்டிலே என்னென்னவோ நடக்குது. வீட்டுக்கு மூத்த மக என்கிட்டே ஒரு வார்த்தையாவது சொல்றியா?''

தனபாக்கியத்தின் இதயத்தில் சளப்பென்று ஒரு கல் விழுந்தது. ''என்ன நடக்குது இங்கே?''

''உனக்குத் தெரியாதா?''

''எனக்குத் தெரிஞ்சு எதுவும் நடக்கலே.''

''ஏம்மா பொய் சொல்றே! இன்னிக்கு என்ன சமையல்?''

''பருப்பு நெய், கருணைக் கிழங்கு புளிக் குழம்பு, மாங்காய் வெல்லப் பச்சடி, பீன்ஸ் பொரியல், முட்டை அவியல், அப்பளம்...''

''போன வாரத்திலே மாரி ஒரு நாள் கேட்டானே, தினமும் கஞ்சிதானான்னு, ஞாபகமிருக்கா? இந்த வாரம் பூரா விருந்தாச் சமைக்கிறியே! எப்படி முடியுது?''

''அப்பா பணம் கொண்டுவந்து தந்தாங்க. சமைக்கிறேன். இதெல்லாம் உனக்கென்ன கேள்வி?''

''அப்போ இந்தப் பணத்துக்கும் எனக்கும் சம்பந்தமில்லே?''

தனபாக்கியம் திடுக்கிட்டாள். ''அதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''அந்தப் பணம் எப்படி வந்ததுன்னு நான் தெரிஞ்சுக்கக் கூடாதா? அது அவ்வளவு ரகசியமா?''

தனபாக்கியம் ஆறுதலடைந்தாள். நல்ல வேளை, அவள் பணம் கிடைத்த வழியைத்தான் கேட்கிறாள்!

''ரகசியமென்ன, ரகசியம்! லாட்டரியிலே அஞ்சாயிரம் கிடைச்சுது. நாலு பேருக்குத் தெரிஞ்சா பொறாமைப் படுவாங்களேன்னு வெளியே சொல்லாமல் இருக்கோம். நீயும் சொல்லி விடாதே!'' என்று எச்சரித்தவள், ''சாயந்தர நேரத்திலே போய்த் தலையையா நனைச்சே?'' என்று பேச்சை மாற்றினாள்.

''மேல் குளிக்கலாம்னுதான் போனேன். என்னமோ தோணிச்சு, ஒரேயடியாத் தலை முழுகிட்டேன்.''

''சீக்கிரம் தலையைத் துவட்டு, சாம்பிராணி புகை போட்டுக்க. சளி பிடிக்கப் போகுது!''

''சனியே பிடிச்சவளுக்குச் சளி பிடிச்சு ஒண்ணும் ஆகிடாது!''

''ஏண்டி இப்பத் துக்கிரித்தனமாகப் பேசறே?''

''இன்னிக்கு சனிக்கிழமையில்லே? சனித்தனமாப் பேச்சு

வருது!'' என்றபடி வீட்டுக்குள் நுழைந்தாள் ருக்கு.

தனபாக்கியம் மகளை ஆச்சரியத்துடன் பார்த்தாள். குளிக்கப் போனபோது சிரித்துக் கொண்டு போனவள் குளித்துவிட்டு வரும்போது சிடுசிடுக்கிறளே!

ஆறு மணிக்குத்தான் நடேசன் வந்து சேர்ந்தார்.

தனபாக்கியம் மொலுமொலுவென்று பிடிவ்துக் கொண்டாள். ''கணக்கெழுதப் போனுத்தான் உங்களாலே நேரத் துக்கு வரமுடியாது. இப்பத்தான் கடைக்கும் போறதில்லையே! கடைத் தெருவைச் சுத்தாமல், காலா காலத்திலே வீட்டுக்கு வந்தால் என்ன? கோவிலுக்குப் போகணும்னு எவ்வள்வு நேரமாகக் காத்திட்டிருக்கேன்?''

''சரி சரி. சத்தம் போடாதே! அதான் வந்துட்டேனே? வா, புறப்படலாம்,'' என்று சமாதானம் செய்தார் நடேசன்.

''இந்தப் பய மாரி எங்கே தொலைஞ்சான்? ஸ்கூல் விட்டு வந்தவன் எங்கே தொலைஞ்சானே, தெரியலையே!''

''ஊர்சுத்திப் பய! உதைக்கணும் அவனை!''

''நீங்களா! முதல்லே நீங்க ஊர் சுத்தறதை நிறுத்துங்க!'' என்ற தனபாக்கியம் பூஜைக் கூடையை எடுத்துக்கொண்டாள். ''ருக்கு, கதவைக் கொக்கிப் போட்டுக்கிட்டு இரும்மா. அப்பாவும் நானும் கோவிலுக்குப் போயிட்டு வந்துடறேம். மாரி வந்தான்ன, எங்கேயும் போகாம வீட்டிலே இருக்கச் சொல்லு.''

தனபாக்கியமும் நடேசனும் புறப்பட்டார்கள்.

பூஜை முடிந்து நடேசனும் தனபாக்கியமும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

இருவருக்குமே வெகு திருப்தி!

இதுவரை அவர்கள் திட்டம் எந்தக் குந்தகமுமில்லாமல் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ராத்திரி அரைப் பொழுதுதான் பாக்கி. காலை ஆறு மணிக்கெல்லாம் சுந்தரமூர்த்தி கார் அனுப்பிவிடு வான். அவர்கள் பங்களாவுக்குப் போனதும் பெண்ணுக்கு அலங் காரம் நடக்கும். மதுரையிலிருந்து வாங்கிவந்த துணிகள் யாவும் பங்களாவில்தான் இருக்கின்றன. ஏழரை மணிக்குமேல் முகூர்த்தம்!''

இரவுப் பொழுதுக்குள் அவர்கள் ஒரு பெரிய சாதனையைச் செய்து முடித்தாக வேண்டும்.

காலை மூன்று மணிக்கு அலாரம் வைத்து எழ வேண்டும். நடப்பதைப் பற்றி ஏதுமறியாமல், அத்தானைப் பற்றிக் கனவு கண்ட படி தூங்கிக் கொண்டிருக்கும் ருக்குவை எழுப்பி, இன்னும் கொஞ்ச நேரத்தில் அவளுக்குக் கல்யாணம் நடக்கப் போவதைச் சொல்ல வேண்டும். அவள் ஆவேசமாகப் பொங்கி எழுவாள். இந்தக்

கல்யாணத்திஞல் அவளுக்கு, அவள் பெற்ருேருக்கு, அவள் தம்பிக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளே எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு மசியாவிட்டால், கேணியில் விழுந்து தற்கொலே செய்து கொள்ளப் போவதாக மிரட்ட வேண்டும்!

இந்த மாரிப் பயல் அத்தானிடம் பாசமுள்ளவன்; அவனும் துள்ளிக் குதிப்பான். மோட்டார் சைக்கிள் வாங்கித் தருவதாகச் சொல்லி ஆசை காட்டிச் சமாதானப்படுத்த வேண்டும்!

அவர்கள் வீட்டை நெருங்கியபோது மணி எட்டு.

ருக்குவை எப்படிச் சமாளிக்கப் போகிருேம் என்ற பயம் நடேசனுக்கு ஆரம்பத்திலிருந்தே இருந்தது. பிரசினேயைச் சந்திக்க வேண்டிய வேளே நெருங்க நெருங்க, தலேப் பிரசவக்காரியைப் போல் அவர் பயந்து நடுங்கிஞர். கடைத் தெருவுக்குப் போய், கொஞ்சம் விஸ்கி அடித்துவிட்டு வந்து நன்ருக உறங்கிஞல், மூன்று மணிக்கு எழுந்து போராட வசதியாக இருக்கும் என்று நம்பிஞர்.

கேட்டை அடைந்ததும், ''நீ வீட்டுக்குப் போ, தனம். நான் கடைத் தெருவுக்குப் போயிட்டு வந்துடறேன்,'' என்ருர்.

அவள் விடவில்லே. ''இப்போ கடைத் தெருவுக்குப் போய் என்ன பண்ணப் போறீங்க? ஏதோ, ஆசைக்கு ஒரு நாள் குடிச்சுப் பார்த்தது சரி. தினம் தினம் இதுவே வழக்கமாகப் போஞல், மாப்பிள்ளே உங்களேப் பொறுப்பில்லாதவர்னு நினேப்பார்! உங்களே நம்பித் தியேட்டரைக் கொடுக்க மாட்டார்! அவர் தப்பா நினேக்கிற மாதிரி நடந்துக்காதீங்க!''

''ருக்குவை எப்படிச் சமாளிக்கறதுன்னு பயமா இருக்கு, தனம்.''

''எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீங்க பயப்படாமல் வாங்க. நாம் பெத்த பொண்ணு நம்மாலே சமாளிக்க முடியாதா?'' என்று அவரை வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு போஞள் தனபாக்கியம்.

வீட்டுக் கதவு மூடியிருந்தது. உள்ளே விளக்கு எரிவது ஓடுகளின் இடுக்கு வழியாகத் தெரிந்தது.

ருக்குவும் மாரியும் ஏதாவது படித்துக் கொண்டிருப்பார்கள்.

தனபாக்கியம் கதவைத் தட்டிஞள். ''ருக்கு!''

பதில் இல்லே.

கதவைத் தட்டிஞல் பதில் பேசாமல் வந்து திறப்பதுதான் மாரியப்பனுக்கு வழக்கம்.

தனபாக்கியம் காத்திருந்தாள்.

அரை நிமிஷமாயிற்று. கதவும் திறக்கப்படவில்லே; யாரும் வருவதற்கான அரவமும் கேட்கவில்லே.

''புள்ளேங்க தூங்கிட்டாங்களா என்னமோ!'' என்ருர்

நடேசன்.

"எட்டு மணிக்கெல்லாம் என்ன தூக்கம்?" என்றபடி கதவை இடித்தாள் தனபாக்கியம்.

முன்னுல் மாட்டப்பட்டிருந்த பூட்டு கலகத்தது.

"இந்நேரத்தில் கதவைப் பூட்டிக்கிட்டு எங்கே போயிட்டாங்க?" என்று குழப்பத்தோடு கேட்டுக் கொண்டே திரும்பினுள்.

சாயங்காலம் வேப்ப மரத்தடியில் வைக்கப்பட்ட கேணி வாளி இப்போது இல்லை என்பதை வீட்டின் கொல்லை விளக்கு அறிவித்தது.

ஓ, ருக்கு கேணித் தண்ணீர் கொண்டுவரப் போயிருக்கிருள். மாரியும் துணைக்குப் போயிருக்கிருனு, அவன் இன்னும் வரவேயில்லையா?

"வாங்க, போய்க் கூட்டிக்கிட்டு வரலாம்," என்று கவலையோடு கணவனை அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குப் போனுள் தனபாக்கியம்.

கேணி மேடையில் ருக்குவையும் காணும், மாரியப்பனையும் காணும்!

"என்னங்க, புள்ளைகளை இங்கேயும் காணுமே! வேறே எங்கேதான் போயிருப்பாங்க?" என்று தனபாக்கியம் குழம்பிய போது, நடேசன் வெகு நேர உபத்திரதேத்தை தாளமாட்டாமல், வேப்ப மரத்தடி இருளில் ஒன்றுக்கு உட்கார்ந்தார்.

இலைகளின் இடுக்கு வழியாக இறங்கிவந்த ஒரு நிலாக் கம்பியின் ஒளியில் மரத்தடியில் ஏதோ பளபளத்தது.

நடேசன் எழுந்து போய்ப் பார்த்தார்.

அது ஒரு பித்தளைக் குடம்.

அவர் திகைத்தார். அதென்ன, குடம் இங்கே கிடக்கிறது!

அதை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தார்.

அவர் கழுத்தில் வந்து மாட்டியது—

ஒரு தூக்குக் கயிறு.

நடேசன் தம்மையறியாமல் வீலென்று கத்தினுர்.

தனபாக்கியம் படியிறங்கி ஓடிவந்தாள்.

நடேசன் கையில் குடம் கழுத்தில் தூக்குக் கயிறுமாய் நின்றுர்.

"என்னங்க இது!" என்று பதறினுள் தனபாக்கியம்.

"தெரியலையே! கீழே குடம் கிடந்தது. எடுத்துக்கிட்டு நிமிர்ந்தேன். சுருக்கு மாட்டிக்கிச்சு! இதை யார் போட்டிருப்பா?" என்று கேட்டுக் கொண்டே கயிற்றைக் கழுத்திலிருந்து கழற்றினுர் நடேசன்.

இன்னெரு பக்கத்தில் கிடந்த வாளியை எடுத்துப்

பார்த்தாள் தனபாக்கியம். ''இது நம்ம வாளிக் கயிறுதாங்க!''

மரக் கிளையில் கயிறு, அதன் கீழ் குடம், ருக்குவையும் மாரியையும் காணவில்லே, வீடு பூட்டிக் கிடக்கிறது.

தனபாக்கியத்துக்குப் புரிந்துவிட்டது.

''என்னங்க, ருக்கு நம்மை மோசம் பண்ணிவிட்டுப் போயிட்டாங்க! அவளுக்கு எப்படியோ கல்யாண விஷயம் தெரிஞ்சிட்டுது. நறுக்குன்னு தூக்கு மாட்டிக்கிட்டா!''

''பின்னே பொணத்தைக் காணுமே!''

''அதுக்குள்ளே மாரிப் பய வந்து காப்பாத்தி, அவளே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கான்!''

நடேசனுக்கும் அப்படித்தான் தோன்றியது. ''இப்போ என்ன பண்றது?''

''எனக்கும் புரியலே! மாரி எந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்ானே! ருக்குவுக்கு உயிர் இருக்குதோ, என்னமோ! சண்டாளி, வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்திலே பானையை உடைச்சுட்டாளே!'' என்று புலம்பினுள் தனபாக்கியம்.

''நாளைக்கு சுந்தரமூர்த்திக்கு என்ன பதில் சொல்வேன்? போலீஸ் வேறே என் மண்டையைப் போட்டு உருட்டுமே!'' என்று நடேசன் நடுங்கினுர்.



அத்தான் வருவான் என்று பகல் முழுவதும் காத்திருந்தாள் ருக்கு.

அவனுக்குக் கோழி விருந்து வைப்பதாக முதல் நாள் சொன்ன அம்மா அதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், கருணைக்கிழங்கு புளிக்குழம்பு வைத்ததைக் கண்டு அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

அத்தான் வரவேயில்லே.

சாப்பிட வராவிட்டாலும், ஊருக்குப் போகுமுன் விடை பெற்றுக்கொள்ள வருவான் என்று நம்பினுள்.

சாயங்காலம் தோட்டத்துக் கேணியில் குளித்துக் கொண்டிருந்தாள். அத்தான் வருவான் என்ற எதிர்பார்ப்பில் மணிக்

கணக்காய் மணமணக்க சோப் தேய்த்துக் கொண்டாள்.

அப்போதுதான் தெய்வி கேணிக் கரைக்கு வந்தாள். வந்தவள் ருக்குவைப் பார்த்ததும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், சண்டைக்காரி மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டு போனுள்.

''என்ன தெய்வி, பேசாமப் போறே?'' என்று கேட்டாள் ருக்கு.

''எல்லாத்தையும் மனசுக்குள்ளே போட்டு மூடி வச்சுக் கிட்டுக் கமுக்கமா இருக்கிறவங்களோட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?'' என்று வெடுக்கென்று கேட்டாள் தெய்வி. அவள் சுபாவம் அப்படி!

ருக்கு ஆச்சரியப்பட்டாள். ''அப்படி எதை மறைச் சேனும்?''

''எனக்குக் கல்யாணம் பேசினதும் உடனே ஓடியாந்து உன் கிட்டச் சொன்னேன்ல? நீ அப்படிச் சொன்னியா?''

ருக்கு சிரித்தாள். ''எனக்குக் கல்யாணம் பேசும்பொழுது நிச்சயம் உனக்கு முதல்லே சொல்றேன். இன்னும் ரெண்டு வருஷம் பொறுத்துக்கோ.''

''அடி ஆத்தி! இன்னமும் ஒளிக்கிறதைப் பாரேன்! நாளைக் காலையிலே உனக்குக் கல்யாணம்! தெரியாதது மாதிரி நடிக்கிறியே? கல்யாணப் பேச்சையும் கொய்யாப்பழ வாசனையையும் மறைக்க முடியாது, தெரிஞ்சுக்க!''

''என்ன சொல்றே நீ? நாளைக்குக் கல்யாணமா? எனக்கா! யார் சொன்னது?''

''உங்க வீட்டிலேதான் யாரும் சொல்ல மாட்டாங்களே! மாப்பிள்ளை எங்கண்ணனுக்குப் ஃப்ரண்டாம்! கல்யாணப் பத்திரிகை கொடுத்திருக்காங்க. அதிலே பார்த்தேன்.''

ருக்குவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ''அப்படின்னு எங்கத்தான் கல்யாணம் பண்ணிக்கத்தான் வந்திருக்குதா! சித்திரை மாதம்தான்னு பொய் சொல்லியிருக்கு!''

''மாப்பிள்ளை உங்கத்தான் இல்லை; சுந்தரமூர்த்தி!''

''அது யாரு சுந்தரமூர்த்தி?''

''சுந்தரம் தியேட்டர் முதலாளி. பெரும் பணக்காரராம்! ஆத்தாளும் அண்ணனும் பேசிக்கிட்டாங்க.''

அடுத்தடுத்து வந்த அதிசயச் செய்திகளை ருக்குவால் நம்ப முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை.

''அந்தப் பத்திரிகை உங்க வீட்லேதானே இருக்கு?''

''ஆமா. அண்ணன் இப்பத்தான் கொண்டார்கள்.''

''கொஞ்சம் அதை எடுத்துட்டு வாயேன்.''

தெய்வி ஓடிப்போய் எடுத்துவந்து காட்டினுள்.

ஆடம்பரமான, அழகான அழைப்பிதழ் அது. ருக்கு

நெஞ்சம் படபடக்கப் பார்த்தாள்.

மகளை வாழ வைத்துப் பார்த்து மகிழவேண்டிய பெற்றோர்கள் அவளை விற்றுப் பிழைக்கத் துணிந்து விட்டார்கள்!

அவர்கள் முத்துமாரி கோயிலுக்குப் போய், தங்கள் குடும்பம் நல்ல நிலைமைக்கு வரவேண்டும், ருக்குவின் கழுத்தில் சீக்கிரம் தாலியேற வேண்டும் என்று வேண்டிக் கொண்டது உண்மைதான். அதற்காக இப்படியா!

அம்மாவும் அப்பாவும் கோயிலுக்குப் போய்விட்டார்கள்.

அத்தனை காலமும் எப்போது விடியும் என்று காத்திருந்த ருக்கு இப்போது எப்போது இருட்டும் என்று காத்திருந்தாள்.

அவள் முடிவு செய்துவிட்டாள். அவள் தன் அத்தானுக்கு இல்லை என்று முடிவான பிறகு அவள் உயிர் வாழக் கூடாது!

வீட்டுக் கதவைச் சும்மா சாத்திவிட்டு, மளமளவென்று தோட்டத்துக்குப் போனாள்.

தோட்டத்தினுள் நன்றாக இருள் கவிந்திருந்தது.

கேணி மேடைக்கு அருகே இருந்த வேப்பமரக் கிளை தோதாகத் தாழ்ந்திருந்தது.

ருக்கு வாளியிலிருந்து கயிற்றைப் பிரித்தாள். வேப்பமரக் கிளையில் சுருக்கு மாட்டினாள். குடத்தைக் குப்புறப் போட்டு அதன்மேல் ஏறி நின்று, சுருக்குக்குள் கழுத்தைக் கொடுத்துக் கொண்டு, குடத்தை உதைத்து விட்டாள்!



11

சாயங்காலம் பள்ளியிலிருந்து திரும்பிய மாரியப்பன் காப்பி குடித்தபோது அம்மாவிடம் கேட்டான். ''அத்தான் வந்தாராம்மா?''

''ஒருத்தரும் வரலே!'' என்று சுருக்கமாகச் சொன்னாள் அம்மா.

மாரியப்பனுக்குப் புரியவில்லை.

அத்தான் ஏன் வரலே? டவுனில் இருப்பவன் வீட்டுக்கு வந்து ஒருவேளை சாப்பிடக் கூடாதா? அம்மா நேற்றிரவு வெளியே சாப்பிடச் சொன்னதால், கோபித்துக் கொண்டு வரவில்லையோ?

நேரு ஸ்டுடியோவில்தான் தங்கியிருப்பான். அங்கே

போனால் பார்க்கலாம்.

மாரியப்பன் ஸ்டூடியோவுக்குப் போனான்.

கோபால் அங்கேதான் இருந்தான். ஆனால், மிகவும் சோர்ந்து போயிருந்தான். முகம் என்னவோ போலிருந்தது. கலகலப்பாகப் பேசவில்லை. உடல் நலமில்லையென்று காரணம் சொன்னான்.

மறைவாக நடக்கும் காரியங்கள் எதுவும் மாரியப்பனுக்குத் தெரியாது. எனவே, அவன் அத்தான் சொன்னதை நம்பினான்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ''சரி, அத்தான். இருட்டப் போகுது. நான் வீட்டுக்குப் போய்ப் படிக்கிறேன். நீங்க எந்த வண்டிக்குப் போறீங்க?'' என்று கேட்டபடி எழுந்தான்.

''பகவதியிலேதான் ரிசர்வ் பண்ணியிருக்கேன். எட்டரை மணிக்குப் புறப்படும்.''

''போயிட்டு வாங்கத்தான். கல்யாண சமயத்திலே உடம்பை கவனமாப் பார்த்துக்கங்க. அத்தையை நான் ரொம்பக் கேட்டதாச் சொல்லுங்க,'' என்று விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

வீட்டுக் கதவு மூடியிருந்தது.

அம்மா இல்லாத நேரங்களில் ருக்கு உட்புறம் தாழ் போட்டுக் கொண்டிருப்பாள்.

கதவைத் தட்டினான்.

அது தானே திறந்து கொண்டது.

உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ருக்குவைக் காணவில்லை.

வீட்டில் இல்லையென்றால் ருக்கு கேணிக்குத்தான் போயிருப்பாள்; வேறெங்கும் போக மாட்டாள்.

அப்பா புதிதாக வாங்கியிருந்த டார்ச் விளக்கு ஆணியில் தொங்கியது. அதை எடுத்துக் கொண்டு, அக்காவைத் தேடித் தோட்டத்துக்குப் போனான்.

எதேச்சையாக டார்ச் அடித்துப் பார்த்த மாரியப்பன் வெலவெலத்துப் போனான்.

ருக்கு குடத்தின் மேல் ஏறி நின்று, கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டிருந்தாள்!

மாரியப்பன் உடனே அவள் உடலைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். கயிறிலிருந்து விடுவித்தான்

''ருக்கு, என்ன காரியம் இது!''

''என்னை விடு, மாரி. இனியும் நான் இருக்கக் கூடாது! எல்லோரும் என்னை ஏமாத்தி மோசம் பண்ணிட்டாங்க! நாளைக் காலையிலே எனக்குக் கல்யாணம்!''

''கல்யாணமா! உனக்கா?''

''ஆமா. அப்பாவும் அம்மாவும் ரொம்ப ரகசியமா எனக்கு வேறே எவனையோ பேசி முடிச்சு வச்சிருக்காங்க.''

''பைத்தியம் மாதிரிப் பேசாதே! நான் இருக்கும் போது அப்படியெல்லாம் நடக்க விடுவேனா?''

''பாவம் நீ சின்னப் பையன்! உன்னாலே என்ன செய்ய முடியும்?''

''என்ன செய்ய முடியுமா? இவங்க திட்டத்தை முறியடிக்க முடியும்.''

''எப்படி?''

அத்தான் ஊருக்குக் கிளம்ப இன்னும் ஒண்ணரை மணி நேரம் இருக்கு. உன்னைக் கூட்டிப் போய் அத்தான் கையிலே ஒப்படைச்சிட றேன். அவரோட நீ ஊருக்குப் போனாலும்சரி, உன்னோட அவர் இங்கே வந்தாலும் சரி. என்ன சொல்றே?''

''சரி, வா போகலாம்.''

திடீரென்று அவர்களை அவசரம் பற்றிக் கொண்டது. வேக மாக வீட்டுக்கு வந்தார்கள்.

''ஏன் மாரி, எனக்கும் சேர்த்து டிக்கெட் வாங்க அத்தா னிடம் பணம் இருக்குதோ, என்னமோ!'' என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினாள் ருக்கு.

''யோசிக்க வேண்டிய விஷயம்தான். அம்மாவோட கஜானாவிலே கை வைப்போம். டிவைடராலே ஒரு நெம்பு நெம்பினா, அந்தப் பூட்டு வாயைப் பொளந்துடும்!'' என்று சிரித்தான் மாரியப்பன்.

அரை மணி நேரம் போராடிய பிறகுதான் அது கற்பிழந்தது.

''அப்பா பசையான ஆளைத்தான் பிடிச்சிருக்கார் போலிருக்கு! கல்யாணத்துக்கு முந்தியே இவ்வளவு பணம் கொடுத் திருக்கானே!''

''பெரும் பணக்காரனும்! சுந்தரம் தியேட்டர் முதலாளி யாம்! தெய்வி சொன்னா.''

''அம்மாடி! அவனா! வகையான ஆள்தான்!'' என்ற மாரியப்பன், ''கொஞ்சம் தாராளமாகவே கொண்டு போங்க!'' என்று நான்கு ஐம்பது ரூபாய் நோட்டுக்களைப் பிய்த்து எடுத்துக் கொண்டான்.

அலாரம் டைம்பீஸ் 7.40 காட்டியது.

ருக்கு பாவாடை தாவணியிலிருந்து புடவைக்கு மாறிக் கொண்டிருந்தாள்.

''இன்னும் ஐம்பது நிமிஷம்தான் இருக்கு, சீக்கிரம் கிளம்பு.''

புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு, அவள்

புறப்பட்டாள்.

விளக்கை எரிய விட்டுவிட்டு, வீட்டைப் பூட்டிச் சாவியைப் பைக்குள் போட்டுக் கொண்டு, ருக்குவை அழைத்துக் கொண்டு மாரியப்பன் நடந்தான்.

பெரிய தெருக்களைத் தவிர்த்துவிட்டு, சந்துகள் வழியாக விரைந்தார்கள்.

மாரியப்பன்.

நேரு ஸ்டுடியோ வந்துவிட்டது.

''அத்தான் இருக்காரா?'' என்று மாரியப்பன் விசாரித்தான்.

''ஏழே முக்காலுக்கே இங்கிருந்து கிளம்பிட்டாரே!'' என்று பதில் வந்தது.

ஸ்டுடியோ கடியாரம் எட்டு மணி காட்டியது.

இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது.

மாரியப்பனும் ருக்குவும் பகவதி டிராவல்ஸை நோக்கி நடந்தார்கள்.

மணி 8.10 இருக்கும்.

கம்பெனி வாசலில் ரதம் போல ஒரு டீலக்ஸ் பஸ் நின்றது. பயணிகள் ஏறிக் கொண்டிருந்தார்கள். வழியனுப்ப வந்தவர்கள் கீழே நின்று கொண்டிருந்தார்கள்.

ருக்குவை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு, மாரியப்பன் பஸ்ஸினுள் ஏறிப் பார்த்தான்.

கோபால் பஸ்ஸினுள் இல்லை.

வெளியே நின்ற கும்பலில் தேடிப் பார்த்தான்.

அங்கேயும் இல்லை.

ஆபீசில் விசாரித்தான்.

''கோபால்னு ஒருத்தர் இன்னிக்கு வண்டிக்கு வந்து ரிசர்வ் பண்ணுர். வந்துட்டாரா?''

''எந்த வண்டிக்கு?''

''பகவதி டிராவல்ஸ் வண்டிக்குத்தான்.''

''முதல் வண்டிக்கா, இரண்டாவது வண்டிக்கான்னு கேட்கிறேன். நம்ம வண்டி ரெண்டு போகுது.''

''அது தெரியாதே சார்.''

''அதனுலே பரவாயில்லை. இப்போ கண்டுபிடிச்சுடலாம்,'' என்றவர் பயணிகள் பட்டியலைப் பார்த்தார்.

''கோபால். வயது 25. இவரா?''


''அவர்தான் சார்.''

''முதல் வண்டியிலேயே போயிட்டாரே!''

''போயிட்டாரா! எட்டரை மணிக்குத்தான் பஸ் புறம்படும்னு சொன்னுரே!''

''எட்டரைக்குத்தான டயம். இன்னிக்கு பஸ் ஃபுல். எல்லாப் பாசஞ்சரும் வந்துட்டாங்க. அப்புறம் எதுக்காகக் காத்திட்டிருக்கணும்? வண்டி எட்டு மணிக்கே கிளம்பிப் போயிடுச்சு!''

மாரியப்பன் திகைத்துப் போனான்.



அத்தான் முன்பே போய்விட்டான். இனி ருக்கு எப்படி அத்தானிடம் போவாள்?

மாரியப்பன் ருக்குவிடம் வந்தான். ''ஏன் ருக்கு, அத்தானோட பஸ் கால் மணி நேரத்துக்கு முந்தியே போயிடுச்சாமே! இப்போ என்ன பண்றது?''

''போயிட்டாரா!'' அந்தச் செய்தியை ஜீரணிக்க மாட்டாமல் ருக்கு தொய்ந்து போய், பக்கத்துத் தந்திக் கம்பத்தைப் பற்றிக் கொண்டாள். ''நான் அப்பவே செத்துப் போயிருப்பேன். சண்டாளன் நீதான் வந்து கெடுத்தே! இனிமே நான் எங்கே போய், எப்படிச் சாவேன்? குளத்திலேல்லாம் தண்ணி கூடப் பத்தாதே!''

''சாகிறதைப் பத்தியே பேசினா எனக்குக் கெட்ட கோவம் வரும்! இவ்வளவு பெரிய தம்பி நான் இருக்கும்போது நீ எதுக்குச் சாகணும்?''

''இருந்து என்ன பிரயோசனம்? என்னை அத்தான் கையிலே ஒப்படைக்கிறதாகச் சொல்லிக் கூட்டிட்டு வந்தியே; முடிஞ்சுதா உன்னாலே?''

''முடியுதா, இல்லையா பார்!''

மாரியப்பன் மறுபடி ஆபீசுக்கு ஓடினான்.

''ஏன் சார், இந்தப் பஸ்ஸிலே போனா, முதல் பஸ்ஸை வழியிலே பிடிக்க முடியுமா?''

''திருச்சி டோல் கேட்டிலே எல்லா பஸ்ஸும் டிபனுக்காக அரை மணி நேரம் நிற்கும். இந்த பஸ் எட்டரைக்குப் புறப்பட்டா அந்தப் பஸ்ஸைத் திருச்சியிலேயே பார்க்கலாம்.''

''இந்த பஸ்ஸிலே ரெண்டு டிக்கெட்டுக்கு இடமிருக்கா?''

''ரெண்டு சீட்தான் இருக்கு.''

மாரியப்பன் இரண்டு டிக்கெட் வாங்கிக் கொண்டான். ருக்குவை பஸ்ஸில் ஏற்றி உட்கார வைத்தான்.

ருக்கு பிரமிப்புடன் பார்த்தாள்.

சொகுசு பஸ் அது. சுகமான மெத்தென்று தனித்தனி இருக்கைகள்.

"அத்தானைத் திருச்சியிலே பிடிச்சுடலாம். உன்னை அவர் கிட்டே ஒப்படைச்சிட்டு, நான் எப்படியாவது திரும்பி வந்துடறேன்."

குவார்ட்ஸ் கடிகாரத்தின் நொடி முள் துள்ளித் துள்ளி நகர்ந்து கொண்டிருந்தது.

மணி 8.25.

இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குள் புறப்படாவிட்டால், அத்தானைத் திருச்சியில் பிடிக்க முடியாமல் போய்விடுமே!

மாரியப்பன் இறங்கி ஆபீசுக்கு ஓடினன்.

"ஏன் சார், மணி எட்டரை ஆகப் போகுது; பஸ் இன்னும் புறப்படலையே!" என்று பதறினன்.

"ஒரேயொரு பாசஞ்சர் வரவேண்டியிருக்கு. அவர் வந்ததும் புறப்பட வேண்டியதுதான்."

"அவர் இன்னும் வரலையே!"

"இந்த பஸ்ஸுக்கு டயம் ஒன்பது மணிதான். அதுக்குச் சரியா வருவாங்க போலிருக்கு."

"முதல் பஸ்ஸிலே போகிற எங்க அத்தானைப் பிடிக்கணும், சார்!"

"புரியுது தம்பி. உனக்கு அதிர்ஷ்டமிருந்தா அந்தப் பாசஞ்சர் வந்துட்டா, உடனே வண்டியை அனுப்பிடறேன். இல்லேன்னு, ஒன்பது மணிக்கு முன்னலே புறப்படக் கூடாது."

"ரெண்டு பஸ்ஸுக்கும் ரூட் ஒண்ணுதானே?"

"ஆமாம். திருச்சி, விழுப்புரம், எக்மோர்தான்."

நல்ல வேளையாக அந்தப் பயணி வந்துவிட்டார்.

"நீ அதிர்ஷ்டக்காரன் தம்பி! அவரும் வந்துட்டார்! சார், மெட்ராஸ் போக வேண்டிய பாசஞ்சரெல்லாம் வண்டியிலே ஏறுங்க! வழியனுப்ப வந்தவங்க கீழே இறங்குங்க சார்!" என்று அவசரப்படுத்திய ஏஜண்ட், டிரைவரை நெருங்கி, "கனி அண்ணே, இந்தத் தம்பி நம்ம முதல் வண்டியைத் திருச்சியிலே பிடிக்கணுமாம். கொஞ்சம் அழுத்திப் பிடிச்சுப் போங்க!" என்று முடுக்கி விட்டார்.

சரியாக எட்டரை மணிக்கு பகவதி டிராவல்ஸின் இரண்டாவது பஸ் புறப்பட்டுப் போயிற்று.

நடேசனும் தனபாக்கியமும் கயிறு, குடம், வாளி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.

நடேசன் கட்டிலில் உட்கார, அவள் தரையில் உட்கார்ந்தாள். நாளைக்கு சுந்தரமூர்த்திக்குப் போலீசுக்கும் என்ன பதில் சொல்வதென்று கவலைப் பட்டார்கள். ஒரு வார மகிழ்ச்சியும் தெம்பும் மறைந்துவிட்டன.

பத்து மணியாகியும் மாரியப்பன் வரவில்லை. ருக்கு எப்படி இருக்கிருள் என்றும் தெரியவில்லை. ஏதேதோ கற்பனைகள் விசுவரூபமெடுத்து அவர்களை மிரட்டின.

கடைசியில் நடேசன் பொறுக்க முடியாமல் எழுந்தார். "சரி, இப்படியே உட்கார்ந்திருந்தால், மனசு என்னென்னமோ நினைச்சுக் குழம்புது. பூட்டை உடைச்சுக் கதவைத் திறந்து விடறேன். நீ வீட்டிலே இரு. நான் வெளியே போய் அங்கே இங்கே விசாரிச்சுப் பார்க்கிறேன்."

பூட்டை உடைத்து வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

திடீரென்று கயிற்றுக் கொடியை கவனித்த தனபாக்கியம் ஆச்சரியப்பட்டாள்.

அவர்க்ள் கோயிலுக்குப் புறப்பட்ட போது ருக்கு குளித்து விட்டுக் கட்டியிருந்த பாவாடையும் தாவணியும் கொடியில் கிடந்தன!

ருக்கு உடை மாற்றிக் கொண்டிருக்கிருள்!

தூக்கு மாட்டிக் கொள்ளப் போனவள் உடை மாற்றிக் கொண்டிருப்பாளா? உடை மாற்றிக் கொண்டவள் தூக்கு மாட்டிக் கொண்டிருப்பாளா? மாட்டாள்! உடை மாற்றிக் கொண்டவள் வெளியே புறப்பட்டுத்தான் போயிருப்பாள்.

ஒரு வேளை இப்படி இருக்குமோ?

அவள் நினைத்தது போல; கோபால் ருக்குவை மறந்துவிடுவதாக மாமனிடம் பொய் சொல்லிவிட்டு, அவர்கள் கோயிலுக்குப் போயிருந்த நேரம் பார்தது வீட்டுக்கு வந்து, ருக்குவைக் கூட்டிக் கொண்டு சென்னைக்குப் போய்விட்டானு?

"என்னங்க, ருக்கு செத்துப் போகலேங்க, ஓடிப் போயிட்டா!"

"எப்படிச் சொல்றே?"

"இங்கே பாருங்க, அவ கட்டியிருந்த பாவாடை, தாவணி கிடக்கு!"

"அட, ஆமா! எங்கே போயிருக்கும்?"

"எல்லாம் உங்க அருமைத் தங்கச்சி மகனுேடதான் போயிருப்பா! அவன் பெரிய சத்புத்திரன்னு நினைச்சு, நீங்கதான் ருக்குவுக்கு நாளைக்குக் கல்யாணம்னு சொல்லிட்டீங்களே! இத்தனை காலம் காத்திருந்தவன் விடுவானு? நாம் கோயிலுக்குப் போயிருந்த நேரத்திலே கூட்டிக்கிட்டு ஓடிட்டான்!"

“அப்படியா சொல்றே?”

“அப்படியேதான்! நீங்க அவன்கிட்டே உண்மையைச் சொல்லியிருக்கக் கூடாது.”

“ஏதோ நல்லவன்னு நினைச்சுச் சொல்லிட்டேன். ருக்கு கோபாலோட போயிடுச்சுன்ஞ, இந்த மாரியப் பயல் எங்கே போஞன்?”

“அவன் எங்கேயோ தொலைஞ்சு போருன்! இப்போ அவனைப் பத்தியா கவலை? அந்தச் சிறுக்கியைப் பிடிக்கிற வழியைப் பாருங்க. இல்லேன்ஞ, நாளைக்கு மானம் போயிடும்!”

“மெட்ராசுக்குப் போயிட்டிருக்கிறவங்களை நான் எப்படித் துரத்திப் பிடிக்கிறது?” என்று நடேசன் மலைத்தார்.

தனபாக்கியம் கொஞ்சம் யோசனை செய்தாள். “நம்மாலே பிடிக்கமுடியாதுதான். ஆஞ, மாப்பிள்ளையாலே முடியும்!”

“அவர்கிட்டே விஷயத்தைச் சொல்லச் சொல்றியா? எனக்குப் பயமாயிருக்கு!”

“சொல்லித்தான் ஆகணும். அதுக்கு வழியிருக்கு. ருக்கு வுக்கு ஒரு அத்தை மகன் இருக்கான், அவளை வேறே இடத்திலே கொடுக்கிருேம்னு தெரிஞ்சா, அவன் வந்து தகராறு பண்ணுவான்னு முதலிலேயே மாப்பிள்ளைகிட்டச் சொல்லியிருக்கோம்.”

“ஆமா. அவருக்கும் கோபாலைத் தெரியும்னு சொன்ஞர்.”

“இப்போ நேரா பங்களாவுக்குப் போங்க. கோபால் பொண்ணைக் கடத்திக்கிட்டு மெட்ராஸ் போய்க்கிட்டிருக்கான். காரை எடுத்துக்கிட்டு உடனே போஞ, பொண்ணைக் கைப்பத்திக் கொண்டாந்துடலாம்னு சொல்லுங்க. இப்போ, இது நமக்கு மட்டும் மானக்கேடு இல்லே; மாப்பிள்ளைக்கும்தான். எல்லா ஏற்பாடும் பண்ணி, ஊருக்கெல்லாம் அழைப்புக் கொடுத்தப்புறம் கல்யாணம் நடக்கலேன்ஞ, அவருக்குத்தானே, அவமானம்? உடனே ஏதாவ்து ஏற்பாடு செய்வார். போங்க,” என்று துரத்திஞள் தனபாக்கியம்.

நடேசன் தயங்கித் தயங்கிப் புறப்பட்டார்.

சுப்பிரமணியபுரம் பங்களாவில் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சுந்தரமூர்த்தி வரிசையாகக் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் நடேசன் போய் நின்ருர்.

“என்ன மாமா, இந்த நேரத்திலே! என்ன வேணும்?”

“கொஞ்சம் தனியா வாங்க. முக்கியமான விஷயம் பேசணும்.”

அவரை ஒரு தனியறைக்குள் அழைத்துப் போனான் சுந்தர மூர்த்தி. ''சொல்லுங்க.''

''நானும் உங்க அத்தையும் சாயங்காலம் கோயிலுக்குப் போயிருந்தோம். அப்போ கோபால் வந்து ருக்குவைக் கடத்திக் கிட்டு மெட்ராஸ் போயிட்டான்!''

பளார் என்று அறைந்தான் சுந்தரமூர்த்தி.

நடேசன் குலை நடுங்கிப் போய் நின்றார்.

''பொண்ணுக்குச் சம்மதமான்னு கேட்டதுக்கு, என் பொண்ணு ரொம்ப யோக்கியம், எங்க வார்த்தையைத் தட்டா துன்னு அளந்தீரே, இந்தச் சமயம் பார்த்துப் பொண்ணைத் தனியா விட்டுட்டுப் போகலாமாய்யா? கோயிலுக்கு நாளைக்குப் போனா ஆகாதோ?''

''ஏதோ நடந்தது நடந்து போச்சு. பொண்ணை மீட்டுக் கிட்டு வர்ற வழியைப் பாருங்க.''

''எதிலே போயிருக்காங்க, ரயிலா, பஸ்ஸா?''

''பஸ்தான். பகவதி டிராவல்ஸ்.''

சுந்தரமூர்த்தி கடியாரத்தைப் பார்த்தான். ''இப்போ மணி பதினொண்ணு. இந்நேரம் பஸ் திருச்சியைத் தாண்டியிருக்கும். நாம் துரத்திப் பிடிக்கிறது கஷ்டம். இன்னொன்று செய்யலாம்.''

விறுவிறுவென்று டெலிபோனுக்குப் போனான். சென்னைக்கு ஒரு லைட்னிங் கால் புக் செய்தான்.

ஐந்தே நிமிடங்களில் தொடர்பு கிடைத்தது.

''ஹலோ, பாஸ்கரா? சுந்தரமூர்த்தி பேசறேன். நம்ம செம் பட்டையைக் கூட்டிக்க. வண்டிக்கு நிறைய பெட்ரோல் போட்டுக் கிட்டு உடனே கிளம்பு. விழுப்புரம் வழியா வா. காரைக்குடி யிலேர்ந்து மெட்ராஸ் வர்ற பகவதி டிராவல்ஸ் ஆம்னி பஸ்ஸை விழுப்புரத்துக்கிட்டே பார்ப்பே. பஸ்ஸை மறிச்சு நிறுத்து. மஃப்டி போலீஸ் மாதிரி ஆக்ட் பண்ணு. கோபால்னு ஒரு பையன் 25 வயசு இருக்கும். ஒல்லியா, உயரமா, சிவப்பா இருப்பான். அவனோடு ருக்குன்னு ஒரு பொண்ணு—18 வயசு, சிவப்பு—ரெண்டு பேரும் பஸ்ஸிலே இருப்பாங்க. அவன் அந்தப் பெண்ணைக் கடத்திக்கிட்டுப் போகிறதாகப் பெண்ணோட அப்பா போலீஸ்லே கம்ப்ளெய்ண்ட் ஞஞ்ஞீகொடுத்திருக்கார், அவங்களை அரெஸ்ட் பண்ணும்படி மெட்ராசுக்குத் தகவல் வந்திருக்குன்னு சொல்லு. ரெண்டு பேரை யும் கார்லே ஏத்திக்க. பஸ் போனதும், அவனுக்கு நாலு அறை கொடுத்து விரட்டி விட்டு, பொண்ணை இங்கே கொண்டு வா. எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்து சேர்! ஓ.கே?''

சுருக்கமாகத் தெளிவாகக் கட்டளை இட்டுவிட்டு போனை

வைத்தான் சுந்தரமூர்த்தி. மறு முனையில் இருந்தவன் பெரிய கில்லாடி போலும். இவ்வளவு பெரிய திட்டத்துக்கு ஒரு தடவைகூடச் சந்தேகம் கேட்கவில்லை!

சுந்தரமூர்த்தியின் ஏற்பாடுகளைக் கண்டு பிரமித்து நின்றார் நடேசன். பணம், போன், கார், ஆள் என்று இவனுக்குத்தான் எத்தனை வசதிகள்!

''எத்தனை மணிக்கு ருக்கு இங்கே வந்து சேரும்?'' என்று ஆவலாகக் கேட்டார்.

''கிட்டத்தட்ட ரெண்டு மணிக்கு பாஸ்கர் பஸ்ஸைப் பார்ப்பான். ரெண்டு மணிக்கே புறப்பட்டாலும் இங்கே வந்துசேரக் காலை ஆறு மணி ஆயிடும்.''

''எப்படியாவது முகூர்த்த நேரத்துக்குள்ளே வந்துட்டால் சரிதான்.''

''நீங்க வீட்டுக்குப் போங்க. ருக்கு வந்ததும் உங்களுக்கு வண்டி அனுப்பறேன்,'' என்றவன் டிரைவரைக் கூப்பிட்டு, அவரை வீட்டில் கொண்டுபோய் விடச் சொன்னான்.



''மாப்பிள்ளைகிட்ட விஷயத்தைச் சொன்னீங்களா? என்ன சொன்னார்?'' என்று ஆர்வத்தோடு கேட்டாள் தனபாக்கியம்.

''சொன்னாராவது!'' நடேசன் தம்மையறியாமல் கன்னத்தைத் தடவிக் கொண்டார். ''மாப்பிள்ளை ரொம்ப வேகமான ஆளா இருக்கார்! படக்குன்னு போனை எடுத்தார்; மெட்ராஸ்லே பாஸ்கர்னு ஒரு ஆளைக் கூப்பிட்டார்; காரை எடுத்துக்கிட்டு வந்து பஸ்ஸை மறிச்சு, பொண்ணைத் தூக்கிக் கார்லே போட்டுக்கிட்டுப் பொழுது விடியறதுக்குள்ளே வந்து சேருன்னு உத்தரவு போட்டார். பலபலன்னு பொழுது விடியும்போது ருக்கு இங்கே இருக்கும்!''

''நீங்க போனப்புறம்தாங்க எனக்கு விஷயம் புரிஞ்சுது. ருக்கு கோபாலோடு போகலே.''

திடுக்கிட்டார் நடேசன். ''என்ன நீ புதுக் கதை சொல்றே!

ருக்கு கோபாலோட போகாம, வேறே யாரோட போயிருக்கு?''

''நம்ம மாரியப்பன்தான் கூட்டிட்டுப் போயிருக்கான்!''

''எப்படிச் சொல்றே?''

''பணப் பெட்டி ஆணி போட்டுத் திறந்திருக்கு.''

''ஐயய்யோ! பணமெல்லாம் போச்சா!'' பதறினார் நடேசன்.

''அலறாதீங்க! இருநூறு ரூபாய்தான் குறையுது. கோபால் வந்து கூட்டிட்டுப் போயிருந்தான்னா, நம்ம வீட்டிலே பணம் எடுக்க அனுமதிச்சிருக்க மாட்டான். ரோஷக்காரன்! பூட்டு உடைக்கிற வேலையும் ருக்குவுக்குத் தெரியாது. அதனாலே மாரிதான் கூட்டிட்டுப் போயிருக்கணும்.''

''எப்படிப் போயிருந்தாலும் சரி; எல்லோரும் இன்னும் கொஞ்ச நேரத்திலே மாட்டிக்குவாங்க!'' என்று நம்பிக்கையோடு சொன்னார் நடேசன்.

சரியாக இரண்டரை மணிக்கு சுந்தரமூர்த்திக்கு போன் வந்தது.

பாஸ்கர் பேசினான். ''பகவதி டிராவல்ஸ் பஸ்ஸிலே கோபால் மட்டும்தான் பாஸ் வந்தான். பொண்ணு யாரும் அவனோட வரலையே!''

''நல்லாப் பார்த்தியா?''

''தரோவா செக்கப் பண்ணிட்டேன், பாஸ். நீங்க சொன்ன அடையாளத்திலே ஒரு பொண்ணுகூட வரலே. கோபாலை இறக்கி விசாரிச்சேன். ரொம்ப அப்பாவியாக இருக்கான், பாஸ். ருக்குவைக் காணோம்னதும் உண்மையிலேயே தவிச்சுப் போனான், பாஸ்!''

''அவனை என்ன பண்ணினீங்க?''

''பொண்ணை அவன் கடத்திக்கிட்டு வரலேன்னு தெரிஞ்சதும் அவனை அதே பஸ்ஸிலே ஏத்தி அனுப்பிட்டேன், பாஸ்.''

''அப்போ, பொண்ணு இங்கேதான் எங்காவது இருக்கும். நான் விசாரிச்சுக்கறேன். நீங்க மெட்ராஸ் போங்க,'' என்று போனை வைத்தான் சுந்தரமூர்த்தி.

ருக்கு கோபாலோடு சென்னைக்குப் போகவில்லையென்றால், எங்காவது உறவுகாரர் வீட்டில் இருக்க வேண்டும் அல்லது தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும்.

அவன் காரை எடுத்துக் கொண்டு நடேசனின் வீட்டுக்குப் போனான்.

அந்த நேரத்திலும் நடேசனும், தனபாக்கியமும் தூங்கவில்லை; என்ன நடந்திருக்கும்; எப்படி நடந்திருக்கும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

டிரைவர் கதவைத் தட்டிக் கூப்பிட்டார்.

நடேசன் ஓடிப் போய்க் கதவைத் திறந்து, சுந்தரமூர்த்தியை அழைத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தார். "ருக்கு வந்துருச்சா?" என்று ஆவலோடு விசாரித்தார்.

"ருக்கு மெட்ராஸ் போகலேயே! கோபால் தனியாத்தான் போறான்."

"இப்பத்தான் மாப்பிள்ளை விஷயம் தெளிவாப் புரிஞ்சிருக்கு! ருக்குவை கோபால் கூட்டிட்டுப் போகலே! மாரிதான் கூட்டிட்டுப் போயிருக்கான்."

"யார் கூட்டிட்டுப் போயிருந்தாலும் ருக்கு அந்த பஸ்ஸிலே இருந்திருக்கணுமே?"

"அவங்க வேறே பஸ்ஸிலே போயிருக்காங்க."

"சே! இது முதல்லேயே தெரிஞ்சிருந்தா, எல்லா பஸ்ஸையும் செக்கப் பண்ணி அவங்களைப் பிடிச்சிருக்கலாம். இனிமே பிடிக்கவும் முடியாது; நாளைக்கு முகூர்த்தத்தை நடத்தவும் முடியாது. இவ்வளவு அவமானம் நடந்த பிறகு நான் காரைக்குடியிலே தலை காட்டவும் முடியாது! வாங்க, இப்பவே மெட்ராஸ் புறப்படுவோம். கோபால் வீட்டுக்குப் போய், மாரியப்பனின் கழுத்தை நெறிச்சிட்டு ருக்குவை இழுத்துக்கிட்டு வருவோம். என்னை அவமானப்படுத்தினவங்க யாராயிருந்தாலும் பழிவாங்காமே விட மாட்டேன்!" என்று சீறினன் சுந்தரமூர்த்தி.

நடேசன் பயந்து போனர். "நானும் வரணுமா?"

"பொண்ணுக்கு அப்பன் வராமல், நான் மட்டும் போய் என்ன செய்ய முடியும்? சீக்கிரம் கிளம்புங்க. கோபால் நாளைக்கே கூடக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுவான்! அதுக்கு அவகாசம் கொடுக்காமல் நாம போயிடணும்."

"அத்தையைத் தனியா விட்டுட்டு எப்படி..."

"அவங்களையும் கூட்டிக்கிட்டுக் கிளம்புங்க. அங்கே நம்ம பங்களா இருக்கு; அம்மா இருக்காங்க. தங்கிக்கலாம்."

பத்தே நிமிஷங்களில் தனபாக்கியம் தனது பழைய டிரங்குப் பெட்டி சகிதம் புறப்பட்டுவிட்டாள்.

டுர்ரென்று பஸ் இஞ்சின் உயர்ந்த சுருதியில் ஒலித்தது. எல்லாச் சன்னல்களும் மூடியிருந்த போதும் எப்படியோ குளிர் காற்று உள்ளே புகுந்து நடுக்கியது.

மாரியப்பன் சோர்வோடு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜன்னலின் கண்ணாடிக் கதவுகளில் பனி கோத்து வழிந்திருந்தது. சென்னை நெருங்கிவிட்டது போலும்; சீரான இடைவெளி

களில் விளக்குகள் தெரிந்தன; தார்ச் சாலையின் முதுகெலும்பு போல் வெள்ளைப் பட்டை ஓடியது. அது மீனம்பாக்கமாக இருக்க வேண்டும். பளிச் பளிச்சென்று கண்ணடித்துக் கொண்டு ஒரு விமானம் ஆகாயத்திலிருந்து தரையிறங்கியது.

நெடுநேரப் பயணத்தால் மாரியப்பன் வெகுவாகச் சோர்ந்து போயிருந்தான். ஓடும் பஸ்ஸில் அவனால் உறங்க முடிய வில்லை. போதாக் குறைக்கு, விழுப்புரத்தில் தாகம் தாளாமல் இரண்டு சோடா குடித்ததன் விளைவு, இப்போது வயிறு முட்டிக் கொண்டு இருந்தது. எப்போதடா பஸ் நிற்கும் என்ற ஆவலோடு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான்.

ஆனால், ருக்கு கால்களை முடக்கி வைத்தபடி தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

பாவம், வாழ்க்கையில் அவளுக்கு இன்று சரியான அடி! ஏமாற்றம் தாளாமல் மரணத்தின் விளிம்புவரை சென்றுவிட்டாள்! நல்லவேளையாக மாரியப்பன் ஓடிப் போய்க் காப்பாற்றினான். அரை மணி நேரத்தில் அவளை அத்தான் கையில் ஒப்படைப்பதாக உறுதி சொல்லி அழைத்து வந்தான். ஆனால், கைக்கெட்டும் தொலைவில் இருந்த அத்தான், அவர்கள் கையை நீட்ட நீட்ட எப்படி விலகிப் போனான்!

அவர்கள் எதிர்பார்த்தபடி முதல் பஸ்ஸைத் திருச்சியில் பிடிக்க முடியவில்லை. சற்று முன்னர்தான் புறப்பட்டுப் போனதாகச் சொன்னார்கள். விழுப்புரத்தில் பிடித்து விடலாம் என்று மாரியப்பன் நம்பிக்கை தெரிவித்தான்.

ஆனால், அவர்கள் வந்த பஸ்ஸுக்குச் சக்தி போதாதோ, டிரைவருக்குத் திறமை போதாதோ; பஸ் எதிர்பார்த்தபடி இல்லாமல் மெதுவாகத்தான் சென்றது. போதாக் குறைக்கு ரயில்வே கேட் பிரசினை வேறு. விழுப்புரத்தில் விசாரித்த போது, முதல் பஸ் போய் வெகு நேரமாகிவிட்டதாகத் தெரிந்தது.

''என்ன மாரி, இங்கேயும் பிடிக்க முடியலே?'' என்று மிரண்டு போய்க் கேட்டாள் ருக்கு.

''இதிலே பயப்படறதுக்கு என்ன இருக்கு? வந்தது வந்தாச்சு. நேரா ஸ்டூடியோவுக்குப் போய், அத்தான் கையிலே உன்னை ஒப்படைச்சிடறேன். நானும் மெட்ராஸ் பார்க்க வேணாமா?'' என்று தைரியமாகச் சிரித்தான் மாரியப்பன்.

அவனுடைய தைரியத்தைப் பார்த்து அவள் தெம்படைந்தாள். ''அட்ரஸ் ஞாபகமிருக்கா?''

''சும்மா இருந்த உனக்கே ஞாபகம் இருக்கும்போது, லெட்டர் எழுதின எனக்கு மறந்து போயிடுமா? மயிலாப்பூர், வடக்கு மாட வீதி, நேரு போட்டோ ஸ்டூடியோ. போதுமா?''

அவள் வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள்.

இரவு ஓட்டல் திருவிழாக் கடை போல் கலகலப்பாயிருந்தது. இரட்டை ஸ்பீக்கர்கள் முழங்கின. ஏகப்பட்ட விளக்குகள் ஒளிர்ந்தன. சில்லி சிக்கன், தந்தூரி சிக்கன், சிக்கன் 65, பிரியாணி, தோசை என்று மெனு போர்டு பெரிய எழுத்தில் கூவியது.

''வா, போய்ச் சாப்பிடலாம்,'' என்று அழைத்தான் மாரியப்பன்.

இருவருமே இரவு சாப்பிடவில்லை. நல்ல பசி.

''பிரியாணி சாப்பிடறியா?''

''வேண்டாம். தோசையே போதும்.''

இரண்டிரண்டு தோசை கொண்டு வரச் சொன்னான்.

சுடச்சுட தோசை வந்தது—தோசை மட்டுமே.

''வெறும் தோசையை எப்படிச் சாப்பிடறது? சட்னி, சாம்பார் கொண்டு வாங்க.''

''அதெல்லாம் கிடையாது. மட்டன் குழம்பு, மட்டன் குருமாதான் இருக்கு.''

''ரொம்ப சந்தோஷம்! குருமா கொண்டு வாங்க.''

சட்னி, சாம்பாரைவிட கறிக்குருமா சுவையாக இருக்கும்.

சர்வர் இரண்டு கிண்ணங்களில் குருமா கொண்டு வந்தார். ஒவ்வொரு துண்டு கறிகூடக் கிடந்தது.

தோசைக்கும் குருமாவுக்கும் வெகு ஜோர். மறுபடியும் இரண்டிரண்டு தோசை, குருமா வாங்கித் திருப்தியாகச் சாப்பிட்டார்கள்.

பட்டணத்தை நெருங்க நெருங்க வசதிகள் அதிகமாகத்தான் கிடைக்கின்றன! காரைக்குடியில் இட்லி, தோசைக்கு வெறும் சட்னி, சாம்பார்தான். இங்கே கறி குருமா!

பில்லைப் பார்த்தபோதுதான் மாரியப்பனுக்குத் திகைப்பாக இருந்தது. பதினன்கு ரூபாய் போட்டிருந்தார்கள்!

சர்வரை விசாரித்தான். ''எட்டுத் தோசை எவ்வளவு?''

''நாலு ரூபாய்.''

''அப்புறம் எதுக்குப் பதினலு ரூபாய் போட்டிருக்கு?''

''ரெண்டு பிளேட் குருமா பத்து ரூபாய்!'' என்று சிரித்காமல் சொன்னர் சர்வர்!

எப்படி! தோசை வைப்பவர்கள் 'தொட்டுக்கொள்ள' ஒன்றும் தர மாட்டார்களாம்! நம் செலவில்தான் வாங்கிக் கொள்ள வேண்டுமாம்! அதுவும் ஒரு கிண்ணம் குருமா ஐந்து ரூபாயாம்! நான்கு ரூபாய்த் தோசையைத் தின்னப் பத்து ரூபாய் செலவு! பகல் கொள்ளை! தப்பு, இரவுக் கொள்ளை!

மாரியப்பனுக்குக் கோபமாய் வந்தது. ஆனல், கோபிக்க

அதுவா நேரம்? வரும்போது பார்த்துக் கொள்ளலாம். பேசாமல் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தான்.

ஒரே தாகமாயிருந்தது. ஓட்டல் தண்ணீர் சுத்தமாக இல்லை. பக்கத்து சோடாக் கடையில் ஸ்பென்சர் சோடா வாங்கிக் குடித்தான். நன்றாக இருந்தது. இன்னொன்று குடித்தான். ஆனந்தமாக இருந்தது.

மீண்டும் பஸ் ஏறினார்கள்.

அவ்வளவு நேரமும் விழித்துக் கொண்டு வந்த ருக்கு டிபன் சாப்பிட்ட அரை மணி நேரத்தில் கண்ணயர்ந்து போனாள்.

காலை ஆறு மணிக்கு, எழும்பூர் ரயில் நிலையம் எதிரே ஒரு குறுகலான தெருவுக்குள் நுழைந்து பெருமூச்சுடன் நின்றது பஸ்.

மாரியப்பன் எழுந்தான். ருக்குவை எழுப்பினான்.

''சீக்கிரம் இறங்கு,'' என்று அவசரப்படுத்தி அழைத்துக் கொண்டு போனான்.

அவனுக்கு பாத்ரூம் போக வேண்டிய அவசரம்!

மற்ற பயணிகள் தங்கள் லக்கேஜுகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ருக்கு பஸ்ஸைவிட்டு இறங்கியதும், ''தோ வரேன்,'' என்று சொல்லிவிட்டு வேகமாகத் தெருவில் நடந்தான் மாரியப்பன்.

புக்கிங் ஆபீஸிலேயே பாத்ரூம் வசதி இருப்பது அவனுக்குத் தெரியாது.

பஸ்ஸின் ஸ்பீக்கர் ஓசையிலும் பயணிகள் போட்ட சத்தத்திலும், மாரியப்பன் சொன்னது ருக்குவுக்குக் கேட்கவில்லை. சீக்கிரமாக இறங்கச் சொன்னவன் நிற்கச் சொல்லியிருப்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. சீக்கிரம் வரத்தான் சொல்லியிருப்பான் என்ற யூகத்தில் அவன் பின்னால் சென்றாள்.

மாரியப்பனுக்கு உடனடியாக ஒன்றுக்குப் போகவேண்டிய நெருக்கடி. மணிக் கணக்கில் அனுபவித்த வேதனை. பொறுக்க முடியாத நெருக்கடி. தெருவோரம் எங்காவது இடம் கிடைக்குமா என்று தேடிக் கொண்டே வேகமாக நடந்தான்.

நன்றாக விடிந்திருந்தது. எங்கும் பளிச்சென்று வெளிச்சம் பரவியிருந்தது. எங்கே பார்த்தாலும் ஜேஜேவென்று ஆட்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

ஓரடி வெற்றிடம் கூட இல்லை. கடைகள், லாட்ஜுகள், புக்கிங் ஆபீஸ்கள் என்று வரிசையாக வந்தன. திருச்சி, மதுரை, தேவகோட்டை முதலிய ஊர்களிலிருந்து ஆம்னி பஸ்கள் வந்து நின்றன. கும்பல் கும்பலாக மக்கள் இறங்கினார்கள்.

மாரியப்பன் இன்னும் வேகமாக நடந்தான்.

ருக்குவுக்கு மாரியப்பனைப் பின்பற்றி செல்வது கஷ்டமாக

இருந்தது. ஏன் திரும்பிப் பார்க்காமல், நின்று தன்னைக் கூட்டிச் செல்லாமல், இவ்வளவு வேகமாகப் போகிறான்? ஒருவேளை, முதல் பஸ்ஸில் வந்த அத்தானைத் தொலைவில் பார்த்துவிட்டு, அவரை நிறுத்த ஓடுகிறானோ?

அத்தானின் நினைவு வந்ததும் அவளும் வேகமாக நடந்தாள்.

ஒரு பஸ்ஸிலிருந்து பொலபொலவென்று உதிர்ந்த பயணிகள் அவளுக்கு முன்னால் தெருவை அடைத்தார்கள்.

இடிபட்டு, நசுங்கி, கூட்டத்தைப் பிளந்து கொண்டு அவள் வெளியே வந்தபோது மாரியப்பனைக் காணவில்லை.

நடுவில் காணாமல் போக வழியில்லை; தெருக் கோடிக்குத் தான் போயிருப்பான்.

அவளும் தெருக் கோடிக்குச் சென்றான்.

இடமும் வலமும் பெரிய சாலை ஓடியது. எதிரே, சற்று இடது பக்கமாக அவள் படத்தில் பார்த்த எழும்பூர் ரயில் நிலையம் தெரிந்தது. மாரியப்பன் எந்தப் பக்கம் போனான் என்பது தெரியவில்லை.

மடையன்! ஏன் இப்படி ஓடினான்? என்ன தலை போகிற அவசரம்?

பிளாட்பாரத்தில் ஏறி நின்று, மாரியப்பன் எங்காவது தென்படுகிறானா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

நல்ல வேளையாக, ரயில் நிலையத்துக்கு நேர் எதிரில், ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தான்.

ருக்கு பிளாட்பாரத்திலேயே நடந்து அவனை நோக்கிச் சென்றாள்.

ஓட்டலுக்குள்ளிருந்து வெளியே வந்த ஒருவன் அவளை இடித்துக் கொண்டே சென்றான்.

திரும்பிப் பார்த்து முறைத்துவிட்டு அவள் தம்பியை நெருங்கினாள்.

அப்போது மரத்தடியில் ஒரு பஸ் வந்து நின்றது.

மாரியப்பன் அதில் ஏறினான். ஆனால் அது மாரியப்பனல்ல. அவனைப் போலவே நீலச் சட்டை அணிந்த வேறு பையன். அவன்தான் மாரியப்பன் என்று நினைத்து ருக்குவும் அவன்ஏறிய பஸ்ஸில் ஏறிவிட்டாள்.

பஸ் நகர்ந்தது.



மா ரியப்பனுக்கு வேதனை மிகுதியாகிவிட்டது. இனி ஒரு கணம்கூடத் தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலை.

ஒரு புக்கிங் ஆபீஸ் வாசலில் ஒரு டிரைவர் பீடி புகைத்துக் கொண்டு நின்றார்.

அவரை அணுகினான். "அவசரமா பாத்ரூம் போகணும், சார். எங்கே போகலாம்?"

அவர் உட்புறம் கையைக் காட்டினார். "அதோ, அங்கே பாத்ரூம் இருக்கு, போ."

மாரியப்பன் ஓடினான்.

காரியம் முடிந்து திரும்பினான்.

அவன் வந்த பஸ் அலுப்பாக நின்றது. பயணிகள் டிக்கியில் வைத்திருந்த பெட்டிகளை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், ருக்குவைக் காணோம்.

நிற்கச் சொல்லிவிட்டுப் போயிருக்கும்போது எங்கே போயிருப்பாள்?

புக்கிங் ஆபீசுக்குள் எட்டிப் பார்த்தான்.

பஸ்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். ஒரு புறம் பாத்ரூம் இருந்தது.

ருக்கு பாத்ரூம் போயிருப்பாளா?

காத்திருந்தான்.

ஐந்து, பத்து, பதினைந்து நிமிஷங்களாயின. ருக்கு வரவில்லை.

அவனுக்கு பயமாய்ப் போய்விட்டது.

இங்கே பாத்ரூம் இருப்பது தெரியாமல், அவனைப் போலவே அவளும் இடம் தேடி வெளியே அலைகிறாளோ?

ஐயோ! சென்னை ரௌடிகள் நிறைந்த ஊர் என்பார்களே!

என்னதான் ரௌடிகள் என்றாலும், சாமர்த்தியமாகப் பாக்கெட் அடிப்பார்கள். அவ்வளவு பெரிய பெண்ணைப் பட்டப் பகலில் தூக்கிக் கொண்டா போய்விடுவார்கள்?

பக்கத்தில் நின்றவர்களிடம் ருக்குவைப பற்றி விசாரித்துப் பார்த்தான்.

யாரும் அவளைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

ஒருவர் மட்டும் சொன்னார். ''தேன் கலர்ப் புடவை கட்டின பொண்ணுதானே? உன் பின்னாலேதான் வந்துச்சு!''

மாரியப்பனுக்குப் புரியவில்லை. நிற்கச் சொல்லிவிட்டுப் போனால், ஏன் வருகிறாள்? வந்தாலும் அவனைத் தொடர்ந்துதானே வரவேண்டும்? அவனைக் காணவிட்டால் திரும்பி வர வேண்டியது தானே? ஏன் இன்னும் வரவில்லை?

அவன் அந்தத் தெருவையே மேலும் கீழுமாகப் பத்துத் தடவை அலசினான்.

ருக்குவைக் காணவில்லை. அத்தானிடம் ஒப்படைப்பதாகச் சொல்லி அவன் அழைத்துவந்த ருக்குவைக் காணவில்லை.

எங்கே போனாள்? என்ன ஆனாள்?

மாரியப்பன் என்ன செய்வதென்று தெரியாமல் உட்கார்ந்து விட்டான்.

வீட்டை விட்டு வெளியே சென்றறியாத ருக்கு டவுன் பஸ்ஸில் ஏறியதில்லை. ஓடுகிற பஸ்ஸில் நின்று கொண்டு பயணம் செய்வது அவளுக்கு வெகு கஷ்டமாக இருந்தது. மற்றவர்களைப் பார்த்து அவளும் மேலே தொங்கிய வாரைப் பிடித்துக் கொண்டாள்.

''டிக்கெட், டிக்கெட்!'' என்றபடி கண்டக்டர் வந்தார். ருக்குவிடம் நின்றார். ''எங்கேம்மா போகணும்?''

''எனக்கும் சேர்த்து என் தம்பி டிக்கெட் வாங்கியிருப் பான்.''

''யாரும் ரெண்டு டிக்கெட் வாங்கலையே! யார் உன் தம்பி?''

''தோ, நீலச் சட்டை போட்டிருக்கிற பையன்.''

கண்டக்டர் அவனைக் கூப்பிட்டார். ''ஏப்பா, உங்கக்கா வுக்கு டிக்கெட் வாங்க மறுந்துட்டியே!''

''அது யார்ப்பா என் அக்கா!'' என்றபடி அந்த நீலச் சட்டைக்காரன் திரும்பிப் பார்த்தான்.

ஐயோ! அவன் மாரியப்பனல்ல! பின்னால் பார்த்தபோது அவனைப் போல் தோன்றியவன் முன்னால் வெகுவாக மாறுபட்டிருந் தான். முப்பது வயதிருக்கும். பெரிய மீசை!

''அவர் என் தம்பி இல்லிங்க!'' என்றாள் ருக்கு.

''பின்னே, மச்சானா?'' என்று கேட்டார் கண்டக்டர். ''எங்கே போகணும், சொல்லு. காசை எடு.''



''காசு இல்லீங்க. அவர் என் தம்பியாக்கும்னு நினைச்சு ஏறிட்டேன்.''

''எப்பவுமே ஏர்றதுக்கு முன்னலே அண்ணனு, அத்தானுன்னு நிச்சயப்படுத்திக்க!'' என்று கண்டக்டர் சொன்னதும் பஸ்ஸே சிரித்தது.

''காலங்காத்தாலே சரியான சாவு கிராக்கி!'' என்று அலுத்துக் கொண்ட கண்டக்டர் அடுத்த ஸ்டாப்பில் அவளை இறக்கி விட்டார்.

மாரியப்பன் வேறெங்கும் போகாமல், திரும்பத் திரும்ப அந்தத் தெருவையே வலம் வந்தான்.

அவனைக் காணுமல் ருக்கு அந்தத் தெருவைவிட்டுப் போயிருக்க மாட்டாள்.

இந்தத் தடவை நிச்சயமாய்த் தென்படுவாள் என்று ஒவ்வொரு தடவையும் நம்பிக்கையோடு நடந்தான்.

யாராரோ வந்தார்கள், போனுர்கள். ஆனல், ருக்குவை மட்டும் காணும்.

ஐந்து நிமிஷங்களுக்குள் எங்கேதான் மறைந்திருப்பாள்? யாரும் காரில் வைத்துக் கடத்திப் போயிருப்பார்களா? காற்றில் கரைந்து விட்டாளோ?

ஒன்பது மணியாகிவிட்டது. வயிறு கபகபவென்று பசித்தது.

ஆனல் அவன் சாப்பிட விரும்பவில்லை. அவனை நம்பி வந்த அக்கா பாவம், பசியால் துடித்துக் கொண்டிருப்பாள். அவளிடம் காசுகூட இல்லையே!

இனியும் அவளை அங்கேயே தேடிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அங்கே இருந்திருந்தால் மூன்று மணி நேரமாகவா தென்படாமல் இருப்பாள்? அவள் வேறெங்கோ போய்விட்டாள். எங்கே இருக்கிருளோ? என்ன பாடுபடுகிருளோ?

நேராக அத்தானிடம் போய் விஷயத்தைச் சொல்லி, அவன் துணையோடு தேடுவதுதான் நல்லது.

மாரியப்பன் மயிலாப்பூருக்கு பஸ் ஏறினுன்.

நேரு போட்டோ ஸ்டூடியோ ஒரு கட்டிடத்தின் மாடியில் இருந்தது.

மாடிக்குச் செல்லக் கட்டிடத்தின் வலது பக்கம் படிக்கட்டு இருந்தது.

மாரியப்பன் தடதடவென்று படியேறிப் போனுன்.

கோடாக் ஃபிலிமுக்காக ஒரு பிரஞ்சுக் கன்னி சின்ன பிரா

வும் அதைவிடச் சின்ன ஜட்டியும் ஒட்டிக் கொண்டு ஒற்றைக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தாள். ஆளுயரக் கட்அவுட்.

''சார்!'' என்று குரல் கொடுத்தான் மாரியப்பன்.

அப்பால் தொங்கிய திரைச் சீலையைத் தள்ளிக் கொண்டு கறுப்பாக, ஒல்லியாக ஓர் இளைஞன் வந்தான்.

''வாங்க, பாஸ்போர்ட்டா, போஸ்ட் கார்டா, காபினெட்டா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.''

''ரோல் பிலிம் டெவலப்பிங்கா?''

''இல்லே. காரைக்குடியிலிருந்து கோபால் வந்துட்டாரா?''

''அவர் இங்கே வரமாட்டார்.''

''ஏன்?''

''அவர்தான் புது ஸ்டூடியோ ஆரம்பிக்கப் போறதாச் சொல்லிட்டு, ஒரு வாரத்துக்கு முந்தியே இங்கிருந்து விலகி விட்டாரே!''

''அப்படியா! புது ஸ்டுடியோ எந்த இடத்திலே?''

''அது தெரியாது.''

''சரி, அவர் வீடு எங்கே இருக்கு?''

''தெரியாது. நான் வந்த மறுநாளே அவர் விலகிட்டார்.''

அப்போதுதான் திகிலை உணர்ந்தான் மாரியப்பன். அக்காளைக் கண்டுபிடிக்க அத்தானைக் கூப்பிடலாமென்றால், இப்போது அத்தானையே கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறதே! யார் துணையுமில்லாமல் அவன் எப்படி ருக்குவைக் கண்டு பிடிக்கப் போகிறான்!


இந்த அத்தான் ரொம்ப மோசம்! பழைய ஸ்டுடியோ விலிருந்து விலகியதையோ, புது ஸ்டுடியோ திறக்கப் போவதையோ சொல்லவில்லையே!

அவரை எங்கே சொல்லவிட்டாள் அம்மா? வந்ததும் வராததுமாகத்தான் விரட்டிவிட்டாளே!

போட்டோகிராபர் மீண்டும் திரைக்குப் பின்னால் நுழைந்து கொண்டு விட்டான்.

என்ன செய்வதென்று புரியாமல் திரும்பி நடந்தான் மாரியப்பன்.

அவன் சதுரப் படியில் கால் வைத்ததும், பக்கத்து வாசலி விருந்து ஒரு கரம் நீண்டு அவனை உள்ளே இழுத்துக் கொண்டது.



ருக்குவுக்குத் தான் தொலைந்து போய்விட்டோமென்று தெளிவாகத் தெரிந்தது.

இந்த ஜன சமுத்திரத்தில் அவள் எப்படி மாரியப்பனைக் கண்டுபிடிக்கப் போகிறாள்? கடற்கரை மணலில் ஊசியைத் தேடுவது போல்தான்.

அவளுக்கு இப்போது தம்பியைக் கண்டுபிடிப்பதுகூட முக்கியமில்லை. அவனுக்கு ஸ்டுடியோ முகவரி தெரியும். எப்படியும் வந்து சேர்ந்து விடுவான். அவள் அங்கே போய்ச் சேர்வதுதான் முக்கியம்! ஆனால், கையில் காசில்லாமல் எப்படிப் போவது?

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

பஸ்ஸில் போனால்தான் முதலில் காசு கொடுத்து டிக்கட் வாங்கியாக வேண்டும். ஆட்டோவில் போனால், இறங்கிய பின் பணம் கொடுத்து விடலாமே!

ஓர் ஆட்டோவைக் கைகாட்டி நிறுத்தினாள்.

''எங்கேம்மா போகணும்?''

''மயிலாப்பூர், வடக்கு மாட வீதி, நேரு போட்டோ ஸ்டுடியோவுக்குப் போங்க.''

டிரைவர் மீட்டரைப் போட்டுவிட்டு ஆட்டோவைக் கிளப்பினார்.

போட்டோகிராபர் ஆனந்தமாக ஒரு பாட்டை முனகிக் கொண்டே புகைப்படங்களுக்கு ஓரம் வெட்டிக் கொண்டிருந்தான்.

''ஐயா!'' என்று ஒரு குரல் இனிமையாக அழைத்தது.

போட்டோகிராபர் திரையைத் தள்ளிக் கொண்டு வந்தான்.

அழகான ஓர் இளம் பெண் நின்று கொண்டிருந்தாள்.

''வாங்க! பாஸ்போர்ட்டா, போஸ்ட் கார்டா, காபினெட்டா?''

''இங்கே காரைக்குடிக்காரர் ஒருத்தர்...''

''கோபால்தானே? அவர் ஒரு வாரத்துக்கு முன்னுடியே வேலையை விட்டு நின்னுட்டார். புது ஸ்டூடியோ ஆரம்பிக்கப் போறதாகக் கேள்வி. ஸ்டுடியோ எங்கேன்னு தெரியாது. வீடும் எங்கே இருக்குதுன்னு தெரியாது!''

அவள் கேட்க இருந்த கேள்விகளுக்கெல்லாம் கேளாமலே அவன் பதில் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டாலும், அத்தான் அங்கே இல்லை என்ற விஷயத்தை அறிந்து திடுக்கிட்டாள்.

அத்தான் அந்த ஸ்டுடியோவில் இல்லையாமே! எங்கே இருக்கிறுறென்றும் தெரியாதாமே! இனி அவள் எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறுள்?

முதலில் கீழே நிற்கும் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்தாக வேண்டுமே!

''இன்னிக்கு என்ன விசேஷம், எல்லோரும் கோபாலேயே தேடி வர்ருங்க!'' என்று வியப்புக் காட்டினுன் போட்டோகிராபர்.

''அவரைத் தேடி வேறு யார் வந்தாங்க?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் ருக்கு.

''இப்போதுதான் ஒரு பையன் வந்து விசாரிச்சிட்டுப் போனுன்.''

''எவ்வளவு நேரமாச்சு?''

''ஒரு அஞ்சு நிமிஷம்தான் இருக்கும்.''

அவள் மளமளவென்று கீழே இறங்கி ஓடினுள். கண்ணுக் கெட்டிய தூரம் வரை நாலாப் பக்கமும் தேடினுள்.

மாரியப்பனேக் காணவில்லை.

''பணத்தைக் கொடுத்து மீட்டரைக் கட் பண்ணும்மா. எனக்கு நேரமாகுது!'' என்று ஆட்டோக்காரர் அவசரப்படுத்தினுர்.

''எவ்வளவுங்க ஆகுது?''

''இருபத்தஞ்சு ரூபா.''

''எங்கத்தான் இந்த ஸ்டூடியோவிலேதான் வேலை பார்த்தார். அவரைத் தேடி வந்தேன். இப்போ அவர் இல்லை.''

''அதனுலே?''

ருக்கு தன் தோடுகளைக் கழற்றினுள். ஒன்றை அவரிடம் கொடுத்தாள்.

''அசல் தங்கம். கால் பவுன். இதை வச்சிட்டு ஏதாவது தர முடியும்னு தாங்க. இல்லேன்னு நீங்களே வச்சுக்கங்க.''

ஆட்டோ டிரைவர் அலட்சியமாகச் சிரித்தார். ''இந்தப் பட்டணத்துக்கு நான் பொழைக்க வந்து முப்பது வருஷமாச்சு! நீ நேத்துப் பொறந்த பிள்ளை! என்னை ஏமாத்தப் பார்க்கறியே! தோ, இங்கேயே அடகுக் கடை இருக்குது. நீயே அடகு வச்சுப் பணம் கொடு.''

ருக்கு திரும்பிப் பார்த்தாள்.

ஸ்டூடியோவின் கீழே ஓர் அடகுக் கடைதான் இருந்தது. ஆனால், வாசலில் 'ஞாயிறு விடுமுறை' பலகை தொங்கிற்று.

''சும்மா போ. அவசரம்னு கேட்டா, தருவாங்க.''

ருக்கு கடைக்குள் நுழைந்தாள்.

அதே சமயம் சுந்தரமூர்த்தியின் கார் புழுதி படிந்த கோலத்தோடு ஆட்டோவுக்கு அருகில் வந்து நின்றது! சுந்தரமூர்த்தியும் நடேசனும் இறங்கி ஸ்டுடியோவுக்குப் போக, தனபாக்கியம் மட்டும் காரில் உட்கார்ந்திருந்தாள்.

சுப்பென்று ஒரு கை தன்னைப் பிடித்து உள்ளே இழுத்ததும் மாரியப்பன் ஒரு கணம் பயந்துதான் போனான்.

சுந்தரமூர்த்தியின் ஆள்தான் தன்னைப் பிடித்துவிட்டானோ என்று சந்தேகப்பட்டான்.

ஆனால், அந்தக் கை வளையல் அணிந்திருந்தது!

அழகான பெண் ஒருத்தி நின்றாள். இருபது வயது இருக்கும். வசதியான வீட்டுப் பெண் போலும். நிறைய நகைகள் அணிந்திருந்தாள்; அழகாக உடுத்தியிருந்தாள்.

''யார் நீங்க?'' என்று கேட்டான் மாரியப்பன்.

''சொல்றேன், வா,'' என்று உள்ளே அழைத்துச் சென்றாள் அவள்.

மாரியப்பன் புரியாமல் பின்னால் நடந்தான்.

அழகான வீடு. நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

''உட்கார் தம்பி,'' என்று ஒரு நாற்காலியைக் காட்டிவிட்டு, அவள் ஓர் அறைக்குள் நுழைந்தாள்.

மாரியப்பன் உட்கார்ந்திருந்தான்.

அவள் யாராயிருக்கும்? எதற்காக முன்பின் தெரியாத அவனைக் கூட்டிவந்து உட்கார வைத்திருக்கிறாள்?

ஐந்து நிமிஷங்களில் அவள் காப்பியோடு வந்தாள். ''சாப்பிடு, தம்பி,'' என்று நீட்டினாள்.

''நீங்க யார்?''

''இந்தக் கட்டிடத்தோட சொந்தக்காரர் மகள். பேர் உஷா. எனக்காக நீ ஒரு உதவி செய்வியா?''

''நானே ஊருக்குப் புதுசு. உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்?''

''நீ இப்போ கோபாலைப் பார்க்கத்தான் போறே?''

''அவரைத்தான் பார்க்கணும். ஆனா, அவர் எங்கே இருக்கார்னு தெரியலையே?''

''நான் உனக்கு நாளைக்குச் சொல்றேன்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எங்கப்பா அவரைத் தேடிக்கிட்டிருக்கார்.''

''உங்கப்பா எதுக்கு அவரைத் தேடணும்? அவர் ரொம்ப நல்லவராச்சே?''

''அவர் இங்கேயிருந்து ஒரு பொருளைக் கடத்திக்கிட்டுப் போயிட்டார்.''

''என்ன அது?''

''என் மனசுதான்!'' சொல்லிவிட்டு அவள் நிறைய வெட்கப்பட்டாள்.

''ஓ! உங்களுக்கு அவர்மேலே காதலா?''

''காதல் இல்லே, தம்பி. உயிர்! அவர் இல்லேன்னு எனக்கு வாழ்க்கையே இல்லே!'' சொல்லும்போதே கண்கள் கலங்கின.

''அவருக்கும் உங்க மேலே காதலா?''

அவள் பெருமூச்சு விட்டாள். ''அதான் கிடையாது! என் மனசைத் திறந்து எவ்வளவோ பேசிட்டேன். அவர் கண்டுக்கவே இல்லே. அவருக்கு மாமன் மகள் ஒருத்தி இருக்காளாம். அவளைத் தான் கட்டிக்குவாராம்.''

''அதனுலேதான் உங்களைப் பிடிக்கலே.''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா எவ்வளவு சொத்து கிடைக்கும், தெரியுமா? இந்தக் கட்டிடம் பூரா எங்களது தான். இன்னும் நிறையக் கட்டிடம் இருக்கு. லாக்கர்லெ எனக்கு நிறைய நகை இருக்கு. என்னைக் கட்டிக்கிட்டா எல்லாம் அவருக்குக் கொடுப்பாங்க.''

''இதையெல்லாம் அவர்கிட்டே சொன்னீங்களா?''

''நூறு தடவை சொல்லியாச்சு. என் தொந்தரவு தாங்கமத்தான் கோபால் இதை விட்டுப் போயிட்டார்னு தோணுது. அவர் எங்கே வேணுலும் இருக்கட்டும். யாரை வேணு லும் கல்யாணம் பண்ணிக்கட்டும். வாரத்திலே ஒரு நாள்—ஒரே ஒரு நாள் மட்டும்—வந்து எனக்கு முகத்தைக் காட்டிட்டுப் போகச் சொல்லு. என்னுலே அவரை மறக்க முடியலே. அப்பாவும் அம்மாவும் எனக்கு பைத்தியம் பிடிச்சுடுச்சுன்னு சொல்றுங்க. எனக் கொண்ணும் பைத்தியமில்லே. நான் நல்லாத்தான் இருக்கேன்,'' என்று ஓவென்று அழத் தொடங்கினுள் உஷா.

மாரியப்பன் ஆச்சரியப்பட்டான்.

இந்த உஷாவுக்குத்தான் கோபால் மீது எவ்வளவு ஆழ மான காதல்! அவனுக்காக எதையும் கொடுக்கச் சித்தமாயிருக்கி ருளே!

கோபாலுக்குத்தான் ருக்குவின் மேல் எவ்வளவு தீவிர மான காதல்! அவளுக்காக இவ்வளவு சொத்து சுகங்களையும்

இவ்வளவு அழகான பெண்ணையும் வேண்டாமென்று மறுத்துவிட்டு வந்திருக்கிறானே!

ருக்கு கொடுத்து வைத்தவள்தான்!

''காப்பி சாப்பிடு, தம்பி. ஆறிப் போயிடும்,'' என்ற உஷா, ''நீ எதுக்கு அவரைப் பார்க்கணும்?'' என்று கேட்டாள்.

''எதுக்கா? கல்யாண விஷயமாப் பார்க்கணும்.''

''உங்கக்கா கல்யாண விஷயமாவா?''

''ஆமாம். அவரோட நண்பருக்கு எங்கக்காவைப் பேசியிருக்கோம். சரி, நான் நாளைக்கு வரேன். எப்படியாவது அவரோட அட்ரஸ் கண்டுபிடிச்சுத் தாங்க,'' என்று சொல்லிவிட்டு மாரியப்பன் வெளியே வந்தான்.

ஸ்டுடியோவுக்குள் அவன் அப்பாவும் சுந்தரமூர்த்தியும் நின்று கோபாலைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்கள்!

அவன் சட்டென்று வந்த வழியே திரும்பினான்.

''என்ன தம்பி?'' என்று உஷா விசாரித்தாள்.

''ஒண்ணுமில்லே. நீங்க கொடுத்த காப்பி ரொம்ப நல்லா இருந்தது! இன்னும் ஒரு அரை டம்ளர் போட்டுக் கொடுங்களேன்.''

''அதுக்கென்ன, போட்டுத் தரேன்,'' என்று சமையலறைக்குள் நுழைந்தாள் உஷா.

முகம் நிறையக் களைப்பும் உடல் நிறையப் புழுதியுமாய் தடதடவென்று படியேறிவந்த அவர்களைப் பார்த்ததுமே போட்டோகிராபருக்குப் புரிந்துவிட்டது, அவர்கள் படம் பிடித்துக் கொள்ள வரவில்லையென்று.

அப்புறமென்ன, கோபாலைப் பற்றித்தான் விசாரிப்பார்கள்.

அவனே முந்திக் கொண்டு விட்டான். ''சார், கோபால் ஒரு வாரத்துக்கு முந்தியே வேலையிலிருந்து விலகிட்டார். புதுசா ஸ்டுடியோ திறக்கப் போவதாகக் கேள்வி. எந்த இடம்னு தெரியாது. வீடு எங்கே இருக்குன்னும் தெரியாது!''

சுந்தரமூர்த்தி அவனை வியப்பாகப் பார்த்தான். ''நாங்க அவனைப் பத்தித்தான் கேட்க வந்தோம்னு உனக்கு எப்படித் தெரியும்?''

''இன்னிக்கு என்னமோ, வர்றவங்களெல்லாம் அவரைப் பத்தி விசாரிக்கத்தானே வர்றாங்க!''

''யார் யார் வந்தா?''

''ஒரு பையனும் பொண்ணும் வந்தாங்க. இப்போ நீங்க வர்றீங்க.''

பையனும் பெண்ணும் என்று அவன் சேர்த்துச் சொன்ன

தால், மாரியப்பனும் ருக்குவும் சேர்ந்து வந்ததாக அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

''அவங்க எப்போ வந்தாங்க?''

''எல்லாம் கால் மணி நேரத்துக்குள்ளேதான்.''

''அவங்களுக்கும் இதே பதிலைத்தான் சொன்னியா?''

''ஆமா, சார்.''

சுந்தரமூர்த்தியும் நடேசனும் கீழே இறங்கினார்கள்.

''இப்போ என்ன புரியுது உங்களுக்கு?'' என்று சுந்தர மூர்த்தி கேட்டான்.

''ருக்குவும் மாரியும் இங்கே வந்து சேர்ந்துட்டாங்கன்னு புரியுது.''

''எனக்கு இன்னொண்ணும் புரியுது. ருக்குவும் மாரியும் மெட்ராஸ் வந்திருக்கிற விஷயம் சேர்ந்துட்டாங்கன்னு கோபாலுக்குத் தெரியாதுன்னு தோணுது. தெரிஞ்சிருந்தால் இந்நேரம் ஸ்டுடியோவுக்கு வந்து காத்திருப்பான். அவங்களை அலைய விட மாட்டான்.''

''உங்க ஆள்தான் பஸ்ஸை மறிச்சுச் சொல்லியிருப் பானே?''

''ருக்குவை மட்டும் காணோம்னு சொன்னதாலே, அது காரைக்குடியிலேதான் எங்காவது இருக்கும்னு நினைச்சுட்டிருப் பான். மாரியும் கூட வந்திருக்கிற விஷயம் அவனுக்குத் தெரியாதே! அதுவும் நமக்கு நல்லதுதான். ருக்குவும் மாரியும் கோபாலைக் கண்டு பிடிக்கிறதுக்குள்ளே, நாம அவன் வீட்டுக்குப் போய் காத்திருப் போம். வீடு எங்கே இருக்கு?''

''அதெல்லாம் தெரியாதுங்க.''

சுந்தரமூர்த்திக்கு எரிச்சலாயிருந்தது. ''என்னய்யா, சொந்தத் தங்கச்சி மகன் என்கிறீர்; வீடு எங்கே இருக்குன்னு தெரியாதுங்கிறீர்!''

''அவங்க அவங்க வயத்துப்பாடே அந்தரத்திலே இருக்கும் போது அடுத்தவங்க க்ஷேமத்தை யாருங்க விசாரிக்கிறு? இந்த ஒரு வருஷத்திலே அவன் ரெண்டு லெட்டர் போட்டிருப்பான். நான் அதுகூடப் போட்டதில்லே. மாரிப்பயதான் கார்டு வாங்கி நுணுக்கி நுணுக்கி எழுதுவான். அதுவும் ஸ்டுடியோ விலாசத்துக்குத்தான்,'' என்றுர் நடேசன்.

''சரி, கோபாலின் வீட்டைக் கண்டுபிடிக்க நான் ஒரு ஏற் பாடு பண்றேன், வாங்க. இப்போ நம்ம பங்களாவுக்குப் போய்க் குளிச்சு, சாப்பிட்டு, ரெஸ்ட் எடுத்தக்கலாம்.''

அவர்கள் காரில் ஏறிக் கொண்டார்கள்.

கார் சீறிக் கொண்டு புறப்பட்டது.

அவர்கள் நகரட்டும் என்றே காத்துக் கொண்டிருந்த மாரியப்பன் தடதடவென்று படியிறங்கி, வலது புறம் திரும்பி வேகமாக நடந்தான்.

அவன் போன இரண்டாம் நிமிஷம் ருக்கு அடகுக் கடையிலிருந்து பணத்தோடு வெளியே வந்தாள்.

இரண்டு தோடுகளையும் விற்றதில் ஐந்நூறு ரூபாய் கிடைத்தது. ஆட்டோ வாடகையைக் கொடுத்துவிட்டு அவள் இடது புறம் திரும்பி நடந்தாள்.



அக்கா காணுமல் போய்விட்டாள், அத்தான் இடம் மாறிப் போய்விட்டான் என்று தெரிந்ததும் மாரியப்பன் மனம் உடைந்து போனுன்.

இவ்வளவு பெரிய பட்டணத்தில் ருக்குவை எங்கேயென்று தேடுவது? அத்தானை எப்படிக் கண்டுபிடிப்பது?

பிரசினைகள் மண்டைக்குள் வண்டுகளாய்க் குடைந்தன.

எல்லாப் பிரசினைகளையும் மறந்து, எங்காவது தலை சாய்த்து, நிம்மதியாக ஒரு மணி நேரம் தூங்கவேண்டும் என்று மூளை கெஞ்சியது. ஆனுல், தார் உருகி ஓடும் கோடைக் கால வெயிலில், நடப்பதற்கே இடமில்லாத பரபரப்பான பட்டணத்துப் பிளாட்பாரத்தில் எப்படிப் படுப்பது?

எதிரே ஒரு லாட்ஜ் தெரிந்தது. சுமாரான தோற்றம். வாடகை அதிகமாயிராதென்று தோன்றியது. ஓர் அறை எடுத்துக் கொஞ்ச நேரம் உறங்கலாம் என்று ஆசைப்பட்டு உள்ளே நுழைந்தான்.

விசிறி ஓடாததால் சட்டை போடாமல் ஓலை விசிறியால் விசிறிக் கொண்டிருந்தார் முதலாளி—ரிஸப்ஷனிஸ்டும் அவர்தான்.

''என்ன தம்பி வேணும்?''

''இங்கே ரூம் ரெண்ட் எவ்வளவு?''

''சிங்கிள் பதினைந்து ரூபா. டபுள் இருபத்தஞ்சு ரூபாய்.''

''ஒரு சிங்கிள் கொடுங்க,'' என்றபடி பைக்குள் கைவிட்ட

மாரியப்பன் திடுக்கிட்டு விழித்தான்.

பை சுத்தமாக இருந்தது!

பஸ்ஸில் வரும்போது எவனோ விரல்களை விட்டிருக்கிறான்!

உடனே மாரியப்பன் குரலை மாற்றிக் கொண்டான். ''இங்கே ஏதாவது வேலை கிடைக்குமா, சார்?''

லாட்ஜ் முதலாளி அவனை மேலும் கீழும் பார்த்தார். ''உனக்கு என்ன வேணும்? அதை நிச்சயமாகச் சொல்லு. முதல்லே ரூம் கேட்டே, இப்போ வேலை கேட்கிறே!''

''ரூம் கேட்கத்தான் சார் வந்தேன். பையிலே வச்சிருந்த நூறு ரூபாய் பணத்தை எவனோ அடிச்சுட்டான். வயிறு பசிக்குது. உடம்பு களைப்பா வருது. ஏதாவது வேலை செய்துதான் சாப்பிடணும்!''

''இந்த நிலையிலே நீ என்ன வேலை பார்க்கப் போறே? வேலை ஒண்ணுமில்லை. இடத்தைக் காலி பண்ணு!'' என்று விரட்டினார் முதலாளி.

மாரியப்பன் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். ''சார், நான் வெளியூர்க்காரன் சார். சொந்தக்காரங்களைத் தேடி வந்தேன். அவங்க இடம் மாத்திப் போயிட்டாங்க. பையிலே இருந்த பணமும் பறிபோயிடுச்சுங்க. சாப்பிட வேறே வழியில்லே. கொஞ்சம் இரக்கம் காட்டுங்க, சார்!''

கால் மணி நேரத்துக்குப் பிறகு அவர் இறங்கினார். ''சரி, ரூம் பையனா வேலை செய். ஆனா, சம்பளம் எதுவும் கேட்கக் கூடாது. தங்கறவங்க கொடுக்கிற டிப்ஸிலேதான் சாப்பிட்டுக்கணும். படுத்துக்க இங்கே இடம் தர்றேன். நாணயமா நடந்துக்கணும், என்ன?''

''சரி, சார்!'' என்று சந்தோஷமாக ஒப்புக் கொண்டான் மாரியப்பன்.

''ரூம் நம்பர் பதினெண்ணிலேருந்து இருபது முடிய உன் சர்வீஸ்,'' என்றவர், ''தியாகு, தியாகு,'' என்று குரல் கொடுத்தார்.

பதினைந்து வயதுப் பையன் ஒருவன் வந்தான்.

''இந்தப் பையனை ரூம் பாயாகச் சேர்த்திருக்கேன். கூட்டிட்டுப் போ,'' என்று அனுப்பி வைத்தார்.

வாடகை குறைவு என்பதால் அந்த லாட்ஜில் எப்போதும் அறைகள் நிரம்பியிருந்தன. நடுத்தர மக்கள் நிறையப் பேர் வந்து தங்கினார்கள். டீ, காப்பி, சர்பத், டிபன் என்று ஒன்று மாற்றி ஒன்று வாங்கிவர அவனை ஏவிக்கொண்டே இருந்தார்கள். மாரியப்பனும் நாயாக அலைந்தான். ஆனால், ஒருவரும் டிப்ஸ் கொடுக்கவில்லை. அறையைக் காலி செய்யும்போதுதான் தருவார்கள் போலும்.

பையில் காசு இருந்த போது அவனால் சாப்பிடாமல் இருக்க முடிந்தது. விரும்பித்தான் பட்டினியாய் இருக்கிறோம் என்ற தெம்பு அது. காசில்லை என்றதும் அவனால் பசியை அடக்க முடிய

வில்லே. விரும்பினுலும் சாப்பிட முடியாது என்ற பயம் இது.

சாயங்காலமாகத் தியாகுவிடம் இரண்டு ரூபாய் கடன் கேட்டான்.

''எதுக்கு இப்போ பணம்?''

''பசி தாங்க முடியலே, தியாகு!'' என்றபோதே மாரியப்பனின் கண்கள் கலங்கிவிட்டன.

தியாகு ஆச்சரியப்பட்டுப் போனுன். ''நீ வந்தும் நாலு மணி நேரமாகப் போகுது. எப்போ பார்த்தாலும் சுறுசுறுப்பா யாருக்காவது ஏதாவது வாங்கிவந்து கொடுத்துக்கிட்டுத்தானே இருக்கே. கடைசியிலே டிபனுக்குக் கடன் கேட்கிறியே?''

''ஒருத்தரும் டிப்ஸ தரலே. ரூமைக் காலி பண்ணும் போது தான் தருவாங்க போலிருக்கு.''

''ஆ, பெரிய டிப்ஸ்! பொழுதுக்கும் பெண்டாட்டி மாதிரி வேலே வாங்கிட்டு, போகும்போது பிச்சைக்காரத்தனமாக ஐம்பது காசு டிப்ஸ் தருவானுங்க, கஞ்சப் பசங்க! அந்த டிப்ஸ் யாருக்கு வேணும்?'' என்று அலட்சியமாகச் சொன்ன தியாகு, ''செய்யற வேலேக்கு உடனே கூலி எடுத்துக்கணும்!'' என்றுன்.

''ஒரு பயலும் தரமாட்டேங்கருனே?''

''அவனுங்க தர மாட்டானுங்க. அதனுலேதான் நாம் எடுத்துக்கணும்னு சொன்னேன். டீ வாங்கிட்டு வர்றியா, அஞ்சு காசு எடுத்துக்க. காப்பியா பத்துக் காசு எடுத்துக்க. டூத் பேஸ்ட்டா அம்பது காசு அமுக்கு. தேங்காய் எண்ணெய் வாங்கிட்டு வரணுமா, புட்டிக்கு ஐம்பது காசு தனியா வாங்கிடு. இது தவிர, விஸ்கி, பிராந்தி வாங்கிட்டு வரச் சொல்லுவாங்க. வாங்கிட்டு வந்து கொடுத்தா, தினம் நாற்பது, ஐம்பது கிடைக்கும்!''

தியாகு பைக்குள்ளிருந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான். ''போ, திருப்தியாகச் சாப்பிட்டுட்டு வா. இன்னிக்கு என் செலவா இருக்கட்டும்!''

முதல் நாள் இரவு 'போலீசார்' பஸ்ஸை நிறுத்தித் தன்னே விசாரித்ததிலிருந்து, ருக்கு வீட்டில் இல்லே என்பதை கோபால் தெரிந்து கொண்டிருந்தான்.

அவளேக் கடத்தி வந்துவிட்டதாக மாமா அவன்மேல் புகார் கொடுத்திருந்தது அவனுக்குப் பிடிக்கவில்லே.

அவன் குணம் அவருக்குத் தெரியாதா? அவன் அப்படிச் செய்யக் கூடியவனு? அவர் ருக்குவை வேறிடத்தில் கொடுக்கப் போவதாகச் சொன்ன போதுகூட, அவன் உயிரை இழந்தது போல் துன்பப்பட்டானே தவிர, அவருடைய இஷ்டத்துக்குக் குறுக்காக நிற்காமல் ஒதுங்கிக் கொள்ளத்தானே செய்தான்? அது ஏன் மாமா வுக்குப் புரியவில்லே?

ருக்குவுக்கு அப்படியெல்லாம் வீட்டை விட்டு ஓடிப் போகக் கூடிய பெண்ணல்ல. மாரியப்பன் அவளை மறைத்து வைத்துக் கல்யாணத்தை நிறுத்தப் பார்க்கிறான். இரண்டு நாட்கள் கழித்து வீட்டுக்குக் கூட்டிப் போவான்.

அப்படித்தான் கோபால் நினைத்தான்.

அன்று மதியம் ஏதோ வேலையாக மயிலாப்பூர் சென்றவன், மறந்து விட்டுவிட்டுப் போன தனது ஷேவிங் செட்டை எடுப்பதற்காக நேரு போட்டோ ஸ்டுடியோவுக்குப் போனான்.

அவனைக் கண்டதும் புதிய போட்டோகிராபர் பெரிதாக வரவேற்றார். ''என்னண்ணே, இன்னிக்குப் பூரா உங்களைத் தேடி ஆட்கள் வந்துட்டே இருக்காங்க!''

''என்னைத் தேடியா! யார் வந்தாங்க?''

''முதல்லே ஒரு பையன் வந்தான். பதினைந்து வயசிருக்கும். காரைக்குடியிலேர்ந்து நீங்க வ்ந்துட்டீங்களான்னு கேட்டான். இங்கே வர மாட்டீங்க; புது ஸ்டுடியோவுக்குப் போவீங்கன்னு சொன்னேன். புது ஸ்டுடியோ எந்த இடத்திலேன்னு கேட்டான். எனக்குத் தெரியலே. வீடு எங்கே இருக்குதுன்னு கேட்டான். அதுவும் தெரியலே; போயிட்டான்.''

கோபால் குழம்பினான்.

பதினைந்து வயதுப் பையன் யாராயிருக்கும்? வீட்டை விசாரித்திருக்கிறானே! அவன் காரைக்குடிக்குப் போன விஷயத்தைத் தெரிந்து வைத்திருக்கிறானே! காரைக்குடிக்குப் போவதாக கோபால் இங்கே யாரிடமும் சொல்லவில்லையே!

மாரியப்பன்தான் வந்திருப்பானோ? ருக்குவை யார் வீட்டிலேயாவது ஒளித்து வைத்துவிட்டு அவனிடம் ஆலோசனை கேட்பதற்காகச் சென்னைக்கு வந்திருப்பானோ?

''சரி, அப்புறம் யார் வந்தது?''

''ஒரு பொண்ணு வந்துச்சு.''

திடுக்கிட்டான் கோபால். ''பொண்ணு! உஷாவா?''

''வேற பொண்ணு. பதினேழு, பதினெட்டு வயசிருக்கும்.''

''ஆள் எப்படி இருந்துச்சு?''

''முதல்லே வந்த பையன் மாதிரி ஒரு சாயல் தெரிஞ்சுது.''

வந்தவள் ருக்குதான்!

''பையனும் பொண்ணும் சேர்ந்துதானே வந்தாங்க?''

''இல்லீங்க. முதல்லே பையன் வந்தான். அஞ்சு நிமிஷம் கழிச்சுப் பொண்ணு வந்துச்சு. பையன் வந்துட்டுப் போனான்னு தெரிஞ்சதும் படபடன்னு இறங்கி ஓடுச்சு.''

இப்போதுதான் கோபால் ரொம்ப ஆச்சரியப்பட்டான்.

ருக்குவும் மாரியப்பனும் அவனைத் தேடிச் சென்னைக்கு வந்திருக்கலாம். ஆனால், சேர்ந்து வராமல், தனித்தனியாக வந்தார்

களாமே, ஏன்?

அவர்கள் தொலைந்துபோய், ஒருவரையொருவர் தேடிக் கொண்டிருக்கிறார்களோ?

பதற்றத்தோடு எழுந்தான் கோபால்.

''மீதியையும் கேட்டுட்டுப் போங்கண்ணே. அப்புறம் ரெண்டு பேர் வந்தாங்க.''

''யார் அவங்க?''

''யாருன்னு சொல்லலை. ஒருத்தரைப் பார்த்தா பணக்காரர்னு தெரிஞ்சுது. நிறைய மோதிரம் போட்டிருந்தார். அதிகாரமாகப் பேசினார். முப்பது வயதிருக்கும். இன்னொருத்தரைப் பார்த்தா ஏழைன்னு புரிஞ்சது. ஐம்பது வயசிருக்கும். ரெண்டு பேருமே கண்ணாடி போட்டிருந்தாங்க.''

கோபாலுக்கு விளங்கிவிட்டது.

ருக்குவையும் மாரியப்பனையும் தேடி சுந்தரமூர்த்தியும் நடேசனும் வந்திருக்கிறார்கள்!

''இனிமே யார் வந்து கேட்டாலும் சரி, என் ஸ்டுடியோவுக்கு வரச் சொல்லு. சத்தியா போட்டோ சென்டர், பிள்ளையார் கோவில் தெரு, மாம்பலம்,'' என்றபடி வேகமாக எழுந்து சென்றான் கோபால்.

பக்கத்து வாசலிலிருந்து ஒரு பூங்கை நீண்டது.

உஷா கண்ணீருடன் நின்றாள்.

''என் கண்ணீரைத் துடைக்க மாட்டீங்களா, கோபால்?''

''என்னை மன்னிச்சிடு, உஷா. தங்கைங்கற சொந்தத் தோட வா. என் உயிரை வேணும்னாலும் தறேன். வேறே உறவோட வராதே. நான் ஏற்கனவே இதயத்தாலே திருமணமானவன்!'' என்று சொல்லிவிட்டு, ஓடினான்.

அவனுக்கு அவசரம்.

அவனைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் ருக்குவையும் மாரியப்பனையும் கண்டுபிடித்தாக வேண்டும். அவர்கள் எப்படியும் மயிலாப்பூருக்குள்தான் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

கோபால் தேடத் தொடங்கினான்.



இரவு ஏழு மணிக்கு, பதினெட்டாம் நம்பர் அறையில் சீட்டாடிக்கொண்டிருந்த நாலு பேர் மாரியப்பனைக் கூப்பிட்டார்கள்.

''விஸ்கி கிடைக்குமா?''

''கிடைக்கும், சார்.''

''ஒரு ஃபுல் வேணும். என்ன விலை?''

தியாகுவிடம் போய்க் கேட்டான்.

''முழுசு எழுபது ரூபா, அரை முப்பதஞ்சு ரூபா, கால் இருபது ரூபா. எல்லா ரூமுக்கும் போய், யாராருக்கு விஸ்கி வேணும்னு கேளு. வேணும்ங்கிறவன் கிட்டக் காசை வாங்கிக்க. ஒரே தடவையிலே வாங்கிட்டு வந்துடலாம்.''

மாரியப்பன் ஒவ்வோர் அறையிலும் விசாரித்தான். மொத்தம் இரண்டு முழு பாட்டில்களுக்கு ஆர்டர் கிடைத்தது.

தியாகு மாரியப்பனை அழைத்துக்கொண்டு நீளமாகப் போனான். ''இப்போ நாம் வாங்கப்போற ரேட் வேறே. முழுசு அறுபது ரூபா, அரை முப்பது ரூபா, கால் பதினேழு ரூபா. நீ வாங்கப் போற ரெண்டு பாட்டிலுக்கும் இருபது ரூபா கிடைக்கும். இது வியாபாரம். இதுதவிர, ரூம் பாய் என்கிற முறையிலே அவங்ககிட்டே இதுக்காக ஸ்பெஷல் டிப்ஸ் உடனே வாங்கிடணும். நாலு, அஞ்சு கேளு.''

''வாங்கிடறேன்!''

''அந்த வீடுதான். அடையாளம் வச்சுக்க.''

அதைப் பார்த்த மாரியப்பன் அயர்ந்து போனான்.

லைசென்ஸ் இல்லாத கள்ள மது வியாபாரம் எங்கோ இருண்ட குடிசையில் நடக்கும் என்று அவன் நினைத்தான். ஆனால், தியாகு ஒரு பங்களாவைக் காட்டினான்!

''இவ்வளவு பெரிய பணக்காரங்களா இந்தத் தொழில் பண்றாங்க?''

''அவங்களாலேதான் செய்யமுடியும்! அகப்பட மாட்டாங்க; அகப்பட்டாலும் பணத்தைக் கொடுத்துத் தப்பிச்சிடுவாங்க!''

வாசலில் காலவாளி நின்ருன்.

தியாகு அவனைப் பார்த்து சிநேகமாகச் சிரித்து, ஒரு ரூபாய் கொடுத்தான்.

காவலாளி சலாம் போட்டு உள்ளே அனுப்பினுன்.

கேட்டைத் தாண்டி, பங்களாவை நெருங்கினுர்கள்.

முகப்புக்கு முன்பாக ஒரு கார் நின்றது. பக்கத்திலேயே டிரைவர் காற்ருட உட்கார்ந்திருந்தார்.

''வணக்கம், சார்!'' என்ருன் தியாகு.

''தியாகுவா. அது யாரு புதுசு?''

''நம்ம பையன்தான். இன்னிக்குத்தான் நல்ல லாட்ஜிலே சேர்ந்திருக்கான். அவன் வந்து கேட்டாலும் கொடுங்க.''

''நம்ம கண்டிஷனெல்லாம் சொல்லிடு. நச்சு நச்சுன்னு ஓயாம வரக்கூடாது. ஒரு தடவைதான் வரணும்; வேண்டியதை வாங்கிட்டுப் போயிடணும். இப்போ எத்தனை வேணும், சொல்லு.''

''எனக்கு எட்டு அரை. அவனுக்கு நாலு அரை,'' என்று பணத்தை நீட்டினுன் தியாகு.

டிரைவர் வாங்கிக்கொண்டு பங்களாவுக்குள் நுழைந்தார். ஐந்து நிமிஷங்களில் புட்டிகளோடு வந்தார்.

எல்லாம் அரை புட்டிகள்.

தியாகு அவற்றை இடையைச் சுற்றி வரிசையாக வைத்து வேட்டியை இறுகக் கட்டிக்கொண்டான்.

மாரியப்பனும் அப்படியே கட்டிக்கொண்டான்.

இருவரும் நடந்தார்கள்.

''நடக்கும்போது கவனமா இருக்கணும், மாரி. இல்லேன்ஞ புட்டி நழுவிடும்!'' என்று எச்சரித்தான் தியாகு.

''இனிமே யாரும் விஸ்கி கேட்டா என்ன பண்றது? அடிக்கடி வரக்கூடாதுன்னு டிரைவர் சொன்ஞரே?''

''அதுக்காகத்தான் நான் என் கைப்பணத்தைப் போட்டு, நாலு அரை எக்ஸ்ட்ராவா வாங்கியிருக்கேன். யாரும் கேட்டா என் கிட்டே வா. லாபத்திலே பாதிப் பாதி. என்ன?''

''ரொம்ப நன்றி, தியாகு!'' மனமாரச் சொன்ஞன் மாரியப்பன்.

எதிர்ச் சாரியில் ருக்கு போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. ''ருக்கு!'' என்று கூவிக் கொண்டே குறுக்கே பாய்ந்தான்.

''பஸ்! பஸ்!'' என்று அலறியபடி ஒரு கை வெடுக்கென்று

அவனைப் பற்றி இழுத்தது.

அதே கணம் ஒரு பஸ் கோபாலின் முகத்தை உராய்ந்து கொண்டு சென்றது.

கோபால் திரும்பிப் பார்த்தான்.

ஓர் இளைஞன் நின்றான். டிப்டாப்பான டிரஸ். நறுக்கென்ற மீசை. சிரித்த முகம்.

''என்ன சார், பஸ் வர்றதைப் பார்க்காமல் குறுக்கே பாயறீங்க?''

''என் மாமன் மக போகுது, சார்!''

''மாமன் மகள்னாலே எல்லாருக்கும் ஒரு மஜாதான்; மனசு வெள்ளாவி வச்ச துணி மாதிரிப் பளிச்சுன்னு சிரிக்குது! பாதையைப் பார்த்துப் போங்க. கண்ணிலே பட்ட மாமன் மகளைக் கையிலே தொடறதுக்குள்ளே பஸ்காரன் உங்களைப் பெட்டி போட்டுடப் போறான்!'' என்று சிரித்தான் அவன்.

நின்று பேச நேரமில்லாமல் கோபால் ஓடினான்.

அந்தப் பெண் ருக்கு அல்ல.

அப்புறம்தான், தன்னைக் காப்பாற்றியவருக்கு ஒரு வார்த்தை நன்றி சொல்லாமல் வந்துவிட்டோமே என்று கோபாலுக்குத் தோன்றியது. திரும்பி வந்தான்.

''என்ன சார், மாமன் மகளோட பேசாம வந்துட்டீங்க?''

''அது வேறே யாரோ பொண்ணுங்க. நல்ல வேளை, என் உயிரைக் காப்பாத்தினீங்க! ரொம்ப நன்றி! உங்க பேர்?''

''சிக்ஸ் பேஸ். ஆறுமுகம்.''

''என் பேர் கோபால். மாம்பலம் பிள்ளையார் கோயில் தெருவிலே போட்டோ ஸ்டூடியோ வச்சிருக்கேன். நீங்க என்ன பண்றீங்க?''

''வேளா வேளைக்கு நல்லா சாப்பிடுவேன். ஜோரா டிரஸ் பண்ணிக்குவேன். ஜாலியா ஊர் சுத்துவேன். தற்போதைக்கு அதான் தொழில்!'' ஆறுமுகம் சிரித்தான்.

''வாங்க, ஒரு காப்பி சாப்பிடலாம்,'' என்று கோபால் அழைத்துக்கொண்டு போனான்.

ஆறுமுகம் பணக்காரனாகத் தோன்றினாலும் பழகுவதற்கு எளிமையாய் இருந்தான்.

''உங்களுக்கு இதே ஊர்தானா?'' ஆறுமுகம் விசாரித்தான்.

''இல்லிங்க. காரைக்குடி.''

''காரைக்குடின்னாலே எனக்கு ஒரு கிக் வந்துடும்! அங்கே தான் எனக்குப் பொண்ணு எடுத்திருக்கு.''

''அப்படியா! அங்கே யார் வீடு?''

''சொன்னா உங்களுக்குத் தெரியாது. இப்போ அங்கே

யாருமில்லை. நீங்க இங்கே வந்து எவ்வளவு நாளாகுது?''

''நானும் எங்கம்மாவும் வந்து ஒரு வருஷமாகுது.''

''பின்னே உங்க மாமன் மகள்ளாம் இங்கே இருக்குது?''

''அது ஒரு கதைங்க,'' என்று தொடங்கிய கோபால், ருக்குவும் மாரியப்பனும் தன்னைத் தேடிச் சென்னைத் தெருக்களில் அலைந்துகொண்டிருப்பதையும், தான் அவர்களைத் தேடிக் கொண்டிருப்பதையும் சொன்னான்.

''அடாடாடா! பரிதாபமாயிருக்கே! வயசுப் பொண்ணு மெட்ராஸ்லே தனியா அலையறதாவது! காலிப் பசங்க நிறைஞ்ச ஊராச்சே!'' என்று பரிதாபப்பட்ட ஆறுமுகம், ''வாங்க, நானும் வறேன். சேர்ந்து தேடுவோம்,'' என்று புறப்பட்டான்.

''நீங்க எதுக்கு பாவம்...''

''கழுதையா அலையறதுதான் என் வேலை. அதைக் காரியமா அலையறேனே!''

இருவரும் கால் நடையாகப் புறப்பட்டார்கள்.



18

மாலை ஆறரை மணி இருக்கும். இருள் கவியத் தொடங்கியிருந்தது.

அந்த பஸ் ஸ்டாப் கலகலப்பாயிருந்தது. நிமிஷத்துக்கொரு பஸ் வந்து நின்றது. பயணிகள் இறங்குவதும் ஏறுவதுமாயிருந்தார்கள். தெருவே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

பஸ் ஸ்டாப்பின் ஒரு மூலையில், எவ்விதப் பரபரப்புமில்லாமல், களைத்துப்போய் உட்கார்ந்திருந்தாள் ருக்கு.

பகல் முழுதும் நடந்து நடந்து பாதங்கள் புண்ணாகியிருந்தன. கால்கள் வீங்கியிருந்தன. எல்லாத் தெருக்களிலும் மக்கள் நிறைந்திருந்தார்கள். ஆனால், அவள் அத்தானையும் தம்பியையும் மட்டும் காணவில்லை.

பசி வயிற்றைக் குடைந்தது. அவளிடம் பணம் இருந்தது. ஆனால், சாப்பிடப் பிடிக்கவில்லை. சாப்பிடுவதால் மட்டும் அவளது பிரசினைகள் தீர்ந்துவிடுமா?

அப்போதுதான் யதேச்சையாக அந்த உருவம் அவளது பார்வையில் பட்டது.

நீலச் சட்டை, நாலு முழு வேட்டி, ஒல்லியான உடல்... அவள் இருந்த பஸ் ஸ்டாப்பைக் கடந்து போய்க்கொண்டிருந்தான்.

ருக்கு வாரிச் சுருட்டுக்கொண்டு எழுந்தாள். ''மாரி!'' என்று மகிழ்ச்சியோடு கூவிக்கொண்டே ஓடி அவனைத் தொட்டாள்.

அவன் திரும்பிப் பார்த்தான்.

அவள் முகம் மாறிவிட்டது. ''கோவிச்சுக்காதேப்பா. சட்டையைப் பார்த்து, என் தம்பியாக்கும்னு நினைச்சுட்டேன்.''

சோர்வோடு மீண்டும் பழைய இடத்துக்கே திரும்பியவள் மேல் குபீரென்று முகத்தில் வெளிச்சம் அடித்தது.

கண்கள் பார்க்க முடியாமல் தவிக்க, அவள் சிலையாய் நின்றாள்.

ஏதோவொன்று அவளைத் தூக்கி எறிந்தது.



கார் இஞ்சின் ஓசை கேட்டுக் கண் விழித்தாள் ருக்கு.

சுகமான மெத்தையில் படுத்திருப்பது தெரிந்தது. அது மேலும் கீழும் அசைவதும் பக்கவாட்டில் திரும்புவதும் தெரிந்தது.

சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

ஓடும் காரின் பின் சீட்டில் இருப்பதை உணர்ந்தாள்.

''என்னம்மா, ரொம்ப அடிபட்டுடுச்சா?'' என்று ஒரு பெண் குரல் வினவியது.

அந்தக் குரலிலிருந்த கனிவும் குழைவும் ருக்குவைக் கவர்ந்தன.

''இல்லேம்மா. அடியொண்ணும் படலே.''

''ஆண்டவன் காப்பாத்திட்டான்!'' என்று பெருமூச்சு விட்டவள், ''ஏம்மா அவ்வளவு அவசரமா ஓடி வந்தே?'' என்று கேட்டாள்.

''என் தம்பி மாதிரி ஒரு பையன் போனான். தம்பிதான்னு ஓடிப் போய்ப் பார்த்தேன். ஆனால் தம்பியில்லே. ஏதோ நினைப்புலே திரும்பறப்போ உங்க கார் வர்றதைப் பார்க்கலே...''

கார் ஒரு பங்களாவுக்குள் நுழைந்தது.

''வாம்மா,'' என்று அன்போடு அழைத்துக்கொண்டு சென்றாள் அவள்.

கூடத்தில் சோபாக்கள் கிடந்தன.

அவள் ஒரு சோபாவில் உட்கார்ந்துகொண்டு, ருக்குவுக்கு ஒரு சோபாவைக் காட்டினாள்.

அவளுக்கு ஐம்பது வயதாவது இருக்கும். புஷ்டியான சிவந்த உடம்பு. ஆங்காங்கே பிதுக்கங்கள் தெரிந்தன. தலையில் சமா தான நிறம் படிந்திருந்தது. முடியைக் கழுத்தளவோடு வெட்டிக் கொண்டிருந்தாள். வட்டமான முகத்தில் தங்க பிரேம் மூக்குக் கண்ணாடி தனிச் சிறப்போடு உட்கார்ந்திருந்தது. சிரிக்கும்போது பளீ ரென்று பல் வரிசையும் ஆரோக்கியமான ஈறுகளும் தெரிந்தன. மிகச் சுத்தமான வெள்ளை வாயில் புடவையும் வெள்ளை ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். நகை நட்டு எதையும் காணோம். பணக்கார விதவை என்று பார்த்ததுமே புரிந்தது.

ருக்கு மரியாதையாகத் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

''நல்லாக் கவனிச்சுப் பார்த்து, எங்காவது காயம் பட்டிருந் தாச் சொல்லும்மா. போன் பண்ணி டாக்டரை வரவழைக்கி றேன்.''

''நல்ல காலமா அடிபடலேம்மா.''

டிரைவர் பெரிய பெரிய பார்சல்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனார்.

மூதாட்டி அன்புடன் ருக்குவின் தலையைக் கோதினாள். ''நல்ல பொண்ணா இருக்கே. யார் நீ?''

''என் பேர் ருக்கு.'' தன் கதையைக் கூறினாள் ருக்கு.

''சே! ரொம்பப் பரிதாபமா இருக்கும்மா உன் கதை! ஆனாலும் உனக்கு நிறைய அதிர்ஷ்டம் இருக்கு! நேத்து தூக்குக் கயத்திலேருந்து தப்பியிருக்கே; இன்னிக்குக் கார் சக்கரத்தி லேருந்து தப்பியிருக்கே! எப்படியும் உன் அத்தானுடன் சேர்ந்துடுவே. உன் அத்தானையும் தம்பியையும் ரெண்டு நாள்லே கண்டுபிடிச்சுடலாம். அதுவரைக்கும் நீ இங்கேயே இருந்துக்க.''

''சரிம்மா.''

''ஒரு விஷயம். என்னை அம்மான்னு கூப்பிடாதே! ஏராளமா சொத்து இருந்தும் எனக்குன்னு பிள்ளையில்லே. உறவு காரங்க பிள்ளைகளையெல்லாம் எடுத்து வளர்க்கிறேன். எல்லாரும் என்னை ஆன்ட்டின்னுதான் கூப்பிடறாங்க. நீயும் அப்படியே கூப்பிடு,'' என்ற ஆன்ட்டி, ''ஏ, குட்டிகளா! இங்கே வாங்க!'' என்று கை தட்டிக் கூப்பிட்டாள்.

அவள் கூப்பிடுவதற்காகவே காத்திருந்தவர்களைப் போல் நான்கு பெண்கள் மாடியிலிருந்து ஓடி வந்தார்கள்.

எல்லாருமே சின்னப் பெண்கள். பதினைந்திலிருந்து இருபதுக்குள் வயதிருக்கும். ஆன்ட்டியைச் சூழ்ந்துகொண்டார்கள்.

''ஆன்ட்டி, நான் கேட்ட ஜ்யார்ஜெட் சாரி வாங்கிட்டு வந்தீங்களா?''

''சாரிடி, மருமகளே! அது கிடைக்கலே. அதைவிட பெட்டர் குவாலிட்டி வாங்கிட்டு வந்திருக்கேன்! பார்,'' என்று ஒரு ஜவுளிக் கடைப் பார்சலை எடுத்துக் கொடுத்தாள் ஆன்ட்டி.

''ஆன்ட்டி, எனக்கு மூன் ட்ராப்ஸ் ஸ்ப்ரே கேட்டேனே?'' என்று இன்னொருத்தி கேட்டாள்.

''வாங்கிட்டு வந்திருக்கேன். ஒரிஜினல்!''

ஒவ்வொருத்திக்கும் ஆன்ட்டி ஒவ்வொன்று வாங்கி வந்திருந்தாள்.

''நைஸ் ஆன்ட்டி!'' என்றபடி ஆன்ட்டியை ஆளுக்கொரு பக்கமாக முத்தம் கொடுத்தார்கள்.

பிள்ளையில்லாத ஆன்ட்டி அந்த முத்தங்களில் பூரித்துப் போனாள். ''கிஸ் பண்ணியே ஆளை மயக்கிடுவாளுங்களே! போக்கிரிக் குட்டிங்க!'' என்று சிரித்தாள்.

மகிழ்ச்சியும் சிரிப்பும் நிறைந்திருந்தன அங்கே.

''இவங்கல்லாம் யார் ஆன்ட்டி?'' என்று ருக்கு கேட்டாள்.

''எல்லாரும் உறவுக்காரக் குழந்தைகள்தான். என் உறவுக் காரங்க எல்லாருமே ஏழைகள். நான் ஒருத்திதான் பணக்காரனைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இந்தப் பணத்தாலே இனி எனக்கு என்ன பிரயோசனம்? எனக்குத்தான் குழந்தையே இல்லையே! அதான் இவங்களை வளர்த்துக்கிட்டிருக்கேன்,'' என்ற ஆன்ட்டி, ''ரைட், எல்லாரும் போய்ப் படிங்க. பேபி, நீ மட்டும் இரு,'' என்று கட்டளையிட்டாள்.

ஒருத்தி மட்டும் இருக்க, மற்றவர்கள் மாடிக்கு ஓடினார் கள்.

''பேபி, இவ பேர் ருக்கு. இவளைக் குளிக்கவச்சு, சாப்பிட வை. வேறே டிரஸ் கொடு.''

ருக்கு ஆனந்தமாகக் குளித்தாள்; பேபி கொடுத்த சேலை யையும் ஜாக்கெட்டையும் அணிந்துகொண்டாள்.

சமையல்கார அம்மாள் மணக்க மணக்கக் கோழிக் குருமா வைத்து, சுள்ளென்று கருவாட்டுக் குழம்பும் வைத்திருந்தாள்.

ருக்கு வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டுக் கூடத்துக்கு வந்தாள்.

அவள் மனம் நிம்மதியாயிருந்தது.

இறைவன்தான் எவ்வளவு கருணையுள்ளவன்! இன்றிரவு சென்னைத் தெருக்களில் எப்படிப் பொழுதைக் கழித்துப் போகிறோம் என்று பயந்து செத்துக்கொண்டிருந்தவளுக்கு எவ்வளவு பாது காப்பான இடத்தை வழங்கியிருக்கிறான்!

ஆன்ட்டி இன்னும் கூடத்து சோபாவில்தான் சாய்ந்திருந் தாள்.

ருக்கு அவளை நன்றியுடன் பார்த்து முறுவலித்தாள்.

''திருப்தியாகச் சாப்பிட்டியா?''

''சாப்பிட்டேன், ஆன்ட்டி!''

''சரி, மாடிக்குப் போய், பேபியின் ரூமிலே தூங்கு.''

''சரி, ஆன்ட்டி!'' என்ற ருக்கு நிம்மதியாகப் படியேறிப் போனாள்.

சுந்தரமூர்த்தி தனது அறையில் சோர்ந்து போய்ப் படுத்திருந்தான்.

அவன் மனம் வெந்துகொண்டிருந்தது.

ஒரு பெண்ணை நியாயமான முறையில் மணந்துகொள் வதற்குக்கூட எத்தனை இடையூறுகள்!

எல்லாம் அந்தக் கிழவன் நடேசனால் வந்த வினை! சண்டாளப் பயல் பணத்துக்கு ஆசைப்பட்டு, மகளுக்கும் மகனுக்கும்

சொல்லாமலே காரியங்களை நடத்தியிருக்கிறான்! கடைசி நேரத்தில் எப்படியோ பெண்ணுக்குத் தகவல் கிடைத்து, தம்பியுடன் கம்பி நீட்டிவிட்டான்!

காலையில் தாலிகட்டி, இந்நேரம் ஆனந்தமாக முதலிரவு கொண்டாடிக்கொண்டிருக்க வேண்டியவன் இப்படித் தன்னந் தனியனாகச் சோர்ந்து போய்க் கிடக்கிறான். எவ்வளவு பணச் செலவு, எவ்வளவு மனக் கவலை, எவ்வளவு மானக் கேடு!

அவனை இந்தக் கோலத்துக்கு ஆளாக்கிய அந்தக் குட்டிருக்குவோ, அந்தப் பயல் மாரியப்பனோ இப்போது கையில் சிக்கினால், பீஸ் பீஸாகக் கிழித்து விடுவான்!

மன உளைச்சல் தாளாமல், காரை எடுத்துக்கொண்டு கிளம்பினான். ராஜம்மா வீட்டுக்குப் போனால்தான் கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்.

சுந்தரமூர்த்தியைக் கண்டு ராஜம்மா வெகுவாக ஆச்சரியப் பட்டாள். ''என்ன தம்பி, இது! புது மாப்பிள்ளையா காரைக் குடியிலே இருக்கவேண்டியவன் இங்கே வந்து நிக்கிறே!''

''அதை ஏன் கேட்கிறே? பெரிய கண்றாவி!'' என்று சூள் கொட்டிக்கொண்டே பொத்தென்று சோபாவில் சாய்ந்தான் சுந்தர மூர்த்தி.

''என்ன ஆச்சு?''

''கல்யாணம் நின்னு போச்சு! மானம் போச்சு! அந்த இழவை மறக்கத்தான் இங்கே வந்தேன். நீயும் அதையே கிளப் பாதே! இப்போ என் சந்தோஷத்துக்கு என்ன வச்சிருக்கே? சொல்லு.''

ராஜம்மா உள்ளே போய் ஒரு பாட்டில் ஜானி வாக்கரும் ஃப்ரிஜ்ஜிலிருந்து இரண்டு பியர் டின்களையும் கொண்டு வந்தாள். சமையல்காரியை அழைத்து ஒரு கிளாஸ் டம்ளர் கொண்டுவரச் சொல்லிவிட்டு, உடனே சில்லி சிக்கன் பொரிக்க உத்தரவிட்டாள்.

சுந்தரமூர்த்தி விஸ்கியையும் பியரையும் கலந்து ஆசையோடு குடிக்கத் தொடங்கினான்.

''சில்லி சிக்கன் சீக்கிரம் ரெடியாகட்டும்! வேறே என்ன இருக்கு?''

''மீனு இருக்கு.''

''பொரிச்சதா, குழம்பு வச்சதா?''

''நான் மீனுக் குட்டியைச் சொன்னேன்பா.''

''மீனா அது? கருவாடு! சே!''

''வயசு இருபதுதான்பா.''

''ஆனா, நாற்பது வருஷ சர்விஸ் ஆயிடுச்சே! வேறே ஏதாவது...?''

''ஆ! நீ தோட்டத்துப் பிஞ்சுக் கத்திரிக்கா தின்னுருக்கியா?''

''என் பங்களாவிலேயும் கத்தரிச் செடி இருக்கு; சொல்லு.''

''மார்க்கெட்லே வாங்கறது எப்படிப் பார்த்தாலும் நாலு கை பட்டுக் கசங்கியிருக்கும்; லாரியிலே அடிபட்டுக் கன்னிப் போயிருக்கும். ஆனா, தோட்டத்துக் காய் அடிபடாம, புதுசா, இளசா இருக்கு! அப்படி ஒரு பொண்ணு வந்திருக்கு; ருசி பார்க்கிறியா?''

சுந்தரமூர்த்தி உற்சாகமானான். ''இவ்வளவு நேரம் சொல்லவேயில்லையே! கூப்பிடு, கூப்பிடு!''

''ஆனா, அவ மீனு இல்லே; முதலே! மசியமட்டா!''

''நான் திமிங்கலத்தையே மசிய வைப்பேன்! வரச் சொல்லு.''

''அவசரப் படாதே, தம்பி. விஷயத்தை நல்லாக் கேட்டுக்க. அப்புறம் என் மேலே குறை சொல்லக்கூடாது. அவ நல்ல குடும்பத்துப் பொண்ணு. இடம் தெரியாம இங்கே வந்து மாட்டிக் கிட்டிருக்கா. இதுவரை அடிபடலே. ரொம்பப் புதுசு. இதுதான் முதல் தரம். முரண்டு பண்ணுவா. சமாளிப்பியா?''

''சமாளிப்பேன்!''

''எனக்கு எவ்வளவு தருவே?''

''ஐந்நூறோ, ஆயிரமோ வாங்கிக்கயேன். ஏன் பறக்கிறே?''

''எனக்குப் பணம் முக்கியம், தம்பி!'' என்ற ராஜம்மா, ''பேபி'' என்று கூப்பிட்டாள்.

''என்னது, தோட்டத்துச் சரக்குன்னு சொல்லிட்டு, சந்தைச் சரக்கைக் கூப்பிடறே!''

''அவசரப்படாதே! பேபி ரூம்லேதான் அவ இருக்கா. பேபியை வரவழைச்சுட்டா அவ தனியாயிடுவா.''

பேபி இறங்கி வந்தாள். சுந்தரமூர்த்தியைப் பார்த்துச் சிரித்தாள். ''உங்க கார் ஹார்ன் சப்தம் கேட்டதுமே நினைச்சேன். எனக்கு அழைப்பு வரும்னு!'' என்று சொல்லிக்கொண்டே அவன் மடியில் உட்கார்ந்தாள்.

ராஜம்மா சிரித்தாள். ''தம்பிக்கு இன்னிக்கு வேறே ஜோடி. அந்தப் புதுப் பொண்ணு ருக்கு!''

''ருக்குவா!'' சுந்தரமூர்த்தி புருவங்களை நெறித்தான். ''யாரது ருக்கு?''

''யாருக்குத் தெரியும்? மாப்பிளை பிடிக்காம, தம்பியைக் கூட்டிக்கிட்டு அத்தான் வீட்டுக்கு வந்தாளாம். தம்பியையும் காணோமாம், அத்தான் இருக்கிற இடமும் தெரியலையாம். ஏதோ சொன்னா.

நீ இங்கேயே இரு; அவங்களைக் கண்டுபிடிச்சுத் தரேன்னு பொய் சொல்லி உட்கார வச்சிருக்கேன்.''

''ஆஹா!'' என்று சிலிர்த்து எழுந்தான் சுந்தரமூர்த்தி.

''என்ன தம்பி?''

''இவதான் நான் பேசியிருந்த பொண்ணு! இவ ஓடி வந்ததாலேதான் என் கல்யாணம் நின்னு போச்சு! இவளைத்தான் என் ஆளுங்க தேடிக்கிட்டிருக்காங்க!''

''அப்படியா! வசமான இடத்திலேதான் வந்து சிக்கியிருக்கா! தம்பி, நீ தேடிக்கிட்டிருக்கிற பொண்ணைக் கண்டுபிடிச்சு, பாதுகாத்து வச்சிருந்து, உன் கையிலே ஒப்படைச்சிருக்கேன். எனக்கு ரெண்டாயிரமாத் தந்துடு.''


''ஓகே!'' என்று உற்சாகமாய்ச் சொன்னான் சுந்தரமூர்த்தி.

''பேபி, ருக்கு என்ன பண்ணிக்கிட்டிருக்கா?''

''புத்தகம் புரட்டிக்கிட்டிருக்கா.''

''நீ மாடிக்குக் கிளம்பு, தம்பி! எப்படியும் நீங்க ரெண்டு பேரும் இன்னைக்கு ராத்திரி ஒண்ணாயிருக்க வேண்டியவங்கதான். காரைக்குடியிலே நடத்த வேண்டிய முதலிரவை என் வீட்டிலே நடத்து!''

விஸ்கி உறிஞ்சிய வாயைப் புறங்கையால் துடைத்துவிட்டு, விசுக்கென்று எழுந்தான் சுந்தரமூர்த்தி.



ருக்கு சாவகாசமாக பேபியின் மேஜையிலிருந்த பத்திரிகைகளைப் புரட்டிக்கொண்டிருந்தாள்.

வயிற்றுப் பசி தீர்ந்த திருப்தியும் பாதுகாப்பான இடத்தில் இருக்கிற நிம்மதியும் அவளுக்கு அமைதியைக் கொடுத்தன. தூக்கம் கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்தது.

கண் மூடி முத்துமாரியம்மனை ஒரு கணம் தியானித்துவிட்டு எழுந்தாள்.

அறைக்குள் ஒரு கட்டில்தான் இருந்தது. இன்னொரு பெண்ணோடுகூடச் சேர்ந்து படுக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. கட்டிலுக்கு அருகே தரையில் படுத்துக்கொண்டாள்.

அப்போதுதான் ஓசைப்படாமல் அறைக்குள் நுழைந்தான் சுந்தரமூர்த்தி.

ருக்கு வாசலைப் பார்த்தபடிதான் படுத்திருந்தாள். ஆனால், கண்கள் மூடியிருந்தன.

சுந்தரமூர்த்தி வாசலில் நின்று ஆசைதீர அவளைப் பார்த்தான்.

அவன் அவளை ஒரு சில நிமிஷங்கள் திருவிழாக் கூட்டத்தில் பார்த்தான். இப்போதுதான் இவ்வளவு அருகாமையிலும் தனிமையிலும் பார்க்கிறான்.

ருக்கு இடது கையை மடித்துத் தலைக்கு வைத்துக்கொண்டு ஒருகளித்துப் படுத்திருந்தாள். பருத்துக்கிடந்த மார்பகங்களும் இறங்கி ஓடிய இடைச் சரிவும் குபீரென்று உயர்ந்த புஷ்டியான பின்னழகுகளும் பின்னர் தழைந்து சரிந்த தொடைப் பகுதிகளும் அவனுக்கு மயக்கமூட்டின.

அதே சமயம் அந்த அழகி தன்னை ஏற்றுக்கொள்ள மறுத்து ஓடிவந்து அவமானத்தை உண்டாக்கியவள் என்ற எண்ணம் எழுந்து ஆக்ரோஷத்தை ஏற்படுத்தியது.

அவள் அவனுக்கு மனைவியாக வேண்டியவள். அவள் பெற்றோர் அதற்கு உடன்பட்டு, அவனிடம் பணம் வாங்கியிருக்கிறார்கள். நாள் குறித்து, அழைப்பு அனுப்பி, திருமண ஏற்பாடுகள் அத்தனையும் செய்தாகிவிட்டது. அவள் ஏமாற்றிவிட்டு வந்துவிட்டாள். அவளை எப்படியும் அடைந்தேதீர வேண்டும். அதற்கு அவனுக்கு உரிமை இருக்கிறது.

ஒரு வெறியோடு கதவை மூடித் தாழிட்டான்.

அப்போதுதான் தூங்கத் தொடங்கியிருந்த ருக்குவை அந்தச் சின்ன ஓசை எழுப்பிவிட்டது. கண் திறந்து பார்த்தாள்.

யாரோ ஒரு வாலிபன் நின்றிருந்தான்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். ''யார் நீங்க?''

விஸ்கி போதையில் விகாரமாக இளித்தான் சுந்தரமூர்த்தி.

''என்னையா யார்னு கேட்கிறே! கேட்கமாட்டியா

பின்னே! கேட்டுக்க. லட்சக் கணக்கிலே வரதட்சணையோட வந்த பொண்ணுகளையெல்லாம் தட்டிக் கழிச்சிட்டு, சொத்துக்கே வழி யில்லாத உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக லட்சத்தைச் செலவு பண்ணின முட்டாள்! கூரை வீட்டிலே கிடந்த உன்னை மாடி வீட்டு மகாராணியா ஆக்கணும்னு ஆசைப்பட்ட மடையன்! சுந்தர மூர்த்தி!''

''நீங்களா!'' ருக்கு திகைத்தாள்.

''ஆமா, நானேதான். என்னை ஏமாத்திட்டு நீ எத்தனை நூறு மைல்தான் தாண்டி வந்தா என்ன? விதி விட்டுதா? சரியா என்கிட்டேயே கொண்டுவந்து சேர்த்துடுச்சு, பார்த்தியா! நீயும் நானும் சேரணும்ங்கிறது தெய்வ கட்டளை. இனிமே நீ எங்கேயும் ஓடமுடியாது!''

''ஐயா, நாள் உங்களைப் பார்த்ததேயில்லை. உங்களைக் கல் யாணம் பண்ணிக்க ஒரு நாளும் சம்மதிக்கவில்லை. அப்புறம் எப்படி நான் உங்களை ஏமாத்தினதாச் சொல்றீங்க?''

''உனக்குச் சம்மதம்னு சொல்லி உங்கப்பன் பத்தாயிரம் ரூபா ரொக்கம் வாங்கினானே!''

''அவர் உங்களை மோசடி பண்ணியிருக்கலாம். அதுக்கு நான் பொறுப்பாக முடியாது!''

''அப்பா செய்கிற முடிவுக்கு மகள் கட்டுப்பட்டுத்தான் ஆகணும். நீ எவனையோ கல்யாணம் பண்ணிக்கிறதுக்காகவா நான் இவ்வளவு பணம் செலவழிச்சேன்?'' என்று பாய்ந்து வந்தான் சுந்தர மூர்த்தி.

ருக்கு கட்டிலுக்கு மறுபுறம் ஓடினாள்.

''ஐயா, நான் சொல்றதைத் தயவு பண்ணிக் கேளுங்க. உங்க தகுதிக்கு எவ்வளவோ அழகான பொண்ணு கிடைப்பா. வீணா ஏன் வாழ்க்கையைப் பாழாக்கிடாதீங்க!

''உன்னாலே நான் இழந்த பணத்துக்கும் மானத்துக்கும் நீதான் பதில் சொல்லியாகணும். உன்னை அனுபவிக்காம விட மாட்டேன்!'' என்றபடி கட்டிலின்மேல் ஏறி, அவள் ஜாக்கெட்டின் பின்புறத்தைப் பிய்த்தான்.

ஜாக்கெட் கிழிந்து துண்டாகியது.

ருக்கு கட்டிலைச் சுற்றிக்கொண்டு மேசைக்கு ஓடினாள்.

அவன் பின்னாலேயே ஓடிவந்து அணைத்தான்.

அவள் நீண்ட பவுடர் டின்னால் அடித்தாள்.

அவன் அலட்சியமாக டின்னைத் தட்டிவிட்டு, அவள் மார்பில் கை வைத்தான்.

ருக்கு அவசரமாக மேசையின் மேல் பரப்பை ஆராய்ந்

தாள்.

அலங்காரப் பொருள்களுக்கு நடுவே ஒரு சிறு கத்திரி இருந்தது.

சட்டென்று அதைக் கையால் பற்றினாள். முழு பலத்தோடு அவன்மேல் பாய்ச்சினாள்.

வலி தாளாமல் ஊளையிட்டுக்கொண்டே அவன் கைகளை உதறினான்.

அவனது இடது புஜத்திலிருந்து மளமளவென்று ரத்தம் கொட்டியது.

''மரியாதையா இங்கிருந்து போயிடு. இல்லை, கண்ணிலேயே குத்துவேன்! கொலை செய்யக் கொஞ்சங்கூட யோசிக்க மாட்டேன்!'' என்று பத்ரகாளியாய்ச் சீறினாள் ருக்கு.

சுந்தரமூர்த்தி காயத்தைப் பொத்திக்கொண்டு பின்வாங்கினான். ''உன்னை எப்படி வழிக்குக் கொண்டு வறதுன்னு ராஜம்மாவுக்குத் தெரியும். இதே பங்களாவில் உன்னை ஆசை தீர அனுபவிக்காம விடமாட்டேன்! இது சத்தியம்!'' என்று சபதம் செய்துவிட்டுப் போனான்.

சற்றைக்கெல்லாம் பேபி வந்தாள். ருக்குவைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கீழே கொண்டுபோனாள்.

ஆன்ட்டி இன்னும் அதே சோபாவில்தான் உட்கார்ந்திருந்தாள்.

ஒருத்தி சுந்தரமூர்த்தியின் காயத்துக்கு முதலுதவிக் கட்டுப் போட்டுக்கொண்டிருந்தாள்.

அவன் ஆன்ட்டியிடம் கோபமாய் இரைந்துகொண்டிருந்தான். ''நீ என்ன செய்வியோ, ஏது செய்வியோ; எனக்குத் தெரியாது. நாளை ராத்திரி எட்டு மணிக்கு வருவேன். அந்த ருக்குக் குட்டி தானு வந்து என்னை பெட்ரூமுக்குக் கூட்டிட்டுப் போகணும்! இல்லை; இதே இடத்திலே அவளை ரேப் பண்ணுவேன். நீதான் அவளை அசையாமப் பிடிச்சுக்கணும்!''

''நீ கவலைப்படாதேப்பா. இன்னும் இருபத்து நாலு மணி நேரம் இருக்குதே! உடம்புத் தோலைக் கொஞ்சங் கொஞ்சமா உறிச்செடுத்து உப்பையும் கொஞ்சம் தேய்ச்சா, எந்தப் பத்தினியும் வேசியாயிடுவா! உடம்பு சுகத்தை விரும்பாமக்கூட இருக்கலாம்; வேதனையை வெறுக்காம இருக்கிறதில்லை. நீ முதல்லே டாக்டர்கிட்டப் போ. அது ஏதாவது துருப்பிடிச்ச கத்திரியா இருந்து, செப்டிக் ஆயிடப்போகுது!'' என்று கவலைப்பட்டாள் ஆன்ட்டி.

சுந்தரமூர்த்தி இன்னும் அரை கிளாஸ் விஸ்கி ஊற்றிக் குடித்துவிட்டு, தனது காரில் ஏறிப் போய்விட்டான்.

வெள்ளைப் புடவையணிந்து வெகு யோக்கியமாய்க் காட்சி

யளித்த ராஜம்மா அவன் மீதி வைத்துவிட்டுப் போன விஸ்கி பாட்டிலை எடுத்துக் கிளாஸை நிரப்பிக் குடித்தாள்.

அப்போதுதான் சமையல்காரி சில்லி சிக்கன் கொண்டு வந்தாள்.

அதில் ஒரு பச்சை மிளகாயை எடுத்து மென்றாள்.

சுள்ளென்று உறைப்பு இறங்கியதும் ஜிவ்வென்று போதை ஏறியது.

''பேபி.''

''ஆன்ட்டி.''

''போய், சின்னதை எடுத்துக்கிட்டு வா.''

பேபி உள்ளே போய் ஒரு சிறு சவுக்கோடு வந்தாள்.

அதைப் பார்த்தபோது ஒன்றும் ருக்குவுக்கு பயம் தோன்றவில்லை.

கூடைப் பாம்புபோல் சுருண்டிருந்த சவுக்கைக் கையில் பிடித்துக்கொண்ட ஆன்ட்டி, ''பேபி, அந்த நல்ல புடவையை அவிழ்த்திடு,'' என்றாள்.

பேபி ருக்குவின் புடவையை உரித்தாள்.

பெட்டி கோட்டும் கிழிந்த ஜாக்கெட்டுமாய் நின்றாள் ருக்கு. பெண்களுக்கு நடுவில்கூட அப்படி ஒரு கோலத்தில் நிற்க அவள் கூசினாள்.

ராஜம்மா அவளைக் கூர்ந்து பார்த்தாள்.

ஆண்களின் கைகளுக்குச் சவால் விடுவதுபோல் மார்புக் குருத்துகள் நிமிர்ந்து நின்றன. ஜாக்கெட்டுக்குக் கீழே வயிற்றுப் பிரதேசம் பசுமையாகவும் மென்மையாகவும் தோன்றியது. வலம்புரிச் சங்கின் சுழியைப் போல நாபிச்சுழி. துணியால் அவளது பின்னம் பாகங்களின் பருமனையோ, தொடைகளின் திரட்சிகளையோ மறைக்கமுடியவில்லை.

''சுந்தரமூர்த்தி உன்கிட்டே சொக்கினதிலே ஆச்சரியமில்லைதான். டிரஸ்ஸிலே இருக்கிறபோது தெரியாத பல அழகுகள் இப்போதுதான் தெரியுது. இந்த மிருதுவான உடம்பு புண்ணாப் போகிறதிலே எனக்குச் சம்மதமில்லை. ஆனாலும் உன்னை சுந்தரமூர்த்திக்குப் பக்குவப்படுத்திக் கொடுக்கிறது என் வேலை. என்ன சொல்றே?''

''நான் உன்னைப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெரிய மனுஷின்னு நினைச்சேன். நீ பொண்ணுகளைக் கூட்டிக்கொடுத்துப் பிழைக்கிற வேசி! நீ என்ன பண்ணாலும் சரி; உன் இஷ்டத்துக்கு இணங்கமாட்டேன்!''

ருக்கு சொல்லி முடிப்பதற்குள் படீரென்று சாட்டை

சுழன்றது.

இடுப்பைச் சுற்றிச் சுளீரென்று ஒரு வலி தோன்றியது.

''அம்மா!'' என்று அலறிக்கொண்டு ருக்கு கீழே விழுந்தாள்.

காற்றுப் படபட மெள்ள ஓர் எரிச்சல் எழுந்தது. பார்த்துக்கொண்டிருக்கையிலேயே ரத்தக் கோடு துளிர்ந்தது.

பேபி அவளைத் தூக்கி நிறுத்தினாள்.

கோபம் தாளாமல் ருக்கு சீறினாள். ''கிழட்டு நாயே! நீ ஒரு மனுஷியா!''

மீண்டும் சாட்டையின் சொடுக்கு. மீண்டும் கதறல் புரிய ரத்தக்கோடு ஜனனம்.

''இப்போதைக்கு இது போதும், ராத்திரி பூரா அவ யோசனை செய்யட்டும். சுந்தரமூர்த்தியை ஏத்துக்கிட்டு சொகுசா வாழப் போறாளா, இல்லை, சவுக்கடிபட்டே சாகப்போறாளான்னு அவளே முடிவு செய்யட்டும். பின் அறையிலே கொண்டுபோய்த் தள்ளுங்க. சம்மதம்னு சொல்றவரைக்கும் சாப்பாட்டுக்குப் பதிலா சவுக்கடி கொடுப்போம்!'' என்றவள் ருக்குவின் காயத்தின் மீது விஸ்கியை ஊற்றினாள்.

தீப் பற்றி எரிந்தது போல் துடித்தாள் ருக்கு.

பேபி அவளைப் பங்களாவின் பின்பக்கம் கூட்டிப் போனாள்.

சமையலறைக்கு நேர் எதிரே ஓர் அறை இருந்தது. வெறுமனே தாழ்போட்டிருந்த கதவுகளைத் திறந்து, ருக்குவை உள்ளே தள்ளி, வெளியே தாழ் போட்டுக்கொண்டு சென்றாள் பேபி.

ருக்கு விளக்கைப் போட்டுப் பார்த்தாள்.

அது ஓர் உபயோகமில்லாத அறை. பழைய மரச்சாமான்கள் ஒரு பக்கம் கிடந்தன. ஒரு பக்கம் நீண்ட கொடியில் அழுக்குத் துணிகள் வாரிப் போடப்பட்டிருந்தன. ஐந்து பெண்கள் இருந்த வீடாகையால் துணிகள் நிறையவே கிடந்தன.

ருக்குவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இந்த அப்பா எவ்வளவு கேவலமானவர்! அவளுக்கே தெரியாமல் அவளை எவனுக்கோ அடகு வைத்துப் பணம் வாங்கிக் கொண்டதால், எத்தனை பேர்கள் அவள் மேல் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்! எவனோ ஒருவன் கற்பழிக்க வருகிறான்! எவளோ ஒருத்தி சவுக்கால் அடிக்கிறாள்!

ஆனால் யார் என்ன செய்தாலும் அவள் அசையப் போவதில்லை. அடிபட்டு அடிபட்டே இறந்துபோக அவள் தயார்!

அவளுடைய சேலை கொடியில் கிடந்தது. அதை எடுத்துத் தரையில் விரித்துக்கொண்டு, விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தாள்.

சவுக்குக் காயம் வலித்தது. ஆனால், அதையும் மீறித் தூக்கம் அவளை ஆட்கொண்டது.



பொழுது மெள்ளப் புலர்ந்தது.

மரக்கிளைகளில் பறவைகள் கீச்சுக் கீச்சென்று கத்தின.

அப்போதுதான் பங்களா கேட் வழியாக ஒரு மூன்று சக்கர டெம்போ உள்ளே நுழைந்து, பங்களாவைச் சுற்றிக்கொண்டு பின் வாசலுக்குப் போய் நின்றது.

டெம்போவின் பின் கதவைத் திறந்துகொண்டு வள்ளி இறங்கினாள்.

அவள் அந்தப் பங்களாவின் சலவைக்காரி. தினமும் காலையில் வந்து சலவை உருப்படிகளைக் கொடுத்துவிட்டு, அழுக்குத் துணிகளை எடுத்துக்கொண்டு போவாள்.

சமையல்காரி அடுக்களை வாசலில் நின்றுகொண்டிருந்தாள்.

வாயாடி வள்ளிக்கு வாயில்லாப் பூச்சியான சமையல்காரியைக் கண்டால் கொண்டாட்டம்தான். வழக்கம்போல் வம்பு இழுக்கத் தொடங்கினாள்.

''என்னக்கா, காலங்காத்தாலே அசந்து போய் நிக்கிறே! ராத்திரியெல்லாம் ரொம்ப வேலையா?'' என்று கேட்டுக் கண்ணடித்தாள்.

''உனக்கென்னடி, புருஷன் பகல்பூரா ஊர் சுத்தினாலும் ராத்திரிக்கு டாண்ணு வீட்டுக்கு வந்து நின்னுடறான். உனக்கு ராத்திரி பூரா வேலை இருக்கும். அந்த மிதப்பிலே பேசறே! என்னைச் சொல்லு. அந்த மனுஷன் காசுதான் பெரிசுன்னு கடல் கடந்து

போயிட்டார். நான் கிடந்து தவிக்கிறேன்!'' என்று பெருமூச்சு விட்டாள் சமையல்காரி.

இனிமேல் கிண்டல் செய்தால், அவள் அழுதேவிடுவாள்!

வள்ளி வண்டிக்குப் போனுள்.

அறைக்குள் அடைபட்டிருந்த ருக்கு வள்ளியின் பேச்சைக் கேட்டதுமே ஆச்சரியப்பட்டாள். அந்தக் குரலை, அந்த பாவத்தை அவள் எங்கேயோ கேட்டிருக்கிருள். எங்கே?

ஆ! அவள் பக்கத்துத் தெரு வள்ளி. சலவைத் தொழிலாளியின் மகள். ருக்குவோடு படித்தவள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் திருமணமாகி இங்கே வந்தாள்.

அவளிடம் உதவி கேட்டால் எப்படியாவது இங்கிருந்து தப்ப முடியும். ஆனுல் அவளிடம் எப்படிப் பேசுவது?

சன்னல் வழியாகப் பார்த்தாள். பங்களாவின் பின்புறம் தான் தெரிந்ததே தவிர, வள்ளியைப் பார்க்க முடியவில்லை.

வள்ளி டெம்போவுக்கு வந்தபோது ருக்குவின் பார்வையில் சிக்கினுள்.

கிசுகிசுத்த குரலில், ''வள்ளி'' என்று கூப்பிட்டாள்.

வள்ளி திரும்பிப் பார்த்தாள். எங்கிருந்து, யார் கூப்பிடுகிருர்களென்று புரியவில்லை.

ருக்கு சன்னல் கம்பிகளுக்கிடையே கையை நீட்டிக் காட்டினுள்.

தயக்கத்தோடு அருகில் வந்தாள் வள்ளி.

''நான்தாண்டி ருக்கு!''

வள்ளி அவளை அங்கே பார்த்து ஆச்சரியப்பட்டாள். ''இது ஒரு தேவடியா வீடாச்சே! எப்படி நீ இங்கே?''

''எல்லாம் அப்புறம் சொல்றேன். முதல்லே நான் இங்கிருந்து தப்ப வழி பண்ணு.''

வள்ளி ஓரளவு புரிந்துகொண்டாள். அந்தக் கிழவி இவளை எப்படியோ ஏமாற்றிக் கூட்டி வந்து, விபசாரத்தில் ஈடுபடுத்தப் பார்த்திருப்பாள். இவள் இணங்கியிருக்கமாட்டாள். அறைக்குள் போட்டு அடைத்து வைத்திருக்கிருள். அந்த அறைக்குள் போய்த் தான் வள்ளி அழுக்குத் துணி எடுக்கவேண்டும்.

சற்றுமுன் சமையல்காரியிடம் பேசிக்கொண்டிருந்தபோது வள்ளி கவனித்திருந்தாள். ருக்கு இருந்த அறைக் கதவு பூட்டப் படாமல் வழக்கம்போல் வெறுமனே தாழிடப்பட்டுத்தான் இருந்தது.

''சமையல்காரிக்குத் தெரியாமல் கதவைத் திறந்து விடறேன். ஓசைப் படாம ஓடிப்போய் வண்டிக்குள்ளே மறைஞ்சுக்க.

வள்ளி சுற்று முற்றும் பார்த்தாள். யாரும் தென்படவில்லை.

ஓசைப்படாமல் தாழை நீக்கிக் கதவைத் திறந்தாள்.

தனது உடைகளை அணிந்துகொண்டு காத்திருந்த ருக்குடனே வெளியே ஓடி, டெம்போவுக்குள் நுழைந்துகொண்டாள்.

வண்டியை நெருங்கிய வள்ளி, ''அண்ணே, சீக்கிரம் வண்டியை எடு. யார் நிறுத்தினாலும் நிற்காதே! சல்லுன்னு பாய்க்கினே இரு!'' என்று சொல்லிவிட்டு வண்டிக்குள் ஏறிக்கொண்டாள்.

டெம்போ அனாயாசமாக ஒரு வட்டமடித்துத் திரும்பி, பங்களாவைக் கடந்து, கேட் வழியே வெளியேறி, தெருப் போக்குவரத்தோடு கலந்துவிட்டது.



கோபாலும் ஆறுமுகமும் முதல் நாளே திட்டமிட்டிருந்தார்கள்.

இருவரும் சேர்ந்து, முற்பகல் ஒரு பேட்டை, பிற்பகல் ஒரு பேட்டை என்று தேடி, ருக்குவையும் மாரியப்பனையும் கண்டுபிடிப்பது என்பதே அந்தத் திட்டம்.

அதன்படி, காலை ஏழு மணிக்கெல்லாம் லஸ்ஸுக்கு வந்துவிட்டான் கோபால்.

பத்து நிமிஷத்திற்கெல்லாம் ஆறுமுகம் பிரமாதமான பேண்ட்சும் சட்டையும் அணிந்துகொண்டு, கருப்புக் கண்ணாடி

மின்ன வந்து சேர்ந்தான்.

இருவரும் இரண்டு வாடகை சைக்கிள்களில் தெருத் தெ
வாய் வளைய வந்தார்கள்.

"ஏன் கோபால், அதோ, குழாயிலே ஒரு பொண்ணு
தண்ணி பிடிச்சுக்கிட்டிருக்கே; ருக்குவாயிருக்குமோ?"

"ருக்குவுக்கு ஏது குடம்? அது தண்ணி பிடிச்சுக்கிட்டிரு
காது. பசி தாங்காம தண்ணி குடிச்சுக்கிட்டிருக்கும்!" என்
கண்கலங்கினான் கோபால்.

முற்பகல் முழுவதும் நாயாய் அலைந்தும் எந்த
பலனுமில்லை.

"இவ்வளவு தேடியும் கண்ணிலே படலையே; ஒருவேளை
ஊருக்கே திரும்பிப் போயிட்டாங்களோ?" என்று ஆறுமுகம்
சந்தேகப்பட்டான்.

"எப்படிப் போகமுடியும்? ருக்கு கையிலே பணமிருக்காது
அக்காவைக் கண்டுபிடிக்காம மாரி ஊருக்குப் போகமாட்டான். அப்
படியே மாரி ருக்குவைக் கண்டு பிடிச்சிருந்தாலும், ரெண்டு பேரும்
சேர்ந்து என்னைத்தான் தேடிக்கிட்டிருப்பாங்க."

ஒரு தெருவில் ஆறுமுகம் திடீரென்று சைக்கிளை நிறுத்
தினான். "அஞ்சு நிமிஷம் இப்படியே நில்லுங்க. இதோ வந்துட
றேன்."

"என்ன விஷயம், ஆறுமுகம்?"

ஆறுமுகம் கையைக் காட்டினான்.

எதிர்ச்சாரியில் 'வள்ளியம்மை சலவை நிலையம்' இருந்தது.

"இதான் நம்ம வாடிக்கை லாண்டரி. டெய்லி சலவைத்
துணி கொண்டு வரவங்க ரெண்டு நாளா வரலை. எனக்கு வேளைக்கு
ஒரு தடவை டிரஸ் மாத்தணும். போய், ஒரு அதட்டுப் போட்டுட்டு
வறேன்."

ஆறுமுகம் கண்ணாடிக் கேசுக்குப் பின்னால் சென்றான்.

பின்னால் லாண்டரிக்கார வள்ளியின் வீடு இருந்தது.

கூலிங் கிளாஸைக் கழற்றிக் கையில் பிடித்தபடி உள்ளே
வந்த ஆறுமுகத்தைக் கண்டதும், அயர்ன் பண்ணிக்கொண்டிருந்த
வள்ளி ஆத்திரப்பட்டாள்.

"எந்த வீட்டிலே இந்த அக்கிரமம் நடக்கும்? பொம்பிளை
நான் உழைச்சு ஓடாத் தேயறேன்; நீ கொஞ்சங்கூடப் பொறுப்
பில்லாம, இப்படி ஊர் சுத்துறியே! சரி, சுத்தறதுதான் சுத்தறே;
உன் சொந்தத் துணியைப் போட்டுக்கிட்டு சுத்தப்படாது? அந்த
பேங்க் மேனேஜரோட சூட்டை மாட்டிக்கிட்டுப் போயிட்டே;
அந்தாள் வந்து உருப்படி எங்கேன்னு கேட்டுச் சத்தம் போட்டுட்டுப்
போறார்!"

''இந்தா புள்ளே, உன் தொணதொணப்பைக் கேட்க
ாக்கு இப்போ நேரமில்லே. ஒரு முக்கியமான ஃப்ரண்டோட, ஒரு
க்கியமான வேலையா அலையறேன்!''

''என்னைக்குத்தான் நீ வெட்டியா அலைஞ்சதாச் சொல்லி
ருக்கே? ஒரு முக்கியமான தாக்கல் சொல்லணும்னு உன்னை எவ்
ாவு நேரமா எதிர் பார்த்துக்கிட்டிருக்கேன்; காலையிலே
ாலைஞ்ச மனுஷன் இப்போ வந்து நிக்கிறியே!''

''இப்பவும் எனக்கு நேரமில்லே. வெளியே என் ஃப்ரண்ட்
த்துக்கிட்டு நிக்கிறுர். சீக்கிரம் ஒரு பத்து ரூபா கொடு.''

''நான் சொல்ற கதையைக் கேளுய்யா; ஆச்சரியப்பட்டுப்
ாவே! காலையிலே எம்மாம் பெரிய வேலே செஞ்சிருக்கேன்,
தரியுமா!'' என்று பெருமையோடு சொன்னுள் வள்ளி.

''உன் பிரதாபத்தை சாயங்காலம் வந்து கேட்டுக்கிறேன்.
ப்போ பணத்தை எடு.''

ஆறுமுகம் பணத்தை வாங்கிக்கொண்டு அவசரமாக
டினுன்.

காலை ஏழு மணிக்குக் கண் விழித்த ராஜம்மா பேபியை
மைத்தாள்.

''அந்தத் திமிர்பிடிச்ச கழுதையை பாத்ரூம் போகவச்சுக்
ட்டிட்டு வா. சவுக்காலே நாலு வாங்கு வாங்கினுத்தான்
த்திரிக்குச் சரியா வருவா.''

பேபி பின் அறைக்குப் போய், ''ருக்கு, ருக்கு!'' என்று
ரல் கொடுத்தாள்.

பதில் இல்லே.

விளக்கைப் போட்டுப் பார்த்தாள்.

அறையில் ருக்கு இல்லே.

அவளுக்கு வியப்பாய் இருந்தது. போட்ட தாழ்
ாட்டபடி இருக்கையில், உள்ளே இருந்தவள் எப்படிக் காணுமல்
ாக முடியும்? கடைசியாக வந்தவள் லாண்டிரிக்கார வள்ளிதான்.

செய்தி கேட்ட ஆன்ட்டி, ''ராத்திரிக்கு அந்தப் படுபாவி
ந்து நிப்பானே! என்ன பதில் சொல்லுவேன்?'' என்று கவலேப்
ட்டாள் ராஜம்மா.

மறுநாள் வந்தால் கோபாலின் முகவரி தருவதாக உஷா
சான்னது மாரியப்பனின் நினைவில் இருந்தது.

கோபாலின் மேல் அவ்வளவு அக்கறையுள்ள உஷா எப்
டியும் முயன்று அவனது இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விடுவாள்

என்ற நம்பிக்கை இருந்தது.

மதியம் கொஞ்சம் ஒழிந்த வேளையில் உஷாவின் வீட்டுக்கு ஓடினான்.

உஷா சோகமாக உட்கார்ந்திருந்தாள்.

''அவர் விலாசம் கிடைச்சுதா, அக்கா?''

''அவரையே பார்த்தேன், தம்பி. என்னை ஏத்துக்க மாட்டேன்னுட்டார்! இனி என் வாழ்க்கை அவ்வளவுதான்!'' என்று கண்ணீர் வடித்தாள் உஷா.

''அவரை நான் வழிக்குக் கொண்டு வறேன். அவர் அட்ரஸ் சொல்லுங்க.''

''முடியுமா, தம்பி? உன்னாலே முடியுமா?'' ஆர்வத்தோடு கேட்டாள்.

''முடியுதா, இல்லையான்னு ரெண்டு நாள் கழிச்சுப் பாருங்க. இப்போ அட்ரஸ் கொடுங்க.''

''மாம்பலம் பிள்ளையார் கோயில் தெரு. சத்தியா ஸ்டூடியோ.''

அவ்வளவுதான்; மறு நொடி மாரியப்பன் அங்கே இல்லை!

பஸ் பிடித்து மாம்பலம் போய், பிள்ளையார் கோயில் தெருவைத் தேடி நடந்து, கடைசியில் ஸ்டுடியோவைக் கண்டு பிடித்துவிட்டான்.

ஆனால், அங்கே கோபால் இல்லை; வேறொருவன் இருந்தான்.

''கோபால் நேத்துக் காலையிலேயே வந்துட்டார். மதியம் வரைக்கும் இங்கேதான் இருந்தார். மதியத்துக்கு மேலே மயிலாப்பூர் போனவர் இன்னும் வரலை; தகவலும் இல்லை. வந்ததும் என்ன சொல்லணும்?''

''அவர் மச்சான் மாரியப்பன் வந்துட்டுப் போனதாச் சொல்லுங்க. தலை போகிற அவசரம்னு சொல்லுங்க. மயிலாப்பூர் கிங்க்ஸ்டன் லாட்ஜுக்கு வந்து விசாரிக்கச் சொல்லுங்க.''

''உன் ரூம் நம்பர்?''

''பதினெண்ணிலேருந்து இருபது முடிய!'' என்று வேதனையோடு சொல்லிவிட்டு வந்தான் மாரியப்பன்.

தெருத் தெருவாய் அலைந்து, களைத்து, சோர்ந்து வீடு திரும்பினான் ஆறுமுகம்.

அன்று முழுவதும் அவனுக்குச் சரியான அலைச்சல்!

''உஸ்... அப்பாடா!'' என்று பெரு மூச்சு விட்டுக்கொண்டு

உட்கார்ந்தான்.

வள்ளிக்கு அவனைப் பார்க்க ஆத்திரமாக வந்தது. ''ஏய்யா, ரொம்ப முக்கியமான விஷயம்னு படிச்சுப் படிச்சுச் சொன்னேன்; என்னன்னுகூடக் கேக்காம, அவசரமா ஓடினியே; அப்படி என்னய்யா தலை போகிற வேலை?'' என்று கடுப்பாய்க் கேட்டாள்.

''எல்லாம் உங்க ஊர்க்காரங்க வேலைதான். உங்க தெருவுக்குப் பக்கத்துத் தெருவிலே, நடேசன்னு ஒரு கணக்கப் பிள்ளை இருக்காராம்ல...''

''ஆமா. ருக்குவோட அப்பா. அவருக்கென்ன?''

''ருக்குவுக்கு முறைப் பையனை விட்டுட்டு, வேறே மாப்பிளை பார்த்தாங்களாம். அது பிடிக்காம, ருக்கு தம்பியைக் கூட்டிக்கிட்டு, அந்தாளைத் தேடிப் பட்டணத்துக்கு வந்துடுச்சாம். அக்காவும் தம்பியும் பிரிஞ்சு, ஆளுக்கொரு பக்கமா அத்தானைத் தேடிக் கிட்டிருக்காங்களாம். கோபாலுக்குச் சேதி தெரிஞ்சு, அவர் அவங்களைத் தேடி அலையறார். அவருக்குத் துணையா நானும் அலைய றேன். நாயா அலைஞ்சும் கண்டுபிடிக்க முடியலை!'' ஆறுமுகம் அலுத்துக்கொண்டான்.

''உன்னாலே கண்டுபிடிக்க முடியாதுய்யா! அதுக்கெல்லாம் தனி சாமர்த்தியம் வேணும்! ருக்கு ஒரு தேவடியா வீட்டிலே மாட்டிக்கிடுச்சு. அங்கே எதேச்சையா சுந்தரமூர்த்தி வந்துட்டான்! ருக்குவைக் கெடுக்கப் பார்த்திருக்கிறான். ருக்கு அவனைக் கத்திரியாலே குத்திடுச்சு! வீட்டுக்காரி ருக்குவைச் சுவுக்காலே அடிச்சு, தனி அறையிலே பூட்டிவச்சுட்டா!''

''ஐயய்யோ! எந்த வீடு அது?''

''உனக்கும் தெரிஞ்ச வீடுதான்யா. மயிலாப்பூர் மயில்சாமி தெருவிலே ஒரு பங்களா. பரங்கிப் பழம் மாதிரி ஒரு கிழவி இருப்பா... வாசல்லே கார் நிக்கும்.''

''ஞாபகம் வரலையே...''

''அதான்யா, பளபளன்னு நாலஞ்சு பொண்ணுங்க மாடியிலேருந்து ஓடிவந்ததுங்களே...''

''அடடே! அந்த வீடா!'' என்று எழுந்தான் ஆறுமுகம்.

''என்னய்யா, எழுந்துட்டே?''

''நான் இப்பவே கோபாலைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி, ருக்குவை மீட்கணும்.''

''ருக்கு இப்போ அங்கே இல்லையே!''

''பின்னே எங்கே இருக்கு?''

''நம்ம வீட்டிலேதான் இருக்கு!''

''எங்கே இருந்தாலும் சரி; மீட்டுக்கொண்டு வந்துட றோம்!'' என்றவன் திடீரென்று புரிந்துகொண்டு ஆச்சரியப்

பட்டான். ''என்னது, நம்ம வீட்டிலேயா!''

''ஆமா. காலையிலே அழுக்கெடுக்க அந்தப் பங்களாவுக்குப் போனவள் ருக்குவைப் பார்த்து, வண்டியிலே வச்சுக் கடத்திக் கொண்டு வந்துட்டேன்! அதைச் சொல்லத்தான் மத்தியானம் உன்னை ஒரு நிமிஷம் நில்லுய்யான்னு கெஞ்சினேன். நீ என் பேச்சைக் கேட்காம போய்த் தெருத் தெருவா அலைஞ்சுட்டு வறே. வேணும், உனக்கு நல்லா வேணும்!'' என்று நக்கல் செய்த வள்ளி, அறைக்குள் படுத்திருந்த ருக்குவைக் கூப்பிட்டாள்.

ருக்கு கூடத்துக்கு வந்தாள்.

ஆறுமுகம் அதிசயப்பட்டான். ''இந்தப் பொண்ணு தான்.''

வள்ளி கேட்டாள். ''நீ எப்போய்யா பார்த்தே?''

''நான் பார்த்ததில்லே. ஆனா, கோபால் சார் ஒவ்வொரு அடையாளமாச் சொல்லிச் சொல்லி அழுதார்! ருக்கு மேலே அவருக்கு எவ்வளவு பாசம் என்கிறே!''

''ருக்குவை இங்கே வச்சிருக்கிறது ஆபத்து! கிழவியோ, சுந்தரமூர்த்தியோ எப்போ வேணாலும் வந்து மடக்கலாம். உடனே கோபால் கையிலே ஒப்படைச்சுடணும். டெம்போ எங்கே?''

''அண்ணன் துணி கொண்டு போயிருக்கு.''

''சரி, நான் பஸ்ஸிலே கூட்டிட்டுப் போறேன். மாம்பலம் ஸ்டூடியோவுக்குத்தான் கோபால் போனார்.''

''பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்துடுய்யா.''


''கவலைப்படாதே! நீ பொண்ணுக்குத் தோழின்னா, நான் மாப்பிள்ளைத் தோழன்!''

''போய்ட்டு வர்யா, ருக்கு?'' என்று அவள் தலையைக் கோதிவிட்டாள் வள்ளி.

''வர்றேன் வள்ளி!'' ருக்கு விடைபெற்றுக்கொண்டாள்.

ஆறுமுகமும் ருக்குவும் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தார் கள்.

ஒரு வழியாக அத்தானைப் பார்க்கப் போகும் மகிழ்ச்சியில் அவளும்; நண்பனுக்குப் பெரிய உதவி செய்யமுடிந்த மகிழ்ச்சியில் அவனும் நடந்துகொண்டிருந்தபோதுதான் அது நடந்தது.



சரியாக ஏழரை மணிக்கு சுந்தரமூர்த்தி வந்துவிட்டான்.

அவன் வருவானென்று அதுவரை பயந்துகொண்டிருந்த ராஜம்மா, அவனைக் கண்டதும் ஆடிப் போனாள்.

கூடத்து சோபாவில் திண்ணென்று உட்கார்ந்த சுந்தர மூர்த்தி, ''குடிக்கக் கொண்டுவா,'' என்றான்.

ராஜம்மா வழக்கம்போல் விஸ்கி கொண்டு வந்து வைத்தாள்.

முதல் ரவுண்டை உள்ளே இறக்கியவன், ''குட்டி என்ன சொல்றா?'' என்று விசாரித்தான்.

''சவுக்கெல்லாம் யூஸ் பண்ணிப் பார்த்துட்டேன். அவள் மசியலை!'' என்று மெதுவாகச் சொன்னாள் ராஜம்மா.

''நீ கிழவிதானே, உன்னாலே சரியா அடிக்க முடியாது. நான் அடிக்கிறேன் பார், பேபி, சவுக்கைக் கொண்டு வா.''

அவள் பேசாமல் நின்றாள்.

''அதிலே... வந்து...'' ராஜம்மா திணறினாள்.

''ஒண்ணும் பேச வேணும். சவுக்கைக் கொண்டுவரச் சொல்லு!'' என்று உறுமினான் சுந்தரமூர்த்தி.

ராஜம்மா தலையசைத்ததும் பேபி சவுக்கைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''கொண்டு வா அவளை!'' என்றபடி சுந்தரமூர்த்தி சவுக்கை வளைத்தான்.

''வந்துப்பா... அவளைப் பின் ரூம்லே போட்டு அடைச்சு வச்சிருந்தோம். காலையிலே பார்த்தா... எப்படியோ காணுமல் போயிட்டா!''

சுளீரென்று சவுக்கைச் சொடுக்கினான் சுந்தரமூர்த்தி.

எப்போதோ செத்துப்போன தாயாரைத் துணைக்கு அழைத்தாள் ராஜம்மா. அவளது வெள்ளைப் புடவை கிழிந்து, ரத்தக் கோடு தெரிந்தது.

''ருக்குவைக் காணேமா! யாரை ஏமாத்தப் பார்க்கிறே?

ஷோக்கான குட்டியா இருக்கிறு; அவளை வச்சு லட்ச லட்சமாச் சம்பாதிக்கலாம்னு எங்கோ ஒளிச்சுவச்சுட்டு, காணேம்னு பொய் சொல்றியா!''

''கொஞ்சம் பொறு, தம்பி. சந்தேகப்பட்ட இடங்களுக்கெல்லாம் ஆள் அனுப்பியிருக்கேன். வரட்டும்!'' என்று கெஞ்சினுள் ராஜம்மா.

சாலையில் வந்துகொண்டிருந்த கார் ஒன்று தறிகெட்டுக் குறுக்கே வந்து, அநேகமாக மோதி நின்றது.

''அறிவுகெட்ட ராஸ்கல்! வண்டியா ஓட்றே!'' என்று அடிக்கப் போனுன் ஆறுமுகம்.

டிரைவர் பாவம், கெஞ்சினுர். ''அடிக்காதே, சாமி! ஸ்டீரிங் வீல் ப்ளே அடிக்குது. அதான் நறுக்குன்னு பிரேக் போட்டுட்டேன்ல?''

''இன்னும் ஒரு இஞ்ச் நகர்த்திருந்தா நாங்க எமலோகம் போயிருப்பமே?'' என்று ஆறுமுகம் குதித்தான்.

''ஏதோ, தெரியாம நடந்து போச்சு; விடு, சாமி. நான் புள்ளை குட்டிக்காரன். வேணும்ன, எங்கே போகணும்னு சொல்லு, கொண்டு போய் ட்ராப் பண்றேன்,'' என்று டிரைவர் பணிந்து போனுர்.

''அப்படி வா வழிக்கு. மாம்பலம் போ.''

ஆறுமுகம் ருக்குவைப் பின்னல் ஏற்றிவிட்டு, தான் முன்னல் ஏறிக்கொண்டான்.

கார் கிளம்பிச் சென்றது.

''எங்க பொழைப்பை ஏன் சாமி கேட்கிறீங்க! எங்க முதலாளியைப் போல ஒரு கஞ்சப் பயலைப் பார்க்கவே முடியாது. ஒரு சமயத்திலே நூறு ரூபாய்க்கு மேலே ரிப்பேர் செலவு பண்ண மாட்டான். வண்டியிலே ஸ்டெப்னி கிடையாது; கார்பரேட்டர் அடைக்குது; பேட்டரி காலி; ஸெல்ஃப் எடுக்காது. இவன்லாம் ஏன் கார் வச்சுக்கிட்டு எங்களை உதைபட வைக்கணும்?'' என்று புலம்பிய டிரைவர் ஒரு சிகரெட் கடையோரம் காரை நிறுத்தினுர். ''தம்பி, கோவிச்சுக்காம, எங்க முதலாளிக்கு ஒரு பேக்கட் ஃபில்டர் வில்ஸ் வாங்கிட்டு வந்துடுங்க. இஞ்சினை ஆப் பண்ணு, மறுபடி ஸ்டார்ட் ஆகாது; தள்ளணும்,'' என்று ஓர் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினுர்.

ஆறுமுகம் நோட்டை வாங்கிக்கொண்டு, இறங்கிக் கடைக்குப் போனுன்.

குபுக்கென்னு கிளம்பிச் சென்றது கார்.

ஆறுமுகம் சில கணங்கள் திகைத்து நின்றுவிட்டுக் கூவினுன், ''டேய், டேய்! வண்டியை நிறுத்து!''

கார் நிற்கவில்லை.

அதன் நம்பரைக்கூடப் பார்க்க முடியவில்லை. கார் வலப் புறம் திரும்பிவிட்டது.

ஆறுமுகம் பதறினான்.

யார் அவன்? ருக்குவைத் தெரிந்து வைத்திருக்கிறான். எப்படித் தந்திரமாக அவனை ஏமாற்றிவிட்டு, அவளைக் கொண்டு போய் விட்டான்!

இரண்டு பேர் சைக்கிளில் பேசிக்கொண்டு போனார்கள்.

''ஃபாரின் கார் போலேருக்கு. சும்மா கப்பல் மாதிரிப் போகுது!''

''நம்பரைப் பார்த்தியா; அம்பத்தஞ்சு அம்பத்தஞ்சு!''

''இந்த நம்பருக்காக நிறையச் செலவழிச்சிருப்பாங்க.''

அவர்கள் அந்தக் காரைப் பற்றித்தான் பேசிக்கொள் கிறார்கள். 5555... இந்த நம்பரை எங்கோ கேள்விப்பட்டிருக் கிறானே! ஆ..., அது ருக்குவைச் சிறைப்படுத்தியிருந்த கிழவியின் வண்டி!

எதிரே வந்த காலி டாக்ஸியை நிறுத்தினான் ஆறுமுகம்.

''மீட்டருக்கு மேலே அம்பது ரூபா தறேன். மாம் பலத்துக்குப் பறந்து போ! சீக்கிரம்!''

அவனை ஏற்றிக்கொண்டு டாக்ஸி உண்மையிலேயே பறந்தது.

மூன்றாவது ரவுண்ட் முடிந்தது.

சுந்தரமூர்த்தி பொறுமை இழந்தான்.

''ஏய் கிழவி, நேரத்தைக் கடத்தி என்னைத் தூங்க வச்சிட லாம்னு நினைக்காதே! இப்போ ருக்கு வந்து சேரணும். இல்லை, உன்னைக் கொலை பண்ணாமல் விட மாட்டேன்!'' என்று சவுக்கை வீசினான்.

கிழவி கெஞ்சினாள். ''கொஞ்சம் பொறுமையா இரு, தம்பி. டிரைவரை அனுப்பியிருக்கேன். அவன் வந்துடட்டும்.''

அப்போதுதான் அந்தக் கார் சர்ரென்று காம்பவுண்டுக்குள் நுழைந்து, பங்களா வாசல் முன்பு நின்றது.

டிரைவர் இறங்கி, பின் கதவைத் திறந்து, ருக்குவை இழுத்துக் கொண்டு போனார்.

ருக்குவைக் கண்டதும் கிழவிக்கு ஆனந்தம் தாளவில்லை. ''எங்கே போயிருந்தா?''

''நான் சந்தேகப்பட்டது சரியா இருந்தது. அந்த வள்ளிக் குட்டிதான் இவளை டெம்போவிலே வச்சுக் கொண்டு போயிருக்கா! பகல் பூரா வீட்டுக்குள்ளேயே வச்சிருந்து, இருட்டினதும் மாம்பலத்

துக்கு அனுப்பினு. ஒரு தந்திரம் பண்ணிக் காரிலே ஏத்தி, துணைக்கு வந்தவனை ஏமாத்தி, கொண்டு வந்துட்டேன்.''

''சபாஷ், டிரைவர்! சுந்தரமூர்த்தி தம்பி இதுக்காக உனக்கு ஆயிரம் ரூபா சன்மானம் கொடுப்பார். போ!''

டிரைவர் மகிழ்ச்சியோடு வெளியே வந்தார்.

''ஏண்டி சிறுக்கி, என்னையா ஏமாத்த நினைச்சே? முடிஞ்சுதா உன்னுலே?'' என்று கேட்டபடி ருக்குவை ஓங்கி அறைந்தாள் கிழவி.

ருக்கு தள்ளாடிக் கீழே விழுந்தாள்.

''நீ சும்மாயிரு. அவளை நான் கவனிச்சிக்கிறேன்!'' என்று ஆத்திரத்தோடு சவுக்கை வீசினுன் சுந்தரமூர்த்தி.

ராஜநாகம் போல் வளைந்து சென்றது சவுக்கு.

''அம்மா!'' என்று அலறினுள் ருக்கு.

அன்றிரவு மாரியப்பனுக்கு நிறையச் சில்லறை தேறும் வாய்ப்பு வந்தது. எட்டு அரை புட்டிகளுக்கு ஆர்டர் கிடைத்தது. நாற்பது ரூபாய் லாபம்.

மாரியப்பன் விஸ்கி வாங்கப் புறப்பட்டான்.

டிரைவர் வழக்கம் போல் வேப்ப மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்.

''வணக்கம், டிரைவர் சார்!''

''புதுப் பையனு? வா, எத்தனை வேணும்?''

''எட்டு.'' பணத்தைக் கொடுத்தான்.

டிரைவர் உள்ளே போய்ப் புட்டிகளைக் கொண்டு வந்தார்.

மாரியப்பன் முதல் புட்டியை எடுத்து இடுப்பில் செருகியபோதுதான் அந்தக் கூச்சல் கேட்டது. ''அம்மா!''

''என்னது சத்தம்?''

''அதையெல்லாம் கண்டுக்காதே, கிளம்பு.''

''அம்மா!'' அந்தக் குரல் மீண்டும் ஒலித்தது.

அது ருக்குவின் குரல்! பதினைந்து ஆண்டுகள் அவனோடு வளர்ந்த ருக்குவின் குரல். இரண்டு நாட்களாக அவன் தேடிக் கொண்டிருக்கும் ருக்குவின் குரல்!

மாரியப்பன் மெய்சிலிர்த்து எழுந்தான்.

பங்களாவுக்குள் ஓடினுன்.

கூடத்தில் சுந்தரமூர்த்தி சவுக்கை வீசிக் கொண்டிருந்தான்.

ருக்கு புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தாள்.

''ருக்கு!'' என்று கூவியபடி ஓடி அவளைக் கட்டிக் கொண்டான் மாரியப்பன்.

''மாரி!'' என்று அவனைக் கட்டிக் கொண்டு தேம்பினாள் ருக்கு.

சுந்தரமூர்த்திக்கு உற்சாகம் பொங்கியது. ''ஓ! நீதான் அந்த மாரிப் பயலா! என் திட்டத்தையெல்லாம் கெடுத்த நாயா! உன்னையும் இவளையும் சேர்த்து உதைக்கணும்னுதான் ரொம்ப ஆசைப்பட்டுக்கிட்டிருந்தேன். வசமா வந்து மாட்டிக்கிட்டே!'' என்றபடி ஆத்திரத்தோடு சவுக்கை வீசினான்.

சவுக்கு இருவரையும் சேர்த்துத் தழுவியது.

வலி தாளாமல் ருக்கு, ''தம்பி!'' என்று அலறிய அதே சமயம், மாரி, ''அக்கா!'' என்று கத்தினான்.

சுந்தரமூர்த்தி மீண்டும் மீண்டும் சவுக்கை வீசினான்.

ஆத்திரத்தின் உச்சத்தில் மாரியப்பன் சிங்கக் குட்டிபோல் துள்ளிப் பாய்ந்தான். ''நிறுத்துடா, நாயே! எங்களை அடிக்க நீ யாருடா?'' என்று கேட்டுக் கொண்டே இடுப்பில் செருகியிருந்த விஸ்கி புட்டியை உருவி, ஓங்கி அவன் நெற்றியில் அடித்தான்.

'ணங்'கென்று புட்டி உடைந்து விஸ்கி ஊற்றியது. பாதிப் புட்டி மாரியப்பனின் கையில் மிஞ்சியது.

''பிச்சைக்காரப் பயலே! என்னையா அடிச்சே!'' என்று ஆவேசமாகச் சவுக்கை வீசினான் சுந்தரமூர்த்தி.

மிக அருகிலிருந்த மாரியப்பன் முந்திக் கொண்டு விட்டான்.

உடைந்து கூர் முனைகளோடு நின்ற புட்டியை அவனது அடிவயிற்றில் செருகினான்.

''ஆ!'' என்று ஓலமிட்டபடி சுந்தரமூர்த்தி சவுக்கை நழுவ விட்டுவிட்டு, அடிவயிற்றைப் பொத்திக் கொண்டு சோபாவில் சாய்ந்தான்.

அவன் கைகளை மீறி ரத்தம் வழிந்து சோபாவை நனைத்தது.

அப்போது வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது.

கோபாலும் ஆறுமுகமும் அவசரமாக இறங்கி வந்தார்கள்.

கோபாலைக் கண்டதும் ருக்குவும் மாரியப்பனும் ஒரே குரலில், ''அத்தான்!'' என்று கூவினார்கள்.

கோபால் ருக்குவிடம் ஓடி வந்தான். அவன் பார்வை சுழன்றது.

சவுக்கடி பட்டு, உடைகள் கிழிந்து, ரத்தக் கோடுகளுடன் நிற்கும் ருக்கு, உடைந்த புட்டியுடன் நிற்கும் மாரியப்பன், ரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் சுந்தரமூர்த்தி...

''என்ன நடந்தது மாரி?''

''இந்தப் பயல் ருக்குவின் உடம்பைச் சவுக்காலே வரிவரியாக் கிழிச்சான். அவன் அடிவயித்திலே ஒரு ஓட்டை போட்


டேன்.,'' என்று அலட்சியமாகச் சொன்ன மாரியப்பன் புட்டியைக் கீழே வீசிவிட்டு, ருக்குவின் கையைப் பிடித்துக் கோபாலின் கையில் வைத்தான்.

''ருக்கு, சொன்ன வாக்கைக் காப்பாத்திட்டேன். எத்தனையோ கஷ்டங்களுக்குப் பிறகு, உன்னை அத்தான் கையிலே ஒப்படைச்சுட்டேன்!'' என்று நிறைவோடு சொன்னான்.


''பயப்படாதே மாரி. நீ தற்காப்புக்காகத்தான் இவனைத் தாக்கியிருக்கிறே. உன்னைத் தண்டிக்க மாட்டாங்க,'' என்றான் கோபால்.

அதே சமயம் கோபால் கொடுத்த தகவலின் பேரில் போலீஸ் ஜீப் வந்து வாசலில் நின்றது.

[முற்றும்]



நீயும் ஒரு காதலனா?



துங்காவுக்கென்று மூன்று அறை வீட்டில் ஒரு தனி அறையில் ஒரு தனிக் கட்டில். மரக்கட்டில். முன்னொரு காலத்தில் அவளுடைய தாத்தா பொழுது போகாமல் கிராமத்துத் தோப்பிலிருந்த பலா மரத்தை வெட்டி கட்டில் மேஜை ஊஞ்சல் பலகை என்று பண்ணிப் போட்டார். இப்படிச் செய்வதில் பெருமை. நிலத்தில் விளைச்சல் இருந்ததோ இல்லையோ எளிதாகக் கடன் வாங்க வசதி இருந்தது. தாம் தூம் என்று செலவு செய்ய தாராள மனசு இருந்தது. தட்டிக் கேட்க ஆள் இல்லாததால் சுதந்திரம் இருந்தது. பலா மரங்கள் முறிய முறிய மேஜை கட்டில் நாற்காலிகள் பிறக்கலாயின. துங்காவின் அப்பா கீர்த்திவாசனுக்குச் சாமர்த்தியம் போதாது. மற்ற அண்ணன்கள் தங்க நகைகளையும் வெள்ளிப் பாத்திரங்களையும் ஒன்று இரண்டாக எடுத்து எடுத்து உருக்கி உள்ளே அழுத்த, உருக்க முடியாத மரச் சாமான்களில் சில வாசனுக்கு வந்து சேர்ந்தன.

இரண்டு அண்ணன்கள், துங்காவின் தாத்தாவின் காரியங்கள் முடிந்த கையோடு கூட்ஸ் ரெயிலில் கொஞ்சம் தேக்கு மரங்களையும் போனஸாக அனுப்பினார்கள். பிதிரார்ஜிதமாக வந்த மரக் கட்டைகளையும் பலகைகளையும் கிடைத்த விலைக்கு விற்க வாசனுக்கு மனம் வரவில்லை. குரோம்பேட்டைக்கும் பல்லாவரத்துக்கும் இடையே புதர்க் காடாக இருந்த ஓர் அனுமதேய பிரதேசத்தை ஏக்கர் பத்தாயிரம் என்று கொடுத்து வாங்கிப் போட்டார், புதர்களை அழித்தார். நல்ல வேளையாக அந்தக் காலத்தில் எம்.எம்.டி.ஏ. தொந்தரவோ, டவுன் பிளானிங் தொந்தரவோ இல்லை. பல்லாவரம் பஞ்சாயத்தில் தலையை நீட்டினால் போதும். கையை நீட்டாமலே உதவி செய்ய முன்வந்தார்கள்.

1948'ம் ஆண்டு இப்படிக் கட்டின வீட்டுக்கு ஜய விலாசம் என்று பெயரிட்டுக் குடிபோனார் கீர்த்திவாசன்.

அப்போது அவருக்கு வயது இருபத்தாறு. மனைவி கமலத்துக்குப் பதினெட்டு. பெரிய பரம்பரை. பெருங்காயம் வைத்த பெட்டி. சமையலுக்கு ஊரிலிருந்து ஒரு சிறு பிள்ளையுடன் வந்த பொன்னம்மா என்ற தூரத்து ஏழை உறவு.

ஒரு ஏக்ரா நிலம் விருதாவாகப் போகக் கூடாது என்று தென்னை நட்டார். வாழை நட்டார். வீட்டின் முன்புறம் நந்தவனம் அமைத்தார். அந்தக் காலத்தில் ஏ.ஜி. ஆபீஸ் கொடுத்த நூற்று இருபத்திரண்டு ரூபாயில் அசுவமேத யாகமே நடத்தலாம். இஷ்டம் போலச் செலவு செய்யலாம். வரலாம். காண்டீன் இட்டிலியை ஒரு கையால் தூக்க முடியாது. இந்தக் காலத்து விலையில் மூன்று பைசா. காப்பி கள்ளிச் சொட்டுதான். ராஜாஜி பிரதம மந்திரியாக இருந்த நாட்களில் ஏ.ஜி. ஆபீஸ் காப்பிதான் அவருக்குச் செல்லுமாம். இப்படிப்பட்ட ஓர் ஆபீசில் *1942*'ல் சேர்ந்த அவருக்கு *1944*'ல் யுத்தம் உலகை அழிக்குமா என்றிருந்த காலத்தில் கல்யாணம். கம்மல், காசுமாலை, வங்கி, ஒட்டியாணம், பித்தளை அண்டா செப்புக் குடத்துடன் கமலம் ஆந்தை முழி முழித்துக் கொண்டு கொழுத்த பன்றிக் குட்டி போல வந்தாள். அவளுடைய உடம்பில் தொட்ட இடமெல்லாம் சதையாக இருந்தது. ஆதலால் எங்கே எலும்பைத் தொட்டு உணரலாம் என்ற ஆராய்ச்சியில் கீர்த்திவாசன் இரவும் பகலுமாக இறங்கினார். ஊசி குத்தும் இடத்தைக் கூட அவர் விட்டு வைக்கவில்லை.

வீட்டின் கொல்லைப்புறத்தில் ஓர் எருமை, ஒரு நாட்டுப் பசு, ஒரு சீமைப் பசு. சினையாகிக் கன்றுகள் ஈன்றன. ஆனால் கமலம் எல்லாப் பக்கமும் வீங்கினாளே தவிர வயிற்றை மறந்தாள். கீர்த்திவாசனுக்குப் பெரிய ஏமாற்றம். கல்யாணமாகி மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. யுத்தம் முடிந்து அவரவர் தங்கள் தங்கள்

வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாகி விட்டது. அவரும் ஒரு கணவனுடைய கடமைகளைத் தவருது, அலுப்பு சலிப்பு இல்லாமல் செய்து வருகிருர்.

பின் ஏன் பலன் இல்லை? தென்னை மரங்கள் காய்க்க ஆரம்பித்துவிட்டன. கமலம் ஒரே மூச்சில் மூன்று இளநீர்களைக் குடித்து, வழுக்கையைச் சுரண்டிச் சுரண்டித் தின்ருள். பெரிய வயிறு. ஆனுல் அதில் ஏன் ஒரு சின்ன அணு உற்பத்தியாகவில்லை?

ஏ.ஜி. ஆபீஸில் எது கிடைக்கிறதோ இல்லையோ, யாரும் கேட்காமலே ஏகப்பட்ட யோசனைகள் கிடைக்கும். ஒருவன் அரச மரத்தில் சிறு கட்டிலைக் கட்டித் தொங்கவிடச் சொன்னுன். இன்னொருவன் ஏழைப் பெண்ணுக்கு மாங்கல்யம் பண்ணிப் போடச் சொன்னுன். ஒரு திருவல்லிக்கேணிக்காரர் தினமும் கோவிலுக்கு வரச் சொன்ஞர். மற்றப்படி ராமேசுவரம் குருவாயூர் என்கிற க்ஷேத்திரங்களும் தலைநீட்டின.

சமையற்காரி பொன்னம்மா தூரத்து சொந்தம் என்கிற ஒரு காரணத்துக்காகவே வாசனுல் அவளிடம் வீட்டை ஒப்படைத்து ராமேசுவரம் மதுரை குருவாயூர் என்று போக முடியவில்லை. பொறுத்துக் கொண்டு காலத்தை ஓட்டினுர்.

குழந்தைப் பேறு இல்லாமல் போகிறதே என்று வாசன் தவித்த அளவில் ஆயிரத்தில் ஒரு பங்குகூடக் கமலம் கவலைப்படவில்லை. யார் ஒரு குழந்தையைச் சுமப்பது, ஈன்பது, வேப்பெண்ணெய் தடவுவது என்றெல்லாம் அவள் அலுத்துக் கொண்டாள். குழந்தை கிடைப்பதும் கிடைக்காமல் போவதும் நிச்சயம் அவர்கள் கையில் இல்லை என்று இந்த நான்கு ஆண்டுகளில் நிதர்சனமாகி விட்டது. கணவர் நம் காரியாலயத்தில் கடமையை ஒழுங்காகச் செய்கிருரோ இல்லையோ, வீட்டில் எல்லா பூஜைகளும் வேளைக்கு முன்பாகவே செய்துவிட்டு அசதியில் உறங்கி விடுகிருர். அவளும் அவரைச் சகித்துக் கொள்ளப் பழகிவிட்டாள். பொன்னம்மா வாய்க்குப் பிடித்ததைச் செய்து போட, அவளுடைய பிள்ளை எல்லா ஏழை வீட்டுப் பிள்ளைகளைப் போல அடங்கி ஒடுங்கி அவளிட்ட வேலைகளைச் செய்கிருன். அந்தச் சிறு பையன் இல்லாவிட்டால் யார் பல்லாவரம் வரையில் நடந்து போய் கரம் பக்கோடாவும் காராமணிச் சுண்டலும் வாங்கி வருவார்கள்.

தம்முடைய வம்சம், தம்முடைய பரம்பரை தம்முடன் அற்றுப் போகத்தான் போகிறது என்று தீர்மானமான முடிவுக்கு வந்த வாசனுக்கு ஒரு நாள் திடீரென்று ஏ.ஜி. ஆபீசில் ஒரு 'நாற்காலி முடம்' சொன்ன யோசனை நினைவுக்கு வந்தது. இரண்டாம் கல்யாணம்... கமலத்தின் வயிற்றில் இனி ஒரு புழுகூடப் பிறக்காது என்று அதே ஆபீஸில் ஓர் இரண்டும் கெட்டான் ஜோசியன் சொல்லி

விட்டான். ஏன் கன்றுகளை ஒழுங்காக ஈன்றக் கூடிய ஒரு பசு மாட்டைத் தேடிக் கொண்டு வரக் கூடாது?

ஒரு நாள் இரவு தம் பிரலாபத்தை அவர் கமலத்திடம் சொல்லி அழ, அவள் எழுந்து விளக்கைப் போட்டாள். இடுப்பை விட்டு நழுவியிருந்த புடவையைக் கூடச் சரி செய்து கொள்ள அவளுக்குத் தோன்றவில்லை. நின்ற நிலையிலேயே முழங்கையைப் படுக்கையில் ஊன்றி, காலை நீட்டி உட்கார்ந்திருக்கும் கணவனைப் பார்த்தாள். கண்ணகியின் சீற்றமும் கண்களில் இல்லை, மாதவியின் குழைவும் இருக்கவில்லை. ஒரு சாதாரண மனைவியின் சாதாரணப் பார்வைதான் இருந்தது.

''பேஷா இன்னொரு கல்யாணம் பண்ணிக்குங்க. அவள் உங்களுக்கு வருஷா வருஷம் செவலை செவலையா பெத்துப் பெத்துப் போடட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதுக்கு முன்னாடி ஒரு காரியம் செய்யுங்க.''

''என்ன கமலு? என்ன சொல்றே? நான் என்ன செய்யணுங்கறே?''

''நீங்களும் இத்தனை வருஷமா ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் என் உடம்பை என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செஞ்சிங்க. உங்க உடம்பிலே கோளாறே இல்லே என் உடம்பிலே கோளாறு, நான் உண்டாகாமலேயே போயிட்டேன்.''

''விஷயத்துக்கு வா.''

''எனக்கு மஞ்சக்காணி எக்கச்சக்கமாக மன்னார்குடியிலிருந்து வர்றது. நீங்க இன்னொருத்தியை இந்த வீட்டு பெட்ரூமுக்கு கொரண்டு வந்தா, எனக்கு பெட் ரூம் இருக்காது. எனக்கு ஒரு பெட்ரூம் வேண்டும். ரெட்டைக் கட்டில் வேண்டும்.''

''நான் உன்னை ஒதுக்கலே, கமலு. இதை நன்றாகப் புரிந்து கொள்.''

''உங்க வியாக்கியானம் எனக்கு வேண்டாம். எனக்கும் இன்னொரு கல்யாணம் செய்து வையுங்கோ. இன்னொருத்தி எப்படி இருப்பான்னு நீங்க பார்க்க ஆசைப்படற மாதிரி இன்னொருத்தன் எப்படி இருப்பான்னு நானும் பார்க்கிறேனே!''

''அடிப் பாவி!''

''அதை நான் சொன்னா அடப் பாவின்னு வரும். சொல்லவா?''

''பெண்கள் எப்படியடி ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கலாம்?''

''ரொம்ப சுலபம். இந்தத் தாலியைத் தூக்கி எறிஞ்சிட்டு, கழுத்தை நீட்டணும். எனக்கு இரண்டு கூறைப் புடவை கிடைக்கும். யார் கண்டா அடுத்த வருஷமே எனக்கு மசக்கையும் உண்டாகும்!''

கீர்த்திவாசன் பயந்து போனார். கமலத்தை அவருக்கு

நன்றாகத் தெரியும். நினைத்தால் பத்ரகாளியின் சொரூபத்தை எடுத்து விடுவாள்.

அவளைச் சமாதானப் படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று பட்டது.

''என் உடம்பில் ஒரு கோளாறும் இல்லேடி!'' என்றார்.

''நிரூபிச்சுக் காட்டுங்க.''

அவருடைய அதிர்ஷ்டமோ என்னவோ, 1950'ம் ஆண்டு நிரூபணமாயிற்று. கமலம் மண்ணைத் தின்றாள். கரியைத் தின்றாள். கார்த்திகை மாதத்தில் அங்குமிங்குமாக, பொன்னம்மாவின் பிள்ளை ரங்குவை விரட்டி மாங்காய் கொண்டு வரச் சொன்னாள்.

'அதிகம் பெறாதீர், அவதிப் படாதீர்' என்ற இந்தக் காலத்திய குறள் அந்தக் காலத்தில் இல்லை. நிரோத்தை யாரும் விலைக்கு விற்கவில்லை. இலவசமாக வழங்கவுமில்லை. அப்படி விற்றிருந்தாலும் கீர்த்திவாசன் செலவு செய்யவில்லை.

1950'ல் பெண்—ஜயா என்கிற ஜயலட்சுமி.

1952'ல் பெண்—தனம் என்ற தனலட்சுமி.

1954'ல் பெண்—விஜயா என்ற விஜயலட்சுமி

1957'ல் ராஜி என்கிற ராஜலட்சுமி.

கடைசியாக 1959'ல் ஐந்தாவது பெண். லட்சுமிகள் அலுத்துப் போனதாலும், துங்கபத்திரா நதியை ரெயிலில் ஒரு தடவை போனபோது பார்த்திருந்ததாலும் துங்கா என்று பெயரிட்டார்கள்.

சமையற்காரி பொன்னம்மா வேலைப் பளு தாங்க முடியாததாலும் வயது ஏறியதாலும், பிறந்த மண்ணில் சாக வேண்டும் என்ற தீராத ஆசையினாலும் ஊர் போய்ச் சேர்ந்தாள்.

லட்சுமிகளும் துங்காவும் வளர்ந்தனர். ஏ.ஜி. ஆபீஸ் கோட்டையிலிருந்து தேனாம்பேட்டைக்கு மாறியிருந்தது. ஆனால் வாசனுடைய பதவி மாறவில்லை. இரண்டு பரீட்சைகள் எழுதித் தேர்வு பெற்றால்தான் பதவி உயர்வு என்ற கண்டிப்பை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வேலை செய்தால் வேலையைக் கொடுத்து, செய்யாவிட்டால் சம்பளத்தைக் கொடுக்கும் மாபெரும் வள்ளல் நிறுவனம் அவர் போய் வந்த காரியாலயம். அனாவசியமாகக் கண் விழித்துப் படித்து, உடலை வருத்தி, பதவி உயர்வுக்கு அலைவானேன்?

ஊரிலிருந்து நெல் வருகிறது. புளி வருகிறது. துவரை வருகிறது. ஓர் ஏக்கரா நிலத்தில் இப்போது நூறு தென்னை, ஏழு மா, (ருமானி) மூன்று பலா என்று பணம் கொழிக்கும் மரங்கள் இருக்கின்றன. அவருடைய ஆபீஸ் தலைமைக்கே இவ்வளவு வருவாய் இல்லை. உபரிப் பணத்தில் லேவா தேவி வேறு வைத்துக் கொண்டிருக்கிறார். யார் கேட்டார்கள் பதவி உயர்வு?

நாட்கள் ஓடின. வருடங்கள் கடந்தன.

1942'ல் சேர்ந்தவர் மேள தாளங்கள் இல்லாமல் யாருடைய வருத்த உணர்ச்சிகளும் இல்லாமல் 1980'ல் ஓய்வு பெற்றார்.

பல்லாவரம் வீடு இப்போது அவருடைய தோட்டமாகி விட்டது.

முதல் நான்கு லட்சுமிகளும் மணமேடையில் உட்கார்ந்து எழுந்து தத்தம் இடங்களுக்குப் போனார்கள். ஒருத்தி—ஜபா—பாம்பே. விஜயா—கல்கத்தா; தனம்—டெல்லி; ராஜி—கான்பூர்.

கெஞ்சாமலேயே கிடைத்த கடைசிப் பெண் துங்காவுக்கு இப்போது வயது இருபத்தாறு. எம்.ஏ. சோஷியாலஜி. இருபத்திரண்டிலிருந்து இருபத்து நாலு வரையில் ஒரு டூரிஸ்ட் கெய்ட். அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கையிலேயே ஜர்னலிசம் படித்தாள். இதன் விளைவாக, பம்பாயிலிருந்து வெளியாகும் ஒரு பிரபல பெண்கள் பத்திரிகைக்குச் சென்னை நிருபரானாள்.

துங்காவின் உயரம் ஐந்து அடி ஆறு அங்குலம். நிறம் சிவப்பு. அம்மாவின் மதமதப்பு இல்லை என்றாலும் சதை ஊட்டத்துக்குக் குறைவு இல்லை. நன்றாக அழுந்திப் படிந்த சுருட்டைக் கேசம். கூர்மையான மூக்கு. பக்கவாட்டிலிருந்து பார்த்தால் ஓவியனுக்கு வரைய எளிதாக இருக்கும். கழுத்துக் கொஞ்சம் நீளம்தான். ஆனால் அந்தக் குறையை மார்பகம் ஈடு செய்தது. ரொம்பப் பேர் அவளைப் பார்த்து, மலைத்துப் பெருமூச்சு விடுகிறார்கள் என்று அவளுக்குத் தெரியும். அப்படிப் பெருமூச்சு விடாதவன் ஒருவனே ஒருவன்தான். ஆனந்த். எம்.ஏ. எம். லிட். ஒரு கல்லூரியில் உதவிப் பேராசிரியர். அவளுடைய காதலன். மனத்தைத் தொட்ட காதலன். எப்போது வேண்டுமானாலும் அவளைத் தொட உரிமையுள்ளவன். காலம் வரும்வரை காத்திருப்பேன் என்ற உறுதியில் இன்னும் அவனுடைய கைகள் துங்காவை ருசிக்கவில்லை.

இந்த ஆனந்த் என்கிற பேராசிரியரை கமலத்துக்கும் சரி, கீர்த்திவாசனுக்கும் சரி, கட்டோடு பிடிக்கவில்லை. காரணம் ஒன்றுதான். அவன் அரிசியை அமுது என்பான். சாத்தமுது, கறி அமுது, திருக்கண்ண அமுது என்றெல்லாம் சொல்லுவான். நெற்றியில் குறுக்கே போடாமல் நெடுக்காகப் போடுவான். மார்கழியில் திருப்பாவை பாடுவான். தொட்டதற்கெல்லாம் நிகமாந்த தேசிகனை இழுப்பான்.

பெற்றோரின் அபிப்பிராயங்களை முன்கூட்டியே கேட்டு துங்கா காதல் செய்யவில்லை. அதனாலேயே அவர்களுடைய ஆட்சேபணைகளையும் பொருட்படுத்தவில்லை. ஜாதிகளைக் காட்டிலும் மனசுகள்தான் முக்கியம் என்று அவள் படித்த சோஷியாலஜி கூறிற்று.

துங்கா அன்று அதிகாலை தாத்தா முன்னொரு காலத்தில் பண்ணிப் போட்ட பலாமரக் கட்டிலில் கண் விழித்தாள். வலது உள்ளங்கையைப் பார்க்கும் மூட நம்பிக்கை இல்லாததால், தூங்கி எழுந்ததும் முகத்தில் எந்த அளவுக்கு எண்ணெய் வழிகிறது என்று தெரிந்து கொள்ள கண்ணாடிக்குச் சென்றாள். ஜன்னல் அருகே அரவம் கேட்கவே பார்த்தாள். அப்பா ஆசையுடன் வாங்கின எருமை தன் கன்றுடன் உலா சென்று கொண்டிருந்தது.

கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அம்மாவின் குரல் கேட்டது. வெண்கலத்தில் இரும்புக் கரண்டி பட்டால் ஒலிக்கும் ஒலி.

''டீ துங்கா!''

நல்ல நாளிலேயே துங்கா வார்த்தைகளை வீணாக்க மாட்டாள். அவளை அழுத்தக்காரி என்பாள் அம்மா. மனத்தில் உள்ளதை வெளியே அவிழ்த்து விட மாட்டாள் என்கிற பெயர் கல்லூரி மாணவிகளிடையேயும் உண்டு. ஏன் காதலன் ஆனந்த் கூட அவளுடைய நீண்ட நேர மௌனங்களில் அலுத்துப் போயிருக்கிறான்.

இப்போது அம்மா கூப்பிட்ட குரலுக்கு, பதில் சொல்லும் வகையில் துங்கா நகர்ந்தாள். பின் தாழ்வாரத்தைத் தாண்டுகையில் அம்மா அவளைப் பார்த்தாள். பல் தேய்ப்பதற்கு முன் தன் பெண் வாய் திறந்து பேச மாட்டாள் என்று கமலம் அறிந்திருந்தாலும், அவளுடைய அவசரத்தில், மீண்டும், ''டீ, துங்கா!'' என்று அழைத்தாள்.

அம்மாவின் திசையில் திரும்பி, வாயை அழுத்தி மூடி, வெறும் பார்வையால், 'கொஞ்சம் இரு' என்று உணர்த்திவிட்டு, பற்பசையையும் பிரஷ்ஷையும் எடுத்தாள் துங்கா.

''வாய் நிறையக் கொழுக்கட்டை அடைச்சிருக்கு!'' என்று உறுமின கமலம் சற்றே நகரவும், வாசன், ''கமலூ!'' என்றார்.

''என்ன வேணும்?''

''காப்பி!'' கையில் அன்றைய தினசரியை வைத்துக் கொண்டு தொந்தியிலிருந்து நழுவிக் கொண்டிருக்கும் வேட்டியை வாசன் கெட்டியாகப் பிடித்து நின்றார்.

''எருமைக் காம்பிலேர்ந்து சொட்டறதுக்கு முன்னாலேயே டம்ளரிலே ஏந்திக் காய்ச்சிக் குடிச்சேள். அப்புறம் ஆறே கால் மணிக்கு அரை டம்ளர்... இப்ப மூணும் டோஸுக்கு ஏன் மூர்ச்சை போடறேள்?''

''துங்கா கலக்கறப்போ எனக்கும் கொஞ்சம் கலக்கட்டும். நெஞ்சு உலர்ந்து போறது...''

''உங்க நெஞ்சிலே என்னிக்கு ஈரம் இருந்தது...

மொதல்லே தாம்பரம் போய் நல்ல கறிகாயா வாங்கிட்டு வாங்க. திராட்சை, முந்திரி, ஏலம் எல்லாம் நன்றாகப் பார்த்து வாங்கிட்டு வாங்க. அவர்களெல்லாம் மூணு மணிக்கு வர்றாங்க...''

''துங்கா என்ன சொல்றாள்?''

''அவள் தொண்டையிலே பெரிய தாழ்ப்பாளா போட்டுட்டு அடம் பிடிக்கிறாள்.''

''பிள்ளை துபாய் பிள்ளைன்னு சொன்னியா?''

''தெரியும் அவளுக்கு!''

''ஊரு நன்னிலம்னு சொன்னியா?''

''அவள் ஊரையா கட்டிக்கப் போகிறாள்?''

''நம்ப ஊர்ப் பக்கமாச்சே...''

''என்னோட ஊரு மன்னார்குடி. அதுவும் முதல் தெரு. எங்க அம்மாவுக்குப் பத்து வேலி நிலம். அப்பாவுக்கு நாற்பது... நான் ஒரே பெண்...''

''கமலூ, இதெல்லாம் யார் கேட்டா? துங்காகிட்டே சொல்லு, பிள்ளையை நான் பார்த்தேன். ராஜா மாதிரி இருக்கான். ஆறு அடி உயரம். சிரித்த முகம். பேசறப்போ உதடு அசையறதில்லை. நிறையப் பணம். நல்ல படிப்பு. ஒரே பிள்ளை. ஏதோ ஒரு வீம்புக்காகப் போன வருஷம் துபாய் போனான். கல்யாணமானால் திரும்பிடுவான்!''

''எல்லாம் அங்கேயே இருந்து தொலையட்டும். அஞ்சைப் பெத்தேன். நாலைத் தள்ளி அனுப்பியாயிட்டது. இது ஒண்ணையும் அனுப்பிட்டால் சுமை தீர்ந்தது.''

''அதெல்லாம் சரி, கமலூ, துங்கா இன்னும் ஒண்ணுமே சொல்லலையே?''

''அதோ பல்லைத் தேய்ச்சிட்டு முகத்தைக் கூடத் துடைச்சுக்காமல் அவளே வர்றா. நீங்களே கேளுங்கோ.''

வாசன் ஆபீஸில் பியூனை விரட்டியிருக்கிறார். தெரியாத்தனமாகக் காம்பவுண்டைத் தாண்டி வரும் கிழட்டுப் பிச்சைக்காரர்களை விரட்டியிருக்கிறார். ஏன், தூர நின்று ஒரு கல்லை வீசி நாயைக்கூட விரட்டியிருக்கிறார். ஆனால் பெண் துங்காவிடம் அத்து மீறி ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை.

''துங்கு... துங்கு...''

''உனக்கும் ஒரு வாய்க் காப்பி வேணும்னு சொன்னே இல்லே அப்பா?'' என்று கூறிவிட்டு, துங்கா சமையலறையை நோக்கி நடந்தாள்.

வாசனுடைய வீட்டில் கமலம் ஒருத்திதான் ஒருமையில் பேசவில்லை. எல்லாம் 'வா அப்பா' 'போ அப்பா' தான்.

''இந்தக் கேஸ் ரொம்ப நல்ல கேஸ்!'' என்றார் வாசன்.

''அந்த லெக்சரர் தடியன் சொக்குப் பொடி போட்டு இவளே மயக்கி இருக்கானே... என்ன செய்யறது?''

''எல்லாம் என் தப்பு.''

''என்ன சொல்றீங்க?''

''அவன் டியூடரா இருந்த காலேஜிலே இவளைச் சேர்த்திருக்கக் கூடாது.''

''அவன் ஒண்ணும் சோஷியாலஜி டியூடரா இல்லே.''

''இருந்தாலும் ஒரே காலேஜாச்சே!'' என்ற வாசன், துங்கா வருவதைக் கண்டு, ''ரொம்ப தாங்க்ஸ் துங்கு!'' என்ருர்.

ஒரு சிறிய டம்ளரில் முக்கால் டம்ளர் காப்பி. அதை அவள் நீட்ட வாசன் வாங்கிக் கொண்டு சொட்டுச் சொட்டாக உறிஞ்ச லானுர்.

''ஏ ஒன் காப்பி... துங்கு, உனக்கு வரப் போறவன் ரொம்பக் கொடுத்து வைச்சிருக்கிறவன். இந்த மாதிரி காப்பி கிடைச்சால் அன்ன ஆகாரமே வேண்டாம்.''

''எத்தனை மணிக்கு வர்ருங்கன்னு சொன்னே அம்மா?''

கமலத்துக்குப் புல்லரித்துப் போயிற்று. பெண், தானுகவே விசாரிக்கிருள். இது ஒரு நல்ல அறிகுறி. வெற்றிச் சின்னம். எதிர் பாராத திருப்பம்.

''மூணு மணிக்கு, துங்கா!''

''நான் எத்தனை மணிக்கு இங்கே இருக்கணும்?''

''ஏன் எங்காவது வெளியே போகணுமா?''

''ஆமாம். இதோ இப்பக் குளிச்சிட்டு டிரெஸ் பண்ணிட்டு புறப்படறேன். இரண்டு மூணு அவசரப் பேட்டி இருக்கு... ஒரு லேடீஸ் கிளப்லே டௌரியைப் பத்தி செமினர் இருக்கு. ரிபோர்ட் பண்ண வேண்டிய விஷயம்!''

''வேறே யாரையாவது அனுப்ப முடியாதா துங்கு?'' என்ருர் வாசன்.

''பாம்பே மாகஸினுக்கு நான் மெட்ராஸ் கரஸ்பாண் டென்ட். எனக்குப் பதிலா வேறு ஆள் கிடையாது.

''சீக்கிரம் வந்துடும்மா!''

''ட்ரை பண்றேன்.''

துங்கா நகர்ந்தாள்.

''துங்கா...'' அம்மா.

''உம்.''

''நல்ல இடம். பெரிய படிப்பு. பார்க்க லட்சணமாயிருக் கான். உனக்கு வயது இருபத்தாறு. அவனுக்கு முப்பத்திரண்டு. நல்ல வயசுப் பொருத்தம்.''

''ஜாதகப் பொருத்தமும் பிரமாதம், துங்கு. சம சப்தமம். கடைசி நாள் வரை சண்டை சச்சரவு இல்லாமல் பரஸ்பர

அன்னியோன்னியமாக இருப்பீர்களாம்!''

துங்கா பதில் சொல்லவில்லை.

தன்னுடைய அறைக்குச் சென்றாள். கட்டிலில் உட்கார்ந்தாள். சிந்தித்தாள். சிரித்துக் கொண்டாள்.

வருகிறவனுடைய பெயர் ராமச்சந்திரன். என்.எஸ். ராமச்சந்திரன். ஸி.ஏ. பணக்காரன்.

ராமச்சந்திரன் என்கிற சாதாரண பண்டைக் காலத்துப் பெயர் யாரையும் நினைவு படுத்தவில்லை.

ஆனந்த் கண்முன் வந்தான். காதலன். அவளைவிட ஓர் அங்குலம் குள்ளம். முகத்தில் மீசை இருக்கிறது. ஆனால் ஆண் பிள்ளையின் கம்பீரம் போதாது. லட்சியவாதி. மூர்க்கத்தனமான காதல். ஆனால் அவளுடைய உடலின் செழுமையோ மார்பின் மதமதப்போ இன்னும் அவனைச் சுண்டி இழுக்கவில்லை. கல்யாணமான பிறகு, முதல் இரவின் போது மங்கிய வெளிச்சத்தில்தான் அவளைப் பூரணமாக அவன் அறிந்து கொள்வானும். பேத்தலான லட்சியம்.

திடீரென்று அவளையும் மீறி அந்த நாள் சம்பவம் ஒன்று நினைவில் முட்டி எழ, அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

ஆனந்த் தாலி கட்டுவதற்கு முன்பு அவனிடம் உண்மையைச் சொல்லி விட வேண்டும். இல்லாமல் போனால் மனச்சாட்சி வேளை கெட்ட வேளையில் விழித்துக் கொண்டு படாத பாடு படுத்தும்.

அவள் சரியாக ஒன்பது மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

'இரண்டரை மணிக்கே திரும்பி விடு' என்று அம்மா கெஞ்சினது அவள் காதில் விழுந்தது.



நன்னிலம் சிவராமன் ராமச்சந்திரன், தாயார் பார்வதியும் அக்கா சுந்தரியும் முன்னே நடக்க, பின்தொடர்ந்தான். சில அடி தூரம் பின்னுல் நன்னிலம் ராமச்சந்திரன் சிவராமன்—அவனுடைய தந்தை பழைய கால மிட்டாதார் மிடுக்குடன், இரண்டு அங்குல ஜரிகைக் கரை வேட்டியும் சில்க் முழுக்கை சொக்காயும் அதே சில்க் அங்கவஸ்திரமுமாய் மெதுவாக நடந்து வந்தார். மூன்று மணி வெய்யிலில் அவருடைய கொட்டைப்பாக்கு வைரக் கடுக்கன்கள் ஒளியைக் கக்கின. வலது கை மோதிர விரலில் ஒரு நவரத்தினம் இறுக, இடது கையில் இரு வைரங்களுக்கிடையே பச்சை ஜொலித்தது.

பார்வதியைப் பற்றியும் ராமச்சந்திரனுடைய அக்கா சுந்தரியைப் பற்றியும் கேட்கவே வேண்டாம். பகல் கொள்ளை அடித்தால் தற்கால விலைப்படி இரண்டு லட்சமாவது தேறும். வைர நெக்லஸ், வைர அட்டிகை, வைரக் கம்மல், பேசரி, இத்யாதி இத்யாதி.

வாசற்படியில் வாயெல்லாம் பல்லாகக் கமலம் வரவேற்ருலும் கண்களில் ஜீவன் இல்லை.

''வாங்கோ... வாங்கோ... மெதுவா வாங்கோ...'' என்ருள்.

வீட்டையும் சுற்றுப்புறத்தையும் கண் வீச்சால் அளந்து விட்டு அருகே இருக்கும் பெண்ணின்பால் பார்வதி பார்வையைச் செலுத்தினுள்.

ராமச்சந்திரன் படி ஏறும்போது பின்னுல் பார்த்தான். அப்பா சிவராமன் உலகப் பிரக்ஞையே இல்லாமல், வாயில் ஊறும் பன்னீர்ப் புகையிலைச் சாற்றில் மயங்கி நடந்து வந்து கொண்டிருந்தார்.

''வாங்கப்பா...'' என்ருன் ராமச்சந்திரன்.

''நீ போடா மொதல்லே,'' என்ற அவர் ஓர் உடைந்த பூந்தொட்டியாகப் பார்த்து வாயைக் காலி செய்தார். பிறகு, ''மொதல்லே கொப்புளிக்க ஒரு செம்பு தீர்த்தம் கொண்டு வரச் சொல்லு... வெற்றிலை சீவல் போட்டுக்கணும்,'' என்ருர்.

''இப்பத்தானேப்பா போட்டுட்டீங்க!''

''எதுக்குடா பின்னே இப்போ துப்பினேன். மறுபடியும் போட்டுக்கத்தான். சட்டுப் புட்டுனு அந்தப் பொண்ணைப் பார்த்துட்டுக் கிளம்புங்கோ. அரை மணியிலே புறப்படணும்னு டிரைவர்கிட்டே சொல்லியிருக்கேன்.''

''பொண்ணு பாடணும்னு அம்மா சொல்லியிருக்காப்பா!''

''டேப் பண்ணி சாவகாசமா அனுப்பட்டும்டா. சொச்சி பஜ்ஜியை முழுங்கிட்டுப் புறப்படுங்கோ. நான் திண்ணையிலேயே உட்கார்ந்துக்கறேன்.''

அவர் சொல்லி முடிக்கவும், கீர்த்தி வாசன், ''உள்ளே வரணும்... வாப்பா ராமச்சந்திரா, வா!'' என்றார்.

சிவராமன் வாசனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, ''நீர்தான் இந்த வீட்டைக் கட்டினீரா?'' என்றார். தமிழில் தஞ்சாவூர்க் காற்று வீசியது.

''ஆமாம்.''

''எப்பக் கட்டினீர்?''

''நாற்பது வருஷத்துக்கு மேலாச்சு!''

''சகிக்கலே. சரி, சரி. உம்ம வீடு. எனக்கென்ன... போடா ராமு, உள்ளே போ. சுவாமி, மொதல்லே ஒரு செம்பிலே தீர்த்தம் தாரும். வாயைக் கொப்புளிக்கணும்,'' என்றார்.

''லேசான சூட்டிலே தரட்டுமா?'' என்றார் வாசன்.

''நான் ஐஸ் வாட்டர்லே கொப்பளிக்கிறவன். அது கிடைக்கல்லன்னா ரோஸ் வாட்டர். அதுவும் இல்லேன்னாத்தான் தீர்த்தம். போய்க் கொண்டாரும்!''

வாசன் ஓடினார்.

''ஏண்டா ராமு, நீ என்ன பெண் பார்க்க வந்திருக்கியா, இல்லே வாசல்லேயே கூர்க்கா மாதிரி நிக்க வந்திருக்கியா?''

''உள்ளே ஏதோ கசமுசா அப்பா.''

''என்னடா கசமுசா... அம்மாவையும் அக்காவையும் மொதல்லே காரிலே ஏறச் சொல்லு.''

''அது இல்லேப்பா.''

''பின்னே என்ன? எங்கே இந்த ஆசாமி தண்ணி கொண்டு வர கிணறு தோண்டறானா?''

''அதோ வர்றார்.''

''போ... போ. என்ன கசமுசான்னு பாரு.''

''வாங்கோ, உள்ளே வாங்கோ,'' என்றார் வாசன் செம்பை நீட்டிக் கொண்டே.

''என்ன சுவாமி, நீர்? எப்படி செம்பாலே வாயிலே கொட்டிக்கறது? கூடவே ஒரு டம்ளர் கொண்டு வரவேண்டாம்?''

''இதோ!''

''கெடக்கட்டும். விடுங்கோ,'' என்ற அவர், ''இப்பவெல்லாம் இந்த இடத்திலே நிலம் எப்படிப் போறது?''

நிலம் எங்கேயும் போவதில்லை, இருக்கிற இடத்திலேதான் நிற்கிறது என்று சொல்ல உள்ளூர ஆசைப்பட்டாலும், சிவராமனைப் பார்த்த கணத்திலேயே பிறந்த இனம் தெரியாத பயத்தில், ''கிரௌண்ட் லட்சத்துக்குப் போறது,'' என்றார்.

''எவ்வளவு கிரௌண்ட்?''

''ஒரு ஏக்கர்!''

''அதாவது நூறு சென்ட்!''

''ஒரு அஞ்சரை சென்ட் ஒரு கிரௌண்ட். அதாவது பதினெட்டு கிரெண்டுக்கு கொஞ்சம் மேலே... சரியா?''

''ரொம்ப சரி!''

''என்ன விலைக்கு எப்ப வாங்கினீங்க?''

''நாற்பத்திரண்டிலே வாங்கினேன். பத்தாயிரம்.''

''கிரௌண்டுக்கா?''

''ஏக்கருக்கு.''

''பரவாயில்லையே. இப்ப பதினெட்டு லட்சத்துக்குக் கொஞ்சம் மேலே. பேஷ்! படு பேஷ்!''

''உள்ளே வாங்கோ,'' என்றார் வாசன் விடாப்பிடியாக.

''திண்ணையிலே ஒரு ஈஸி சேரைப் போடும்!'' என்றார் சிவராமன்.

உள்ளே பேச்சு ஆரவாரமாக நடந்து கொண்டிருந்தது.

''நாங்க இன்னிக்கு இப்போ உங்கப் பெண்ணைப் பார்க்க வருவோம்னு தெரியுமில்லையா? உங்க பெண்ணுக்கும் தெரியும் இல்லியோ?'' என்று கேட்டாள் பார்வதி.

''எப்படி அம்மா தெரியாமல் இருக்கும்? ஆமாம், சொஜ்ஜி, பஜ்ஜியெல்லாம் வைச்சிருக்காளே!'' என்றாள் சுந்தரி.

''அதை அப்புறம் பார்த்துக்கலாம்டி.... மொதல்லே பெண் வரட்டும்!'' என்றாள் பார்வதி.

கமலம் முதலில் மென்று விழுங்கினாள். பிறகு அதில் ஒரு பயனும் இல்லை என்பதை உணர்ந்தாள். உள்ளூரக் கோபம் குமைந்தது. துங்கா வேண்டுமென்று திட்டம் போட்டு அவளைத் தலை குனிய வைத்திருக்கிறாள். இதற்கு அந்த லெக்சரர் கடன்காரனும் உடந்தையோ என்னவோ....

''பேசாமல் இருந்தால் எப்படி?'' என்ற பார்வதி, ''ஏண்டி சுந்தரி, நீ என்ன சொல்றே?''

''ராமுவையும் ஒரு வார்த்தை கேளும்மா,'' என்றாள் சுந்தரி.

ராமச்சந்திரன் மயிரிழை கணத்தில் ரப்பர் போட்டிருந்த

நாற்காலியில் விறைத்த கட்டையாக ஆரோகணித்திருந்தான். மாநிற முகத்தில் மின் விசிறி சரியாக வீசாததால் வியர்வை முத்துக் கட்டியிருந்தது. முப்பத்திரண்டு வயதில் அழகான முன் வழுக்கை. அந்த ஆத்திரத்திலோ என்னவோ பின்புற வளர்ச்சியையும் தடுத்து, கால் மில்லி மீட்டருக்கு நிறுத்தியிருந்தான். க்ருகட்டும் இல்லை; மொட்டையும் இல்லை என்ற பரிதாப நிலை. அடிக்கொரு தடவை கூலிங் கிளாஸை எடுத்துக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டிருந்தான்.

அம்மா பார்வதி தன்னைப் பார்ப்பதை உணர்ந்த அவன், ''மொதல்லே டிபனைச் சாப்பிடும்மா. பெண் மெள்ள வரட்டும். பாவம், இந்த மாமி தன்னந்தனியாக இவ்வளவு பஜ்ஜி பண்ணியிருக்கிறாள்,'' என்றான்.

''அவனுக்குப் பாவம் பசி தாங்க முடியாது!'' என்ற சுந்தரி, ''சரி, கமலம் மாமி, டிபனைக் கொண்டு வாங்கோ,'' என்றாள்.

பார்வதி ஓர் அதட்டல் அதட்டினாள். ''பேசாம இருடி.''

அவளுடைய குரலைக் கேட்டு, திண்ணை ஈஸி சேரில் சாய்ந்து, பன்னீர்ப் புகையிலையின் ரசத்தில் மதி மயங்கிக் கிடந்த நன்னிலம் சிவராமன் நடுங்கிப் போனார்.

''என் ஒய்ஃப் யார்கிட்டே கோபிச்சுக்கிறாள்?'' என்றார்.

''பார்த்துட்டு வரட்டுமா?'' என்றார் வாசன். எப்படியாவது சிவராமனுடைய தொண தொணப்பிலிருந்து விடுதலை கிடைத்தால் போதும் என்கிற ஏக்கம் அவருக்கு.

''நீர் பேசாமல் உட்காரும். ஹங்... அப்புறம் என்னாச்சுன்னு கேக்கறீரா? என் அம்பது வேலி நஞ்சையிலே அவன் கண் பட்டுட்டது......'' என்று சிவராமன் விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடர்ந்தார்.

உள்ளே பார்வதியின் அதட்டலில் நடுங்காதவன் ராமச்சந்திரன்தான்.

''ஏம்மா வந்த இடத்திலே உன் வேஷத்தைக் கலைக்கிறே? அந்தப் பொண்ணு பாவம் தவிர்க்க முடியாத நிலையில் சீக்கிரம் வரேன்னுட்டுப் போயிருக்காள். என்ன தடங்கலோ என்னவோ, யார் கண்டது?''

''அதுக்காக டி.வி.யிலே அட்டை கட்டித் தொங்க விடற மாதிரி 'தடங்கலுக்கு வருந்துகிறோம்'னு எழுதித் தொங்க விட்டாப் போதுங்கறியா?'' என்றாள் சுந்தரி.

''அக்கா, நீ வந்ததே தப்பு. மூணு பேரா போறது அபசகுனம்னு உன்னை காத்தாடிக்கு வாலா ஒப்புக்குக் கூட்டிட்டு

வந்தோம். வால் இப்படி ஆடப்படாது,'' என்றான் ராமு.

''ரெண்டு பேரும் கொஞ்சம் பேசாமல் இருங்கோ!'' என்ற பார்வதி ''இப்போ என்ன செய்யறதா உத்தேசம்?'' என்று கமலத்தைப் பார்த்துக் கேட்டாள்.

''இரண்டரை மணிக்குள்ளே வந்துடறேன், கவலைப் படாதே அம்மான்னு சொல்லிட்டுத்தான் துங்கா போனாள். காணலையே...''

''சரி, நாங்க புறப்படறோம். மணி மூணே கால்.''—பார்வதி.

''மூணரை வரை பார்ப்போம்,'' என்றாள் சுந்தரி.

''பேர் என்னன்னு சொன்னை சுந்தரி?'' என்று கேட்டான் ராமு.

''துங்கா!''

''முழுப் பேர் என்னவோ?''

''துங்க மகாலட்சுமி,'' என்ற கமலம், 'மகாலட்சுமியை நான் சேர்த்துட்டேன். அவருக்குப் பிடிக்கலை.''

''ஓகோ அப்படியா?'' என்ற ராமு, ''இப்ப ஒரு ஜர்னல்லே மெட்ராஸ் கரஸ்பாண்டண்டா ஒர்க் பண்றாள் இல்லையா?'' என்றான்.

''ஆமாம்...... ஆமாம். அது சும்மாத்தான். கல்யாண மானை, நீங்க சொன்னால் போதும், வேலையை விட்டுடுவா,'' என்றாள் கமலம்.

''பெண்ணையே இன்னும் பார்க்கலை. அதுக்குள்ளே முகூர்த்தத்துக்குப் போறேளே!''—பார்வதி.

''இதுக்கு முன்னாலே வேறே ஏதேனும் வேலையிலே இருந் திருக்காளா?'' என்று ராமு கேட்க, சுந்தரி, ''ராமு, நீ என்ன இங்கே சென்சஸ்காரன் மாதிரி கேள்வி கேட்கவா வந்திருக்கே?'' என்று மடக்கினாள்.

''பேசாமல் இருடி! அவனுக்குக் கேட்கத் தோணறது, கேக்கிறான்!''—பார்வதி.

''தினசரி ஆபீஸ் போய் வர்ற மாதிரி ஒரு வேலைக்கும் துங்கா போனதில்லை...''—கமலம்.

''அப்படீன்னை?''—ராமு.

''அப்பப்ப தகவல் வரும். துங்கா சொன்ன டயத்துக்குப் போவாள்,'' என்றாள் கமலம்.

''இப்ப சொன்ன டயத்துக்கு வந்திருக்கிற மாதிரி!''—என்றாள் சுந்தரி, சிரிக்காமலே.

''தகவல் வந்து போறதுன்னை என்ன வேலை, எப்படிப்பட்ட வேலையாயிருக்கும்? மாடலிங்கா, இல்லே ரேடியோ அனௌன்ஸர் வேலையா, என்ன வேலை?''

''டூரிஸ்ட் கெய்ட்!'' என்றாள் கமலம்.

''ஓ! ஐ ஸி... துங்கா டூரிஸ்ட் கெயடா இருந்திருக்கிறாளா? அப்ப வெளியூரெல்லாம் கூடப் போயிருக்கணுமே?'' என்றான்.

கமலத்துக்குத் திடீரென்று பெருமிதம் பிறந்தது. துங்கா மேனாட்டுக்காரர்களை அழைத்துக் கொண்டு காஷ்மீர் போயிருக்கிறாள். பல அமெரிக்காகளை அழைத்துக் கொண்டு ஜிம்கார்பெட் நேஷனல் பார்க் போயிருக்கிறாள். அவர்களெல்லாம் பலபல விதமான பரிசுகள் அளித்திருக்கிறார்கள். மதுரை, ராமேசுவரம் என்றெல்லாம் காரில் போயிருக்கிறாள். அவள் பார்க்காத இடம் இல்லை.''

எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகச் சொல்லி நேரததை நகர்த்தி, துங்கா வரும் வரை அவாகளை அங்கேயே நிலைநிறுத்த வேண்டுமென்று அவள் பேச ஆரம்பித்தாள்.

ஆனால் பார்வதிக்குக் கமலத்தின் உள்மனம் புரிந்திருக்க வேண்டும்.

''நீங்க ஜியாகிரபி பாடம் ஆரம்பிக்கிற மாதிரி இருக்கு! நாஙக வர்றோம,'' என்று சொல்லி அவள் எழ, கமலத்தின் கண்கள் கனக்க 'ட்ரை' பண்ணின.

''டிபன் சாப்பிடுங்கோ. எந்த நேரமும் என் பெண் வந்துடுவா... இப்படி எல்லாம் வியர்த்தமா போறதேன்னு மனசுககு வேதனையா இருக்கு,'' என்றாள் அவள்.

''இதோ பாருங்கோ, கமலம்! நீங்க ஒரு அசட்டுத் தைரியத்திலே இதையெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டேள். ஆனா இநதச் சம்பந்தத்திலே உங்க பொண்ணுக்கு இஷ்டமில்லை. இல்லாமல் போனால் அவள் வராமல் இருப்பாளா?''

''குங்குமம் வாங்கிக்குங்கோ,'' என்றாள் பார்வதி.

''அதை வேண்டாம்னு சொல்ல மாட்டேன்!''

திடீரென்று ராமு பேசினான். ''அம்மா, எனக்குப் பெண்ணைப் பார்க்கணும். கல்யாணத்திலே இஷ்டம் இருக்கா இல்லையான்னு அவள் மூலமாகவே தெரிஞ்சுக்கலாம்!''

''குங்குமம் வாங்கிண்டாச்சு. வா போகலாம்!'' என்றாள் பார்வதி.

அத்துடன் எல்லாம் முடிந்தது.

நன்னிலம் சிவராமன பரம திருப்தியுடன் காரில் ஏறினார்.

அவருடைய பிள்ளை ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவது மகா பாவம். அவரை மீறி ஆயத்தம் செய்யும் பார்வதியை இரண்டு துண்டாக்க வேண்டும். அவரால் முடியாது. அதனால் பெண் பார்க்க வர இசைந்தார். ஆனால் கடவுள் அவர் பக்கம் இருககிறார். அதுதான் பெண்ணே வரவில்லை.

கார் புறப்பட்டது.



துங்கா தன் இயல்பான நிதான நடையில் ரயிலடியை அடைந்தாள். ஒன்பதரை ரயில் காலியாக வர, அதில் ஏறித் தாம் பரத்தை அடைந்தாள். இறங்கவில்லை. பத்து நிமிடங்களுக்குப் பிறகு அதுவே மந்தை மந்தையாக ஏறும் பயணிகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டது. பெண்களின் பெட்டியே என்றாலும் துங்காவுக்கு, யாரும் தன்னை உராய்ந்து விடக் கூடாது. எரிக்கும் கண்களால் பார்ப்பாள். சரக்கு எடுக்கச் செல்லும் வியாபாரப் பெண்கள் மடி மீது காலி கூடைகளை வைப்பார்கள். துங்காமேல் கூடை இடிக்கும். அவளுக்கு ஆத்திரம் வரும். ஆனால் அவர்களிடம் ஒன்றும் பேச முடியாதே! ரகளையாகி விடுமே!

ஆனால் அன்று அவள் எதையும் பொருட்படுத்தவில்லை. வீட்டில் அம்மாவும் அப்பாவும் பெண் பார்க்கும் படலத்துக்கு ஆயத்தம் செய்கிறார்கள். மூன்று மணிக்கு ராமச்சந்திரன் என்கிற ஒரு முப்பத்திரண்டு வயதுப் பிள்ளை வரப் போகிறான். அந்த வேளை யில் அவள் ஒரு சினிமா தியேட்டரில் ஆனந்த் பக்கத்தில் உட்கார்ந்து படம் பார்த்துக் கொண்டிருப்பாள். அதுவும் ப்ளூ டயமண்ட் தியேட்டரில்.

பதினொரு மணிக்கு லேடீஸ் கிளப்பில் செமினார் நடப்பது மட்டும்தான் உண்மை. மற்றபடி அவள் அம்மாவிடம் சொன்னதெல் லாம் பொய். ஆனந்த் என்கிற காதலன்—அவன் எந்த ஜாதியானால் என்ன, மதமானால் என்ன, பிரிவானால் என்ன, அவளுடைய எதிர் காலக் கணவன். ஆனந்துக்கு ஓர் ஆண் மகனுக்கு இருக்கக் கூடிய, இருக்க வேண்டிய தைரியமோ, துணிச்சலோ, ஆணவமோ இல்லா தது பெரிய குறைதான். இருந்திருந்தால் அப்பா ராகவாச்சாரியை யும் அம்மா செண்பகவல்லியையும் தூக்கி எறிந்துவிட்டு, பஸ்ஸோ ஆட்டோவோ பிடித்து ரிஜிஸ்திரார் ஆபீசுக்கு வந்து போட

வேண்டிய இடத்தில் கையெழுத்தைப் போட்டு, தேன் நிலவுப் பயணத்துக்கு டிக்கெட் வாங்கியிருப்பான். வாங்கவில்லை. அவளை வாங்கவும் விடவில்லை. திருமணமானதும் முதற் காரியமாக ஆனந்தின் மீசையை மழிக்க வேண்டும். அவனாக அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்றால் அவளே, அவன் குறட்டை விடும்போது கத்திரிக்கோல் மற்றும் பிளேடால் சின்னாபின்னம் செய்து விடுவாள். இது உறுதி.

ஒரு சமயம் ஆனந்த் கொடைக்கானலில்தான் தேன் நிலவைக் கொண்டாட வேண்டும் என்று கூறியிருந்தான். அவள் பதில் சொல்லவில்லை. வேளை வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று பேசாமல் இருந்து விட்டாள்.

ரயில் நின்று நின்று ஓடியது. மீனம்பாக்கம் தாண்டியாகி விட்டது. எட்டிப் பார்த்தாள். நெடுஞ்சாலையில் லாரிகளும் பஸ் களும் கார்களும் பைத்தியம் பிடித்து ஓடிக் கொண்டிருந்தன.

கொடைக்கானலை அவள் மறக்க மூன்று வருடங்களாக முயன்று கொண்டு வருகிறாள். முடியவில்லை. ஒரு நொடி நேர பலவீனத்தில் நடக்கக் கூடாதது நடந்து விட்டது. எல்லாவற்றிற்கும் துணிந்த கங்கா, யாரையும் லட்சியம் செய்யாத கங்கா, எந்த ஆண் பிள்ளையின் விரகப் பார்வையையும் மதிக்காத துங்கா எப்படித் தன்னை அன்று இழந்தாள்? தன்னையே கொடுத்தாள்? அந்த வேளை, அந்தச் சில நிமிடங்கள் எந்தச் சக்தி அவளை அப்படி ஆட்கொண்டது? இன்று அதை நினைத்துப் பார்த்த போது அவளுக்கு வெட்கம் வர வில்லை. மாறாக எரிச்சல் வந்தது. விசுவாமித்திரன் தவ நிலையிலிருந்து கண் விழித்து மேனகையைக் கூடியிருக்கலாம். நூற்றுக் கணக்கான முனிவர்கள் தங்களுடைய உறுதியுடனான இலட்சியத்திலிருந்து தவறியிருக்கலாம். அகல்யா தன்னையே மறந்து இந்திரனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொள்ள ஒரு கணம் துடித்திருக்கலாம். ஆனால் துங்கா இவர்களை எல்லாம் விட ஒரு படி மேலானவளா யிற்றே?

எப்படி அந்தச் சில நிமிடங்கள் தன்னை இழந்தாள்? இழக்கும் காலத்தில் மெய் மறந்தாள்? மெய் மறந்த காலத்தில் சுகத்தின் எல்லையைத் தொட்டாள்? ஏன் அந்தச் சில நிமிட நேரத் தில், தான் செய்வது மாபெரும் தப்பு என்று அவளுக்குத் தோன்ற வில்லை?

ரயில் ஓடியது.

கிண்டி தாண்டியாகிவிட்டது.

டூரிஸ்ட் கெய்டாகப் பல பேர்களுடன் பல இடங்களுக்குச் சென்றிருக்கும் அவள், நூற்றுக்கணக்கான வாய்ப்புக்கள் பிறந்த போதும், ஆயிரக் கணக்கான ரூபாய்கள் கிடைக்க வழிகள் இருந்த போதும் வழி தவறியதில்லை. ஒரு சமயம் ஒரே ரயிலில் ஒரே பெட்டி

யில் அவளும் ஒரு பிரெஞ்சுக்காரனும் பிரயாணம் செய்தார்கள். இரண்டு பேர் மட்டுமே தூங்கக் கூடிய கூபே. பிரெஞ்சுக்காரனுக்கு ஓர் இந்தியப் பெண் படுக்கையில் எப்படி இருப்பாள் என்று அறிய ஆவல் இருந்தது. இரவு இரண்டு மணி நேரம் உறிஞ்சி உறிஞ்சி பிராந்தி சாப்பிட்டதில் ஆவல் வெறியாக மாறியது. அவளைத் தொட்டான். அவள் அவன் கையை உதறினள். அவளுடைய தோளைப் பற்றினன். அவள் அவனுடைய கைகளைக் கடித்தாள். அவளுக்கு மட்டும் அன்று பெண்மையின் தைரியம் இல்லாமலிருந் தால் அவள். அழிந்து போயிருப்பாள்.

அன்று ரயிலில் தப்பிய துங்கா எப்படிக் கேவலம் தாளுக ஆசைப்பட்டு, சிலந்தி வலையில் விழும் பூச்சியைப் போல வீழ்ந்தாள்?

அவனுடைய கண்களில் வீசிய கவர்ச்சியா? அவனுடைய உடற்கட்டின் வலிமையா? அவனுடைய அமைதியான முகமா? நிறுத்தி நிதானமாகப் பேசும் தன்மையா? எதில் அவள் மயங்கினள்?

''ஆண்கள் கண்களால் காதல் கொள்ளுகிறர்கள். பெண்கள் காதுகளால் காதல் கொள்ளுகிறர்கள்,' என்று ஆஸ்கார் ஒயில்ட் சொன்னர். அவளைப் பொறுத்த வரையில் இது உண்மை யாகிவிட்டது.

அன்று கொடைக்கானலின் சூழ்நிலையும் சதி செய்தது.

அவன் பெயர் ராம்ஜி.

அமெரிக்காவில், கலிஃபோர்னியாவில் பி.எச்டி செய்து கொண்டே சம்பாதிக்கிறன். அவனுடைய அப்பாவும் அம்மாவும் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பே அமெரிக்காவுக்குக் குடியேறி விட்டார்கள். இந்தியாவில் கோயமுத்தூர் மாவட்டத்தில் ஏதோ ஒரு கிராமம்தான் சொந்த ஊர் என்று அவனுடைய தாயார் சொல்லியிருக்கிறளாம். இந்தியாவைப் பார்க்க வேண்டும் என்ற ஒரே ஆசையில்தான் வந்திருக்கிறனும்.

ஊட்டியைவிடக் கொடைக்கானல்தான் மனத்துக்குப் பிடித்திருக்கிறதாம். நயாகரா பார்த்தவனுக்கு ஸில்வர் காஸ்கேட் ஒரு சின்னக் கொசு. க்ராண்ட் கான்யனை மணிக் கணக்காக வியப்புறப் பார்த்தவனுக்கு ஸ்யூஸைட் பாயின்ட் ஒரு சாதாரண பள்ளம்.

லேசான தூறல். ஜூன் முதல் வாரமானதால் வெய்யிலைத் தள்ளிக் கொண்டு இதமான குளிர் வீசியது. ஒரு செவ்வாய்க்கிழமை. அவளும் அவனும் அன்று மாலை குறிஞ்சி முருகன் கோவிலுக்குச் செல்லுவது என்று திட்டமிட்டிருந்தார்கள். வந்து மூன்று நாட்களாகி விட்டன. மறுநாள் அதிகாலை. அவன் இந்தியா வந்ததும் தாற்காலிக உபயோகத்துக்கு என்று வாங்கிய காரில், (வாடகை வண்டிகளில் அவனுக்கு நம்பிக்கை இல்லையாம்; அவன் ஓர் அமெரிக் கன். இந்திய மண்ணில் பிறந்தவர்களுக்கு அமெரிக்க மண்ணில்

பிறந்த அமெரிக்கன்.) மதுரை சென்று ஒரு நாள் தங்கிப் பிறகு தேக்கடி செல்ல வேண்டும்.

இருவரும் பில்லர் ராக்ஸைப் பார்த்தவாறு நின்றிருந்தார்கள். இரு மலைத் தூண்கள் செங்குத்தாக, கம்பீரமாக வானை நோக்கி யாருமே எங்கள் உச்சியைத் தொட முடியாது என்று மார் தட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அந்த மலை உச்சியையும் யாரோ ஒருவன் அடைந்து ஒரு சிலுவையையும் பதித்திருந்தான். வெகு திறமையாக மலை ஏறும் பழக்கம் உடைய ஒருவனால்தான் இந்தக் காரியத்தை நிறைவேற்றியிருக்க முடியும் என்றான் ராம்ஜி.

திடீரென்று வெய்யில் மறைந்து சாரல் வளர்ந்து மழையாகப் பொழிந்தது.

காருக்குள் ஓடினார்கள்.

கார் டூரிஸ்ட் விடுதிக்கு ஓடியது.

விடுதியில் அவள் அவசர அவசரமாகத் தன் உடைகளைக் களைந்தாள். அவன் ஜட்டியும் பனியனுமாக நின்ற போது அவளுடைய கண்கள் தாமாகத் தாழ்ந்தன. தன் உடைகளை மாற்றக் குளியலறையை நோக்கி நடந்தாள். நடக்கையிலேயே அவனுடைய ஆண் உடல் அவளைச் சிலிர்க்க வைத்தது.

குளியலறை.

சாளரக் கண்ணாடி வழியாகப் பார்த்தாள். அடை மழை. இருட்டி விட்டது. விளக்கைப் போடத் தோன்றவில்லை.

நனைந்து போன முழுக்கை ஸ்வெட்டரைக் கழற்றி ஆணியில் மாட்டிய அவள் ஜீன்ஸை உருவி எடுத்தாள். ஏற்கனவே கழட்டிய மஞ்சள் நிற ஷர்ட் காலடியில் கிடந்தது.

கடைசி ஆடையை அவள் அறையிலிருந்து உருவும் போது அவள் உடம்பில் அவன் கை பட்டது. மெய் சிலிர்க்க நரம்புகள் நடுங்க அவள் சிலையாக நிற்க அவன் அவளை இறுகப் பற்றினான். ஓடும் ரயிலில் பிரெஞ்சுக்காரனை அடக்கிய அவளுடைய கைகள் செயலிழந்து நின்றன. அவளுடைய பருவம் அவளுடைய லட்சியங்களை முறியடிக்க, மனம் திடீரென ஓர் இன்ப லாகிரியில் திளைத்தது.

அதன் பிறகு அவனும் அவளும் பேசிக் கொள்ளவேயில்லை.

மதுரை வந்ததும் விமான டிக்கெட்டுக்கான பணத்தையும், அவளுக்குச் சேர வேண்டிய தொகையையும் மேஜை மீது வைத்து விட்டு அவன் வெளியேறினான்.

முந்தின நாள் சம்பவம் ஒரு வாழ்க்கைப் பிணைப்புக்கு ஆதாரம் என்று நினைத்து, அதனாலேயே தான் செய்த குற்றம் மன்னிக்கப்படக் கூடியது என்று மனம் தேறியிருந்த துங்கா சோர்ந்து போனாள்.

ராம்ஜி!

எப்படிப்பட்டவன்? நன்றாகப் பழகுகிறான். பேசினான். மென்மையான குரல். ஐரோப்பிய சங்கீதம் தெரியும். வலிமையான

உடற்கட்டு.

ஆனல்... ஆனல்... மோசடிக்காரன்...

அவளை உபயோகித்துக் கொண்டான். அவனுடைய மணத்துக்கு அவள் கறிவேப்பிலை ஆனள்.

அவனைத் தேடி ஓட அவள் முயன்றாள்.

ஏர்போர்ட்டில் விசாரித்தாள். கார் நம்பரை வைத்துக் கொண்டு விசாரித்தாள். அப்போதுதான் தான் ஏமாந்து போன விவரம் புரிந்தது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் ஒரு மில் அதிபருடைய கார் என்று தெரிய வந்தது. ஓடினள். மில் அதிபரிடம் கெஞ்சினள். அவர் மசியவில்லை. தன்னுடைய பல கார்கள் பல நண்பர்களுக்கு அடிக்கடி பயன்படுகின்றன. என்று மட்டும் சொல்லி வெளியேற்றினர்.

யாரிடம் என்ன சொல்லி, எப்படி முறையிட?

ராம்ஜியை எங்கே தேடுவது? வாங்கிய கார் என்று பொய் சொன்னவன் கூறிய மற்ற விஷயங்களெல்லாம் உண்மை என்று எப்படி நம்புவது?

அமெரிக்காவா?

கலிஃபோர்னியாவா?

அமெரிக்கன்?

பி.எச்டியா?

உள்ளுக்குள் குமுறிக் கொண்டு வெளியே நிதானமாக அவள் நாட்களைக் கடத்தினள்.

'டூரிஸ்ட் கெய்ட்' வேலையை உதறினள். அதனல் இனி ஆபத்து வராது என்றாலும் ஏன் நடந்ததை என்றென்றும் நினைவு படுத்த அதில் தொடர வேண்டும்?

வீட்டில் அம்மா, அப்பா தொந்தரவு ஒரே விஷயத்தில் தான் இருந்தது. திருமணம். ஏற்கனவே ஒருவனுடன் முதல் இரவு (இல்லை, முதல் முன்மாலைப் பொழுது) நடத்தியாகிவிட்டது. கல்யாணமாஞல்?

நாட்கள் சென்றன.

தவருமல் தினசரி காலண்டரைப் பார்த்தாள். நாள் தவறி விடுமோ என்ற அச்சம் பீதியாக உருவெடுத்தது.

தெய்வங்களில் அவ்வளவாக ஒரு பிடிப்போ நம்பிக்கையோ இல்லா விட்டாலும் இப்போது இல்லாத தெய்வங்களை எல்லாம் கூட உதவிக்கு அழைத்தாள்.

துங்காவின் அதிர்ஷ்டம் எந்த விபரீதமும் நிகழவில்லை.

மெல்ல மெல்ல அவள் மனம் தேறினள். நடந்ததை ஒரு விபத்தாகக் கருதி மறக்க முயன்றாள். முடியவில்லை. அவ்வப்போது கடிக்கும் மூட்டைப் பூச்சியைப் போல் நாளுக்கு ஒரு தடவையாவது கொடைக்கானல் கட்டில் கடித்தது.

அவனை முழுக்கவும் மறக்க முடியாத நிலையில்தான்


எதிர்பாராதவிதமாக, பழைய தெரிந்த அரைகுறை பரிசயத்தின் சந்திப்பு ஏற்பட்டது.

ஆனந்த் ஒரு நாள் அவளை ஒரு கல்லூரி பட்டிமன்றத்தில் சந்தித்தான். பெண்கள் கல்லூரியில் அவனுக்கு என்ன வேலை என்று அவள் யோசித்தாள். அவன்தான் நடுவர் என்று அறிந்த போது ஆச்சரியப்பட்டாள்.

அன்று ஆனந்த் அவளைத் தன்னுடன் டிபன் சாப்பிட அழைத்தான். உடனே ஏற்றுக் கொண்டாள்.

பழைய காமத்தை மறக்க ஒரு புதுக் காதல் தேவைப் பட்டது.

ராம்ஜியை மறக்க நிச்சயமாக ஓர் ஆனந்த் அவசியம்.



லேடீஸ் கிளப் கூட்டம் அமோகமாகத் துவங்கி, ஆத்திர ஆவேசத்துடன் நகர்ந்து கடைசியில் ஒருவழியாக அவசரத்துடன் முடிந்தது. துங்கா அலுத்துக் கொண்டாள். எல்லாம் கீறல் விழுந்த கிராமபோன் தட்டு. வரதட்சணைக் கொடுமை. பெண்களைக் கொலை செய்த புகுந்த வீட்டுக்காரர்கள். இன்னும் பெண்கள் அடுப்படியில் அடிமைகள். யாரும் எந்தப் புதுக் கருத்தையும் வெளியிடவில்லை. பெண்களிடமே ஒரு புதுமையும் இல்லையோ?

துங்கா கடிகாரத்தைப் பார்த்தாள்.

ஒன்று.

வயிற்றில் காற்று ஊளைவிட்டது.

பத்திரிகை வர்க்கம் என்ற ஒரு காரணத்துக்காக அவளுக்கு சூடாகிப் போன கூல் ட்ரிங்க் கிடைத்தது. யாரோ ஒரு பெண் வீட்டில் தயார் பண்ணிப் பெருமையுடன் கொண்டு வந்திருக்கிறாள். அதை ஒரு பெரிய பிளாஸ்க்கில் கொண்டு வந்திருக்கக் கூடாதோ? துங்கா குடித்துத் தொலைத்தாள். லேடீஸ் கிளப் தலைவி சாவித்திரி கமல்நாத் ஆரம்பத்திலேயே துங்காவைத் தனியாக அழைத்து, அவளிடம் ஒரு முக்கிய சமாசாரம் பேச வேண்டும் என்று கூறியிருந்தாள்.

இப்போது கூட்டம் முடிந்து கூடம் காலியாகிக் கொண்டிருந்தது. சாவித்திரி இரு காரியதரிசிகளுக்கு ஏதோ உத்தரவுகள் போட்டுக் கொண்டிருக்க, துங்கா பொறுமையுடன் காத்திருந்தாள். யார் கண்டார்கள்? சாவித்திரி அவளை மவுண்ட் ரோடில் ஏதேனும் ஓர் இடத்தில் ட்ராப் செய்யக் கூடும். அப்படிச் செய்தால் சௌகரியமாக ஓட்டலுக்குச் சென்று பசி தீரச் சாப்பிடலாம். பிறகு ஆனந்துக்கு டெலிபோன் செய்து தியேட்டருக்கு வரச் சொல்லலாம். சினிமா டிக்கெட்டுக்குப் பிரசினையே இல்லை. முக்கால் வாசி தமிழ்ப் படங்களும் டப்பா. ஓரிரண்டு நல்ல படங்கள் நூறாவது காட்சியைத் தாண்டியாகி விட்டது.

திடீரென்று தலைவியின் பார்வை அவள் மீது நிலைக்க, துங்கா மேடையை நோக்கிச் சென்றாள்.

''என்னம்மா துங்கா? எல்லாம் எப்படிப் போச்சு?''

''இதென்ன கேள்வி மேடம். நீங்க தலைவியா இருக்கறப்போ எது எங்கே தப்பாகப் போக முடியும்?''

''என் பேச்சைக் குறிச்சுக்கிட்டியா?''

''அது ஒண்ணுதான் குறிச்சுக்கும்படியா இருந்தது.''

''போட்டோவும் வரணும்.''

''கண்டிப்பா... லேட்டஸ்டா எடுத்தது ஒண்ணு கொடுங்க.''

''ஊஹூம்! ரொம்ப நரை இருக்கு. ரெண்டு வருஷம் முன்னலே எடுத்ததைத் தரேன்!'' என்றாள் சாவித்திரி.

''சரி, கொடுங்க.''

''துங்கா...''

''என்ன மேடம்?''

''நேத்து என் வீட்டுக்கு இது வந்தது!'' சொல்லிவிட்டு, ஹாண்ட் பாக்கில் தலைவி கையை விட்டாள். கை வெளியே வரும் போது, மங்கிப் போன கறுப்பு நிறத்தில் ஒரு சிறிய டயரியும் வெளியே வந்தது.

''இது என்ன மேடம்?''

''தலை கால் புரியவில்லை. புரட்டிப் பார்த்தேன். நீ படிச்சுப் பாரு!''

''யாருடைய டயரி?''

''அதுவும் தெரியவில்லை. ஊர் பேர் எதுவும் முன்னலோ பின்னலோ இல்லை. பக்கத்துக்குப் பக்கம் பெண்களைப் பத்தின விவரம்தான்.''

''நான் என்ன செய்யணும்?''

''தெரியாது. எதுக்காகப் பெண்களுடைய பெயர் நிறம், குணம், இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பத்தி எழுதியிருக்காங் கன்னு தெரியலை.''

''நான் பார்க்கிறேன்.''

வாங்கினுள்.

1980'ம் வருட டயரி.

''பழைய டயரி,'' என்றுள்.

''முதல் பெண்ணுக்கு எதிரே, 12.6.1980ன்னு இருக்கு,'' என்ற சாவித்திரி, ''ஒருவேளை அவளை அன்னிக்குக் கொலை செய்திருப்பானே?''

''எத்தனை பெயர்கள் இருக்கு?''

''எண்ணவில்லை. நிச்சயமாக எழுபது எண்பதாவது இருக்கும். கடைசித் தேதி 1984'ல் இருக்கிறது.''

''நான் படிச்சுப் பார்க்கிறேன். அது சரி, ஏன் இது உங்களுக்கு வரணும்?''

''அதான் புரியலை. டயரி பூரா பெண்கள் பேர்தான் இருக்கு. நான் ஒரு லேடீஸ் கிளப் தலைவி. அதனுலே விஷமமா எனக்கு அனுப்பி வச்சிருக்காங்கன்னு தோணுது.''

''ஓ கே மேடம், நான் ஒரு தடவை படிச்சுப் பார்க்கிறேன். நமக்குத் தெரிஞ்ச பெண் பெயர் ஏதானும் இருக்கணும். இல்லாமல் போனு உங்களுக்குப் பிரத்யேகமாக இதை அனுப்ப நியாயமில்லை,'' என்ற துங்கா டயரியை ஹாண்ட் பேக்கில் போட்டுக் கொண்டு நகர்ந்தாள்.

''கொஞ்சம் இரு, துங்கா.''

''என்ன மேடம்?''

''எழுபது எண்பது பெண்கள் பெயரை எழுதியிருக்கானே... கொலையாகத்தான் இருக்குமோ?'' என்றுள் சாவித்திரி.

''நிச்சயமாக இருக்காது. இந்த அஞ்சு வருஷத்திலே இத்தனை பெண்களை ஒருவன் கொலை செய்திருந்தா, நம்ம தேசமே பரபரத்துப் போயிருக்கும். அவன் பெயர்—அதாவது கண்டுபிடிச்சிருந்தா கின்னஸ் புக்கிலே வெளியாயிருக்கும். மகாராஷ்டிரத்திலே ராமன் ராகவ் கூட, இங்கிலண்ட்லே ஜாக்—தி ரிப்பர் கூட இவ்வளவு பேர்களைக் கொலை செய்ததில்லை.''

''நீ என்ன நினைக்கிறே?''

''அவனுடைய சிநேகிதிகளாக இருக்கலாம். அல்லது சினிமாவுக்கு ஏத்த முகங்கள் பெயரை எழுதியிருக்கலாம். அல்லது தன் திருமணத்துக்கு யார் யாரையெல்லாம் அழைக்க வேண்டும் என்று குறித்து வைத்திருக்கலாம்.''

''அதை எண்பதிலிருந்து எண்பத்தினுலு வரையிலுமா எழுதுவான், துங்கா. நன்ருகப் படிச்சுப் பார். சந்திச்ச இடம், தேதி, முகவரி, வயசு, நிறம் எல்லாம் இருக்கு.''

துங்கா பல்லைக் கடித்துக் கொண்டாள்.

''சரி, பார்க்கிறேன், மேடம்.''

''எனக்கு இந்த டயரி திரும்பி வரணும்.''

''அப்படியா?''

''உன்னல் துப்பு எதுவும் துலக்க முடியலேன்னு நான் போலீஸ்லே கொடுத்திடுவேன். துப்புத்துலக்கி இந்த ஆள் டேஞ்சர்னு பட்டாலும் அவர்கிட்டே ரிப்போர்ட் பண்ணிடுவேன். அஸிஸ்டெண்ட் கமிஷனர் இப்ப யார் தெரியும் இல்லியா?''

''தெரியும், மேடம். உங்க தம்பி. ஏன் முன்னடியே அவர் கிட்டே காட்டலே?''

''ஒரு காரணமாகத்தான். அதை இப்பச் சொல்ல நான் விரும்பலே,'' என்ருள் சாவித்திரி. பிறகு, ''ஒரு வாரத்துக்குள்ளே நீ இன்வெஸ்டிகேட் பண்ணு. விஷயம் சுவாரசியமாக இருந்தா, நீண்ட தொடர் கட்டுரை எழுதி உன் பத்திரிகைக்கு அனுப்பலாம். ஆனல் எப்படியும் டயரி என் கைக்கு வரணும். புரிஞ்சுதா?''

''ஓ.கே. மேடம்.''

துங்கா கிளப்பிலிருந்து நேரே நந்தனத்திலுள்ள தன் காரியாலயத்துக்கு வந்தாள். ஒரு பெரிய கட்டிடத்தின் மாடியில் ஒரு அறை. வெறும் பத்திரிகை நிருபரானதால், பம்பாய்ப் பத்திரிகை அறை மட்டும்தான் கொடுத்திருந்தது. வேறு சிப்பந்திகள் யாரும் இல்லே.

சாவியை எடுத்தாள்.

கதவைத் திறந்தாள்.

மின்விசிறியைப் போட்டாள்.

கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி இரண்டு.

ஆனந்துக்கு டெலிபோன் செய்து அவனே ஒரு தியேட்டருக்கு வரச் செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டிருந்த அவளுக்கு சினிமா ரசிக்கவில்லே. டயரி ஒரு பயத்தை அவளுள் புகுத்தி இருந்தது.

இன்னும் ஒரு மணி நேரத்தில் அவள் வீட்டுக்கு யாரெல்லாமோ வரப் போகிருர்கள். அவளேப் பெண் பார்க்க அவர்கள் அங்கே இருக்கும் போது துங்கா அவளுடைய காரியாலய அறையில் டயரியில் மூழ்கி இருப்பாள்.

முதலில் பெயர்களேப் படிக்க வேண்டும். பெண்களின் வயதுகளிலிருந்தும் மற்ற விவரங்களிலிருந்தும் எழுதியவனுடைய நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அவள் ஒரு முடிவுக்கு வருவாள்.

படிக்கலானுள்.

சொர்ணம் —22 —மாநிறம். மார்பு செழுமையாக இல்லே. முதலில் சிணுங்கினுள். தேன் நிலவு ஜப்பானில். முகவரி...

ஜயா —23 —சிகப்பு— குள்ளம். தொட்ட இடமெல்லாம் சதை. ஒரு நாள் முழுதும் தேனொழுகப் பேசியும் புண்ணியமில்லை என்ற நிலை பிறந்தது. ஆனால் ஃபைவ் ஸ்டார் ஓட்டல் அறைக்குள் வந்ததும் திடீரென்று மனம் மாறினாள்...

படிக்கப் படிக்கத் துங்காவுக்கு முகம் வியர்க்கலாயிற்று. லேடீஸ் கிளப் தலைவி சாவித்திரி ஒருவடிகட்டின முட்டாள். ஆழ்ந்து படிக்காமல் வெறும் பெயர்களையும் முகவரியையும் வைத்துக் கொண்டு ஒரு மட்டித்தனமான முடிவுக்கு வந்திருக்கிறாள். டயரியை எழுதியவன் ஒரு கயவன். ஒரு பொறுக்கி. தன் பிரத்யேக சாமர்த்தியத்தாலும் பேச்சின் நயத்தாலும் பல பெண்களின் பெண் மையை அனுபவித்திருக்கிறான்.

பக்கங்களைப் புரட்டிக் கொண்டே வந்தவள் 1982 ஜூனுக்கு வந்தாள். வந்தவள் உடல் நடுங்க அங்கேயே நின்றாள். அவளுடைய விழிகள் அசையாமல் குத்திட்டு நின்றன. உடலே ஜில்லிட்டுப் போனாற் போன்ற உணர்ச்சி.

'ராஸ்கல்' 'ராஸ்கல்' என்று பல முறை நாக்கு முணுமுணுக்க முயன்றது.

அவள் ஒரு சிறப்புக் கேஸ் போலிருந்தது. ஒரு முழுப் பக்கம் ஒதுக்கி இருந்தான்.

துங்கா தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டு மீண்டும் ஒரு தடவை வரி வரியாக விழுங்கிக் கொண்டு படித்தாள்.

''என் வாழ்க்கையிலேயே பொன்னான நாள். இதுவரை அனுபவித்திராத சுகம். அதிபுத்திசாலியின் அழகான உடல்—யாருக்கும் அவ்வளவு எளிதில் கிடைக்க முடியாத உடல்—எனக்குக் கிடைத்தது. வாய் வார்த்தையாலோ மிரட்டலினாலோ அவளை ஆட் கொள்ள முடியாது. அவள் மனத்தைத் தொட்டால்தான் என் திட்டம் முடியும் என்று ஆரம்பத்திலேயே தோன்றியது.

ஆங்கில உச்சரிப்பு பிரமாதம். சிரிக்கும்போது கண்களில் நட்சத்திரங்கள் பூத்தன. கன்னங்களில் குழி விழுந்தது.

நல்ல உயரம். நல்ல சிவப்பு. குளியலறையில் அவள் முக்கால் நிர்வாணமாக நின்றபோது என் கை அவள் தோளில் பட, அவள் உடல் சிலிர்த்தது. மூன்று நாட்களாக அவளைத் தொடா மலேயே பழகியதன் விளைவோ என்னவோ, என் மீது அவளுக்கு அன்பும் அபிமானமும் ஏற்பட்டிருக்க வேண்டும். என் அமெரிக்க வாழ்க்கையோ, என்னுடைய பணக்காரக் கோலமோ அவளை பாதிக்கவில்லை. என் மனம்தான் அவள் மனத்தைத் தொட்டிருக்க வேண்டும். மனம் மயங்கிய நிலையில், உடல் சிலிர்த்த நிலையில் அவள் 'என்னுடையவளானாள். வழக்கமாகத் தோன்றும் வெறி என்னிட மிருந்து வெளிப்படாதது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவளை

ஒரு மென்மையான பூப்பந்தாக நான் மதித்தேன்.

அழகான உடல். அழகான முகம். அழகான பெயர். துங்கா... எனக்கு என் வாழ்க்கையில் இந்த வெறி அடங்கும் நாள் பிறந்தால்—பிறக்க வேண்டும் என்று மனதாரப் பிரார்த்திக்கிறேன்—நிச்சயமாகத் துங்காவைத் தவிர வேறு யார் கழுத்திலும் நான் தாலி கட்ட மாட்டேன். அதன் பிறகு வேறு எந்தப் பெண் முகத்தையும் ஏறிட்டும் பார்க்க மாட்டேன். இது என்னைப் பெற்ற அம்மா அப்பா மேல் ஆணை.

துங்கா ஒரு டூரிஸ்ட் கெய்ட். என்னிடம் நடந்து கொண்டதுபோல் வேறு எந்தப் பயணியிடமும் அவள் நடந்து கொண்டிருக்க மாட்டாள் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது.

அவள் எங்கிருந்தாலும் அமோகமாக வாழ வேண்டும்.

பெயர்—துங்கா உயரம்—5 அடி 6 அங்குலம். நிறம்—சிவப்பு. முகவரி...... பல்லாவரம் போஸ்ட்.

பின்குறிப்பு: துங்காவிடம் ஒரு பணக்காரத் தன்மை இருக்கிறது. ஒருவேளை அவள் பணக்கார வீட்டுப் பெண்ணோ?''

இரண்டாம் தடவை, மூன்றும் தடவை என்று பல் தடவைகள் துங்கா படித்தாள்.

அவளுக்கு ஆளைத் தெரியும்.

உயரம்; சிகப்பு; குறுந்தாடி. தேனொழுகச் சிரிக்கும் முகம். மென்மையான பேச்சு.

கோவை மில் அதிபர் விவரம் கூற மறுத்து விட்டார்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் அணுகினால் புண்ணியம் இருக்காது. மில் அதிபருக்கே மறந்து போயிருக்கும்.

என்ன செய்ய?

எப்படி இந்த ஆளைக் கண்டுபிடிக்க?

பெயர் ராம்ஜி.

டெலிபோன் டைரக்டரியில் பார்த்தால்?

எந்த ஊர் டைரக்டரி என்று பார்ப்பது?

எந்த நகரத்தில் இருக்கிறான் என்று எப்படித் தெரியும்?''

துங்கா யோசித்தாள்.

ஒரு வாக்கியம் அவள் மனத்தில் மேலோங்கி நின்றது.

''எனக்கு என் வாழ்க்கையில் இந்த வெறி அடங்கும் நாள் பிறந்தால்—பிறக்க வேண்டும் என்று மனமாரப் பிரார்த்திக்கிறேன். நிச்சயமாகத் துங்காவைத் தவிர வேறு யார் கழுத்திலும் நான் தாலி கட்ட மாட்டேன்.''

இந்த வார்த்தைகள் அவளை வெகுவாகப் பாதித்தன. அயோக்கியனே என்றாலும் அவன் அவளை விரும்புகிறான். உடல் பசிக்காகப் பல இடங்களில் இரை தேடியவன் என்றாலும், அவளைப் பொறுத்த வரையில் அவனுக்கு உள்ளத்துப் பசியும் இருக்கிறது.

அவனுடைய ஆண்மையின் வெறி, இயற்கைக்கு விபரீத மானது. அவனே உணர்ந்திருக்கிறன். அது அடங்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறன்.

நல்லவன். ஆனல் அவனுடைய சதையின் ஆங்காரம் அயோக்கியனுக்கியிருக்கிறது.

ஆங்காரம் அடங்கிஞல் அடுத்தபடியாக அவன் அவளைத் தேடிக் கொண்டு வருவாஞ? அப்படி வந்தால் என்ன செய்வது?

ஆனந்திடம் உண்மையைச் சொல்லி விட வேண்டும். நிச்சயமாக, துங்கா இந்த ராம்ஜியை இது நாள் வரை ஒரு காதல ஞகப் பாவித்தது கிடையாது. அவளைச் சந்தர்ப்ப சூழ்நிலையினல் வென்றுவிட்ட ஓர் ஆண் புலியாகத்தான் கருதி, மறக்க முயன்று கொண்டிருந்தாள். உண்மையை ஒளிக்காமல் வாழ வேண்டும் என்று நினைப்பது லட்சியத்தின் எதிரொலி. ஆனல் அதுவே பாதகமாக முடிந்து விட்டால்? ஆனந்த் ஒரு மாதிரி. அவனல் எந்த அநீதியையும் ஜீரணித்துக் கொள்ள முடியாது. தன் காதலி ஏற்கனவே பலியானவள் என்று தெரிந்தால் பரிதாபப்படுவான். ஆனல் அதே சமயத்தில் அவளையும் ஒதுக்கி விடுவான்.

அவள் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. வீடு வாசல் எல்லாம் மறந்து போயிற்று.

மூன்று வருடங்களுக்கு முன் சந்தித்த ராம்ஜி கண்முன் வந்து நின்றன்.

உண்மையாகவே இப்போது வந்து நின்றல், அவள் என்ன செய்வாள்? என்ன செய்ய முடியும்?

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

இந்த டயரியின் மூலம் பல பெண்களின் உண்மைக் கதை கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கை எப்படி எப்படி அவர்களுடைய அனுபவங்களால் திசை மாறிப் போயிருந்தது என்று தெரிந்து கொள்ள வழி இருக்கிறது.

அவள் பம்பாயிலிருந்து வெளியாகும் ஒரு பிரபல மகளிர் பத்திரிகையின் நிருபர். ஏற்கனவே ஆசிரியர் அவளுடைய வேலையைப் பாராட்டிப் பல கடிதங்கள் எழுதி உதவி ஆசிரியராகப் பணிபுரியவும் பதவி ஏற்கவும் அழைத்திருக்கிறர்.

இப்போது இந்தப் பெண்களில் சிலரைப் பொறுக்கி எடுத்து அவர்களுடைய வாழ்க்கைகளெல்லாம் எப்படி அமைந்திருக் கிறன என்று ஆராய்ச்சி செய்தால் என்ன?

ஆராய்ச்சியின் விளைவாகச் சிறந்த கட்டுரை உருவாகும். ஏன்? ராம்ஜியைக் கண்டு பிடிக்கவும் அது உதவக் கூடும்.

துங்கா இருக்கையை விட்டு எழுந்தாள்.

டயரியிலிருந்து ஐந்து பெயர்களைப் பொறுக்கி எடுத்தாள்.



அவ்வளவு பேரும் நகரத்திலேயே இருப்பவர்கள். எளிதில் விசாரிக்கலாம். யார் யார் எப்படி எப்படி என்னென்ன பதில்களைச் சொல்லுவார்களோ?

அறையைப் பூட்டிவிட்டு வெளியே வந்த அவள் எழும்பூர் செல்லும் பஸ் ஒன்றில் ஏறினாள்.



மாலை ஆறே முக்காலுக்குக் கேட்டைத் திறந்து துங்கா பிரவேசிக்கையில், அப்பா வாசன் புடலைப் பந்தலுக்கு அடியே நின்று ஒரு பிஞ்சுப் புடலையின் வாலில் கல்லைக் கட்டிக் கொண்டிருந்தார். அவள் வந்ததை முதலில் வாசன் பார்க்கவில்லை. அருகே காலடிச் சத்தம் கேட்டபோது திரும்பினார். மறுகணம் புடலங்காயை மறந்து விட்டு வெளியே வந்தார்.

''துங்கு!'' என்று மெல்லிய குரலில் அழைத்தார்.

துங்கா நின்றாள்.

''ஜாக்கிரதை துங்கு! அம்மா அனல் வீசறாள்!''

''சரிப்பா.''

''நீ ஏன் இப்படி செஞ்சே?''

''எப்படி?''

''பெண் பார்க்க வர்றப்போ?''

''இந்தக் கேள்வியை அம்மாவும் கேட்பாள். அப்ப இரண்டு பேருக்குமா பதில் சொல்றேன்.'' துங்கா நகர்ந்தாள்.

''அவள் கோபத்திலே எருமைக் கன்றுக்குட்டியைப் புளியம் விளாறுலே அடிச்சுக் கட்டினாள்.''

துங்கா காதில் போட்டுக் கொள்ளாமல் படி ஏறி வீட்டினுள் நுழைந்தாள்.

''ஏண்டி, இப்பத்தான் மணி இரண்டரையா?'' ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த கமலம் இறங்கினாள்.

''இப்ப டயம் ஆறு அம்பது.''

"குதர்க்கமாகவா பேசறே?"

"இதோ பாரும்மா, நான் ரொம்பக் களைச்சுப் போய் வந்திருக்கேன். பசி காதை அடைக்கிறது. மொதல்லே ஏதானும் சாப்பிடறேன்."

"கொட்டிக்க நிறைய சொஜ்ஜியும் பஜ்ஜியும் இருக்கு," என்றாள் கமலம்.

அதே சமயம் வாசனும் உள்ளே வந்தார்.

"மொதல்லே கை கால் அலம்பிட்டு வா, துங்கு!" என்றார் அவர்.

"நீங்க அவருக்கு வக்காலத்து வாங்க வரவேண்டாம். எல்லா பிஞ்சிலேயும் கல்லைக் கட்டினீங்களா?"

"நிலா இருக்கு. மெதுவா கட்டிக்கிறேன்."

"எங்கேடி போயிருந்தே? ஏண்டி எங்க மானத்தை இப்படி வாங்கினே?" என்று கேட்டாள் கமலம்.

துங்கா பதில் சொல்லாமல் கைப்பையை ஒரு டீபாயின் மேல் போட்டுவிட்டுப் புறக்கடைக்குச் சென்றாள்.

"பார்த்தேளா அவள் அழுத்தத்தை, என்ன திமிர்!" என்றாள் கமலம்.

"அவள் இஷ்டத்துக்கு விரோதமா செஞ்சாக்க, இப்படித்தான் ஆகும் கமலு. இந்தக் காலத்துப் பெண்கள் உன் காலத்துப் பெண்கள் மாதிரியா? உட்காருன்னு உட்காரும். தலையை நீட்டுன்னு நீட்டும். தாலியை ஏந்திக்கோன்னு ஏந்திக்கும்!"

"நான் அப்படி ஏந்திட்டதால்தான் இப்படி ஒரு பெண்ணைப் பெத்துத் தொலைச்சேன்!"

"அவ இஷ்டப்படி அந்த ராகவாச்சாரி பிள்ளைக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைப்போம். நம்ப மனுஷா யாரையும் கூப்பிட வேண்டாம். இன்விடேஷன் கூடப் பிரிண்ட் பண்ண வேண்டாம்," என்றார் வாசன்.

"அயல் ஜாதி சம்பந்தமா? என் பிணத்தைத் தாண்டித்தான் அவள் நடந்து தாலியைக் கட்டிக்கணும்."

"துங்கா அதையும் செய்யக் கூடியவள் கமலு... இதோப் பாரு, ஜாதிமத வித்தியாசமே கூடாதுன்னு இருக்கிற காலத்திலே நீ இப்படி சின்ன பேதம் பார்க்கிறது தப்பு மட்டுமில்லே. முட்டாள்தனம் கூட. கொஞ்சம் பெருந்தன்மையாக நடந்துக்க, கமலு!"

"இந்த வயசுக்கு மேலே நீங்க எனக்குப் புத்தி சொல்ல வர்றேளா? ஆனந்தாம் ஆனந்த்! அவன் மூஞ்சியும் மொகரக்கட்டையும்!"

''அவனோட மூஞ்சி மொகரக்கட்டை எப்படி இருந்தா உனக்கு என்ன கமலு! என் மொகரக்கட்டையைப் பத்தித்தானே நீ கவலைப்படணும்?''

''கொஞ்சம் இருங்கோ, அதோ அவள் வர்ரு... எப்படி வர்ரு பாருங்க. கையிலே தட்டு. தட்டு நிறைய டிபன். இவளை என்ன செய்தா சரி?''

''பேசாம தின்ன விட்டால் சரி!'' என்றார் வாசன்.

துங்கா டைனிங் டேபிள் முன் உட்கார்ந்தாள். தட்டை வைத்தாள். ஒரு பஜ்ஜியைக் கடித்துக் கொண்டே—

''இப்போ கேளுங்க உங்க கேள்விகளையெல்லாம்!'' என்றாள்.

''எங்க மானத்தையே வாங்கினேடி!''—கமலம்.

''அதுக்கு நான் ஜவாப் இல்லை.''

''பின்னே யார்டி ஜவாப்?''

''நீங்க இரண்டு பேரும்தான்.''

''பார்த்தீங்களா இவ பேசறதை. அந்த இரும்பு உலக்கையை எடுத்து இவள் மண்டையிலே போட்டா எப்படி இருக்கும்!''

''நான் ட்ரை பண்ண மாட்டேன்.''

''நீ ட்ரை பண்ணேம்மா. டிபன் சாப்பிட்டுட்டு உலக்கையை நானே எடுத்துத் தர்றேன்.''

''பாருங்கோ, பாருங்கோ. எப்படி எடக்காப் பேசறாள்!''

''சும்மா ஊளையிடாதேம்மா. யார் உங்க இரண்டு பேரையும் இன்னித்து கண்றாவிக்கு ஏற்பாடு செய்யச் சொன்னா?''

''அப்ப ஏண்டி இத்தனை நாளா பேசாமல் இருந்தே?''

''அவள் சொன்னாள் கமலு, வேண்டாம்னு... ஆனந்த் இருக்கான்னு சொன்னா...''

''நீங்க பேசாம இருங்க கொஞ்சம்! ஏண்டி, வீடு நிறைய சொஜ்ஜியும் பஜ்ஜியும் பண்ணி, நீ வருவே வருவேன்னு வாசல்லேயே கால் கடுக்க நின்று அவங்கள்ளாம் வந்தப்போ திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல் தவிச்சேனே, அது தெரியுமா, உனக்கு?''

''இப்ப புத்தி வந்ததா அம்மா உனக்கு? இனிமே எந்தப் பிள்ளை வீட்டுக்காரனையும் பிக்னிக்குக்கு இங்கே வரச் சொல்ல மாட்டியே?''

''நீ என்னதான் முடிவு செஞ்சிருக்கே?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

''சொல்லித் தொலை.''

''ஆனந்தை இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்க வைக்கப் போகிறேன்.''

''அப்பாடீ!''

''ஆனா அதனாலே வேறே புள்ளைகளை இழுத்துட்டு வராதே... இன்னும் கொஞ்ச நாளுக்கு எனக்கு நிறைய வேலை இருக்கு. அது சரி, இன்னிக்கு வந்தவன் எப்படி இருந்தான்?

வாசன் முந்திக் கொண்டார். ''அப்பா பேரு நன்னிலம் ராமச்சந்திரன் சிவராமன். வாயைத் திறந்தால் எரிமலைக் குழம்பு மாதிரி வெற்றிலை சீவல் புகையிலையின் கலவைச் சாறுதான் கொட்டும். பழைய காலத்துத் தஞ்சாவூர் மிட்டதார் டைப். ஒரே பிள்ளை நன்னிலம் சிவராமன் ராமச்சந்திரன். பார்க்க லட்சணமா இருக்கான். கழுத்திலே மைனர் செயின். ஸ்டைலுக்கு கூலிங் கிளாஸ். உடம்பிலேர்ந்து கதம்ப அத்தர் தெறிக்கிறது. இப்பக்கூட வாசனை தெரியறது எனக்கு. ஒரே ஒரு மைனஸ் பாயிண்ட்தான்.''

''என்ன பெரிய மைனஸ் பாயிண்ட்டைப் பூதக் கண்ணாடியிலே பார்த்துக் கொண்டு பிடிச்சுட்டேன்! செக்கச் சிவக்க ராஜா மாதிரி இருக்கான். அவன் கால் தூசிக்கு ஆனந்த் பெற மாட்டான்,'' என்றாள் கமலம்.

''நான் கால் தூசியைப் பார்க்கலை. ஆனா துங்கு, செக்கச் சிவக்க இருக்கிற ராஜாவுக்கு இளநீர் மண்டை. ஆனால் முன்பக்கம் தான். பின்பக்கம் சடை இருக்கு!''

''ரொம்பப் புத்தியும் அறிவும் இருந்தா சின்ன வயசிலேயே வழுக்கை விழத்தான் விழும். இன்னமும் இந்த வயசிலேயும் உங்களுக்கு வழுக்கை விழலை,'' என்றாள் கமலம்.

''நாளைக்கே வேணும்னா மொட்டை அடிச்சிட்டு வந்து நிக்கறேன். ஆனால் அதுக்கும் நீ ஏதானும் சொல்லுவே.''

''வீட்டிலே என்ன பெயர் வைச்சுக் கூப்பிடறா, தெரியுமா?''

''ராமு, ராமுன்னு அவன் அம்மா கூப்பிட்டாள்.''

''இப்ப எங்கே இருக்கிறாங்க?'' என்று கேட்டாள் துங்கா.

''பெங்களூரிலே பங்களா இருக்கு. நீலகிரியிலே எமரால்டுக்குப் பக்கத்திலே எஸ்டேட் இருக்கு. அங்கேயும் ஒரு வீடு. ஊட்டி, கொடைக்கானல்லே ரெண்டு வீடு. தஞ்சாவூர்லே இருந்து பத்து மைல் போனா, அம்பது வேலி, சொந்தப் பண்ணை. ஒரே புத்திரன்.''

''இவ்வளவு பெரிய பணக்காரன் ஏன் நம்மை மாதிரி சின்னப் பணக்காரன் வீட்டோட சம்பந்தம் வைச்சுக்க முன்வர்றான்? இதை ஏன் நீங்க இரண்டு பேரும் யோசிச்சுப் பார்க்கலை!''

''அவங்களுக்குப் பணம் முக்கியமில்லையாம். மனுஷங்கதான் முக்கியமாம். நம்ம குடும்பம் நல்ல கௌரவமான குடும்பம்னு தெரிஞ்சுதான் வந்தாங்களாம்,'' என்ற கமலம், ''இனிமே அந்த எண்ணமும் யாருக்கும் இராது,'' என்றாள்.

கடைசி பஜ்ஜியை கடித்து முழுங்கிவிட்டு துங்கா எழுந்தாள்.

''மெட்ராஸ் அட்ரஸ் ஏதானும் இருக்கா? அவனுக்குத் தெரியாமல் அவனைப் பார்த்துவிட்டு என் அபிப்பிராயத்தைச் சொல்றேன். அப்புறம் அவசியம் இருந்தால் தொடர்பு வைச்சுக்கலாம்,'' என்றாள்.

''ஆயிரம் பொண்ணுகள் க்யூவிலே நிப்பாங்க. இனிமே எப்படி அவங்க திரும்பி இங்கே வருவாங்க?''—கமலம்.

''அதைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே? அட்ரஸைக் கொடு.''

''உட்லண்ட்ஸ் ஓட்டல்லே தங்கறதாக சிவராமன் சொன்னார். ஆனால் எப்போ காலி பண்ணி எந்த ஊர் வீட்டுக்குப் போவாரோ, தெரியாது.''

''ஓ.கே. நான் கவனிச்சுக்கறேன்,'' என்றாள் துங்கா, கை அலம்பச் செல்லும் முன்பு.

''பார்த்தேளா இவ பேசற பேச்சை!''

''இந்தக் காலத்துப் பெண்ணைச்சே! ஆக ஒண்ணு கவனிச்சியா?'' என்றார் வாசன்.

''ஆனந்த் அவுட் போலிருக்கு!''

''அப்படித்தான் எனக்குப் படறது. ஏன் இப்படி ஒரு மறுக்கறாம்?''

''அவர்களுக்கு நம்ம வீட்டுப் பெண் பிடிச்சிருக்காது. ஆனந்தோட அம்மா கயித்திலே தொங்குவாள்னு பயமுறுத்தியிருப்பாள். ஆனந்த் பயந்து போய் உன் பெண்கிட்டே சொல்லியிருப்பான். 'சரிதான் போடா'ன்னு இவள் காதலை வெட்டி விட்டு வந்திருப்பாள்!''

''நீங்களும் உங்க கற்பனையும் நல்ல ரீலா விடறது. மொதல்லே புடலம் பிஞ்சுக்கு நல்ல கல்லாகப் பார்த்து இறுக்கிக் கட்டுங்கோ!'' என்றாள் கமலம்.

அன்று நீண்ட நேரம் தூங்காமல் சிந்தனையில் ஈடுபட்ட துங்காவின் மனத்தில் ஒரு கேள்வி எழுந்தது. அவளைப் போல பல பெண்களை ராம்ஜி (உண்மைப் பெயரா அல்லது ஆளுக்கு ஆள் மாற்றிக் கொண்ட பெயரா? புலன் விசாரணையில் தெரிந்து விடும்!) படுக்கையில் இருத்தியிருக்கிறான். அவர்களெல்லாம் இப்போது எத்தகைய வாழ்வு வாழ்கிறார்கள்? கல்யாணமாகி விட்டதா அல்லது ஏமாற்றத்தின் விளைவாய் இன்னும் ராம்ஜியை எதிர்பார்த்துக் கொண்டு அவதிப் படுகிறார்களா?

திடீரென்று அவளைச் சுற்றியே பற்பல கேள்விக் குறிகள் எழுந்தன.

கொடைக்கானலில் நடந்த விஷயம் அவளைத் தவிர வேறு யாருக்கும் இதுவரையில் தெரியாது. நெருங்கிய சிநேகிதிகள் யாரும் நல்ல வேளையாக அவளுக்குக் கிடையாது. கல்லூரித் தோழிகளை எல்லாம் சற்று தூரத்தேதான் வைத்திருந்தாள். தெரிந்த முகங்களும் கேட்ட பெயர்களும்தான் அவளுக்கு பரிச்சயம். ஆனந்த் அவளுடைய வலையில் விழுந்த பிறகு தன்னுடைய ரகசியத்தைத் திருமணத்தில் புதைத்து விடத்தான் எண்ணியிருந்தாள். ஆனால் நாளடைவில் இந்த எண்ணமும் மெல்ல மெல்ல மாறியது. ஆனந்திடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று மனம் நினைக்கலாயிற்று. இதனால் விளையக் கூடிய விபரீதத்தை அவள் உணர்ந்திருந்தாள். இருப்பினும் பின்னொரு காலத்தில் இந்த ராம்ஜியே எதிர்பட்டு குடும்ப வாழ்க்கைக்குப் புல்லுருவியாக அமைந்து விட்டால் என்ன செய்வது என்ற காரணத்தால் முன்கூட்டியே ஆனந்திடம் கொடைக்கானல் சம்பவத்தைக் கூறிவிட வேண்டும் என்று தோன்றியது.

இதை நினைத்துப் பார்க்கும் போது ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

ஆனந்தும் அவளும் ஒரே சினிமா காட்சியின் இடைவேளையின் போது கிரேப் ஜூஸ் வாங்கினார்கள். வழக்கம் போல் ஆனந்த் ஒரே ஒரு டம்ளர்தான் வாங்கினான். சாதாரணமாக அவன் கண்ணாடித் தம்ளரை எச்சில் பண்ணாமல் லாகவமாகத் தூக்கிப் பிடித்து, உதட்டில் படாமல் இரண்டு வாய் குடித்துவிட்டு அவளுக்குக் கொடுப்பான். அன்று என்ன தோன்றிற்றோ டம்ளரை முதலில் அவளிடம் நீட்டினான். துங்கா தன் இயல்புப்படி உதட்டில் வைத்து உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தாள். பிறகு அரை டம்ளரை அவனிடம் நீட்டினாள்.

''நீயே குடிச்சிடு, துங்கா,'' என்றான் ஆனந்த்.

''ஏன்? வேண்டியிருக்கலையா?''

''மத்தவங்க எச்சில் பண்ணிக் குடிச்சதை நான் தொட மாட்டேன்.''

துங்காவுக்குக் கோபம் வந்தது.

''நானும் மத்தவங்களைப் போலவா?'' என்றாள்.

''உன் கழுத்தில் நான் தாலி கட்டறவரை நீ மத்தவங்களில் ஒருத்திதான்—அதாவது இந்த மாதிரி விஷயங்களில்,'' என்றான் ஆனந்த் அமைதியாக.

துங்காவுக்கு ஆத்திரம் தாளவில்லை. மீதியிருந்த திராட்சை ரசத்தை கடகடவென்று குடித்துவிட்டு, ''இப்ப நான் ஒரு அன்னிய புருஷனோட வந்து விட்டேனே, அப்போ நானும் எச்சில் பழம்

தானே?'' என்றுள்.

''ஒண்ணு ஞாபகம் வச்சுக்க, துங்கா. இதுவரையில் நான் உன்னைத் தொட்டதில்லே. உன்னைக் கிஸ் கூடப் பண்ணியதில்லே. அதனுலே நீ எச்சில் ஆகலே!''

''யார் சொன்ன? ஊரும் உலகமும் நீங்க என்னைக் கிஸ் பண்ணினீங்க, இல்லே இன்னும் ஒரு படி மேலே போனீங்கன்னு தான் நினைச்சிட்டிருக்கும்.''

''அது உன் கற்பனை.''

''நீங்க ஏற்கனவே ஒரு எச்சில். அத்துடன் நான் பழகு கிறேன். நான் சொன்னல் உங்களாலே மறுக்க முடியுமா?''

''ஓ, முடியும்! சத்தியமாக நான் இன்னெருத்தியிடம் எந்தவிதமான தொடர்பையும் வைச்சிட்டது கிடையாது.''

துங்கா மௌனமானுள்.

அவளால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை. இதே கேள்வியை அவன் கேட்டிருந்தால் அவள் நிச்சயமாகப் பொய்யைத் தான் சொல்லியிருப்பாள். ஆனல் அந்தப் பொய்யும் ஒரு தயக்கத்துடன்தானே வந்திருக்கும்?

இந்த சம்பவத்துக்குப் பிறகு துங்கா மிகவும் ஜாக்கிரதை யாக இருந்தாள்.

ஆனல் இப்போது, இந்த டயரி கையில் சிக்கிய பிறகு அவளுடைய சித்தமே குலைந்துவிட்ட பின்னர், இனிமேல் உண்மையை ஒளிப்பது தவருகப் பட்டது. அதே சமயம் தன்னை இரையாக்கிய அந்த ராம்ஜியை எப்படியாவது கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்ற வெறியும் பிறந்தது.

அவள் தேர்ந்தெடுத்த ஐந்து பெண்களின் பெயர்களையும் முகவரியையும் குறித்துக் கொண்டாள். எல்லோரும் நகரத்தில் இருப்பவர்கள். ஆனல் எல்லோருமே இப்போதும் அதே இடங்களில் தான் இருக்கிருர்களா?

ஒரு தனி நபராக அவர்களைச் சந்திக்கக் கூடாது. ஒரு பத்திரிகை நிருபர் என்கிற முறையில் சென்றுல்தான் அவர்களுக்கு நம்பிக்கை விழும். அவர்களுக்கு இலவசமாக ஒரு பிரதியை—அதுவும் அவளுடைய கட்டுரை வெளிவந்த பிரதியை—அளிக்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயே ராம்ஜியைப் பற்றி விசாரிக்கக் கூடாது. ஒருத்தியும் அவ்வளவு எளிதில் உண்மையைக் கூறிவிட மாட்டாள். அவளைச் சந்தேகத்துடன் பார்த்து, சீக்கிரத்தில் வெளியேற்றி விடுவார்கள்.

சாமர்த்தியம், சாதுரியம், பொறுமை, வாய்ச் ஜாலம் எல்லாம் மிகவும் அவசியம்.

நாளைக்கே இந்த வேலையை ஆரம்பிக்க வேண்டும்!

யார் கண்டார்கள், அவளுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் ராம்ஜியின் தற்போதைய இருப்பிடமே கூடத் தெரிய வரலாம்.

அப்புறம் அவள் ராம்ஜியை விடமாட்டாள்!



'அபராஜிதா' என்று பெயரிடப்பட்ட அந்தப் பழைய காலத்து வீட்டைப் புரசைவாக்கத்தில் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கவில்லை. பெரிய கேட். ஒரு கறுப்பு நிறத் தகரப் பலகையில் ஒரு நாயின் முகம் குரைக்கும் பாவனையில் சித்திரமாகத் தீட்டியிருந் தார்கள். அருகே 'ஜாக்கிரதை' என்கிற வார்த்தை. மழையிலும் வெய்யிலிலும் அடிபட்டு அடிபட்டு நாயும் ஜாக்கிரதையும் மங்கிப் போயின.

உள்ளிட்ட வீடு.

துங்கா தைரியமாக கேட்டைத் திறந்து கொண்டு முன்னேறினாள். நாய் குரைத்தால் நிச்சயமாக வீட்டுக்காரர்களில் யாரேனும் வருவார்கள். நாயைக் கொஞ்சி அழைத்துத் தன் வசம் இழுத்துக் கொள்ளுவார்கள்.

துங்கா நடந்தாள்.

ஒரு தெரு நாயாவது ஏதாவது ஒரு மூலையில் இருக்கக் கூடாதோ? ஓரிரு பூனைகள்தான் அங்குமிங்குமாக சுற்றிக் கொண்டிருந்தன.

வீட்டைச் சுற்றி ஒரே புதர். மருந்துக்குக்கூட ஒரு பூச் செடி இல்லை.

படி ஏறினாள்.

மின்சார மணியை அழுத்தினாள்.

ஒலி கேட்கவில்லை.

ஒருவேளை மின்சாரத் தடையோ?

ஜன்னல் வழியாகப் பார்த்தாள். ஒரு விசிறி ஓடிக் கொண்டிருந்தது. ஒரு சோபாவில் வயதான ஒருத்தி சாய்ந்து

படுத்திருந்தாள். ஹால் நிசப்தமாக இருந்தது.

மின்சார மணி இயங்கவில்லை என்ற ஞானம் பிறந்ததும் கதவைத் தட்டினுள்.

''யாரது?''

''துங்காங்கற ஒரு பெண்!''

''யாரைப் பார்க்கணும்?''

''என் சிநேகிதி அபயத்தை!''

மறு நிமிடம், ''டீ, அபயம்,'' என்ற குரல் கேட்டது.

துங்கா காத்திருந்தாள். எடுத்துக் கொண்ட காரியத்தில் ஆரம்பமே வெற்றி என்று நினைக்கத் தோன்றியது.

ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு நடுத்தர உயரமுள்ள ஒரு பெண்—இருபத்து மூன்று அல்லது இருபத்து நாலு இருக்கலாம்—கதவைத் திறந்தாள்.

''குட்மார்னிங், உள்ளே வரலாமா?'' என்று கேட்டாள் துங்கா.

இப்போது ஹால் நன்ருக மைதானம் போலத் தெரிந்தது. சுவர்களையெல்லாம் மூடி மறைத்துக் கொண்டு அலமாரிகள். சுண்ணும்பு பூசத் தேவையே இல்லை.

''யார் நீங்க?'' என்று கேட்டாள்.

''நீங்கதானே அபயம்?''

''ஆமாம். நீங்க யார்?'' அவளுடைய குரலில் பயம் ஒலிப்பதாகப் பட்டது.

சோபாவில் சாய்ந்திருந்தவள் இப்போது எழுந்து உட்கார்ந்தாள்.

''சிநேகிதி துங்கான்னு நீ சொல்லல்லே?'' என்ருள் அவள்.

''ஆமாம்.''

''ஆனல் இவளுக்கு நீ யாருன்னு கூடத் தெரியலே! ஏன் பொய் சொன்னே?''

''ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமலேகூட சினேகிதர்களாக இருக்கலாம் மாமி!'' என்று சொல்லி முழுப்பல் சிரிப்புச் சிரித்த துங்கா, ''உள்ளே வரலாமா?'' என்று இரண்டாவது தடவையாகக் கேட்டாள்.

''சோப்பு, வாஷிங் பவுடர், பிளாஸ்டிக் சாமான் இதெல்லாம் விக்கற பெண்ணுனல் அங்கேயே இரு. எங்களுக்கு எதுவும் வேண்டாம்!'' என்ருள் கிழவி.

''அந்த மாதிரி யார் வந்தாலும் நானும் எங்க வீட்டில் கதவைத் திறக்க மாட்டேன்!'' என்ற துங்கா, ''நான் பிரஸ் கரஸ்பாண்டன்ட்!'' என்ருள்.

''இங்கிலீஷ் மாகஸினு? இல்லே தமிழா... தமிழ்னு உள்ளே

வராதே!''

''ஏன் மாமி தமிழ்னு அவ்வளவு கோபம் உங்களுக்கு?'' என்றார் துங்கா.

''பின்னே என்ன! நான் இதுவரையில் எத்தனை கதை, கவிதை, கட்டுரை, ஏன் குறுநாவல்களெல்லாம் எழுதி அனுப்பியிருக்கேன் தெரியுமா? ஒண்ணைக்கூடப் படுபாவிகள் போடறதில்லே. சுத்திச் சுத்தி ஒரு ஏழெட்டு பேர் எழுதினதையே பிரசுரிக்கறாங்க.''

''நானும் ஒரு எழுத்தாளன். ஸாரி, பெண் எழுத்தாளர்.''

''உள்ளே வா!''

துங்கா பிரவேசித்தாள்.

''நீங்க எழுதின தமிழ்க் கதையிலே ஒண்ணு இரண்டைக் கொடுங்க. இங்கிலீஷ்லே மொழிபெயர்த்து என் மாகஸினுக்கு அனுப்பறேன்.''

''என் பேர் அபராஜிதா. அது பிரிண்ட் ஆகுமா?''

''நான் காரண்ட்டி!''

''அபயம், துங்காவுக்கு நல்ல காப்பியா கொண்டு வா!'' என்றாள் ஐம்பத்தைந்து வயது மதிக்கத் தகுந்த அபராஜிதா.

''என்னைப் பேட்டி காண வந்தியா?'' என்றாள் அவள்.

''இல்லே... அபயத்தை!'' என்று சொல்ல வாயெடுத்தவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள்.

''ஆமாம்..... அப்படியே இந்தக் காலத்துப் பெண்கள் சமூகத்தைப் பற்றி என்ன நினைச்சிருக்காங்கன்னும் விசாரிக்கப் போறேன். அதாவது உங்க பெண் அபயத்திடம்!''

''மொதல்லே இதைத் தெரிஞ்சுக்கோ மிஸ்... மிஸ்தானே? துங்கா... அபயம் என் பெண் இல்லே. எனக்கு பெண்ணே இல்லே. அவள் என் தங்கை பெண். இவளைப் பெத்து என் மடியிலே போட்டுட்டு அவ இருபத்து மூணு வருஷம் முன்னடியே போயிட்டா.''

''அபயத்துக்கு இன்னும் கல்யாணமாகலியா?''

''எனக்கு ஐம்பத்து மூணு முடிஞ்சாச்சு. இன்னும் எனக்கே ஆகலே. அதுசரி, என்னை பேட்டி காணுமல் என் தங்கை பெண்ணைப் பற்றியே கேட்கிறியே?''

''ஸாரி!''

''ஹங்... அப்படி வா...''

காப்பி வந்தது.

ஒரு டீப்பாயின் மேல் வைத்துவிட்டு அபயம் ஓர் இரும்பு பீரோவுக்குப் போய் அதன் மேல் சாய்ந்து கொண்டாள். கண்களில் வீசும் பயம் கூடவே பிறந்ததாகப் பட்டது துங்காவுக்கு.

''காப்பியைக் குடிச்சிட்டுக் கேளு,'' என்றாள் அபராஜிதா.

பிறகு, ''டீ, அபயா, நீ ஏன் இங்கே நிக்கறே? உள்ளே என்ன வெந்தது, என்ன வேகலேன்னு பார்க்க வேண்டாம்? போ உள்ளே...''

துங்காவுக்கு ஆத்திரம் பீரிட்டு வந்தது. பாதையின் குறுக்கே ரோட் இஞ்சின் மாதிரி நிற்கிற இவளை எப்படி அப்புறப் படுத்துவது?

பொறுமையைக் கையாண்டாள். சாதூரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

''நீங்க ஏன் கல்யாணமே செய்துக்காமல் இருந்தீங்க?'' என்று கேட்ட அவள், குறிப்புப் புத்தகத்தையும் பால்பாயிண்ட் பேனாவையும் எடுத்துக் கொண்டாள்.

''ஒரு படவாவைக் காதலிச்சேன். அவன் கடைசி நிமிஷத்திலே என்னை உதறிட்டு இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கிட்டான். ஆனா அந்தப் பொண்ணு பிரசவத்திலே செத்துப் போச்சு. அது போன மறு மாசமே படவா என் கால்லே விழுந்தான். நான் என்ன செய்தேன் தெரியுமா? என் அல்சேஷனை அவிழ்த்து விட்டேன். சாதாரணமாக அது குரல்வளையைத்தான் பிடிக்கும். அன்னிக்கு என்னமோ அதுக்கு மூட் இல்லே. தோள் பட்டையைக் குதறிட்டுப் பேசாமல் இருந்தது.''

''பழி வாங்கிட்டீங்க!''

''நான் எழுதின முக்கால்வாசிக் கதைகளிலேயும் பெண் ஆணை என்னிக்கும் நம்பக் கூடாதுங்கற கருத்துத்தான் மையமாக இருக்கும். இப்பக்கூட கொஞ்சம் பேர், எல்லாக் கதைகளிலும் ஆண் வர்க்கத்தைச் சாடறாங்க. எனக்கு ரொம்பப் பிடிக்கிறது.''

''இப்ப நீங்க சொன்ன சம்பவத்தையே கதையா எழுதி யிருப்பீங்களே?''

''நான் எழுதின முதல் கதையே அதுதான்.''

''அதை மொதல்லே கொடுங்க மிஸ் அபராஜிதா. பப்ளிஷ் ஆக நான் காரண்டி.''

''மாடியிலே ஒரு பெட்டியிலே கத்தை கத்தையா கறை யான் அரிக்கற நிலையிலே இருக்கு.''

''சிரமத்தைப் பார்க்காமல் எடுத்திட்டு வாங்க. அதுக்குள்ளே நான் அபயத்திடம் ஒன்று இரண்டு கேள்விகள் கேட்டுடறேன்.''

''தேடி எடுக்க அதுக்கு மேலே ஆகும். டீ அபயம்! காஸை அணைச்சிட்டு இங்கே வா,'' என்ற அவள், ''என்னைப் பத்தி அவள் கிட்டே ஒண்ணும் கேட்காதீங்க அவளுக்கு என்னைக் கட்டோடு பிடிக்காது. என் பணத்துக்காகவும் இந்த வீட்டுக்காகவும்தான்

இங்கே இருக்கிறாள்!'' என்றாள். பிறகு எழுந்து மாடியை நோக்கி நடந்தாள்.

அதற்குள் அபயம் வரவே, ஒரு காலை முதல் படியில் வைத்து, ''இந்தாடி, மிஸ் துங்கா உன்னைப் பேட்டி காணப் போறாள். என்னைப் பத்தி மட்டமா எதுவும் சொல்லாதே, ஆமாம்!'' என்றாள் அபராஜிதா.

பெரியம்மா மாடிப்படிகளையெல்லாம் கடக்கும் வரை காத்திருந்த அபயம், அவள் தலை மறைந்ததும், ''சுத்த லூஸ்!'' என்றாள்.

''ஏன் அப்படிச் சொல்றே, அபயம்?''

''நாள் பூரா ஏதேனும் பேத்திக் கொண்டே இருக்கும் ஒரு மாதிரியான மென்ட்டல் கேஸ். இவ்வளவு பெரிய வீட்டிலே நானும் இதுவும்தான் இருக்கோம். பொழுதுபோக்குக்குச் சமையல் அறை ஒன்றுதான். டிரான்ஸிஸ்டர் ரேடியோகூடக் கிடையாது. ஆமாம் டி.வி.ன்னு எப்படி இருக்கும்? பெட்டி மாதிரி இருக்குமா?''

''ஏன், நீ பேப்பர்லே விளம்பரங்கள் பார்த்ததில்லையா?''

''இது மொதல்லே பேப்பரைப் படிச்சிட்டு, தனக்குப் பிடிக்காததையெல்லாம் கத்தரிக்கோலாலே கத்தரிச்சு வைச்சிடும். என்கிட்டே வர்றப்போ பாத்திரக்காரனுக்கும் போடற புடவை மாதிரி அங்கங்கே ஓட்டை ஓட்டையா இருக்கும்.''

''உன் கதையே ஒரு சோகக் கதை போலிருக்கே!'' என்றாள் துங்கா.

''அதை ஒரு தடவை சொன்னாப் போதாது. இது பைத்தியக்கார விடுதி மாதிரி. அதிலே நான் ஒரு வேலைக்காரி. ஆனா உண்மையிலே கைதி!''

''நான் இப்போ அந்தரங்கமா ஒண்ணு இரண்டு கேள்வி கேட்கப் போறேன்.''

''பதில் சொன்னால் உங்க பத்திரிகையிலே வருமா?''

''வராது.''

''அப்ப ஏன் கேட்கறீங்க?''

''பரவாயில்லே. உண்மையிலேயே நீ புத்திசாலிப் பெண் தான். எதுவரையில் படிச்சிருக்கே?''

''அஞ்சாம் கிளாஸ்!''

''என்ன?''

''அதற்கு அப்புறம் ஒரு டீச்சர் தினசரி வருவார்—எனக்கும் என் பெரியம்மாவுக்கும் இங்கிலீஷ் சொல்லித் தர.''

''ஓ! இந்த மெட்ராஸ்லே இப்படிக்கூட ஒரு வீடு இருக்கா?''

''ஆச்சரியமாக இருக்கா?''

''இல்லே. அதிசயமாக இருக்கு. அது சரி, உன் வாழ்க்கையிலே மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது உண்டா?''

''மறக்க முடியாத நிகழ்ச்சி அப்படின்னு என்ன?''

''நீ சம்பந்தப்பட்ட விஷயம்.''

''இல்லே.''

''நான் உன் சினேகிதி, அபயம். நீ எதையும் என்னிடம் ஒளிக்கத் தேவையில்லே.''

''நான் எதையும் ஒளிக்கிறேன்னு நீங்க எப்படிச் சொல்றீங்க?''

''இன்னும் நான் அதைச் சொல்லலே. ஆனா இப்ப வேணும்னு சொல்லிடறேன்.''

''என்ன சொல்லப் போறீங்க?''

''1983'ம் வருடம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி நினைவு வர்றதா?''

''காந்தி ஜெயந்தி!''

''அன்னிக்குத்தானே ராம்ஜின்னு ஒருவன்...''

''யார் ராம்ஜி?''

''உன்கிட்ட என்ன பெயர் சொன்னான்?''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எப்படித் தெரிஞ்சா என்ன அபயம்! என்ன நடந்தது?''

''எப்படித் தெரியும்னு முதல்லே சொல்லுங்க.''

''டயரியிலே குறிச்சு வச்சிருக்கான். டயரி என்கிட்டே இருக்கு.''

''எங்கே காட்டுங்க பார்க்கலாம்?''

''கையோடு கொண்டு வரலே. வீட்டிலே இருக்கு.''

''அவனோட அட்ரஸ் என்ன? அதைச் சொன்னா நான் அவனைப் பழிவாங்கச் சௌகரியமாக இருக்கும். பெரியம்மா அல்சேஷன் நாயை அவிழ்த்து விட்டாள். ஆனா இப்ப நாய் தேவையில்லே. நானே போதும்...''

''உன் மனசு எனக்குப் புரிகிறது. கொஞ்சம் விவரமாகச் சொல்லு. அவனைக் கண்டுபிடிக்க நீ உதவி செய்யணும்!''

''கண்டுபிடிச்சா அவனை இங்கே அழைச்சிட்டு வருவீங்களா?''

''நிச்சயமாக.''

''அவன் பேர் ரத்னகுமார்!''

''ஓ, ரத்னகுமார்னு உங்கிட்ட சொன்னானா?''

''பம்பாயிலே பெரிய வேலையிலே இருப்பதாகச் சொன்னான்.''

''எப்படி இங்கே, இந்த வீட்டுக்கு வந்தான்?''

''ஒரு இங்கிலீஷ் டீச்சர் தினசரி வருவான்னு சொன்னேனே இல்லியா? ஒரு நாள் அவன் இவனை அழைச்சிட்டு வந்தான்.''

''எதுக்கு?''

''இங்கிலீஷ் டீச்சரும் ஒரு ராஸ்கல். என்னைத் தனியா சந்திக்க ரொம்ப ட்ரை பண்ணினான். ஆனால் எப்பவும் பெரியம்மா கூடவே இருந்ததாலே முடியலே.''

''ஆனா ரத்னகுமாராலே எப்படி முடிஞ்சது?''

''என்னை ஒரு தடவைதான் பார்த்தான். நானும் பார்த்தேன். ரொம்ப நல்லவனாகத் தெரிஞ்சான். டீச்சர் டீச் பண்ணிட்டிருக்கறப்போ குடிக்கத் தண்ணீர் கேட்டான். பெரியம்மா ஜூஸ் கொண்டு வரச் சொன்னாள். அவனோட பெரிய காரைப் பார்த்துப் பெரியம்மா மயங்கிட்டாள். அவனோட அழகைக் கண்டு நான் மயங்கிட்டேன்.''

''சரி, மேலே சொல்லு.''

''ரத்னகுமாரைப் பிடிச்சா அவனைச் சந்திக்க ஏற்பாடு பண்ணுவீங்க இல்லே?''

''ஷ்யூர்!''

''ஜூஸ் தயார் பண்றப்போ வாசல் பக்கமாகப் போய் வீட்டைச் சுத்திக் கொண்டு கொல்லைப் பக்கத்து வாசல் வழியா பூந்து சமையலறைக்கே வந்துவிட்டான். குண்டு தைரியம். சமையலறையிலேயே என்னைக் கட்டிக்கொண்டான். எனக்கு என்னமோ செய்தது. விடுவிச்சிட்டேன்.

''ஆனா ராத்திரி வந்தான். பெரியம்மா எப்பவும் மாடியிலே படுத்துப்பாங்க. நான் இதோ இந்த ஹாலிலே படுத்துக்கற வழக்கம். நான் விடுவிச்சுக்கறப்போ தெரியாத்தனமாக, எதிர்காலம் பம்பாயிலே நன்கு அமையணுங்கற ஒரு பேராசையிலே, ''இப்ப எதுவும் கூடாது, அவங்க ரெண்டு பேரும் ஹால்லே இருக்காங்க'ன்னேன். நாய் இல்லையான்னு கேட்டான். செத்துப் போயாச்சுன்னேன். ராத்திரி வர்றேன்னான். நான் பதில் சொல்லலே.''

''பாக்கிக் கதை எனக்குத் தெரியும், அபயம்! அவன் உன்னை விட்டுப் போறதுக்கு முன்னாலே ஏதானும் பிராமிஸ் பண்ணினானா?''

''மறுபடியும் சந்திக்கலாம்னு சொன்னான். ஒரு டாய்லெட் செட் பரிசாகத் தந்தான். அது இன்னும் அப்படியே இருக்கு.''

''அப்புறம் என்னாச்சு?''

''நல்லவேளையா ஒண்ணும் ஆகலே. இப்ப நினைச்சுப் பார்த்தாலே ஒரு குழந்தை உண்டாயிருக்கக் கூடாதான்னு தோணறது. என்ன பெரியம்மா என்னைத் துரத்தி இருப்பாள். எனக்கும் விடுதலை கிடைச்சிருக்கும்.''

''இந்த பங்களாவும் அவ பணமும் உனக்குத்தான் வர போறதுன்னு உன் பெரியம்மாவே என்னிடம் சொன்னுளே?''

''அது அவள் செத்த பிறகுதானே? அதுக்குள்ளே கிழ யாகி நானே செத்தாலும் செத்துடுவேன்.''

''சீச்சி! அப்படியெல்லாம் பேசாதே! இப்ப ஒரு நல் பிள்ளை வந்து உன்னைக் கல்யாணம் செய்துக்கறேன்னு சொன்ன சம்மதிப்பியா?''

''அத்தைக்கு மீசை முளேச்சு நீங்க பார்த்திருக்கீங்களா?''

''கேட்டதுக்கு பதில் சொல்லு, அபயம்.''

''ஒரு ஆண் பிள்ளைன்னு வந்தா போதும். அவனுக் மனைவியாகி அவனுக்கு உழைப்பேன். யாருக்கு வேண்டும் இந் வீடும் பணமும்!''

''குட்! வெரி குட்!''

''என்கிட்டே ரத்னகுமார் அப்படின்னு சொன்னவ உங்ககிட்டே ராம்ஜின்னு பேர் சொன்னரு. உங்களுக்கும் டாய்லட செட்டா இல்லே வேற உசத்தியா ஏதேனும் பரிசா?''

''என்ன உளர்றே, அபயம்?''

''அஞ்சாம் கிளாஸ்தான் படிச்சிருக்கேன்னுலும் எனக்கு கொஞ்சம் புத்தி உண்டு, துங்கா. டயரியிலே உண்மையான பெய என்னன்னு அவன் எழுதியிருந்தா நீங்க ஏன் என்னைத் தேடி கொண்டு இங்கே வரணும்?''

துங்கா தள்ளாடிப் போனுள்.

இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு புத்தி கூர்மையா?

''நீ எழுபத்து நாலு பேரிலே ஒருத்தி, அபயம்!''

''அப்ப இன்னும் எழுபத்திரண்டு பேர் இருக்காங்கன்னு சொல்லுங்க.''

''நீ ஏதோ கற்பனை பண்ணிப் பேசறே, அபயம்.''

''நான் என் உண்மையைச் சொன்ன மாதிரி நீங்களு உங்க உண்மையைச் சொல்லணும்னு நான் எதிர்பார்க்கிற தப்பில்லேதான். ஆனுல் எனக்கு அதிலே அக்கறை இல்லே. ஒ பெண்ணோட உடம்பு எதுக்கு இருக்கு, துங்கா! ஆண் உபயோக துக்குத்தான். இதை அவன் நன்ருகப் புரிஞ்சிட்டிருக்கான். ஆன புத்தி கெட்ட பெண்கள் அத்து மீறி வர்ற நாய் ஜென்மங்களுக் தங்கள் உடம்பை அவ்வளவு எளிதா அர்ப்பணம் பண்ணக் கூடாது கறதையும் புரிஞ்சுக்க மாட்டேங்கறாங்க!''

''நீயா இப்படிப் பேசறே! ரொம்ப சாதுன்னு நினை சேன்!'' என்ருள் துங்கா.

''ஒரு பெண்ணோட உடம்பை யார் வேணும்னுலு எளிதாகப் புரிஞ்சுக்கலாம். ஆனுல் மனசை? உங்க மனசிலே என்

இருக்குன்னு இப்ப எனக்குத் தெரியாது. என் மனசிலே என்ன இருக்குன்னு உங்களுக்கும் தெரியாது.''

''அப்ப ஏன் எல்லா உண்மைகளையும் இப்படிக் கேட்ட உடனே சொன்னே?''

''ரத்னகுமாரை உங்களாலே கண்டுபிடிச்சுத் தர முடியுங்கற அசட்டு நம்பிக்கைதான் காரணம். ஆனால் இப்போ அதுவும் போயிடுத்து.''

''ஏன்?''

''என்னை மாதிரி நீங்களும் பாதிக்கப்பட்ட பெண்ணுச்சே! எப்படிப் பழிவாங்கறதா இருக்கீங்க, மிஸ்... மிஸ்தானே... துங்கா?''

'உன் முறையில் அல்ல!' என்று சொல்ல நினைத்த துங்கா வாயை மூடிக் கொண்டாள்.

எழுந்தாள்.

''நான் வரேன்.''

''பெரியம்மா இன்னும் கதையுடன் வரலையே?''

''அந்த இங்கிலீஷ் டீச்சர் டிரான்ஸ்லேட் பண்ணட்டும். ஹங்... அடடா! மறந்தே போயிட்டேனே. அந்த டீச்சர் பெயர், அட்ரஸ் என்ன?''

''தெரிஞ்சு என்ன பிரயோஜனம்?''

''அவன் வீட்டுக்கே போறேன், விசாரிக்கிறேன்.''

''பதில் சொல்ல மாட்டான்.''

''கேட்கிறபடி கேட்டால் பதில் வரும்.''

''நீங்க எப்படிக் கேட்டாலும் பதில் கிடைக்காது மிஸ் துங்கா. அப்படி வரக்கூடியதாக இருந்தால் நானே கேட்டிருப்பேனே?''

''ஏன், ரத்னகுமாரை அந்த டீச்சர் அவ்வளவு எளிதாகக் காட்டிக் கொடுக்க மாட்டாரா?''

''நான் சொன்ன நிகழ்ச்சி நடந்த மறு வாரம் அவர் ஏற வேண்டிய ஒரு எலெக்ட்ரிக் டிரெயின் அவர் மேலே ஏறிற்று. பேப்பரிலேகூடச் செய்தி வந்தது.''

துங்கா களை இழந்தாள்.

அபராஜிதா வருவதற்குள் வெளியேறிவிட வேண்டும் என்கிற அவசரத்தில் அவள் பறந்தாள்.

அவளைப் பார்த்து முதன் முறையாக அபயம் சிரித்தாள். சிரிப்பில் ஏளனம் முரசு கொட்டியது.



மயிலாப்பூர் ரெட்லண்ட்ஸ் ஓட்டலைத் துங்கா அடையும் போது பிற்பகல் ஒரு மணி.

முந்தின நாள் பெண் பார்க்க வந்த நன்னிலம் சிவராமனையோ அல்லது அவருடைய மனைவி பார்வதியையோ சந்திப்பதில் அவளுக்கு எத்தகைய ஆர்வமும் இல்லை. அவர்களுடைய பிள்ளையை அவள் பார்க்க வேண்டும். ஏதோ ஓர் உள்ளுணர்வு, ராம்ஜிதான் இப்போது ராமச்சந்திரன் என்கிற உண்மைப் பெயருடன் அவளை நாடி வந்திருக்கிறான் என்று சொல்லுகிறது. அது மட்டும் சரியானால் அவள் எவ்வளவு அதிர்ஷ்டக்காரியாகி விடுவாள். காதலன் ஆனந்தையும் அவனையும் சந்திக்க வைப்பாள். ஒருவன் ஸ்திரிலோலன். சதை தூண்டிவிடும் வெறிக்கு அகப்படக் கூடிய பெண்களை அடக்கிப் பசியைத் தீர்த்துக் கொள்ளுகிறவன். இன்னொருவன் சுத்தப் பஞ்சாங்கம். காதலியின் கரத்தைக் கூடத் தொடக் கூடாது என்கிற வைராக்கியத்தில் ஊறிப் போனவன். இருவரும் சந்தித்தால் எப்படி இருக்கும்? இன்னும் மேலாக, அவளுடைய அனுபவத்தை அவளே இருவர் முன்னிலையிலும் கூறினால் இருவரும் எப்படி ஸ்தம்பித்துப் போவார்கள்? ஆனந்த் உண்மையாக அவள் அடிக்கடி கூறுவது போல் தெய்வீகக் காதல் கொண்டிருந்தால், அதை க்ஷண நேரத்தில் உதறி, தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு ஓடுவானா? ஆனால் தெய்வீகக் காதலை முன்னிட்டு மன்னித்து மறந்து போவானா?

ரிசப்ஷனில் ஒருவன் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்க, ஒருத்தி பதிவுப் புத்தகத்தைப் புரட்டிப் பெட்டியும் கையுமாக வந்த ஒருவருக்குப் பதில் சொல்லத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

டெலிபோனை வைத்த சிப்பந்தி துங்காவைப் பார்த்தாள்.

''யெஸ் மேடம்!''

''மிஸ்டர் சிவராமன் எந்த அறையில் இருக்கிறார்?'' என்று கேட்டாள்.

''இனிஷியல் ப்ளீஸ்!''

''ஐ திங்க் என்.ஆர். சிவராமன். பெங்களூர்லேர்ந்து வந்திருக்கணும். இங்கே தங்கியிருப்பதாகச் சொன்னார்கள்.''

''ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்!'' என்ற அவள் பதிவுப் புத்த கத்தை அந்தப் பெண்ணிடமிருந்து கைப்பற்றினாள்.

அதற்குள் அவள் பெட்டியுடன் காத்திருந்தவனிடம், ''ரூம் நம்பர் ஒன் ஒ டூ சார்!'' என்றாள்.

பதிவுப் புத்தகத்தைப் புரட்டிச் சிப்பந்தி, ''தேர் இஸ் நோ பிடி பை தட் நேம், மேடம். ஸாரி,'' என்றாள்.

''நேத்து கூட இங்கே இருந்தாராம்.''

''மூன்று நாள் செக்—இனைப் பார்த்துட்டேன். ஒருவேளை ராயப்பேட்டை ரெட்லண்ட்ஸ் இருக்கும்.''

''மயிலாப்பூர்னுதான் சொன்னார். இட் ஆஸ் ஆல் ரைட்!''

அவள் நகரவும், ''ஹலோ துங்கா!'' என்ற குரல் காதில் மோதுவதற்கும் சரியாக இருந்தது.

நின்றாள்.

பார்த்தாள்.

குரலிலிருந்தே ஆனந்த் என்று தெரிந்துவிட்டது.

''ஹலோ ஆனந்த்... வாட் ப்ரிங்ஸ் யு ஹியர்?'' என்று துங்கா கேட்டாள்.

''இதே கேள்வியை நானும் கேட்கலாம், இல்லியா துங்கா?'' என்றான் ஆனந்த்.

அவனுடைய மீசையைக் கண்டாலே துங்காவுக்கு ஒரு வெறுப்பு. கல்யாணமான கையோடு மழிக்கச் சொல்ல வேண்டும். முத்தம் கொடுக்கிற போது மகா இம்சையாக இருக்கும்.

''நோ ஆனந்த்! உங்களாலே என்னைக் கேட்க முடியாது! நான் பத்திரிகை நிருபர். எங்கே, எப்ப எதுக்கு வேணும்னாலும் போவேன்.''

''அதுவும் சரிதான்,'' என்ற ஆனந்த், ''ஆபீஸ்லே ஒரு லஞ்ச் பார்ட்டி. இன்னும் பதினைந்து நிமிடத்திலே எல்லோரும் வந்துடுவாங்க. வா லௌஞ்சிலே உட்காரலாம்,'' என்றான்.

இருவரும் உட்கார்ந்தார்கள்.

''உங்க அம்மா அப்பாகிட்டே சொன்னீங்களா இல்லியா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள் துங்கா.

''எதைப் பத்தி?''

''எதைப்பற்றி... நம்மைப் பத்தி... என்னைப் பத்தி...''

''சமயம் வரட்டும்னு காத்திருக்கேன். ரெண்டு நாளா அப்பா ஆஸ்த்துமாவிலே அவஸ்தைப்படறார்!''

''என்னை நேத்து பெண் பார்க்க வந்தாங்க.''

''வரப் போறாங்கன்னு போன வாரமே சொன்னியே?''

''என்ன நடந்ததுன்னு கேளுங்களேன்!''

''என்ன நடந்தது?''

''பெண்ணைப் பார்க்காமலே திரும்பிப் போயிட்டாங்க.''

''ஏன்... ஏன்?''

''நான் வீட்டிலே இல்லை.''

''ரொம்பத் தப்பு.''

''என்ன தப்பு?''

''கோழையா நடந்துக்கக் கூடாது துங்கா. நீ இருந்திருக்கணும். அவங்க பார்க்கற மாதிரி நீயும் பார்த்திருக்கணும். அப்புறம் உன் முடிவைச் சொல்லியிருக்கணும்.''

''நான் எதை எப்படிச் செய்தாலும் அதுக்கு நேர்மாருக நீங்க அட்வைஸ் பண்ணுவீங்க. இது உங்க குணம்.'' துங்கா சலித்துக் கொண்டாள்.

''என் குணத்தை விடு. வேறு என்ன விஷயம்?''

''ஒரு ஆராய்ச்சியிலே இப்ப இறங்கி இருக்கிறேன். அது விஷயமாகத்தான் இங்கே இப்போ வந்திருக்கேன்!''

''பிரெஸ் மேட்டரா?''

''பிரெஸ்ஸிங் மேட்டர்! ஒருவன் நயவஞ்சகமாக எழுபதுக்கும் மேலான பெண்களை நாலு வருஷத்துக்குள்ளே கற்பழிச்சிருக்கான்!''

''பேப்பர்லே வந்திருந்ததா? நான் படிச்ச ஞாபகம் இல்லே!''

''யாரும் போலீஸ்லே ரிப்போர்ட் பண்ணலே. அதனுலே பேப்பர்லே வரலே.''

''ஆனு இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரிஞ்சது, துங்கா?''

துங்கா லேடீஸ் கிளப் தலைவி சாவித்திரி கொடுத்த டயரியைப் பற்றிச் சொன்னுள். தன் பெயரும் லிஸ்டில் இருக்கிறதென்பதை மட்டும் சொல்லவில்லை.

''இதில் என்ன ஆராய்ச்சி வேண்டியிருக்கு, துங்கா?''

''ஏமாந்து போன பெண்களில் சிலரைப் பேட்டி காண்கிறேன்!''

''என்ன லாபம்?''

''கட்டுரை வெளியாகிறபோது தெரியும்.''

''டயரியில் அவனுடைய பெயரும் விலாசமும் இருக்குமே!''

''அதான் இல்லை. அவனுக்கு இரையான பெண்களின் பெயர், அட்ரஸ், நிறம், உயரம், எந்த இடம் எந்தத் தேதி இதெல்லாம் கனஜோரா இருக்கு.''

''போக்கத்த வேலை, துங்கா. உருப்படியா ஏதானும் செய்.''

''பல பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனந்த்!''

''உன்னாலே இப்ப என்ன செய்ய முடியும். ஒரு பெண் ஓர் ஆண்கிட்டே ஏமாந்தால் அது அவளுடைய குற்றம்.''

''ஓர் ஆண்பிள்ளையின் வஞ்சனையில்...''

''நான்சென்ஸ்! வஞ்சனை அவனுக்கு மட்டும் சொந்த மில்லை, துங்கா. ஆண்களைக் கொக்கி போட்டு மணமேடைக்கு இழுக்கிற பெண்களும் உலகில் இல்லாமல் இல்லை. நீ சொல்ற லிஸ்டிலும் பல பெண்கள் அப்படிப்பட்டவர்களாக இருக்கலாம்!''

''இது உங்க அபிப்பிராயம். நான் வரேன்.''

''மறுபடியும் எப்ப மீட் பண்றோம், துங்கா?''

''இப்போதைக்கு இல்லை.''

''ஏன்?''

''என் ரிஸர்ச் முடிஞ்சப்புறம்தான். அந்த ஆளைக் கண்டு பிடிச்சப்புறம்தான்.''

''துங்கா!''

''என்ன ஆனந்த்?''

''நாளைக்கு என் வீட்டுக்கு வர முடியுமா?''

''ஓ வாட்! என்னை நீங்க உங்க வீட்டுக்கு இன்வைட் பண்றீங்களா! வாட் எ க்ரேட் திங்!''

''கொல்லைப்புறத்திலே பெரிசா வைக்கோல் போர் கிடக்கு. அதுக்குள்ளே ஒரு குண்டூசி விழுந்திட்டது. அதை நீதான் தேடித் தரணும்!''

''என்ன ஆனந்த் சீப்பா ஜோக் அடிக்கிறீங்க?''

''அப்படித்தான் இருக்கு நீ இந்த ஆளைக் கண்டுபிடிக்கப் போறேன்னு சொல்றதும்! அதோ எங்க ஆபீஸ்காரங்க வந்துட்டிருக்காங்க. நான் வரேன்!'' ஆனந்த் எழுந்தான்.

அவன் கன்னத்தில் 'பளார்' என்று அறைய வேண்டும் போலத் தோன்றியது துங்காவுக்கு.

மனம் ஆத்திரத்தில் வீறிட அவள் எழும்பூர் செல்லும் பஸ்ஸைப் பிடிக்க ஓடினாள்.



வாசன் தீவிரமாகச் சதை ஆட, தொந்தி குலுங்க, தந்திரமாக நுழைந்துவிட்ட ஓர் ஆட்டுக்குட்டியை விரட்டிக் கொண்டிருந்தார். அதன் தாய் வேலிக்கு வெளியே நின்று சேயின் சாமர்த்தியத்தைப் பாராட்டிக் கொண்டிருந்தது. ஏற்கனவே குட்டி அரைக் கீரைப் பாத்தியில் பாதி பாத்தியைக் கபளீகரம் செய்து விட்டது. இந்தச் சின்ன வயதிலேயே இந்தத் தீனி என்றால் வயதான பின் அது அரச மரத்தையே அல்லவா விழுங்கிவிடும்.

வாசனுக்கு மூச்சு வாங்கியது. உடல் வியர்த்தது. குலுங்கக் குலுங்க ஓடியதில் கால் வலித்தது. அவர் சரியான திசையிலிருந்து யுத்த முஸ்தீப்பு செய்திருந்தால் ஆடு கதவை நோக்கி ஓடியிருக்கும். எதிர்த் திசையிலிருந்து விரட்டவே அது வீட்டை நோக்கி ஓடியது. ஓடிய மார்க்கத்தில் கத்திரி, வெண்டை, தக்காளிச் செடிகள் தாற்காலிகமாகத் தலைகுனிந்தன.

கமலம் உள்ளே இருந்து வந்தாள். ஆடு அவளுக்காகவே காத்துக் கொண்டிருந்தாற் போல வாசற் பக்கம் வந்து நின்றது. கையிலிருந்த புல்லுக் கட்டை அவள் நீட்ட அது கவ்வியது. அதே கணம் கழுத்தைப் பிடித்து லாகவமாகக் கயிற்றை மாட்டினாள்.

''ஆடு மாடுகூட விரட்டத் தெரியாது. மேய்க்கச் சொன்னால் எப்படி மேய்ப்பீர்களோ?''

''அதான் ஏ.ஜி. ஆபீஸில் சேர்ந்தேன். நிம்மதியா சம்பளம் வாங்கி இப்ப பென்ஷனும் வாங்கறேன். அதைக் கொடு. வெளியே கொண்டு போய் விட்டு வரேன்,'' என்றார் வாசன்.

''பேசாம இருங்கோ. இது நம்ம டெய்லர் ரங்கசாமியோட ஆடு!''

''அதனாலே என்ன? இதன் தோலை எடுத்து நீ சோளி போட்டுக்கப் போறியா? நன்றாயிருக்காது!''

தாய் ஆடு கன்றை அழைக்க தீனமாகக் குரல் கொடுத்தது. மற்ற குட்டி ஆடுகளும் கூட்டம் போட்டன.

''நீங்களும் உங்கள் புத்தி போற போக்கும்...! ஐயோ!

அவன் வர்றானே! அங்கே பாருங்கோ!'' கமலம் திகைத்துப் போன நிலையிலும் ஆட்டைக் கட்டிய கயிற்றை விட வில்லை.

''ஆமாம்! மாப்பிள்ளை!''

''யாருக்கு யார் மாப்பிள்ளை? அவன்தான் நம்ப துங்காவைப் பார்க்கவேயில்லையே...''

காரிலிருந்து இறங்கிய ராமச்சந்திரன் கேட்டைத் திறந்து உள்ளே வர, மற்ற ஆடுகளும் கூட வரப் பார்த்தன.

நல்ல வேளையாக அவனே தடுத்துவிட்டான்.

''இவர் ரெட்லண்ட்ஸ் ஓட்டல்லே தங்கியிருக்கான்னு துங்கா சொல்லியிருப்பாளே!'' என்றாள் கமலம்.

இதற்குள் ராமச்சந்திரன் நெருங்கி வந்துவிட்டான்.

''அடடா! அங்கே நிக்கிற ஆடுகளெல்லாம் உங்க ஆடுகளா? குட்டி மட்டும் இங்கே இருக்கு. அதுகளை வரவொட்டாமல் தடுத்துட்டேனே. இருங்கோ, கேட்டைத் திறந்து எல்லாத்தையும் அழைச்சிட்டு வரேன்.'' சொன்னவன் திரும்பி நடக்கலானான்.

''கொஞ்சம் இருங்கோ. நாங்க ஆட்டுப் பண்ணை நடத்தலே. இது அத்து மீறி வந்த ஆடு. எங்க டெய்லர் வீட்டு ஆடு. நீங்க உள்ளே வாங்க!'' என்றார் வாசன்.

''நமஸ்காரம் சொல்லக் கூட இந்த ஆடுகள் விடவில்லை!'' என்ற அவன், ''நமஸ்காரம்!'' என்றான்.

''நமஸ்காரம். உள்ளே வாங்க!'' என்றார் வாசன்.

''மொதல்லே இந்தச் சனியனை வெளியே கொண்டு போய் விட்டுட்டு வாங்க.''

''இதோ!''

வாசன் பெருமையுடன் மேய்ச்சல் பைரவன் ஒருவனை நடத்திச் செல்லுவது போல 'மே மே' என்று கூக்குரலிடும் வெள்ளாட்டை இழுத்துச் சென்றார்.

அவர் மீண்டும் படி ஏறி ஹாலுக்குள் பிரவேசிக்கும் போது, ராமச்சந்திரன் அன்றைய தமிழ்ப் பேப்பரில் ஜோதிடப் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவரைப் பார்த்ததும், ''மீன ராசிக்கு ஏமாற்றங்கள்னு போட்டிருக்கான்,'' என்றான்.

''எனக்கும் மீன ராசி, தெரியுமோ! என் பெண் துங்காவுக்கும் மீன ராசிதான். அதுல விருச்சிக ராசிக்கு என்ன பலன் போட்டிருக்கான் பாருங்கோ.''

''ஹங்... விருச்சிகம்... விருச்சிகம்னு தேள்தானே.... ஹங்... வெற்றின்னு போட்டிருக்கு!''

''அதான் அவள் ஆட்டுக்குட்டியைப் பிடிச்சா!''

அவர் சொல்லி முடிக்கக் கமலம் செம்பு நிறையத் தண்ணீ ரும் ஒரு டம்ளருமாக வந்தாள்.

''காப்பி டிபன் ஏதானும்?''

''மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு யாரானும் டிபன் சாப்பிடுவாங்களா சார்!'' என்றான் அவன்.

''ஏன், இவர் சாப்பிடுவாரே! டிபன் சாப்பிடறதுக்கு இவருக்கு நேரம் வேளைன்னு எதுவும் கிடையாது,'' என்றாள் கமலம். பிறகு, ''என்ன விசேஷமா இப்படி திகைக்கும்படியா வந்தேளோ தெரியலே!'' என்றாள்.

''என்னோடெ அம்மாவுக்கும் அக்காவுக்கும் நேத்து ரொம்ப ஏமாற்றமாகப் போயிட்டுது. ஏன்னு நான் சொல்லித் தெரிய வேண்டாம். அப்பாவுக்கு இதைப் பத்திய பிரக்ஞையே இல்லே.''

''உங்க விஷயம் எப்படியோ?''

''நான் பார்த்தா ஒரு பெண்ணைத்தான் பார்ப்பேன்கிற லட்சயம் கொண்டவன்!''

''பார்க்க வந்த அந்த ஒரு பெண்ணையும் உங்களாலே பார்க்க முடியாமல் போயிடுத்து!'' என்றாள் கமலம்.

''அதனால்தான் இன்னிக்கு நான் தனியா ஃபார்மாலிட்டி இல்லாமல் வந்தேன்!''

''அவள் காலையிலேயே போயிருக்கா. ஆமாம், எங்கே தங்கறீங்க?''

''ஓட்டல் ரெட்லண்ட்ஸ்தான். அப்பாவுக்கு ஓட்டல்னா பிடிக்காது. அவர் தனியா காஸ்மாபாலிட்டன் கிளப்பிலே தங்கறார். அவர் அதிலே மெம்பர்!''

''சரி, சந்தோஷம்! இப்ப என்ன செய்யறது? இன்னிக்கும் துங்காவைப் பார்க்க முடியாமல் போறது.'' கமலம்.

''எப்ப வருவாள்னு சொல்ல முடியுமா?''

''காலையிலே போனா. அவள் ஒரு ஜர்னலிஸ்ட். பேட்டி அது இதுன்னு அங்கே இங்கேன்னு போவாள். எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது!'' என்றார் வாசன்.

''அப்ப நான் இங்கே உட்கார்ந்திருக்கறதில் அர்த்தம் இல்லே!''

''எனக்கும் அப்படித்தான் படறது!'' என்றாள் கமலம்.

''அவள் வந்ததும் விஷயத்தைச் சொல்லிடறேன். அவசியம் ஏற்பட்டால் டெலிபோன் பண்றேன்!'' என்றார் வாசன்.

''நாங்க சாயங்காலத்து ஃப்ளைட்டில் பெங்களூர், போறோம்,'' என்ற ராமச்சந்திரன், ''நான் ஒண்ணு சொல்லலாமா?'' என்று கேட்டான்.

''திவ்யமா!''—கமலம்.

''எங்களுக்குக் குடும்பம்தான் முக்கியம்னு அம்மா சொல்லுவாங்க. அப்பா ஆமோதிப்பார். ஆனால் எனக்கு குடும்பமும் முக்கியம், பெண்ணும் முக்கியம். உங்க இரண்டு பேருக்கும் என்னைப் பிடிச்சிருக்குன்னு தோணினால் ஏற்பாடுகளை ஆரம்பிக்கலாம். சீர், நகை, பண்டம், பாத்திரம் எதுவும் அம்மா வாங்க மாட்டாள். ஆச்சாரிய சுவாமிகள்தான் அவளோட தெய்வம். அவர் சொல்படி நடக்கிறவள். ஆனால் அதே சமயத்தில் வரப் போகிற பெண்ணுக்குன்னு ஒரு ஜதை வைர வளையலும், நெக்லஸும் வாங்கி வச்சிருக்கா.''

''கேக்கறதுக்கு ரொம்ப இதமா சுகமாத்தான் இருக்கு. ஆனால் அவள் உங்களைப் பார்க்கலை. நீங்க அவளைப் பார்க்கலை.''

''அவளை நான் பார்க்கணும்கிற அவசியம் இல்லை.''

''இந்தக் காலத்துப் பெண்களைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது போலிருக்கு. பெண் பார்க்க வந்தா முன்னே யெல்லாம் தலை குனிந்து வந்து நமஸ்காரம் பண்ணிட்டு ஒண்ணோ இரண்டோ பாட்டுப் பாடிட்டு ஒளிஞ்சிப்பாங்க. இப்போ கால் மேல் கால் போட்டுட்டு பிள்ளையிடம் ஆயிரம் கேள்விகள் கேட்கும்,'' என்றாள் கமலம்.

''நான் என் முடிவைச் சொல்லிவிட்டேன். ஏழு நாட்களுக் குள்ளே பதில் சொல்லுங்கோ போதும். பெங்களூர் அட்ரஸ் தந்துட்டுப் போறேன்.''

சொன்னவன் பாக்கெட்டிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்தான். நீட்டினான். வாசன் வாங்கிக் கொண்டார்.

''அப்ப நான் வரேன்.''

''ஒரு வாய் காப்பியாவது...'' என்று இழுத்தார் வாசன்.

''தாங்க்ஸ், இனிமேதான் நான் சாப்பிடணும், வரேன்!''

அவன் நடந்து செல்வதையே தம்பதி கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவன் காரில் ஏறி அதை ஸ்டார்ட் செய்து நகர்ந்ததும், ''அபூர்வமான பிள்ளை!'' என்றாள் கமலம்.

''நம்ப துங்கா கொடுத்து வைக்கவில்லை!''—வாசன்.

''யார் சொன்னது!''

''நான்தான் சொல்றேன். அவதான் ஆனந்த் ஆனந்த் துன்னு உசிரை விடறாளே!''

''அவள் உசிரையே கிள்ளி எடுத்துடுவேன். மேற்கொண்டு என்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்ய ஆரம்பியுங்கோ. சாஸ்திரிகளிடமோ அல்லது ஜோசியரிடமோ போய் முகூர்த்த நாள் வாங்கிட்டு வாங்க. ஒரே ஒரு நாள் வாங்கிட்டு வராதீங்க. ஒரு நாலஞ்சு வாங்குங்க. எல்லாப் பெண்களோட சௌகரியங்களையும் பார்க்கணும்!'' என்றாள் கமலம்.

''என்ன நீ கமலு? ராமச்சந்திரன்தான் மாப்பிள்ளைன்னு நீ முடிவு எடுத்திட்டியா?''

''ஆமாம். ஆமாம்.!''

''துங்கா மத்த பெண்களை மாதிரி இல்லை! வீட்டையே இரண்டாக்கிடுவாள்!''

''அவளை என் வழிக்கு எப்படிக் கொண்டு வரதுன்னு எனக்குத் தெரியும்! பேசாமல் நான் சொன்னதைக் கேளுங்க,'' என்றாள் கமலம்.

அன்று பிற்பகல் துங்கா வந்து விஷயத்தை அறிந்த போது எல்லாம் நம்ப முடியாத கற்பனையாக இருந்தது.

''சாயங்காலம் ஃப்ளைட்டிலேதான் போறாங்க. மீனம் பாக்கம் பக்கத்திலேதான் இருக்கு. நீ வேணும்னா போய்ப் பாரு. அந்தப் பிள்ளையோட அப்பாவை மகாமகக் கூட்டத்திலே கூட எளி தாகக் கண்டுபிடித்து விடலாம்!'' என்றார் வாசன்.

''நீங்களும் கூடத்தான் போங்களேன்!'' என்றாள் கமலம்.

''நான் ஏர்போர்ட் போகலை. இது அவசரமாக எடுக்கிற முடிவு இல்லை. சிந்திக்கணும். அதுவுமில்லாமல் வர்ற ஒரு வாரம் எனக்கு வேலை டைட்டாக இருக்கு!'' என்றாள் துங்கா, உள்ளூர ஒரு கேள்வி உறுத்தலாயிற்று.

யார் இந்த ராமச்சந்திரன்? அவளைப் பாராமலேயே கல் யாணம் செய்து கொள்ள முன்வருகிறான் என்றால் என்ன அர்த்தம்? ஒருவேளை ஏற்கனவே பார்த்திருக்கிறானா? யாராவது 'இவள்தான் துங்கா' என்று அவளை அடையாளம் காட்டியிருப்பார்களோ!

அல்லது... அல்லது...

கொடைக்கானலில் அவளைப் பூரணமாகத் தனிமையில் பார்த்து ரசித்த வேடதாரிதான் ராமச்சந்திரனா?

தான் டயரியில் எழுதியதை நடைமுறையில் செய்து காட்ட வந்திருக்கிறானோ?

அப்படியானால் அவனுடைய வெறி அடங்கிவிட்டது என்று அர்த்தமா?

துங்கா குழம்பிப் போகவில்லை. ராம்ஜி அவளைப் பற்றி டயரியில் எழுதியதை மீண்டும் படித்துப் பார்க்க விரைந்தாள்.



படி ஏறிவந்த துங்கா தன் எதிரே மூக்கின் நுனிவரை இறங்கிய கண்ணாடி வழியாகச் சந்தேகமும் வெறுப்புமாகப் பார்த்த அவரைக் கண்டு ஒரு கணம் தயங்கினாள்.

அவருக்கு வயது அறுபது இருக்கும். முகமெல்லாம் நரை. ஷேவிங்கைப் பற்றிக் கவலைப் படவில்லை என்று தோன்றியது. மண்டையில் மயிர் இருந்த அடையாளம் கூட இல்லை. பல்லின் வரிசையிலிருந்தே பொய்ப்பல் எனத் தெரிந்தது.

''யார் நீ?'' என்றார் அவர்.

''என் பெயர் துங்கா. பம்பாயிலிருந்து ஒரு பத்திரிகை—பெண்கள் பத்திரிகை—மதர் ஆஃப் டுமாரோ அப்படின்னு ஒரு லேடீஸ் மாகஸின் வர்றது. அதுக்கு நான் மெட்ராஸ் கரெஸ்பாண்டெண்ட்.''

''என் வீட்டில் என்ன வேலை?''

''சுகுணாவைப் பார்க்க வந்தேன்.''

''எதுக்கு?''

''நாங்க ஒரு ஸர்வே எடுக்கறோம். பெண்களின் மேம்பாட்டுக்காக... சில பெண்களைத் தேர்ந்தெடுத்தேன். அதில் சுகுணா வும் ஒருத்தி.''

''பேட்டிக்கு பணம் ஏதாவும் உண்டா?''

''வழக்கமாகக் கிடையாது. ஆனால் சிலர் விரும்பினால் கொடுப்போம்.''

''நூறு ரூபாய் கொடுத்தால் இருபது நிமிஷம் பேட்டி காணலாம். சம்மதமா?'' என்றார் அவர். இன்னும் வழிந்த மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொள்ளவில்லை.

''சம்மதம்!''

''பணத்தை முதலில் பார்க்கிறேன்!'' என்றார் அவர்.

மனம் முழுக்க எரிச்சலும் ஆத்திரமும் வெடிக்க, துங்கா கைப் பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்தாள். நீட்டினாள்.

மறுகணம் பணத்தையே கண்டிராதவரைப் போல அவள் நீட்டிய நோட்டைப் பறித்துக் கொண்டார். பிறகு, ''சுகுணு!'' என்று குரல் கொடுத்தார்.

''நீ பேசிட்டிரு. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்,'' என்றுர் அவர்.

அவர் அவளைத் தாண்டுகையில் குப்பென்று சாராய வாசனை வீசியது.

அதை மறப்பதற்குள் ஒரு பெண்—பார்க்கக் கிளிபோல இருந்தாள்—எதிர்ப்பட்டாள்.

''சுகுணு ப்ளீஸ்!''

''நான்தான் சுகுணு! உள்ளே வாங்க.''

''என் பெயர் துங்கா!''

''நீங்களும் என் அப்பாவும் பேசிட்டிருந்ததையெல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். எதைப் பத்திப் பேட்டி?''

''உன் அப்பா இருபது நிமிடம்தான் டயம் கொடுத்திருக்கார்! அதுக்குள்ளே ஆரம்பிச்சு முடிக்கிறது எப்படின்னு யோசிக்கிறேன்.''

''கவலைப் படாதீங்க, துங்கா. இன்னும் அஞ்சு மணி நேரத்துக்கு அவரைப் பார்க்க முடியாது. நூறு ரூபாய்க்கும் குடிச்சிட்டு ஏதானும் தின்னுட்டுத்தான் திரும்புவார்.''

''வீட்டிலே வேறு யாரும் இல்லையா?''

''இல்லை. அம்மா போய் அஞ்சு வருஷமாகிறது. அப்பாவோட பிஸினஸை நான்தான் இப்போ பார்த்துக்கறேன். பேர்தான் பிஸினஸ். கமிஷன் ஏஜென்ட் என்றெல்லாம் வர்ற கொஞ்சநஞ்ச வருவாயும் சாராயத்துக்கு ஓடறது!''

அவளுடைய குரலில் ஏக்கம் ஒலித்தது.

''கல்யாணமாகிவிட்டதா?''

''அதுவும் இல்லை. ஆகவும் ஆகாது. அது சரி, எதைப்பற்றி பேட்டி காண வந்திருக்கீங்க? போட்டோ தர மாட்டேன்.''

''போட்டோ தேவை இல்லை,'' என்ற துங்கா, ''ஏன் கல்யாணம் ஆகாதுன்னு சொன்னே?'' என்றுள்.

''அது என் சொந்த விஷயம்.''

''1983'ம் வருடம் ஆகஸ்ட் மாதம் எட்டாம் தேதி மகாபலிபுரம் சம்பவம் காரணமாக இருக்கலாம் என்று நான் ஊகிக்கிறேன்.''

மறுகணம் சுகுணுவின் முகம் வெளிறியது.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''ஒரு டயரியின் மூலம்.''

''அது எனக்கு வேண்டும்.''

''ஸாரி! இப்போது அது என்னிடம் இல்லை.''

''மகேஷ் எங்கே இருக்கார்? அவருக்குக் கல்யாணமாயிட்டுதா?''

''தெரியாது!''

''அவரைப் பார்த்திருக்கீங்களா?''

''இனிமேத்தான் பார்க்கணும்.''

''ரொம்ப நல்லவர். இனிமையான குணம். மென்மையான பேச்சு...''

திடீரென்று சுகுணா தன்னையே மறந்தாள். ஒல்லியான உடற்கட்டு. ஒருவேளை சமீப காலத்தில் இளைத்துப் போயிருக்கலாம். பொன் நிறம். பச்சைப் புடவை கட்டியிருந்தாள். கண்கள் நன்றாகப் பெரியதாக அமைந்திருந்தன. எந்தப் புயலும் கலைக்க முடியாத அடர்ந்து வளர்ந்து அழுத்தமாகப் பதிந்த கேசம். மூக்கு கிளி மூக்காக வளைந்து தனி சோபையை அளித்தது.

''அப்படித்தான் கேள்விப்பட்டேன் நானும்!'' என்றாள் துங்கா.

''தற்செயலாகச் சந்தித்தோம். லவ் அட் ஃபர்ஸ்ட் சைட் என்பார்களே அது என் விஷயத்தில் உண்மையாகப் போச்சு. பெரிய மெர்ஸிடீஸ் காரில் வந்தார். அப்பா அவரைக் கண்டு அசந்து போனார். அவருடைய வியாபாரத்தை எப்படி எப்படியெல்லாம் விஸ்தரிக்கலாம் என்று யோசனை சொன்னபோது மகேஷ் மீது அப்பா வுக்குப் பெரிய மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டு விட்டது. அப்புறம் ஒரு நாள் போன் பண்ணினார்.''

''என்ன பேசினார்?''

''தன்னுடைய இடத்துக்கு வரச் சொன்னார். ஃபைவ் ஸ்டார் ஓட்டல். அன்றைக்கு அவருக்குப் பிறந்தநாள் என்றார்.''

''கொண்டாடினீர்களாக்கும்!''

''நீங்களும் என்னை மாதிரி ஒரு பெண். அதுவும் பிரபல பத்திரிகை நிருபர். ஒரு பெண்ணின் மனசை நீங்க நன்றாகப் புரிஞ்சுக்குவீங்க. அன்னிக்கு ஓட்டல் அறையிலேயே, ''என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதமா'ன்னு கேட்டார். நான் யோசிக்கவில்லை. டக்குன்னு சம்மதம்னு சொன்னேன்.''

''இது சாதாரணப் பெண்ணோட இயல்புக்கு முரணாக இருக்கு. நீ என்ன நினைக்கிறே சுகுணா?''

''ஏற்கனவே இரண்டு தடவை சந்திச்சிருக்கிறேன். நாலஞ்சு ராத்திரி அவரையே நினைத்து நினைத்துத் தூக்கம் பிடிக்காமல் கற்பனையெல்லாம் செய்திருக்கிறேன். என் அப்பாவுக்கு வேறு அவரைப் பிடிச்சிருக்குன்னு தெரியும். அதனாலே முரணாக இல்லை.''

''அப்புறம் என்ன நடந்தது?''

''தாஜ் ஓட்டல்லே சாப்பிட்டோம். அப்புறம் மகாபலிபுரம்

போகலாமான்னு கேட்டார். சீக்கிரம் திரும்பிடணும்னேன். வீட்டிலே அப்பா மட்டும்தானே? நான் வந்துதான் சமையலை ஆரம்பிக்கணும்!''

''சரி, நீங்க மகாபலிபுரம் போனீங்க.''

''அவர்தான் காரை ஓட்டிஞர். ஏர் கண்டிஷன் கார். போய்ச் சேரும்போது மணி மூன்று. ஒரு காட்டேஜ் கிடைச்சுது. சமுத்திரத்தில் நிறுத்தலாம்ஞர். எனக்கு நீச்சல் தெரியாது. கத்துத் தரேன்ஞர். வேண்டாம்னேன். அப்புறம் மறுபடியும் திருமணத்துக்கு சம்மதமான்னு கேட்டார்.''

''அப்படியா!''

''எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சு. அவரும் என்னைப் போலவே காதலிக்கிருர்னு புரிஞ்சது.''

''அப்புறம்?''

''நடக்கக் கூடாதது நடந்து விட்டது. ஆனுல் தப்பை அவர் மட்டும்தான் செய்தார்னு நான் பழி போட மாட்டேன். உண்மையைச் சொல்லப் போனுல் எங்க கல்யாணம் விரைவில் நடக்கும் என்கிற நம்பிக்கையில் நானும் ஆசைப்பட்டேன்.''

''அப்புறம்?''

''மறு நாளிலிருந்து அவரைக் காணவில்லை. பல மாதங்களுக்கு ஓட்டல் தாஜ் வாசலிலேயே அவர் வருவார் வருவார்ன்னு காத்திருந்தேன்!''

''ஏதானும் விபரீதம்?''

''நடக்கவில்லை. அவர் அந்த விஷயத்தில் ஜாக்கிரதையாக இருந்தார்.''

''இனிமேல் அவர் என்றைக்குமே வர மாட்டார் என்று சொன்னுல் அது உனக்கு ஏமாத்தமாக இருக்கும் இல்லையா?''

''என்ன சந்தேகம்? அது சரி, என்னைப் பத்திரிகைக்கு பேட்டி காண வந்தேன்னீங்களே... அது சம்பந்தமா ஏதுவுமே கேட்கலையே?''

துங்கா சிரித்தாள்.

''அந்த மகேஷ் சம்பந்தமாகத்தான் பேட்டி. அந்த அயோக்கியனை எப்படியாவது கண்டுபிடிச்சுத் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுக்கணும்!''

''மகேஷ் அயோக்கியனு?''

''ஆமாம். ஆதாரம் நிறைய இருக்கு. நீ உன் மனசைத் தேற்றிக் கொள் சுகுணு. உன்னை மாதிரி இன்னும் எத்தனையோ பெண்களைக் கொக்கி போட்டு இழுத்துப் படுக்கைக்குக் கொண்டு போயிருக்கிருன் அவன்!''

''பொய்!'' என்று வீரிட்ட அவள், ''இருக்க முடியாது.

இருக்கவே இருக்காது. மகேஷ் ஒரு ஜென்டில்மேன்!'' என்றாள்.

''உன்னைப் பொறுத்தவரையில் அவன் மகேஷ். இன்னொருத்திக்கு ரத்னகுமார். மூணாவது பெண்ணுக்கு ராம்ஜி!''

சுகுணா மலைத்துப் போய் நம்பவே முடியாததைக் கேட்டவளைப் போல் நிற்க, துங்கா—

''ஐ'ம் ஸாரி! சுகுணா, நீ அவனை மறக்க வேண்டியதுதான். அவன் ஒரு ரோக்!'' என்றாள்.

மறுகணம் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வெளியேறினாள்.

அவள் சாலையைக் கடக்கும் போது கண்ணாடி வழியும் உருவம் தள்ளாடிக் கொண்டு வந்தது. அவள் அவரைக் கவனியாதது போல் நடந்தாள்.



சுகுணாவைப் பேட்டி கண்ட பிறகு துங்காவுக்குத் திடீரென்று சுரத்து இல்லாமல் போயிற்று. ஒரு வெகுளிப் பெண் முற்றிப் போன அயோக்கியன் ஒருவனை, காமவெறி பிடித்தவனை இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். கண்டதும் காதல் என்று பிதற்றுகிறாள். அவளை என்ன செய்ய? ஒரு ஆசாமி ஒன்றுக்கும் மேம்பட்ட பெண்களைப் பற்பல ஊர்களில் கல்யாணம் செய்து கொண்டு சீர்ப் பணத்தையும் நகைகளையும் முழுங்கிவிட்டு ஓடின கதைகளைப் பேப்பரில் படித்திருக்கிற அவள் இம்மாதிரி ஒரு அயோக்கியனை—குண்டு தைரியத்துடன் அனுபவித்த பெண்களைப் பட்டியல் போட்டு டயரியில் பொறித்த ரௌடியை—கண்டதேயில்லை. அவனைப் பழிவாங்கும் படலத்தில் அவள் மும்முரமாக இறங்கியிருக்கையில், சுகுணா என்ற ஒரு பெண் கவி பாடுகிறாள். அவருடைய காதல் தெய்வீகக் காதலாமே? அவனுடைய காமம் ஓர் அசுரனுடைய காமம் என்று ஏன் அவளுக்குப் புரிய மாட்டேன் என்கிறது?

ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திவிட்டு அவளைக் களவாடிய அவனைத் தேட முயன்றால் என்ன?

எங்கே என்று தேடுவது?

அவளைப் பற்றி அவன் தன் டயரியில் மிகவும் அருமை பெருமையாகத்தான் எழுதியிருக்கிறான். மண வாழ்க்கை என்று வந்தால் அவளைத்தான் திருமணம் செய்துகொள்ளுவேன் என்று எழுதியிருக்கிறான். ஆனால் இது மூன்று வருடங்களுக்கு முன் எழுதியவை. அவன் டயரியில் எழுதாத பெயர்களும் இருக்கக் கூடும். ஏன், டயரியில் எழுதும் வழக்கத்தையே நிறுத்தியிருக்கக் கூடும். அவளைவிட அழகான, புத்திக்கூர்மையாக உள்ள ஒரு பெண்ணை அவன் பிற்காலத்தில் சந்தித்துக் கல்யாணமும் செய்துகொண்டிருக்கலாம்.

இந்த ஆராய்ச்சியினால் என்ன புண்ணியம்? கட்டுரை எழுதலாம் என்று அவள் ஆரம்பத்தில் நினைத்தாளே தவிர, இந்த மாதிரிக் கட்டுரையை அவளுடைய பத்திரிகை 'குப்பை' என்று போட்டாலும் போடும். ஆயிரக்கணக்கான ஆண்கள் இம்மாதிரி ஆயிரக்கணக்கான பெண்களைச் சூறையாடியிருக்கிறார்கள். எல்லாமா சரித்திரத்தில் எழுதப்படுகின்றன. என்றைக்கு ஆண், பெண் என்ற பேதம் உருவாயிற்றோ, அன்றைக்கே ஆண் தன் பசிக்குப் பெண்ணை இஷ்டம் போல இரையாக்கிக் கொள்ளத் தொடங்கிவிட்டான்.

துங்கா முதன் முதலாகக் குழம்பிப் போனாள். அவளைப் பெண் பார்க்க வந்த ராமச்சந்திரன் என்கிற ஒரு ஆண் பிள்ளைக்கும் அவளை பூப்பந்தாக வாரி எடுத்துக் கட்டிலில் கிடத்திய ராம்ஜிக்கும் எந்தச் சம்பந்தமும் இராது என்று எண்ணலானாள். அவன் வேறு, இவன் வேறு என்று நெஞ்சம் கூற ஆரம்பித்தது!

டயரியைப் படிக்க இப்போது அவளுக்கு மனம் வரவில்லை.

அபயம் என்கிற பெண் பழையதை மறந்துவிட்டு, புதிய வாழ்க்கை ஒன்றில் ஈடுபட்டுத் துடிக்கிறாள். சுகுண என்கிறவள் இன்னும் அவனுக்காகக் காத்து ஏங்குகிறாள்.

துங்கா இன்னும் மூன்று பெண்களைப் பேட்டி காண்பதாக இருக்கிறாள். அதன் பிறகு அவனை தேடிப் பிடிப்பதுதான் அவளுடைய வேலை.

இதெல்லாம் அவசியம்தானா?

திடீரென்று அப்பாவில் குரல் கேட்டது.

''துங்கு, போன்!'' என்றார் வாசன்.

''எனக்கா?''

''நீதானே துங்கு? அப்படியானால் உனக்குத்தான்.''

''யார்?''

''தெரியலே. ஒரு பெண் குரல்.''

துங்கா டூரிஸ்ட் கெய்ட் வேலைக்குப் போக ஆரம்பித்த புதிதிலேயே வீட்டுக்கு டெலிபோன் வந்துவிட்டது. வாசனுக்கு

டெலிபோனால் எந்த உபயோகமும் இல்லை. கமலமாவது ஓரிரு சிநேகிதிகளுக்கு வம்பு அளக்க அதைப் பயன்படுத்துவாள். தொழிலுக்கு டெலிபோன் இன்றியமையாதது. சொல்லப் போனால் அது அவளுடைய பெயரில்தான் இருந்தது.

''துங்கா ஹியர்!'' என்றாள்.

''ப்ளீஸ் ஹோல்ட் ஆன்!'' என்ற பெண் குரல் கேட்டது.

இரவு ஒன்பது மணிக்கு யார் தேடுகிறார்கள்! ஒருவேளை பம்பாயிலிருந்து பத்திரிகை ஆசிரியர் பேசுகிறாரோ?

''குட் ஈவினிங், மிஸ் துங்கா. இரண்டு தடவை வந்தேன். உன் திருமுகத்தைப் பார்க்க முடியலே.''

ஓர் ஆண் குரல் கணீரென்று கேட்டது.

''ஹூ ஆர் யூ?''

''ஐ'ம் ராமச்சந்திரன்.''

''ஓ, யூ ஸீ! எங்கிருந்து பேசறீங்க?''

''லயன் க்ளீயரா இருக்கிறதிலிருந்தே தெரியலேயா, லோகல் கால் இல்லேன்னு! பெங்களூர்லேர்ந்து பேசறேன். சொல்லப் போனால் நான் என் ஆபீஸ்லேர்ந்து பேசறேன்.''

''ராத்திரி ஒன்பது மணிக்கு ஆபீஸா?''

''ஸாரி! ஃபாக்டரி கம் ஆபீஸ். எங்களுக்கு ஆட்டோ மொபைல் யூனிட் ஒண்ணு உண்டு. எங்கப்பாவுக்கு இதைக் கண்டாலே எரிச்சல். அதனாலே சொல்ல விட்டுட்டார்.''

''சரி, இப்போ என்ன வேண்டும்?''

''என்னாலே மறுபடியும் பார்க்க வர முடியும்னு தோணலே.''

''சிரமப்பட வேண்டாம். மிஸ்டர் ராமச்சந்திரன்.''

''தாங்க் யூ!''

''நான் வேணும்னுதான் அன்னிக்கு வீடு திரும்பலே. என் அம்மா அப்பா என் இஷ்டத்துக்கு விரோதமாக அரேஞ்ச் பண்ணினாங்க.''

''ஏற்கனவே தெரியும்!''

''என்ன தெரியும்?''

''உனக்கு விருப்பம் இல்லேன்னு!''

''எப்படித் தெரியும்?''

''புரொபஸர் ஆனந்த் எப்படி இருக்கார்?''

துங்காவுக்கு ஷாக் அடித்தது.

''ஆனந்த்... ஆனந்தை உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கு அவனைப் பத்தி எல்லாம் தெரியும், மிஸ் துங்கா.

ஆனால் அவனுக்கு என்னைப் பத்தி ஒன்றும் தெரியாது.''

''அப்போ என்னை பத்தியும் எல்லாம் தெரியுமா?''

''இதில் என்ன சந்தேகம்? நான் உன்னைப் பல தடவை பல இடங்களில் தனியாகவும் பார்த்திருக்கிறேன். சில சமயம் சில இடங்களில் ஆனந்துடன் சேர்த்தும் பார்த்திருக்கிறேன்.''

''இவ்வளவெல்லாம் எப்படித் தெரிஞ்சுக்கிட்டீங்க?''

''பணம்! அதனாலே எதையும் சாதிக்க முடியும், துங்கா!''

''ஐ வாண்ட் டு ஸீ யூ!''

''எனக்கும்தான். ஏன் நீயும் ஆனந்தும் ஒண்ணு பெங்களூர் வரக் கூடாது? எங்க கெஸ்ட் ஹவுஸ் பெரிசா இருக்கும்.''

''தாங்க் யூ மிஸ்டர் ராமச்சந்திரன்! ஆனால் இப்போ நான் ஒரு முக்கிய வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்.''

''தெரியும்!''

''என்ன தெரியும்?''

''சாவித்திரி கமல்நாத்; அபயம்—அபராஜிதா அதுக்குப் பிறகு யார் யாரையெல்லாம் பார்த்தே?''

''அப்ப... அப்ப... நீங்கதான் நீங்கதான் ராம்ஜியா?''

''நான்சென்ஸ்! என் பெயர் நன்னிலம் சிவராமன் ராமச்சந்திரன். என் போன் நம்பரைச் சொல்றேன், குறிச்சுக்க.''

துங்கா அருகே இருந்த பென்சிலை எடுத்தாள்.

''சொல்லுங்க!''

அவன் சொன்னான்.

''போன் பண்ணுவதானால் ஒன்பதிலிருந்து இரவு பன்னிரண்டு வரை பண்ணு. மத்த நேரங்களில் நான் எங்கே இருப்பேன்னு என்னாலேயே சொல்ல முடியாது.''

''உங்க அப்பா அம்மா அக்கா எங்கே இருக்காங்க?''

''அப்பா நன்னிலம் போறார். சுந்தரி நாக்பூர் போகிறாள். அம்மா ஊட்டி போகிறாள்.''

''யார்டி?''—கமலம்.

''ஒரு ஃப்ரண்ட்!''

''ஆம்பிள்ளையோட பேசற மாதிரிப் பட்டது.''

''ஆம்பிளைதான்.''

''ஆனந்த் இல்லேன்னு தெரியறது!'' என்றாள் கமலம் தொடர்ந்து.

''யாரானால் உனக்கு என்ன அம்மா?''

''ஏண்டி, ராத்திரி ஒன்பது மணிக்கு மேலே ஒருத்தன் போன் பண்றான். அது அந்த லெக்சரர் படுபாவியும் இல்லே. அவன் யாருன்னு கேட்கக் கூட ஒரு அம்மாவுக்கு உரிமை இல்லையா?''

''இல்லே!'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டுத் துங்கா தன்

அறைக்குப் போனாள்.

அவள் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். தலை சுற்றியது.

இந்த ராமச்சந்திரன் கடந்த பல நாட்களாக, ஏன் பல வாரங்களாக அவளைத் துப்பறிந்து வருகிறான். மூன்று மாதங்கள் முன்புதான் ஜாதகப் பொருத்தம் பற்றிக் கடிதம் வந்தது. எஸ்டேட் மற்றும் பல இடங்களில் வேலை இருக்கிற காரணமாக பிள்ளையால் உடனடியாகப் பெண் பார்க்க வர இயலாது என்று தெரிவித்திருந் தார்கள். அதாவது சில மாதங்கள் 'டயம்' கேட்டிருந்தார்கள்.

ஏன் என்று துங்காவுக்கு இப்போது விளங்கியது. இந்த இரண்டு மூன்று மாதங்களில் ஆயிரக்கணக்காகப் பணத்தைக் கொட்டி அவளை வேவு பார்த்திருக்கிறார்கள். ராமச்சந்திரன் ஆனந்த் தைப் பற்றியே கூறுகிறான். என்ன அர்த்தம்? அவனையும் வேவு பார்த்திருக்கிறானா?

சாவித்திரி கமல்நாத் டயரி கொடுத்ததும், அபயத்தைப் பார்க்கச் சென்றதும் கூடத் தெரிந்திருக்கிறது. என்றால் எவ்வளவு திறமையாக மும்முரமாக அவளைத் துப்பறிகிறவர்கள் நெருக்கமாகத் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். அன்றைய லேடீஸ் கிளப் கூட்டத் தில் ஒரு ஆண் ரிப்போர்ட்டர் கூட இல்லை. ஏன் ஆண் சிப்பந்தி கூட இல்லை. அப்படியிருந்தும் தலைவி சாவித்திரி கொடுத்த டயரியின் கதை தெரிந்திருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது. அந்தக் கூட்டத்தில் ஓர் அங்கத்தினரே துப்பு அறிகிற கும்பலைச் சேர்ந்தவள். அல்லது அவள் அங்கத்தினரைப் போல வந்திருக்கிறவள்.

ஏன் சாவித்திரி கமல்நாத்தை அவள் சந்திக்கக் கூடாது.

சந்திப்பது சுலபம்.

ஆனால் அவளிடம் என்ன கேட்பது? எப்படிக் கேட்பது?

அவளை உலுப்பும் வண்ணம் அப்பா வாசன் திடீரென்று வந்தார்.

''துங்கு!''

''என்னப்பா?''

''ஒரு நிமிடம் உன்கிட்டே பேசலாமா?''

''மொதல்லே உட்காருங்கப்பா.''

''தாங்க்ஸ் குழந்தை!''

''என்னப்பா வேண்டும்?''

''கோபிச்சுக்க மாட்டாயே!?''

''மாட்டேன்.''

''இப்ப பெங்களூர்லேர்ந்துதானே போன் வந்தது?''

''ஆமாம்ப்பா.''

''அவன்தானே பேசினான்.''

''ஆமாம்ப்பா.''

''அவன் ரொம்ப நல்ல பிள்ளை, துங்கு!''

''சரிப்பா.''

''நல்ல குணம்.''

''சரிப்பா.''

''கொஞ்சம் வழுக்கை கட்டியிருந்தாலும் நல்லா புஷ்டியா லட்சணமா இருக்கான்.''

''சந்தோஷம்ப்பா.''

''அவனுக்கு உன்னைப் பாராமலே பிடிச்சுப் போயிடுச்சும்மா!''

''அதான் சொன்னீங்களே.''

''ஆனந்த் வேண்டாம்மா.''

''ஏம்ப்பா?''

''அவன் ஒரு ரௌடிம்மா!''

''என்னப்பா உளர்றீங்க?''

''அவனோட அப்பா ராகவாச்சாரிக்கு மோசமான குணம். சேலத்திலே ஒருத்தியை வச்சிட்டிருந்தான்.''

''அதனாலே எப்படிப்பா ஆனந்த்தையும் மோசம்னு சொல்ல முடியும்?''

''முடியும்மா. ஆனந்துக்கு இப்ப வயசு முப்பத்து மூணு!''

''நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்கப்பா.''

''அவன் மொதல்லே ஒரு சின்ன காலேஜ் டியூட்டரா இருந்தாம்மா.''

''அப்படியா?''

''அங்கேயிருந்து அவன் தப்பிச்சிட்டு வந்தது தம்பிரான் புண்ணியம்.''

''ஏன் என்ன ஆச்சு?''

''ஒரு பெண்ணை...''

''என்ன சொன்னீங்க?'' துங்கா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''பலவந்தப்படுத்தப் பார்த்தாம்மா.''

''பொய்! இருக்கவே முடியாது. இத்தனை நாள் அவரோட நான் பழகறேன்! அவருடைய சுண்டு விரல்கூட என் மேலே பட்டதில்லை.''

''இப்போ அவன் போடறது பெரிய வேஷம்னு சொன்னால் நீ நம்ப மாட்டேம்மா. அவனை அன்னிக்கு அந்தச் சின்ன காலேஜ்லேர்ந்து அனுப்பிச்சிட்டாங்க! மன்னிப்பு கேட்டுக் காலிலே விழுந்ததாலே டிஸ்மிஸ் பண்ணாமல் வெறுமனே டிஸ்சார்ஜ் பண்ணிட்டாங்க!''

''உங்களாலே நிரூபிக்க முடியுமாப்பா?''

''முடியும்மா. என்கூட ஏ.ஜி. ஆபீஸ்லே தீத்தாரப்பன்னு ஒரு நல்ல மனுஷன் வேலே செய்திட்டிருந்தார். அவரோட பிள்ளே தான் அந்தக் காலேஜ் பிரின்ஸிபால்!''

''தாங்க்ஸ் அப்பா, நீங்க இவ்வளவெல்லாம் சொன்ன துக்கு!''

''ராகவாச்சாரி ஒரு அயோக்கியன்னு பிள்ளே ஒரு படி மேலேங்கறதை ஞாபகம் வச்சுக்கம்மா!''

''சரிப்பா!''

வாசன் வெளியேறினர்.

துங்காவுக்கு அழுது தீர்ப்பதா ஆத்திரப்படுவதா என்று தெரியவில்லே.

ஆனுல் இரவு முழுவதும் அவள் தூங்கவில்லே.

ஆனந்த் ஒரு கபட சந்நியாசியா?

கடவுளே, உலகம் பூராவும் ஆண்கள் வேஷம் போடும் கயவர்களா? நல்லவனே கிடையாதா?



சாவித்திரி கமல்நாத் அப்படி ஒன்றும் பிரபலமான சமூக சேவகி அல்ல என்றாலும், சமூக சேவை செய்யும் பாவனே பிரபலமாக இருந்தது. எந்தக் கூட்டமாக இருந்தாலும், எந்தப் பிரசினேயாக இருந்தாலும், உலகத்தில் எந்த மூலேயிலாவது ஒரு புயலோ, பூகம்பமோ, வெள்ளமோ வந்தாலும், அவற்றில் தன்னேயும் சம்பந்தப்படுத்திக் கொள்ளுவாள். எண்ணவும் அளக்கவும் முடியாத வகையில் செல்வம் இருந்தது. கமல்நாத் உள்ளூர் டெலிபோனில் பேசவே மாட்டார். அவர் பேசுகிறுர் என்றால் லண்டன், நியூயார்க், டோக்கியோ என்றுதான் இருக்கும். சிற்சில சமயங்களில் போனல் போகிறது என்று டெல்லி, கல்கத்தா, பம்பாயுடனும் தொடர்பு கொள்ளுவார்.

கமல்நாத்தின் இரண்டு பிள்ளைகளும் மூன்று பெண்களும் அம்மாவைப் பற்றித் தனித்தனி அபிப்பிராயங்கள் வைத்திருந்தார்கள். ஆனால் நேரில் பார்க்கும்போது வாயாரப் புகழ் பாடுவார்கள். அவள் வயிற்றில் உதிக்கத் தாங்கள் பூர்வ ஜென்மங்களில் சொல்ல முடியாத அளவுக்குப் புண்ணியம் செய்தவர்கள் என்று கூறுவார்கள். அவள் பேசிய பேச்சுக்களை (அபத்தங்களை என்று அவர்கள் தனித்தனியே விவரித்தார்கள்.) டேப்பில் பதிவு செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவார்கள்.

சாவித்திரி மெய்மறந்து போவாள். எல்லாப் பிள்ளைகளும் பெண்களும் தனித்தனியாக, தத்தம் குடும்பங்களுடன் பெரிய பெரிய பங்களாக்களில் குடியிருந்தாலும் வாரம் ஒரு முறை (அன்று கூட்டமோ அல்லது லேடீஸ் கிளப்பின் செயற்குழுவின் சந்திப்போ இல்லாமல் இருத்தல் அவசியம்) அம்மாவைத் தரிசனம் பண்ண வருவார்கள். ஒன்று டிபன், அல்லது சாப்பாடு.

அன்று அபூர்வமாக எல்லோரும் காலை டிபனுக்குக் கூடினார்கள். கமல்நாத் ஒரு இயங்கும் ஆஸ்பத்திரி. தேவைக்கு மேல் கொலஸ்ட்ரால். அளவுக்கு மீறிய சர்க்கரை. இடையிடையே மூச்சுத் திணறல். திடீரென்று முதுகு பிடித்துக் கொள்ளும். காது அடைத்துக் கொள்ளும். ரத்த அழுத்தம் பற்றிக் கூறவே வேண்டாம். அவருக்கு இன்னும் வராமலிருப்பது கான்சர், டி.பி, ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக் இவைதான். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இவற்றில் ஏதாவது ஒன்று வந்தே தீரும் என்று அவரைக் கண்காணிக்கும் பல டாக்டர்களும் நிபுணர்களும் உறுதியாக நம்பினார்கள்.

சர்க்கரை போடாத டீயையும் உப்பு காரம் தித்திப்பு ஏதும் இல்லாத புரோட்டீன் பிஸ்கட்டும் சாப்பிட்டு விட்டு கமல்நாத் எழுந்தார். கூடவே இரண்டு பிள்ளைகளையும் அழைத்துச் சென்றார். சாவித்திரி பெண்களுடன் தனியே விடப் பட்டாள்.

அந்தச் சமயத்தில்தான் ஒரு சிப்பந்தி ஓடோடி வந்தான்.

''பிரெஸ்லேயிருந்து ஒரு பத்திரிகை நிருபி வந்திருக்காங்க,'' என்றான் அவன்.

சாவித்திரி ஒரு தடவை அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''என்னடா சொன்னே? பத்திரிகை நிருபியா?''

''ஆமாங்க. புடவை கட்டியிருக்காங்க!''

மூன்று பெண்களும் சிரிக்க, ''நிருபருக்கு ஆப்போஸிட் ஜெண்டர் நிருபி,'' என்றாள் ஒருத்தி.

''ஏன் இதை ஒரு புது வார்த்தையா உபயோகத்துக்குக் கொண்டு வரக் கூடாது?'' என்றாள் இன்னொருத்தி.

இருவரையும் கையமர்த்திவிட்டு சாவித்திரி, ''வாசல்

ரூம்லே உட்கார வை,'' என்றாள்.

''அவளே போய் உட்கார்ந்துட்டாம்மா.''

''பெயரைக் கேட்டியா?''

''உங்களைத் தெரியும்னு.''

''என்னை இந்த மெட்ராஸ்லே யாருக்குத் தெரியாது!'' என்ற சாவித்திரி நகர்ந்தாள்.

''மம்மி! டோண்ட் ஸே மெட்ராஸ். தமிழ்நாடு!'' என்றாள் ஒரு பெண்!

''ஏய், யூ ஆர் கஞ்சூஸ்! மம்மியை இந்தியா பூராவுக்கும் தெரியும்,'' இண்டியா,'' என்றாள் இரண்டாவது பெண்.

மூன்றாவது பெண்ணுக்கும் ஏதாவது பேச வேண்டும் போல இருக்கவே, அவள், ''ஒரு சின்ன பெட்! ஐயாயிரம்!'' என்றாள்.

''என்ன பெட்?''

''இந்த வருஷம் நம்ம மம்மிக்கு பத்மஸ்ரீ பட்டம் கிடைக்கும்!''

''இதை நம்ப வீட்டு வேலைக்காரிகூடச் சொல்லுவாள்! யூ கோ அண்ட் மீட் தட் நிருபி, மம்மி!''

சாவித்திரி கமல்நாத் சாப்பாட்டு அறையைவிட்டு வெளியே வந்து ஹாலைக் கடந்து, வாசல் வராந்தாவுக்கு வந்தாள். அறையில் ஒரு பூக்கூடை நாற்காலியில் துங்கா அன்றைய தினசரியைப் பார்த்தவளாக அமர்ந்திருந்தாள்.

''நீயா... துங்காவா?'' என்றாள் சாவித்திரி.

''நமஸ்காரம் மிஸர்ஸ் சாவித்திரி கமல்நாத்!''

''என்ன சமாசாரம்?''

''உங்களைப் பத்தி ஒரு ஸ்கெட்ச் எழுதிப் போட்டோவுடன் அனுப்பியாகிவிட்டது, மேடம்!''

''எப்போ வரும்?''

''நெக்ஸ்ட் மன்த் இஷ்யூவிலே!''

''போட்டோ பெரிசா, சின்னதா?''

''போஸ்ட் கார்டு சைஸ்லே அனுப்பிச்சிருக்கேன். ஆனா அவங்க எந்த சைஸ்லே பிளாக் எடுக்கிறாங்களோ!''

''பெரிசாப் போடச் சொல்லு. அதுக்கு ஏதானும் செலவானாலும் ஐ டோண்ட் கேர். இப்பக்கூட என் பெண்களில் ஒருத்தி சொன்னா, எனக்கு பத்மஸ்ரீ பட்டம் கிடைக்கும்னு...ஏன் துங்கா, யாரைக் கெட்டியாகப் பிடிச்சால் அது கிடைக்கும்?''

''தெரியாது மேடம்! நீங்க கவர்னர் கொடுக்கிற பார்ட்டிக்கே போறவங்க. போன வருஷம் புயல் வந்தப்போ நீங்க செய்த பணியைப் பத்தி பேப்பரிலே போட்டிருந்தாங்க. என்னைப் போய்க் கேக்கறீங்களே!''

''நீ சொல்றதும் வாஸ்தவம்தான். பாவம், நீ ஒரு கரெஸ்பாண்டெண்ட். உனக்கு என்ன தெரியும் பெரிய இடத்து விஷயங்களைப் பற்றியெல்லாம்! சரி, வேறு என்ன விஷயம்?''

''நீங்க ஒரு டயரி கொடுத்தீங்களே!''

''யெஸ்... யெஸ். மறந்தே போயிட்டேன்! எங்கே அது?''

''என்கிட்டேதான் இருக்கு.''

''என்ன புரிஞ்சது அதிலேர்ந்து?''

ஏற்கனவே தயார் பண்ணி வைத்திருந்த பொய்யை வெகு சாதாரணமாகத் துங்கா அவிழ்த்து விட்டாள்.

''ஒரு டெய்லர்—ஸாரி பெரிய டெய்லரிங் ஹவுஸில்—எழுதிய டயரி.''

''எதுக்கு உயரம், நிறம் எல்லாம் போட்டிருந்தது? ஏதோ ஒரு பெண்ணைப் பத்தி அளவுக்கு மீறி எழுதினாப்போல பட்டது?''

''கார்மென்ட்ஸ் எக்ஸ்போர்ட் பிஸினஸ். பலதரப்பட்ட பெண்களை அவர்கள் மாடல்களாக உபயோகிச்சிருக்காங்க. உயரம் அளவுக்காக; நிறம்—துணியின் கலர் மாட்சுக்காக. குணம்—துணியின் டெக்ஸ்ச்சருக்காக!'' என்றாள் துங்கா.

''ஓ, கிரேட்!'' என்ற சாவித்திரி, ''ஆனா இந்த மாதிரி டயரியை எனக்கு ஏன் அனுப்பி வைக்க வேண்டும்?'' என்றாள்.

''ரொம்ப ஸிம்பிள்!''

''என்ன அது துங்கா?''

''யூ ஆர் எ வெரி பாப்புலர் லேடி. உங்க பேரிலே யாருக்கோ ஏதோ பொறாமை. நீங்க இந்த டயரியைப் பார்த்துட்டு என்ன ஆக்ஷன் எடுப்பீங்கன்னு பார்த்துக் கேலி செய்ய அனுப்பி யிருக்காங்க!''

''யாரா இருக்கும்?'' சாவித்திரி கண்களை மூடிக் கொண்டாள்.

''டோண்ட் வொர்ரி, மேடம். நான் அதையும் கண்டு பிடிச்சிடறேன். இது தபால்லதானே வந்தது?''

''இல்லே. பர்சனல் டெலிவரி. நல்லா பேக் பண்ணியிருந் தாங்க. வாசல்லே நிற்கிற வாட்ச்மேன்கிட்டே கொடுத்திட்டுப் போயிருக்கான் ஒருவன்.''

''நான் இது சம்பந்தமா பெங்களூர் போக வேண்டியிருக்கும்,'' என்றாள் துங்கா.

''போயேன். யூ வாண்ட் எனி ஹெல்ப்? ஆனா டயரி வெறும் டெய்லரிங் ஹவுஸ் டயரிதானே?''

''டயரி முக்கியமில்லே, மேடம். உங்க கிளப்பிலே யாரோ ஒரு மெம்பர் உங்களைப் பத்தி வெளியே பேசறா: அவளோடு ஒரு பெங்களூர்க்காரனுக்கு தொடர்பு இருக்கு. அவன் நேத்து ராத்திரி என்கிட்டே போனில் பேசினான். பேச்சு பூரா உங்களைப் பத்தித்

தான். அதான் காலையிலேர்ந்து எழுந்ததும் குளிச்சிட்டு ஓடி வந்தேன்!''

''ராஸ்கல்!'' என்றாள் சாவித்திரி. பிறகு, ''யார் அந்த மெம்பர்? உடனே நீக்கிடறேன்.''

''அவசரப் படாதீங்க, மேடம். நான் கவனிச்சுக்கறேன். நான் பெங்களூர் போய்த் துப்பு துலக்கணும்னு நிறைய செலவாகும். யூ நோ ஐ'ம் நாட் தட் ரிச்!''

''கொஞ்சம் இரு!'' என்று சொன்னவள் ஐந்தாவது நிமிடம் திரும்பி வந்தாள்.

''இந்தா, டூ தௌஸன்ட்ஸ் இருக்கு. இன்னிக்கு மத்தியானம் ஒரு ஃப்ளைட் இருக்கு. இடம் கிடைக்கலேன்னு எனக்கு போன் பண்ணு. நான் இண்டியன் ஏர்லைன்ஸ்லேர்ந்து எமர்ஜென்ஸி கோட்டா வாங்கித் தர்றேன்.''


''தாங்க்யூ மேடம்!''

''போட்டோ பெரிசா வரணும். வந்தவுடன் சொல்லு. நூறு காப்பி வாங்கணும்,'' என்றாள் சாவித்திரி.

''ஷ்யூர் மேடம்!'' என்ற துங்கா வெளியேறினாள்.

அவள் அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும்?

யோசித்தாள்.



வீட்டை அடைந்த பிறகு, திடீரென ஒரு கேள்விக்குறி மின்னலாக எழுந்தது. துங்கா தன்னையும் மறந்து நின்றாள்.

சாவித்திரிக்கு ஏன் டயரியை அந்தக் கயவன் அனுப்பினான்? துங்காவின் கைக்கு அது நிச்சயமாக வந்து சேரும் என்று எப்படி அவன் நம்ப முடியும்? என்னதான் அவன் பல திறமையுள்ள துப்பறியும் நிபுணர்களை அமர்த்தியிருந்தாலும் அந்த லேடீஸ் கிளப் கூட்டத்துக்குத் துங்கா வருவாள், அவளிடம் சாவித்திரி டயரியைக் கொடுப்பாள் என்று அவன் எதிர்பார்த்திருக்க முடியாது.

அப்படியானல் என்ன நோக்கத்துடன் டயரியை சாவித்திரியின் கைக்கு அவன் அனுப்பினன்? அவள் மேலெழுந்தவாரியாக ஒரு தடவை புரட்டிவிட்டுத் துங்கா கையில் கொடுத்திருக்கிருள். ஒருவேளை டயரியை சாவித்திரியோ ஒரு பிரபல சமூகசேவகியோ ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்ற உத்தேசமா?

அவள் அலமாரியில் பதுக்கி வைத்திருந்த டயரியை எடுக்கப் போனுள். அதே சமயம் அம்மாவின் குரல் கேட்டது. வெறுப்பும் அலுப்பும் நிறைந்த குரல்.

''ஏண்டி துங்கா, நீ உன் மனசிலே என்னதான் நினைச்சிட்டிருக்கே?'' என்ருள் கமலம்.

''இப்ப நான் என் மனசிலே என்ன நினைக்கிறேன்னு உன்னிடம் சொல்லுவதற்கில்லை.''

''நீ உன் மனசிலே ஆயிரம் நினைச்சுக்கோ, நான் அதையெல்லாம் பத்திக் கவலைப்படவில்லை... காலையிலே போறே... நினைச்ச இடங்களிலெல்லாம் அலையறே; தோணினபோது வீடு திரும்பறே?''

''வீட்டிலேயே குத்துக் கல்லா உட்கார்ந்திருக்கணும்னு சொல்றியா?''

''சொன்னு உட்காருகிற பொண்ணு நீ! அப்பனை மதிக்கறதில்லை. பெத்த தாயாரை லட்சியம் செய்வது கிடையாது.''

''நாளையிலேர்ந்து கண் முழிச்சதும் இரண்டு பேரையும் வலம் வந்து பாதார விந்தங்களில் சாஷ்டாங்கமாக விழறேன். இப்ப ஆளை விடு,'' என்ருள் துங்கா.

''நீ கொஞ்ச நாளா உன் குணத்துக்கு மாருக அதிகம் பேசறே! ஏன், என்ன ஆச்சு. அந்த ஆனந்த் தடியன் என்ன சொல்ருன்?'' என்ருள் கமலம்.

''அனுவசியமாக வார்த்தைகளைக் கொட்டாதே அம்மா. நான் வயசு வந்த பொண்ணு, என் இஷ்டம் போல எதையும் செய்ய எனக்கு உரிமை உண்டுங்கிறதை நினைவு வச்சிக்கோ!''

''வைச்சுக்றேன் துங்கா, வச்சிக்கறேன்! ஆனல் நீ உன் உரிமையை நிலைநாட்டறதில் நம்ப குடும்ப மானம் போயிடப் போறது. ஜாக்கிரதை!''

''எச்சரிக்கை கொடுத்தாச்சில்லே. இப்போ நீ உன் காரியத்தைப் பார் அம்மா. நான் ரொம்ப முக்கியமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறேன்.''

''என்னம்மா அப்படி முக்கியமான வேலை?''

''உனக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. தயவு

செய்து என் ரூமை விட்டுப் போ!''

''கொட்டிக்க வரலையா?''

''நீ சாப்பிட்டுக்கோ. எனக்குப் பசிக்கறப்போ நானே வந்து போட்டுக்கறேன்.''

அம்மா வெளியேறினாள், பலத்த முனகல்களுடன்.

மறுகணம் கதவுகளைச் சாத்தித் தாளிட்டாள், துங்கா. வழக்கமாக அம்மா டயலாக் முடிந்ததும், அப்பா மேடைக்கு வருவார். தொண தொணப்பார்.

அலமாரியை ஏற்கனவே திறந்திருந்த அவள் டயரியை எடுத்தாள்.

ஒவ்வொரு பெயராக மீண்டும் படிக்கலானாள். ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக உன்னிப்பாகப் படித்தாள்.

திடீரென்று தங்கச் சுரங்கம் கண்ணில் பட்டது. ஏன் டயரியை சாவித்திரிக்கு அனுப்பியிருக்கிறான் என்றும் அக்கணமே தெளிவாயிற்று.

அந்தப் பெயரைப் படித்தாள்.

'அஞ்சனா!'

மேலே தொடர்ந்தாள்.

''ஐந்து அடி ஐந்து அங்குலம் இருக்கலாம். செழுமையான உடல் வாகு. மாநிறம் என்றாலும் தனி சோபை. பூனைக் கண்கள். ஆனாலும் தனிக் கவர்ச்சி இருக்கிறது. என்னைப் போலவே அவளுக்கும் செக்ஸ் வெறி இருக்கிறது. தோள்பட்டையை உதடு என்று நினைத்துக் கடித்தாள். மீண்டும் சந்திக்க விருப்பம் என்றாள். அதற்கென்ன என்றேன். முட்டாள் பெண். அவளைப் பூரணமாக அறிந்து கொண்டபின் என்ன சுவாரஸ்யம் இருக்க முடியும்?''

மூச்சு விடாமல் படித்த துங்கா முகவரியைப் பார்த்தாள்.

சாவித்திரி முன்பு இருந்த பங்களா.

இப்போது அஞ்சனா கல்யாணமாகிக் கணவனுடன் நுங்கம் பாக்கத்தில் வசிக்கிறாள் என்று துங்காவுக்குத் தெரியும். சாவித்திரி அவளுக்குத் திருமண அழைப்பிதழ் அனுப்பியிருந்தாள். மிகப் பெரிய மனிதர்கள் வீட்டுக் கல்யாணத்தில் தன்னை யாரும் எதிர்கொண்டு அழைத்து மதிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில் துங்கா திருமணத்துக்குச் செல்லவில்லை. அவளுடைய கணவன் எப்படி இருப்பார் என்றுகூடத் தெரியாது. அஞ்சனாவையே அவள் ஓரிரு முறைகள்தான் பார்த்திருக்கிறாள்.

இப்போது ஏன் டயரியை அவன் சாவித்திரிக்கு அனுப்பி யிருக்கிறான் என்று கண்ணாடியில் முகம் தெரிவது போல விளங்கி விட்டது.

ஆனால் சாவித்திரி நுனிப்புல் மேய்ந்து விட்டாள். அவள்

மட்டும் எல்லாப் பெயர்களையும் முகவரிகளையும் ஒழுங்காப் பார்த்திருந்தால் இந்த டயரி அவளுடைய கையிலிருந்து துங்காவின் கைக்கு வந்தே இருக்காது. அஞ்சனுவைத் தனியாக அழைத்து விசாரித்திருப்பாள். அஞ்சனு தயாராக ஒரு பதிலை வைத்துக் கொண்டு அம்மாவைச் சமாதானப்படுத்தியிருப்பாள். அத்துடன் டயரியின் கதை முடிந்திருக்கும்.

இப்போது என்ன செய்ய?

அவள் பெங்களூர் போவதாக சாவித்திரியிடம் கூறியிருந்தாள். உண்மையில் பெங்களூர் சென்று ராமச்சந்திரனைச் சந்தித்து, தன் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளத்தான் அவள் எண்ணியிருந்தாள்.

ஆனுல் இப்போது புதிதாக, சுவாரசியமான ஒரு கதை பிறந்திருக்கிறது. இனிமேல் துங்கா வேறு எந்தப் பெண்களையும் பேட்டி காண வேண்டாம். அஞ்சனு ஒருத்தி போதும். அவளிடமிருந்து லேசில் பதில் வராமல் போகலாம். சாவித்திரியின் பெண்கள் எல்லோரும் பண பலத்தால் திமிரைச் சம்பாதித்துக் கொண்டவர்கள். அஞ்சனு துங்காவை விரட்டியடிக்கப் பார்ப்பாள். ஆனுல் அஞ்சனுவையே வீழ்த்தக் கூடிய துருப்பு அவளுடைய கையில் இருக்கிறது.

என்றும் உணர்ந்தறியாத திருப்தியுடன் அவள் அன்று உணவு உட்கொண்டாள். தூங்கினுள்.

மறுநாள் காலையில் நீண்ட நேர முயற்சிக்குப் பிறகு அஞ்சனுவின் டெலிபோன் நம்பர் கிடைத்தது. சாவித்திரி மூலமாக எளிதில் பெற்றிருக்கலாம். ஆனுல் பெண்ணைச் சந்திக்கிற விஷயம் அம்மாவுக்குத் தெரியக் கூடாது. பல கேள்விகளை அம்மா எழுப்புவாள். எங்கே தன் போட்டோவுக்குப் பதிலாக அஞ்சனுவின் போட்டோ வந்துவிடுமோ என்று பொருமை எண்ணம்கூட சாவித்திரியின் உள்ளத்தில் தோன்றும்.

துங்காவின் அதிர்ஷ்டம் அஞ்சனுவே போனை எடுத்தாள்.

''குட்மார்னிங் மிஸஸ் அஞ்சனு... நான் துங்கா பேசறேன். 'மதர் ஆஃப் டுமாரோ'வின் மெட்ராஸ் கரெஸ்பாண்டெண்ட். உங்களிடம் ஒரு பேட்டி...''

''வித் ப்ளெஷர்! என்ன சப்ஜெக்ட்!''

''நீங்க ஒரு ஆல்ரவுண்டர் மிஸஸ் அஞ்சனு! எட்டு வயசிலே பெரிய சதஸிலே பரதநாட்டிய அரங்கேற்றம். கலர் பெயிண்டிங்கிலே கவர்னர் கிட்டேயிருந்து பரிசு! போட்டோகிராபியில் பாராட்டு. எல்லாத்துக்கும் மேலே இந்த வருடம் 'மேட் ஃபார் ஈச் அதர்' போட்டியில் செகண்ட் ராங்க்!''

''தாங்க்... தாங்க்யூ!''

''எப்ப வரலாம் மிஸஸ் அஞ்சனு?''

''ஏன், லஞ்சுக்கு வாயேன் பைனுப்பிள் புட்டிங், ஃப்ரைட் சீஸ்; ஃபிங்கர் சிப்ஸ், தண்டூரி. அண்ட் வாட் நாட்!''

''ஸாரி மிஸஸ் அஞ்சனு. ஐ ஹாவ் எ ப்ரெஸ்ஸிங் எங்கேஜ் மெண்ட். பத்து மணிக்கு வரேன்.''

''ஓ.கே. ஸ்வீட்ஸ் அண்ட் ஸம் ஸாஃப்ட் ட்ரிங்க்ஸ் தயார் செய்யறேன்.''

''தாங்க் யூ! இன்னொரு ரிக்வெஸ்ட்!''

''வாட் இஸ் தட், துங்கா?''

''இந்த இன்டர்வியூ பத்தி இப்ப நீங்க உங்க அம்மா கிட்டே சொல்ல வேண்டாம்.''

''ஏன் துங்கா?''

''காரணத்தை நேரிலே சொல்றேன். பைதி வே உங்க ஹஸ்பெண்ட் வீட்டிலே இருப்பாரா?''

''நோ. இன்க்கு மார்னிங் ஃப்ளைட்டிலே டெல்லி போயிருக் கரர். ராத்திரிதான் திரும்பருர்!''

''தாங்க் யூ! பத்துக்கு வந்துவிடுகிறேன்.''

துங்கா எட்டரை மணிக்கு டீக்காக டிரெஸ் பண்ணிக் கொண்டு புறப்பட்டாள்.

அவளுடைய கைப்பையில் டயரி ஒளிந்திருந்தது.

ஏந்தத் திறமைசாலிக்கும் புகழ் ஆசை அளவுக்கு மீறியே இருக்கும் என்ற கருத்தைக் கொண்டிருப்பவள் துங்கா. அஞ்சனு உண்மையிலே ஒரு திறமைசாலி. அழகி. அதே சமயம் தலை இளநீர்க் கனம். தூக்கி எறிந்து பேசுவதில் போட்டி வைத்தால் அகில இந்திய ரீதியில் முதல் மூன்று பரிசுகளில் ஒன்றைத் தட்டிக்கொண்டுபோய் விடுவாள். அவளைப் பற்றிப் பலர் துங்காவிடம் விமரிசித்திருக்கிருர் கள்.

இப்போதுதான் முதன் முதலாக நேருக்கு நேர் சந்திப்பு நடக்கப் போகிறது.

துங்கா தன்னைத் தயார் செய்து கொண்டாள். டயரி விஷயத்தை எடுத்த எடுப்பில் கூறினுல் அவளுடைய காரிய வெற்றி குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிடும். எப்படி அணுகுவது!

அவள் கதவை அணுகியதும் கூர்க்கா தடுத்தான்.

''யாரைப் பார்க்கணும்?''

''மிஸஸ் அஞ்சனு!''

''கொஞ்சம் இருங்க!''

கூறியவன் தன் கூண்டுக்குள் நுழைந்தான். டெலிபோனை

எடுத்தாள். சலாம் கூறினன். பெயரைச் சொன்னன். 'சரி' என்றான்.

''நீங்க போகலாம்!''

''வேறே ஏதாவது நாய் இருக்குமா?'' என்று கேட்டாள் துங்கா.

கேள்வியில் புதைந்திருக்கும் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவனாய் கூர்க்கா, ''கட்டிக் போட்டிருக்கு,'' என்றான்.

''உன்னையும் கட்டிப் போட்டிருக்க வேண்டும்,'' என்று தன்னுள் முணுமுணுத்துக் கொண்டே துங்கா நடந்தாள்.

ஹால் மணி மண்டபம் போலக் காட்சி அளித்தது. சுவரெல்லாம் ஓவியங்கள். சாண்டலியர் விளக்குகள் உயர்ந்த கூரையிலிருந்து தொங்கின.

நட்ட நடுவிலே ரத்தச் சிகப்பு நிறத்தில் சோபாக்கள். ஒவ்வொரு சோபாவின் அருகேயும் கண்ணாடி பதித்த டீப்பாய். டீப்பாயின் மேல் கண்ணாடி கூஜாவில் அன்று மலர்ந்த பூக்கள்.

''ப்ளீஸ் கம்!'' என்றாள் அஞ்சனா. சொன்னவள் உட்கார்ந்தாள்.

துங்கா சோபாவைப் பார்த்தாள். கிட்டத்தட்ட ஓர் அடி உயரத்துக்கு ரப்பர். உட்கார்ந்தாள். அரை அடிக்கு மேல் தான் இறங்கிவிட்டதான பிரமை உண்டாயிற்று.

''இந்த மாதிரி சோபா செட்டுக்களை வச்சுக்கறதில் ஒரு அசௌகரியம் இருக்கிறது, மிஸஸ் அஞ்சனா!'' என்றாள் துங்கா, சிரித்துக் கொண்டே.

''ஏன்? கம்ஃபர்ட்டபிளா இல்லையா?''

''ஓவர் கம்ஃபர்ட். நமக்குப் பிடிக்காதவங்களை உட்கார வச்சா எளிதில் காலி செய்ய மாட்டார்கள்!''

அஞ்சனா சிரித்தாள்.

''இது ஸ்பெஷல் கெஸ்ட் உட்காருகிற இடம். சாதாரண சாமான்யமானவர்களுக்கு அதோ அந்த ரூம்! அதிலே பிரம்பு நாற்காலிகள் இருக்கு!''

''உங்க மாரேஜுக்கு உங்க அம்மா இன்விடேஷன் கொடுத்திருந்தாங்க!''

''வந்தே இல்லியா? எப்ப வந்தே? ரிஸப்ஷன் கூட்டம் தாங்க முடியலே!''

''பயத்திலே வரலே.''

''பெரிய தப்பு பண்ணிட்டே துங்கா. ரொம்ப வேண்டியவர்களை மட்டும்தான் அம்மா கூப்பிட்டார்கள். நானும் அப்படித்தான். ஹங்! பைதிவே, ஏன் இந்த இன்ட்டர்வியூவைப் பற்றி அம்மாகிட்டே சொல்ல வேண்டாம்னே?''

''நேத்து ராத்திரி பாம்பேயிலிருந்து எடிட்டர் பேசினர். உங்களைப் பத்தி அவர்கிட்டே யாரோ புகழ்ந்து பாராட்டிப் பேசியிருக்காங்க போலிருக்கு. அதைக் காஷ் பண்ணணும்னு எடிட்டருக்கு தோணிட்டுது. போன் பண்ணி உடனடியா பேட்டிக்கு ஏற்பாடு செய்யச் சொன்னர்.''

''அதனுலே அம்மாவுக்கு என்ன?''

''நான் ஏற்கனவே அம்மாவைப் பத்தி சில குறிப்புக்கள் எழுதி வச்சு, போட்டோவும் வாங்கியிருக்கேன். அடுத்த மாச இஷ்யுவில் வரும்னும் சொல்லியிருந்தேன். இப்ப இந்த இன்டர்வியூவினுலே அம்மாவோட போட்டோ வர்றது ஒரு மாசம் தள்ளிப் போகும்!''

''ஓ, ஐ ஸீ!''

''இப்பப் புரியறதா?''

''புரியறது!'' என்று சொல்லிச் சிரித்த அஞ்சனு, ''எங்களுக்கு அம்மான்னு உயிர்தான். ஆனுல் அவர்கிட்டே எந்த ஸ்பெஷல் டாலண்ட்டும் இல்லேங்கறது என் அபிப்பிராயம். சொல்லப் போனு எங்க குடும்பத்திலேயே நான் ஒருத்திதான்... ஸாரி! ரொம்ப ஃபர்ஸ்ட் பெர்ஸனு இருக்கேன். இல்லே?'' என்றுள்.

''நாட் அட் ஆல். இந்த மெட்ராஸ் சிடியிலே உங்களைத் தெரியாத யங் விமன் கிடையாது. ரொம்பப் பேர் உங்களை இமிடேட் பண்றுங்க. நீங்கதான் அவங்களுக்கு பேஷன்லே வழிகாட்டி!''

''நீ ரொம்பப் புகழறே, துங்கா!''

''ஹானஸ்ட்!''

''ஓ.கே! இப்போ ஜூஸ் சாப்பிடறியா இல்லே அப்புறமாக டம்ரூட் அல்வா வேறே இருக்கு!''

''இப்ப வேலைதான் இம்பார்ட்டண்ட், மிஸஸ் அஞ்சனு,''

''தட்ஸ் குட்.., ஆனு, அடிக்கு ஒருதரம் மிஸஸ், மிஸஸ் போட வேண்டாம். என்னை உன் சிநேகிதி மாதிரி நினைச்சுப் பேசு!''

''அஞ்சனு, எனக்கு இப்ப டம்பே சிலிர்க்கிறது. அதோ அந்த அன்னப்பட்சி அரை நிர்வாண அழகியுடன்... நீங்க வரைஞ்சதா?''

''நல்லா இருக்கா?''

''கிரேட்!'' ஒரு த்ரீ டைமன்ஷன் எஃபெக்ட் இருக்கு. நீரோடை உண்மையாகவே ஓடி வர்ற மாதிரி பிரமை தட்டறது. பின்னுலே ரொம்ப தூரத்திலே வெள்ளைப் பனி மலை இருக்கிற மாதிரித் தெரிகிறது.''

''இட் இஸ் ஒன் ஆஃப் மை பெஸ்ட், துங்கா... ஒரு அமெரிக்கன் ஒண் லாக் டாலர்ஸ் தரேன்னுன். ஐ ஸெட், 'நோ'. நீ

கிட்டே போய்ப் பார். நாட் நௌ. அப்புறமா உன்னிப்பாய் பார்த்தா மரத்தோட நிழல் நீரோடையில் வீசறது தெரியும்!''

''வாட் எ லவ்லி ஓர்க்!'' என்ற துங்கா, ''நீங்க படிச்சது எங்கே?''

''கேம்ப்ரிட்ஜ்!''

''ஸப்ஜெக்ட்?''

''லிட்டரேச்சர் வித் ஸ்பெஷல் எம்ஃபஸிஸ் ஆன் மாடர்ன் பொயட்ரி!''

''இங்கிலாந்திலே நீங்க பரதநாட்டியம் ஆடியிருக்கீங்களோ?''

''ஒரு தடவையா, இரண்டு தடவையா... ஆல்மோஸ்ட் எவ்வரி மன்த்!''

''பெயின்டிங் யார்ட்டே கத்துக்கிட்டீங்க?''

''சொன்னால் தப்பா எடுத்துக்க மாட்டாயே?''

''நெவர்!''

''எனக்கு நானே குரு, துங்கா. சின்ன வயசிலேயே சில இயற்கைக் காட்சிகளைக் கண்டால் அப்படியே மெய்மறந்து போயிடுவேன். நதிகளின் ஓட்டம், மரங்களில் இலைகள் லேசாக ஆடும் அழகு. ஒரு கன்றுக்குட்டியின் துள்ளல் இதெல்லாம் என்னை எங்கேயோ கொண்டு போய் விடும்!''

''உங்க சித்திரங்களிலேயே உங்களுக்கு ரொம்பப் பிடிச்சது எது?''

''அது உள்ளே வைச்சுப் பூட்டியிருக்கிறேன்.''

''ஏன்? பார்க்கக் கூடாது என்று?''

''யெஸ்... என் அக்காக்கள் கூடப் பார்த்தது கிடையாது! ஏன் என் கணவரே பார்த்தது கிடையாது.''

''அப்போ எனக்கு மட்டும் பார்க்க எங்கே வாய்ப்பு இருக்கு?'' சொல்லும் போதே துங்கா அலுத்துக் கொண்டாள்.

''ஐ'ம் ஸாரி துங்கா. நான் ஒரு ரெம்ப்ராண்ட் இல்லே, மைக்கேல் ஏஞ்சலோ இல்லே. ரவிவர்மா இல்லே. ஆனாலும் நான் சொன்ன படம் என் இதயத்திலிருந்து கசிந்த உணர்ச்சிகளிலிருந்து மட்டும் உருவானது. இந்தப் படத்தை வெளி நாடுகளில்தான் பாராட்டுவார்கள். நம் நாட்டிலுள்ளவர்கள் மொதல்லே என்னைப் பத்திக் கேவலமாகப் பேசுவார்கள். என் படத்தின் மேலே காறித் துப்புவார்கள்!''

''ஏன் வரையவே கூடாத படத்தை வரைந்து விட்டீர்களா, அஞ்சனா?''

''நோ! வரையக் கூடாதுன்னு எதுவுமே கிடையாது. ஆனா

பார்க்கக் கூடாததுன்னு சிலதை நம்ப பீப்பிள் ஒதுக்கியிருக்கி றார்கள்.''

''நீங்க என்ன வரைஞ்சியிருக்கீங்கன்னு என்னலே ஒரு மாதிரியா ஊகிக்க முடியுது, அஞ்சன. அந்தப் படத்தை நீங்க உங்க கல்யாணத்துக்கு முன் வரைஞ்சதாக இருக்கும்!''

''வெரி கரெக்ட்! இப்ப இது மாதிரி தீட்டவும் தோணுது! தோணினுலும் சரியா அமையாது!''

''ஓ.கே. அஞ்சன... நௌ அபவுட் யுவர் டாலண்ட்ஸ் இன் போட்டோகிராபி.''

''என்கிட்டே ஏழு காமெரா இருக்கு. ரெண்டு ஜெர்மன். ஒரு ஃப்ரெஞ்ச். மூணு ஜப்பானீஸ். ஒன்று ஸ்விட்சர்லாட்மே வாங்கி னேன். ஐ திங்க் அமெரிக்கன்!''

''ஏன் நீங்க ஒரு பிரைவேட் எக்ஸிபிஷன் நடத்தக் கூடாது?''

நிறைய நடத்தியிருக்கேன். ஏன், போன மாசம்கூட பீகம் ஜூஞ்ஜுன் வாலா வீட்டிலே வைச்சேனே!''

''பேப்பர்லே வரலே?''

''அப்ஸல்யூட்லி பிரைவேட். பிரெஸ்காரன் எவனேயும் கூப்பிடலே!''

''புகழ் ஒதுங்கியிருக்கக் கூடாது அஞ்சன! அது சூரிய வெளிச்சம் மாதிரி எல்லா இடத்திலேயும் பரவணும்!''

''டயம் வரும், துங்கா!''

''எப்போ?''

''இப்ப நான் திடீர்னு ஆல் இண்டியா ஃபிகரா ஆயிட்டா என் அம்மாவர்லே தாங்கிக்க முடியாது. சாவித்திரியின் பெண் அஞ்சனங்கறது போய் அஞ்சனவின் அம்மாதான் சாவித்திரி என்கிற நிலே வந்தால், என் அம்மா ரொம்ப வேதனைப் படுவாள்!''

''ஒரு அம்மாவுக்குத்தான் பெத்த பெண் மேலே பொறாமை உண்டாகும்னு சொல்றீங்க அஞ்சன? பெருமைப்பட மாட்டாங்களோ?''

''எல்லா விஷயங்களிலும் இல்லே, துங்கா. ஜெலஸி என்பது ஒரு பச்சைக் கலர் அரக்கன்னு ஷேக்ஸ்பியர் சொல்லி யிருக்கிறார். அந்த அரக்கன் உறவு முறைகளேயெல்லாம் பார்க்கிறது கிடையாது!''

''உங்க சாதனைகள் இவ்வளவு இருந்தும் ரொம்ப அடக்க மாக எல்லாத்தையும் ஒளிச்சு வைக்கறீங்க, அஞ்சன. இதனலே உங் களுக்கு நஷ்டம் இல்லாமப் போகலாம். ஆனல் நம்ப சொஸைட்டிக்கு எவ்வளவு பெரிய இழப்பு தெரியுமா?''

''தெரியும் துங்கா. டயம் வரட்டும்னு காத்திட்டிருக்கி

றேன்.''

''கர்நாடக சங்கீதம் பத்தி என்ன நினைக்கிறீங்க?''

''ஒன்டர்ஃபுல் மியூஸிக். ஆனா காலப் பிரமாணம் சரியா இல்லாமல், சுருதி சுத்தம் இல்லாமல் பாடறவங்க கூட்டம் பெரு விட்டது!''

''ஜாஸ்?''

''அது பருவ உணர்ச்சிகளைத் தூண்டி விடறதா படறது!''

''அப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டிருக்கிறதா அஞ்சனா நான் ஜாதிமல்லிப் பூவை முகர்ந்து பார்க்கறப்போ, என் உடம்பி உஷ்ணம் ஏறுகிறது!''

''ஆஃப் தி ரிகார்ட்ஸ், துங்கா. பத்திரிகையில் வர கூடாது. எனக்கு அந்த அனுபவம் உண்டு!''

''என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய செக் வாழ்க்கையும் அதுபோலத்தான். மல்லிப்பூ சில ராகங்கள், சி ஆண் உடல்கள் என்னைப் படாத பாடு படுத்தும்!'' என்றாள் துங்கா

''உனக்கு இன்னும் கல்யாணமாகவில்லைன்னு நினைக் றேன். கரெக்ட்?''

''கரெக்ட்!''

''எப்பவாவது உன்னுடைய இந்த செக்ஸ் உணர்ச்சிக வர்றப்போ நீ உன்னையே இழந்திருக்கிறாயா?'' என்று கேட்டா அஞ்சனா.

''இப்ப நீங்க என்னைப் பேட்டி காண்றீங்க, அஞ்சனா!'' என்று சொல்லிச் சிரித்த துங்கா, ''இது உங்களை விட்டு வெளியே போகக் கூடாது,'' என்றாள்.

''நான் யார்கிட்டே சொல்லப் போறேன், துங்கா! நம் ரெண்டு பேருக்கும் பொதுவா எந்தச் சிநேகிதியும் இல்லையே?''

''உங்க அம்மாவுக்கு என்னைத் தெரியும், அஞ்சனா!''

''ஒரு பெண் தன் அம்மாகிட்டே பேசற விஷயத்தைய நாம இப்போ பேசிட்டிருக்கோம்?''

''ஓ.கே. நான் சொல்றேன். அந்த மாதிரி உங்களாலு உங்க ரகசியத்தை சொல்ல முடியுமா?''

''இட் டிப்பென்ட்ஸ்!''

''ஆன் வாட், அஞ்சனா?''

''ஆன் தி வே யூ ஆஸ்க்.''

''ஓ.கே! அஞ்சனா... காதலன்னு ஒருவன் முளைச்சான் அவனை நம்பினேன். ஆனா என்னைப் பல தடவைகள் உபயோகித் விட்டுப் போயிட்டான். ... எனக்கு வருத்தமில்லை. அவனோடு ரகசி வாழ்க்கை வாழ்ந்த காலம் எப்பவும் என் மனசுக்கு ரம்யமா இருக்கு.''


AIR PORT

''நீ தைரியமுள்ள பெண்'' என்றாள் அஞ்சனா.

''உங்களுக்குக் கல்யாணமாயிட்டது. உங்க தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்களுக்கு ஒரு கணவன் இருக்கிறார். ஆனா கல்யாணத்துக்கு முந்தி செக்ஸ் இருந்திருக்கிறதா?''

''யெஸ்.''

''இங்கிலாந்திலே ஆரம்பிச்சுதா?''

அஞ்சனா ஒரு பார்வை பார்த்தாள். ஒரு கணம் துங்கா நடுங்கினாள்.

''நோ! நம்ம நாட்டிலேதான் நான் மத்தவங்களை விட உசத்திங்கற கர்வம் எனக்கு உண்டு. இது எல்லையைத் தாண்டிப் போச்சு. பரீ—மேரிட்டல் செக்ஸ் விஷயத்திலும் மத்தவங்களை ஜெயிக்கணும்னு நினைச்சேன். இதிலே எந்தத் தப்பும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஒரு ஆணுக்கு கல்யாணத்துக்கு முன் இந்த அனுபவம் இருக்கலாம்னா ஏன் இந்தக் காலத்துப் பெண்ணுக்கு இருக்கக் கூடாது? இந்தக் கேள்விதான் என்னை உலுக்கி எடுத்தது!''

''ஆனா நமப தேசத்திலே ஆணுக்கு ஒரு நியாயம்; பெண்ணுக்கு ஒரு நியாயம், அஞ்சனா!''

''இந்த நியாயத்தைக் கற்பிச்சவன் யார்? அவனும் ஒரு ஆண். நான் ஒருத்தனை பிளேனில் ட்ராவல் பண்றப்போ தற்செயலாக சந்திச்சேன். திடீர்னு என் உடம்பே பரபரத்தது. இது இயற்கையின் சீற்றம்னுதான் நினைச்சேன். ஆனால் அதே சமயம் அவன்கிட்டேயிருந்து தப்பிச்சுக்கணும்னும் தோணிற்று.

''பம்பாயிலே இறங்கறப்போ ராத்திரி பதினொரு மணி. பிளேன் அவ்வளவு லேட். கொஞ்ச நேரம் கூட்டமா உட்கார்ந்தோம். அப்புறம் நான் எழுந்தேன். மெல்ல அவனும் எழுந்தான். அவ்வளவுதான். இதுக்கு மேலே ஒண்ணும் கேட்காதே, துங்கா!''

''மாட்டேன்! ஆனால் அவன் எப்படி இருப்பான்னு என்னாலே ஊகிக்க முடிகிறது!'' என்றாள் துங்கா.

அஞ்சனா பழைய நிலைக்கு வந்தாள். சிரித்தாள்.

''நிச்சயமாக உன்னுடைய கற்பனை உருவம் தப்பாக இருக்கும.''

''உயரம். ஒல்லியும் இல்லை. குண்டும் இல்லை. மீசை கிடையாது. மென்மையான குரல். இனிக்க இனிக்கப் பேசுவான்.... பெண்மைககு மரியாதை கொடுக்கிறவனைப் போல் பாவனை செய்வான்!'' என்றாள் துங்கா.

''அவுட்! கம்ப்ளீட்லி ராங்! நீ ஒருவேளை உன்னுடைய காதலனைச் சித்திரிக்கிறாய் போலிருக்கு,'' என்றாள் அஞ்சனா.

துங்கா சளை இழந்து போனாள். கொடைக்கானல் ராய்ஜியை மனத்தில் வைத்துக் கொண்டு ஊகம் என்று அவள்

விவரித்தாள். ஆனுல் ஒரேயடியாய் அஞ்சனு அவளை வீழ்த்தி விட்டாள்.

மெல்லிய குரலில் அவள், ''இந்த ஒரு அனுபவம்தானு, அஞ்சனு?'' என்று கேட்டாள்.

''யெஸ்! அவனை மறுபடியும் மீட் பண்ணணும்னேன். சரின்னுன். பட் அந்த பாஸ்டர்ட் அப்புறம் என் கண்ணிலேயே படலே.''


''இப்ப மறுபடியும் கண் எதிரே வந்தால்?''

''ஏன் கேட்கிறேன்னு புரியறது துங்கா. கல்யாணமான பிறகும், தப்பான செக்ஸ் வச்சிப்பேனுன்னு கேட்கிறே! நோ! நெவர்! எனக்கு வீட்டிலே விருந்து கிடைக்கறப்போ நான் ஏன் ஓட்டல்லே சாப்பிடணும்?''

''நாம இந்த டாபிக்கை இதோடு நிறுத்திக்கலாம்னு நினைக்கிறேன்!'' என்ருள் துங்கா.

''ஆட்சேபணை இல்லை. இப்ப மறுபடியும் பத்திரிகைக்கான பேட்டியைத் தொடருவோம்!'' என்ருள்.

பேட்டி தொடர்ந்தது.



வீட்டுக்குத் திரும்புகையில் துங்கா சிரித்தாள். அவளை இரையாக்கியவன் அஞ்சனுவைத் தீண்டவில்லை என்ருல் டயரியில் ஏன் இரண்டு பேர்களுடைய பெயர்களும் இருக்க வேண்டும்? இது என்ன புதிர்? அஞ்சனு பொய் சொல்லுகிருளா? வேண்டுமென்றே துங்கா அளித்த விவரங்களெல்லாம் தவறு என்கிருளா?

முடிச்சு நன்ருக இறுகிக் கொண்டது. டயரியை அவன் அஞ்சனுவின் தாயாருக்கு அனுப்பியிருக்கிருன். இதை அவன் ஏன் இன்னும் அஞ்சனுவுக்குத் தெரிவிக்கவில்லை? அல்லது அஞ்சனு மறைக்கிருளா?

கதை எப்படிப் போகிறது? எப்படி முடியப் போகிறது? ஏன் அவள் தன் காதலன் ஆனந்த்தைச் சந்தித்து இந்தப் பிரசினைக்கு ஒரு முடிவு காணக் கூடாது! என்ன பிரசினை இருக்கிறது முடிவு காண? மேலும் ஆனந்த் ஒரு பழம் பஞ்சாங்கம். ஏற்கனவே, அவள் ஒரு

போக்கத்தக்க வேலையில் ஈடுபடுகிறான் என்று அலுத்துக் கொண்டிருக்கிறான். அவன் எந்த உதவியும் செய்ய முன்வர மாட்டான். பத்துத் தடவை காயத்ரியை உச்சரித்துவிட்டு வீட்டுக்குப் போகச் சொல்லுவான்.

பெங்களூர் ராமச்சந்திரனைப் பார்ப்பதிலும் அர்த்தமில்லை என்று தோன்றியது. ஆனால் சாவித்திரியிடமிருந்து இரண்டாயிரம் ரூபாய் வாங்கியிருக்கிறாளே? அது செரிக்க வேண்டாமா?

அவள் கொடைக்கானலில் சந்தித்த ராம்ஜியும் பெங்களூர் ராமச்சந்திரனும் ஒரே ஆள்தான் என்ற உண்மை புலப்பட்டால், அஞ்சனா பொய் சொல்லுகிறாள் என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்...

''அஞ்சு வாட்டி அவ—அவதான் சாவித்திரி கமல்நாத் போன் பண்ணியாச்சு! மொதல்லே போன் பண்ணினப்போ, நீ நேத்து சாயங்காலம் பிளேன்லே பெங்களூர் போயாச்சான்னு கேட்டாள். இல்லேன்னேன். கோபத்தோட போனை டமார்னு வைச்சா. என்னடி, துங்கா என்ன நடந்தது?''

''ஒண்ணும் நடக்கலை!'' என்று கூறிவிட்டு துங்கா, தன் அறையை நோக்கி நடக்கவும் டெலிபோன் மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

''அவதாண்டி மறுபடியும் போன் பண்றா!'' என்றாள் கமலம் டெலிபோன் ரிஸீவரை எடுக்காமலேயே.

துங்கா எடுத்தாள்.

''துங்கா பேசறேன்.''

''சாவித்ரி பேசறேன். எங்கே காணுமப் போயிட்டே?''

''அவசர வேலை வந்தது, மேடம்!''

''ஏன் பெங்களூர் போகலை?''

''ஹெவி புக்கிங் நோ சீட். உங்க பெயரைச் சொல்லிச் கெஞ்சினேன். இன்னிக்கு கிளம்பறேன்.''

''அதுக்கு முன்னாடி என்னை வந்து பாரு. அந்த டயரி பத்திரம். அதைக் கொண்டு வராதே!''

''சரி.''

''அதை அடுப்பிலே போடு!''

''ஏன் மேடம்?''

''டோண்ட் ஆஸ்க் மி கொஸ்டியன்ஸ்! சொல்றதைச் செய்.''

துங்கா அயரவில்லை.

''ஏன் அடுப்பிலே போடச் சொல்றீங்கன்னு எனக்குத் தெரியும், மிஸஸ் சாவித்திரி கமல்நாத்!''

''என்ன தெரியும் உனக்கு?'' குரல் அதட்டமாக

வெடித்தது.

''உங்க மூணுவது பெண் அஞ்சனுவின் பெயரும் டயரியில் இருக்கு! அதனுல்தான்!''

''ஒரு படுபாவி இரண்டு தடவை இன்னிக்குப் போன் பண்ணிட்டான். பிளாக்மெயில் பண்ருன். டயரியோட இன்னெரு காப்பி அவன்கிட்டே இருக்காம்!''

''அஸிஸ்டென்ட் போலீஸ் கமிஷனர் உங்க தம்பிதானே?'' துங்கா எக்களித்தாள்.

''எங்க மானத்தோட அவர் மானமும் சேர்ந்து போகும்! லட்சம் ரூபாய் வேணுமாம்!''

''என்ன செய்யப் போறீங்க?''

''நீ மொதல்லே வா!''

''ஸாரி! நான் பெங்களூர் போறேன்!''

''என் பெண் அஞ்சனுவின் வாழ்க்கையே நிர்மூலமாகப் போய்விடும், துங்கா!''

''அஞ்சனு எழுபத்து நாலு பெண்களில் ஒருத்தி. அவங்க வாழ்க்கைகளைப் பத்திக் கொஞ்சம் யோசனை செய்யுங்க!''

''ஐ டோண்ட் கேர்!''

''நீங்க சமூகத்துக்காகப் பாடுபடுகிறவர். பத்மஸ்ரீ பட்டத்துக்காக ஏங்கறவர். நீங்களா இப்படிப் பேசறீங்க?''

''துங்கா!''

''உங்களைப் பத்தியும் உங்க பெண்ணைப் பத்தியும் மதர் ஆஃப் டுமாரோவில் எழுதட்டுமா? டயரி இருக்கு சாட்சியாக. இப்போ நீங்க பேசினதையெல்லாம் டேப் பண்ணியிருக்கேன்!''

''டேப் ரெக்கார்டரை முதல்லே ஆஃப் பண்ணு!''

''மாட்டேன்!''

''ப்ளீஸ் துங்கா... தயவு செய்து என்னை வந்து பாரு!''

''ஸாரி... மொதல்லே பெங்களூர்!'' சொல்லிவிட்டு டெலிபோனை வைத்தாள்.

''என்னடி துங்கா, என்ன நடக்கிறது? என்னென்னமோ பேசறியே! என்ன டயரி? எழுபத்து நாலு பெண்களா? யார் அவங்களெல்லாம்? ஏன் போலீஸ் கமிஷனரைப் பத்திப் பேசினே?''

கமலம் வியர்த்துப் விறுவிறுத்துப் போனுள்.

''உனக்கு இதெல்லாம் ஒண்ணும் தெரிய வேண்டாம். அம்மா!'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டுத் துங்கா தன் அறைக்குச் சென்ருள்.

அன்று மாலை மீனம்பாக்கத்துக்குப் புறப்படு முன் டெலிபோன் வந்தது.

''மீட் மி அட் தி ஏர்போர்ட். மிஸ்டர் ராமச்சந்திரன்!'' என்ருள் துங்கா.



விமானத்திலிருந்து இறங்கி, தளத்தில் சிறிது தூரம் நடந்து கைப்பெட்டியுடன் வெளியே வந்த துங்கா சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே நின்றுள். டெலிபோனில் பேசிய ராமச்சந் திரன் அவளைச் சந்திக்க வருவதாக உறுதி அளித்திருந்தான். எங்கே காணும்?

அவள் தன்னைச் சுற்றி நின்றும் நடந்தும் கொண்டிருந்த பிரயாணிகளில் அவனைத் தேடினுள். கொடைக்கானல் ராம்ஜி மனத்தில் பதிந்து போய்விட்ட முகம். அவனைத்தான் தேடுகிறேம். என்ற உணர்ச்சி அவளை விட்டு அகலவில்லை. டயரியில் அவளைப் பற்றிய குறிப்பிலிருந்து அவன்தான் அவளை மணம் செய்து கொள்ளப் பெண் பார்க்க வந்திருக்கிறுன் என்று மனம் உறுதியாக நம்பியது.

கால்கள் வலிக்க உள்ளம் சலித்துக் கொள்ள அவள் நகர முற்படுகையில்—

''குட் ஈவினிங் மிஸ் துங்கா. ஹௌ வாஸ் தி ட்ரிப்?'' என்ற வார்த்தைகள் வெகு அருகே, காதோரத்தில் மென்மையாக ஒலித்தன.

குரலிலிருந்தே கொடைக்கானல் குரல் என்பதை மின்னலாக உணர்ந்த துங்கா விருட்டென திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஏமாற்றம்!

தழையத் தழைய நைலான் வேட்டி கட்டிக் கொண்டு லக்னே ஜிப்பாவின் கைவேலைப்பாடு மினுமினுக்க, பெரியதோர் தங்க பிரேம் கண்ணடி அணிந்து, ஒற்றை நாடியாய் மீறிய சரீரத்துடன் தொந்தியின் இளமை கண்ணில் படப் புன்முறுவலித்தான் ஒருவன்.

''வாங்க போகலாம். கார் அங்கே இருக்கு!''

ஆடி அயர்ந்து போன நிலையில், ''யார் நீங்க?'' என்று கேட்டாள் துங்கா.

''ராமச்சந்திரன்... நீங்க ரொம்ப சீக்கிரம் பார்த்துப் பழகியவங்களை மறந்துடுவீங்க போலிருக்கு.''

அவனுடைய மண்டையின் முன்வழுக்கையும் வெட்டி விடப்பட்ட புல் தரையாகத் தோன்றின பின் மண்டையும் அவருடைய குழப்பத்தை அதிகமாக்கின.

''நீங்கதான் எங்க வீட்டுக்கு... எங்க வீட்டுக்கு...''

''யெஸ்! உங்க வீட்டுக்கு இரண்டு தடவை வந்ததும் நான்தான். ரெட்லண்ட்ஸில் தங்கியிருந்ததும் நான்தான். பெங்களூரிலிருந்து டெலிபோனில் பேசியதும் நான்தான். உனக்காக இங்கே கெஸ்ட் ஹவுஸ் முழுதையும் பிரத்யேகமாக ரிசர்வ் செய்திருப்பதும் நான்தான்.''

திடீரென்று அவன் பார்த்த பார்வையிலிருந்து, அவனுடைய கண்களின் கூர்மையிலிருந்து அவள் சட்டென்று புரிந்து கொண்டாள். குரல் மாறி விட்டது. மண்டையின் ரோமங்கள் மாறி விட்டன. உடை அணியும் விதம் மாறி விட்டது. கண்களுக்கு இப்போது கண்ணாடி தேவைப்பட்ட போதிலும் விழிகளின் கூர்மை மட்டும் மாறவில்லை.

''யூ ஆர் தட் ராம்ஜி ஆஃப் கலிபோர்னியா! தி அமெரிக்கன்...''

''அப்பாடி! இப்பத்தான் கொடைக்கானல் ஞாபகம் வந்ததா?''

சொல்லிவிட்டு அவன் சிரித்தான்.

அவள் பல்லைக் கடித்துக் கொண்டாள். ஆத்திரமும் கோபமும் எல்லையை மீறிப் பீரிடும் என்று அவன் எதிர்பார்த்திருந்தான். இப்போது அவளை ஆட்கொண்ட ராம்ஜி கண்ணெதிரே நிற்கையில் ஆத்திரம் வரவில்லை. கோபம் வரவில்லை. அன்று கையில் பணமும் பரிசும் கொடுத்துவிட்டுத் திடீரென்று மறைந்து போனானே, அதற்காக ஆங்காரமும் வரவில்லை. சீறிக் கொதித்துக் கொண்டிருந்த அவளுடைய பெண் மனத்தை அவள் பெண்மையே அடக்கியது.

பேச வேண்டியதையெல்லாம் அவனுடைய விடுதியில் பேசிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தாள்.

''பெட்டியை இப்படிக் கொடு துங்கா.''

''பரவாயில்லை.''

''தா!''

''கனமில்லை மிஸ்டர்...''

''ராமச்சந்திரன்! தா...''

இருவரும் நடந்தார்கள்.

காரில் ஏறினார்கள்.

அவள் முன்சீட்டில் உட்கார்ந்து கொண்டாள். அவள் காரைச் செலுத்த மௌனமாய்ச் சாலையைப் பார்த்தவளாய் வந்தாள். அவன் கண்ணுக்கு எந்த வாகனமோ, மனிதர்களோ,

கட்டிடங்களோ தெரியவில்லை. பாதையின் இரைச்சல் கேட்க வில்லை.

கண்முன் அபயம் தோன்றினாள். சுகுணா கண்ணும் கண்ணீருமாய் நின்றாள். ஆணவத் திமிருடன் அஞ்சனா சிரித்தாள். ஏன், டயரியில் கண்ட பெண்கள் எல்லோருமே கூட்டம் கூட்டமாக அவள் எதிரே வந்தார்கள்.

''கெஸ்ட் ஹவுஸ் வந்தாகி விட்டது!'' என்றான் ராம்ஜி.

அவள் இயந்திரமாக இறங்கி, அவனைப் பின்தொடர்ந் தாள்.

ஏழு படிகள் ஏறியதும் கட்டிடம் முழுக்க வட்டமாக ஓடிய அகலமான வராந்தா நிறைய கூடை நாற்காலிகள். தூசியை வாங்கிக் கொள்ள, நீலக் கரை போட்ட சிகப்பு கார்ப்பெட்.

ரிஸப்ஷன் ஹாலுக்குள் ராம்ஜி பிரவேசிக்க அவளும் பின் தொடர்ந்தாள். அஞ்சனா வீட்டு சோபாக்களைப் போல இல்லை. என்றாலும் சோபாக்கள் கவர்ச்சியாக இருந்தன. சுவர்களைப் பார்த்தாள். காந்தி, நேரு, டாகூர், ராஜாஜி, சி.வி. ராமன்.

அவற்றை அவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஒரு சிப்பந்தி ஒரு ட்ரேயில் இரண்டு கண்ணாடித் தம்ளர் நிறைய சிகப்பு நிறத்தில் ஜூஸ் கொண்டு வந்து டீப்பாயின் மேல் வைத்தான்.

''சாப்பிடு துங்கா. சாப்பிடும்போதே இந்தச் சுவர்ப் படங் களையெல்லாம் பார்!''

ஒரு டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்ட ராமச்சந்திரன் கண்களின் திசையைச் சுவருக்கு மாற்றினான்.

அவள் பார்த்தாள்.

வாஷிங்டன், லிங்கன், கென்னடி, மார்ட்டின் லூதர்கிங்.

''இது இந்தியா. அது அமெரிக்கா. ஒரு விசேஷம் பார்த் தாயா துங்கா! அமெரிக்கா பற்றிய படங்களெல்லாம் வாசல் பக்கத்துச் சுவரில் தொங்கறது. நம்ப தேசத்துப் படங்களெல் லாம்...''

''ப்ளீஸ் ஸ்டாப் இட்!'' துங்கா கத்தினாள்.

ராமச்சந்திரன் அவளுடைய திடீர் மாற்றத்தால் அயர்ந்து போய்விடவில்லை.

''யெஸ் துங்கா. என்ன சொல்ல நினைக்கிறே?''

''நீங்க ஒரு ஃப்ராட்!''

''யுவர் ஒபினியன்!''

''நீங்க ஒரு பெரிய பிலாண்டரர். ஃபிலாண்டரர்னா அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? தெரியலைன்னா டிக்ஷனரியைப் பார்க்கத் தேவையில்லை. ஏன்னா உங்களை வச்சுத்தான் அந்த வார்த்தையே உதிச்சிருக்கு!''

அவளுடைய பொங்கி வழியும் சினத்துக்கு மரியாதை

கொடுக்கும் பாவனையில் மௌனமாக இருந்த ராமச்சந்திரன் சிரிக்கவில்லே. அவளேயே கூர்ந்து பார்த்தான்.

துங்கா, ''அப்படிப் பார்க்காதீங்க. அன்னிக்குக் கொடைக்கானலிலே இப்படிப் பார்த்துத்தான் என்னே மதிமயங்க வச்சீங்க!'' என்ருள்.

''அதுக்காக நான் இப்போ மன்னிப்புக் கேட்கிறேன். அதற்கு மறுநாள் நான் ஏன் அப்படி திடீர்னு தலேமறைவாகிப் போனேன்னு உனக்குத் தெரியாது!''

''காரியம் முடிஞ்சது! ஓடினீங்க!'' துங்கா வெறுப்பை உமிழ்ந்தாள்.

''கரெக்ட்! யூ ஆர் கரெக்ட் துங்கா. என் தங்கையின் காரியம் முடிஞ்சது. நான் அவளுடைய பிரயாணத்தைப் பார்க்க ஓடினேன்.''

துங்கா திடுக்கிட்டாள்.

''என்ன? என்ன சொன்னீங்க?''

''இதை நீ நம்புவதானுல் நம்பலாம். நம்பாவிட்டால் ஐ டோண்ட் கேர். எனக்கு ஒரு தங்கை இருந்தாள். பேர் லாவண்யா. அவளே ஒருத்தன் ஏமாத்திஞன். தான் ஏமாற்றப் பட்டோம்னு தெரிஞ்சதும் அவளால் தாங்கிக்க முடியலே. இரண்டு மாசக் குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டு அவள் பிராணனே விட்டாள். பொட்டாஸியம் சயனேட்!''

''யார் அவன்?''

''என்னுடைய சினேகிதன்தான். அவனே உனக்கும் தெரியும்!''

''பெயர்?''

''சமயம் வர்றப்போ சொல்றேன்!''

''ஐ'ம் ஸாரி!''

''இட் இஸ் ஆல்ரைட்! அன்றைய் நிலேயில் வேறு எப்படியும் என்னேப் பற்றி நினேக்கத் தோன்ருது!''

''ஆனுல் நீங்க அன்னிக்கு நிறையப் பொய் சொன்னீங்க!''

''ஸாரி! நான் சொன்னதெல்லாம் உண்மை... உண்மையைத் தவிர வேறு இல்லே!''

''அமெரிக்கன் சிடிஸன்ஷிப் அப்படீன்னீங்க!''

''சொன்னபோது நான் அமெரிக்காவில் குடியேறிய—ஏன், பிறந்த இந்தியன்!''

''அப்பா அம்மா எல்லோருமே அமெரிக்காவிலேதான் ரொம்பக் காலமாக இருக்கிறதாகச் சொன்னீங்க!''

''யெஸ்! அப்ப அப்படித்தான் இருந்தது. இன்னமும் எங்களுக்குக் கலிபோர்னியாவில் வீடும் ரான்ச்சும் இருக்கு.''

''உங்க அப்பாவும் அம்மாவும் அமெரிக்காவில் வாழ்ந்தவர் களாவே காட்டிக் கொள்ளவில்லே. அம்மா பதினெட்டு முழம்; அப்பா வாய் நிறைய வெற்றிலே புகையிலேயைக் குதப்பிக் கொண்டு...''

''இதனுலெல்லாம் அவங்க அமெரிக்காவிலே இருக்க வில்லேன்னு அர்த்தமா துங்கா? எங்களுக்குப் பூர்வீகம் தஞ்சாவூர். கோயமுத்தூர்லே தாத்தா குடியேறினர். அப்பா அக்ரிகல்சுரல் காலேஜில் படிச்ச கையோட அமெரிக்கா போனவர் அங்கே என் அம்மாவைச் சந்தித்தார். இங்கே லட்சக்கணக்கான சொத்து இருந் தும், தாத்தா சாகிற வரைக்கும் கெஞ்சியும் அப்பா அசையாமல் அம்மாவின் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேசாமல் அங்கேயே இருந் தார்.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? நான் உன்னேச் சந்திச்ச வருஷம்—1982—திடீர்னு எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தோம். லாவண்யா இறந்து போனது அம்மாவுக்குப் பெரிய இடியாக விழுந்தது. அவள் பிறந்து வளர்ந்து விளேயாடிய வீடே கசந்தது. இந்தச் சமயம் பார்த்து அப்பா செத்துப் போன தாத்தாவின் ஆசையை நிறை வேற்ற யோசனே சொன்னர். அம்மா மறுவார்த்தை பேசவில்லே. அக்கா கல்யாணமாகி இந்தியாவுக்கு வேறு வந்துவிட்டாள். முடிவு ஒரு நாள் அமெரிக்காவை உதறிவிட்டு திரும்பினேம். ரொம்ப சிரமப் பட்டு இண்டியன் சிடிஸன்களாக மாறினேம். என் ஒன்றுவிட்ட சித்தப்பா பெரியப்பாக்கள் கவனிச்சு வந்த நிலங்களேயும் எஸ்டேட்டு களேயும் பராமரிக்க ஆரம்பிச்சோம்!''

''நம்ப முடியாத கதை போல இருக்கே!'' என்று கூறிய துங்காவுக்கு திடீரென்று டயரியின் நினேவு வந்தது. எழுபத்து நாலு பெண்களில் லாவண்யா என்ற பெயர் கொண்ட பெண்ணும் இருப்பது நினேவில் முட்டியது.

''உங்க தங்கை லாவண்யா எப்படி இருப்பாள்?''

நா தழுதழுக்கக் கூறினன்.

இன்று இரவு லாவண்யாவைப் பற்றிய குறிப்பைப் படிக்க வேண்டும். அவளும் இவளும் ஒருத்திதான் என்றல் இவன் சொல்வது அனேத்தும் உண்மை என்று நம்பலாம். திடீர் என்று இன் ெனுரு விளக்கமும் தேவைப்படவே கேட்டாள்.

''உங்க பெயர் ராம்ஜி என்றீர்கள். ஆனல் இப்போ ராமச்சந்திரன்!''

''நாளேக்கு என் சர்ட்டிபிகேட்டுகளேக் காட்டுகிறேன், துங்கா. அமெரிக்காவில் என் பெயர் ஷிவ்ராம் ராம்ஜி! இந்தியா

வந்ததும் தாத்தாவின் பெயரைச் சூட்டிக் கொண்டேன். அதுக்கே எனக்குக் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் செலவாயிற்று. ஹிண்டு, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற பேப்பர்களில் எல்லாம் கூடப் பெயர் மாற்றம் விளம்பரமாகியிருக்கிறது!''

ராமச்சந்திரன் எழுந்தான்.

''நாம இப்போ சாப்பிடலாம். சாப்பிட்டதும் நான் வீட்டுக்குப் போகிறேன். அப்பா அம்மா இரண்டு பேருக்கும் தகவல் கொடுக்கணும். நீ வந்திருப்பது அவர்களுக்குத் தெரியாவிட்டாலும் என் அம்மா அக்கா இரண்டு பேருக்கும் அன்னிக்கு நாங்க வந்த போது நீ இல்லாததால் பெரிய கோபம். உங்க வீட்டு சம்பந்தமே வேண்டாம்னு சொன்னுங்க. ஆனு அப்பாகிட்டே நான் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னேன்!''

''உண்மையா?''

''உண்மையாகச் சொன்னேன்.''

''நான் அதைக் கேட்கவில்லை!'' என்றுள் துங்கா.

''யெஸ்! உண்மையாகக் காதலிக்கிறேன். இல்லாமல் போனுல் நான் அமெரிக்காவையே விட்டுட்டு இங்கே வருவேனு?''

''ஆனுல் மூணு வருஷம் ஆகியிருக்கு இதை வெளியிட!''

''அதற்குக் காரணம் உனக்கே தெரியும்!'' என்றுன் ராமச்சந்திரன்.

''என்ன?''

''புரொபஸர் ஆனந்த்!''

''என்னை நான் காப்பாற்றிக் கொள்ள எனக்கு ஒரு கொழு கொம்பு தேவை இல்லையா? நல்ல சமயத்தில் அவரைச் சந்திச்சேன். அவர் என்னை நேசிக்கிறுர்!''

ராமச்சந்திரன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''சில டிராஜடிகள் சிரிப்பை வரவழைக்கும்!'' என்றுன் அவன். பிறகு, ''ஆனந்த் இப்போது பெங்களூரில்தான் இருக்கிறுன்!'' என்றுன்.

''அப்படியா?''

''என் பாதுகாப்பில்!''

சொல்லிவிட்டு அவன் சிரித்தான்.

அன்று இரவு தனியாகக் கட்டிலில் படுத்த போது துங்கா டயரியை எடுத்தாள்.

லாவண்யா நாற்பத்தெட்டாவது பெண்ணுக இருந்தாள். தன்னுடைய நம்பரைப் பார்த்தாள். இது வரை ஏன் அவளுக்கு அதைப் பார்க்கத் தோன்றியிருக்கவில்லை என்று நினைத்த போது

அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

என்ன இது?

டயரியில் ஏதோ ஒரு பக்கத்தில் எழுதித் தாளைக் கிழித்து நட்ட நடுவே ஒட்டியிருந்தது.

ஏன்?

முதலில் எழுத வேண்டாம் என்றிருந்துவிட்டுப் பின்னர் முடிவை மாற்றிக் கொண்டானு? மற்ற பெண்களுக்கெல்லாம் அரைப் பக்கமும் ஒரு பக்கமும் ஒதுக்கியிருக்க, துங்காவுக்கு மட்டும் இரண்டு பக்கங்களா?


மீண்டும் லாவண்யாவுக்கு வந்தாள். எழுதப்பட்ட குறிப்புக்களைப் படித்தாள். ராமச்சந்திரன் கூறிய விவரங்களை நினைவு கூர்ந்தாள். உயரம், நிறம் எல்லாம் ஒன்ருக இருந்தன. சந்தேகமே இல்லாதபடி கீழ்க்கண்ட வரிகள் இருந்தன.

''அமெரிக்காவில் பிறந்தாளாம். இந்தியாவில் மூன்று மாதங்கள் தங்க வந்தாளாம். நான் கலிபோர்னியா சென்றிருந்த போது என்னை ஏறெடுத்தும் பார்க்காத திமிர் பிடித்த பெண்! ஏன் ஏறெடுத்துப் பார்க்கவில்லை! அவளுடைய அண்ணனுடைய காலில் விழுந்து உதவிக்காகக் கெஞ்சினேன். அதுதான் காரணமோ! அண்ணன் எந்த உதவியும் செய்ய முடியாது என்று வெளியேற்றினுன். சில வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தில் நான் மாபெரும் குற்றம் செய்தேன் என்று ஏசினுன். அவனை என்னல் நேரடியாகப் பழிவாங்க முடியாது! அவனுடைய தங்கை லாவண்யா மூலம் அவளையும் அவன் குடும்பத்தையும் பழிவாங்கி விட்டேன்.

என்னை அவள் மறந்து போயிருந்தது எனக்குச் சாதகமாகப் போயிற்று. முகஸ்துதி என்ருல் குழந்தைக்கு மிட்டாய் மாதிரி என்பதை எளிதில் புரிந்து கொண்ட நான் அவளைப் படுக்கைக்கு இழுத்த போது சிணுங்கினுள். என்னுடைய போலித்தனமான பணக்கார வேடத்தினுலும் என்னுடைய இனிமையான பேச்சினுலும் அவளை வளைத்துப் போட்டேன்.'

துங்காவின் மனத்தில் வேதனை பீரிட்டது. தன்னையறியாமல் அவள் லாவண்யாவுக்காக அழுதாள்.

அதே சமயத்தில் இன்னெரு மாபெரும் உண்மையும் அவளுக்குப் புரிந்தது. டயரியை எழுதியவன் ராமச்சந்திரன் அல்ல!



விருந்தினர் விடுதியில் இன்பமயமான கனவுகளில் திளைத்துப் போன துங்கா கண் விழித்தாள்.

அவள் ரிசப்ஷன் ஹாலுக்கு வந்தபோது, அன்றைய தினசரியில் ராமச்சந்திரன் முழுகியிருந்தான்.

அவள் அவனைப் பார்த்தாள். கொடைக்கானலில் அவள் பார்த்த பார்வை நினைவுக்கு வந்தது. உடல் அக்கணமே சிலிர்த்தது. அதே சமயம் டயரியில் படித்த பெண்களின் பெயர்களும் ஆ[illegible]யம், சுகுணு போன்ருேர்களின் முகங்களும் கண்முன் தோன்றின.

''நீங்கள் பெண் பார்க்க வந்ததன் நோக்கம் என்ன, மிஸ்டர் ராமச்சந்திரன்?'' திடீரென்று அவள் கேட்டாள்.

கையிலிருக்கும் தினசரியை மடித்து வைத்த அவன், ''என்ன நோக்கம் இருக்கும், துங்கா? ஒரே நோக்கம்தான்!'' என்ருன்.

''ஆனல் நீங்க ஒரு பெண்ணுேடை நிறுத்திக்கிற ஆண்பிள்ளை இல்லையே?''

''புரியலே!''

''ஏன், டயரியின் ஞாபகம்கூட இல்லையா?''

''டயரியா?''

''பொய் சொல்லுவதற்கும் ஒரு எல்லை வேணும், ராமச்சந்திரன்.''

''என்ன பொய்? யார் சொன்னுங்க?''

''கொடைக்கானலைக் கொஞ்சம் நினைவுபடுத்திப் பாருங்க!''

''ஏன் கொஞ்சமெல்லாம்! என் நெஞ்சமெல்லாம் அந்த நினைவுதானே துங்கா. இல்லாமல் போனுல் நான் ஏன் இவ்வளவு தீவிரமாக உன்னைப் பார்க்கத் துடிச்சிருப்பேன்?''

''எழுபத்தி நாலு பெண்களில் நானும் ஒருத்தி! ஏன் மத்த வங்களை மறந்துட்டீங்க?''

''நீ என்னைக் குழப்பறே, துங்கா!''

''நீங்க என் பெயர், என் நிறம், என் இயல்பு, நான் அன்று

நடந்து கொண்ட முறை இதையெல்லாம் ஒரு டயரியில் எழுதியிருக்கீங்க! அது மட்டுமில்லே. நீங்க உங்க படுக்கைக்கு இழுத்து அனுபவிச்ச அத்தனை பெண்களின் பெயர்களும் முகவரிகளும் கூட அதில் இருக்கு!''

''நான்சென்ஸ்!''

''அன்னிக்கு எப்படியெப்படியெல்லாம் பொய் சொன்னீங்க? அமெரிக்கன் சிடிஸன்! அங்கேயே பிறந்து வளர்ந்தவன்! கலிபோர்னியாவிலே ரான்ச் இருக்கு!''

''இதில் என்ன பொய்? இன்னமும் ரான்ச் இருக்கு. இன்னமும் வீடு இருக்கு. ஆனா இப்போ நானும் சரி என் அப்பா அம்மாவும் சரி. இந்தியப் பிரஜைகள்!''

''ஹா! வாட் எ கிரேட் ஜோக்!''

என் வாழ்க்கையைக் கேள், துங்கா. என் தாத்தா கோயமுத்தூர் ஜில்லாவிலே பெரும் பணக்காரர்களில் ஒருவர். என் அப்பா அவருக்கு ஒரே பிள்[illegible] எல்லா சொத்தையும் வியாபாரத்தையும் [illegible]ர்ன்னு தாத்தா நம்பினர். ஆனல் அப்பா, [illegible] சுத்தி வர்றேன்னு கிளம்பினர். அமெரிக்காவிலே என் அம்[illegible]வைச் சந்தித்தார். அதன் விளைவாக ஒரு விபரீதம். அது என்ன தெரியுமா? என் அம்மா—அப்பா கல்யாணம். ஊருக்குத் திரும்பினல் தாத்தா முகத்தில் முழிக்கவே முடியாதுன்னு பயந்த அப்பா அமெரிக்காவிலேயே தங்கிட்டார். அங்கேயே மேலே படிச்சார். பெரிய வேலையும் கிடைச்சது. எனக்கு ஒரு அக்கா, ஒரு தங்கை. அக்காவுக்கும் அமெரிக்காவிலேயே கல்யாணமாச்சு. ஆனா உடனேயே அவருடைய புருஷன் இந்தியாவுக்குத் திரும்பிட்டார். அதிலிருந்து என் அம்மா அப்பாவுக்கு இருக்கை கொள்ளவில்லே. ஆனல் அதே சமயம் அமெரிக்காவையும் உதறி எறிய முடியலே!''

''நீங்கதான் 'வால்மீகி' என்கிற புனைபெயரிலே ராமாயணம் எழுதினீங்களா?''

''ஸாரி, துங்கா. உன்னுடைய சந்தேகம் இன்னும் தீரவில்லே. அதனல் இத்துடன் என் கதை முடிகிறது. நீ உன் இஷ்டம் போல் இந்த விடுதியில் இருந்துவிட்டு, எப்பப் போகணும்னு தோணுதோ அப்போ கிளம்பலாம். சிப்பந்திகிட்டே சொல்லி வைக்கிறேன். அவன் என் விருந்தினர்களை நன்ருகக் கவனிப்பான்.''

சொன்ன ராமச்சந்திரன் நகர்ந்தான்.

''ஓ.கே. ராமச்சந்திரன்! உங்க வரலாறை நம்பறேன். சொல்லுங்க!''

''எனக்கு ஒரு தங்கை உண்டு. அவளும் நானுமாக மூணு வருஷம் முன்னலே இந்தியா வந்தோம். அப்பத்தான் நீ ஒரு டூரிஸ்ட் கெய்டா என்கூட வந்தே!''

''தங்கை?''

''அவ என் அக்கா பார்வதியைப் பார்க்கப் போனுள்!''

''சரி, மேலே சொல்லுங்க.''

''உனக்கு நினைவு இருக்கலாம். கொடைக்கானல்லேர்ந்து மதுரை திரும்பினதும் உன் கையிலே பணமும் ஏதோ ஒரு பரிசும் கொடுத்திட்டு நான் தேக்கடி போறதாகச் சொல்லிட்டுப் போயிட்டேன்!''

''ஆமாம்.''

''ஆனுல் நான் தேக்கடிக்குப் போகலே!''

''பொய் சொன்னீங்க!''

''யெஸ்! உண்மையைச் சொல்லியிருந்தால் உன்னுலே தாங்கியிருக்க முடியாது!''

''அவ்வளவு பெரிய உண்மையா?''

''யெஸ்... துங்கா! அவ்வளவு பெரிய உண்மைதான். என் தங்கையோட சடலத்தைப் பார்க்க நான் போகவேண்டியதாயிற்று!''

''என்ன!'' இடி தாக்கியது போல துங்கா மிரண்டு போனுள்.

''அவள் தற்கொலை செய்து கொண்டாள்.''

''ஐ'ம் ஸாரி!''

''யாரோ ஒருவன்—என் சிநேகிதன் ஒருவன் அவளைக் கெடுத்துவிட்டான்! வாக்களித்தபடி அவளை மணம் செய்து கொள்ளவில்லை. அவளுடைய கொஞ்சல்களை டேப்பில் பதிவு செய்து, அதை வச்சிட்டு அவளைப் பணத்துக்காக பிளாக்மெயில் பண்ணியிருக்கான்!''

திடீரென்று சாவித்திரிக்குக் கமல்நாத்தின் கண்டசிப் பெண்ணின் கதை நினைவு வந்தது. சாவித்திரியை இப்போது ஒருவன் பிளாக்மெயில் செய்கிறுன். ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கவில்லை என்றுல் குடும்ப மானத்தையே தெருவுக்கு இழுக்கப் போவதாகப் பயமுறுத்துகிறுன். அவனுக்கும் இவனுக்கும் சம்பந்தமிருக்குமா?

''ஓ.கே. மேலே சொல்லுங்க.''

''அம்மாவாலே இந்த இழப்பைத் தாங்கிக்க முடியலே! மூத்த பெண் இந்தியா வந்துவிட்டாள். இன்னெரு பெண் இறந்துவிட்டாள். இனி அமெரிக்காவில் என்ன வேலைன்னு புலம்ப ஆரம்பிச்சாங்க. என் மனசுக்குள்ளேயும் நீ சுத்திச் சுத்தி வந்துட்டிருந்தே! இந்தச் சமயத்தில் தாத்தாவுக்கு எண்பது வயசு. அப்பாவுக்கு லெட்டர் மேலே லெட்டர் எழுதினுர். எஸ்டேட்டைச் சரியாகப் பார்த்துக்கப் பொறுப்பான ஆள் இல்லை. ஒரு ஆசையிலே ஆரம்பிச்ச இந்த ஊர் ஃபாக்டரி நட்ட நடுவிலே நின்னுது. அப்புறம் ஒரு வழியா முடிவு எடுத்து, இங்கே வர்றதுன்னு தீர்மானிச்சோம். இதுக்குள்ளே இரண்டு வருஷம் போயிடுத்து!''

''அதாவது கொடைக்கானல்லே நான் பார்த்த ராம்ஜி அமெரிக்கன். இப்ப பார்க்கிற ராமச்சந்திரன் இந்தியன்! அப்படித் தானே?'' என்ருள் துங்கா.

''கரெக்ட், துங்கா! என் பேர் ராம்ஜிதான். ஆனல் இந்தியா வந்ததும் என் தாத்தா தன் பெயரைத்தான் நான் வச்சுக் கணும்னு பிடிவாதமாக இருந்தார். பரம்பரை பரம்பரையா தாத்தாவின் பேர்தான் முதல் பேரனுக்கு வச்சிருக்காங்களாம். இப்ப அந்தத் தாத்தா இல்லே, அவர் பேர் இருக்கு.''

திடீரென்று டயரிக்குத் திரும்பினுள் துங்கா.

''அப்போ உங்களுக்கு உங்க டயரியைப் பத்தின நினைவு இல்லாமல் போயிட்டுது, இல்லே?''

''நீ மறுபடியும் பிதற்ற ஆரம்பித்துவிட்டே, துங்கா. எனக்கு டயரி எழுதற பழக்கமே இல்லே.''

''இது அந்த மாதிரி டயரி இல்லே!''

''பின்னே?''

''ஏற்கனவே சொன்னேனே! ஒரு பெரிய நீண்ட பட்டியல். அதில், காதல் வேஷம் போட்டுக் காமத்தைத் தீர்த்துக் கொண்ட ஒருவன் தான் சந்தித்துப் பழகி அனுபவித்த பெண்களின் விவரங் களையெல்லாம் எழுதியிருக்கிருன்!''

''ஓ! அதில் லாவண்யா என்கிற பெயர் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.''

''அந்தப் பெயரில் ஒரு பெண் இருக்கிருள்!'' என்ற துங்கா தொடர்ந்து, ''நேத்து ராத்திரி ஏர்போர்ட்லேர்ந்து வந்தப்புறமும் நீங்க உங்க தங்கை பெயரைச் சொன்னீங்க. அவளைப் பத்தின விவரங்களைச் சொன்னீங்க. நான் கட்டுக் கதைன்னு நினைச்சேன். அப்புறம் ராத்திரி டயரியை மறுபடியும் ஆராய்ந்தபோது நீங்க சொல்றது உண்மைன்னு புரிஞ்சுது!''

''அப்ப ஏன் நான் வந்ததிலிருந்து நான் பேசுவதெல்லாம் பொய், கட்டுக்கதைன்னு ஏளனம் செய்தே?''

''உங்க ரோஷத்தின் டெம்பரேச்சரை அளக்கத்தான்!''

''முதல்லே டயரியைக் கொண்டு வா, துங்கா! அதைப் பார்த்தால் பல சந்தேகம் தீரும்.''

மறுகணமே துங்கா பெட்டியைத் திறக்க ஓடிஞள். டயரியை எடுத்தாள். பிரித்துப் பார்த்தவளாய்த் திரும்பி வந்தாள்.

''இதோ பாருங்கள் என் பெயரை!'' என்ற அவள் சில பக்கங்களைப் புரட்டிவிட்டு, ''இதோ, லாவண்யாவின் பெயரும்.''

டயரியை அவன் அவளுடைய கையிலிருந்து பறித்தான். ''ஐ டோண்ட் லைக் இட்!'' என்ருன்.

''ஐ டோண்ட் கேர்! மை ஸிஸ்டர் கமிட்டட் சூயிஸைட் பிகாஸ் ஆஃப் திஸ் பாஸ்டார்ட்!''

ராமச்சந்திரன் தன் தங்கையின் பெயரை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, துங்காவைப் பற்றிய இடத்துக்கு வந்தான்.

''துங்கா, நீ பெரிய ஜர்னலிஸ்ட்! பெரிய கரெஸ்பாண்டெண்ட்! ஆனால் டயரியிலிருந்து ஒரு வெற்றுக் காகிதத்தைக் கிழிச்சு அதிலே உன்னைப் பத்தி எழுதி இந்த இடத்திலே ஒட்டியிருக்கிறது உன் கண்ணிலே படலே?'' ராமச்சந்திரன் சீறினன்.

ஒரு நீண்ட நிமிஷம் அதையே உற்றுப் பார்த்த துங்கா, விரலால் நெருடிப் பார்த்தாள்.

''யெஸ்! யூ ஆர் கரெக்ட்!''

''நான் என்னிக்குமே கரெக்ட்தான்! ஓ.கே! இப்போ அவனைக் கண்டுபிடித்து விடுவது மிகவும் சுலபம். சீக்கிரம் டிபனைச் சாப்பிட்டு விட்டு ரெடியாயிரு. பத்து மணி ஃப்ளைட்டிலே மெட்ராஸ் போறோம். அந்த டயரியைக் கொடு!''

''இது ரகசியமாக என்னிடம் கொடுக்கப்பட்ட டயரி. நான் துப்புத் துலக்கணும்னு கொடுத்தாங்க.''

''கிழிச்சே! யார் கொடுத்தாங்க?''

''சாவித்திரி கமல்நாத் என்கிற ஒருத்தி!''

''அவள் பெயர் இதில் இருக்கா?''

''அவள் பெண் பெயர் இருக்கு!''

''இது அவளுக்குத் தெரியுமா?''

''இன்னும் தெரியாது. ஆனால் அவளை லட்சம் ரூபாய்க்கு இந்த ரோக் பிளாக் மெயில் பண்றான்!''

''அந்தப் பெண்ணின் பெயர்?''

''அஞ்சனா!''

''சரி, நீ ரெடியா இரு. நான் நொடியிலே என் வீட்டுக்குப் போய் உன்னைப் பிக்அப் பண்ணிக்க வரேன்!''

''கொஞ்சம் இருங்க. இந்த டயரியைப் பார்த்ததும் ஆளைக் கண்டுபிடிச்சுடலாம்னு எப்படி முடிவுக்கு வந்தீங்க?''

''அவன் அமெரிக்கா வந்திருந்தபோது இந்த டயரியை 1980'ம் வருஷம் அவனுக்கு நான் அன்பளிப்பாகக் கொடுத்தேன். முதல் பக்கத்தைக் கிழிச்சிருக்கான். அதில் என் கையெழுத்து இருந்தது! அவள் பெயரும் இருந்தது!''

''சரி, நான் ரெடியாகிறேன்!''

அவன் தன் காரில் ஏறப் போகும் வரை அவனையே பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள் துங்கா. 'உன்னைக் காதலிக்கிறேன்!' என்று அடிக்கடி சொல்லும் பழம் பஞ்சாங்கம் ஆனந்துக்கு ஏன் இந்த வீறுப்பு இல்லே?

ஆனந்தைப் பற்றிய எண்ணம் தோன்றியபோது அவள் மனம் குழம்பியது.



அஞ்சனுவின் வீட்டை அடைந்தபோது பிற்பகல் ஒரு மணி.

அஞ்சனு வந்ததும் ராமச்சந்திரன் முந்திக் கொண்டான்.

''குட் ஆஃப்டர்நூன் மேடம், நான் ராமச்சந்திரன்... துங்காவின் ஃபியான்ஸின்னு சொல்லிக்கலாம்!''

''ப்ளீஸ் கம் இன்!'' என்ற அஞ்சனு,'' என்ன துங்கா, நீ நேத்து சொல்லவே இல்லே?'' என்ருள்.

துங்கா சிவந்தாள். நிச்சயமாக அஞ்சனுவின் கண்களில் திகிலோ, ஆச்சரியமோ பிரதிபலிக்கவில்லே. அப்படியானுல் என்ன அர்த்தம்? ராமச்சந்திரனே அவள் இதற்கு முன் பார்த்ததே இல்லே.

''இதோ இந்தப் போட்டோவில் என்னுடன் இருப்பவனே நீ எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?'' ராமச்சந்திரன் திடீரெனப் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறு போட்டோவை எடுத்து அஞ்சனுவின் முன் நீட்டினுன்.

அவள் அதை வாங்கிக் கொண்டாள். பார்த்தாள். மறுகணமே கண்ணில் கோபம் மின்னியது.

''மேடம்... இந்த ஆள் டேஞ்சரஸ்... இவனேக் கண்டு பிடிச்சுப் போலீஸில் ஒப்படைக்கலாம்னு துங்கா சொல்ரு!''

அவள் பதில் பேசவில்லே.

''என்ன மேடம், அதில் உங்களுக்கு விருப்பம் இல்லியா?''

அஞ்சனு ஓரிரு நிமிடங்கள் தயங்கிவிட்டு, ''இவன் என்ன தப்பு செய்தான்?'' என்று கேட்டாள்.

''பிளாக் மெயில்!''

''யாரை?''

''உங்க அம்மாவை...''

''அம்மாவையா?'' அஞ்சனுவின் பயம் வார்த்தையில் கொட்டியது.

''லட்சம் ரூபாய்க்கு!'' என்று சொல்லிச் சிரித்த ராமச்சந்திரன், இவனுடைய வாயை ஒரே அடியாய் அடக்க

வேண்டுமென்றால் அதற்கு ஒரு வழி இருக்கு... அதாவது போலீஸுக்குப் போகாமலேயே?''

''என்ன அது?''

''நீங்க ஒரு பெரிய ஆர்ட்டிஸ்ட் அப்படீன்னு சொன்னா துங்கா!''

அஞ்சனா இப்போது துங்காவைப் பார்த்தாள். பார்வையில், ''எல்லாவற்றையுமே சொல்லிட்டியா?' என்ற கேள்வி புதைந்திருந்தது. துங்கா வாய் திறக்கவில்லை.

''நீங்க உங்களுடைய மாஸ்டர் பீஸ் படத்தை உலகத்துக்குக் காட்டாம வீட்டிலே யார் கண்ணிலும் படக் கூடாதுன்னு ஒளிச்சு வைச்சிருக்கீங்க. அந்தப் படம்...''

அஞ்சனா சீறினாள்.

''துங்கா! எல்லாத்தையும் இவர்ட்டே சொல்லிட்டியா?''

''என் ஃபியான்ஸி இல்லியா? அதான் சொன்னா!''

''ஓகே... நான் எத்தனையோ படம் வரைஞ்சிருக்கேன்... உங்களுக்கென்ன?''

''எங்களுக்கு ஒன்றுமில்லை, மேடம்...'' போலீஸ்னு போனா விசாரணைன்னு ஒண்ணு வரும்! விசாரணைன்னு வந்தா சில கசப்பான ரகசியங்கள் வெளியே வரும்...''

''இப்ப என்ன செய்யணும்னு சொல்ல வர்றீங்க?''

''நீங்க வரைஞ்சிருக்கிற படத்தை அவன்கிட்டே காட்டணும்!''

''என்ன... என்ன சொன்னீங்க?'' அஞ்சனாவின் முகம் வெளிறியது.

''அது நிச்சயமா உங்க ஹஸ்பெண்ட் படம் இல்லே... ஏன்னா உங்க மேரேஜுக்கு முன்னாலே நீங்க வரைஞ்ச படம். உங்க கல்யாணத்துக்கு முன்னாலே உங்களோட நெருங்கிப் பழகியவன் இந்த ஆள்... இப்ப அவன் வாயை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்திருக்கு....''

''அதனாலே!''

''இதை அவன்கிட்டே காட்டினாலே போதும்... போதாதுன்னு தோணினா, இந்தப் படம் எல்லாவிதமான பத்திரிகைகளிலும் 'காணோம்'ங்கற பகுதியில் விளம்பரமாக வெளிவரும்னு எதிர்பயமுறுத்தல் செய்யலாம்.''

''நான் படத்தை இன்னிக்கே எரிச்சுடறேன்,'' என்றாள் அஞ்சனா.

ராமச்சந்திரன் எழுந்தான்.

''அவசரப்பட்டு எதுவும் செய்யாதீங்க மிஸஸ் அஞ்சனா! அப்படியே படத்தை எரிக்கிறதுன்னு முடிவு எடுத்தாலும், கையோடு

காவலா இருக்க ஒரு போட்டோ எடுத்து வைச்சுக்குங்க. நாங்க வர்றோம்!''

''அவன் என் இருப்பிடம் தெரிஞ்சு இங்கே வந்து விட்டால்?''

''வராமலிருக்க ஒரு வழி சொன்னேன். அது உங்களுக்குப் பிடிக்கவே இல்லே!''

திடீரென்று அஞ்சனாவின் தயக்கம் மறைந்தது.

''ஏற்கனவே நான் என் ஓவியத்தின் போட்டோவை எடுத்து வைச்சிருக்கேன்... ஏன்னா ரொம்ப நாள் அவ்வளவு பெரிய படத்தை ஒளிச்சு வைக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும்!''

''போட்டோ சின்னதுதானே?'' அவன் சிரித்தான். பிறகு, ''உங்களுக்கு நல்லது செய்யத்தான் நான் இவ கூட வந்தேன், மிஸஸ் அஞ்சனா... இந்த ரோக் முன்னொரு காலத்தில் ஸ்டேட்ஸில் எனக்கு நண்பனாக இருந்தான். அதைச் சொல்லிக்க நான் ரொம்ப வெட்கப்படறேன்.... இவனாலே உங்களுக்கும் சரி, மத்த பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் சரி, இனிமேல் எந்தத் தொந்தரவும் இருக்கக் கூடாது!''

''ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்!'' என்று உள்ளே சென்ற அஞ்சனா திரும்பி வரப் பத்து நிமிடங்களாயின. வரும்போது அவளுடைய கையில் ஒரு சிறிய காகித உறை இருந்தது. அதை ராமச்சந்திரனிடம் நீட்டினாள்.

'தாங்க்ஸ் மேடம்! இனிமே நீங்க பழசை எல்லாம் மறந்துட்டு நிம்மதியாய்த் தூங்கலாம்!''

காம்பவுண்டுச் சுவரையே இன்னும் நெருங்கவில்லே. அதற்குள் துங்கா, ''எங்கே, அந்தப் போட்டோவைப் பார்க்கலாம்!'' என்றாள்.

''ஸாரி, துங்கா—ஒரு பெண் பார்க்கக்கூடாத படம்!'' என்றான் ராமச்சந்திரன்.

''ஒரு பொண்ணு வரைஞ்ச படத்தை இன்னொரு பொண்ணே பார்க்கக் கூடாதா?''

''யெஸ்... பார்க்கக் கூடாது. நான் பட்ட சிரமமெல்லாம் தீரும் சமயம் நெருங்கிவிட்டது!'' என்றான் அவன்.

''அப்படி என்ன சிரமப் பட்டீர்கள்?''

''என் தங்கையைப் பாழாக்கியவன் யார்னு இந்த ரெண்டு வருஷமாத் தேடி அலேகிறேன். இதுக்காக ஒரு பிரைவேட் டிடெக்ட்டிவ் ஏஜென்ஸிக்கு இதுவரை லட்சம் ரூபாய்க்கு மேல் செலவழிச்சாச்சு.''

''ஐ ஸீ...''

''இந்தச் சில நாளா உனக்குக் கூட அடிக்கடி போன் வந்திருக்குமே...''

''ஆமாம்... என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் யாரோ என்னையறியாமல் பின்தொடர்ந்து கவனிச்சுட்டு வர்ருன்னு புரிஞ்சுது...! அது நீங்கதாஞ?''

''நான் நியமிச்சிருக்கும் துப்பறியும் கோஷ்டியில் ஒருவன்!''

''கேவலமான செயல்.''

''இருக்கலாம். ஆனுல் என் நோக்கம் உன்னைப் பாது காப்பதுதான். அதுவும் நீ மிஸஸ் சாவித்திரி கமல்நாத்திடமிருந்து டயரியை வாங்கிக்கொண்ட நிமிடத்திலிருந்து உனக்கு ஆபத்து பிறந்துவிட்டது!''

கேட்டைத் தாண்டி, வாடகைக் காரில் இருவரும் ஏறிக் கொண்டார்கள்.

காரின் சத்தத்தில், டிரைவர் காதில் விழாவண்ணம், துங்கா கேட்டாள், ''எத்தனை நாளாக என்னைக் கண் காணிக்கிறீர்கள்?''

''ஒரு வருஷத்துக்கு மேலாக... நீ எனக்குக் கிடைப்பாயா மாட்டாயான்னு பூரணமாகத் தெரிஞ்சுக்க...''

''கிடைப்பேனு?''

''நிச்சயமா!''

''அது எப்படி அவ்வளவு நிச்சயம்? என்னை ஒருவர் காதலிக்கிருர், தெரியுமா?''

''தெரியும். அவன் ஒரு கோழை. அவனுடைய அப்பாவுக்கு மற்ற ஜாதிக்காரனைக் கண்டால் பிடிக்காது.''

''ஆனந்த் நல்லவர். என்னை இதுவரையில் தொட்டுப் பேசியது கூடக் கிடையாது.''

''ஏன் என்னை நீ அவனுக்கு அறிமுகப்படுத்தக் கூடாது, துங்கா?''

''ஆட்சேபணை இல்லை, ராமச்சந்திரன்... நானே நம்ப ரகசியத்தை அவரிடம் சொல்லி அவர்ட்டேர்ந்து விடைபெற்றுக் கொள்ளலாம்னு இருக்கேன்...''


''விடை பெற்றுக் கொள்றது விசேஷம்தான். ஆனு நம்ப ரகசியம் அவனுக்குத் தெரிவானேன்?''

''அவர், நான் உங்களை உங்க பணத்துக்காகக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்னு நினைப்பார். அது காரணம் அல்ல, நான் ஏற்கனவே சூதறப்பட்டவள், அதனுலே நான் அவருக்கு எச்சிலாகி விடுவேன்னு தெரிய வைக்க!''

''ஓகே!''

''இந்த அயோக்கியனை எப்ப சந்திக்கப் போறீங்க... சுகுணுவுக்கு வாழ்க்கை கொடுத்தாகணும். அவனை எப்ப சுகுணு வீட்டுக்கு அழைச்சுட்டுப் போகப் போறீங்க?''

''ஒவ்வொண்ணுகத்தானே முடியணும். முதல்லே உன் ஆனந்தை, ஸாரி, உன் பழைய ஆனந்தை எனக்கு அறிமுகப் படுத்து!'' என்றான் ராமச்சந்திரன்.



கார் அந்த வீட்டு முன் நின்றதும் துங்கா இறங்கினாள். ராமச்சந்திரன் இறங்கவில்லை.

''ஏன் உட்கார்ந்துட்டீங்க?'' என்று கேட்டாள்.

''நீ மொதல்லே போ, துங்கா. நான் பின்னால் வருகிறேன்.''

''இதிலும் ஒரு யுக்தியா?''

துங்கா நடக்க, பின்னால் மெதுவாக, மிக மெதுவாக ராமச்சந்திரன் நடந்தான்.

திண்ணையில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து ராகவாச்சாரி கண் அயர்ந்து கொண்டிருந்தார். அவளுடைய காலடிச் சத்தம் கேட்டிருக்க வேண்டும். கண் விழித்தார்.

''யார் நீ?'' என்றார்.

''என்னைத் தெரியலையா, சார்... துங்கா வந்திருக்கேன்.''

''வெளியே போ... நீ ஆனந்தைப் பார்க்கக் கூடாது.

''ஏன் சார்... ஏன்...''

''வெளியே போன்னு போ!'' ராகவாச்சாரியின் இரைச்சல் வீடு முழுதும் எதிரொலித்தது.

''சார் ஏன் கத்தறார், துங்கா?'' என்று கேட்டுக்கொண்டே ராமச்சந்திரன் வந்தான்.

''யார்டா நீ?'' என்றார் ராகவாச்சாரி.

அவருடைய குரலைக் கேட்ட ஆனந்தும் அவனுடைய தாயாரும் திண்ணைக்கு வந்தார்கள்.

ஆனந்த் துங்காவை விட்டு, ராமச்சந்திரனைப் பார்த்தான். அவனுடைய உடல் நடுங்க ஆரம்பித்தது.

''என்ன ஆனந்த்! என்ன அப்படிப் பார்க்கிறே? நான் உன்னைத் தேடி வரமாட்டேன்னு சொப்பனம் கண்டாயா?''

துங்காவுக்கு வியப்பு. ''ஆனந்த்தை ஏற்கனவே

உங்களுக்குத் தெரியுமா, ராமச்சந்திரன்?''

''கலிபோர்னியாவிலே எங்க வீட்டு வாசல்லே திருவோடு எடுத்துப் பிச்சை கேட்ட ராஸ்கல் இவன்!''

''ராமச்சந்திரன்!''—துங்கா கத்தினாள்.

''ஷட் அப்... டேய் ஆனந்த், இதோ பார்... என் கையிலே என்ன இருக்குன்னு பார்!'' ராமச்சந்திரன் டயரியை ஆட்டினான்.

''இந்த டயரி... இந்த டயரி...'' இதற்கு மேல் ஆனந்தால் பேச முடியவில்லை!

''டேய் ஆனந்த்! உன் டயரியை நீ முட்டாள்தனமா லேடீஸ் கிளப் பிரசிடென்ட் சாவித்திரி கமல்நாத்துக்கு அனுப்பினே... அவ புத்திசாலித்தனமா இதோ இந்தத் துங்காகிட்ட கொடுத்தா... நீ திருட்டுத்தனமா அவளைப் பற்றி இதிலே எழுதினதைத் தெரிஞ்சுக்காம துங்கா எம்பேர்ல சந்தேகப்பட்டா... உன்னாலே என் தங்கை லாவண்யா தற்கொலை பண்ணிட்டா... அஞ்சனாவின் அம்மாவை பிளாக் மெயில் பண்ணினே! இந்தத் துங்காவை ஒருநாள் கல்யாணம் பண்ணிட்டு, இவளையும் உன் கட்டை விரல்லே போட்டு டயரியைக் காட்டிக் காட்டிப் பணம் கறக்கலாம்னு திட்டம் போட்டே! ஆனந்த் உன்னுடைய கதைக்கும் முடிவு வந்துவிட்டது!''

ஆனந்த் வாய்த் திறக்கவில்லை.

''என்னடா சொல்றான் இவன், ஆனந்து?'' என்று கேட்டார் ராகவாச்சாரி!

''இந்த அயல் சாதிப் பொண்ணை எப்படி என் புள்ளை இந்த வீட்டுக்குக் கொண்டு வருவான். அவனுக்கு நாங்க பெண் பார்த்தாச்சு!'' என்றாள் ஆனந்தின் தாயார்.

''நீங்க ஒரு பெண்ணைத்தான் பார்த்திருக்கீங்க அம்மா! ஆனா உங்க புள்ளை...'' என்று ராமச்சந்திரன் ஆரம்பிக்க, துங்கா இடைமறித்தாள்.

''ப்ளீஸ்... கொஞ்சம் இருங்க!'' என்று கூறிவிட்டு, ''ஏன் ஆனந்த், இந்த டயரி உங்க டயரியா? இதில் நீங்க எழுதி வைச்சிருக்கிற பெண்களெல்லாம்...'' என்று இழுத்தாள்.

''நீங்க ரெண்டு பேரும் முதல்லே வெளியே போங்க!'' என்று கத்தினார் ராகவாச்சாரி.

''போகாமப் போனா?''

''போலீஸைக் கூப்பிடுவேன்!''

''மொதல்லே அதைச் செய்யுங்க! எங்களுக்கு வேலை மிச்சம்!'' என்றான் ராமச்சந்திரன்.

''நீ என்ன சொல்றே?'' என்றார் ராகவாச்சாரி.

முதல் தடவையாக ஆனந்த் பேசினான்.

''நீங்க ரெண்டு பேரும் மாடிக்கு வாங்க!''

''டேய்!''

''கொஞ்சம் பேசாம இருங்கப்பா! வாங்க!''

ஆனந்த் முன் நடக்க, துங்காவும் ராமச்சந்திரனும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

''என் அம்மா அப்பாவுக்கு டயரியைப் பத்தி எதுவும் தெரியாது,'' என்றான் ஆனந்த்.

''வீ டோண்ட் கேர்! நீ தான் என் தங்கை லாவண்யாவின் சாவுக்குக் காரணம்!'' என்றான் ராமச்சந்திரன்.

துங்கா கத்தினாள். ''இவ்வளவு பெண்களோடு கள்ளத் தொடர்பு கொண்ட நீங்க என்னவெல்லாம் என்கிட்டே வேஷம் போட்டீங்க! ஒரு தம்ளர் ஜூஸை ரெண்டு பேருமா குடிக்கலாம்னு நான் சொன்னப்ப, கல்யாணம் ஆகறவரைக்கும் எச்சில் கூடப் படப் படாதுன்னு நாடகமாடினீங்க!''

''என் வெறி என்னிக்கோ அடங்கிட்டது. நான் செய்ஞ்சதெல்லாம் ஒரு பைத்தியக்காரன் செஞ்ச செயல்...!'' ஆனந்த் மன்றாடினான்.

''பிளாக் மெயில் வெறி புதுசாப் பிறந்திருக்கு இல்லே?'' என்றாள் துங்கா. பிறகு, ''ஏன் என் பெயரையும் உங்க லிஸ்ட்லே சேர்த்தீங்க!'' என்றாள்.

''அதான் சொன்னேனே துங்கா, உன்னையும் பிளாக் மெயில் பண்ணத்தான்!'' என்றான் ராமச்சந்திரன்.

''இவரோட தங்கை உங்களாலே செத்தா. அபயம்ங்கற பொண்ணு விரக்தியோட அழறா... சுகுணா இன்னமும் உங்களுக்காக ஏங்கிக்கிட்டிருக்கா... அஞ்சனா நடுங்கறா. இன்னும் எத்தனை பேர்களை பிளாக் மெயில் பண்ணியிருக்கீங்க!''

''நான் உன்னை மன்னிக்கவே முடியாது. நீ பணப் பிச்சை கேட்டு வந்தப்ப, ஒரு வேலை வாங்கிக் கொடுன்னு வந்தப்ப நான் உன்னை விரட்டினேன். நண்பனா வேஷம் போட்டு எங்க வீட்டில் மூணு மாசம் சோறு தின்ன நீ, உண்ட வீட்டுக்கே துரோகம் பண்ணினே... அமெரிக்க அதிகாரிகள்கிட்டே உன்னை ஒப்படைச்சேன் என்கிற ஆத்திரத்திலே, என் தங்கையை நயவஞ்சகமா நல்லவனா வேஷம் போட்டு, சூறையாடினே! எனக்கு இப்ப நீ முதல்லே பதில் சொல்லு.''

ஆனந்த் பதில் சொல்லவில்லை.

''ராமச்சந்திரன், இவர் பதில் சொல்ல மாட்டார். ஒண்ணு இவரைப் போலீஸ்லே ஒப்படைப்போம். இல்லாமப் போனா நிர்க்கதியா நிக்கற சுகுணா கழுத்திலே தாலி கட்ட வைப்போம்!'' என்றாள் துங்கா.

''[illegible] இல்லே துங்கா... என்

தங்கைக்காக நான் பழிவாங்கறதைவிட ஒரு நல்ல பெண்ணுக்கு வாழ்வு அளிக்க முன் வர்றது நல்லதுதான்.'' என்ருன் ராமச்சந்திரன்.

''என்ஞல யாரையும் கல்யாணம் செய்துகொள்ள முடியாது... நீங்க போலீஸை வரவழையுங்கள். என் கோளாறு என்னன்னு பிரபல டாக்டர் ஒருத்தரே சர்டிபிகேட் கொடுத்திருக்கிருர்!''

ஆனந்த் திமிருடன் பார்த்தான்.

''ஓகே... ஆஞ நீ பிளாக் மெயில் கேஸிலிருந்து தப்ப முடியாது... வா, துங்கா, நாம போவோம்!''

இருவரும் எழுந்தார்கள்.

ஆனந்த் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

போகும் முன், ''அஞ்சஞ ஒரு ஓவியம் தீட்டிஞள். அதனுடைய போட்டோ நகல் இதோ என்னிடம் இருக்கு, ஆனந்த்... ஆயிரம் ஆயிரமாச் செலவழிச்சு ஊர்லே இருக்கிற எல்லா மஞ்சள் பத்திரிகைகளிலும் அந்தப் போட்டோ பிரசுரமாக நான் ஏற்பாடு செய்கிறேன்! அப்போதுதான் உன்ஞல் தலை தூக்க முடியாது!'' என்ருன் ராமச்சந்திரன்.

''என்ன! ஓவியமா? அஞ்சஞ தீட்டியிருக்கிருளா? என்ன ஓவியம்?'' என்ருன் ஆனந்த்.

''நன்ருகவே நடிக்கிருர்,'' என்ருள் துங்கா.

''அந்தப் படம் பிரசுரமாகக் கூடாது!''

''ஏன்?''

''என்ஞல் உலகத்திலே தலைகாட்ட முடியாது!''—ஆனந்த் முதன் முறையாக அலறிஞன்.

''எங்க நோக்கமே அதுதான்!'' என்ருள் துங்கா. பிறகு, ''நீங்க என் காதலர்னு நான் நினைச்சதுக்கு இப்ப வருத்தப்படறேன். வெட்கப்படறேன்... சீ, ஒரு தெரு நாயை நான் விரும்பினேனே! என் புத்தியை...'' என்ருள்.

''இப்ப வேண்டாம் துங்கா! முதல்லே ஏதாவது பத்திரிகை ஆபீஸுக்கு... ஐ மீன் மஞ்சள் பத்திரிகை ஆபீசுக்குப் போவோம்.''

''நான் சுகுஞவைக் கல்யாணம் செய்து கொண்டால்?''

ஆனந்த் இறங்கி வந்தான்.

துங்காவும் ராமச்சந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஓகே... நாங்க மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டோம். இப்பவே சுகுஞ வீட்டுக்குப் போகலாம்!''

''இன்னிக்கு வருவதற்கில்லை!''

''நாளைக்கு?''

''வரேன்.''

''காலை எட்டு மணி.''

''ஓகே. ஆனு டயரி எங்கிட்டே திரும்பி வரணும்!''

''நோ... இது எப்பவும் ஒரு பாங்க் லாக்கர்லே இருக்கும். பெயரளவுக்கு சுகுணு கழுத்திலே தாலி கட்டிவிட்டு அப்புறம் அவளை நீ தெருவிலே தூக்கி எறிய மாட்டாய்னு என்ன நிச்சயம்?'' என்றுன் ராமச்சந்திரன்.

மறு நாள் காலை எட்டு மணிக்கு இருவரும் ஆனந்த் வீட்டுக்குச் சென்றபோது—

வீட்டு வாசலில் பெருங் கூட்டமே கூடியிருந்தது. ஆம்புலன்ஸ் வேனும் போலீஸ் வேனும் நின்று கொண்டிருந்தன.


இருவரும் வேகமாக வீட்டை அடைய முயன்றனர்.

அழுகைக் குரலே கேட்கவில்லை.

ராகவாச்சாரி இன்னும் சாய்வு நாற்காலியிலேயே, விழிகள் குத்திட்டு நிற்க அமர்ந்திருந்தார். ஹாலின் ஒரு மூலையில் ஆனந்த்தின் தாயார், புடவைத் தலைப்பை வாயில் புதைத்துக் கேவிக் கொண்டிருந்தாள்.

ஆம்புலன்ஸ் வண்டி புறப்பட்டது. அதைத் தொடர்ந்து போலீஸ் வண்டி சென்றது.

துர்காவும் ராமச்சந்திரனும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. அமைதியாகத் தங்களுடைய காரை நோக்கி நடந்தார்கள்.



கமலம், ''ஏன்னு, இப்ப கொடைக்கானல் ரொம்பக் குளிருமோ?'' என்று கேட்டாள்.

''அங்கே குளிர் அடிச்சா என்ன வெய்யில் வீசினு உனக்கு என்ன கமலூ?'' என்றுர் வாசன்.

''இல்லே இதுகள் இரண்டும் ஹனிமூனுக்கு அங்கே போயிருக்குதுகளே, அதனுலே கேட்டேன்!''

''உனக்கு வெய்யல் பிடிக்குமா, குளிர் பிடிக்குமா கமலூ?''

''ஏன் கேக்கறேள்?''

''வெய்யல்னு ராமகுண்டம் போ. குளிர்னு இமாசலம் மலே உச்சிக்குப் போ...''

''எனக்கு உங்க உடம்புச் சூடுதான் பிடிக்கறது!''

''டீ... டீ... கமலூ... என்னடீ இது... நமக்கு என்ன வயசாறது...''

''இதுக்கும் வயசுக்கும் சம்பந்தமில்லே...''

''அப்படியாடீ, கமலூ! அப்பக் கொஞ்சம் இரு... ஒரு வெள்ளாடு வேலியைத் தாண்டி வந்திருக்கு. அதை வெரட்டிட்டு வர்றேன்....''

''நீங்க ஆட்டை விரட்ட ஆரம்பிச்சா அது இன்னிக்கெல்லாம் போகாது. நீங்க இப்படியே இருங்கோ... நானும் இப்படியே உங்களை...''

கீர்த்திவாசனுக்கு மூச்சுத் திணறியது. அவளிடமிருந்து விடுபட நீண்ட நேரமாகியது.

(முற்றும்)



முந்தின ராத்திரியே தயார் செய்யவும்

முளைப்பயிறு கோஸ் பொரியல்

தேவையான சாமான்கள்:

முளைப்பயிறு 2 டேபிள் ஸ்பூன்; கோஸ் கொடியாக அரிந்து, முளைப்பயிறு அளவு தேவை; பெரிய வெங்காயம் 1; கசகசா 2 டீஸ்பூன்; முந்திரிப்பருப்பு 6; பச்சை மிளகாய் (சிறியது) 2; தேங்காய்த் துருவல் 1 டேபிள் ஸ்பூன்; சீரகம் 1 டீஸ்பூன்; திட்டமாக மஞ்சள் தூள்; கடுகு கால் டீஸ்பூன்; தேவையான உப்பு.

செய்முறை:

பொரியல் செய்வதற்கு முன் தினம் காலை, பச்சைப் பயிரை தண்ணீரில் நனைத்து வைக்கவும். ராத்திரி தண்ணீரை வடித்து, ஓர் துணியில் போட்டு, கெட்டியாக முடிந்து வைக்கவும். கசகசா, முந்திரி, தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய் நான்கையும் சற்று கரகரப்பாக அரைக்கவும். வெங்காயத்தைப் பொடியாக அரிந்து சிவப்பாக வதக்கி வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்த பின், கடுகைப் போட்டு, வெடித்த பின் பயறு, கோஸ், மஞ்சள் தூள், உப்புப் பொடி ஆகியவற்றுடன் தேவையான தண்ணீர் கூட்டி வேகவைக்கவும். வெந்த பின் மசாலாவைப்போட்டுக் கலந்து வெங்காயத்தைக் கூட்டி உபயோகப்படுத்தவும்.

சப்பாத்தி, பூரி, இட்லி, தோசை, பொங்கலுடன் சேர்த்துச் சாப்பிடக் கூட்டு

தேவையான சாமான்கள்:

உருளைக்கிழங்கு 250 கிராம்; காரெட் (பெரியது) 1; உரித்த பட்டாணி 100 கிராம்; முந்திரிப் பருப்பு 6; பச்சைமிளகாய் (சிறியது) 4; சிறிய துண்டு இஞ்சி; தக்காளி ஜூஸ் 2 டீஸ்பூன்; பெரிய வெங்காயம் 1; கரம் மசாலாத் தூள் கால் டீஸ்பூன்; கொத்துமல்லி சிறிய கட்டு; ஏதாவது எண்ணெய் 3 டேபிள் ஸ்பூன்; சீரகம் அரை டீஸ்பூன்; திட்டமாக மஞ்சள் தூள்; தேவையான உப்பு.

செய்முறை:

பட்டாணியைத் தண்ணீரில் போட்டு வைக்கவும். காரெட்டைத் துருவி வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை பொடியாக அரிந்து வைத்துக் கொள்ளவும். முந்திரிப் பருப்பைச் சிறிய துண்டுகள் செய்யவும். பச்சைமிளகாய், இஞ்சி, கொத்துமல்லி மூன்றையும் மசிய அரைக்கவும். உருளைக் கிழங்கை வேக வைத்து தோலியை அகற்றிச் சிறிய துண்டுகள் செய்யவும். சிறிது உப்புப் பொடி கலந்து வைத்துக் கொள்ளவும். வாணலியை அடுப்பில் போட்டு எண்ணெய் விட்டு, வெங்காயம், காரெட் இரண்டையும் கலந்து, சிறிது உப்பு மஞ்சள் தூள் கூட்டிப் பட்டாணியைச் சேர்த்து வதக்கி உருளைக் கிழங்கு, தக்காளி ஜூஸ் முந்திரி மசாலா முதலியவற்றைக் கூட்டி, சற்று கெட்டியான பின் சீரகம் தாளித்துக் கரம் மசாலா தூளைக் கூட்டி உபயோகப்படுத்தவும்.

பருப்பு உருண்டை குழம்பு

தேவையான சாமான்கள்:

துவரம் பருப்பு 1 கப்; தக்காளிப் பழ 100 கிராம்; மிளகாய் வற்றல் (சிறியது) 4; சிறிய துண்டு பெருங்காயம்; கொத்துமல்லி; நல்லெண்ணெய் 4 டேபிள் ஸ்பூன்; அரிசிமாவு 3 டீஸ்பூன்; சாம்பார் பொடி டீஸ்பூன்; புளி பெரிய கொட்டைப் பாக்களவு; கடுகு அரை டீஸ்பூன்; தேவையான உப்பு.

செய்முறை:

புளியை ஆறு கப் அல்லது ஏழு க தண்ணீரில் நனைத்து வைக்கவும். தக்காளிப் பழச் சாறு எடுக்கவும். கொத்துமல்லியைப் பொடியாக அரி வும். பெருங்காயத்தைச் சிறி தண்ணீரில் நனைத்து வைக்கவு. துவரம் பருப்பைப் பத்து நிமிட தண்ணீரில் நனைக்கவும். பருப்பு ஜாஸ்